31-1
கோவிலூர் ஆதீனம்
Acc-No: 617
கோவிலூர்-630 307
31-1

சிவமயம்.

# சேதுபுராணவசனம்.

---o---

இஃது

யாழ்ப்பாணம்

மளிகை

**ம. ள. ள. ஸ்ரீ.**

**இ. மயில்வாகனப்பிள்ளை அவர்கள்**

வேண்டுகோளின்படி

யாழ்ப்பாணம்

தமிழ்ச்சங்கத்துப் புலவர்களுள் ஒருவரும்

சைவப்பிரசாரகருமாகிய

மாதகல்

**பிரம்ம. ஸ்ரீ. சு. ஏரம்பையர் அவர்கள்**

செய்தது.

யாழ்ப்பாணம்

விவேகாநந்தயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

---0---

கலி: ௫00௨, ஐப்பசி மீ.

இதன்விலை ரூபா ௧இ.

உ

சிவமயம்.

# சேதுபுராணவசனம்.

—o—

இஃது

யாழ்ப்பாணம்

மளிகை

ம. ா. ா. ஸ்ரீ.

**இ. மயில்வாகனப்பிள்ளை அவர்கள்**

வேண்டுகோளின்படி

யாழ்ப்பாணம்

தமிழ்ச்சங்கத்துப் புலவர்களுள் ஒருவரும்

சைவப்பிரசாரகருமாகிய

மாதகல்

**பிரம்ம. ஸ்ரீ. சு. ஏரம்பையர் அவர்கள்**

செய்தது.

யாழ்ப்பாணம்

விவேகாநந்தயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

—o—

கலி: ௫௦௦௨. ஐப்பசி மீ.

இதன்விலை ரூபா ௧இ.

உ

சிவமயம்.

# சருக்கவகராதி.


| சருக்கம். | பக்கம். | சருக்கம். | பக்கம். |
|---|---|---|---|
| அகத்தியதீர்த்தச்சருக்கம் | ௭௩ | சாத்தியாமிர்ததீர்த்தச்சருக்கம் | ௧௩௦ |
| அக்கினிதீர்த்தச்சருக்கம் | ௯௬ | சிவதீர்த்தச்சருக்கம் | ௪௦௬ |
| அசுவத்தாமாச்சருக்கம் | ௧௪௭ | சீதைகுண்டச்சருக்கம் | ௫௨ |
| அமுததீர்த்தச்சருக்கம் | ௬௨ | சேதுச்சருக்கம் | ௫ |
| அனுமகுண்டச்சருக்கம் | ௭௦ | சேதுபலச்சருக்கம் | ௨௬௯ |
| இராமதீர்த்தச்சருக்கம் | ௮௦ | சேதுமாதவச்சருக்கம் | ௨௫௭ |
| இராமநாதச்சருக்கம் | ௨௧௭ | சேதுயாத்திரைச்சருக்கம் | ௨௬௫ |
| இராமனருச்சனைச்சருக்கம் | ௨௨௨ | சேதுவந்தசருக்கம் | ௪௦ |
| இலக்குமதீர்த்தச்சருக்கம் | ௮௬ | தருமகுத்தச்சருக்கம் | ௧௫௫ |
| இலக்குமிதீர்த்தச்சருக்கம் | ௯௩ | தனுக்கோடிதீர்த்தச்சருக்கம் | ௧௩௯ |
| கடவுள்வாழ்த்து | ௧ | துத்தமச்சருக்கம் | ௧௯ |
| கத்துருச்சருக்கம் | ௧௮௬ | துராசாரச்சருக்கம் | ௧௭௩ |
| கந்தமாதனச்சிறப்பு | ௪ | தேவிபுரச்சருக்கம் | ௯௨ |
| கவிசம்புச்சருக்கம் | ௧௬௩ | தோத்திரச்சருக்கம் | ௨௪௨ |
| கவிதீர்த்தச்சருக்கம் | ௧௯௭ | நைமிசாரணியச் சிறப்பு | ௪ |
| காசிபச்சருக்கம் | ௨௦௫ | பராவசுச்சருக்கம் | ௧௫௯ |
| காயத்திரி சரசுவதி தீர்த்தச் சருக்கம் | ௨௦௨ | பலதீர்த்தச்சருக்கம் | ௨௧௩ |
| கோடிதீர்த்தச்சருக்கம் | ௧௨௪ | பாலோடைச்சருக்கம் | ௧௮௩ |
| சக்கரதீர்த்தச்சருக்கம் | ௧௭ | பாவநாசச்சருக்கம் | ௪௭ |
| சக்கரதீர்த்தச்சருக்கம் | ௪௦௪ | பிரமகத்திச்சருக்கம் | ௨௩௯ |
| சங்கதீர்த்தச்சருக்கம் | ௧௧௬ | பிரமகுண்டச்சருக்கம் | ௬௫ |
| சங்கரபாண்டியச்சருக்கம் | ௨௪௯ | மங்கலதீர்த்தச்சருக்கம் | ௫௫ |
| சடாதீர்த்தச்சருக்கம் | ௯௦ | முத்தீர்த்தச்சருக்கம் | ௧௧௯ |
| சருவதீர்த்தச்சருக்கம் | ௧௩௫ | விதூமச்சருக்கம் | [illegible] |
| | | வேதாளவரதச்சருக்கம் | ௯௮ |

உ

சிவமயம்.

# முகவுரை.

ஸ்ரீ இராமசந்திரனாலே ஸ்தாபித்துப் பூசிக்கப்பட்ட சிவலிங்கப்பெருமானைத் தன்னகத்துடையதும், அவ்விராமசந்திரனைத் தொடர்ந்த பிரமகத்தியைப் போக்கிய புண்ணியவடிவாகிய பல தீர்த்தங்களையுடையதும், பரமேதிகாசமாகிய இராமாயணத்திலே வான்மீகி என்னும் முனிவர்பெருமானாற் புகழ்ந்து கூறப்பட்டதும், இருபத்துநான்கு சதுர்யுகங்களைக் கடந்த மிக்க பழமையையுடையதுமாகிய இராமேசசரத்திலுள்ள சேதுமகத்துவத்தைக் குறித்துச் சூதமுனீந்திரராற் சவுனகாதிமுனிவர்கட் குபதேசிக்கப்பட்ட வடமொழிச் சேதுமான்மியம், இற்றைக்கு நானூறு வருஷங்கட்கு முன்னே வேதாரணியத்திலே திருக்கூட்டத்தார் மரபிலே பிறந்து சமஸ்கிருத திராவிட சாகரங்களைப் பருகியேப்பமிட்டுச் சித்தாந்தத் தெளிவடைந்து திருவருட்பயன், சிவஞானசித்தியாதிய சிலவற்றிற்குப் பேருரையெழுதிப் பெரும்புகழ்படைத்த புலவர் சிகாமணியாகிய நிரம்பவழகியதேசிகரவர்களாலே, தமிழிலே மொழிபெயர்த்து ஐம்பத்தொரு சருக்கமும் மூவாயிரத்துநானூற்றுமுப்பத்தெட்டுச் செய்யுளு முடைத்தாகப் பாடப்பட்டது. அதுவே சேதுபுராணமெனப்படும். அஃது ஒன்றினொன்றுச் சமயசொல்வளம், பொருள்வளம், கம்பீரம், சரித்திரரசம், யாப்புநயமுதலியவற்றாற் சிறந்து தனக்கெதிரின்றி விளங்கியது.

அதிலே நாடுநகரம், கந்தமாதனம், நைமிசாரணியமென்பவற்றின் சிறப்புகளும், இராவணாதி இராக்கதர்களது உற்பத்தியும், அவர்கள்செய்த அக்கிரமங்களும், ஸ்ரீராமசந்திரன், இலக்குமணன், பரதன், சத்துருக்கன் என்பவர்களின் தோற்றங்களும, சீதாதேவியின் தோற்றமும், இலக்குமணனோடு ஸ்ரீராமசந்திரன் விசுவாமித்திரமகாமுனிவரா லழைக்கப்பட்டுச் சென்று, யாகத்தைக் காக்குமிடத்து அதற்கிடையூறுசெய்த தாடகையை வதைத்து, அதனை நடக்கச்செய்து, சாபத்தினாலே கல்லாய்க்கிடந்த அகலிகையை எழுப்பிக் கௌதமமுனிவரிடத் தனுப்பி, மில

லை முரித்துச், சீதாதேவியை மணம்புரிந்து, கூனியினது துர்ப்போதனையினால் ஏற்பட்ட கைகேசியினது கருத்தை மறுக்கமாட்டாது வருந்திய தந்தையாரது பரிதாபத்தையறிந்து, சீதாலக்குமணரோடு வனவாசஞ்செய்து, சீதையை இராவணன் கவர்ந்துபோய்விட வருந்தி, வாலியை வதைத்து, குரக்குச்சேனைகளைத்துணைக்கொண்டு தூதனுப்பிச் சீதாபிராட்டி இருக்குமிடமறிந்து, கடலையடைத்து, இலங்கைசென்று, இராவணனைவதைத்து, சீதையைச் சிறைமீட்டு, விபீஷணனுக்குப் பட்டங்கட்டி, மீண்டு தனுக்கோடியையுஞ் சேதுவையும் உண்டாக்கி, தீராத பிரமகத்தியை இராமலிங்கப் பிரதிட்டை செய்து தீர்த்து, அந்த இராமேச்சரத்திலே சீவகோடிகள் பிழைக்கும்படி யுண்டாக்கியபல தீர்த்த மகத்துவங்களும், அவற்றின்மேல் விரதநியமத்தோடு சங்கற்பித்துத் தீர்த்தமாடும் முறைமைகளும், அங்ஙனமேசெய்து பாவங்கணீங்கி இட்டசித்திகளடைந்து பேறுபெற்றோர்களது சரித்திரங்களும், பாவத்தொழில்களும், அவற்றின்பயனாய நரகவேதனைகளும், புண்ணியக் கிரியைகளும், அவற்றாலடையும்பேறுகளும், மாசிகம், சபிண்டி, சிராத்தம், மகாளயம், பிண்டதிலோதகம் முதலிய அபரக்கிரியைகளும், அவற்றின் பயனும், அவை செய்யுமிடங்களும், காலங்களும், முறைகளும், அவை செய்யாவழிப்படுங் குற்றங்களும், அவைகளடங்கிய சரித்திரங்களும், துர்க்காதேவியினது உற்பத்தியும், மகிடாசுரசங்காரமும், ஆசையே பிறவிக்குக் காரணமென்பதும், அதுவேஊழாகத்தொடர்ந்து நம்மைப்பிறக்கச்செய்து பலவித வேதனைகளையும் வருவித்து வருத்துவதென்பதும், காமாதி குற்றங்களினாலடையும் வேதனைகளும், வேதாந்த மகா வாக்கியப் பொருள்களும், துறவொழுக்கக் கிரியைகளும், உபநிஷத்துக்களின் சாரங்களும், அர்த்தோதய மகோதய விசு சங்கிராந்தியாதி புண்ணியகாலங்களும், அப்புண்ணிய காலங்களிலே செய்யும் ஸ்நான விதிகளும், அப்பொழுது சொல்லும் சங்கற்பமுறைகளும், அவற்றால் நீங்கும்பாவபேதங்களும், பிறவும் தெளிவாக விரித்துக் கூறப்படும். அதிலே அரும்பதப் பிரயோகங்களும், கடினசந்திகளும், பொருள்கோளமைதிகளும், வைசித்திரியங்களும் இடங்கடோறும் விரவிக் கிடக்கும்.

ஆதலின் அச்சேதுபுராணம் இலக்கிய இலக்கணங்களிற்சி றந்த வித்துவசிரோன்மணிகளுக்கேயன்றிச் சாதாரணமான மற் றையோர்களுக் குபயோகப்படாமையால், அதனைச் சிறுவருமெ ளிதிலுணருமாறு மிக லேசான வசனநடையிலே செய்து வெ ளிப்படுத்தல் வேண்டுமென்னும் பேராசையைக் கொண்டிருந்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது எண்ணத்தை நிறை வேற்றும் அபிப்பிராயமுடையவரும், இராமேச்சரத்தையே பூ ருவீகதேசமாகவுடையவரும், சைவவேளாண்மரபினரும், வண் ணைவாசரும், மளிகாதிபரும், ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவ ர்களது சீடருளொருவரும், தருமகுணசீலருமாகிய ம. ா. ா. ஸ்ரீ. இராகவப்பிள்ளை குமாரர் மயில்வாகனப்பிள்ளை அவர்களது வேண்டுகோளின்படி, அதனைத் தமியேன் பெரும்பாலும் செ ய்யுள்களது கருத்தையே தழுவியும், சிறுபான்மை வடமொழி முதனூலினின்று சிலவற்றைத் தந்தும், அச்சேதுபுராணத்தைக் கற்கப்புகுவோர்க்கு வழிகாட்டியாகவும், பெண்களும் சிறுவர்க ளும் வாசித்துணருமாறும் மிகவும் லேசான வசனநடையிலெழு தி முடித்தேன்.

இன்னும் பிள்ளையவர்கள் இராமேச்சரத்தினின்றும் வரு வித்துத்தந்த மகா சங்கற்பத்தை இங்கேயுமுள்ள பல பிரதிகளோ டொத்துப் பரீட்சித்துச் சிரத்தையுண்டாகும்படி பொழிப்புரை யுமெழுதி, அதனை அவ்வுச்சரிப்போடு தமிழ் எழுத்திலும் எழு தி திலதருப்பணமும் அங்கே செய்யவேண்டியதாகலின் அதனை யுஞ்சேர்த்துமுடித்தேன். ஆதலின் றிவுடையோரை, இதனிலு ள்ள எழுத்து, சொல், வாக்கியப்பிழைகளைக் கொள்ளாது குண மாகக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். இன்னும் இதி லே காணப்படும் பிழைகளை இரண்டாம்பதிப்பிலே திருத்தி வெ ளிப்படுத்துமாறு நிச்சயித்திருக்கிறேன்.

இங்ஙனம்

சு. ஏரம்பையர்

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

---o---

யாழ்ப்பாணம்
தமிழ்ச்சங்கத்தவருளொருவரும்
இந்நூலாசிரியர் மருகருமாகிய
சங்கானை

## ஸ்ரீமத். அ. அருணாசலசாஸ்திரிகள்

சொல்லியவை.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தென்னாட்டுப் பாண்டியநற் றேயமதி லரக்கர்களைச் செற்ற பாவ
முன்னோட்டம் பெறவிரவி குலமுதலாந் தசரதனின் முற்ற வத்தால்
மன்னாட்டம் பெறுராமன் றன்பெயரா னிலைநிறுத்து மகர வேலை
தன்னோட்டங் கரையிரா மேச்சரத்தின் பெருமைகளுந் தகுதி வாய்ப்ப.

பாலாகு மூர்த்திதல மிருமையினன் பயனுதவும் பந்த நீக்கும்
நாலாறு தீர்த்தமகத் துவங்களையு மெழுத்தாதி நவின்ற வைந்து
மேலான விலக்கணத்தி னமைதிகாட்டி வேதமொடு மிருதி யாதி
நூலகாட்டும் பொருளனைத்தும் பொதிந்தெவரு மறிவரிதா நுட்ப மாக.

நற்கடின சந்தியொடு பதப்பிரயோ கங்களுமாய் நவின்ற பாவின்
சொற்கடின பதப்பொருள்க ளெளிதாக வனைவருக்குந் தோற்று மென்று
விற்கொடியி னுறுந்தலத்தைச்சனனமதாப்பெற்றவன்காவிளங்குகாட்சிப்
பொற்கொடிமா முகிலனைய கொடையிரா கவபிள்ளை புதல்வ னாகும்.
[விண்ணோர்

தன்னாட்டுமகிபதியின்றுடையடைவாய்ப்படையுடையோன்றலைமை
பொன்னாட்டு மகிபதியின் கொடியிடைய மேழிவரை பொருத்துந் தூய
னெந்நாட்டும் பரிமளமாங் குவளைமலர் மாலைபுனை யேந்தல் வேந்தர்
பொன்னாட்டு முடிதிருந்த நாற்றுமுடி திருத்திநடும் பொற்பு மிக்கோன்.

பெருமைதனை யறிவடக்க நீதியன்பு பிரபுநிலை பிரியாப பத்தி
குருவருளும படிநடக்கும் விரதமேன்மை குணமகிமை கொள்ளு நீதி

திரிபதிலா நல்விளக்க மில்லறச்சீர் சிவநேயஞ் செப தியான
முரியமயில் வாகனவேள் சத்தியமாய்ச் செய்திடுகென் றுரைப்பக்கேட்டே.

சைவபரி பாலனத்தோர் தெரிந்தெடுத்த கலைநிதியந் தமிழின் சங்கத்
தெய்வசபை யனுசரிக்கு மதிசுகுண சத்திபீடஞ் சேர்ந்த ஞாநேதா
ருய்யவழி காட்டியிர சங்கமாரி மாதகலி னுயர்கு லத்தோன்
மெய்விரவே ரம்பகுரு சதுரதாக வியற்றியதை வெளியிட் டானே.

—o—

யாழ்ப்பாணம்

தமிழ்ச்சங்கத்தவருளொருவரும்

பலநூற்பரிசோதகரும் ஆக்கியோனுமாகிய

சுன்னாகம்

## ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்

சொல்லியவை.

### விருத்தம்.

செய்யதமிழ்ப் பாவினத்துள் விருத்தப் பாவிற்
சிறக்கவமைத் துளசேது மான்மி யத்தை
வையமிசை யெவர்க்குமுப யோக மாக
வாக்கியஞ்சேர் கத்தியமா வகுத்தி கென்னச்
சைவமத குருபத்தி சிவனருட பத்தி
தழைத்தவிரா கவபிள்ளை தந்த மைந்தன்
மெய்யறிஞர் புகழ்செயலோன் கற்றோர்க் கன்பன்
மிக்கமயில் வாகனவேள் விரும்பிக் கேட்ப.

சேதுமான் மியத்தையவன் கேட்ட வாறே
சிறப்பமையக் கத்தியமாய்ச் செய்து தந்தான்
ஓதரிய சோதிடநூ லுணர்வும் பெற்றோன்
உயர்தமிழும் வடமொழியு முவந்து கற்றோன்
மாதகலென் றுலகுபுகழ் நகர வாசன்
மாதேவ னடிப்ரஹ்மோப தேசன்
ஏதமிலா நெறியுடையோன் சுகுண சீலன்
ஏரம்ப நாமன்மறை யினில்வல் லோனே.

—o—

## சிறப்புப்பாயிரம்.

யாழ்ப்பாணம்
தமிழ்ச்சங்ககாரியதரிசியும்
சைவப்பிரகாசவித்தியாசாலை முதலுபாத்தியாயருமாகிய
**ஸ்ரீமத். மா. வைத்தியலிங்கபிள்ளையவர்கள்**
சொல்லியவை.

வெண்பா.

எத்திசையும் போற்று மெழிற்சேது மானமியத்தைக்
கத்திய மாக்கித் தருகென்றான்—பத்திமிகு
புந்தியினால் நறபூசை பண்ணிப் பொருள்படைத்த
அந்த மயில்வா கனன்.

கற்றோரு மற்றோருங் காமுறவே யச்சரிதம்
பற்றோ டியற்சொற் பலபுணர்த்திக்—கத்தியமாய்
மாற்றி யுரைசெய்தான் மாதகலே ரம்பகுரு
சாற்று மமுதென்னத் தான்

———

யாழ்ப்பாணம்
தமிழ்ச்சங்கத்தவருளொருவரும்
"அபிதான்கோச" முதலிய பலநூல்களுக்கு ஆக்கியோனுமாகிய
**ஸ்ரீமத். ஆ. முத்துத்தம்பிபிள்ளையவர்கள்**
சொல்லியது.

வெண்பா.

வண்மைமயில் வாகனவேள் மாதையே ரம்பகுருத்
திண்மைதரு சேதுச் செழுங்கதையை—யுண்மையுறச்
செய்வித்தான் செய்தான் றெரியா மறைகாட்டி
யுய்வித்தா ரிவ்வுலகை யோர்ந்து.

——o——

யாழ்ப்பாணம்
தமிழ்ச்சங்கத்தவருளொருவரும்
சைவஉதயபானுபத்திராதிபருமாகிய
உ௵ரூ
**ஸ்ரீமத். சு. சரவணமுத்துப்பிள்ளையவர்கள்**
சொல்லியவை.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம.

அருந்தவத்தா லவதரித்துச் சைவ நாட்டு
மாறுமுக நாவலர்கோன பணித்தவாறு

## சிறப்புப்பாயிரம்.

மருந்தனைய சேதுபுரா ணத்தின் காதை
வசனநடை தருதியென வாய்ந்த நீதி
பொருந்தவரு மொழுக்கமிகு சைவா சாரம
போற்றுகுரு பத்திசிவ பத்தி சீர்த்தி
யிருந்தனஞ்சேர் பெருந்தகையென் றிவற்றை நாளு
மேய்ந்தமயில் வாகனவே ளினிது வேண்ட

கற்றவர்மிக் கேத்திடுமக் கவிக ளாய்ந்தே
கத்தியரூ பத்தினினி செய்தான் றன்னை
யுற்றவருக் கொருநயவ னோங்கு சைவத்
துண்மையுரைக் கும்பிரசா ரகன்பு ரங்கள்
செற்றவனுக் கிரும்பூசை புரியு நேயன்
செந்தமிழி னோடுவட கலைக டேர்ந்தோன்
கொற்றவர்க்குற் றவர்செறிமா தகவின் வாழ்வு
கொண்டவனே ரம்பவுயர் மறைவல் லோனே.

### உத்தமமோனைக் கட்டளைக்கலித்துறை.

ஏரம்ப தொன்றுட னேந்தல்கொண் டாய்தத் தினையினிதி
னேரம்ப கத்தனை நேர்விக்கு மக்கவி நித்தமுமெ
னேரம்ப யன்றரு நீள்வச னத்து நினைத்தமைத்த
தேரம்ப விப்பிர னென்னுப புகலு மெழிற்கொண்டலே.

—o—

தணிகைப்புராணவுரையாசிரியர்

இணுவில்

## ஸ்ரீமத். பொ. அம்பிகைபாகஉபாத்தியாயரவர்கள்

சொல்லியவை.

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சீர்மலியுந்தென்னாடேயென்னாட்டினுமதிகசிறப்புற்றோங்கப்
பார்மலியுஞ்சேதுமான்மியம்பாவாகிப்பல்குதலிற்பயன்படாதென் [டுந்
றோர்மலியும்வசனநடையாக்கியீகென்றிதயத்தினிகழ்ந்தபெருங்கருணையோ
தார்மலியுங்குவளைபுனைமார்பன்வண்மைமத்தன்மைகுடிகொண்டபெருந்தகு
[திமிக்கோன்.
சிவதீக்கைமணிபூதிசாதனமெய்ப்பொருளென்னத்தெளிந்து வாழ்ந்தோன்
பவம்வீக்குமிராகவபிள்ளையினிதீன்றளித்தபாலன்பாரில்
அவம்வீக்குசுருணமயில்வாகனவேள்வேண்டவதுதன்னையாய்ந்து
நவநீக்கம்பெறுவுளத்தினவ்வணஞ்செய்தனனவையில்பூவணத்தோன்,

யசுர்வேதமுடைப்புனிதன்காசிபநற்கோத்திரத்தோனினிமைமிக்க
வசுவானற்காரியவாபத்தம்பசூத்திரத்தோன்மரீஇயவேத
பதியானவிதிநிகரும்பசுபதியந்தணற்கொன்பான்மூர்த்தப்பண்போன்
றுதிமேவுசுப்பிரமண்யஐயன்செய்மாற்றவத்தாற்றோன்றும்மேலோன்.

புண்ணியநற்சிவபூசாதுரந்தரன்பார்மல்குபுகழ்ப்புனிதசீலன்
எண்ணுமிலக்கணலக்கியமுணர்ந்ததெளிவுடையோனியலபானமிக்க [ம்
திண்மைபெறுசித்தாந்தத்திறமுணர்ந்தோனிவையுணர்ந்தோர் தேறத்தேற்று
வண்மையுடையோனறத்தின்வடிவாமேரம்பக்குரிசில்வாய்மையோனே.

—o—

பலநூற்பரிசோதகரும் ஆக்கியோனுமாகிய
வட்டுநகர்

## ஸ்ரீமத். நா. சிவசுப்பிரமண்யசிவாசாரியர்

சொல்லியது.

ஆசிரியவிருத்தம்.

சீரேறுராமேசசைவவேளாளநிதிசிவபூசைசிவதியான
சிவதன்மபரிபாலபூஷணம்வர்த்தகசிலாக்கியம்ஆறுமுகவ
தேசிகரினதிசிஷன்வண்ணையாடம்பரஞ்சிவஞானசமபந்தமடமுஞ்
சிங்காரசுக்ரவாரத்தருமசத்திரமுஞ்செவ்வெனிலைநாட்டுதன்மம்
ஏரேறுராகவப்பிள்ளைசேய்வெகுயோகலட்சுமிகடாட்சபதுமம்
என்னுமயில்வாகனம்பிள்ளைதம்மிருவர்புகழித்தரைதுலங்கவென்றும்
இசைசேதுமான்மியபுராணவசனஞ்செய்கவென்னமுந்நூல்புனைந்தே
ஈசரொளிர்பூவணப்பதிவாசவேதியன்யசுசாகையாபதமபப்
பாரேறுசூத்ரகாசிபகோத்ரசின்மயப்பசுபதிமுனேசர்வம்சப்
பாவலன்மாதைபுரசுப்ரமணியக்குரவர்பாலகன்யோக்யசிகரம்
பாவலர்நலம்பருகநாவலர்வியக்கரசபசனபஞ்சரநலக்க
பண்புநிறைபிரசங்கமாரிசொரிபுஷ்கலம்பரவுகுணநிலைசெய்மலயம்
வாரேறுகவிசிந்துசெந்தொடைச்சந்தமகிழ்வண்ணமிளிர்பனுவலாதி
மாநிலந்தனிலுதவுவித்வகேசரிசிவம்மல்குமத்துவிதசிந்தை
வளருமேரம்பகுருசேதுமான்மியகத்யமதுரசமதாப்புனைந்தான்
வளைகடலினமுதினும்இதுமிகநலஞ்செய்யுமண்டலத்தென்னுநாமே.

—o—

நாயன்மார்கட்டுத் தருமவைத்தியசாலை ஸ்தாபகரும்
வைத்தியசிரோன்மணியுமாகிய

## ஸ்ரீமத். வே. மயில்வாகனம்பிள்ளையவர்கள்

சொல்லியவை.

வெண்பா

ஏராரு மாதகல்வா ழேரம்ப மாமறையோன்
சீராருஞ் சேதுப புராணமதைபு—பாரார

## சிறப்புப்பாயிரம்.

ல்வசன மாக்கியிவ ணல்கம்மயில் வாகனவேள்
லகவெளி யிட்டனன் பால்.

### நேரிசையாசிரியப்பா.

பூவுல கதனின் மேவுநவ கண்டம்
யாவினும் விசேட மெய்துபா ரதத்தின்
குல்விடு மிக்க குமரி தனினு
நவமிகு தெக்கண நாடா மதனி
னிருமைப் பேறுந் தருமிரா மேச்சரம்
பொருவில் சேதுப புனித மான்மியந்
திரம்பெறு மறைக்கா னிரம்ப வழகிய
வரம்பெறு தேசிகன் சிரம்பெறு தென்றமிழ்ப்
பாவி னியற்றிட மேவிடு புராண
காவிய மெவர்க்கு நாவுறப் படாஅது
சொல்வளம் பொருள்வள மொல்குத லின்றிப்
பல்குத லாலே பலபடச் சுருக்கி
வசன நடையில் வாசித்து விளங்கத்
திசைபுகழ் புண்ணிய தீர்த்தங்க ளோடு
திரிகோண சேதீச் சரமுத லாய
அரிய புண்ணிய க்ஷேத்திர மவற்றொடு
ஒன்பது கோடி நன்குடை லிங்கம்
தனபுடை விளங்குந் தானம தாகி
விளங்கிடு மீழ நலங்கிள ரிலங்கையின்
களங்கமில் லாது பளிங்கென விளங்கியாழ்ப்
பாண மதனிற் பலவிதத் தானும்
யாணர் பெற்றே யிலங்கு மாதகல்
வந்திடு மறையவர் முந்திடு திலகம்
பந்தமி லறுதொழில் தந்திடு முலகம்
இலக்கண விலக்கிய விதிகா சங்கள
வலக்கணுஞ் சோதிட வைதிக நன்னெறி
பித்தாந் தத்திற் பிதற்றுரை யகற்றிடேஉஞ்
சித்தாந் தத்திற் செனித்திடு மறிவாஞ்
சமய விசேடஞ் சார்திரு வாண
மமையு மாசிரியத் தணிபெறு மேரு
அறிவு துலங்கப் பெறுகலா சாலைகள்
குறைவற நடாத்துங் குறைவிலாச் சீரோன்
சைவ சமைய பரிபால னசபைச்
சைவப் பிரசா ரகரு மானோன்
திருவளர் தமிழின் றெய்வ சங்கத்
தொருவனு மாகி யுயர்ச்சி படைத்தோன்

சிறப்புப்பாயிரம்.

சீரம் பலவர் திருவரூட கிடனு
மோரம்ப மூர்த்தியென் றேத்திடு பெரியோன்
தன்னைக் கொண்டு தகைபெறச் செயவித்
தன்னதை யச்சிடு வித்தன னத்தலந்
தன்னிற் சனித்தே மன்னுறீஇ வண்ணை
பின்னுறீஇ மளிகா பதியெனப் பெருஞ்சிறப்
படைந்திடு செல்வன் கடைந்தநுண் மதியோன்
அடைந்திடு தவத்தர்க் கிடம்பெறு மனைத்தையுந்
தொடர்ந்து நடாத்துஞ் சுத்தமா மனத்தோன்
தொல்லோர் புகழும் நல்லூ ரதனின்
பல்லோர் புகுந்தே வெல்லருந் தாகம்
தீர்தரு மடமும் பாபக மதிர்க்கும்
பேருடைச் சம்பந்த பிரான்றிரு மடமும்
செய்துகுருபூசை யெய்திடும் பேறு
சைவபரி பாலனஞ் செய்திடு சபைகளும்
இந்துக் கலாநிதி யெனத்தகுந் தருமஞ்
சிந்திடா தோங்கச் செய்திடு மறத்தோன்
கேதீச் சரமுத லோதிடு திருப்பணி
ஆதிய வற்றொடு தீதகன் றொழுகுந்
தாயர்கள் போலத் தயையொடு நடாத்து
நாயன் மார்கட் டாயுட சாலைக்குந்
தாழாது நடத்த மாளாப் பெரும்பொருள்
கேழாக் கொடுத்து மீளாப் பெரும்புகழ்
பெற்றிடு மிராகவ பிள்ளைதன்
கொற்றமயில்வாகனக் குலக்கொழுந்தாமே.

---o---

யாழ்ப்பாணம் காரைதீவு
இயற்றமிழ்ப்போதகாசிரியர்
**ஸ்ரீமத். கா. நாகமுத்தையரவர்கள்**
சொல்லியது.

நேரிசையாசிரியப்பா.

சீர்தருமயோத்தியிற் சிங்காதனமமர்ந்
தார்தருமைம்பத் தாறுதேயங்களுஞ்
செங்கோனடாத்துந் தினகரனுயர்குலோத்
துங்கனுந்தசரதத் தோன்றல்செய்தவத்தால்
அறந்தலைநிமிர மறந்தலைதாழச்
சிறந்தாமகளிர் தேவர்கண்மகிழ
நெடுவலியரக்கர்க ணெஞ்சுபறைகொட்டப்-

௦

## சிறப்புப்பாயிரம்.

படிமகள்பெரும்பொறைப் பாரநீங்க
அம்பொற்குழைபா யரிமதர்மழைக்கட
செம்பொற்றிருநிகர் சேயிழையகலிகை
யாதியோர்சாப மகன்றீடேறப்
பூதலத்தேர்பவப் புன்கணொழிந்திட
வந்தசீராமன் மலர்மகள்பொருட்டால்
முந்தமர்புரிந்து முதுவலியரக்கரைத்
தெறுபழிதீர்ச் சித்தசித்திருவகைப்
பெறுபிரபஞ்சப் பேருலகெவற்றினும்
திலதைலமபோற செறிந்தாவிகட்கு
மலிதருவினைப்பயன் மரபினிலூட்டுங்
கருணையங்கடலையெங் கண்ணுதற்பிரானைப்
பருணிதர்பாடும் பருப்பதக்கொடியொடு
பூசனைபுரிந்தரா மேசம்விடுத்துப்
பாசிலைப்பதுமப படுகீரிறபாய்ந்து
மீதெழுமிணைவரால் வெள்ளகட்டிளங்கயல்
போதெழுவிசும்பிற் புகுதலையிலாங்கலி
முப்புடைப்பசுங்காய் முட்டிடமுதிர்சுவை
யப்புநெட்டாறு யணிவயல்புகுதலுங்
கப்புவிட்டெழுந்து கஞலியசெந்நெல்
ஒப்பறவிளைவுறூஉ மோவாவளம்பயில்
வீறுசான வேந்துசிரத்தொளிர்
மாணூர்மவுலியாம் வண்ணைநன்னகர்வரு
சைவபரம்பரை சார்வேளாண்குலத்
தவ்வியஞ்சிறிது மடையாப்புனிதன்
அளிகாதலொடு மாம்பலசரக்கு
மளிகாதிபதியென மாநிலம்புகழும்
வள்ளலிராகவப் பிள்ளைமுன்செய்த
தள்ளருந்தவமே தாவொருவடிவான்
எவ்வெவர்பதாகையு மேறுதற்கேதுவாம்
செவ்வியமேழி தீட்டுபதாகையான்
வரியளிபடர்ந்துதே மதுவுணக்குடையும்
விரியிணர்க்குவளை மேவுதிண்டோளான்
அங்கர்கோன்மீள வவனியுற்றனென
வெங்கணும்வியக்கு மிருங்கொடைக்கையான்
முத்திசாதனமா முழுவெண்ணீறு
பத்தியிற்கண்டிகை பரித்திடுமெய்யான்
புன்னகைபொலிந்தசொற புகர்மறுவிலாமையின்
நன்னகைமதியமு நாணுறுமுகத்தான்
வண்ணைப்பதியினும வடிவேலெம்பிரான்

கண்ணருள்செய்திட்க் கதித்தநல்லூரினும்
ஒருமடம்போக்க விருமடமாக்குப்
கருடாசொருவுந் திருஞானசம்பந்த
சுவாமிகளுமமுஞ் சுக்கிரவார
மவாவியநாமமு மவாவொடுமிடுத்
தாகமுற்ரேருணத் தண்ணீர்ப்பந்தரும்
பாகமிருத்திப் பகருமுன்மடத்தில்
நால்வர்கடமக்கு நற்குருபூசை
சால்புடனியற்றுந் தருமசிந்தையான்
இன்னும்பற்பல வியற்றருமறங்கள்
மன்னுபேரன்பின் வழாமேபுரிகுவோன்
ஆயமயில்வாகன வண்ணன்மகிழ்ந்து
தூயசேதுவின் ருெல்புராணத்தை
வெளிப்படையாக விளங்குகத்தியமாக்
களிப்பொடுபுரிகெனக் கழறின்னுக
ஆங்கதுவின்வி யாரியர்பெருமான்
நீங்கரும்புலமை நிரம்பவழகிய
தேசிகன்வடநூ றெறிந்ததன்வண்ணம்
மாசகற்ராவிட மாண்கவியிற்புனை
எவ்வகைப்பவங்களு மெதிருறநோக்கின்
அவ்வயினீக்கி யரும்பெறன்முத்திமை
மெய்ம்மையினுதவிட வியன்சாதனமெனப்
பொய்ம்மையிலான்ருேர் புலங்கிடந்தொளிரும்
தேசம்பராவுமச் சேதுபுராண
மேசறுமிலக்கண விலக்கியப்பயிற்சி
யுடையார்க்கன்றி யுரைக்குமேனையர்க்குத்
தடையறுபெரும்பயன் றராமையைநோக்கி
அனைவருமெளிதி னகத்துணர்ந்துய்ய
நினைவினிற்கருதி நிகழ்கடும்பதங்கள்
கலவுதலிலாது கத்தியரூபமா
நிலவிடச்செய்து நிகழ்த்துமப்பிரபுவின்
இதமிகுமுதவியி னெழுதாவெழுத்தில்
விதமிகுபிழையொரீஇ விளங்கத்தந்தான
வழுதிநாட்டின் மகிமைகொண்டுயர்ந்த
வழுவறுதிருப்பூவண்ணத்துவந்த
பந்தமில்பெரிய பசுபதிமரபான்
முந்துகாசிப முனிகோத்திரமும்
தந்தவாபத் தம்பசூத்திரமும்
அந்தமிலிரண்டா மருமறைச்சாகையும்

பெற்றுளோனுகமப் பேரொளிமறுகுசூழ்ந்
துற்றமாதகலெனு மொருபதிநிவாசன்
பரமார்சைவ பரிபாலனசபைப்
பிரசாரகரெனப் பேசுவிற்பன்னன்
செப்பிடுகனவினுஞ் சிவனடிமறவாச்
சுப்பிரமணியத் தொன்மறையோன்சுதன்
நீர்பயில்வேணி நிமலனையென்றும்
ஆர்வமொடருச்சனை யாற்றுதபோதனன்
இலக்கணமிலக்கிய மியல்புறுபுராணந்
துலக்குசித்தாந்தஞ் சோதிடமாரியம்
ஆதியநூல்க ளையந்திரிபற
ஓதியுணர்ந்தசீ ரோங்குபேரறிஞன்
மாணவகர்க்கு மாண்கழகந்நிறீஇப்
பேணியகல்விப் பேரமுதூட்டுவோன்
இத்தகைப்பெருமை யெங்கும்
வைத்தவேரம்ப மறைத்தேசிகனே.

---o---

காரைதீவு

**ஸ்ரீமத். கா. சிவசிதம்பரஐயரவர்கள்**

சொல்லியது.

வெண்பா.

ஈசனிடத்தன்புகொண்டராகவமாறன்புதல்வன்
காசின்மயில்வாகனவேள்கட்டுரைக்க—வீசனைகொள்
சேதுபுராணந்திகழ்வசனமாக்கினனுந்
கோதிலேரம்பகுரு.

---o---

யாழ்ப்பாணம் புலோலி

**ஸ்ரீமத். வ. குமாரசுவாமிப்புலவரவர்கள்**

மருகரும் மாணாக்கருமாகிய

**ஸ்ரீ. அரு. சோமசுந்தரப்பிள்ளையவர்கள்**

சொல்லியவை.

கட்டளைக்கலித்துறை.

கோரவரக்கனிராவணனாதியர்கொன்றபவந்
தீரவிராமனருச்சனைசெய்ததிறன்விளங்கு
பாரவிராமசரநின்றுவண்ணையில்வந்துபல
சாரசரக்குமளிகாதிராகவசற்சுதனே.

சந்தமுறுமயிலவாகனன்கேள்விதனக்கியைந்து
முந்துதிருப்பூவணநின்றுமீண்டுமுதன்மையொடு
வந்தயசுபதிஐயர்தம்சந்ததிமாதகலான்
உய்ந்திடுநற்றவச்சுப்பிரமண்யனுயர்சுதனே.

கற்றவன்கண்ணுதலோனன்பர்பூசைகசிவொடுசெய
துற்றவன்முப்பொருளுண்மையுணர்ந்தவனேறுசெப
நற்றவம்வாய்மைபொறையோடடக்கநவிலொழுக்க
மற்றிவன்சித்தாந்தசைவப்ரசங்கமறையவனே.

சீரம்புவியினின்மாந்தர்கணன்னெறிதேர்தலின்றிப்
பாரம்புவிக்கென்றிருக்குஞ்ஞானப்பரவைக்கரை
யாரம்புணையெனச்சைவத்தினுண்மையையார்க்குமுணர்த்
தேரம்பன்சைவபரிபாலனசபைக்கேயந்தவனே.

மூன்றுநிரம்பவழகியதேசிகன்முற்றுவித்த
இன்னுச்சுவைபுறுசேதுபுராணத்தியற்றியபா
நன்னுவலான்றியேனையர்தேர்ந்துநலனடையா
ரென்னுவசனநடையினிற்றேறவியற்றினனே

---

மாதகல்

சிற்றம்பலப்புலவரவர்கள் வழித்தோன்றலாகிய

ஸ்ரீமத். ம. சிற்றம்பலபிள்ளையவர்கள்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

மலர்தலை யுலகின் மல்குயி ரனைத்தும்
மலவிரு ளொருவி நிலவிடு ஞானந்
தன்னைப் பெற்றுத் தனனை யறிந்தே
மன்னிய தலைவனைப் பின்னுற வுணர்ந்து
உன்னரு முத்தி யுவந்தினி தெய்த
நன்னெறி யொன்று நவிலுவன் யானெனப
பரமபரைக் குரவன் தரம்பெறு மறைசை
நிரம்ப வழகிய வரம்பெறு தேசிக
னுனனினு முத்தி யுவந்தினி தளிக்கு
மூன்னுறு பாதகர் தன்னையு மோட்டும்
பாலோடை யாதிய நாலாறு தீர்த்தமு
மேலான மூர்த்தியும வாலான தலமுமா

விருந்தை சொற்ற பொருந்து சாபமு
மரக்கன் றன்னை முருக்கு பாதகமும்
பெருக்கப் போக்கும் பெரும்புகழ் தன்னாற்
றிருக்கிளர் நாயக னிருக்கொ டர்ச்சித்த
விராமேச் சாத்தி னியல்புறு காதையைத்
தராதலம் புகழ்தர விராவுசெந் தமிழா
லிலக்கணத் துறையெலா மியல்புற வமைத்துத்
தலக்கணை நாவலர் துலக்கமாய்ப் போற்றிட
சேது புராணமென் றோதிடு நூலாய்த்
தீதகல் யாப்பாற் செய்தன னாகச்
சங்கப் புலவோர் துங்கமாய் வசித்த
பங்கமில் கீர்த்திப் பாண்டிநா டதனில்
மேழிக் கொடியைக் கோளிலா தேந்தும்
வாழிய குலத்தில் வளம்பெற வுதித்த
பராவுறு கீர்த்திப் பண்புகள் வாய்ந்த
விராகவ பிள்ளை யிந்நிலத் தியற்றுந்
தவமொரு வடிவெனத் தானங் குரித்தோன்
பவமக லீழத் தவமகல் வண்ணை
தன்பதி யென்ன வின்புற வாழ்வோன்
மன்பெரு நிதியாற் றுன்பகல் மதியோன்
சிவனடி யவரைச் சிவனெனக் கொண்டே
நுவலுறு மவர்பணி கவலா தியற்றும்
பாதக மில்லாப் பத்தர் சிகாமணி
சீதம்யில் வாகனச் சிறப்புறு வள்ளல்
கூறுமப் புராணங் குறைந்திடு மதியோர்
தேறுத லரிதெனத் திருந்திட வாய்ந்து
யாவரு முணர்தர யாத்திடு வசனமென்
றோதிய மொழிப்படி யுரைக்குவன் யானெனக்
கல்விப் பயிரைக் கசடற வளர்த்த
தொல்புல வோர்க டொல்பதி யாகுந்
திருவளர் மாதைத திருபபதி யதனிற்
குருவென வுதித்த குசைநுதி மதியோ
னிலக்கண விலக்கிய மியல்புட னாய்ந்தோன்
வலக்கணுஞ் சோதிடந் துலக்கமாய்க் கற்றோன்
றர்க்கம் வேதாந்தந் தகைபெற வுணர்ந்தோ
னொற்கமில் சித்தாந்த வொண்கலை நிபுணன்
தொக்க தமிழ்ச்சங்கத் துலங்கிடு புலவன்
மிக்க பரிபாலன சபையிவர் சிங்கம்
ஓது புராணத் துற்ற நவரசச்

சொற்றொட ரதனி னற்பொரு ளமைந்துக்
கற்பவ ரெவருங் கற்றெளி துணரச்
சாற்று பேரம்ப சற்குரு
அழியா மென்று மச்சிட் டனனே.

—o—

இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவராகிய

மாதகல்

## ஸ்ரீமத். சி. தில்லையம்பலபிள்ளையவர்கள்

சொல்லியது.

நேரிசையாசிரியப்பா.

சீர்வள ருலகத் தார்தரு முயிர்கள்
யாவையுங் காக்கு மோவினற் றொழிலான்
செந்தா மரைமலர் முந்துற மேவு
மகர வாகார நங்கை மணாள
னாகிய மாலோன் போகிய பத்தவ
தாரத் தொன்று மேர்பெ றயோத்திப்
பத்திர தன்பெறு புத்திர னாகத்
தோற்றிய சன்மத் தேற்றம தாய
முத்தொடு பல்வளன் மெத்தி டிலங்கா
புரியர சாண்ட நிருதர்க் கதிபனும்
வரமிகு பிரமன் மருமா னுமாய
அரக்கற் கொன்ற பொறுக்காப் பழியைத்
தீர்த்த மகத்துவ தீர்த்தம தாநற்
சேது மான்மியத்தை யோதிய வடமொழி
நின்றுந் தமிழி லொன்றிய பாவாற்
புலமை செறிந்த தலைமையை யுடையோ
ரொப்பில தென்றே செப்பு புராணமாய்
வழிபெய ராதே மொழிபெயர்த் தருளினர்
சைவத் துறையின் மெய்வைத் திலகிய
நிரப்ப வழகிய தேசிக ரவைதைக்
கற்றோ ரன்றி மற்றோ ரெளிதி
னுணருவ தரிதென வோர்ந்தன் னிராமேச்
சரமதைச் சனன புரமதாக் கொண்டுமெ
வீணா கான வேணூர் பதியாம்
பணைசூழ்ந் திலகு வண்ணைநன் னகரைப

புக்கக மாகவு மொக்கலே கொண்ட
தாளாண் மையிற்செறி வேளான் குடிமே
ஸ்ரீராகவப் பிள்ளை யியற் குணமான
பொறையருள் சாந்த நிறைகொடை யேசிவ
பத்தியோ டடியார் பத்தியொ டன்பா
மின்னநற் குணங்கள் மன்னு மோருருவாய்
வந்ததென் றல்லோர் சிந்தையி னினைதரத்
தக்கசால் போடுருப் பெற்றிடு கான்முளை
யாகிய மயில்வா கனனெனும் பெயரோன்
இவ்வுல குள்ளோ ரெவ்வெவர் காண்கினும்
பானஞ் செயினு நானஞ் செயினும்
பவர்க்கம் புகாதே சுவர்க்கம் புகுத்துந்
துய்யநீர்ச் சேதுவின் மெய்மையைத் தேற
மான்மிய மதனைப் பான்மையி னடிக்
கத்திய ரூபம தாக்கித் தருகெனச்
செப்பின னவதற் கொப்ப விசைந்தே
முற்றிய புராணத் துற்ற கருத்தை
விட்டுப் பிரியா தொட்டியே யாக்கினன்
ஆவணஞ் செறிதிருப் பூவண நின்றே
கோதகல் வளம்புனை மாதகல் வந்த
ஆதி வருணத் தந்தணர் திலகன்
பசுபதிக் கன்பனும் பசுபதி யையர்
தன்வழி வந்தே முன்னருஞ் சோதிட
நூல்பயி லாட்சியி னேனுறு நுண்மைக்
குசைநுனி மதியா லசைவிலாப் புகழை
யட்டதிக்கும் புக விட்டதோர் சுப்பிர
மண்ணிய ஐயர் பண்ணிய தவமே
யோருரு வாகத் தானுரு வானோன்
தென்மொழி வடமொழி யெனுமிரு கடலையும்
தான்கரை கண்ட மேன்மைய துடையான்
பரமத திமிர வுரமடு பானு
சைவப் பயிரது தழைத்திட மாமழை
பரசங்க முன்பெய பிரசங்க மாரி
சிவன்று ளர்ச்சனை செய்புநற் றவத்தோன்
சத்தியோ சாத சிவாசாரிய ரெனுந்
தீட்சா நாமப் பூட்சிய துடையான்
சேது புராணம தாதி யிலக்கிய
மன்றி யிலக்கண மென்றுபன் னூல்களைக்

காதலி னெற்குக் கற்பித்த நற்குரு
என்மனங் குடிகொண் டிருக்கு
மாசி லேரம்ப மறைவல லவனே.

—•—

யாழ்ப்பாணம்
தமிழ்ச்சங்கத்தவருளொருவரும்
மகாபாரத உரையாசிரியருமாகிய
பருத்தித்துறைசார்ந்த புலோலி
ஸ்ரீமத். வ. குமாரசுவாமிப்புலவரவர்கள்
சொல்லியவை.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விரும்பியவேள்வியாற்றுவோர்மேலாம்
விண்ணவர்க்கமைத்திடுமவியை
அரும்பியசூர்ம்பற்சனகனுண்டெய்தி
யவாவினாற் கவர்ந்ததேயென்னக்
கரும்பியன்மொழியாள்சீதையைக்காந்து
கவர்ந்திடுமரக்கனைவதைத்துத்
திரும்பியவிராமசீபதிபதிட்டை
செய்தராமேச்சரத்தலத்தே.

முன்பிதாமகருதியமுதியோர்கண்
முயன்றுநல்வாழ்வினேடிருந்த
பின்பிதாதரவுக்குறைவிடமாகிப்
பெயருறுமிராகவப்பிள்ளை
அன்பிராமேசனடியிணைக்காக்கி
யாற்றியநல்வினைப்பயனே
துன்பிராதிலம்பாட்டினர்மிடிதீரச்
சுதனெனவுதித்ததேயனையான்.

பெற்றவர்மகிழப்பின்னுளார்மகிழப்
பேணியவன்பறிவொழுக்கம்
உற்றெவர்மனதுமுவந்திடுஞ்சுகுண
னோங்கியசிவமதாசாரன்
கொற்றவர்மதிக்குநல்லியாழ்ப்பாணக்
கோநகர்ப்பெரியவர்த்தகனயக்
கற்றவர்தமக்குமற்றவர்தமக்குங்
கரந்திடாதளித்திடுங்கரத்தோன்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST. - TAMIL NADU

பாவினுக்கினியநற்றமிழ்வேதம்
பாடியஞானசம்பந்தர்
நாவினுக்கரசர்நம்பியாரூரர்
நயந்தமாணிக்கவாசகர்நாள்
மேவினுக்குருபூசைகளொருநான்கும்
விருப்பொடுநடத்தியபேற்றுப்
பூவினுக்கரசேயெனுமியாழ்ப்பாணப்
புரியிலோர்மடாலயத்ததிபன்.

ஆகியமயில்வாகனப்பெயர்ப்பிள்ளை
யனைவருமறிந்துயர்கதியிற்
போகியசேதுபுராணகாவியத்தைப்
புரிந்தவிவசனமாயென்ன
யோகியரல்லாருணர்வருமீச
னுறைதிருப்பூவணத்திருந்தும்
ஏகியபசுபதிப்பெயரையற்
கினியசந்ததியெனவுதித்தோன்.

மாதகலெனும்பேர்வளம்பதியதனின்
மருவுசுப்பிரமணியையன்
றீதகலறங்கள்செய்துபெற்றளித்த
செம்மல்யாழ்ப்பாணமாநகரில்
வாதகல்சைவபாலனசபையின்
மன்பிரசாரகன்வரையுஞ்
சூதகலுளத்திற்சோதிடமுதலாத்
துலங்குநற்பலகலைதொகுத்தோன்.

தேவருந்துதிக்குமீசனைப்பூசை
செய்திடுநியதியோன்சிறக்கும்
பாவருந்துறையிற்றேறினர்க்கல்லாற்
பயன்படற்கரியகாவியத்தை
யாவருந்தெரிந்துபாதகந்தவிர
வினியநல்வசனமாப்புரிந்தான்
நாவலருந்தமிழிலாசுகவிராச
னயந்தவேரம்பநாமிகனே.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்.

# திருவிராமேச்சரத்

# தேவாரம்.

## திருநாவுக்கரசுநாயனார் திருவாய்மலர்ந்தருளியது.

### திருநேரிசை.

பாசமுங்கழிக்ககில்லாவரக்கரைப்படுத்துத்தக்க
வாசமிக்கலர்கள்கொண்டுமதியினான்மால்செய்கோயில்
நேசமிக்கன்பினாலேநினைமினீர்நின்றுநாளுந்
தேசமிக்கானிருந்ததிருவிராமேச்சரமே. (௧)

முற்றினநாள்களென்றுமுடிப்பதேகாரணமா
யுற்றவன்போர்களாலேயுணர்விலாவரக்கர்தம்மைச்
செற்றமால்செய்தகோயில்திருவிராமேச்சரத்தைப்
பற்றிநீபரவுநெஞ்சேபடர்சடையீசன்பாலே (௨)

கடலிடைமலைகடம்மாலடைத்துமால்கருமமுற்றித்
திடலிடைசெய்தகோயிற்றிருவிராமேச்சரத்தைத்
தொடலிடைவைத்துநாவிற்சுழல்கின்றேன்றூய்மையின்றி
புடலிடைநின்றும்பேராவைவராட்டுண்டுநானே (௩)

குன்றுபோற்றோளுடையகுணமிலாவரக்கர்தம்மைக்
கொன்றுபோராழியம்மால்வேட்கையாற்செய்தகோயில்
நன்றுபோல்நெஞ்சமேநீநன்மையையறிதியாயிற்
சென்றுநீதொழுதுய்கண்டாய்திருவிராமேச்சரமே. (௪)

வீரமிக்கெயிறுகாட்டிவிண்ணுறநீண்டரக்கன்
கூரமிக்கவனைச்சென்றுகொன்றுடன்கடற்படுத்துத்
தீரமிக்கானிருந்ததிருவிராமேச்சரத்தைக்
கோரமிக்கார்தவத்தாற்கூடுவார்குறிப்புளாரே. (௫)

ஆர்வலநம்மின்மிக்காரென்றவவ்வரக்கர்கூடிப்
போர்வலஞ்செய்துமிக்குப்பொருதவர்தமமைவீட்டித்
தேர்வலஞ்செற்றமால்செய்திருவிராமேச்சரத்தைச்
சேர்மடநெஞ்சமேநீசெஞ்சடையெந்தைபாலே. (சு)

வாக்கினாலின்புரைத்துவாழ்கிலார்தம்மையெல்லாம்
போக்கினாற்புடைத்தவர்களுயிர்தனையுண்டமால்தான்
றேக்குநீர்செய்தகோயில்திருவிராமேச்சரத்தை
நோக்கினால்வணங்குவார்க்குநோய்வினைநுணுகுமன்றே. (எ)

பலவுநாடமைசெய்துபார்தன்மேற்குழுமிவந்து
கொலையிலார்கொடியராயவரக்கரைக்கொன்றுவீழ்த்த
சிலையினான்செய்தகோயில்திருவிராமேச்சரத்தைத்
தலையினால்வணங்குவார்கள்தாழ்வராந்தவமதாமே. (அ)

கோடிமாதவங்கள்செய்துகுன்றினார்தம்மையெல்லாம்
வீடவேசக்கரத்தாலெறிந்துபின்னன்புகொண்டு
தேடிமால்செய்தகோயில்திருவிராமேச்சரத்தை
நாடிவாழ்நெஞ்சமேநீநன்னெறியாகுமன்றே. (கூ)

வன்கண்ணர்வாளரக்கர்வாழ்வினையொன்றறியார்
புன்கண்ணராகிநின்றுபோர்கள்செய்தாரைமாட்டிச்
செங்கண்மால்செய்தகோயில்திருவிராமேச்சரத்தைத்
தங்கணாலெய்தவல்லார்தாழ்வராந்தலைவன்பாலே. (க0)

வரைகளொத்தேயுயர்ந்தமணிமுடியரக்கர்கோனை
விரையமூற்றறவொடுக்கிமீண்டுமால்செய்தகோயில்
திரைகள்முத்தால்வணங்குந்திருவிராமேச்சரத்தை
உரைகள்பத்தாலுரைப்பாருள்குவாரன்பினாலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் இராமலிங்கேசுவரர், தேவியார்-பருவதவர்த்தனியம்மை.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## திருவாய்மலர்ந்தருளிய

# தேவாரம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

—:—

அலைவளர்தண்மதியோடயலேயடக்கியுமை
முலைவளர்பாகமுயங்கவல்லமுதல்வன்முனி
யிலைவளர்தாழைகள்விம்முகானலிராமேச்சரந
தலைவளர்கோலநன்மாலையன்றாணிருநதாடியே. (க)

தேவியைவவ்வியதென்னிலங்கைத்தசமாமுகன்
பூவியலும்முடிபொன்றுவித்தபழிபோயற
வேவியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சர
மேவியசிந்தையினார்கடம்மேல்வினைவீடுமே. (உ)

மானனநோக்கிவைதேகிதன்னையொருமாயையாற்
கானதில்வவ்வியகாரரக்கனுயிர்செற்றவ
னீனமில்லாப்புகழண்ணல்செய்தவிராமேச்சர
ஞானமுனன்பொருளாகிநின்றதொருநன்மையே. (௩)

உரையுணராதவன்காமமென்னுமுறுவேட்கையான்
வரைபொருதோளிறச்செற்றவில்லிமகிழ்ந்தேத்திய
விரைமருவுங்கடலோதமல்குமிராமேச்சரத்
துரையரவாடநின்றாடல்பேணுமம்மானல்லனே. (௪)

ஊறுடைவெண்டலைகையிலேந்திப்பலவூர்தொறும்
வீறுடைமங்கையரையம்பெய்யவிறலார்ந்ததோ
ரேறுடைவெல்கொடியெந்தைமேயவிராமேச்சரம்
பேறுடையான்பெயரேத்துமாந்தர்பிணிபேருமே. (௫)

அணையலைசூழகடலன்றடைத்துவழிசெய்தவன்
பணையிலங்கும்முடிபத்திறுத்தபழிபோக்கிய

வினையிலியென்றுமிருந்தகோயிலிராமேச்சரந்
துணையிலிதூமலர்பாதமேத்தத்துயர்நீங்குமே. (௬)

சனிபுதன்ஞாயிறுவெள்ளிதிங்கட்பலதீயன
முனிவனசெய்துகந்தானைவென்றவ்வினைமூட்டிட
வினியருணல்கிடென்றண்ணல்செய்தவிராமேச்சரம்
பனிமதிசூடிநின்றாடவல்லபரமேட்டியே. (எ)

பெருவரையன்றெடுத்தேந்தினான்றன்பெயராசாய்கெட
வருவரையாலடர்த்தன்றருள்கியவன்மாலெனு
மிருவருநாடிநின்றேத்துகோயிலிராமேச்சரத்
தொருவனுமேபலவாகிநின்றதொருவண்ணமே. (அ-௯)

சாக்கியர்வன்சமண்கையர்மெய்யிற்றடுமாறறத்தார்
வாக்கியலும்முரைபற்றுவிட்டும்மிலொண்மையா
லேக்கியலுஞ்சிலையண்ணலசெய்தவிராமேச்சர
மாக்கியசெல்வனையேத்திவாழ்மின்னருளாகவே. (௧௦)

பகலவன்மீதியங்காமைக்காத்தபதியோன்றனை
யிகலழிவித்தவனேத்துகோயிலிராமேச்சரம்
புகலியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்புந்தியா
லகலிடமெங்குநின்றேத்தவல்லலார்க்கில்லையல்லலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை

# சேதுபுராணவசனம்.

## காப்பு.

திங்கள்ம்குழவியென்னத் திகழொருமருப்பிற்சோதி
தங்குகிமபுரிவயங்கத் தடாமணிமகுடந்தாங்கித்
துங்கநல்வரங்களல்குந் தூயசீரிராமசேதுப்
புங்கவர்வணங்கும்யானைமுகத்தனைப் போற்றல்செய்வாம்.

தொடர்கின்றவிடுக்கண்வெற்புத்துகள்படத்துளைக்குமேலோ
னடர்கின்றவதற்குநாதனாகியவைங்கைமுக்கட்
படர்வென்றிப்பகவன்முன்னைப்பவமுதற்படியினெல்லா
விடர்நின்றும்புரக்கவெம்மையெங்கணுமெந்தஞான்றும். (உ)

## கடவுள் வாழ்த்து,

### சபாபதி

பூமாதுபொலிவெய்தமுகுந்தன்கார்க்கும்புவிமாதுவளம்பெருகப்புலமைசான்ற, நாமாதுநலந்தழைப்பவிருள்கால்சீய்க்குநகைநிலவுதவழ்மௌலிநன்னீர்க்கங்கை, மாமாதுபுனறுளிப்பமறைகள்வாழ்த்தவளர்தில்லையம்பலத்துள்வாமநீங்காத், தேமாதுவிழிகுளிர்ப்பவமரர்போற்றத்திருநடஞ்செய்நூபுரத்தாள், சென்னிசேர்ப்பாம் (க)

### இராமநாதசுவாமி

பூந்தவிசினிருந்தபிரான்முதலோர்காணப்புண்டரிகமகள்கொழுநன் புகழிலங்கை, வேந்தனுயிர்ப்பழிகழுவுமுகத்தால்யார்க்கும்விடையவனேயுடையவனும் வேதவாய்மை, யாந்தரங்கம்வெளிசெய்வானனைவரோடுமெணைந்துகந்தமாதனத்திலருச்சித்தேத்து, மேந்துபுனற்சடிலமுடியிராமநாதனிணையடிச்செந்தாமரைகளிறைஞ்சிவாழ்வாம். (உ)

### பர்வதவர்த்தனியம்மை

தண்ணெனவும்வெச்செனவுந்தந்துசாயாத்தகைபயின்றுவிடநீக்கித்தலைவற்கென்று, முண்ணமுதந்தனையுதவியிமையமேருவுயர்சிகரமந்தரத்தையொருவிச்சேர்ந்துங், கண்ணுதலைவிளர்ப்புறலாற்கயிலையெள்ளிக்கௌணியர்க்குத்தமிழ்சுரக்குங்காட்சியாலே, வண்ணமுலைமலயமலைமானுங்கன்னிமலைவளர்காதலிமலர்த்தாண்மனத்துள்வைப்பாம். (ங)

## விநாயகர்

வேணிமுடிப்பகீரதிநீர்புழைக்கைவாங்கிவிடுத்தயன்வெண்டலையுருட்டிமிளிர் வெண்கோட்டாற், சோணிளையமதிக்குழவியுழுதுமேருக்கோடுமுடியிற்கிளைத்த வெண்டோள்குழையத்தாக்கித், தாணெடியவிடைமுனிந்துகயிலைமுக்கட்டாதை யொடும்விளையாடித்தன்பாலன்பர், மாணிலவுமனத்தறிநின்றுலாவுந்தெய்வவா ரணத்தைநினைந்திறைஞ்சிவழுத்தல்செய்வாம். (௪)

## சுப்பிரமணியர்

குலவும்மலைமகள்கலசமுலைப்பால்வாசக்குமுதமவள்சொழூநர்மறைசொழிக்கு ஞ்செவ்வி, நிலவுமுகமலர்கமழச்செய்துமுன்னோனெடுந்தலைச்சைபிடித்தேறிநெ ற்றிப்பட்டத், துலவியிவரொருமூவருவப்பமாலோடும்பர்கணங்களிதுங்கவுலக மூடுங், கலபமரகதமயிலூர்கழற்கால்வென்றிக்கந்தனைவந்தனைசெய்துகருத்துள் வைப்பாம். (௫)

## சரஸ்வதி

கவளமதகரியுரிவைப்போர்வைமூடுங் கண்ணுதலோன்புகழ்விரிக்குங்கலைகள் யாவும், பவளவிதழ்ப்பசுங்குதலைமொழியிற்காட்டும்பைந்தொடியையரவணஞ் சேய்ப்பருமவல்குற், றுவளுமணிமருங்குலிளநிலவெண்மூரற்சுந்தரியைவெண் கமலத்தோட்டுவட்டத், தவளமதிநடுவமர்வாலெகினம்போலுந்தையலைமைய லையகற்றித்தாளிற்றாழ்வாம். (௬)

## திருநந்திதேவர்

போதனுறைமலர்முகிழாதமரர்கோமான்புரநிலைமைகுலையாதுமருதுபோழ்ந்த பாதனுறைகடல்சுருங்காதரிணஞ்சூரல் படைமழுவண்சுரிகைகரம்பரித்துப்பாந் தட், காதனுறைசிதறுபுனற்கங்கைசூடுங்கண்ணுதலெம்பரன்மதியுங்கதியுநல்கு, நாதனுறைதிருக்கயிலைகாவல்பூண்டநந்தியைநம்புந்தியின்கணயந்துவாழ்வாம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி

சங்கமணிக்குழைதயங்கத்தழைந்தகாதுந்தனிவிடையுமுதலபலகணப்பில்காட் சி, பொங்குமடையாளங்கள்புகன்றுபோற்றிப்பொருவிறந்தபரஞ்சுடரைப்புந்தி க்கெட்டா, வங்கணனைவழுதியுடல்வெப்புநீங்கவணிதிகழ்வெண்டிருநுண்டூ ளள்ளிச்சாத்துஞ், செங்கைவிரல்கொடுகுறித்துத்தெரிக்குந்தோன்றல்சிற்றடியி ன்பெருந்தகைமைசிந்தைசெய்வாம். (௮)

## திருநாவுக்கரசு

தேவரையுமுனிவரையுந்துளவமார்பிற்றிருவரையுங்குரவரையுஞ்செல்வமிக் கோர், யாவரையுமேவல்கொளுநெற்றிநாட்டத்திறைவரைமுன்னிகர்த்திருந்தவெ ண்ணந்தோன்றச், சேவரையுநெடுங்கொடியின்றகைமையெல்லாத்திசைவரை யுஞ்செலத்தமிழின்செய்யுள்பாடு, நாவரையர்புகழ்மொழிகள்வரைந்துகூறி நயந்தவர்செய்திருத்தொண்டுவியந்துவாழ்வாம். (௯)

## சுந்தரமூர்த்தி

தாதுகொண்டமலர்ச்சுரியற்பரவையென்பாடனத்துணைமேன்மயற்குளிரின், றளர்வுதீர், வேதுகொண்டுவிழையுநெறிவிரும்பிமாலுமவிரிஞ்சனுமுன்றேடராத வெளியையுயாரும், யாதுகொண்டுமறிவரிதாயெங்குமானவிரும்பெருளைநெருங்குமிருளிரவின்மீளத், தூதுகொண்டார்தமையெமையாட்கொள்வீரென்றுசொல்லியவர்பதம்புல்லித்தொழுதல்செய்வாம். (௧0)

## மாணிக்கவாசகர்

செழியர்குலபதிகொடுத்தமாடுசொண்டுசென்றுதிருப்பெருந்துறையிற்சென்றிந்தசம்புப், பழிவிரவுபரித்திரள்சொண்டணைந்துமாறன்பணித்தவிடர்க்கிரங்கியருள்பாடிப்போற்றி, வழியமுதகிரணநிலர்மகுடமீதேமதுரையமர்பரம்பரனைவந்திக்காகச், சுழிபெருகுபுனற்றரங்கவைகைவாய்மண்சுமப்பித்தார்பதந்தலைமேற்சுமத்தல்செய்வாம். (௧௧)

## சண்டேசுரர்

மனுதிகளுக்கெட்டர்தபரமானந்தவாழ்வினையங்கோரிலிங்கமண்ணாற்கூப்பித்தனுதிதையந்தனினின்றுந்தாபித்தான்பா றழைத்தவன்பாலாட்டவந்துதடுக்கத்தாதை, யென்றுதவன்றனிருபதமுமழுவாற்றுண்டித்திகழ்ந்தவனைப்பரபதத்துவிருத்தித்தானும், பிறுகியருளடைந்தவிறற்சண்டேசன்றுள்பிரசமலரிறைத்திறைஞ்சிப்பரசுவாமே. (௧௨)

## மெய்கண்டதேவர்

அல்லாதபரசமயவலைகைத்தேர்விண்டகலவகல்புனற்பெண்ணையயல்சூழ்வெண்ணெய்ப், பொல்லாதவிபமுகத்துப்புத்தேடன்பாற்புனிதசிவாகமப்பொருண்மைபொருந்தவாய்ந்து, நில்லாதநிலையிதுமற்றென்றுமொன்றாய்நிற்குநிலையிதுவெனமெய்ந்நெறிதேர்ந்தியாரும், வெல்லாதசிவஞானபோதஞ்சொன்னமெய்கண்டான்சரணமுடிமீதுகொள்வாம். (௧௩)

## திருத்தொண்டர்

முன்னடையவரியசிவமுத்திபெற்றோர்முதலகிலதுவிரும்பிமுயலாநின்றோர்பின்னடையவருமவர்கண்முதலாயுள்ளபிஞ்ஞகனின்வெள்ளைமதிபிறங்குவேணிமின்னடையுமணிமௌலிவேதகீதன்வெண்ணீறுங்கண்டிகையுமெய்விடாமற்றன்னடைநன்னெறிதம்மையடைந்துளார்க்குந்தருந்தொண்டர்பெருந்தொண்டுதலைமேற்கொள்வாம். (௧௪)

கடவுள்வாழ்த்து முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

## கந்தமாதனச்சிறப்பு.

அநாதி மலமுத்தராய், நித்தியராய், வியாபகராய், எல்லா வறிவும் எல்லாமுதன்மையும் எல்லாவனுக்கிரகமு முடையராய், ஆன்மாக்களிடத்துப் பொருந்திய பெருங்கருணையினாலே பஞ்சகிருத்தியங்களையும் இயற்றுதிபற்று முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடலைச் செய்த்தும், வெள்ளியம்பலக்கூத்துகந்தும், அரசனாய் முடிகவித்த ரசாண்டதுமாகிய மதுராபுரியைச்சேர்ந்த இராமேச்சரத்திலே, தன்னிடத்து விதிப்படி ஸ்நானஞ்செய்வோரது மும்மலங்களையும் போக்கும் அதி விசிட்டமுடைய சேதுவினடிவாரத்திலே, கந்தமாதனமென்னும் பெயரையுடைய மலையொன்றுளது. அது தேவர்கள் அமுதவுணவின்றிப் பசித்தடைந்த பொழுதினுந் தாங்கும் பலவகைச் செல்வங்களையுடையதும், ஸ்ரீ. இராமன் இராவணனைக் கொன்ற பிரமகத்தியைப் போக்குமாறு இராமலிங்கப் பிரதிட்டை செய்து அருச்சித்தற்கிடமாயுள்ளதும், அருவாகிய சிவபெருமான் ஆன்மாக்களது பிறவிப்பிணியைப் போக்கும்பொருட் டுருவா யெழுந்தருளிப் பலவகைத் தீர்த்தங்களையும் பலவகை மூர்த்தி பேதங்களையும் பலவகை மெய்யடியார் கூட்டங்களையு மிருக்கச் செய்த பெருமையை யுடையதுமாயுள்ளது.

---

## நைமிசாரணியச்சிறப்பு.

மூர்த்தி தீர்த்த ஸ்தல விசேடங்களையும், அவைகளான்மாக்களுக்களிக்கும் பேறுகளையும், அவற்றை வழிபட்டுப் பேறுபெற்றோர்களது சரித்திரங்களையுஞ் சொல்லுவான் றொடங்கி, முன்னர் அவற்றைக்கேட்டகமகிழ்ந்த முனிவர்களுக் கிருப்பிடமாகிய நைமிசாரணியச்சிறப்புக் கூறப்படுகின்றது:

பிரமாவின் புத்திரர்களாகிய சௌனகாதி முனிவர்கள் பிறவிப்பிணியைப் போக்குமாறு சிவபெருமானை நோக்கி அருந்தவஞ்செய்தற்கமைதியாகிய இடம் யாதென்று தந்தையாகிய பிரமனிடத்து வினவ, அவன் ஒரு தருப்பையை யெடுத்துச் சக்கரமாக்கி யுருட்டி "இது தங்கிய விடமே நீவிர் அருந்தவஞ் செய்தற் கமைதியாயது" என்று சொல்லி அனுப்பினன். அது தங்கிய விடமே நைமிசாரணியமாகும்.

இது, நெடுங்காலம் அருந்தவம் பயின்ற வனேக வயதுடையர்களும் முப்பத்துமுக்கோடி தேவர்களினும் பெருந்தொகையினர்களுமாகிய முனிவர்கள் வசிக்கப்பெற்றதும், பிறவிப்பிணிககஞ்சித் தன்கணுற்றோரை அறிவே வடிவாகிய சிவத்தோடு சேர்க்கும் பொருட்டுக் கற்பகாலங்களுக் கழிவில்லாததும், ஏனைய மிருகச்சத்தங்கள் கீழ்ப்படமேலோங்கி யெழுகின்ற உச்சசுரமாகிய வேதகோஷத்தையுடையதும், தன்னிடத்து வசிப்பவர்களிடத்தே காமம் வெகுளி மயக்கமாகிய முக்குற்றங்களில்லாமையால் மன்மதனும் மரணமில்லாமையால் இயமனுங் கண்டறியாத பெருமையையுடையதும், கடல் சுவறினும் மழைவறப்பினுந் தன்னிடத்து வசிக்குஞ் சீவகோடிகளுக்கு உணவுமுதலிய கொடுத்தலால் பூமிமுழுவதுக்கும் பொக்கிஷ சாலையாயிருப்பதும், தன்னிடத்துள்ள மிருக பட்சிகள் இயல்பாயுள்ள பகைநீங்கிக் கலந்து வேதாகம சாரமாகிய திரிபதார்த்த விலக்கணங்களைப் பேசி வசிக்கும் பெருமையை யுடையதும், பலவகை விருட்சசாலங்கள் பலவகை நறுமணங்கமழும் புட்ப சாதிகள் பலவகைத் தடாகங்கள் பலவகை மலைகள் ஆதியவற்றாற் சிறப்புற்றோங்கியது மாகிய பெருமை யுடையது. இந்த நைமிசாரணியத்திலே, சௌனகாதி முனிவர்கள் தங்கள் களத்திர புத்திரபௌத்திராதியர்களோடும் அட்டாங்கமுதலிய யோகாப்பியாசிகளாயிருந்து தவஞ் செய்வா ராயினர்.

---

## சேதுச்சருக்கம்.

பூமலியிதழிசூடும்புதுநிலாமகுடவேணி
நாமலிசுருதிபோற்றுநம்பிரானிராமநாத
னேமலிசிலையிராமற்கிராவணப்பிரமகத்தித்
தீமலியிடுக்கண்டீர்த்தசேவடிசென்னிவைப்பாம்

அந்த நைமிசாரணியத்திலே, முமுட்சுக்களாகிய சௌனகாதி முனிவர்கள் நாற்பத்தெண்ணாயிரவரும், அவர்கள் புத்திரபௌத்திராதியர்களுஞ் சிவார்ச்சனாதிஞானமுடையர்களாய்த் திரிபதார்த்த விலக்கணங்களை யாராய்ந்து கொண்டிருக்கும் பொழுது, அங்கே, ஸ்ரீ வேதவியாத முனீந்திரருடைய பூரண கடாட்சம்பெற்ற சூதமகாமுனிவர் வந்தார். அவரது வரவைக்கண்ட முனிவர்கள், பேரானந்தமடைந் தெழுந் தெதிர்கொண்டு வணங்கி உன்னதாசனத்திருத்திப் பாதியாசமனீயார்க்கியங் கொடுத்து நல்வரவு சொல்லி, "பௌராணிக சாகர

மே! பூமியிற் சிரேஷ்டதலம் யாது? சிரேஷ்டதீர்த்தங்களெவை? சிவபத்தியாதியாம் இஷ்டசித்தி யெதனானுண்டாகும்?" என்று விருவினர். அது கேட்ட சூதமுனிவர் மிகமகிழ்ந்து தமதாசிரியரை மன மொழி மெய்களால் வழிபட்டு, "முனிவர்காள்! நான் முன்னொருகாலத்தும் ஒருவருக்குஞ் சொல்லாத அரிய சரித்திரமொன்றுளது. அது ஒருப்பட்டமனமுடைய நும்மனோர்க்கே சொல்லத்தக்கது" என்று சொல்வாராயினர்.

தக்கிண பூமியிலே ஸ்ரீ.இராமன், எழுபது வெள்ளங்குரக்குச் சேனைகளோடு சென்று, இராவணனைக் கொன்ற பிரமகத்தி நீங்க, இராமேச்சரமென வொரு சிவஸ்தலமுண்டாக்கிச் சிவப்பிரதிட்டைசெய்துஅங்கே பல தீர்த்தங்களையும் வருவித்தனன். அவை, உலகத்திலுள்ள ஏனைய க்ஷேத்திரங்கள் மூர்த்திகள் தீர்த்தங்களெவற்றினுமிகச்சிறந்தன; தரிசித்தவனுக்கு ஞானானந்த பரமோக்ஷங்கொடுப்பன; அரனரியிடத்து மன்பைத்தருவன; விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்கிற மூவகையான்மாக்களுக்கும் முறையே அருவாயவருள்ளத்தே வெளிப்பட்டருள் சுரத்தலும், உருவாய் நேரே வந்தருள் கொடுத்தலும், அருவுருவாய்க் குருலிங்க சங்கமங்களை யதிட்டித் தனுக்கிரகித்தலுமாகிய மூவகை யனுக்கிரகத்தையுங் கொடுப்பன. எல்லாத் தேவர்களையுந் தனக்கங்கமாயுடைய விந்தச் சேதுதீர்த்தத்தை எவனொருவன் இப்பிறப்பிற்றரிசிப்பானோ அவன் தனது இருவழியிலுமுள்ள கோடி பிதிர்வர்க்கங்களோடு கற்பகாலஞ் சிவலோக வின்புற்றுப்பின்பு மோக்ஷமடைவன்; அளவிறந்த செபதபயாகாதி புண்ணியப்பலனையு மிட்டசித்திகளையும் திவ்விய தீர்த்தங்களையாடிய பலனையுமடைவன். அந்நியனொருவனைச் சேதுவிற் சென்று தீர்த்தமாடுகவென்றேவினவன், அவனடையும் பேறளவு பயனைத்தானு மடைவன். அச்சேதுவில் விதிப்படி ஸ்நானஞ் செய்தவன் தன்னிருவருக்கத் தெழுகோடி பிதிரரோடும் வைகுண்டமடைந்தின்புற்றுப் பின்பு சிவாநந்தமடைவன். கந்தமாதன பருப்பதத்தையும் இராமநாதனையும் சேதுவையுமிருந்துளியிருந்து தரிசித்துத் தீர்த்தமாடினதாகத் தியானித்தவன், முன் செய்த தீவினைகளனைத்தினும் நீங்கி இலக்ககோடி இருவழிப் பிதிரரோடு மூன்று பிரமகற்பகாலம் சிவலோகத்தின்புற்று மோக்ஷமடைவன். சேது தீர்த்தமாடினவன், பஞ்சமா பாதகனாயினும் அக்குற்ற நீங்கி நூறு கோடியிருவழிப் பிதிரரோடும் வைகுண்டலோகம் வாழுவன். அவன் எத்தீமை செய்யினும் நரகத் துன்ப மடையான்.

சேது தீர்த்தமாடினவன், இயமபுரத்தில் அக்கினிக்கு கையிலே கிடந்துருகான், நிணச் சேற்றிலமிழ்ந்தான், வைத்ரணியாற்றிலிறங்கான், தன்றசையை யுண்ணுன், நாயினது மாமிசத்தையுங் கட்டத்தையு முண்ணுன், அதற்குணவுமாகான், நாய் மூத்திரத்தையும் கழுதை மூத்திரத்தையும் தன் மூத்திரத்தையுங் குடியான், இரத்தம் புழு முதலிய வருவருப்புணவுகளை யுண்ணுன், முள்ளிலவிலேறுன், மலத்தைத யுடம்பிலே பூசப்படான், கன்மழை அக்கினிமழைகளிலே நின்று வருந்தான், அக்கினிக்கிணற்றிலே குதியான், இரத்தக்குளத்திலே வீழ்ந்து நீந்தான், அக்கினிக்குழியிலே பாய்ந்து பாய்ந்தேருன், வெளிகளிலே தலைகீழாகத் தூக்கப்படான், அம்மி ஆட்டுக்கல் செக்கு இவைகளிலிட்டரைப்புண்ணுன், அக்கினியிலே யுருண்டுருண்டுருகான், கடுங்காற்றினுல் வருந்தான், காமநீரைக்குடியான், வாள் சத்தி முதலிய கருவிகளால் வெட்டுண்ணுன், கழுவிலேற்றப்படான், பித்தநீர் கோழை பெருங்கசப்புநீர் யானைத்தசை முதலிய வுண்ணுன், பாம்புகளாற் கடிபடான், யானைக்கொம்புகளாற் குத்தப்படான், கொதிக்கின்ற நெய்க் கொப்பரைகளிலே போடப்படான், கொதி நெய் சுடுகல்லாதியவற்றை வாயிலிட்டு விழுங்கான், மண்ணைவாயி லிட்டுத்திணிக்கப்படான், காய்ச்சிய விருப்பூசிகளை நவத்துவாரங்களினுமேற்றப்படான், இருப்பாப்புகளாற் பிளக்கப்படான், காரைநீரை யுடம்பிலூற்றப்படான், காய்ச்சிய கொடுறுகளால் எலும்பு பற்கள் பிடுங்கப்படான், மரத்திலேறி மல மூத்திரக் குழிகளிற்குப்புறுன், பதினெண்வகையாயுதங்களாலும் வருத்தப்படான், காய்ச்சிய இருப்புப் பாவைகளைத்தழுவான், வெந்த இருப்புப் பலகைகளிற் கிடந்துறங்கான், புகைக்குகைகளிற் கிடந்து வருந்தான், குறிகளிற்றூண்டில் முள்ளிட்டு அக்கினி மத்தியிலே கட்டித்தூக்கப்படான், உருக்கிய ஈயத்தை ஊற்றப்படான், இன்னேரன்ன சகிக்கலாற்றுத் துன்பத்தைத்தரும் ரௌரவமுதலாகிய விருபத்தெண்கோடி நரகங்களினும் வருந்தான். சேதுதீர்த்தமாட விரும்பி நூறடி நடந்தவனும் நரகத்துன்ப மடையான்.

அச்சேதுக்கரையின் மணல் ஒருவனுடம்பிலெவ்வளவு படியுமோ அவ்வளவு பிராமணரைக் கொன்றபாவநீங்கும். சேதுதீர்த்தத்துலவிய சீதளக்காற்றுப்படினும் நூறு நூறு குடக்கள்ளருந்திய பாவநீங்கும். சேதுதீர்த்தத்திலே, ஒருவனது மழித்த சென்னி மயிர் கிடப்பின் பதினுயிரங் குருபன

ரியரைப் புணர்ந்த பாவமும், ஏனும்புகிடப்பின் பதினுயிரம் )பான்களவாண்ட பாவமும், பல வித பாவிகளோடிணங்கிய பாவமு நீங்கும்.

வழிதிரிப்பவன், அந்தணர் முனிவராதி பெரியோர்களை )ந்திப்பவன், தனக்கென்று சோறு சமைப்பவன், பேருணவு டையவன், மந்திரங்களை விற்பவன், பிராமணருக் கொன்றை தருவேனென்று வாக்களித்துப் பின்னதனைக் கொடாதவன், நருவை வணங்காதவன், நீரருந்தச் செலலும் பசுமுதலிய மி கங்களை விடாது தடுத்தோட்டுபவன் ஆகிய இவர்கள் பிர க் கொலை செய்தவராவர்.

நித்தியாக்கினி முதலிய நியதியை விடுத்தவன், சண்டா ர் கூட்டமுடையவன், கணிகையிடத்துண்பவன், துட்டதே தைகளுக்குப் படைத்த உணவையாவது தேவர்களுக்கென் வைத்த உணவையாவதுண்பவன், கட்குடிக்கும் மனைவியை டையவன் ஆகிய இவர்கள் கட்குடித்த பாவமுடையார்.

தாய், சிறியதாய், பெரியதாய், சகோதரர்மனைவிகள், சி ன்கிதர்மனைவிகள், மருமகள், கள்ளுண்டவள், பூப்பாயிருப் வள், நம்பிவந்தவள், ஈனசாதியள், பிறன்மனைவி, மனைவியி ரேழி, அடிமைக்காரி இவர்முதலியோரைப் புணருமபாவமு , பிறரடையு நன்மைக்குத் துன்பஞ் செய்வதினுல வரும ாவமும், குருமனைவியைப் புணரும் பாவத்துக் கொப்பாகும். )த்தியாதி பாவங்களனைத்தையுஞ் சேதுவிலாடுமொரு ஸ்நான லனே கெடுக்கும்.

தேவர்களை வணங்குதல், வன்னியாதிவிருட்சங்களை வண குதல், அக்கினியை வணங்குதல், யாகாதிசெய்தல், பூமியா தானங்களைச் செய்தலாதியாம் புண்ணியப் பேறுகளைச் சே வில்லொருமுறை யாடும் ஸ்நானபலனே கொடுக்கும். உடம் பவாட்டிச் செய்யும் தவங்கள் விரதங்களாலும், செப ஓம வபுராண படனுதி புண்ணியங்களாலும் வருவது சுவர்க்கா புண்ணிய லோகங்களிலே தேவாகளாயின்புறுதலே; அ வயனைத்தையும் சேதுவிலொருகாற் செயயும் ஸ்நானமே கொ க்கும். அவர்களுக்குப பின் பிறவிவேதனையுமில்லை.

சேதுவிலொருமுறை யாடும் ஸ்நானம், குபேரசம்பத்தையும் அரம்பையர்போகத்தையும் ஆசையற்ற சுத்தமனத்தையும் தந்து, செய்தபாவங்களனைத்தையும் போக்கி, செய்யவிரும்பிய புண்ணியங்களனைத்தின்பலனையும், சகலயாகங்கள் தீர்த்தங்கள் யோகங்கள் விரதங்களாற் பெறும்பயன்களையும், பிரம்மலோகம் விட்டுணுலோகம் ருத்திரலோகமாதியவைகளினின்பங்களையும், கல்வி ஆயுசுபலம் வேதபாண்டித்தியம் சிறப்பு மந்திரசித்தியாதி யிட்டசித்திகளையுந்தரும்.

சேதுவில் விதிப்படி சிரத்தையோடேனும் விதிதவறிச் சிரத்தையின்றியேனு மொருவன் ஸ்நானஞ்செய்வானாயின், அவன் துன்பம் வறுமைமுதலிய வற்றையடையபெறான். காமதேனு கற்பகவிருட்சம் சிந்தாமணி சங்கநிதி பதுமநிதியாகிய இவை தம்மை வேண்டினோர் விரும்பிய வனைத்தையுங் கொடுப்பது போல, இச்சேதுதீர்த்தமுந் தன்னிடத்து ஸ்நானஞ்செய்து தன்னைவேண்டினோர்க்கு விரும்பிய வனைத்தையுங் கொடுக்கும். தீர்த்தமாடச்செல்லு மொருவனுக்குக் கொடுப்பதற்குத் தன்னிடத்து யாது மில்லையாயினும் யாசித்துக்கொடுத்தனுப்பினவன், தீர்த்தமாடினவனடையும் பேறளவுபேற்றைத் தானுமடைவன். தீர்த்தயாத்திரை செய்வோனுக்கு, தனம் தானியம் மருந்து உண்டி உறையுளாதியனவுதவினவன், வேதபாராயணம் யாகம் துலாபாரதானமாதிய செய்த பலனைத் தானுமடைவன். யாத்திரைசெய்ய விரும்பினவன் தன்னிடத்துப்பொருளில்லையாயின் யாசித்தாயினும் அது செய்குக. யாசகத்தினாலவரு மிழிவு அவனுக்கில்லை. யாசித்துச்சென்றாடினவனும் பூரணபலனையே யடைவன். எவ்வித பிராயச்சித்தங்களாலு நீங்காத பாவங்களனைத்தையு மிந்தச் சேது ஸ்நான மொன்றே நீக்கும்.

பொருள் தருவேனென்றொருவனை யாத்திரைசெய்ய வேவி அதுகொடாதவனும், பொருளைவாங்கி யாத்திரைசெய்யாதவனும் பிர்மக்கொலை செய்தவராவர். செல்வனாயிருந்து பிறரிடத்து யாசிப்பவன் பொய்க்கள்வனாவான ஆதலால், உலகத்திலே பிறந்தவனெவனாயினும் சேதுவில் ஸ்நானஞ்செய்து பிறவிப்பிணியை யொழித்தல்வேண்டும். அது ஒருவிதத்தானுங் கூடாதாயின், தன்னைக்குறித்து ஒருபிராம்மணனையாயினு மனுப்பி யாடுவித்து அப்பலனைப்பெறுதல்வேண்டும்

"முனிவர்காள்! கிருதயுகத்திலே ஞானத்தினாலும், திரேதாயுகத்திலே யாகத்தினாலும், துவாபரயுகத்திலே தானத்தினாலும், கலியுகத்திலே சேதுஸ்நானத்தினாலும் மோட்சமுண்டாவதாமென்ற விதியுண்மையின், நீவிரும் சேதுவில விதிப்படி ஸ்நானஞ்செய்து இம்மையில் வேண்டிய இட்டசித்திகளையடைந்து, மறுமையில் மோட்சமடைவீர்களாக" என்று சூத பௌராணிகர் சொல்லிமுடித்தனர்.

சேதுச்சருக்கமுற்றிற்று.

---

## சேதுவந்தசருக்கம்.

சூதமகாமுனீந்திரர் சேது மகத்துவ மனைத்தையுமுபதேசித்தருள், அவற்றைக்கேட்ட நாற்பத்தெண்ணாயிர முனிவர்களு மிக்க பேரன்புடையர்களாய், "முனிவர்பெருமானே! ஸ்ரீ இராமன் இந்தக் கடலை யெவ்வாறடைத்தனன்? கந்தமாதனமலை தொடங்கிச் சேது இறுதியாக ஸ்நானஞ்செயய வேண்டிய முக்கியதீர்த்தங்க ளெத்தனை? அடியேங்களறியுமாறு திருவுளம்பற்றுக" என்று பிரார்த்தித்தார்கள் அவர்களுடைய பிரார்த்தனைக்காகச் சூதமுனீந்திரா சொல்லுவாராயினர்.

"முனிவர்காள்! கௌசல தேசத்தரசராகிய தசரதச்சக்கிரவர்த்தியானவர், தமது பட்டஸ்திரிகள் மூவருக்கும் புத்திரப்பேறின்மையால் மனம்வருந்திக் கலைக்கோட்டுமகாமுனிவரையழைத்துப் புத்திரகாமேட்டி செய்வித்துப் பிண்டபாகத்தையேற்று மூவருக்கும் பகிர்ந்து கொடுத்தனர். அவருள், கௌசலையிடத்து ஸ்ரீ நாராயணமூர்த்தியே இராமனாகவும், சுமித்திரையிடத்து ஆதிசேடனே இலக்குமணனாகவும், கைகேசியிடத்துச் சங்கு சக்கர மிரண்டும் பரதசத்துருக்கராகவும் அவதரித்துச் சகலகலைகளினும், அரசர்க்குரிய படைக்கலப்பயிற்சி முதலியவற்றினுஞ் சமர்த்தராய் வருங்காலத்து, மூத்தவரிருவரும் பிரபல விசிட்டராயினர். அக்காலத்தில், விசுவாமித்திர மகாமுனிவர், தமது யாகமுற்றுப்பெறும் பொருட்டு, தந்தைதாய் குரு முதலியோருடைய வுத்தரவோடு இராமன் இலக்குமணனாகிய விருவரையு மழைத்துச் சென்று, அவர்களால் தாடகையைச் சங்கரிப்பித்து, யாகத்தை முடித்து, வருமிடத்துக் கல்லாய்க்கிடந்த அகலிகை இராமனது கால் பட்டவுடன் சாபநீங்கக்கண்டு கௌதமரிஷியிடமனுப்பி, மிதிலாபுரியிற்

சனகமகாராசனிடத்து வந்து, வில்லை முறித்துச் சீதையை விவாகஞ்செய்யப்பண்ணி, பரசுராமனது வில்லோடு வலிமையைப் புங்கவர்வித்து, அயோத்தியாபுரியை யடைந்து அவர்களைத் தந்தையிடத்தொப்பபடைத்தனர்.

பின்பு தசரதமகாராசாவானவர், ஸ்ரீ இராமனது சாமர்த்தியத்தையறிந்து படடாபிஷேகம் பண்ண வுத்தேசித்திருந்து, கூனியினுடைய துர்ப்போதனையால் கைகேசி தன் மகனாகிய பரதனுக்கு முடிசூட்டவும் தன்னைக்காட்டுக்குப்போக்கவும் வரங்கேட்டதையறிந்த ஸ்ரீ இராமன், சீதையோடும் இலக்குமணனோடும் வனவாசம் போயினனென்ற வார்த்தை கேட்டமாத்திரத்தே, புத்திரசோகத்தா லுயிர் துறந்தனர். அவற்றையறிந்த பரதனென்பவன், தந்தையாரது மரணத்தையுந் தமையனாரது பிரிவையுஞ் சகிக்கலாற்றாதவனாய்த் துக்கசாகரத்தமிழ்ந்தித் தந்தையாரது தீக்கடன்முடித்து, வனவாசமாகச் சித்திரகூடத்தில் வந்திருந்த ஸ்ரீ இராமனைக்கண்டு, அவன் பாதுகையை முடியாகப்பெற்று அயோத்தியாபுரியை யரசாண்டிருந்தான்

ஸ்ரீ இராமன், சீதையோடும் இலக்குமணனோடும் வனவாசமாகிக் குகனாகிய வேடனுடைய வுதவியினால் கங்கையாற்றைக் கடந்து சித்திரகூடத்திற்றங்கி மற்றைநாள் வனத்தை நோக்கி வருகையில், காகாசுரனென்பவன் சீதையைக் கவரவர அவனைக்கொன்று, பலமுனிவர்களுடைய ஆச்சிரமங்களைத்தரிசித்து, அவர்களிடத்துப் பலவரங்களையு மாசிர்வாதங்களையும் பெற்றுச் சென்று, பஞ்சவடிதீர்த்தக்கரையில் பன்னசாலையொன்றமைத்து, அங்கேயிருந்தனன். அப்பொழுது, இராவணனுடைய தங்கையாகிய சூர்ப்பனகை, அங்கேவந்து ஸ்ரீ இராமனைக்கண்டு மோகித்து மூக்குமுலையுமிழந்து, கரதூடணன் திரிசிரா முதலிய மாதுலர்களையு மிறக்கக் கொடுத்துத் தமையனாகிய இராவணனிடத்துப்போய் "உனக்கிணங்கிய பெண்ணைத்தேடி மூக்கு முலையு மிழந்தேன்" என்றழுதனள். அதுகேட்ட இராவணன் பெருமோகியாய் முன் மாரீசனை மாயமானாக்கி யனுப்பி, பின் தான் சென்று, சீதையைக்கவர்ந்து, சடாயுவை வெட்டி மீண்டிலங்கைக்கேகி, அசோகவனத்திலே தனக்கு மனைவியாக்குமாறு அச்சீதையைச் சிறையில்வைத்தான்

ஸ்ரீ இராமன, மனைவியை யிழந்ததினால் இலக்குமணனோடு மிக்கசோகமுடையனாய், வனமெங்கும் அவளைத்தேடி வருமிடத்து, குற்றுயிராய்க்கிடந்த சடாயுவினிடத்துச் சங்கதிக

ளையறிந்து, தம்மையுண்ணுமாறு பிடித்த கவந்த ராடசதனைக் கொன்று, அப்பாற்செல்லுகையில், பம்பையாற்றங்கரையிலே அனுமானென்னுங் குரங்கைக்கண்டான். அப்பொழுது அனுமானனவன், "நீவிர் யார்? முன்னொருகாலத்தும் வராத நீவிர இங்கே வந்த காரணமென்ன? நும் பெயரென்ன? நீவி ரெங்கேயிருப்பது?" என்று வினவினன். ஸ்ரீ இராமனுந் தனது வரலாறனைத்தையுஞ் சொல்லி "நீயார் என்று அனுமானை வினவிய்பொழுது, அனுமான், "நான் சுக்கிரீவனுடையமந்திரி, என்பெயர் அனுமான், என் அரசன் உங்கள் சினேகிதத்தை விரும்பி என்னை யனுப்பினன், நீங்களங்குவரி னுங்களெண்ணஞ் சித்தியாகும்" என்று சொல்லி, அவர்களை யழைத்துக் கொண்டுபோய்ச் சுக்கிரீவன்முன் விடுத்தனன். சுக்கிரீவனு மவர்களை யெதிர் கொண்டு வணங்கிப் பிரியா நண்பு பூண்டு ஆசனத்திருத்தித் தனக்கு வாலியினனிகழ்ந்த பெருந்துன்பத்தைச் சொல்லிய பொழுது, ஸ்ரீ இராமனும், "நீதிக்கு விரோதமாக உனது மனைவியைக் கைப்பற்றிக்கொண்டு உன்னையும் வெளியேவிடுத்த வாலியைக்கொன்று உன்னை இரட்சிப்பேன்" என்றுறுதிகூறினன். சுக்கிரீவனும் "தேவரீருடைய பத்தினி சீதாபிராட்டியாரிருக்குமிடந்தேடி யாராய்ந்து தருவேன்" னென்று வாக்குப்பண்ண இருபகுதியாருங்கலந்து மகிழ்ந்திருந்தார்கள். அப்பொழுது சுக்கிரீவன், வாலியோ மிகவுஞ்சமர்த்தன் இராவணனைப் பத்துத்தலைப் பூச்சி யென்று வாலிலே கட்டித்திரிந்தவன், துந்துபி யெலும்பைப் பந்தெறிந்து விளையாடிப் புயங்களின் றினவு தீர்த்தவன், மராமரங்களை யொடித்தவன், இத்துணைப் பேராற்றலுடைய வாலியினது வாலிறகட்டுண்டுழன்ற இராவணனால் மனைவியை யிழந்த விந்த இராமன அந்த வாலியை யெப்படிக்கொல்லுவான்" என்று சந்தேகங்கொண்டான். அதனை யுணர்ந்த ஸ்ரீ இராமன், துந்துபி யெலும்பைக் காலிற் பெருவிரலினால் நெடுந்தூரம் போய்விழுந்து சிதறுமாறு எறிந்தும், மராமரங்களை யோரம்பினா லூடுருவச் செய்தும், தன்வலியைத் தெரிவிக்க, அதுகண்ட சுக்கிரீவன், "நன்றாய மனந்தெளிந்து, "இனி வாலியின் றந்தையாகிய விந்திரனுக்கு மஞ்சேன்" எனத்தெளிந்து, "அயோத்தியரசனே! உனது நண்பினாலிராவணனைக் கொன்று சீதாபிராட்டியை மீட்டுத்தருவேன்" என்றுறுதி கூறி, "இனி நாம் வாலியிருந் தரசாளும் கிட்கிந்தைக்குப் போவோ" மென்று இலக்குமணனையுமழைத்துக்கொண்டு சென்று, இராமரிலக்குமணரிருவரையும் பிறிதோரிடத்து நிற்கச் செய்து, தான் தனியே போயப

போரறைகூவி வாலியை யழைத்துப் போர்புரிந் தலைவுக்காற் றுது தோற்று, ஸ்ரீ இராமன் பக்கலாக வந்து "இப்படி யென்னை வீணாக அவன் கையால் மொத்துண்ணச் செய்தனையே" என்று குறை யிரப்ப, ஸ்ரீ இராமன், "நீவிரிருவரும் சகோதரபாவமுடையீ ராகையினுலிருவர் முகமு மொருவர்முகம்போலிருத்தலின், வேற்றுமை தெரியாது தடைப்பட்டேனன்றிப் பிறிதன்று, வேற்றுமை யறியுமாறு நீ தலையிலொரு வல்லி புனைந்து போர் செய்குதி" யென்றேவ, சுக்கிரீவனு மப்படியே யொருவல்லி புனைந்து போரறை கூவி வாலியை யழைத்துப் போர்புரியுமிடத்து, ஸ்ரீ இராமன் ஒரு அம்பினுல வாலியினுயிரைப் போக்கிச் சுக்கிரீவனுக்கு முடிகவித் தரசனுக்கினன். பின்பு சுக்கிரீவனும் மனமகிழ்ந்து, தனதூரை யடைந்து, கார்காலம் நீங்கியபின் சீதாபிராட்டியாரைத் தேடுமாறு பலவிடங்களிலுங் குரக்குச்சேனைகளை யனுப்பினன். அவர்களுள்ளே அனுமானெனவன், இலங்கையிற் சென்று சீதையைக்கண்டு தேற்றி, முத்திரை மோதிரத்தைக் கொடுத்துச் சூடாமணியை யடையாளமாக வாங்கிக் கொண்டு, தனதுதூதின் வரவை இராவணனுக்குத் தெரிவித்து அவனது இளையபுத்திரனுகிய அடசய குமாரனைப் பல விராக்கதரோடுங் கொன்று, இலங்கையையுஞ் சுட்டு, மீண்டு, ஸ்ரீ இராமனை வந்து வணங்கிச் சூடாமணியையுங் கொடுத்து மகிழ்வித்தனன். அப்பொழுது, சேஷ சயன முதலிய சுகபோகங்களை விடுத்துத் தவவேடம் பூண்ட ஸ்ரீ இராமனெனவன், இலக்குமணன் சுக்கிரீவன அனுமான் சாம்பவன் நளன் முதலிய அளவில்லாத குரக்குச்சேனைகளோடு இடைச்சுரங்கள் பொருந்திய பலவழிகளைக்கடந்து உச்சிக்காலத்திலே மகேந்திரமலையை யடைந்து அதன் சாரலிலுள்ள சக்கர தீர்த்தத்தைப் பக்கத்திலுடைய தென்சமுத்திரக்கரையிலிருந்தனன். இங்கே இங்ஙனமாக, அங்கேஇராவணனுடைய தம்பியாகிய விபீஷணனெனவன், அனுமான் தூதுவந்து சென்றபின்பு, தன் தமையனுகிய இராவணனுக்கு வேண்டிய புத்திகள் சொல்லவும், அவனவற்றைக்கேட்டுச் சீதையை விடாமையால், இனி இவன் இராமபாணத்தா லிறப்பது நிச்சயமி, வனேடு நாமுமிருந்திறப்பதினுந் தப்புவதே நீதியென்று நான்கு மந்திரிகளோடு மிலங்கையை விட்டு ஸ்ரீ இராமனிடத்து அடைக்கலம் புகுந்தான்.

ஸ்ரீ இராமனும், இராக்கதர்களை நம்பலாகாதென்று சிறிது சந்தேகமுற்று அனுமானுலது தெளிந்து, அவனை இராக்கதர்க

ளுக்கரசனுக்கித் தனக்கும் மந்திரியாக்கிச் சுக்கிரீவனோடெரப் பாகவைத்து அனைவரையுஞ் சமமாக விருத்தி மந்திராலோசனை செய்யுமாறு தனது மன வெண்ணத்தை வெளிப்படுத்துவாரனாயினன். "மந்திரிகாள்! சேனைகாள்! நமதுசேனைகளுக்கோ அளவில்லை; கடலோ மிகப்பெரிது; சமுப்பிரவாகமோ வதிகம்; திரைகளோ மலைப்பாம்புகள்போலப் புரளுகின்றன; பிளந்தவாயையுடைய மகரங்கள் சுருவேறுக ளிடசாரி வலசாரியாகத்திரிகின்றன; கடுங்காற்றே வீசுகின்றது;கொடிய முதலைகளும் நீந்தித்தாண்டுதற்கரிய விக்கடலைக் கடக்கும் வழியேது? நூறுயோசனை நெடுந்தூரமுடைய இச்சமுத்திரத்தைக் கண்டபொழுதே கண்களும், நினைத்த பொழுதே மனமு மஞ்சுகின்றன. கொடிய இடிமுழக்கத்தையுங் கரியவடிவத்தையும் பிளந்த வாயையுமுடைய முகிற் கூட்டங்கணெருங்கிய வருணனுக்கு இருப்பிடமாகிய விக்கடலைப் பிறிதுதவியின்றிக் கடக்கு முபாய மென்னோ? இச்சேனைகளுடனே அக்கரையேறுதற்கு ஒருவழியையு மறியேன்; படகுமுதலானவைகளிலேறிச் செல்லலாமென்றால் படகையாவது படகு செலுத்துபவர்களையாவது காணேம். தந்தையை யிறக்கக்கொடுத்தும், தலைவியைப் பறிகொடுத்தும், தரையரசாளுகையை விடுத்தும், தழல் வனத்திலுலைந்துதிரிந்தும் இவற்றால் பலவேதனைகளைச் சகித்தேன், சமுத்திரத்தைக்கடக்குந்துயரஞ் சகிக்கமாட்டேனே; எவ்வகையாலிதனைக் கடப்பேனென்ற துன்பமே பெரிது முள்ளத்தை யீருகின்றது. அகத்திய மாமுனிவர் இராவணனைக் கொன்று கந்தமாதனத் தேறுவாயென்ற வாக்கும் பொய்யாமோ" என்றிவ்வாறு பலசொல்லி வருந்தினன்.

ஸ்ரீ இராமன், இவ்வாறு புலம்புதலைக் கேட்டுச் சுக்கிரீவன் முதலியோர் வணங்கி, வாய் புதைத்து, "எமபெருமானே, தேவரீரிதற்கு வருந்தவேண்டாம் தெப்பங்களைக் கொணர்ந்து சமுத்திரத்தைக் கடப்போம்" என்றார்கள். இது கேட்டவிபீஷண-னிவர்கள் சொல்லியதைத் தடுத்துத் "தேவரீருடைய சந்ததியிற் பிறந்த சகரர்களே சமுத்திரத்தைத் தோண்டி வைத்தவர்களாதலால், அது தேவரீருடைய தாள்களை வணங்கத்தக்கது. அங்ஙனஞ்செய்யின் குறித்தவினையுஞ் சடிதியில் முடிக்கலாம்" என்றான். இவர்களது கருத்தையறிந்த ஸ்ரீ இராமன், "நூறு யோசனை யகலமு மதிக ஆழமுமுடைய விசாலநிதியைக் கடந்து போகவேண்டிய சேனைகளுக்கோ வளவில்லை; தெப்பங்களோ வனேகம் வேண்டும், சிலவாயினும் பல்முறை

போய்வருதற்குப் படைகளுக்கோ பெரிதும் வருத்தமுண்டாகும்; அன்றியும், சத்துருக்களிடையிலே வந்து கொல்லுவர் ஆதலாலவர்கள் சொல்லியபடி கடல் கடக்க நான் விரும்பவில்லை, விபீஷணர் சொல்லியதே விருப்பமாகிறது. இனிக் கடலைப்பணிவேன் அது செல்லுதற்கு வழிவிடாதாயின், அக்கினிபாணத்தினாற் குடிப்பிப்பேன்'' என்று இலக்குமணனோடெழுந்து நீர்க்கரையையடைந்து ஆசமித்து அநந்தசயனபாகத் திருப்பாசனத்திலே, வருண மந்திரத்தைத்தியானித்து மூன்று நாள்நித்துயில் செய்திருந்தவ மிழைத்தும் வருணன் வாராமையினாலே, கண்சிவந்து கடுங்கோபமுற்றுத் தம்பியாகிய இலக்குமணனை நோக்கி ''என்றம்பியே! எம்மை மதியாத விந்தக் கடலை அக்கினிபாணத்தினாற்கலக்கி, இறந்த சுறாச் சுமைகளை யணையாக்கி, நமது சேனைகளை நடக்கச்செய்வேன்; எனது வில்லைத்தருதி. மிக்க வலியுடையோரும் ஆற்றலில்லாதார் செய்யு மக்கிரமங்கண்டு பொறை புரிவாராயின், வலியிளந்தோராவார் நாமும் சமுத்திரராசனைப் பொருட்படுத்தி வணங்குதலா லவன் நம்மை யிகழ்ந்தான். கடல் சுவறவும் மகரமீன் முதலைகள் சங்குகளாதிய புலம்பவும் அக்கினிபாணந் தொடுத்துப் பலவரக்கர்களையு மலைகளையு மடக்கி யெவர்க்கு மளவுபடாத கடலை யளவுபடுத்துகிறேன்'' என்றிதழ்துடிப்பப் புருவ நிமிரக் கண்கள் சிவக்க உருத்திரமூர்த்தி போலக்கோபித்து, வாங்கிய விலலைக் குனித்து, அக்கினிபாணத்தைச் செலுத்தினன். உடனே சமுத்திரராசன் நடுங்கிப் பெருமூச்சுவிட்டெழுந் தோடிவந்து சரணம் புகுந்து, விழுந்து நமஸ்கரித்து, ''ஓ! விசுவாமித்திரமகாவிருடியின் யாக ரட்சகா, தேவர்கள் பணியுந் திருவடி யுடையோனே, வேதமுதலே, ஆபத்சகாயனே, சீதைகொழுநனே, பக்தர்கள் சகாயனே, அகலிகாசாபமோசனனே, தாடகாசங்காரனே, அரக்க ரரியே, அமர ரட்சகா யான்செய்த குற்றங்களைப் பொறுத்து, எனது விண்ணப்பத்தைத் திருவுளம் பற்றுக. ஆதிகாலத்திலே பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னுமைம்பூதங்களுடைய நிலைமையை மாற்றுகின்ற இதற்கு நான் இசையேன்: அது செய்தல் தகுதியன்று'' என்று வேண்டினன். அதுகேட்ட ஸ்ரீ இராமன், மனமிரங்கி ''எனது சேனைகளும் யானு மிலங்காபுரிக்கேகுதற்குக் குறுகி யிடந்தருதி'' என்றனன். அப்பொழுது வருணன் பணிந்து ''ஸ்ரீ இராமா, விலவலிமையினால் நீ யிப்படிச்செய்யி னிதுவே முன்மாதிரியாக வில் வலியுடைய பிறரு மிப்படிச் செய்யத்துணிவர்; அதுவேண்டாம், பிறிதோருபாயஞ் சொல்லுகிறேன், நினது சேனைகளுள் தேவத்தச்சனுடைய மகன் சிறப்புத்தொழிலில் விசிட்டமுடையவன், நளனென்னும் பெயருடையவன், அவன் கைப்பட்டப்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106

ல்லாயினு மலையாயினும் புணரியின் மிதக்கும் புகழ் வரம்பெ
ற்றவன். அந்த நளனென்பவனாலணைவகுத்துச் சென்று காரி
யசித்தி யடைக" என்றுபாயஞ்சொல்லி விடைபெற்றுச் சென்
றனன்.

பின்பு ஸ்ரீ இராமன், நளனை யழைத்து, நீ சிற்பத் தொ
ழிலிற் சிறந்த சாமர்த்திய முடையை யாதலின், நாமிலங்கை
க்குச் செல்லுமாறு, இக்கடலிடத்து அணைகட்டுதியென்று
கட்டளையிட, நளனுமுடனே வணங்கி, "ஐயா, தேவ தச்ச
னாகிய வென் றந்தை, என்தாய்க்குச் சிற்பத்தொழிலிற் சிறந்
த வென்னை நிகரில்லாத வொருபுத்திரனைப் பெறுதி யென்று
வரமளித்தனன். அதனாலுந் தேவரீருடைய திருவருளினாலு
மிது செய்வேனென்று ஸ்ரீ இராமனுத்தரவினால் குரங்குகளை
யழைத்துப் பலவிடங்களினுமுள்ள மரம் மலை மண் புல் பூண்
டு கல் முதலிய பலவற்றையும் வரச்செய்து, பத்து யோச
னை யகலமும் நூறுயோசனை நீளமுமாக வணை வகுத்தான்.
இதனடி நவபாஷாணம், மத்தி தருப்ப சயனம், அந்தம் திரு
ப்புல்லாணி, இவ் வணையின் பெருத்தே சேதுவாகும். இதி
லே விதிப்படி ஸ்நானஞ் செய்தோர் பாவங்களெல்லாம் நீங்
கிச் சிவானந்தமடைவார்கள். இதுவே சேது வந்த வரலாறு.
இவ்வணையினிடத்துப் பலவகைத் தீர்த்தங்க ளுள்ளன. அவற்
றினளவும் பெயரு மாதிசேடனுக்குஞ் சொல்லுத லரிது; அவ
ற்றுள்ளும் இருபத்து நான்குதீர்த்தம் விசேடமா யுள்ளன.
இவற்றிலே ஸ்நானஞ் செய்தல் தவமுடையார்களுக்கன்றி
யெல்லாருக்குங் கிடையாது. அவற்றின் பெயர் வருமாறு:-

| | | |
|---|---|---|
| சக்கரதீர்த்தம், | அகத்தியத் தீர்த்தம், | சங்க தீர்த்தம், |
| வேதாளவர தீர்த்தம், | இராம தீர்த்தம், | கங்கா தீர்த்தம், |
| பாவநாச தீர்த்தம், | இலக்குமண தீர்த்தம், | யமுனை தீர்த்தம். |
| சீதை குண்டம், | சடா தீர்த்தம், | கயா தீர்த்தம்; |
| மங்கல தீர்த்தம், | இலக்குமி தீர்த்தம், | கோடி தீர்த்தம், |
| அமுத தீர்த்தம், | அக்கினி தீர்த்தம், | சாத்தியாமிர்ததீர்த்தம் |
| பிரம குண்டம், | சக்கர தீர்த்தம், | சருவ தீர்த்தம், |
| அநும குண்டம், | சிவ தீர்த்தம், | தனுக்கோடிதீர்த்தம், |

முனிவர்காள்! ஸ்ரீ இராமனியற்றிய வணையினிடத்து இந்
த இருபத்து நான்கு தீர்த்தங்களுமுள்ளன. இவற்றிலே விதி
ப்படி ஸ்நானஞ்செய்தோர்கள் உலகம் முழுதினுமுள்ள தீர்த்
தங்களாடிய பலனைப் பெற்றுப் பிறவிவேரறுத்துப் பேரானந்
தமுற்று இட்டசித்திகளனைத்தையும் பெறுவார்கள் என்று சூ
த முனிவருபதேசித்தார்.

சேதுவந்தசருக்க முற்றிற்று.

## சக்கர தீர்த்தச் சருக்கம்.

---

தெய்வத்தன்மையுடைய சூத மகா முனீந்திரரானவர், இங்ஙனஞ் சேது வந்தவரலாற்றைச் சொல்லியவளவில், நாறபத்தெண்ணாயிர முனிவர்களும் அவரை வணங்கி, "ஐயனே! சேதுவிலே, இருபத்துநான்கு தீர்த்தங்கள் சிறந்தனவாயின், அவற்றுள்ளே சக்கர்தீர்த்தம் முதலாக வருவதற்கு நியாயமென்னை? அப்பெயர் வருவதற்குக் காரணமென்னை? திருவாய்மலர்ந்தருளுக" என்று வேண்ட, அவர் சொல்லுவாராயினர்:

முனிவிர்கர்ள்! முற்காலத்திலே காலவ மகா விருடியானவர், தக்ஷிண பூமியிலே திருப்புல்லாணி க்ஷேத்திரத்திலே பர்லோடை யென்னும் நதிக்கருகிலே, ஊணுறக்கமின்றிப் புலன்களை யடக்கி மௌனியாகிச் சருகு நீர் வாயு என்னுமிவற்றை முறையே யுண்டு சாந்தியுடையோராய், மழை தீ வேனில் குளிர் இவற்றுக்கஞ்சாது விண்டுவை நோக்கி அவரது அட்டாக்ஷரத்தைத் தியானித்துக் கொண்டு ஆயிரம் வருடம் அருந்தவஞ் செய்தார். அப்பொழுது, ஸ்ரீமந் நாராயணர், காலவ முனிவருடைய தவங்கண்டிரங்கிக் கருடவாகனராய் வெண்குடை நிழற்ற வெண்சாமரை வீச வாகுவலயம் முத்துமாலைகள் விளங்கப் புன்முறுவலரும்பப் பொன் முடி மின்னப் பீதாம்பரவுடை விளங்கச் சுனந்தரா முதலிய பத்தசனங்கள் சூழச் சனகர் சனந்தரர் முதலிய விருடிகள் துதிப்பத் தேவர்கள் பூமழை பொழிய இலக்குமி சமேதராய் எழுந்தருளி வந்தார். அவர் வருகையைக் கண்ட காலவ முனிவரெழுந்து வணங்கிப் பேரானந்த முடையராய் "இலகுமி நாயக! நித்திய கருத்த! முத்தொழிலுடையர்களாய் சங்கருடன் பிரத்தியும்நன் அனுருத்தனாகிய மூவர்க்கு முதல்வ! உமக்கு வணக்கம்" என்று துதித்தனர். அது கேட்டு நாராயணர் மகிழ்ந்து முனிவரைத் தழுவி "உனக்கு யாது வரம் வேண்டும்" என்ன, காலவமுனிவரும் "வேதாந்த நாதரே தேவரீருடைய் தோற்றங் கண்டும் பிறிது வரம்வேண்டுமோ! அடியேற்கு நும்மை யென்றும் மறவாத வன்மைத் தரவேண்டும்" என்று வேண்ட, நாராயணர் அவ்வாறருளி, "முனிவனே, நம்மை யிடையறாது நினைத்தவர் வேட்டைவாளி யெடுத்த புழு வதன் வடிவத்தையடைதல் போல நமது சாரூபமடைவர். ஆதலால், நீயு மெம்மை யிடைவிடாது நினைத்துக்கொண்டு சஞ்

டுறைகுதி. தரும தேவதை இந்தத் தீர்த்தத்திலே முழுகிச் சிவபெருமானை நோக்கி யருந்தவம் புரிய, அது கண்டு சிவபிரான் வெளிவந்து தோன்ற அத்தருமதேவதை வணங்கி, உலகநாதா! காளகண்டா! பசுபதி! என்று துதித்தது. சிவபிரான் மகிழ்ந்து நீ விரும்பியதியாதென்ன, தேவரீரைத் தாங்கும் திருவடிப்பேறே தந்தருள் வேண்டுமென்று தருமதேவதை கூற, சிவபெருமான் அவ்வரத்தை அருளுதலும், உடனே அது நான்கு கால்களையுடைய இடப ரூபமாகத் தாங்கியது. சிவபெருமான் அதன்மேலிவர்ந்து "நீ முழுகிய இத் தீர்த்தம் நின்பெயராலே தரும புட்கரணியென வழங்குக. இதன் கரையிலெவரேதனை நினைத்துத் தவமிழைப்பினு மவரதனை விரைவிலடைவரென்றருளித் திருக்கயிலாய மலையை யடைந்தார். அந்த இடமே இது. ஆதலால் முனிவனே, நீ பிராரத்த முடிபாகிய நின்னுயுசு பரியந்த மிங்கே யிருக்கிறி. அக்காலத்திலென்னை யிடையறாது தியானித்தலா லுனக்கென்து சாரூப முண்டாகும். உனக்கு யாதேனு மிடையூறு வரினென்து சக்கரம் வந்து நீக்கும்" என்றருளி விட்டுணு மறைந்தருளினார்.

காலவ முனிவரானவர், திரி காலங்களிலும் அங்கே ஸ்நானஞ்செய்து சாளக்கிராம பூசை செய்து சதாத்தியான பரராய்ப் புலனை யடக்கி நோற்று மாசி மாசச் சுக்கில பக்ஷப்பிரதமை, சட்டி, ஏகாதசி முதலிய திதிகளிற் றுளசியாலருச்சித்து உபவாசியா யிருக்கும் பொழுது, துத்தமனென்னும் ஓரரக்கன் பசியினால் வாடி அம்முனிவரைப் பிடிக்க, அம்முனிவர் விட்டுணுவை நோக்கி, "பிரகலாதன ரக்ஷகா! இப்பொழுதென்னைக் காத்தருள்க" என்று கதற, விஷ்ணுவின் சக்கரமானது வந்து இராக்கதனுடைய கழுத்தை வெட்டி முனிவரை விடுவித்தது. உடனே காலவமுனிவர், சக்கரத்தை வணங்கி "எம்பெருமானே! அடியேனைக் காக்குமா றிவ்விடத்தி லெழுந்தருளி யிருக்க" என்று வேண்ட, சக்கரமானது அங்ஙனமாகுக வென்றருள் செய்து, இரத்தக் கறைபோகுமாறு தரும புட்கரணியிலே முழுகி யதற்குச் சக்கர தீர்த்தமெனப்பெயர் கொடுத்து "முனிவனே இன்றுமுதலிது சக்கர தீர்த்தமென்று பெயர்பெறுக. இதிலே ஸ்நானஞ் செய்தவர்களிடத்திற் பேய் பூத மணுகா; அவர்களுக்கு இம்மையிற் போகமும் மறுமையில் வீடும் உண்டாகும். இதிலே பிண்ட தருப்பணதி சிராத்தஞ் செய்யில், பிதிர்கள் தேவராவர், இதனெல்லை தேவிபட்டணவரையுமாகு

ம்" என்று சொல்லிச் சக்கரஞ் சமுத்திரத்திலாழ்ந்தது. ஆதலால் முனிவிர்காள்! இச் சக்கரதீர்த்தத்துக் கொப்புயர்வு முப்புவனத்திலுமில்லை. இதனை நினைப்பவர் பிறவார்கள். இதில ஸ்நானஞ் செயதவர்களுக்கு லக்ஷம் பிறவிகளிற் செயத பாவங்கள் நீங்கும். கங்கை காளிந்தி பம்பை மணிகர்ணிகைவாணி ரைவதை நருமதை பொன்னி கோதாவரி யாகிய நவதீர்த்தங்களும் வேறு விசேடமாகிய யாறுகளும் இதிற் கோடியிலொரு கூற்றுக் கொவ்வா வென்று அதன் பெருமை முழுவதையுமுபதேசித்தார்.

சக்கரதீர்த்தச்சருக்க முற்றிற்று.

---

## துத்தமச் சருக்கம்.

நைமிசாரணிய முனிவர்கள் சூதயுகாமுனிவர் சொல்லிய சொற்களாகிய தேவாமிர்தத்தை யுண்டு தெவிட்டாது, "பெருமானே காலவமுனிவரைக் கௌவவந்த விராக்கதன் யார்? கட்டளையிட்டருளுக" வென்று பிரார்த்தித்தார்கள். அதுகேட்ட சூதமுனிவரானவர், அவனது வரலாற்றைச் சொல்லுகிறார்.

முனிவர்காள்! திருக்கயிலாய மலை போலச்சிறந்த வெள்ளியம்பலத்திலே ஆநந்த தாண்டவராகிச் சொக்கநாதசுவாமி யெழுந் தருளியிருக்கும் மதுராபுரியிலே, பேரின்ப விருப்புடையர்களாய் விபூதி ருத்திராக்க தாரணர்களாய் வசிட்டர் முதலிய இருபத்து நாலாயிரம் முனிவர்கள் சோமசுந்தரக்கடவுளையருச்சித்தருந்தவமியற்றி யுறையுநாளிலே, கந்தருவ கூட்டத்திலே விசுவாவசுவின் புத்திரனாகிய துத்தம னென்பான், மதயானைபோன்ற வலியுடையவனாய்ப் பெருங் காமுகனாகிப் பலபெண்களைக் கூட்டமாகச் சேர்த்து மான் கூட்டத்திற் கலைமான் போலவும், பசுக்கூட்டத்திலிடபம்போலவும் பல மலைகள் காடுகள் முதலிய விடங்களிற்றிரிந்து கடம்பவனத்தினுமுலாவிப் பொற்றாமரை வாவியிலே பெண்களோடு நிருவாணியாய்ச் சலக்கிரீடை செய்துறையும் போது, வசிட்டரானவர் முனிவர்களோடு மாத்தியானிக நியதிமுடிக்கும்படி யங்கு வர, நிருவாணிகளாகிய பெண்களனைவரும் விரைந்து கரையேறித் தங்கடங்கள் புடைவைகளை யுடுத்தார்கள். காமுகனாகிய துத்தமனோ குருடனைப்போல நிருவாணியா யஞ்சாது நின்றான். உடனே வசிட்டமு

னிவர் பெருங்கோபமடைந்து "துத்தமனே! நீ யதிக செருக்
குடையவனாய்ப் புடைவையை யுடுக்காது நின்றபடியால் இராக்
கதனாகத் திரிகுதி" யென்று சபித்துப் பெண்களைப் பேர்கும்படி
கட்டளையிட, அப்பெண்களஞ்சி வசிட்டமுனிவருடைய பா
தங்களைவணங்கி "அருள்வள்ளலே! பலமக்களைப்பெற்ற பெ
ண்களுக்கும் மலடிக்கும் நாயகனில்லையேல் வேறுபாடில்
லை. நாங்களோ இளம் பெண்கள், எங்களுக்காக வெங்கள் நா
யகன் செய்த குற்றத்தைத் தேவரீரே பொறுத்திரக்ஷிக்க வே
ண்டும்" என்று யாசிக்க, வசிட்டமுனிவரும் மனமிரங்கிப்
"பெண்களே! என்சொற்றவறாது. ஆதலால், பதினாறு வருட
ம் வரையுமிவனிராக்கதனாகத் தடுமாறித்திரிந்து முடிவில் காலவ
முனிவரைச் சக்கரதீர்த்தக்கரையிலே கௌவும்படி பிடி
க்க விட்டுணுவின் சக்கரம் வந்து இவனை வெட்டும். உடனே யிச்
சாப நீங்கி யுங்கள் நாயகனாதவருவன்" என்று சொல்லிப் பி
ன் முனிவர் தமது நியதி முடிக்கப்போக, பெண்களனைவரும்
பிரிவாற்றாது பெருங்கூச்சலிட, துத்தமனும் இருளினிளம்பி
றை போன்ற வக்கிர தந்தமும், செங்குஞ்சியும், வெள்ளெயி
றுங், கரியமேனியுமாகிய பெரிய விராக்கத வடிவடைந்து த
ங்களைப் பிடித்துத் தின்னுமாறு வருதலைக்கண்டஞ்சி அப்பெண்
கள்பொன்மயிற் குழாம் போல வாகாயத்திற் போயினர்.

துத்தமனாகிய விராக்கதன் சிங்கம், மான், யானை, புலிமு
தலிய நெருங்கிய காடுகளிற் கொலைசெய்து திரிந்து, பதினா
றுவருடமுடிவிற் சக்கர தீர்த்தக்கரையிலே காலவ முனிவரை
க் கவ்வுமாறு வர, விட்டுணுவின் சக்கரம் தலையறுக்க, உட
னே சாப நீங்கிச் சக்கரத்தைத் துதித்துக் காலவமுனிவரை வ
ணங்கிச் சக்கரதீர்த்தத்தில் மூழ்கித் தேவர்கள் பூமழை பொ
ழியப் போய் முந்திய பதவி யடைந்து இன்புற்றான்.

இவ்வாறு சூதமுனிவர் சொல்லக் கேட்ட முனிவர்கள்,
"பெருமானே! இச்சக்கரதீர்த்தம் தருப்ப சயனந் தொடங்கித்
தேவீபட்டணமளவதென்றீரே இடையிலே திடராயிருப்பதற்
குக் காரணமென்னை?" என்றார்கள். அதற்குச் சூதமுனிவர்,
"முனிவர்காள்! முன்னொருகாலத்திலே, மலைகளெல்லாஞ் சிறக
ர் பெற்றெழுந்து ஆகாயத்திற்பறந்து முனிவர்களும் பிராமண
ர்களும் செய்யும் யாகங்களை யழித்தும், நித்தியகருமங்களை வி
லக்கி, உயிர்களுக்குப் பெருங்கேடுகளை விளைக்க, அதனையறிந்
து இந்திரன் வச்சிராயுதத்தால் அவைகளின் சிறகுகளை யரிய,

அவைகள் கதறிச் சமுத்திரத்தில் வீழ்ந்தன. சில மலைகளுஞ் சிச் சக்கரதீர்த்தத்தைச் சமுத்திரமென்று கருதி வீழ்ந்தன. அதனாலே இடையே மேடுபடடுச் சக்கரதீர்த்தமு மிரண்டாயின." என்றுரைத்தனர்.

துத்தமச்சருக்க முற்றிற்று.

## விதூமச் சருக்கம்.

பின்னுஞ் சூதமுனிவர் மற்றை முனிவர்களை நோக்கி "முனிவர்காள்! குருவருளினாலே சக்கரதீர்த்தத்தினது மகத்துவமின்னுமொன்று சொல்லுவேன், கேட்பீர்களாக. முன்னொரு காலத்திலே, பிரமதேவன், தனது சத்தியலோகத்திலே காயத்திரி சாவித்திரி சரசுவதி பக்கத்திலே விளங்கவும், இந்திராதிதேவர்கள் துதிப்பவுஞ் சித்தர் கந்தருவர் பாடவும், தாங்கள்செய்த அக்கிரமங்களாற் பெற்றபதவிகளை யிழந்தவரையும் புதிதாகத் தவத்தினால் மேற்பதவிகளைப் பெற்றவர்களையும் வேறுவேறா துங்கச் செய்து கட்டியகாரர் விலக்கவும், தேவகதி விடுத்துப் பூமியிலே பிறக்கவேண்டி யங்கிருப்பவர்களைச் சிலதேவர்கள் பார்த்து மானுடர்களோடு எமக்குறவேதென்று வருந்திப் பேசவும், அங்குள்ளதேவர்கள் தனித்தனியே யஞ்சி எங்களைத் தேவரீ ரிவ்வுத்தியோகத்திலிருத்தினும் விலக்கினுந் தேவரீரது சித்தப்படியே யென்னுமிரக்க முகங்காட்டவும், இந்திரபதவியிழந்த சிலர் தங்களையொருகாலமும் பிரியேனென்று வாக்குக்கொடுத்த இந்திராணி உத்தியோகம் பெற்ற புதிய இந்திரனோடு வருதலைக்கண்டு பெண்களையொருகாலமும் நம்பலாகாதென மனம்புழுங்கவும், உயிர்கள் செய்யும் வினைகளையறிந்து தக்க தக்க கதிகளிலே விடுக்குமாறு பெற்ற நான்குமுகங்களும் நாற்றிசைகளினும் பிரகாசிப்பவும், மேருமலையிலருவி போல வுபவீதம் விளங்கவும், உலகத்துயிர்கள் செய்தவினைக்குத் தக்கபடி பேறு இழவு இன்பம் பிணி மூப்பு சாக்காடாதியவற்றை விருப்பு வெறுப்பின்றி யுள்ளபடிதவறாது அவ்வவர் தலையிலெழுதுந் திருக்கரத்தின் விரல்களிலே மோதிரம விளங்கவும், வாகனமாகிய வன்னமுன்னின்று கூத்தாடுவது போல வீசுஞ் சாமரக்காற்றினால் குடுமிக ளவிழ்ந்தலையவும், வா

குவலயங்கள் விளங்கவும் முனிவர்கள் முறைமுறையே வணங்கி
த் தோத்திரஞ்சொல்லுஞ் சத்தமானது ஆலாகல மெழுந்த
ஞான்றமரரொலிக்குமாரவாரத்தினு மதிகப்படவும், தானப
டைத்தமுனிவர் குழாங்கள் பலர்கூடி வந்தது போலத்திரண்
டபேரவைக்கண் இங்ஙனமாய வலங்காரத்தோ டெழுந்தருளி
யிருப்ப, தேவரம்பையர்கள், காலிலணிந்த சிலம்பொலியானது
பரதசாத்திர விதிவிலக்குகள் பேசவும், மேகலாபரணங்கள்
மயிற்றோகைபோற்றுலங்கவும், பார்க்கின்றதேவர்கள் இவர்க
ளது நடனவித்தையோவை அல்லது பேரழகையோ வுற்றுநோ
க்குவதெனவும், வீணை புல்லாங்குழலாதிய பலவித வாச்சியங்க
ளினதோசையாகிய வமிர்தம் சபையாரது செவிகளை நிறை
ப்பவும், ஆகாய கங்கையின் றிவலைகளைச் சிறுதென்றலானது
கொணர்ந்திடையிடையே சிதறவும், நடித்தார்கள்,

அவர்களுள்ளே அலம்புசை யென்னுந் தேவகன்னிகை
நடிக்குமிடத்து வாயுதேவனு மொருதிருவிளையாட்டாக வவள
து குறிதோன்றுமாறு துகிலை நெகிழ்த்தனன். அது கண்ட ச
பையிலுள்ளவர்கள் நாணிக் கண்புதைத்தனர். அட்டவசுக்களி
லொருவனாகிய விதூமன் மதனபாணம் பிளத்தலால் தலைகவிழா
துற்றுநோக்கினன். அதுகண்டபிரமதேவன் கடுங்கோபமடைந்
து, “விதூமனே! கேட்குதி. நமதுசபையாரனைவருங் கண்புதை
க்க, அலம்புசையினது தொடைமூலத்தை நீ நாணமின்றி யுற்று
நோக்கினை, அலம்புசையும் பேரவாவுடையளாயுன்னையே நோக்
கினள். ஆதலாலிதற்கு வேறென்னசொல்வது. நீவிரிருவரும்பூமி
யிற்பிறந் துங்களவாவைமுடித்து வாருங்களென்று சபித்தனன்.
ஐயாயிரகோடி யண்டங்களினு முள்ள நால்வகைத் தோற்றத்
தெழுவகைப்பிறப் பெண்பத்து நான்கு நூறுயிரகோடி பேத
வகை யசரீராதிகளையுடைய எண்ணிறந்த சீவகோடிகள் ஆங்
காங்கிருந்துசெய்யும் வினைகளையறிந்து அவ்வினைகட்குத் தக்கப
டி சுகதுக்கங்களைத் தவறுதமைக்குஞ் சித்தியுடைய பிரமனுக்
கு நேரேகண்டதற்குத் தக்கபடி யமைத்தல் வியப்பல்லவே.
கொடியசாபத்தை யேற்ற விதூமனனவன் பிரமதேவனுடைய
பாதங்களைவணங்கி; “ஐயனே! இப்பெருந்துன்பத்தைச் சிறியவ
னாகிய யான் தாங்கமாட்டேன்; சிறிதரிகத் திருவருள் புரியவேண்
டு” மென்று மேலுமிரந்து வேண்ட, பிரமதேவன் சிறிது மனமி
ரங்கிச் சொல்லுவான். “விதூமனே! நானிட்டசாபமே தவிரு
து. ஆதலா லிவளோடு நீ பூமியிற் பிறந்துன்பமனுபவித்து உலக

தந்தையூர்சாண்டு வருங்காலத்தில் இவளொரு புத்திரனைப்பெறுவள் அவனை யுலகாளவைத்துத் தெக்கிணதேசத்திலே இராமேச்சுரத்திலுள்ள சக்கரதீர்த்தத்தை யடைந்து அதிலிவளோடு விதிப்படி ஸ்நானஞ்செய்து, பாமபு சடடைச் சுழற்றியதுபோலச் சாபத்தாற்கிடைத்த மானுடயாக்கையை விடுத்து இருவரும் நும்பதவியை யடைவீர்கள். இச்சாப மத்தீர்த்தத்தி லாடுதலன்றி நீங்காது'' என்றருளி விடுத்தனன்.

விதூமனுனவன் பிரமனது சொல்லைக்கேட்டு நாணித் தனது நகரையடைந்து தன்னைச்சபித்த பிரமனை நினைத்தவன தருளினாலே தான்பிறக்கு மிடங் கௌசாம்பிதேசமென்றும் தந்தை சதாநீகனென்றும் தாய் விண்டுமாவதியென்றும் அறிந்து, தன்னையெப்பொழுதும் பிரியாத்துணைவராகிய மாலியவான், புட்பதந்தன், பலோற்கடன் என்னு மூவரையுமழைத்து, "என்னன்பர்காள்! பிரமன்சாபத்தால் நான் பூமியிற் பிறக்கப் போகின்றேன் நீங்களொன்றும் யோசியாது விடைதாருங்க'' ளென்ன, மூவருமிந்தவார்த்தையைக்கேட்ட மாத்திரத்தே நெருப்பில்வீழ்ந்தவர் போலப் பதைபதைத்துக் கண்ணீர்சொரிய நின்று "தேவரீரைப் பிரிந்தியாமிங்கிருந்து வாழுதலினுந் தேவரீரோடு கூடவருதலே தகுதி'' யென்ன, விதூமனு மனமிகவிரங்கி "நான் செய்த குற்றத்துக்குத் தக்க தண்டனை யுடைகிறேன், நீவிரேன் வறிதாக வருந்து கிறீர்கள். நான் கௌசாம்பியின் சதாநீகனுக்குப் புத்திரனுகப் பிறந்து சகலபோக சவுக்கியங்களையும் பூமியிலுகர்ந்து சாபம் நீங்கி யுங்களைவந்து கூடும்வரையுந் துன்பமின்றி நீவிரிங்ஙன மிருக்குதி'' ரென்று சொல்லவும், அம்மூவருமதனைமறுத்து எம்மை யிதுநாள்வரையு மிரக்ஷித்த இறைவா! தேவரீரைப் பிரிந்து துன்புறுதலினு மானுடப்பிறவி மிகவிழிந்ததோ தேவரீரனுபவிப்பது நரகமாயினு மஃதெமக்குச் சுவர்க்கலோகமே. இங்கே தேவரீரைச் சேவித்து நிற்பதுபோ லங்குஞ் சேவித்து நிற்கக்கட்டளை யருளுக'' வென்று பணிந்தார்கள். அதுகேட்ட விதூமனு மிவர்களன்பிருந்தவாறென்னையென்று தடுக்காதுடன்பட்டான்.

இங்ஙனமே யிந்நால்வரு மொருமித்த மனமுடையராய், பூமியிற் சனிக்க வருங்காலத்தில் சந்திரகுலத்திலே யருச்சுனனது வழித் தோன்றலாகிய சனமேசயன் புத்திரனுகிய சதாநீகனென்னவன், தன் முதன்மந்திரியாகிய அருள் நன்மை கொடை அறிவு சிறப்பு ஆண்டன்மை நீதி அடக்கம் ஞானமாதி

யவமைச்சர்க்குரிய முறையிற், சிறிதும் பிறழாது நனம்தி கொளுத்தும் பன்மதி யுகந்தரன் சேனைகாவலன் விப்பிரதீகன் புரோகிதன் ஞானவல்லபன் ஆதியவரோடு முலகினை யரசாண்டு வருங்காலத்து, நெடுங்காலம் புத்திரப்பேறின்மையால் தனது மனைவி விண்டுமாமதியோடு மனம்வருந்தி யாதுசெய்யலாமென்று சிறிது யோசித்து முதன்மந்திரியாகிய யுகந்தரனை "நோக்கி மந்திரியே! "பெறுமவற்றுள்ளே யறிவறி மக்கட், பேறினிற் சிறப்பாகக் கூறவொன் றில்லை, ஏழெழு பிறப்புந் தீயவை தீண்டாத், தாழ்விலா மக்கட னமப்பெறுவோர்க்கே, தம்மை நோக்கிச் செய்வன தம்பால், சார்தலின் மக்களே தம்முடைப்பொருள்கள், கல்லாமழலை கனிந்திடுமூறல், சொல்லாலுருக்கித்தோள் பிடித்தேறிச், செவிக்குமுடற்குந் தெவிட்டாவின்ப, மருத்திடுமக்க ளமைந்திடாதொழியின், இல்வாழ்வினுக்கோரின்பமுமில்லைத், தீக்கடனீர்க்கடன் செய்து மேலுலகம், பார்த்திடச்செய்யும் பயனுமோவில்லை, யாதலான் மகவாம்நம்பொருள் வேண்டுமே" இப்பேறு இந்நாள்வரையினுங்கிடைத்திலதே இதற்குயாதுசெய்வோ மென்றனன். அப்பொழுது, மந்திரியானவன் சிறிதுயோசித்து அரசன்மகிழுமாறு சொல்லுவான்:

மன்னனே! உண்மை பொழுக்கம் உறுதி நூலுணர்ச்சியுடையராய் விருப்பு வெறுப்பில்லாதவராய் யாகாதி கிருத்தியங்களின் மகாவல்லபமுடையராய்ச் சிறிதுங்குற்றமில்லாத சாண்டில்லியர் என்னும் பெயருடைய மகா தபத்தியொருவரிருக்கின்றார். அவரையடைந்தால் தேவரீருடைய மனக்குறை நீங்குமென்ன, அரசனும் புத்திரனைப் பெற்றவன்போன்று மனக்களிப்புடையவனா யவ்வமைச்சனோடு முனிவரையடைந்து வணங்க; முனிவரு மாசீர்வதித் திருக்கச்செய்து "அரசனே! எதனை விரும்பி வந்தனை, யானெதுசெய்தல் வேண்டுஞ் சொல்லுதி" யென்ன; அரசனது உத்தரவின்படி மந்திரி வணங்கி, "ஐயனே! இன்னு நம்மரசனுக்குப் புத்திரப்பேறில்லை. தமதனுக்கிரகத்தா லது பெறும்பொருட்டு வந்தன" னென்ன; முனிவரும் அரசனே யுனது தேசத்திலே வந்து நீவிரும்பியபடிசெய்வோ" மென் றவர்களையு மனுப்பித்துக்கொண்டு கௌசாம்பிதேசத்திலே வந்து புத்திரகாமேட்டி செய்தனர். அந்த யாகப்பிரசாதபலத்தினால் பிரமன் சாபத்தினால் வரும் விதூமன் விண்டுமாவதி வயிற்றில் சகத்திரானீகனென்னும் பெயரோடு பிறந்தனன், மாலியவா னென்பவன் உகந்தரனென்னு மந்திரிக்கு

மகனாகி உகந்தராயணனென்னும் பெயரோடு பிறந்தனன். புடபதந்தனனவன் சேனாபதியாகிய விப்பிரதீகனுக்கு உமண்வானென்னும் பெயரோடு பிறந்தனன். பலோற்கடனெனபவன் புரோகிதனாகிய ஞானவல்லவனுக்கு மகனாகி வசந்தனென்னும்பெயரோடு பிறந்தனன்.

இங்ஙனமே, இந்நால்வரும் வளர்மதிபோல நாளொருவண்ணமாய், வளர்ந்துவரும் பருவத்து ஒருவரோடொருவர் கலந்து நட்புற்று, வித்தியாவினோதப் பிரியாநண்பராய்த் தத்தமக்குரிய சகலகலைகளினும் வல்லவராயினர். சகத்திரானீகனுக்கு ஐந்து வயசானபோது, பிரமன் சாபம்பெற்ற அலம்புசையென்பவள் அயோத்தியாபுரியிற் கிருதவன்மாவின மகளாகி யவன் மனைவிவயிற்றிற் பிறந்து, மிருகாவதியென்னும் பெயரோடு வளர்ந்தனள்.

இவ்வாறாக ஐவரும் இவ்விவ்விடங்களிலே பிறந்து வளர்ந்து சிறப்புற்று வருங்காலத்து, அகிதமிட்டிரனென்னு மிராக்கதன், தூலசிரன் என்னுந் தன்றம்பியோடு அருந்தவஞ்செய்து பெருவலியடைந்து பெருஞ்சேனைகளோடு தேவலோகத்தை யடைந்து தேவஇந்திரனோடு போர்செய்ய, அவ்விந்திர னவர்களுக்காற்றாது கௌசாம்பிதேசத்துச் சதாநீகனைப் போருக்குத் துணையாய் வரும்படி தூதுவிட, சதாநீகனு மதுமறுக்கலாற்றாதுடன்பட்டுத் தன்மகனாகிய சகத்திரானீகனுக் கிளவரசுப் பட்டங்கட்டி, மந்திரிமக னுகந்தராயணனை மந்திரியாகவும், சேனைத்தலைவன்மகன் உமண்வானெனபவனைச் சேனைத்தலைவனாகவும் பட்டங்கட்டி, புரோகிதன்மகன் வசந்தனென்பவனைப் புரோகிதனாகவும் நியமித்து அரசாளும்படி வைத்து, தனது மந்திரி படைத்தலைவராதிய வங்கங்களோடு தேவலோகத்திற்சென்று, இந்திரனுக்குத் துணையாகி யகிதமிட்டிர ராக்கதனையு மவன்றம்பியையுஞ் சேனைகளையுங்கொன்று, தேவர்கள் மதிப்ப இந்திரனுக்கு வெற்றிகொடுத்து, இனி நாம் பூமியிற் போயிருந்து மரணகாலம் வரின் பின்னும் இங்கே தான் வரவேண்டுமே அங்கே போயென்ன பயன், இங்கேதானேயிருப்போமென் றிருந்தவன்போல் வருத்தமின்றி மரணமடைந்தனன். அவனுடம்பைத் தேவதூதன் இந்திரனாணையாற் கொண்டுவந்து சகத்திரானீகனிடமொப்படைக்க, சகத்திரானீகனு னவன தந்தையின் பிணத்தைக்கண்டமாத்திரத்தே சுழன்று வாய்புலரக் கண்ணீர்சொரியப் பெருந்துயரக்கடலுளமிழ்ந்தி அப்பிணத்தைத்தழுவிப் புலம்பினன். விண்டுமாவதியுந் தன

து நாயகனோடு சகமரணஞ்செய்தனள். சகத்திரானீகனும் பின்னொருவாறு தேறி, இருவருக்குந் தீக்கடனீர்க்கடன்முடித்து, வீரலட்சிமியை நிலைக்குமாறுசெய்து, உசந்தரன் விப்பிரதீகன் ஞானவல்லவனுதியோரது துணைகொண்டு மனுநீதி வேதவாக்கியஞ் சிறிதும்பிறழா துலகரசாட்சிசெய்யுங்காலத்து, விதிவசத்தால் விப்பிரதீகனுதிமூவருமிறக்க, அவர்களது புத்திரர்களாய்த் தன்னைவிடாது பின்றொடர்ந்துவந்த மூவரோடு மரசாண்டு, தந்தைபெயரினுந் தன்பெயர் பதின்மடங்கு அதிகந் தானே களையுடையானென்பதற்கிணங்கப் பெருஞ்சேனைகளைச் சேர்த்துலகரசாட்சிசெய்திருந்தான்.

தேவேந்திரனானவன், இவனது கீர்த்தியைக்கேள்வியுற்றுத் தனது திருநந்தனவிழாவைச்சேவித்து நண்பு கொண்டாடுதற்பொருட்டுச் சிலதூதுவரையனுப்ப, அவர்களும் பூலோகவிந்திரனைக மதித்துத் தமதரசனது கட்டளையைத் தெரிவித்தழைப்ப, சகத்திரானீகனு மனமகிழ்ந்து, தேரின்மேலேறி யாகாயமார்க்கமாகச் சென்றிந்திரனைக்கண்டு வணங்கிப் பக்கத்துவீற்றிருந்தான். அப்பொழுது இந்திரனும் நல்வரவுசொல்லிப் புதிதாகவொரு சரித்திரஞ்சொல்லுவான். "அரசனே! பிரமன் சாபத்தால் அலம்புசையென்பவள் அயோத்திநகரத்திலே கிருதவன்மாவினது மகளாகப்பிறந்தனள்; அட்டவசுக்களில் விதூமனென்பவனு மவளது தொடைமூலத்தைக்கண்டு விரும்பினமையின் பூமியிற்பிறந்தவளோடு மின்புற்றுச் சிலகாலமிருந்து மகனுக்குமுடிசூட்டிச் சக்கரதீர்த்தத்து மூழ்கிச் சாபநீங்கி யிருவரும் முன்பதவிகளையடையுங்களென்ற சங்கதியொன்றுளது" என்று கூறி யவளது பேரழகை மிகவும் விதந்தான்.

சகத்திரானீகனும், இந்திரன் சொல்லிய சங்கதியைக் கேட்டபொழுதே யப்பெண்ணுடையபேரழகே தூதாகத் தனது பீதாம்பரம் பிடித்தீர்ப்பத் தேவலோகத்தைவிட்டுத் தனது நகரைநோக்கிவருமிடத்து, அவனைத் திலோத்தமையானவள் தூரத்தேகண்டு மயங்கி "முன் சபையிலே நடிக்கும்பொழுதிவனது அழகைக்கண்டேன் இவனன்றோபுருடோத்தமன், இவனைத் தழுவாத வெனதழகுக்குப் பயன் யாது" என்று நினைத்துக் கருணையோடு புன்மூரலரும்பிப் பொதுநோக்கஞ்செய்து பலவகைப்புணர்ச்சிக்குறிகளைக் காட்டிவரவும், சகத்திரானீகனானவன், திலோத்தமையினது நீண்ட நெறித்த கரிய கூந்தலாகிய விருளின் மயங்கி வருந்தாமல் மிருகாவதியினுபரணவொளியினாற் போக்கிப் பொய்ப்புலன்கள்வழி மனசைவிடுக்காது மெய்யாகியவேக

வஸ்து விடத்திலே மனசைச்செலுத்துஞ்சத்திய ஞானிகளைப் போல, மிருகாவதியாகிய வொருத்தியிடத்தே மனசைச்செலுத்திச்சென்றான். அத்திலோத்தமை, அவனையிடையே மறித்து "மன்னனே! நீ பெறுதற்கரிய விளமைப் பருவத்தையடைந்திருந்தும் உன்னை விரும்பி வந்தவென்னைச் சிறிதும்பாராது செல்கின்றனையே, ஆசையால் வருமவமானத்தை மறைத்தொழுகுமியல்பினராகியபெண்கள், பேராசைவரினதனைப் பொறுப்பாரகளோ? விகாரத்தால் வருந்தி விரும்பி வந்தவென்னை விடுத்து வேணவாக்கொண்டெவளை விரும்பிச் செல்கின்றனையோ அவளைப் பதினான்குவருடம் பிரிந்து வருந்துதி" யென்று சபித்தனள்.

இங்ஙனஞ் சபிக்கப் பெற்ற சகத்திரானீகனானவன், திலோத்தமைக்குப் பதில் வார்த்தையொன்றுஞ் சொல்லாதவனாய், "அயோத்தியா புரியிலுள்ள மிருகாவதியாகிய பேரழகியெனக்கு மனைவியாக வரினிப்பதினான்கு வருடமும் பிரிந்திருத்தலெனக்கரிதன்று" என்று சொல்லி, அவளுடைய செவிகளையளக்குங் கண்களையும், அவள் பெயரையும், புன்னகையையும், செவ்விதழ்களையும் நேரேகாண்பதாகத் தோன்ற வக்குறிப்போடு தனது நகரை யடைந்தரசாண்டிருந்தனன். அக்காலத்துப் பிரமனது சாபமாகிய வூழானது பிடர் பிடித்துந்தச் சில முதியோர்களை யழைத்துக் கிருதவன்மனிடமனுப்பி மணம் பேசுவித்து அவனுடன்பட்டபின்பு விதிப்படி மிருகாவதியை விவாகஞ் செய்து அவளோடும் சுவர்க்கலோகம் விடுத்து வந்த நாட்டொடங்கிப் பெறுத வின்பமுழுதையும் பெற்று மன்மதனுமிரதியும், இந்திரனுமிந்திராணியும், இராமனுஞ் சீதையும் போல மிக்க மனக்களிப்புடையனாய் "பிரமனானவன், ஏனைத்தேவப் பெண்களுந் தேவர்களுமிருப்ப வெங்களைப் பூமியிற் பிறக்கும்படி சபித்தது வஞ்சகமன்று. இப்பேரானந்தத்தையனுபவிக்கச் செய்தலாலெம்மிருவரிடத்துங் கொண்ட பேரன்பே" யென்று கலந்துறையுநாளில் கருப்ப வதியாகிய மனைவியினது பொன்னிறமாகிய சரீரஞ் சந்திரகிரணத்தால் வெதும்பியது போல வெண்ணிறமடைந்து கீட்டிசைபோல விளங்கு வாளாய வயாவருத்தங் கொள்ள, அவளது கணவனும்விரும்பிய விரும்பிய யாப்பண்டங்கள் தேடிக்கொடுத்து வருங்காலத்துக் குளத்து நீராடவிருப்பங் கொள்ளப் பளிங்குத் தொட்டி கட்டி நீரை நிறைத்துக் குசும்பபூக்களைக்கொட்டிக் குளிர்ச்சியுஞ் செந்நிறமுடையது மாக்கியதிலிறங்கிக் குளிக்கச்செய்தனன்.

குசும நீராடிய மிருகாவதி சரீர வெளுப்புமாறி முருக்கம்பூபபோலச் செந்நிறமடைந்திருத்தலால், திலோத்தமையினது சாபம் பலிக்க, விகடநாமனென்னு மானையிருஞ்சிப் புள்ளானது வந்து அவளை இறைச்சியாகிய விரையென்று கருதித் தூக்கிக் கொண்டுபோ யுதயகிரியினது முழைஞ்சில் வைத்துப் பிறிதிடஞ்சென்றது. மிருகாவதி மனங்கலங்கி யறிவிழந்து ஏக்கமுற்றுப் பரவசமாய்ச் சிறிது நேரஞ்சென்றபின் ஒருவாறு தெளிந்து புலம்புவாளாயினள்.

"எனது பிராணநாயகரே! அஞ்சனமெழுதிய கரியகண்களையுடையபெண்கள் தமது நாயகரால் விடப்படுந்தகையரோ, ஒருகாலமும் பிரியாத தேவரீரை யிப்பொழுது காணேன், இருந்தவிடத்துக்கிது சமீபமோ! அதிதூரமோ! வறியேன், இந்தவிருட் குகையுளிருக்கும் நா னினியெங்கே போவேன், தோழிமார்களையாவது அனுப்பினீரில்லையே, என்னை வெறுத்துப் பிரிந்திரோ தேவரீரென்னை நினைத்துப் புலம்பிக் கிடப்பீரோ! மறந்தரசியல் செய்வீரோ அறியேன், பாவியாகிய யான் பூந்தொட்டிலிலே ஸ்நாநம் பண்ணுமிடத்து எனைனத் தூக்கி வந்த பறவை யெங்கிருந்து வந்ததோ வறியேன், இம்மலை நான் குளித்தவிடத்திற்குச் சமீபத்திலுள்ளதோ தூரத்திலுள்ளதோ வறியேன், இன்னும் பாவியாகிய யான், காவலையுடைய கௌசாம்பிதேயத்தையும் அத்தாணிமண்டபத்தையும் சிங்காசனத்தின் மேற்படுத்த பஞ்சசயனத்தையும் வீரக்கழலணிந்த நாயகரேயுமது மார்பத்தையுந், திரண்டபுயங்களையுங் காண்பேனோ அறிமுகமாகவொருவரையுங்காணேன், அடுத்தவூரையுமறியேன், போகும் வழிமுகங்களையுங்காணேன், தனியேநிற்கின்றேன், பிரமனிப்படிப் பெற்றூருற்றூர் மற்றுரு மின்றிக் கருப்பிணியாய காலத்திலே யந்தரவழியில் நொந்து கிடபபாயென் றெழுதியிருப்பின் குறிப்பிடஞ் சிறிதுமறியாத மடமையேன் கூறுவதென்னே" என்றிவ்வாறு பலசொல்லிப்புலம்பினள்.

மிருகாவதி இவ்வாறு பலசொல்லிப் புலம்பும்போது, அதனைக்கேட்டு மலைக்கல்லுமுருகியது; சிங்கம் யானை புலிமுதலிய துட்டமிருகபட்சிகளுந் தீண்டாவாயின; அப்பொழுது, ஒருமுனிவர் இவளது அழுகையைக்கேட்டு அச்சதத்தின் வழியாக வந்து கண்டு மிகவுமிரங்கி, ஆறுதல் சொல்லித்தேற்றி யங்கு நின்று மழைத்துக் கொண்டு போயத தன்தாசிரியராகிய தாயினுமினிய பெருங்கருணையுடைய ச

மதக்கினியிட மெய்ப்படைந்தனர். சமதக்கினிமகாமுனிவரு
மிருகாவதியினது வரலாறுமுழுவதையுங் கேட்டு, "மகளே! நீ
பயப்படாதே உனது தந்தையாகிய கிருதவன்மாவாக வென்
னை நினைக்குதி" யென்றுறுதல் சொல்லத் தேறியிருந்து சிலதின
த்தில் புத்திரனைப் பெற்றாள். சமதக்கினிமுனிவரது ஏவலி
ன் இருடிபன்னியர்கள் தாயபோல வேண்டிய சிகிச்சைகள்
செய்யச் சுகமடைந்தனள். அசரீரியானது உதயவெற்பிலே
பிறந்தமையால் பாலகனுக்கு "உதயன்" என்று நாமகரணஞ்
செய்தது. சமதக்கினி முனிவரு மக் குழந்தைக்குச் சாதகன்ம
முதலிய கிரியைகள் செய்ய, அவ்வுதயனும் உரியகாலத்திலே
கற்க வேண்டியவைகளெல்லாங் கற்றுப் பொதுவறிவிற் சிறந்த
பின்பு, அரசர்க்குரிய படைக்கலப் பயிற்சி யானை குதிரையே
ற்ற மாதியவுங் கற்று, வேட்டை யாடுந்தொழிலில் முயன்றான்

தாயானவள், தனது நாயகனது முத்திரையோடு தன்கையி
லிட்ட கங்கணத்தைத் தன் றனயனுக்கணிந்தனள். உதயகுமார
னும் பின்னொரு நாள் வேட்டையாடக் காட்டிற் சென்ற பொ
ழுது, அங்கே யொருவேடுவன் ஒருபாம்பைப்பிடித்துச் செல்வ
தைக் கண்டு, "வேடனே! இதனாலுனக்கென் பய னிதனைவிடுக்
குதி" யென்று சொல்ல, அவ்வேடன் கோபித்துக் "குமரனே
இதனைக் கொண்டுபோய் நாட்டிலே யாட்டிப் பிழைப்பேன், கா
ட்டிலுள்ள பாம்பைப்பிடித்தலாலுனக்கு நட்டமென்" னெ
ன்று பின்னு மதனுடல் நெரியுமாறு இறுக்கிக்கட்டினன். பாம்
பானது மிகவும் பதைபதைத்த வருத்தத்தை உதயகுமாரன்
கண்டு தாங்காதவனாய்த் தனது கங்கணத்தை யவன் கையிற்
கொடுத்ததனை விடுவித்தனன்.

உடனே பச்சருப்பமானது மனுடவடிவாகி யுதயகுமார
னை வணங்கி, "நான் திருதராட்டிரமகாராசனுடைய புத்திரனாகி
ய துரியோதனன், முன்னொரு சாபத்தினாற் பாம்புருவாயினே
ன், உன்னைக் காணுதலே சாபநிவிர்த்தி என்பெயர் கின்னர
ன்" என்று தனது வரலாற்றைச் சொல்லி நண்பு கொண்டு தன
து பாதாளலோகத்திலே கொண்டு போய்த் தன்றங்கையாகிய
லளிதை யென்பவளை விவாகஞ் செய்துகொடுத்தங்கேயிரு
க்கச் செய்ய, அவளுங் கருப்பிணியாகி யொருபுத்திரனைப்பெ
ற்றுத் தன்னாயகனாகிய உதயகுமாரனை வணங்கி, "என்னருமை
நாயக! நான் முற்பிறப்பில் வித்தியாதரகுலம்; என் பெயர்
சுகண்டி; இவ்விடம் வருவதற் கொருசாபமுண்டு; இப்புத்திர
னே எனது சாபமாற்று மருந்து; இப்புதல்வனைக் காக்குத

லுமது கடன்" என்று சொல்லித் தன்கையிலுள்ள வீணையையும் வாடாமல்லிகை மாலையையுங் கொடுத்துச் சாப நீங்கித் தன் னுலகடைந்தனள்.

பின்பு உதயகுமாரன் மாமனுதியருடைய அனுமதியோடு தான் பெற்ற மூன்று பொருளையுங் கொண்டு தாயிடம் வந்து, மன்னவனையிழந்தது மன்றிப் பெற்றமைந்தனையு மிழந்தேனே யென்றவிதியிதுவோ தெய்வமே" யென்று பெருந்துயருழக்கு மிடத்துச் சமதக்கினி முனிவராற் சிறிது தேறிப் புத்துயரொழிந்திருந்த அத்தாயைக் கண்டு வணங்கி நடந்த சங்கதிகளைச் சொல்லி யசுத்துயரையும் போக்கியிருந்தனன்.

வேடுவனானவன், காட்டுப்பாம்புக்குக் கங்கணம் பெற்றேனே யென்று மகிழ்ந்து, கௌசாம்பி நகரத்திற் போய் இக்கங்கணத்தை விலைக்கு வாங்கு வீர்களா வென்று வீதியிற்கூற, நகைவியாபாரியாகிய வொருசெட்டி யதனை வாங்கிப் பார்க்கு மிடத்து, தனதரசனாகிய சகத்திரானீகனது முத்திரை யதில் இருப்பக் கண்டு, அதனை வெளிப்படுத்தாமல் "வேடனே இதன்விலை வாங்கித் தருவேன் வருகுதி" யென்று அரசன் முன்னிலைக் கழைத்துக் கொண்டு போய்க் கங்கணத்தை முன்னாக வைத்து வேடுவனையும் விடுத்தனன்.

சகத்திரானீகராசன், கருப்பவதியாகிக் குசுமப்பூந்தொட்டியின் மூழ்கிய தனது மனைவிபோன விதந்தெரியாது புலம்பிப் பெருந்துன்ப மடைந்து சோதிடர் மந்திரி முதலியோருட னுசாவிக் கேடில்லை வருவளெனத் தெரிந்தும், திலோத்தமை யிட்ட சாபநியதியை நினைத்தும் பதினான்கு வருடஞ் சென்றால் வருவள் என்கிறதுணிவோடு அப்பதினான்கு வருடத்தையும் பதினான்கு யுகமாகக் கழித்து இனிச்சமீபகாலமானபடியால் வருவளென்கிற துணிபோடு பலதூதுவரைப்பலதிசைகளினும் போக்கி மாறாத்துயரோடு மன்னிய பொழுது, தனது முன்வைத்த கங்கணத்தை யெடுத்துக் கண்ணிலொற்றி மாரிற்போட்டணைத்து வேடுவனை நோக்கி "நீ சிறிது மஞ்சாது இது கிடைத்தவழியையுள்ளபடி சொல்லுதி" யென்ன, வேடுவனு மரசனை வணங்கி யச்சத்தோடு தானுதயகிரிச் சாரலிலொரு பாம்பைப் பிடித்துக் கட்ட, அதனையொரு ராசகுமாரன் கண்டு, தடுக்கவுந் தானுடன்படாமையா லிக்கங்கணத்தைத் தந்து விடுவித்துச் சென்றனன். அதுவேயன்றிப் பிறிதொன்று மறியேனென்றுஞ் சொல்ல, அரசனு மதிக சந்தோஷம

டைந்து அவ்விடத்தைக் காட்டுதியென்று மந்திரிமுதலானவர்களோடெழுந்து சிறிது தூரம்போனபின்பு சூரியனத்தமித்தது. அன்றிரவு காட்டிலோரிடத்துத்தனது பரிவாரங்களோடிருந்தனன். இருக்குமிடத்தில அரசனுக்கு மிருகாவதியைப் பிரிந்த நாள்முதல் விதுகாறுமுள்ள விகாராக்கினியானது தலைமேலோங்கிப் பரந்து செவ்வானம், நட்சத்திரஞ், சந்திரன், மந்தமாருதம், புள்ளாங்குழலோசை, பசுமணி, வீணை, அன்றில் முதலியவைகளோடு கூடிவருத்த மதனபாணங்களினால் வருந்தியன்றிரவே பதினான்கு வருடமளவு நீட்டித்ததாகிய பெருங்கடலைப் புரோகிதராகிய வசந்தருடைய வாக்கென்னுந் தெப்பத்தினானீந்தச் சூரியனுமுதித்தனன்.

சகத்திராநீகனும் பரிவாரங்களோடெழுந்து காலைக்கடன் முடித்து விரைந்துசென் றுதயகிரிச்சாரலையடைந்து தவஞ் செய்யுஞ் சமதக்கினி முனிவரையடைந்து வணங்கி யாசீர்வாதம் பெற்று, மகனையும் மனைவியையும் பேரனையுமழைத்துக் கொண்டு கௌசாம்பி தேசத்தை யடைந்து சிலநாளின்புற்று இந்திரன் சொல்லிய வார்த்தையை நினைத்து உதயகுமாரனுக்குப் பட்டஞ் சூட்டி யரசாளவைத்து உலகவாழ்வைவெறுத்து, உகந்தராயண மந்திரி வசந்தனென்னும் புரோகிதன் உமண்வானென்னும் படைத்தலைவன் மிருகாவதியென்னு மனைவியுமாகிய நால்வரோடும் சக்கரதீர்த்தத்தை யடைந்து விதிப்படி ஸ்நானஞ்செய்து சாபநீங்கித் தேவவுருவாகித் தேவதுந்துபி யொலிப்பப் பூமழையினோடு தேவவிமானத்திலேறி முன்னதாகிய வசுக்கள்பதவியடைந்தின்புற்றனன். இதுவே சக்கரதீர்த்தமகத்துவம். இந்தமகத்துவமுடைய சக்கரதீர்த்தத்திலே யொருமுறை ஸ்நானஞ்செய்தோர் தேவருலகவின்பமடைவர். இச் சரித்திரத்தைப் படிப்போர் கேட்போருமிட்டசித்திகளை யடைந்தின்புறுவர்.

திகிரிவாவிவழுத்துபுயாருமேதெரியமேலுலகுற்றதுதேறியே
யகிலலோகருமுற்றதின்மூழ்கினாடல்விதூமனுடைச்செயலீதரோ
பகருநீரோர்பகற்பொழுதாடினோர்பரவுவானிலிருப்பர்கள்பாடுவோர்
நிகரில்காதைசெவிக்கொளுநீர்மையார்நினைவுசேர்பொருளக்கணநேருமே

விதூமச்சருக்க முற்றிற்று.

# தேவிபுரச்சருக்கம்.

---

முனிவர்கள்! சூதமகாமுனிவரை நோக்கி, ஐயா, சக்கரதீர்த்தந் தேவிபுரமளவென்றருளியதே, அத்தேவிபுரமெங்கேயுளது அதற்கு அப்பெயர் வந்த காரணம் யாது? இன்னுஞ்சக்கரதீர்த்தப் பெருமைகளையும் பிறவற்றையும் விரித்துச் சொல்லுக வென்று வேண்டினர்.

முனிவர்காள்! ஸ்ரீ ராமன் அணைவகுக்குங்காலத்துச் சமுத்திரத்தில் நவபாடாணங்களிட்டனன். அதுவே தேவிபுரம். அங்கே இலக்குமியினது மைத்துனியாகிய நாராயணி தனது பெயரால் சக்கரதீர்த்தக் கரையில் ஒருநகரமுண்டாக்கினள். தேவர்கள் அசுரர்களைப் போர்செய்து கொன்றபின்பு மக்களையிழந்த திதியென்பவள் மிகவும் புலம்பி வருந்தித் தன் மகளை நோக்கிப் பெண்ணே! நீ இந்திராதி தேவர்களை வெல்லுமாறு ஒரு புத்திரனைப் பெறும் பொருட்டுத் தவஞ்செய்குதியெனவே, அவளும் எருமையினது உருவமெடுத்து வனமடைந்து, சுபாரிசமுனிவரை நோக்கிப் பஞ்சாக்கினி மத்தியினின்று திரிபுவனமுநடுங்க அருந்தவமிழைத்தனள்.

சுபாரிசமுனிவரானவர் அவளது தவங்கண்டு மகிழ்ந்து அச்சத்தோடு மவளெதிரே தோன்றிப் "பெண்ணே யுனது தவமுவந்தேம் நீ விரும்பிய படியுடம்பு முழுவது மனுடவடிவாகவுந் தலைமகிடவடிவாகவும் பெற்றவொரு புத்திரனைப் பெறுகுதி, அவன்பெயர் மகிடாசுரன். அவன் அருந்தவஞ்செய்து வரங்களைப் பெற்றுப் பெருவலியுடையனாவன்; தேவர்களை வென்னிடச்செய்வன், விசுவாமித்திரமுனிவரையும் வெல்லுவன். நீ இனித்தவம் விடுத்தென்னோடு வருகுவை" யென்று சொல்லி அழைத்துக்கொண்டு போய்த் தனது பர்ணசாலையில் சிலநாளிருத்தி அவளோடு கலந்து கிருப்பாதானஞ் செய்து விடுத்தனர். பின்னவரநுக்கிரகத்தால் மகிடமுகீமுடைய வொருமைந்தன் சிங்கேறுபோலவள் வயிற்றிற்றோன்றி நஞ்சுபோலக் கண்டோரனைவருமஞ்சுமாறு விளங்கி வருங்காலத்து, விப்பிரசித்தியவுணனது குமாரன் வித்துத்து மாலிமுதலியவவுணர்கள் கூடித்தாங்கள் தேவர்களுக்கஞ்சியிருந்த வச்சம நீங்குமாறு இவனோடு வந்து கலந்து நட்புற்றனர். அவருள் வித்துத்துமாலி யென

பவன் மகிடாசுரனை நோக்கி "நண்பனே, வருகுதி; தேவ்லோகம் நம்மவருடைய வாடசியே. இப்போது தேவர்கள் விட்டுணுவின் வலிமை கொண்டு சிலகாலங்களின் முன் நம்மவரை மிகவருத்தி அவ்வின்பங்களை யனுபவிக்கிறார்கள். உனது வெற்றியும் வீரமுமிதில் விளங்கும்படி யவர்களை வென்று நமதாக்குவோம்" செல்லுதி யென்றவளவில், மகிடாசுரன் வடவை போல மிகக்கோபமுற்றுத் தேவலோகஞ் சென்று நூறுவருடமட்டும் பெரும் யுத்தஞ் செய்தலும், இந்திரன்முதலிய தேவர்கள் தோற்றோடிப் பிரமனிடஞ்சொல்ல, பிரமனுமவர்களோடு சென்று விட்டுணுவாகிய சத்தியோடு வீற்றிருக்குஞ் சிவபிரானையடைந்து "எம்பெருமானே மகிடாசுரனென்பான் பெருவலிபடைத் தவுணரோடு கூடித் தேவலோகத்தைக் கைக்கொண்டு தேவர்களை யோட்டினன் தேவேந்திரனுந் தேவர்களும் ஒதுக்கிடமில்லாதவர்களாய் மனுடர்போலத் துன்பப்பட்டுப் பூமியில் வந்துவருந்துகின்றார்கள். அவர்களுக்கு ஒதுக்கிடந்தேவரீரது திருவடிக்கமலமன்றிப் பிறிதில்லை" என்று விண்ணப்பஞ்செய்தனன்.

சிவபெருமானிதனைக் கேட்டமாத்திரத்தே சிறிது கோபித்தனர். சருவவியாபகராகிய வவரதுகோபாக்கினி, இந்திராதிதேவர்களிடத்து முண்டாகி யாகாயமளவாகிச் சுவாலித்து ஒரு பெண்ணுருவாகியது. அது சிவபெருமானது கோபாக்கினி முகமும், விட்டுணுவினதுகோபாக்கினி கைகளும், இயமனதுகோபாக்கினி கதுப்புக்களும், பிரமனுடையகோபாக்கினி திருவடிகளும், இந்திரனதுகோபாக்கினி இடையும், சந்திரனது கோபாக்கினி இருதனங்களும், வருணனது கோபாக்கினி தொடைமுழந்தாள்களும், மன்மதனதுகோபாக்கினி நிதம்பமும், சூரியனதுகோபாக்கினி கால் நகமும், வசுக்களதுகோபாக்கினிகை நகமும், வியாழனதுகோபாக்கினி நாசியும், மற்றைய நவப்பிரமர்களுடைய கோபாக்கினி தந்தவரிசைகளும், அக்கினிதேவனது கோபாக்கினி நேத்திரங்களும், சந்தியாதேவிகளினது கோபாக்கினி நெற்றிப்புருவமும், வாயுதேவனுடைய கோபாக்கினி யிருசெவிகளும், மற்றைத்தேவரதுகோபாக்கினி யேனையவவையவங்களுமாகப்பெற்ற பேரழகும் பெருவலியுமுடைய பெண்ணுருவாகித்தோன்றிற்று.

சிவானுக்கிரகத்தால இவ்வாறு பேருருவுகொண்ட பெருமாட்டியைத் தேவர்கள் கண்டுகளித்தனர். சிவபெருமானவ்

ட்டு பிரமாமுதலியோர் அப்பெருமாட்டிக்குத்துர்க்கையென்
னும்பெயர்கொடுத்து, சூலாயுதமுதலியவாயுதங்களும், பிணை
யன்மாலையும், செஞ்சந்தனமும், சர்ப்பாபரணமும், கொடுத்த
ணியச்செய்தனர்.

துர்க்கையானவள், அவையனைத்தையுந் தரித்துச் சிங்க
வாகனத்திலேறித் தேவர்கள் முனிவர்கள் முதலியவனைவரு
மற்றுமுலகங்களும் நடுங்குமாறு ஆரவாரித்து, இந்திராதிதே
வர்கள் ஆயுதபாணிகளாகிச் சேனைகளாகச் சூழ வருமிடத்து,
மகிடாசுரனும் பலவவுணர்கள் சூழக் கடல்போல முழங்கி வ
ந்துயுத்தமுயற்சியோடு சூழ, இருபக்கசேனைகளும் யுத்தஞ்
செய்தார்கள். தேவர்கள் செலுத்திய வாயுதங்களினால் அவு
ணர் சேனைகளினது முன்னணிகள் முரிந்தோடவு மதுகண்ட
மகிடாசுரன் ஆயிரகோடிசேனைகளும் இலக்கம்படைத்தலைவர்
களுஞ்சூழ வந்தெதிர்த்துக் கோபாவேசனாகி வில்லைவளைத்து
நாணொலிசெய்து, இந்திரன்மேற் பதினாயிரமம்பும், இயமன்
மேல் ஆயிரமம்பும், வருணன்மேலெண்ணாயிரமம்பும், குபே
ரன்மேலாயிரமம்பும், வாயு அட்டவசுக்கள் தேவமருத்துவர்
சந்திரன் அக்கினி சூரியனாதிதேவர்கள்மேல் ஒவ்வொருவருக்
குப் பதினாயிரம் அம்புகளுமாகச் செலுத்தி ஆர்வாரித்தன
ன். அதுகண்ட துர்க்கையானவள் கோபமுற்றுப் பூதர்களை
நோக்கி மகிடாசுரனை யான் கொல்லுகின்றேன், நீவிர் இந்தஅவு
ணச்சேனைகளைக் கட்டிக்கொல்லுங்களென்றனள். அவர்க ளது
செய்குவோமென்று சொல்லிச் சுழல்காற்றுப்போலச் சென்ற
வுணரைவதைத்தார்கள்.

மகிடாசுரனானவன் தேவர்களாற்றனது சேனைகள் கலங்
குதலைக்கண்ட மாத்திரத்தே அநேகசேனைகளோடு ஊழிக்கா
ற்றுப்போல விரைந்துசெல்லும்பொழுது, அவனது மந்திரிக
ளாகிய மகாநாதன், அநேகபாதன், ஏகபாதன், பாதவீனன்,
ஐம்முகன், மாவனு, சண்டன், மகோதரன், பேருனன், கற்ப
தகூடன், மிருத்தியுநாசன், மகோற்கடன், ஏகநேத்திரன், சு
லோசனன், பலோசனன் ஆகிய பதினைந்துபேரும் துர்க்கை
யோடெதிர்த்துப் போர்புரியுமாறு வர, அத்துர்க்கையானவள்
சிங்கவாகனத்தை யெதிரேறவிட்டு வில்லைவளைத்து அநேகாத்
திரங்களைப்பிரயோகிக்க, பத்திலக்கங் குதிரைகளோடும், நூ
றிலக்கந்தேர்களோடும், நூறிலக்கம்யானைகளோடும், அறுநூறி
லக்கம் அசுரவீரர்களோடும், மாவனுவிறந்தான். ஏழுநூறி

னைக்குள் மற்றையமந்திரிகளும் தங்கடங்கள்சேனைகளோடு மிறந்தனர். அதுகண்ட மகிடாசுரன் சண்டகோபனுகிய சேனுபதியையனுப்ப, அவனுந் தனது சேனுவெள்ளங்களோடு விரைந்து சென்று, தன்னிடத்துள்ள அத்திரங்களனைத்தையுந் தேவிமீது செலுத்தினன். துர்க்காதேவியுந் திருவிளையாட்லாக வ்வன்செலுத்திய வம்புகண்முழுவதையு மழித்து அவனது பாகனையும் தேரையும் வில்லையும் குதிரைகளையுங் கொடியையும் வெட்டினள். சண்டகோபன் மனம்புழுங்கிப் பரிசையோடு வாளையேந்திக் காலாளாகச்சென்று தேவியினது கையினுஞ் சிங்கவாகனத்தினும் வெட்ட, வாள் முரிந்தது. உடனே தேவியுங் கைச்சூலத்தினுலவனைக் குத்திக்கொன்றனள். அதுகண்ட சித்திரபானுவென்னும் படைத்தலைவன் றனது சேனைகளோடும் யானைமேலேறிவந் தெதிர்க்க, அவனையுஞ் சூலாயுதத்தாற் குத்திக்கொன்றனள். துர்க்காதேவி பின்னுங் கார்த்திகைவிளக்கீடாகிய புண்ணியதினத்தில், தன்மீது வந்துவிழும் விட்டிற்பறவைகளை யெரிக்கும் விளக்குகள்போலப் பலவடிவங்களைக் கொண்டு தன்மீதுவரும் காராளன், பாட்களன், அந்தகன் ஆதிய வசுரக்கிளைகளனைத்தையு மங்கேதோன்றியழித்தனள்.

மகிடாசுரனுனவன்றனது மந்திரிகண்முதலிய சேனைகளெல்லா மிவ்வாறழிந்த பின்னர்க் கோபாவேசனுயிந்த யுத்தமிகனென்று முழுதுமெருமைவடிவாகி மூச்சினுலுங் காலிற்குளம்பாதிய வுறுப்புக்களினுலு மங்குவந்த தேவியினது கணங்களையும் சிங்கவாகனத்தையும் வருத்தினன். அதுகண்டதேவியும் தனது முன்னிலையில்வந்த மகிடாசுரனைப் பாசத்தினுற் கண்கள் பிதுங்குமாறு கட்டிட, அவன் அவ்வடிவத்தை யொழித்துச் சிங்கவுருவமெடுத்துப் பொரும்படிவந்தனன். தேவியதனையுமழித்தனள். மகிடாசுரன் புருடவடிவங்கொண்டு வந்தனன். தேவியதனையுஞ் சங்கரிக்க அவன் யானைவடிவெடுத்துச்சிங்கவாகனத்தைபிழுத்தனன். சிங்கமானது கர்ச்சித்து யானையைக்கொலலப் பழைய மகிடவடிவெடுத்துவந்தனன். துர்க்கையு மவனது வடிவுகண்டு கட்குடித்துப் பெருங்கோப முடையளாயக் கண்கள்சிவந்து யுத்தஞ் செய்யும்பொருட்டு வர, மகிடாசுரன் பலமலைகளைப்பிடுங்கி யெறிந்தனன். தேவி யவைகளையெல்லாமழித்து, “மகிடனே, நான் கட்குடித்துக் கோபாவேசத்தோடு வருகின்றேன் நீ மறைந்தோடாது முன்னின்றனே, உன்னை இயமனுக்கு வாகனமாக விடுத்து நீ கைக்கொண்ட தே

வபதவிகளை யவரவருக்கு விரைவிலீவேன்" என்று மலைமேல் விழுமிடிபோல வவனது மார்பிலேகுத்தினள். மகிடாசுரனு மிகவுங்கலங்கித் தான்செல்வது இயமதிசையென்றுணர்ந்தவன் போலத் தென்றிசைநோக்கிக் கதறிச்சென்று, சமுத்திரத்தில் விழு மைநாகபருப்பதம்போலச் சக்கரதீர்த்தத்திலே விழுந்து மறைந்தனன். துர்க்காதேவியும் பின்றொடர்ந்து சென்று அவனைக்காணாதவளா யச்சக்கரதீர்த்தக்கரையினிற்புழி, அசரீரியானது "துர்க்கையே உனது கைக்குத்தினான் மயங்கி யிந்தவாவியில் வீழ்ந்து மறைந்திருக்கிறான், நீ விடுக்காதிவனைக்கொல்லுதி" யென்றது. அதுகேட்ட துர்க்கை அவனைக்கொல்லக்கருதித் தனது சிங்கவாகனத்தைநோக்கி "சிங்கமே தீர்த்த நீர் முழுவதையும் வற்றுமாறு குடிக்குதி" என்றவளவில் சிங்கமானது முகில் கடலைப்பருகுவதுபோல நீர்முழுதையுங்குடித்தது. மகிடனு மஃதறிந்து நாணியெழுந்து துர்க்கையினது முன்புவந்தனன். துர்க்காதேவி யவன்றலையிலேமிதித்து வாயினால் வெண்ணுரைகக்குமாறு சூலத்தினாற்குத்தி மந்தரமலையாற் கலக்குண்டுகதறிய திருப்பாற்கடல்போலக் கதற வாள்கொண்டு தலையையறுத்தனள்.

மகிடமுகந்துருத்தி அதனைமிதித்த திருவடி துருத்தியை யூதுமாறு பிடித்த கொல்லனது கை வெட்டியவிடம் உலைமுகம் உதிரப்பெருக்கு அக்கினியின்சிகை என்று விசேடிக்கும்படி, தேவிவெட்டியபொழுது விட்டுணுமிதிக்கக் காளியனவாயினின் றெழுந்தவிரதம் போலவும், பவளத்தையுருக்கிவைத்த மரகதரத்தினக்குடங் கவிழ்ந்தோடியது போலவும், மகிடமுகமிரத்தம் பெருகியது. அவனது உடல் படமறும்புண்ட பாமபுடல்போற்பதைத்தது. துர்க்காதேவி பாலைவனத்தின் மத்தியிலே மரகதரத்தினபீடத்தின்மேல தேவர்தொழும்படி நிற்குந் தனது கோலத்தை இரத்தம்பாய்ந்த நிலமீது மகிடத்தலையிலேறிக்காட்சிகொடுத்தனள்.

மகிடாசுரனிறந்தபொழுதே தேவர்கள் பஞ்ச துந்துபிகளொலிப்பப் பஞ்சதருக்களின் மலர்களைச்சொரிந்து, கோடி இரணியர் இராவணாதியர் இறந்தகாலத்துப பெற்ற களிப்படைந்து தேவியை வணங்கித் தங்கள் தங்கள் பதவிகளையடைந்தின்புற்றனர். பசாசு, நரி, காக்கை, கழுகாதிய பஞ்சப்புலன்களுங் களிப்படைய வெவ்வகை யுணவுகளையு மருந்திப் பசியொழிந்தன. பூமியிலுள்ளவர்கள், மகிடாசுரனிறந்தவன்று

இத்தினம்போலச் சிறந்ததினங்கண்டறியேம், இதன்பிரபை சூரியப்பிரகாசத்தால் வந்ததன்று பிறிதுகாரணமேதோவுண்டென்றதிசயித்தனர். பல்வகைச் சிவகோடிகளுங் களிப்புற்றன; துர்க்கையுஞ் சமுத்திரக்கரையின் வடபாகத்துத் தேவிருலகினுஞ் சிறந்தநகரமொன்றுண்டாக்கித் தனதுபெயரிட்டு அங்கேயிருப்பவர்களுக்குக்கிடர் சிறிதுமணுகாது காத்தனள். தேவர்கள், அத்தேவியின் றிருவருளைவேண்டிச் சக்கரதீர்த்தத்தைத் தேவாமிர்தத்தானிரப்பிச் சிங்கங்குடித்த குறைவுதீர்த்தனர். அதனாலதற்கு அமுதவாவியென்னும் பெயருண்டாயிற்று. முனிவர்காள்! இந்தஅமுதவாவியிலே ஸ்நானஞ்செய்வோர்களுக்கு இட்டசித்திகளனைத்தையுங் கொடுத்துத் துர்க்காதேவி யெவர்களும் வணங்கும்படி யெப்பொழுதும் பிரியாதங்கிருத்தலா லதுதேவிபுரமென்றாயிற்று. அது இக்காலத்துத் தேவிபட்டணமென்றழைக்கப்படும்.

இன்னும் ஸ்ரீ ராமனனவன், கடலையடைக்கும்படி சுப்முகூர்த்தத்திலே, தனது கண்ணுகிய தாமரைமலர்சாத்த மகிழ்ந்தருளிய சிவபெருமானது மூத்த திருக்குமாரராகிய விக்கினேசுரக்கடவுளை விக்கினங்கள் சிறிதுமணுகாதபடி தியானித்து, "எம்பெருமானே, திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது தம்மை நினையாமையான், மத்தை யறுத்து விழுத்தி யாலகாலத்தைப் பிறப்பித்து வருத்தியதுபோல் வருத்தாது அடியேனுக் கனுக்கிரகிக்க வேண்டும்" என்றுபிரார்த்தித்துத் தன்கைகளாலொன்பது கற்களை முதற்போட்டனன். அதுவே நவபாஷாணமாகும். பின்பு, நளன்வகுத்த சிங்காசனத்திலெழுந்தருளித் தானிருந்து ஐந்து தினங்களிலே இலங்கைமுடிவாகக் குரக்குப்படைகளினாற் கடலையடைப்பித்தனன்.

கிழக்கே தேவிபுரமும், மேற்கே தருப்பசயனமும், தெற்குநோக்கிச் செல்லுமணையினடிப்பாகத்திலுள்ளன. எவரொருவர் இவ்விரண்டிடத்தும் ஸ்நானஞ்செய்து ஸ்ரீ ராமனைவணங்குவாரோ அவர் நினைக்கு மெக்காரியமுஞ் சித்தியாகும். சேதுயாத்திரைசெய்யவிரும்புவோர் முதலில் சக்கரதீர்த்தக்கரையிலே சங்கற்பித்துத் தீர்த்தமாடி க்ஷேத்திரபிண்டமிட்டுத் தருப்பசயனத்தினு மூழ்கி, ஸ்ரீ ராமனைவணங்கிப் பின்பு முறையே மற்றையதீர்த்தங்களினுஞ் சென்றுடுக. இங்ஙனஞ் செய்பவர் இலக்கமெழுவகைப்பிறப்பினுஞ் செய்த பாவங்கணீங்கிப் பரபோகமடைவர், எக்காலமும் நரகவேதனையடையார். ஆதலால், தரு

மபுட்கரணிக்கு நிகராகிய தீர்த்தம் பிறிதில்லை. தேவகங்கைமுதலிய தீர்த்தங்களிதனது பதினாறிலொருபாகத்துக்கு மிணையாகா. இதுவே சக்கரதீர்த்தமகிமை.

* இராவணனுமிராகவனையெண்ணியீருதலை † நிலையா
யிராவணங்கின்மணவாளனீனிரண்டுமருபபுடைய
‡ யிராவணனுந்தொழுஞ்சரணத்தெழுந்துகளாற்சுசியாகி
° யிராவணனைத்தெறுஞ்சேதுவிதன்பொருட்டிப்பணிவென்றும்

* இராவணன்-கருநிறமுடையராமன்.
† நிலையாயிராவணங்கு-இலக்குமி.
‡ இராவணன்-இந்திரன்.
° இராவணன்-இராக்கதன்.

* கோதவந்தீர்முத்திநிலக்குமியாகிக்குழைக்கொம்பர்ப்
பாதவம்போற்குளிர்கவிகைப் † பத்திரதப்பெயர்வேந்தன்
மாதவமாமகன்கொடியாய்வளர்சீதைமனக்கமலக்
காதலனையமர்சேதுவதன்பொருட்டிப்பணிவென்றும்.

* கோது அவம் தீர்-கேடாகியகுற்றமில்லாத
† பத்திரதப்பெயர்வேந்த்ன்-தசரதன்.

ஓதாவிளைவிருமந்திரமார்கலியூடாரணையைவணங்கினர்போதுக வேதாளவரதமென்றறைநீரினிவேறுரொருவர்விளம்பியநீள்கதை யீதாதரமொடியம்பியநீர்மையர்யாரேமகிழ்வுறவுண்டிடுபொன்மையர், காதாலவரவர்பண்டையதீவினைகாணாரிறைகழல்கண்டுறைவார்களே.

தேவிபுரச்சருக்க முற்றிற்று

---

## வேதாளவரதச்சருக்கம்

—— :0: ——

சூதமகாமுனிவர் இவ்வாறு சொல்லக்கேட்ட முனிவர்கள், "வியாதமாணவக! தேவரீரருளிய திவ்வியாவமுதசரித்திரஞ் சிறந்தசெவிகளாலருந்தியுந் தெவிட்டவில்லை. இன்னுந்தேவரீரது திருவடிகளையடைந்தவடியேமகிழுமாறு சக்கரதீர்த்தத்தின் றென்பாலிலுள்ள வேதாளவரததீர்த்தமகிமைகளையு மதற்கப்பெயர்வந்தவரவையுந்திருவாய்மலர்ந்தருளுக" வென்று வணங்க, சூதமுனிவர் சொல்லுவார்.

முனிவீர்காள்! இச்சரித்திரஞ் சிவபெருமானுமாதேவியாருக்கு அந்தப்புரத்தி லருளியது. கேட்டமடவியர்கருத்தையு முருகச்செய்வது. முற்காலத்திலே திடசித்தபத்திவைராக்கியமுடைய காலவமுனிவரானவர், புல்லாரணியத்திலே பர்ணசாலையொன்றமைத்துச் சிவத்தியானபரரா யருந்தவமிழைத்தனர். அவருக்கு இலக்குமியும் விரும்பும்பேரழகுவாய்ந்த காந்திமதியென்னும் பேரையுடைய வொருபுத்திரியிருந்தனள். அவள் தந்தையாரது தவத்துக்கின்றியமையாத மலர் தருப்பை சமித்து புலி முதலியவற்றைத் தேடி வந்து பக்குவப்படுத்தித் தினந்தோறுங் கொடுப்பவள். ஒருநாள் நெடுந்தூரஞ்சென்று மலர்பறித்துச் சமிதையொடிக்கும்பொருட்டுச் செல்லவும், வித்தியாதரர் குமாரர்களாகிய சுதரிசனன் சுகன்னனென்னுமிருவரும் பொன்விமானத்தேறி யாகாயவழியாகச்செல்லும்போது காந்திமதியினது பேரழகைக் கண்டுமயங்கினர். அவருள் மூத்தவனாகிய சுதரிசனன் மதனபாணத்தால் வருந்திக் காந்திமதியிடத்துப் பெருமோகியாய்ப் பூமியிலிறங்கித் தனியேசென்று கண்டு “பெண்ணே! நீயார்? யாருடைய புத்திரி? உன்பேரழகாகிய நெருப்பினாலெனது மனமாகிய வெண்ணெயுருகிப்பெருகியது. எனது விகாராக்கினியை யுனது கூந்தலிலணிந்த மலர்த்தேன்மழையா லவிக்குதி. நானோ சாதியில் வித்தியாதரன். என்பெயர் சுதரிசனன். விஞ்சையராசகுமாரன். ஆதலினால் துளைக்காதமுத்துப்போன்ற நங்காய் என்னுடன் கலக்குதியேல் பேரின்பமுண்டாகும். என்னை வருத்தியமன்மதனை நினது கடைக்கண்வாளினால் வெட்டி வெற்றிதருகுவை” என்று பலகாலுமிரந்துவேண்டக் காந்திமதியானவள் சொல்லுவாள்.

“வாராய் சுதரிசனனே! யான் வேதவித்தகராகிய காலவமுனிவருடைய மகள். என்பெயர் காந்திமதி. என் தந்தைசெய்யுந்தவத்துக்கு இன்றியமையா வுபகரணங்களுதவித் தொண்டுசெய்வேன். சூரியனுதித்து ஒருயாமமாயிற்று. இனி இங்குச் சிறிதுந் தாழ்க்கேன். தந்தைமுனியாமுன்னம் விரைந்துசெல்லுவேன். பெண்பேதையர்களுக்குத் தந்தைதாயரது பற்றுக்கோடன்றிப் பிறிதில்லை. என்னைப்பெற விருப்பமுள்ளதே லென்றந்தையினது கட்டளைப்படி பெறுகுதி” யென்று கூறிப்போந்தாள்.

சுதரிசனனானவன், தாங்கலாற்றா மயக்கமுடையவனாய்,
வலிதாக அவள் கூந்தலிற்பிடித்து இளமையாகிய அன்னப்பே
டை அதனது தூவிபிடித்தீர்த்துச் செல்லும்வேடன்போல
இழுத்துச்சென்றான். காந்திமதியுங் கவைத்தமுட்களிற் றோ-
கைதுவக்குண்டமஞ்ஞைபோல மயிர்பிடித்திழுக்கப்பட்டுவருந்
தி எனக்குமிப்படிவந்ததேயென் றிராவணன் கைப்பட்ட சீதை
போற் கலங்கி "என்பிதாவே, சுதரிசனனாகிய விஞ்சையன்
எனது கூந்தலைப்பிடித்திழுத்துச் செல்கின்றானென்னை யிவ்விட
த்துங்காக்கவேண்டுமையனே" யென்று கதறினள். காலவமகாமு
னிவரதுகேட்டுப்பலமுனிவரர் சூழவிரைந்து சென்று கண்டு மி
க்கோபித்து, "விஞ்சையரின் மிக இழிந்தவனே, வேதநீதிவ
ழுவினை, நிணங்களையுண்டு செருக்கும் வேதாளராக்கதர்கள் செ
ய்யு மிழில்தொழில்செய்தனை, ஆதலால் வெறுக்கத்தக்க பல
துன்பங்களையுடைய மானுடசன்மமாகப்பிறந்து நெடுநாளுழ
ன்று பின்பு வேதாளவடிவாகுதி. உனது இழிதொழிலைக் கண்
டும் விலக்காத உன் தம்பி மனுடசனன்மமளவேபெறுக" என்
றுசபித்து, "விக்கினத்துக்கொதுக முனிவரைக்காணில் இச்சா
ப நீங்கும்" என்று நிவாரணமுங்கூறி வருந்தியமகளையுமழைத்து
க்கொண்டு முனிவரோடு திரும்பிவந்து முன்போலத் தவமிரு
ந்தனர்.

சுதரிசனன் தன்றம்பியுந்தானும் முனிவரிட்டசாபத்துக்
கச்சமுற்று வருந்தி, யமுனாநதிக்கரையில் கோவிந்தசாமியென்
னும் வேதியனுக்குப்புத்திரராய் விசயதத்தன் அசோகதத்தன்
என்னும்பெயருடன் முறையே பிறந்துவளர்ந்தனர். இவர்கள்
பிறந்தமையால் கோவிந்தசாமியும், பன்னிரண்டுவருடம்மழை
யின்மையாக, அதனால் வறுமையுற்று மனைமக்களுடன்வருந்தி
வீடுவிட்டு யாசித்துத் திரிந்து காசிக்குப்போய் ஆலமரநீழலி
லருந்தவமிழைத்த கபாலமாலாபரணனென்னும் முனிவரைவ
ணங்கிக் குறையிரந்தனன். முனிவருஞ் சிறிதுமனமிரங்கி வே
தியனே! உனது மூத்தமகனாகிய விசயதத்தனாலுனக்கு நிகழ்ந்
தகேடு இது, அவனைநீக்கின் சிறிது நன்மையடைவையென்று
சொல்லக் கோவிந்தசாமியும் புத்திரசோகத்தால் மிகவருந்தி
ச் சிறிதிடஞ்செல்லச்சூரியன் அஸ்தமயனமாயினன். அதுகண்டு
நீர்க்கரையையடைந்து நித்தியகருமங்களைமுடித்து நெடுந்தூரம்
நடந்த வருத்தத்தால் ஆலமரத்தருகே பாழுங்கோயிலிருக்கக்

கண்டு, அசோகதத்தனையுந் தாயையு மோரிடத்தில் நித்திரை செய்யவிட்டுத்தானும் விசயதத்தனும் அடுத்த பிறிதோரிடத்து வஸ்திரத்தை விரித்து நித்திரை செய்தனர். நெடுந்தூரம் நடந்தமையாலும், முன்வினையாலும், விசயதத்தனுக்கு வெப்பு குளிர் வந்து வருத்த அவன் தன்தாதையை யணைந்துந் துணிகளாற் போர்த்துந் தீராமையால் மிகவும் வருந்தி "என்னையனே! எங்குந்தேடியுந் தீக்கொணர்ந்து குளிர் காயச் செய்குவை" யென்றழுதனன். கோவிந்தசாமியுஞ் சிறிதிடஞ் சென்று தீக்கிடையாமையால் "மகனே! இந்நகரத்தாரனைவரும் நித்திரையாயினர். நெருப்பு இவ்விடத்திற் கிடையாது" என்று சொல்லவும், விசயதத்தனும் மனம் வருந்தி, "ஐயனே! ஏன் பொய் சொல்கின்றனை, அதோ பெரு நெருப்பெரிகிறது; அதிற் சிறிதெடுத்துவா" என்று பதறியழுதனன். அது கேட்ட தந்தையும் "மைந்தனே! நெருப்பெரியுமிடமோ அதி தூரம்; அது சுடலை; அந்நெருப்புப் பிணத்தைப் பற்றி யெரிகிறது; அந்நெருப்பைத் தீண்டின் நம தாயுள் குறையுமென்றஞ்சி அதனை எடாது விட்டேன்" என்றனன். விசயதத்தனுந் தந்தையைக் கோபித்து நோக்கி "என் பிதாவே! அத்தீ சுமத்தீயாயினும் ஓமத்தீயென்று கருதி நீ கொணராதொழியின், நான் உயிர் விடுகின்றேன்" என்று மிகப்புலம்பினன்.

புத்திர வாஞ்சையின்மிக்க கோவிந்தசாமியு மத்தீயிற் சிறிதெடுத்து வருமாறு செல்ல, விசயதத்தனும் புறப்பட்டு அவனை அறியாமல் அவன் பின்னே போய்ச் சுடுகாட்டையடைந்து, அந்நெருப்பிற் றனதுடலைக் காய்ச்சிச் சிறிது சுகமடைந்து, பிணத்தினது மண்டையிற் பற்றி யெரியு மக்கினியானது அடுக்குச் செந்தாமரைபோல அதிநூதனமா யெரியக்கண்டு, "ஐயனே! இந்த அக்கினி யிவ்விசித்திரமா யெரிதற்குக் காரணம்யாதோ சொல்லுதி" யென்ன, தந்தையும் "மைந்தனே! மண்டையினுள் செம்மை வெண்மை நிறங்களையுடைய வசை கிசக மென்று இருவகைப் பொருள்களுள்ளன. அவற்றிற்பற்றியெரியும்போது அவ்வக்கினிசெந்தாமரை மலர் போலத் தோன்றுகின்றது" என்றனன். அது கேட்ட விசயதத்தனும் வியப்படைந்து, குளிர்காய்பவன்போல அதன் சமீபத்திற் சென்று, பக்கத்திற் கிடந்த கட்டை யொன்றினா லதன் றலையில மோத, அதனால் அந்தப் பிணத்தினது தலைவெடிக்கத் தசைசகதி யிவனது முகத்திற் சிறிது பட்டது. அதனைத் தனது நாவை வளைத்து நக்கிய பொழுது அதுமிகவுஞ் சுவையுடையதாயத்தோன்

ற, அத்தலையோடு முழுவதையு மெடுத் துடைத்து உண்டவுடனே, ஆகாய மளவுமுட்ட நீலமலைபோன்ற தேகமும் வக்கிரதந்தங்களும் பெருத்ததாளும் உரத்த தோளும் அகன்ற மார்பும் இருண்ட கண்ணும் சிவந்த மயிருமுடைய வேதாளவடிவங்கொண்டு, இடிபோல ஆரவாரித்து அப்பிணத்தசை முழுவதையு முண்டு செருக்கித் தந்தையையுந் தின்னுமாறு நெருங்க, "அவனைத் தொடாதே" யென்று பிறந்த அசரீரிவாக்கைக் கேட்டு, சத்தமிட்டு ஆகாசத்திலே தாவி அந்த மயானத்திலே வசிக்கும் பூதவேதாளங்களுக்கரசனாகிய நராந்தி பூடணனென்கிற வேதாளத்தோடு சேர்ந்து தான் கபாலமுடைத்துண்ட கதையைச் சொல்லிக் கபால போடனென்னும் பெயர் பெற்று அவனது சேனாபதியாகி யங்கிருந்தனன். சித்திரசேனனாகிய நராந்தி பூடணனிறந்தபின்னர், அவன் அவனரசில் முழுதையும் பெற்று அங்கே மகிழ்ந் திருந்தனன்.

மயானத்தில் நின்ற கோவிந்தசாமியும் தனது மகன் செய்கையைக் கண்டதிசய மடைந்து, அச்சமுற்று, அங்குநின்றும் நீங்கி, மனைவியும் மகனும் நித்திரை செய்யும் பாழுங்கோயிலை யடைந்து; அவர்களை யெழுப்பி நடந்த சங்கதிகளைச் சொல்லி இப்படி வருதற்கு என்ன கொடுமை செய்தோம் என்றிரங்கிப் பெருந் துக்கங் கொண்டாடி விடிந்த பின்பு அக்காசிப்பட்டினத்தில் யாசகத்துக்குச் செல்லுமிடத்து, சமுத்திரதத்த னென்னும் வணிகனைக் கண்டு, தங்கள் குறைவுகளனைத்தையுஞ் சொல்ல, அவன் கேட்டு "ஐயனே! நீ உனது மனைவி மகனோடு எனது பொக்கிஷசாலைக் கதிபதியாயிருந்து எனது செல்வமுழுவதையும் பெருக்கி வருகுவை" யென்று உத்தரவு கொடுத்திருக்க, கோவிந்தசாமியு மவ்விருவரோடும் காலகதியால் நன்மை யடைந்திருந்தனன்.

இளையகுமாரனாகிய அசோகதத்தன் தனது மரபுக்கேற்ற வேதாகம புராண சாஸ்திராதிகளும் க்ஷத்திரிய தன்மத்துக்கியைந்த தனுர்வேத மல்யுத்தமாதிய சகலகலைகளுங் கற்றுணர்ந்து வெகு சமர்த்தனாய் இருந்தனன். அக்காசிப்பட்டினத்தை யரசாளும் பிரதாபமகுட வேந்தன் இவ்வசோகதத்தனது சாமர்த்தியத்தைக் கேள்வியுற்று, அவனை யழைத்து நண்புற்றிருக்குங்காலத்துத், தென்றேசத்திலிருந்து வந்த ஓர் மல்லன் அவ்வரசனை யடைந்து, "அரச! எனக்கு நிகரான மல்லர் உலகத்திலில்லை நினது மல்லர்களுளரேல் என்னுடன் மல்யுத்த

ஞ்செய்யத் தக்க வீரருளரேல் விடுகருதி" யென்றனன். அது
கேட்ட வரசன் தன்னிடத்துள்ள மல்லர்களை யேவ அவர்க
ளிவ்வனைக் கண்டமாத்திரத்தே அஞ்சிப் பின்னிட்டனர். அரச
னும் மிக நாணி அசோகதத்தனை நோக்கி "நீ இவனை வெல்லு
வையா?" என்றனன். உடனே அசோகதத்தனும் விரைந்தெ
ழுந்து, ஆண்டு வந்த மல்லனது ஆற்றலு மவமதிப்பு மகக்
களிப்பும் அவனுயிரோ டொருங்குண்பனென்று அவனை யெ
திர்த்துக் காற்றெதிர்ந்த கறங்குப்போலச் சுற்றிக் கண்டவர்கள்
இரண்டாமடி வேண்டியதில்லை யென்று கூறுமாறு கண்கள்
கலங்கும்படி ஓரடி யடித்தனன். அவ்வடியோடு மல்லன் பஞ்
சப்பொறிகளுங் கலங்கி வீழ்ந்திறந்தனன். அரசனும் விசயதத்
தன் செய்த வெற்றித்திறத்தை மகிழ்ந்து நோக்கி, இது தேவர்
களாலுஞ் செயத்தக்கதன்றென்று வியந்து, அவனோடு பிரியா
நண்பு கொண்டு சில நாளிருந்து, பின்னொரு தினம் மாலைக்கா
லத்திலே இருவருங் குதிரை மீதிவர்ந்து மயூரகதியாகக் காடு
களிலுலாப்போய் வரும்போது, அந்தவனத்தி லோர்திருடன்
அரசன்றாணையால் கழுவேற்றப் பட்டு நான்கு தினம் வரை
யிலு மிறக்காமல் தண்ணீர்த் தாகமுடையனாய் நாவரண்டு, குதி
ரைமேல் வருமரசனை நோக்கி "அரசனே! அற்ப குற்றத்திற்
காக என் பகைவனதேவலால் இரக்க மில்லாத அரசன் என
னைக்கழுவேற்ற விதித்தனன். கழுவேற்றியும் நான்கு தினங்கள்
சென்றன. யானோ பெரும்பாவியாதலால் என்னுயிர் இன்னும்
போகவில்லை நாவரண்டு தண்ணீர்த் தாகமோ அதிகமாயிருக்
கிறது எனது தாகத்தைத் தீர்த்தால் பெரும் புண்ணிய மடை
வை" என்றனன். அரசனு மது கேட்டு அசோகதத்தனை நோக்கி
"நீ இவனது தாகத்தைத் தீர்க்குதி" யென்றேவிச் சென்றனன்.
அசோகதத்தனும் தன் பெயர்ப் பொருளுக் கியைய ஒருபாத்தி
ரத்திற் றண்ணீர் மொண்டு கொண்டு கொடுக்கும்படி வருமி
டத்து அக்கழுமரத்தடியிலே பேரழகு வாய்ந்தவோர் பெண்
படுத்திருக்கக்கண்டு "பெண்ணே! நீ யார்? பசாசுகள் வசிக்கு
மிசசுடலையின்கண் நீ வருதற்குக் காரண மென்ன?" என்றன
ன். அது கேட்டுக் கழுவடியிற் கிடந்த பெண் சொல்லுவாள்
"மகாரூபபுண்ணிய புருடனே! இக்கழுவிலிருப்பவன் எனது
நாயகன். கொடையிலான்போல விரைவினுயிர் விடுகின்றிலன்,
இன்னும் சிறிது நேரத்திலிறப்பான் போலும். இறந்தபி
ன் இவனோடுடன் கட்டை யேறியென்னுயிர் விடுதற்கு இங்கு
வந்து கிடக்கின்றேன். இவனது தண்ணீர்த் தாகத்தை யறிந்

னும், கழுவிலேற்றப்பட்டு அண்ணாந்த வாயுடையனாதலால் தண்ணீர் கொடுக்க வெட்டாமையின் மிக மனம்வருந்துகின்றேன் பெண் பேதை யென்செய்வேன்" என்றழுதாள். அது கேட்டவசோகதத்தன் இது மெய்யாகுமென்றுன்னி "தாயே! எனக்கு மிஃதெட்டாது என்றோளில் நீயே ஏறிநின்று கொண்டு உனது நாயகற் கித்தண்ணீரைக் கொடுத்துத் தாகமாற்றுதி" யென்று தன்றோளிலேற்றி, அவள் வீழாவண்ணம் அவளுடைய இருகால்களையுந் தன் கைகளாற் பிடித்து அவள் குறி தனக்குத் தோன்றுமென்னு நாணத்தால் நிமிர்ந்து நோக்காது தலைதாழ்த்து நின்றான். தோளிலேறித் தண்ணீர் கொடுக்கும்படி நின்ற பேய்மகள் கழுவிலிருந்தவனது கழுத்தைக்கடித்து உதிரத்தைக் குடிப்ப, அதிற் சிறிது திவலை தன் றோண்மீது வீழக்கண்டு இஃதென்னோ வென்று நிமிர்ந்து பார்த்துழி, அவள் அவனது இரத்தத்தைக் குடிப்பதைக் கண்டு அவளது இரண்டு கால்களையு மிறுகப்பிடித்துக் கீழே தள்ளி விழுத்தும்பொழுது, இவன் கைக்குளகப்பட்ட ஒரு காற்சிலம்பை விட்டு அவள் மேலே பறந்து போயினாள். அசோகதத்தனும் அழகிய அந்த இரத்தினச் சிலம்பைக் கொண்டு காசியரசன் பக்கலின் வந்து நடந்த சங்கதிக ளெல்லாவற்றையுஞ் சொல்லிச் சிலம்பையுங் கொடுத்தனன். அரசனும் அசோகதத்தனது வீரபராக்கிரமத் துணிவை மிகவியந்து பாராட்டி, தன் மகள் மதனலேகையை அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்து அரசுரிமைப் பங்கு மீந்திருந்தனன். அரசன் அக்காலத்துத் தான் கொண்ட ஒற்றைச் சிலம்பிற்கு இணைச் சிலம்பு செய்ய இயன்றமட்டும் பார்த்து முடியாமையால் இதனிணைச் சிலம்பு கிடைக்குமோ என்று தன் மனைவியோடு பேசி வருத்தமுற்றிருப்பதை, அசோகதத்தன் குறிப்பாலுணர்ந்து மாமனது மனக்கவலையை யொழிக்குமாறு நினைத்து, இதனை யாம் பெற்றது சுடுகாட்டினன்றோ இன்னும் யாமங்குச் சென்று காத்துக் கிடப்பின் அங்கே வேதாளம் பசாசு முதலியவை பிணந்தின்னுமாறு வரும் அவற்றொடிவ்வொற்றைச் சிலம்பிழந்த பேய் மகளும் வருவள் அப்போதிதனிணைச் சிலம்பையும் பெறுவம் அல்லது அரிய மந்திரங்களையாயினு முபாசித்து அப்பேய் மகளை யழைத்து இணைச்சிலம்பு பெறுவம் "முயற்சியுடையா னெவற்றையும் வெல்வன்" இடை விடா முயற்சி செய்யின் எளியோரு மரியன செய்து முடிப்பரல்லவா; திடசித்த வீரரைப் பேய் பூத வேதாளங்கள் யாது செய்யும் எ

ன்றினனோரன்ன பலவெண்ணங்களோடமஞ் சென்று சிறிது நேரங் காத்திருந்துங் காணாமையான், மந்திரோபாசனை செய்திவ்வூனை யுண்மினென்று ஆகருஷித்தனன். அப்பொழுது பேய் பூதவேதாளங்களோடு வித்துத்துக்கேசியென்னும் அப்பேய் மகளும் வந்தனள் அவைகளை யசோகதத்தன் கண்டு மற்றப் பேய் பூதவேதாளங்களைத் தான் படைத்த உணவுகளிற் சிறிதைக் கொடுத்து உச்சாடனஞ் செய்து, வித்துத்துக்கேசியை மாத்திரம் தம்பித்துப் படைத்த மாமிசங்களை யதிகமாக வுண்ணக்கொடுத்து "மாதே அன்று கழுமரத்தடியிற் பறிகொடுத்த உன்னொருகாற் சிலம் பென்னிடத்திருக்கிறது, அதற்கிணையாக உன் மற்றைக்காற் சிலம்பையுங் கொடுக்குதி. அதனாலெனக்கு மிக வெற்றி யுண்டாகும்" என்று பிரார்த்தித்தனன். அது கேட்ட வவ்விராக்கதப்பெண் மிக மகிழ்ந்து, "என்னொரு காற்சிலம்பைக் கொண்ட, தைரிய சாலி நீ தானா! மானுடர்கள் எங்களைக் கண்டாலஞ்சி யோட்டெடுப்பதன்றி முன்னில்லார்கள் நீயோ சிறிது மச்சமின்றி யென் முன்னின்றிவ்வாறு சொன்னமையால் இக்காற் சிலம்பன்றி யிப்பொற்றாமரைமலரையுமென்மகள்வித்துத்துப்பிரபையையுந் தருவல் கொள்ளுதி" யென்று கொடுத்துச் சென்றனள். அப்போது அவளிடம் அசோகதத்தனு மம்மூன்றையும் பெற்று மீண்டு வந்து காசியரசனுக்குக் காட்டிச் சிலம்பை முன்பாக வைத்து நடந்த சங்கதிக ளனைத்தையுங் கூறினன். அரசனு மது கேட்டு "உலகத்தில் யாரிப்படிச் செய்வர். நீ மிகவுந் தைரிய சாலி" என்று பலவாறு புகழ்ந்து வேண்டியவேண்டியாங்குபகரித்து விடுத்தனன். அசோகதத்தனும் வித்துத்துப்பிரபையோடு தன் மாளிகையிற் சென்று தந்தை தாயரை வணங்கி யாசீர்வதிக்கப் பெற்றுத் தனது மூத்த மனைவியாகிய மதனலேகையினது வணக்கத்தையும் பெற்று மகிழ்வுற்றிருக்குங் காலத்து இளைய மனைவியாகிய வித்துத்துப்பிரபையை நோக்கி "நங்காய்! இப்பொற்றாமரை மலரெங்குளது கூறுதி" யென்றனன். வித்துத்துப்பிரபையு மது கேட்டு "என் பிராண நாயகா! கபால போடகனென்னும் வேதாள மன்னனுக் கங்கேயோர் பொற்றாமரை வாவியுளது என்றந்தையானவர் அதில் ஸ்நானம் பண்ணியபொழுது இம்மலரைக் கொய்து கொணர்ந்து என்றாய்க்குக் கொடுத்தனரென்றாள். அது கேட்ட அசோகதத்தன் "நங்கையே, சில பொற்றாமரை மலர் கொணரும் பொருட்டு நாமிருவரு மாங்குச் செல்லுதும் வருதி," யென்று

அவளோடும் புறப்பட்டு அவள் வழிகாட்டச் சென்று அவ்வாவிக் கரையை யடைந்து கபால போடனதாணைக்கஞ்சி வண்டுகளும் விழாத பல மலர்களைக் கண்டு களித்து விரைந்தனுள்ளிறங்கிப் பல மலர்களைக் கொய்யக் காவலாய் நின்ற பல வேதாளங்கள் ஆரவாரித்து வந்து தடுக்க, அவற்றை யெல்லாங் கொன்றனன். தப்பிய சில வேதாளங்க ளோடித் தங்களரசனாகிய கபாலபோடனுக்கு நிகழ்ந்ததைச் சொல்ல, அவனும் மிகக்கோபித்துப் பல சேனைவெள்ளங் களொடெழுந்து வந்து யுத்தஞ்செய்ய அசோகதத்தன் அவர்களனைவரையும் வதைத்துத் தலைவனாகிய கபாலபோடனையுங் கொல்ல முயலுமிடத்து, பேரொளியுடைய விமானத்திலே விக்கினத்துக் கௌதுகமுனிவரானவர் எழுந்தருளி வந்து சில இனிய மொழிகளைச் சொல்லி "அசோகதத்தா! இவனுன்றமையன் இவனை நீ கொல்லற்க" என்று காலவமுனிவரிட்ட சாபநீக்கம் அற்றைத் தினமாதலாற் றடுத்தனர். அவ்வோசை கேட்ட மாத்திரத்தே அசோகதத்தன் ஆகாயத்தை நோக்கி அம்முனிவரைக்கண்டு வணங்கித் தன் சாப நீங்கிப் பழைய வடிவடைந்து நின்றனன். அவனை யம்முனிவ ராசீர்வதித்து, "சுகன்ன! வருகுதி, இவன் உன்றமையன் காலவமுனிவரிட்ட சாபத்தால் வேதாள வடிவாயினன். இவனவரது மகளைத் தீண்டுகின்றுழி நீ யதனைத் தடுத்திலையென இட்டவனது சாபம் என்னைக் கண்டவுடன் விமோசனமாயிற்று. இவனது சாப நீங்கும் வழி கூறுமையா லிவனை விடு நீயுன் பதியினை யடைகுதி" யென்று கூறினர். அசோகதத்தனும் தன்னை யேற்றும்படி வந்த விமானத்திலேறித் தனது சாபந்தீர்த்த அம்முனிவரை வணங்கி "தலைவரே! என்னுடன் பிறந்த வென்றமைய னிந்த இழிவாகிய வேதாள வடிவோ டுழன்று திரிய யான் சுகமடைய மாட்டேன். தேவரீர் இது நீங்கு முபாயத்தைக் கட்டளை யிடுக" என்று இரந்து வேண்டினன். அது கேட்ட விக்கினத்துக் கௌதுகமுனிவர் "இக்கொடிய சாபத்தை யார் நீக்குவர். ஆயினும், ஒன்று சொல்லக் கேட்குதி. முன்னொரு ஞான்று பிரமன் சனகாதி முனிவருக் குபதேசித்த விசேட முடைய தீர்த்த மொன்றுளது. அது சக்கர தீர்த்தத்துக்குத் தென்பாலில் சமுத்திரக் கரையில் சகல தீர்த்தங்களுமோர் வடிவெடுத்தாற் போன்றுளது. அதனைக் கண்டமாத்திரத்தே வினைகளெல்லா மோட்டெடுக்கும். அதன் நாமத்தை யுச்சரித்தவர்களு மதில ஸநானஞ் செய்தவர்களு மடையும் பயன் யான் சொல்லுமளவன்று. அந்த விசிட்ட தீர்த்தத்தி லுனது முத்தோனை யமிழ

தந்துக் கொண்டு போய் ஸ்நானஞ் செய்விப்பையேல் இக்கொடிய சாபம் நீங்கும்" என்க் கூறினர். அதுகேட்ட சுதன்ன னென்னைத் தன்னுடைய மூத்தோனைப் பிடித்திழுத்துக் கொண்டு அம்முனிவருடன் சென்று கந்தமாதன மலைச்சாரலிலுள்ள சக்கரதீர்த்தத்தின் தென்பாலில் சமுத்திரதீரத்திலிருக்குந் திவ்விய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்யும்படி சொல்லினன். அப்பொழுது காற்று வேகத்தால் அத்தீர்த்தத்தின் திவலை ஒன்று சரீரத்திற் றெறிக்க வுடனே விசயதத்தனும் சாபத்தாற் கிடைத்த வேதாள வடிவு நீங்கி வேற்றிய வடிவடைந்து, பின் விதிப்படி சங்கற்பித்து அன்போடத் தடாகத்தில் மூழ்கி மானுடவடிவொழிந்து சுதரிசனனாகிய விஞ்சைய வடிவெடுத்து அத்தீர்த்தத்தையும் முனிவரையும் வணங்கி விடை பெற்றுத் தேவரம்பையர்கள் வாழ்த்தத் தன்றம்பியோடு பழைய விஞ்சைய பதவியடைந்தனன். முனிவர்காள்! தன்றிவலையினால் வேதாள வடிவை யொழித்தலின் அத்தீர்த்தத்திற்கு வேதாளவரததீர்த்தமென்றுபெயருண்டாயிற்று. இதற்கொப்புயர்வாகிய தீர்த்த மெங்குமில்லை. இந்த வேதாளவரத தீர்த்தத்திலே விதிப்படி சங்கற்பித்து ஸ்நானஞ்செய்து பிதிரர்பொருட்டுச் சிராத்தாதி பிண்டதிலோதகர்ந்தமியனறன செய்க. இன்னுமிதில் ஸ்நானஞ் செய்தவர்களையும் இச்சரித்திரத்தையன்போடு வாசிப்பவர் கேட்பவர்களையும் வேதாள பசாசாதிகள்தீண்டாதோடும் அவர்களுக்குப் பிறவியுமில்லையென்றருளினர்.

"நியமநலங்கொடுபுரிகுகதென்புலமாள்வோர்கணிலவுகடன்றனைப்பினையதடந்தனிலோர்ஞான, மயமுணரந்தணிரறிதிர்விளங்கிடவேதாளவரதமெனும்பெயர்வரவுமொழிந்தனமாறுத, நயமிகுநண்பொடுபகரு மிநன்கதைநாவாரநவிலவிரும்பினர்செவியுறுமன்பினர்நாடோறும், பயமருள்வஞ்சகவினையுமழுந்திலாபார்மாதர்பணைமுலையுண்கிலர்பரமபதந்தனில்வாழ்வாரே.

வேதாளவரதச்சருக்க முற்றிற்று.

---

## பாவநாசச்சருக்கம்.

—:0:—

முனிவிர்காள்! விரும்பிக்கேண்மின். வேதாளவரததீர்த்தத்தில் விதிப்படி முழுகினோர் பின்முறையே முழுகத்தக்கது பாவநாச தீர்த்தமாகும். அது கந்தமாதனவரைச்சாரி

ல் தென்பக்கத்திலுள்ள கடற்சாரலிலுள்ளது. அந்த மலைச் சாரிலே பல்லாயிர கோடி வாவிகளும் நதிகளுமுள்ளன; வெதிரிகாச்சிரமம் வேதாரணிய மாதியாம் க்ஷேத்திரங்களுமதனை விரும்பும். தேவர்களும், அட்டவசுக்களும், வசிட்டர் முதலிய மகாவிருடிகளும், சித்தா சாரணர்களும், எண்கோடி பிதிரர்களும், விஞ்சையர்களும், கின்னரர்களும், சுஜோதிபர்களும், அட்டபாலகர்களும், நவக்கிரகங்களும், பிரமவிட்டுணுக்களும், விநாயகரும், சுப்பிரமணியரும், சிவபெருமானும், தங்கட்டங்கள் தேவியர்களோடும் சத்திமார்களோடும் அதனைப் பரிசுத்தத்தான மென்றெண்ணி மிக்க விருப்பத்தோடங்கு எப்பொழுதும் இருப்பார்கள். சிவார்ச்சனைக்குரியர்களும் நடனமாதர்களுந் தரிசனையின் பொருட்டங்கிருப்பர். இக்கந்தமாதன மலையைத் தரிசிப்பவர்கள் சனன மரண வேதனையின்றிப் படிந்த் பேராநந்தமடைவர். இம்மலையிற் காற்றுப்படினும் புணரத்தகாத மாதர் கோடிபேரைப் புணர்ந்த பாபமும், கோடிபிரமகத்தியும் நீங்கும். இந்தமலை முன்பு சமுத்திரத்தின் மத்தியினுள்ளது. ஸ்ரீ. ராமனதேவலிஞல கடலடைக்கும்பொழுது நள னிதனையே மூலமாகக்கொண்டு கட்டி முடித்தனன். அம்மலை மீதேறுவோர் "எளிய மானுடப் புழுக்களாகிய நாம் நின்பெருமையைச் சிறிதும் மதியாதுநின்றலையிலெங்கால் மிதித்தேறுந் தீவினையைப் பொறுத்து நின்னிடத்தென்றும் பிரியாது வசிக்கும் பரம் பொருளின்றிருவருளைத்தருகுதி" என்று மிருதுவாகக் கால்வைத்தேறியங்குள்ள தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து தென்புலத்தாரைக் குறித்துக் கடுகளவு பிண்ட மிடின், அவர்வழிப் பிதிரர்பேராநந்த மடைவர். வன்னிமரத்தளிரளவு பிண்டமிடின் நரகடைந்து வருந்தும் பிதிரர்களும சுவர்க்கலோகத்தேறி யின்புறுவர். தீவினை சிறிதுமணுகாத அம்மலைச்சாரிலே பெரும்புகழ் படைத்த பாவநாசமென்ப பெயரிய தீர்த்தமொன்றுளது. அதனை மனதிஞல நினைக்கினும் தரிசிக்கினும் தீவினைத் துன்பங்க ணீங்கும். ஸ்நானஞ்செய்யின் வைகுந்தலோகமடைவிக்கும் என்றருளிய சூதமுனிவரைநோக்கி "முனிவர் பெருமானே இதற்குப் பாவநாசம் என்பெயர்வருதற்குக்காரணம் என்னை? அதுவுமன்றியிதன் பெருமைகளென்னை? தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டும்" என்று முனிவர்பிரார்த்திக்க, சூதமுனிவர் அவற்றை முறையேகூறுவாராயினர்.

இமயமலைச்சாரலிலே பிரமவாசிரமமென்னு மிடத்தில் அந்தணர்களும் சாரணர்களும் யோகியர்களும் வாலகில்லியராதியாம் பெரியோர்களும் நான்காச்சிரமவழிநிலைகளையுடையவர்களாய்ச் சிவத்தியானபரர்களாயிருந்தனர். அங்குத் திடமதியென்னும்பெயருடைய சூத்திரனொருவன் சென்று, அவர்களை வணங்கி ஆசீர்வாதம்பெற் றவர்கள்செய்யும் யாககிரியைகளையும் வேதாத்தியயனங்களையும் நித்திய கரும வொழுக்கங்களையும சிராத்தாதிகிருத்தியங்களையும் கண்டு, தானுமவற்றைச் செய்யும்விருப்புடையனாய்ப் பலகாலுமவர்களுக்குத் தொண்டுசெய்து வருநாளி லொருநாள், வாலகில்லியராகிய முனிசிரேட்டரைவணங்கி "என்னைய! தேவரீரைச் சரணடைந்தேன் யான் சாதியிற் சூத்திரனாயினும் நீங்கள்செய்யும் யாகாதிகிருத்திய மந்திரோபாசனைகளில பெருவிருப்புடையனாயினேன் ஆதலாலவைகளையான் செய்யுமாறு தேவரீர் தயைகூரவேண்டும்" என்று வேண்டினன். அதுகேட்ட முனிவர்பெருமான் கூறுவார் "திடமதியே! நீ யிழிந்த பிறப்புடையையாதலின யாகாதி கிரியைகளைச் செய்தற் குரிமையுடையையல்லை. இந்நிலைவை யொழிக்குதி உனக்கு வேதமந்திராதிகளை யுபதேசித்தவன் புலையனாகிப் பிறிதனிலும் ஒழுக்கந் தவறியவனாவன் உனக்குச் சொல்லியவொழுக்கந்தவறாது முதலவருணத்தவர்க்குப் பணிவிடை செய்குதி" யென்றருளினர். திடமதியென்பவனு மது கேட்டுத் தன்னெண்ண முடிவுபெறாமையை நினைந்து நினைந்து பெருவியாகுலமடைந்து, தனக்குரிய சரியைத்தொழிலை டாத்துவோனாய்த் திருநந்தனவனம்வைத்தல திருக்குளங்கல்லல் விரதமநுட்டித்தல் வேள்விக்குரிய வுபகரணங்களை தேடிக் கொடுத்தல் முனிவர்களுக்குணவாகிய கனி காய கிழங்கு முதலிய தேடிக்கொடுத்தலாதி யருந்தொழில்களைச் செய்திருந்தனன். இவனிவ்வாறிருக்கின்றுழி, வேதநிலை கரை கண்டுணர்ந்த சுமதியென்னும் விப்பிரனொருவ னிவனிருக்கும பூங்காவில் வர, திடமதியென்பவனும் எழுந்து வணங்கி இனியமொழிகள் சொல்லிக் கந்தமூலபலாதிகள் கொடுத் துபசரித்தனுப்பினன் இங்ஙனம் பலமுறையுஞ் சுமதியென்பவன்வந்து நண்புகொண்டளவளாவிச் சென்று வருதலைக்கண்டு இனி யிவவேதியன நம்து சொல்லை மறுக்கானென் றெண்ணி "வேதமோதுதியே "தென்புலத்தவர் தேவர்கட்குரிய செயகடன்களுககாகிய மந்திரங்களையும மகாளயம் அட்டகை சிராத்தமாதிய வற்றைச் செய்

யும் விதிகளையும் அவ்வம்மந்திரங்களையு முள்ளபடி திருவாய்மலர்ந்தருளுக" வெனத்திடமதிவேண்டினன். சுமதியும அவனோடு கொண்ட நண்பினால் மறுக்கமாட்டா துள்ளபடி யுபதேசித்து அவனைக்கொண்டே யவைகளனைத்தையுஞ் செய்வித்து அவன்றருவனவற்றையும் பெற்றுச் சென்று வாழுநாளில், மற்றைய முனிவர்களிதனையுணர்ந்து சுமதியைத் தங்களோடுசேராவகை துறக்க அவனுஞ் சிலநாளிருந்து பெருநோய் பிடித்திறந்தனன். அவனுயிரை யமதூதுவர்கள் கொண்டுசென்று கற்பகோடிகாலம நரகத்துவீழ்த்தி வருத்தினர். பின்பு மரங் கழுதை பன்றி நாய பறவை நீசர் பரதவர் சூத்திரர் வணிகர் அரசராதிய பிறவிகளிற் பிறந்து பின் பிராமணகுலத்திற் றோன்றி யுரியகாலத்திலுபநயனஞ் செய்யப்பட்டு வேத வநுட்டானங்களைச் செய்து வருநாளில் ஒருநாள், தருப்பை கொய்யக் காட்டுக்குச் சென்றபோது அங்கே பிரமசாதிப்பேய் இவனைப் பிடிக்க அதனாலிவன் மனங்கலங்கிக் கண்கள் வட்டமிட்டு நாக்குத்தடுமாறிப் பிதற்றி நாளுக்கு நாளதிகஞ்சேட்டை யுடையனாய் றிவிழந்து மலமூத்திராதிகளைப் புசித்துத் திரியுங்காலத்தில் தந்தைதாயரதனைக்கண்டு மனமிரங்கிப் பெருங்கவலையுடையவராய்ப் பற்பல ஔஷதம் பிரயோகித்தும் மந்திரங்களுபாசித்தும் ஒன்றினாலுந் தீராமைகண்டு ஸ்தலயாத்திரை செய்யுமாறவனோடெழுந்து செலலுமிடத்து, அகஸ்திய முனிவரைக் கண்டு வணங்கித் தம் மகனை யவர் முன்பாக விட்டு, வந்த நோயைச் சொல்லி எம்பெருமானே தேவரீரையே புகலிடமென்றடைந்தேம். எமதுகுல முதல்வனாகிய விவனுக்குற்ற நோயை நீக்கிரட்சிக்கவேண்டும். எமக்குத் தேவரீருடைய தஞ்சமன்றிப் பிறிதில்லை. யாமுமெங்குலமு முய்ந்தீடேறும்பொருட்டு எமதேகபுத்திரனுக்குற்ற பசாசை யோட்டும்வழியைத் தெரிவிக்க வேண்டுமென்று பலகாலிரந்துவேண்டினர். அகஸ்தியமகாமுனிவரும் சிறிது மனமிரங்கி ஞானதிருட்டியினாற் பார்க்குமிடத் திவனது பூர்வசன்மத்தொடர்ச்சிகள் தோன்ற, அவற்றை யுணர்ந்து "இவன் முன்னொருபிறப்பில் வேதியனாயிருந்தபொழுது வேதமந்திரங்களைத் திடமதியென்னுமோர் சூத்திரனுக்குபதேசித்த கொடும்பாவத்தால் கொடிய நரகத்துன்பத்தை யடைந்து இழிந்தபல பிறவிகளையெடுத்துந் தீராமலிப்பிறவியினும் யமனால விடுக்கப்பட்ட பசாசினால் வருந்துதலை யவர்கட்குணர்த்துவார். அந்தணனே! இஃதியமனாலனுப்பப்பட்டபேய. இஃதொழியுமாறு சொலலுதும் கேட்குதி, தென் சமுத்திரக்கரையிற் சேதுவினடிவார்த்திலுள்ள கந்தமாதன மலைச்சார்பிலே பாவநாசமெனனும் மகாதீர்த

தமொன்றுளது; அதிலிவனையாடச் செய்குதி. அதனாலிவன சரீரத்துள்ள நோய்களும் பேயின் றொடர்ச்சியு மூழ்வினைப் பாவாதிகளனைத்து மறிவுகண்டகன்றவஞ்ஞானம் போலகலும். ஆதலினித்தக்கணமே நின்மைந்தனோடங்குச் சென்று மூன்றுநாளுபவசியா யத்தடாகத்தில் ஸ்நானம் செய்குதி. இதுவேயன்றி வேறுபாயமில்லையெனக்கூறினர். விருப்புடையனாகிய வேதியனுமதுகேட்டுத் தன்புத்திரனோடத் தடாகத்தையடைந்து மூன்றுநாள் மும்முறை ஸ்நானஞ்செய்விக்க அவனைத்தொடர்ந்த பேய நீங்கிற்று. பின் பேரழகுடையனாய்ப் பூரணசந்திரன்போல விளங்கிப் பெருஞ்செல்வனாய் நெடுங்கால மிவ்வுலகவின்ப மநுபவித்துப் பின் சிவபதமடைந்தனன்.

அவனிடத்தில் வேதமந்திரங்களைக்கேட்ட திட்டமதியென்பவனும் பின் சிலநாளிலிறந்து பெருநரகத்துன்பத்தை யநுபவித்து இழிந்தபிறவிகளெல்லாம் பிறந்து கழுகுருவமாய்ப் பாவநாசதீர்த்தத்தையடைந்து தாகநீங்குமாறு அந்நீரிற்சிறிதருந்தி மூழ்கினான். உடனே தேவவடிவெய்திக் கற்பகமாலை சூடி வெண்குடைநிழற்றத் தேவரம்பையர் சூழாம் வந்தழைப்ப விமானமீதேறித் தேவருலகடைந்தனன்.

முனிவர்காள்! பாவநாசதீர்த்தத்தின் மகத்துவ மிஃது. அது தன்னிடத்தில் மூழ்குவோர்க்கு அருந்தவங்களையும் மோட்சத்தையும் கொடுக்கும். பிரம விட்டுணுக்களுக்கு மரிதாகிய பேறுகளையுந்தரும். இச்சரித்திரத்தைச் சொல்லுவோருங் கேட்போரும் பாவங்களினீங்கி நன்மையடைவர். தன்னையடைந்தோரது பாவத்தைப்போக்கலின் இதற்குப் பாவநாசமெனப் பெயருண்டாயிற்று என்றருளினர்.

“வாவியின்மாணிஃதந்தணீர்வான்றவம்வீடுவழங்குமாற்
பூவினனாரணனும்பரார்பூசைசெய்நீர்மையதொன்றுதான்
மேவினராடுநரிந்தநீர்மேலறைவோர்வினையன்றியே
பாவமெலாமடும்பண்பினாற்பாவவிநாசனமென்பவே”

வேதாளவரதச் சருக்கமுற்றிற்று.

# சீதைகுண்டச் சருக்கம்

முனிவிர்காள்! பாவநாசதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம்பண்ணினவர் சீதைகுண்டத்திலே ஸ்நானஞ்செய்தல்வேண்டும். பிரமாண்டங்களிலுள்ள கங்காநதிமுதலியவையும் காசிமுதலியபுண்ணியக்ஷேத்திரங்களும் இந்தச் சீதாகுண்ட தீர்த்தத்தைத் தரிசிக்க விரும்பும். இத்தீர்த்தத்தின் பெருமையாலே சிவபெருமானுமிதனைப் பிரியாதென்றும் வீற்றிருப்பர். இது இந்திரனுடைய பிரமகத்தியைபோக்கினது என்றிவ்வாறிதன் பெருமைகளை யெடுத்துக் கூறியவளவில், முனிவர்கள் "புராணக்களஞ்சியமே! இந்திரனுக்குப் பிரமகத்தியெங்ஙனம் வந்தது? அது எங்ஙனம் நீங்கிற்று? திருவாய் மலர்ந்தருளுக" வென வேண்ட, சூதமகாமுனிவரும் "முனிவிர்காள்! முற்காலத்தில் அகழ்க்கிடங்கு சூழ்ந்த வைசயந்தமென்னுநகரத்திற் கபாலபரணனென்னு மோரிராட்சதன் பிரமனை நோக்கி யருந்தவஞ் செய்து பெருவிறல் படைத்துச் சவபட்சன் என்னும் மந்திரியும் நூறக்குரோணி சதுரங்க சேனைகளு மங்கமாகக்கொண் டரசாண்டுவருங்காலத்தில் ஓர்நாள், சவபட்சனென்னும் மந்திரியையழைத்து நமதுபராக்கிரமம் விளங்கத் தேவலோகத்திற் சென்றிந்திரனைவென்று வெற்றிமாலை சூடித் தேவமாதருடைய திருநடனத்தைப் பார்க்கும்படிசெல்லுவம் சேனைகளைப் பிரயத்தனப்படுத்தி வருகுதியென்றேவித் தனது மகனாகிய துன்மேதனுக்கு முடிசூட்டியரசாளவைத்து ஆயத்தமாகிவந்த மந்திரி சேனைகளோடு அணிவகுத்துப் பலவாச்சியங்களொலிப்பத் தேவலோகத்தையடைந்து போரறைகூவினன். அதுகேட்ட விந்திரனும் விரைவிற் றேவச்சேனைகளையணிவகுத்துச் சென்று யுத்தஞ்செய்யும்பொழுது, தேவர்களாலரக்கசேனையழிவுபடச் சவபட்சனாகிய மந்திரி முப்பதக்குரோணிசேனைகளோடு யமதண்டத்தினாற் றேவாகளைவதைத்து வருமிடத்து, வருணனென்பவன் ஓரம்பினாலவனையுஞ் சேனைகளையுமழித்தனன். அதுகண்ட கபாலபரணன் மிகக்கோபமுற்று உதிராட்சனாகிய தன்றம்பியையேவினன். அதுகண்ட குபேரன் குந்தாயுதத்தாலவனைக்கொன்றனன். அவனதிரண்டாந் தம்பியாகிய தோரதிட்டியென்பவனை, அக்கினிதேவன் கொன்றனன், மூன்றாந்தம்பியாகிய பயாவகனென்பவனை வாயுதேவன் கொன்றனன், மாமிசப்பிரியன் மத்தியசேவியென்னும் படைத்தலைவரைப் பரிமருத்துவர் கொன்றனர், கபாலபரணனை

இடிக்கொடியை யுடைய விந்திர னெதிர்த்து யுத்தஞ்செய்து அரையாம நேரத்திலவனது நாற்குரோணிசேனைகளையுங்கொன்று அவன்மீது மநேக வம்புகளைச் செலுத்தினன். அதுகண்ட கபாலபரணன் மிகக் கோபித்து வில்லைவளைத் தம்புமழைகளைச் சொரிந்து தன்மேல்வந்த வம்புகளனைத்தையும்வெட்டி, ஐந்தம்புகளை யிந்திரனது முடிமீது செலுத்தினன். அதறை யிந்திரனறுக்க, அதனைக்கண்டு கூரியதோர் சூலாயுதத்தை யெறிந்தனன். இந்திரனதனை வேலினாலழித்து வெற்றிகொண்டுல்லாசமாக நிற்கு நிலையைக் கபாலபரணன் கண்டு மிகக் கோபங்கொண்டு வலியதோரிருப்புத் தண்டத்தை யவன்மீதெறிந்தனன். தண்டாயுதம் விரைந்து வந்து இந்திரனது கொடியையுமறுத்து அவனது மார்பிற்பட்டது. பட்டமாத்திரத்தே யிந்திரன் மனம் பதைபதைத்து மயங்கித்தேரில் விழுந்து மூர்ச்சையாயினன். குருவாகிய வியாழபகவானது கண்டு விரைந்துவந்து தூக்கி மிருதசஞ்சீவனி மந்திரத்தை யுபதேசித்தெழுப்பினன். இந்திரனும் சோகந்தெளிந்தெழுந்து பேராற்றலுடைய்ய யயிராவதயானைமீதேறிக் குலிசாயுதத்தைத் தாங்கிக் கபாலபரணனை யெதிர்த்து அவனது வலிகுறையுமாறு அதன்றலையினடித்தனன். அந்த அடியினால் தேர் குதிரை குடை கொடி படையாதிய புறத்துறுப்புக்களும் தலைதோளாதிய வகத்துறுப்புக்களுஞ் சிதைந்து அக்கபாலபரண னிறந்தனன். அவனைக்கொன்ற கொலைப்பாவத்தினு லிந்திரனைப் பிரமகத்தி தீண்டியது, என்றனர்.

அதுகேட்ட முனிவர்கள் சூதமுனிவரைநோக்கி "சகலகலைகளையுமுணர்ந்த சத்தியஞானியே! புலியைக் கொன்றவர்களுக்குப் பசுவைவதைத்தபாவம் புகுமோ? பால்குடித்தாருக்குப் பதனி குடித்தபாவம் பற்றுமோ? அன்பிலாவரக்கனைக கொன்றபாவம் அரசனைப் பிரமகத்தியா யணையுமோ? ஆகா!! இதுவென்ன விபரீதம்!!! ஐயனே! யெமதையத்தையகற்றுக" என்று வேண்டினர். அதுகேட்ட சூதமகாமுனிவர் மூன்றனியிடத்திலே நடந்தவிரகசியத்தை வெளிப்படுத்துவார்.

முனிவாகாள்! இவ்வாரணியத்திலே திரிவக்கிரனென்னு மரக்கனுடைய மனைவி சுசீலையென்பவள் பேரழகும் பெருவலியுமுடையளாய் மன்மதனைவென்று அவனது குடையாகிய சந்திரனை முகமாகவும் அவனது படைகளைக் கண்களாகவும பெற்றுப் பலரையுமயக்கிப் புணர்ந்து தனியேதிரியுங்காலத்து

ப் பிரமனைநிகர்த்த பெருமையையுடைய சுசியென்னுமுனிவர் தவஞ்செய்யும் பர்ணசாலையை யடைந்து பலவிதலீலாவினோதங்கள்செய்ய, முனிவருந் தவம்விட டெழுந்து அவளைநோக்கிமிக்கமோகியாகித் தனபாணத்தால்வருந்தி வலியிழந்து "பெண்ணே, நீயார்மனைவி? எங்கேயிருப்பது? யாதுபெயர்? இங்கேவந்தகாரியமென்ன?" என்றுவினவினர் அதுகேட்டுச் சுசீலையும் நகைத்து "யான் திரிவக்கிரவேந்தன்மனைவி, இம்மலைச்சார்பிலிருப்பேன், என்பெயர் சுசீலை, மலர்கொய்யுமாறிங்கே வந்தேன், எனக்குப் புத்திரபாக்கியமில்லை, எனதுநாயகன் தேவரீருடைய கடாக்ஷத்தாற் புத்திரனைப்பெறுகுதியென்றவாக்குமுளது. ஆதலாற் றேவரீரின்று கடாக்ஷித் தருளுக" வென்று பிரார்த்தித்தனள்.

சுசியென்னுமகாமுனிவருமகிழ்ந்து "பெண்மணியே! நீ வந்தது மிகவும் நன்று. என்மனசு நின்னிடம்பதிந்தது. இந்தப்பர்ணசாலையிலே சயனித்துத்தழுவுவோமென்று" மூன்று நாளவளோடு கலந்து கருப்பாதானஞ் செய்து முடிந்தபின்பு "பெண்ணே! நீ சிறிதுகாலத்தொருபுத்திரனைப்பெறுவை. அவன் பெயர் கபாலபரணன், நேரிலாவலியும், நீண்டவயதும், இந்திரனல்லாத விமையவராலிறவாமையும், பிரமனிடத்துவரம்பெறும் பெருந்தவமுமுடையன். உன்கருத்துமுடிந்தது. நீ செல்லுதி" யென்றனுப்பி இனி இக்குற்றம் நீங்க நாங் காசியாத்திரைசெய்யவேண்டுமென்று சென்றனர்.

சுசீலையுஞ்சென்று புத்திரனைப்பெற்றுக் கபாலபரணனென்று நாமஞ்சூட்டினள். கபாலபரணனும் பிரமதேவனைநோக்கி ஆயிரம்வருடம் அருந்தவமிழைத்துப் பலவரங்களைப்பெற்றிருந்தனன். அவன் தன்சாதித்தொழிலாகிய கொலையைச்செய்யுந் துட்டனாயினும் பிரமவிந்தாகையால் அவனைக்கொன்ற பொழுதே இந்திரனுக்குப் பிரமகத்தி தோஷமுண்டாயிற்று. கொடிய பிரமகத்திப் பேயாற் பீடிக்கப்பட்ட விந்திரன், மிகவும் வருந்திப் பிரமனையடைந்து வணங்கி "ஐயனே இப்பிரமகத்தி தோஷம் நீங்கும்வழியுரைத்தருளுதி" யென்றுவேண்டினன். அதுகேட்டபிரமனுஞ் சிறிதுயோசித்து "இந்திரனே இதுகபாலபரணனைக்கொன்றதனால் வந்த வினை. கந்தமாதனமலைச்சார்பிலே சீதைகுண்டமென்றுந் தீர்த்தக்கரையில் யாகஞ்செய்து சிவபிரானைத்துதித்து மிக்க பத்தியோடு வரம்பெற்று அத்தீர்த்தத்திலே சங்கற்பவிதிப்படி ஸ்நானஞ்செய்து முடிப்பையேல் இப்பிரமகத்தி நீங்கிச் சுவர்க்கலோகமடைந் தின்பு

றுவாய இம்மையிலே பொருளின்பங்களையும் மறுமையிலே தருமமோக்ஷங்களையுந் தன்னிடத்து விதிப்படி ஸ்நானஞ்செய்வோருக்குக் கொடுக்கும்பெருமை பூண்ட சீதைகுண்டத்தை யிப்பொழுதேயடைகுதி" யென்றேவினன். அதுகேட்ட விந்திரனு மகிழ்ந்து விரைவாகவத்தீர்த்தக்கரையையடைந்து யாகஞ்செய்துமுடித்து அதில் ஸ்நானஞ்செய்தவுடன் பிரமகத்திதோஷம் நீங்கிச் சுவர்க்கலோகமடைந்தின்புற்றனன்.

இவ்விதமாகிய பலவிசிட்டமுடைய சீதைகுண்டத்தில் யாவராயினும் விதிப்படி ஸ்நானஞ்செய்யின் நினைத்தபடி யிட்டசித்திகளைப் பெறுவர். இன்னுஞ் சீதாபிராட்டியார் இராவணனைக்கைப்பட்டுந் தனது கற்புக்கெடாமையை ஸ்ரீ ராமனுக்குத்தெளிவிக்குமாறு அக்கினியில் முழுகிக்காட்டிப் பின்முழ்குமாறுண்டாக்கிய விதனைச்சீதைகுண்ட மென்றழைப்பர். என்றருளினர்

ஈறிலன்புடையுங்கடமக்கியா மேதமின்றியியம்புதிறத்திறை,
றேறுமின்கள்சிறந்ததவத்தினீர்சீதைகுண்ட மெனும்பெயர்பெற்றவர்,
றூறகன்றநலங்கொளுளத்தினலோதுமிந்தவருங்கதைகற்றுளோர்,
பேறிதென்றுபிறங்குசெவிக்கொள்வார்பேசருந்திருநன்றிபடைப்பரே.

சீதைகுண்டச்சருக்கமுற்றிற்று

---

## மங்கலதீர்த்தச்சருக்கம்

---

சூதமுனிவரானவர் வியாதமுனிவருடைய பாதங்களை வணங்கி முனிவர்களைநோக்கி, முனிவர்காள் சீதைகுண்டத்திலே முழுகிய தவத்தர்கள் பின்புமங்கலதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தல்முறையாகும். விட்டுணுமுதலியதேவர்களும், இலக்குமிமுதலிய தேவப்பெண்களும், எந்த முனிவர்களும் அங்கேவசிப்பார்கள். அத்துணைப்பெரியவிசேடமுடைய மங்கலதீர்த்தத்தினது சரிதமொன்று சொல்லுதுங் கேட்பீர்களாக வென்று சொல்லுவார்.

சந்திரகுலத்திலே மநுநீதிதவறாது உலகமுழுவதையு மரசாளுபவன், மனோஜவனென்னும்பெயருடையவன், அநேகயா

கங்கள் செய்தவன், தினந்தோறும் பிராமணரைப்பூசித்து உணவுகொடுப்பவன், பிதிராகளை நித்திய சிராத்தத்திலே வருத்தமின்றிப்பருந்திய திருத்திகொண்டு பின்னுமோர் செய்யுஞ்சிராத்தவுணவை வெறுப்பச்செய்பவன், வேதாகமமந்திரபுராண இதிகாசங்களாதி கலாவல்லபன், சத்துருக்களது மனைவியர் கழுத்திற்பொன்னணிதங்காதுசெய்பவன், சிவபெருமானும் விட்டுணுவுந் தாமிருக்குந் திருக்கைலாசமலையையுந் திருப்பாற்கடலையு மொருசமயம் பிரியினுந் தனதுநெஞ்சஞ் சிறிதும் பிரியாதிருக்கக்கொடுத்தவன், தான் சந்திரகுலமாயினுங் காமாதிகடுவிடப்பாம்புகள் தங்காத மனக்குகையுடையவன், இன்னோரன்ன பலவிதவிசேடகுணங்களை யுடையவனாகிய மனோசவன் தனது வெண்கொற்றக்குடையால் பூமியைக்குளிரச்செய்துவருங்காலத்துத் தீவினைவசத்தால் தன்னைவிட்டுப் பிறிதிலலை யென்னுமகங்கார மவன்மனத்திற்குடிகொள்ள ஒருகுடம்பாலி லொருதுள்ளி நஞ்சுகலந்தாலது முழுதுங்கெடுமாறுபோலத் தனதுகுலாசாரமுதலிய குணங்களெல்லாம் குறைந்துபெருமிதத்தையுடையனாயினன்.

யாவனகந்தையினைப்பொருள்கொண்டா
னவனவன்கணழுக்கிவறன்மை
மாவகல்காழ்ப்புமருட்கைமதத்தோ
டெவ்வறுவேட்கையிடங்கொளுமன்றே.
இடங்கொளுமக்கணமின்பநலத்தாற்
றொடங்குதிருப்புகழ்சுற்றியசுற்ற
முடங்கியகான்முளையூர்பொருளூற்ற
மடங்கலுமாயுமலக்கணுமேவும்.

வித்தினிடத்திலே இலை காய் பூ வாதிய அடங்கியிருந்து அது முளைத்துண்டாயபின் வெளிப்படுவதுபோல, மனோசவமன்னது மனத்திலேயுண்டாகிய அகங்காரம் என்னும் வித்திலிருந்து, அழுக்காறு, மனவைரம், மயக்கம், மதம், ஆசை, கோபமாதிய தீக்குணங்களனைத்து முண்டாகிப் பெருத்தோங்க, அவற்றால் முன்னிருந்த புகழ், சுற்றம், மித்திரர், புத்திரர், தேசம், பொருள், உற்சாகமாதியவெல்லாங் குடிபோயின. மோகாந்த காரனாகி அறங்கருதி அந்தணருக்குக்கொடுத்த நிலங்களுக்கு இறைவாங்கியும், சிவாலயங்கள் விட்டுணுவாலயங்களுக்கு விடுத்த மூலத்திரவியங்களை அபகரித்தும், தருமநிலங்களுக்கு இறைகவர்ந்தும் பெற்ற பலபழிக்குந்திரண்டு முற்றிய

தனால், அந்நியதேசத்துக் கோலபனென்னுஞ் சத்துரு வந்தெதிர்க்க மனோசவன் அவனோடும் ஆறுமாசம் போர்செய்து ஆற்றமலஞ்சித் தினனொடுமுழுவதையும் பறிகொடுத்துத் தன்மனைவி மகனோடு காட்டையடைந்து பெருந்துயரடைந்தான்.

இத்துணைப்பெருஞ் சிறப்பினையுடைய ஏகசக்கராதிபதியாகிய மனோசவமன்னன் நாடுநகராதிகளனைத்தையுந் தோற்று உணவுமுதலியவிழந்து காடேகதியாகத்திரிந்து வருந்துவானாயினன். நீர்த்திரையைநிகர்த்த நிலவாழ்க்கையை நிச்சயமென்று நினைக்கலாமா!

சிங்கம் யானை கரடி பன்றி புலியாதி மிருகங்களோடு மனோசவமன்னனும் மகனும் மனைவியும் இருகால்மிருகங்களாகத் திரியுங்காலத்திலே ஒருநாள், அரியபேறாகியபுத்திரன் பசியினாலவாடிச் சோர்ந்து தந்தைதாயரது முகத்தைநோக்கியழவும், மனோசவன் அதுதாங்கலாற்றாது சத்துருக்களினது வாள்வெட்டினால் வருந்தியதுபோல மிகவருந்தி, தழலிடைப்பட்ட தளிர்போலவாடும் மனைவியினது முகத்தைநோக்கி "என் பிராணநாயகியே! இதற்கியாது செய்வேன்! எங்குச்செல்வேன்! எனதருமைப்புதல்வனாகிய சந்திரகாந்தனுக்குப் பசியினால் மரணகாலங்கிட்டியது, உணவோ ஒன்றுமில்லை, இந்தத்துயரை யொழித்து இன்றெம்மைக் காப்பவர் யார்! பிரமன் பிற்காலத்தில் உண்ணவுடுக்க வழியின்றி வறுமையால் வனத்தில் வாடுதியென்று வகுத்துவிடுத்த தென்னே! சிவபெருமான் விட்டுணு அந்தணர் ஆரிடராதி யடியார்பூசைகளை நாமயர்த்து அகந்தையடைந்ததே யிதற்குக்காரணம். யானெனதென்னுங் கொடியவகங்கார மமகாரங்கள் என்னைமூடியதாலே, ஆலயங்களுக்கு மந்தணர்களுக்குமாய அறப்பொருள்களை யதட்டியறவிட்ட அத்தீவினையினாலித்துயரையடைந்து பகைவனுக்கு நாடு பறிகொடுத்துப் பத்தினியோடும் பாலகனோடும் பஞ்சணைமெத்தையிற் படுபபதொழிந்து பரல்செறிந்த பாலைவனத்திற் பருவரலுழக்கவந்ததே! அரனரியாதி தேவர்களைமறந்தும் அந்தணராதி யடியவர்களுக்கு அன்னமருத்தாதும் இருந்த அன்பிலிக்கு ஆர்தானுணவருத்துவார்! ஐயையோ!! கண்ணனதுகரத்திலுங்காணாத கடவுளின்றிருவடிக்கமலங்களைக் கணப்பொழுதுமறவாது கருதிக் கண்டி நீறணிகொண்ட திருவேடம்பூண்ட தொண்டர்களுக்குந் தொண்டுசெய்திலேன். சித்திரப்பாவாய்! சித்திரைமாசத்துச சித்திரைநட



ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU

சத்திரத்திலே, சித்திரகுத்தரைக் குறித்துச் சிவனடியார்க
ளுக்குத் தெண்டு செருப்பு முப்பழம் வெற்றிலைபாக்கு முகவா
சம் உணவு மருந்து உறையுளாதிய கொடுத் துவப்பித்திலேன்;
வழி சந்திகளிலே ஆல் அரசு அத்தி மருதாதிய பெருவிருட்ச
ங்களை வழிச்செல்வோருக்கு வெய்யிற்படாதபடி வைத்திலேன்;
சிவாலயங்கள் விட்டுணுவாலயங்களில் திருவலகு திருமெழுக்கி
ட்டறியேன்; கேணி குளங் கிணறாதிய தொட்டறியேன்; காள
கண்டன் கண்ணனாதிக்கடவுளர்க்கு ஆலயங்களிலே நித்தநைமி
த்தகாமிகாதிகள் செய்துவழிபட்டிலேன்; திருநந்தனவனம் துள
சிவனம் வைத்திலேன்; மார்கழிமாசத்திலே திருவெம்பாவை தி
ருப்பள்ளியெழுச்சிப்பூசை செய்திலேன்; தந்தைதாயராதி பி
திரர்களைச் சுட்டி நித்திய சிராத்தம் நைமித்திக சிராததம் கா
மியசிராத்தம் புரட்டாதியில் மகாளய சிராத்த மாதியசெய்
திலேன்; தந்தைதாயர் இறந்த மாசபட்சம் அமாவாசி அட்டமி
யாதி புண்ணியகால விரதங்களநுட்டித்திலேன்; நான்குவேதங்
களிலுள்ள சத்தசாபால மந்திரங்களைக்கொண்டு விபூதி தரித்தி
லேன்; அநாதி மலமுத்தராகிய சிவபெருமானது ஸ்ரீ பஞ்சாட
சரத்தை நாவினாலுச்சரித்திலேன்; உருத்திராக்கத்தைக் கனவி
லுந்தரித்திலேன்; விட்டுணுவினது அட்டாட்சரங்களைச் செபி
த்திலேன்; அதுமட்டோ! சிவாகமங்களில்விதித்த விதிகளொன்
றையுஞ்செய்திலேன். பெண்ணே! இப்புண்ணியங்களொன்றை
யுஞ் செய்யாமையினாலே யித்துயரெனக்குக்கிடைத்தது" என்
று புலம்பி நிலத்தில் விழுந்து மூர்ச்சையாயினன்.

சுமித்திரையானவள், தனது நாயகன் தான் செய்த அநீதி
களைச் சொல்லிப் புலம்பித் தரையில் விழுந்து மூர்ச்சையாயின
னைக்கண்டு, குமுதமலரின்மேல் விழுந்தவண்டினது மந்தவி
சைபோல மிருதுவாகப் புலம்பிக் கண்ணீர்சொரிய வீழ்ந்து க
தறி நாயகனைத்தூக்கித் தழுவி மடிமீதுவைத்தழுவாள். "சந்
திரகுலாதிப! இரத்தினாபரணமணிந்த விசாலித்த மார்ப! சிறிது
ம் புத்தியில்லாமல் இச்சிறுகுழந்தையோ டென்னையு மிந்தப்
பாலைவனத்திலே தனியேயிருக்கவிட்டுப் போகநினைந்தனையோ!
இந்தச்சிறுவனோடியான் இவ்வனத்து மேய்ப்பாரில்லாத கன்று
டைப் பசுப்போலக் கதறித்திரிவேனோ! தாவுகின்ற குதிரைபூ
ட்டிய தேரையுடைய மன்னனே! சுற்றமித்திரர்களை விட்டுவந்
த கிலேசமன்றி உன்னையு மிழந்து சிங்கேறுகளுக்கஞ்சும் பி
ணைமான்போலத் திரிவேனோ! கையிலே கிடைத்த இரத்தினத்

ஷைக் காடுவிட்டெறிந்தவர்போல வுன்னைப்பறிகொடுத்து அமங்கலையென்னு மபிதானம் பெறுவேனோ! என்பிராணநாதா! நினது புயத்துணையைப் பிரிந்து தனியே யிங்குவாழேன்; நின்னோடு கூடயானும் வருகின்றேன்'' என்றழுது புத்திரனை நோக்கி, சந்திரகாந்தனே! என்னருமைப்புதல்வா! உனதுதந்தையார் அயர்ந்து விழுந்து கிடப்பதைப் பார்க்குதி'' என்றனள்.

சந்திரகாந்தன், தனது தந்தை விழுந்துகிடப்பதைக் கண்டு, பசித்தழல்பற்றியெரிப்பதோடு தந்தைமேல் விழுந்து தயித்திரங்குமளவில், நெடியசடையும் நீறணிந்ததிருமேனியும் உருத்திராக்க வடமும் சிவபிரானது திருவடியை மறவாத மனதும் தவத்தினலுயர்ந்த கோலமு முடைய பராசரமுனிவர்வ்விடத்து வந்தனர். அவரது வரவைக்கண்ட சுமித்திரையுஞ் சந்திரகாந்தனும் வாடிய பயிர்கள் மழைவரக்கண்டு களிப்படைவதுபோலக் களிப்படைந்து விரைந்தெதிர்கொண்டு வணங்கி அவரது திருவடிகளின்மேல் விழுந்துபுலம்பினர்.

பராசரமகாமுனிவரு மாசீர்வதித்துத் தெளிவித்துப் "பெண்ணே நீயார்? இப்புதல்வன்யார்? ஒளிமழுங்கி யீண்டுக்கிடப்பவன்யார்? சொல்லுதி'' யென்றனர். அதுகேட்ட சுமித்திரையுமெழுந்து வணங்கி, "ஐயனே, அதோகிடப்பவர் எனதுநாயகர், விக்கிரமாடயராசனது புத்திரர், சந்திரகுலத்தவர், மனோசவனென்னும் பெயருடையவர், கோலபனென்னு மரசனோடு யுத்தஞ்செய்து நாடுநகரிழந்து சந்திரகாந்தனாகிய மகனோடுஞ் சுமித்திரையாகிய என்னோடுங் காடேகதியாகவந்து பலவிடங்களிலுந்திரிந் துணவின்றி வருந்தி, இன்று இச்சிறுவன் பசியினன் மிகவும்வாடி 'ஐயனே! பசியோவருத்துகிறது இனித்தாங்கமாட்டே னென்செய்வேன்' என்று கதறிய சொல்லாகிய தீ செவிவழியாகப்போய்ச்சுடச் சோர்ந்தறிவழிந்து கிடக்கின்றனர். நாடு நகர் சுற்றமித்திரரு மிழந்து காடேகதியாகியிருந்த வெனக்கு நாயகனுமிங்ஙனமாயினன் நானென்னசெய்வது இனித் தேவரீரே கதி'' யென்றனள்.

அதுகேட்ட பராசரமுனிவரும் "பெண்மணியே! நீ யொன்றுக்கும் வருந்தாதிரு'' என்றுசொல்லிக் கனகசபையிலே ஆனந்ததாண்டவஞ் செய்தருளும் நடேசபெருமானது திருவடியைச் சிந்தித்து மனோசவராசனது தேகத்தை ஒருமுறை தடவினர். உடனே மனோசவமன்னவனும் நித்திரை செய்பவன

விழிப்பதுபோல் விழித்தெழுந்து அவருடைய திருவடிகளில் வணங்கி மிக்ககளிப்பினோடு சொல்வான்.

“பாபிகளது விழிக்கெதிர்ப்படாத தேவரீரது தரிசனத்தால் சோகந்தெளிந் துயிர்பெற்றெழுந்தேன், கோலபனாகிய சத்துருவினால் வலியிழந்து நாடுகைவிட்டுக் காடேகதியாயினேன், தேவரீருடைய கிருபாநோக்கமில்லையேற் பிழைக்கமாட்டேன்” என்றளவில் “அரசனே அஞ்சாதொழிக” என்றமைத்துப் பராசரமுனிவர் சொல்லுவார். “ஸ்ரீ ராமன் வகுத்த சேதுக்கரையிலே, சிவபிரான் பிரியாதிருக்குங் கந்தமாதனமலைச்சார்பிலே பெருமை தங்கிய மங்கலதீர்த்தத்திலே, சீதாபிராட்டியாரோடு ஸ்ரீ ராமனென்றும் பிரியாதுவீற்றிருப்பன்; நீயு மகனும் மனைவியுமத்தீர்த்தத்தையடைந்து சங்கற்பித்து விதிப்படி ஸ்நானஞ்செய்து அதன்கரையிலே தலசிராத்தமுதலிய செய்யின் நின்னைத் தொடர்ந்த மூதேவிபோய் நின்முகத்துச் சீதேவியுறைவள். பின் புசத்துருசயஞ்செய்து நீயும் நின்னோடு நகரமடைவை. உனக்கு இவ்வுபாயத்தைச் சொல்லியபடியால் எனக்குண்டாய தோஷம் நீங்குமாறு யானுமங்கே தீர்த்தமாடச் செல்கிறேன் நீவிருமென்னோடு வாருங்க” ளென்றழைத்துக்கொண்டு அம்மூவரோடும் பலகாடு செடிவனமாதியகடந்து, மங்கலதீர்த்தக்கரையையடைந்து தமதுதுயரமனைத்தும் போகுமாறு சங்கற்பித்து ஸ்நானஞ்செய்து, மூன்றுமாசம்வரையு மரசனைக்கொண்டு ஸ்நான தருப்பண சிராத்தாதிகளைச் செய்வித்துப் பரிசுத்தனாக்கித் துயரங்களனைத்தும் போகுமாறு ஸ்ரீ ராமமந்திரத்தை யுபதேசித்தனர். அரசனும், அம்மந்திரத்தை நாற்பது நாள்வரையுஞ் செபித்து ஸ்நானாதி நியதிகளைமுடித்தனன். பராசரமுனிவரனுக்கிரகத்தினால், அரசன் காணுமாறு வில்லும் அம்பறாத்தூணியும் வெற்றிச்சங்கும் தண்டாயுதமும் இருப்புலக்கையும் வாச்சியங்களும் சாரதியும் கொடியும் குதிரைகளும் தேர்களும் பொன்னுறையிட்ட இரண்டுவாளும் வெற்றிமாலையும் முத்துமாலையும் வாகுவலயமும் குடையும் முடியும் கங்கணமும் வைசயந்தியென்னும் பொற்றாமரைமாலையுமாகிய வின்னோரன்ன இராசவுறுப்புக்களெல்லாந் தோன்ற, சீதேவிதங்குந் திருமுகப்பொலிவுடைய அவ்வரசன் கண்டுமகிழ்ந்து, தனக்கு இந்தவெற்றியைத்தந்த முனிவரோடு சொல்ல, முனிவரும் அவ்வரசனுக்கு அத்தீர்த்தத்தினாலே அபிடேகஞ்செய்து முடிதரித்து ஏனை ஆடையணியாயுதங்களைத் தரித்துத் தேரிலேற்றி யுத்தசன்னத்த

றாய் வரும்படிசெய்ய, அவனுமப்படிவரக்கண்ட பராசரமுனி வருநங் களித்துப் பிரமாஸ்திரமுதலிய படைக்கலங்களைவிடுத்தலும் மீண்டுவரச்செய்தலுமாகிய மந்திரமுறைகளையு முபதேசித்து ஆசீர்வாதஞ்செய்து பகைவனைவென்று அரசாளப்போகுதியென்றுத்தரவுகொடுத்தனர்.

பின்பு மனோசவவேந்தனானவன், மனைவியோடும் மைந்தனோடும் முனிவரைவலங்கொண்டு வணங்கி விடைபெற்றுச் சென்று தனது நகரையடைந்து வெற்றிச்சங்கை யூதினன். அவ்வொலியானது இயமனது வாத்தியவொலிபோலக் கோலபனுடைய செவியினுழைதலும், அவனும் யாரோ சத்துருவந்தனனென்று போர்க்கோலங்கொண்டு வெளிவந்து மனோசவவேந்தனோடு யுத்தஞ்செய்தனன். மனோசவவேந்தனும் மூன்றுநாள்வரையு மவனோடு கடும் யுத்தஞ்செய்து அவனது சேனை படைகளனைத்தையு மழித்து பிரமாஸ்திரத்தா லவ னுயிரைப்போக்கி அந்நகரத்தைக் கைக்கொண்டு மனைவி மைந்தனோடிருந்து ஆயிரம்வருடமரசாண்டு, அகந்தை அழுக்காறு கடுஞ்சினமாதியவின்றிப் பலபுண்ணியங்களையுஞ் செய்தின்புற்று, மகனுக்கு முடிசூட்டியரசாளவைத்து, சுமித்திரையுந் தானுமாக மங்கல தீர்த்தத்தையடைந்து ஸ்நானஞ்செய்து, உடம்பைவிட்டுச் சிவலோக மடைந்தனன; மனைவியுமுடன்கட்டையேறிச் சிவலோகமடைந்தனள். முனிவிர்காள்! இதுவேமங்கலதீர்த்த மகத்துவமாகும். இதில் விதிப்படி ஸ்நானஞ்செய்தோர் அமங்கலப் பேற்றொழிந்து சுமங்கலப்பேறடைவர்கள்.

செருவினிற்பகைவென்றுலகேத்தவேசிவபுரத்தையடைந்திட வேற்றமர், நிருபனுக்கருடந்தமைசேடிராளிலவுமுத்தியுமின்பமும்வேண்டுவோர், மருவுமுத்தமமங்கலதீர்த்தநீர்மனம்வருந்தியுமன்பொடுமாற்றிலா, விருபிறப்புடையந்தணிர்போற்றுவாரிருவினைக்கிரிநுண்டுகளாக்குமே.

மங்கலதீர்த்தச்சருக்க முற்றிற்று.

# அமுததீர்த்தச் சருக்கம்

சூதமகாமுனிவரானவர், வியாதமகாமுனிவரை நினைந்து வணங்கி நாற்பத்தெண்ணாயிரமுனிவர்களு மின்புறப் பின்னுஞ் சொல்லுவாராயினர். ௧

முனிவர்காள்! மோகாந்தகார நீக்கிய முத்தியோர்கள் மங்கல வாவியிலே விதிப்படி முழுகிய பின்பு சீதாபிராட்டி பதியாகிய ஸ்ரீ ராமன் ஏகாந்தராமனாக வெழுந்தருளி யிருக்குந் திருநகரத்தை யடைந்து வணங்குவர். அங்கே, சீதாபிராட்டியாருந் தானுமாக இலக்குமணனும் அனுமனாதிய குரங்குச் சேனைகளுஞ் சூழ் நால்வகைத்தோற்றத் தெழுவகைப் பிறப்புடைய வெண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதவுயிர்களுக்கருள் சுரக்குமாறு வீற்றிருப்பன். அந்த நகரத்திலே தன்னிடத்து விதிப்படி மெய்யன்போடு முழுகுவாரது உடம்பிலுற்ற நரை திரை மூப்பாதிய வின்னல்களை நீக்குங் காரணத்தால் அமுதவாவியென்னுந் திவ்விய தீர்த்தமொன்றுளது சிவானுக்கிரகத்தினால் அங்கே ஸ்நானஞ் செய்பவர்களது உயிர்கள் மரணவேதனையடையா. அதில் ஸ்நானஞ்செய்பவர்களுக்கு மரணவேதனை யொழிக்குமபொருட்டுச் சிவபிரானுமாதேவியாரோடு மென்றும்பிரியாது வீற்றிருப்பர் என்றருளிச்செய்தனர். அதுகேட்ட முனிவர்கள் "ஐயனே! 'அமுததீர்த்தமென்னும் பெயர் யாதுகாரணத்தால் உண்டாயது? கட்டளையிட்டருளுக" எனவேண்டினர். அதுகேட்ட சூதமகாமுனிவரு மகிழ்ந்து சொல்லுவாராயினர்.

முனிவர்காள்! உங்களது மனச்சங்கை யொழியுமாறு அதற்கு அப்பெயர் வந்தவரலாறு சொல்லுதும் மகிழ்ந்து கேண்மின். முன்னொருகாலத்து இமயமலைச்சாரலிலேவசிப்பவர், பிரமகுலத்திலுள்ளவர், பஞ்சபுலன்களை யடக்கிய வலியுடையவர், காமாதிகுற்றங்களில்லாதவர், ஆகிய அகத்தியப் பிரானா என்பவர் தினந்தோறு மோட்சத்தைவிரும்பிப் பிராமிய முகூர்த்தத்திலெழுந்து அவசியகருமமாதிகள் முடித்துக் காளகண்டராகிய சிவபெருமானது திருவடிகளைத் திரிகாலங்களினு மருச்சித்து முடித்தபின் சிவனடியார்களுக்கு அன்போடு திருவமுதூட்டிக் காயத்திரிமந்திரஞ்செபித்து மிககவிருப்பத்தோடு தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்னும் *ஐவகையாகங்

*ஐவகையாகம்-பிரமயாகம் தேவயாகம் பிதிர்யாகம் மானுடயாகம் பூதயாகம்.

கலைச் செய்து வேதாத்தியயனமுடித்துச் சிவசரிதங்களைப் பாராய்ந்து தக்கிணுக்கினி காருகபத்தியம ஆகவநீய மாதிய வக்கினிகளை ஓம்புபவர் இன்னும் பிராமணர்களுக்குரிய விதிகள் சிறிதேனுந்தவறாது சிரமமின்றிச்செய்பவர், வருடங்களினும மாதங்களினும் வருகிற பிதிர்தினங்களிலே சிராத்த தருபபணாதிகளை விதிப்படி தவறாது செய்பவர், இப்படியே ஆயிரமவருஷம் தவறுமலிவ்விரத நியமவொழுக்கங்களை அநுட்டித்துஞ், சிவானுக்கிரகங் கிடையாமையால் மனம்வருந்தி விருடசங்களினது அடிவேரினும பசையற்றெரியும் வேனிற்காலத்திலே பஞ்சாக்கினியை வளர்த்து அதனது மத்தியிற் காலிற் பெருவிரலையூன்றி இரண்டு கண்களினுலுஞ் சூரியனை யுற்று நோக்கி இரண்டு கைகளையுஞ் சிரமேலேறக் குவித்துச் சிவபிரானது திருவடியொன்றேயன்றி மற்றொன்றினும் பற்றின்றி ஆயிரம்வருட மருந்தவமிழைப்ப, சிவபெருமான் சிறிதுமனமிரங்கி உமாதேவிசமேதராய்த் தேவர்கள் துதிப்ப எழுந்தருளிவந்து காடசிகொடுத்தனர். அதுகண்ட முனிவருமச்சமுற்றுத் திடுக்குற்றெழுந்து, எத்துணைப்பெரியோர்களும் எண்ணவெதிர்ப்படாத வெமதுகடவுள் வந்தாரென்று வீழ்ந்து வணங்கி அவரது திருமேனியைக் கண்டு களித்துத் தோத்திரஞ்செய்வாராயினர்.

"சோம சூரி யாக்கினி யாகிய திரிநேத்திரங்களையுடையவரே, சந்திரசேகரரே, விட்டுணுவினது கண்களாகிய தாமரை மலரையணிந்த திருவடியுடையவரே, இமையாசலபுத்திரியின் பிராணநாதரே, யமனையுதைத்த வேகபாதரே, மேருமலையைவளைத்த புயாசலமுடையவரே, பிரமனது உச்சித்தலையரிந்த நகவாட்படையையுடையவரே, அவ்வவரது வினைப்பயனையறிந்தூட்டுபவரே, அளவற்ற சராசரபேத வுயிர்கடோறும் அவ்வுயிர்க்குயிராய் நின்று அவரவருளத்தை யறிந்து சிட்சை இரட்சை செய்யு மழுவாயுதரே, மானேந்திய திருக்கரத்தரே, உமாதேவியினது முலைத்தழும்பு வளைத்தழும்போடு உபவீதத்தழும்பையும் படைத்தமார்புடையவரே, கண்ணப்பரிட்ட பச்சிலைகள் தங்கிய சடாமுடியையுடையவரே, மதனசங்காரநேத்திரரே, அன்பர்களது அகத்துநிறைவான்வரே, பிரமகபாலசூடரே, தேவதேவரே, பிரமவிட்டுணுக்கள் பிறவடிவாகிப் பிராந்திகொள்ளுமாறு பேரண்ட முகடளவோங்கிய பெருஞ்சுடராக்கொழுந்

தே, அடியவர்கள் செய்யுமபராதரட்சகரே, சிற்றம்பலத்திற் செய்யும் பஞ்சகிருத்திய நாடகரே, திருக்கயிலாய நாதரே, கணநாதர் கந்தசுவாமியாகிய இருவர்க்கும் பிதாவே, உரு அரு உருவருவாகிய வடிவுடையவரே, இறந்தவர்களது என்புமாலைகள் விளங்க சமத்திலாடுமிறைவரே, ஒன்றென்னிற் பலவாகியும் பலவென்னி லொன்றாகியும் நிற்கின்றவும்மை யாரளவிடவல்லவர்! முக்குணாசலரே, குணாதீதரே, நான் இவ்வுலகவாழ்க்கையை விரும்பேன், என்னைத் தேவரீ ரடிமைகொண்டருளவேண்டும், உமது திருவடித்தாமரைகளுக்கு வணக்கம், எனது அவிபத்தி தேவரீரை யெங்ஙனம பொருட்படுத்தும்" என்று தோத்திரஞ் செய்தவளவில் சிவபெருமானு மகத்தியப்பிராதாவைத் திருக்கண்சாத்தித் திருவாய்மலருகின்றார், "அகத்தியப்பிராதனே! உனக்கு மோட்சவிருப்புளதாயின் கந்தமாதனமலையிலே சேதுவினிடத்து மங்கல்வாவிக்கருகில் ஒரு திவ்வியதீர்த்தமுளது. அது நீ விரும்பியமோட்சத்தைத்தரும், தேவர்களும் விரும்பத்தகுந்த மோட்சம் இலகுவன்று. அந்நீரினது பெருமை சொல்லத்தக்கதன்று. நீ சந்தேகமுறாமலங்குச்சென்று விரும்பியபேற்றைப்பெறுகுதி" யென்று கட்டளையிட்டு மறைந்தருளினர்.

அகத்தியப்பிராதாவானவர் அந்தவார்த்தையைக்கேட்டு, அங்ஙனஞ்செய்வேனென்று துணிந்து, ஏகாந்தராமனினிது வீற்றிருக்கும் நகரியையடைந்து, தனக்குத்தானே யொப்பாகிய தீர்த்தக்கரையில் விதிப்படி சங்கற்பித்து மூன்றுவருடந் தவறாது ஸ்நானஞ்செய்து, நான்காம்வருடத்திற் சமாதிபூண்டு பிராணவாயுவைச்செலுத்திப் பிரமரந்திர வழியாகச்சென்று நித்தியானந்த நிரதிசயவாழ்வையடைந்தனர். இதில் ஸ்நானஞ்செய்தவர்கள் சிவானந்தப்பெருவாழ்வடைதலாலும், அகத்தியப்பிராதா அப்பேறு பெற்றமையாலுமிதற்கு அமுததீர்த்தமென்று பெயராயிற்று. தற்காலத்திலேயும் யாவராயினுஞ் சோர்வின்றி மூன்றுவருடந் தவறாது விதிப்படி சங்கற்ப பூர்வமாக ஸ்நானஞ்செய்வரேல் பேரானந்தமோட்சமடைவர். இதுசத்தியமென்று சொல்லிமுடித்தனர். அதுகேட்ட முனிவர்களெழுந்து சூதமகாமுனிவரை வணங்கித் "தேவரீரைத் துதிக்கின்றேம், இந்நகரத்திற்கு ஏகாந்தராமனென்னும் பெயர் யாதுகாரணத்தாலுண்டாயது? கடாட்சித்தருளுக" வென்றனர். சூதமகாமுனிவர் கேட்டுச் சொல்வாராயினர்.

முனிவர்காள்! தசரதமகாராசனது புத்திரனாகிய ஸ்ரீ ராமனவன் தருப்பசயனந்தொடங்கி யணைவகுத்தபின்பு இலக்குமணன், சுக்கிரீவன், அனுமான், விபீடணனாகிய நால்வரோடுங்கூடி இராவணனைக்கொல்லவும் சீதையைச்சிறைமீட்கவுமாக வேண்டியவுபாயங்களை மந்திராலோசனை செய்யுமிடத்துச் சமுத்திரவொலியினா லொருவர் சொல்வது மற்றவருக்குக் கேளாதிருத்தலின் ஸ்ரீ ராமன் கடுங்கோபமடைந்து புருவமுரியவமழுன்றுரம்பிக் கடலையொலியெழாவண்ணந்தடுத்தனன். ஆதலா லவ்விடத்திற்கு ஏகாந்தராமமெனப் பேருண்டாயிற்று. முனிவர்காள்! மாட்சிமையில்லாத வெளியசங்கத்தைமருவிப் பெரும்பயமடைந்தோர்கள் வீராதிவீரர்களினது கட்டளையைக்கடப்பார்களா? ஸ்ரீ ராமனது கட்டளையைக் கடவாது சமுத்திரமானது திரையில்லாம லமைதியாயிருப்பதை யின்றுநாளையுமேகிக்காண்பீர்களாக.

"நியதியோடமுதத்தடமூழ்கியேநிகரில்கோசலைபுத்திரனாதியோர், பயிலுவாரைவழுத்தினர்தாமெலாம்பரமபோகபதத்தினைமேவுவார், பெயர்விலாநிலைபெற்றிலர்மாலுளார்பிரமஞானமனத்திலரானுமே, லுயருமாதரவிற்படிவார்களேலுத்தமீதவருக்கருளீயுமே"

அமுததீர்த்தச்சருக்க முற்றிற்று.

## பிரமகுண்டச்சருக்கம்

முனிவர்காள்! இன்னுமந்த அமுததீர்த்தத்துக்கருகில பிரமகுண்டமெனவொரு தீர்த்தமுள்ளது. அமுததீர்த்தத்தில விதிப்படி ஸ்நானஞ் செய்தபெரியோர்கள், ஸ்ரீ ராமமந்திரத்தை நினைந்து பஞ்சப்புலன்களையடக்கி மௌனிகளாய்ப் பிரமகுண்டத்திலே ஸ்நானஞ்செய்தல்வேண்டும். அது கந்தமாதனமலைக்குஞ் சேதுவுக்குமிடையிலே வறுமைப்பிணிக்குமருந்தாகி யுலகத்துள்ளார் துதிக்க விளங்குகின்றது. அன்றியும் அதுபலகோடிப்பிரமகொலைப்பாவங்களைப் போக்கும். தன்னைத்தரிசிப்பவர்களுக்கு உடனே முன்னுள்ள தீவினைகளனைத்தையும் போக்கும். அன்றியும், அருந்தவஞ்செய்தல் சத்திரதானஞ்செய்தல் தீர்த்தங்களாடுதல் யாகங்களசெய்தலாதிய புண்ணியங்களால அடையப்படும் வைகுண்டலோகத்தை இந்தப்பிரமகுண்டத்தி லொ

ருமுறை ஸ்நானஞ்செய்தவர் வருத்தமின்றி யுடனே யடைவர். பிரமகுண்டத்திலுள்ள விபூதியானது யாரொருவருடைய நெற்றியிலிருக்குமோ வதுவரையு மும்மூர்த்திகளு மவர்வசமாகுவர். அந்தநீற்றினால் நெற்றியிற் றிரிபுண்டரமணிவோர் சீவன்முத்தராவர். அத்திருநீற்றில் பரமாணுப்பிரமாணந்தரிப்பவர் பரிசுத்தராகுவர்; அத்திருநீற்றைச் சரீரமுழுதினு மணிவாரது பெருமையையும் அதனை யணியாதவர்களது சிறுமையையும் யாவராலு மெண்ணமுடியாது. மாமிசமயமாகிய வுடம்பிலே அத் திருநீற்றி லற்பமாயினு மதிகமாயினு மணியாதவர் சந்திர சூரியருள்ளவரையும் ரௌரவாதி நரகங்களினின்றும் நீங்கார்கள். இந்தச் சிறந்த திருநீறிருக்க வேறு திருநீற்றை யிதற்கொப்புயர்வாக நினைப்பவர்களும் இதனைநிந்திப்பவர்களும் பெரியோர்களாலிகழப்படுவார்கள். இத்திருநீற்றைச் சிறந்த சைவவேதியர்களுக்குத் தானஞ்செய்பவர்கள் உலகமுழுதையுங்கொடுத்த பலனையடைவார்கள். இதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. முனிவர்காள்! சத்தியஞ்சத்தியம்; இது முக்காலுஞ் சத்தியம். ஆதலால், நீவிரு மிந்தப் பிரமகுண்டத்திற் சென்று தீர்த்தமாடி அதில் விளைகின்ற விபூதியையுந் தரிப்பீர்களாக. பிரமதேவன் தனக்குச் சிவபெருமானாலுற்றசாபம் விமோசனமாகும்பொருட்டு விதிப்படி யாகஞ்செய்தனன். அந்தச்சாம்பரே விபூதியாகவிளைகின்றது. ஆதலால் அதின் முழுகுவோர் சுத்தராகுவர் என்றருளிச்செய்தார். அதுகேட்ட முனிவர்கள் வணங்கி, "ஐயனே! சிவபெருமான் பிரமனிடத்து யாதுகுறைகண்டு சபித்தனர்? எதுவாகச்சபித்தனர்? அவற்றை யுள்ளபடி கட்டளையிட்டருளுக" என்னச், சொல்லுவாராயினர்.

முனிவர்காள்! முன்னொருகாலத்திலே, பிரமாவும் விட்டுணுவும் படைத்தல் காத்தலாகிய தொழிலுடைமைபற்றி அகங்காரத்தாற் சிவபெருமானைமறந்து "நானே பெரியன் நானே பெரியன்" என்றிருவரும் வாதுபேசி யுத்தஞ்செய்தனர். சிவபெருமா னிவர்களது அகங்காரமடக்கி யருளற்பொருட்டு இரண்டு மின்மினிகள் கலகம் விளைக்குமிடத்திடையேயெழுந்த சூரியனைப்போலவும், இரண்டு நட்சத்திரங்கள் பகைகொண்டவிடத் திடையேயெழுந்த சந்திரனைப்போலவும், இரண்டு குறுநிலமன்னர்கள் யுத்தஞ்செய்யுமிடத் திடையே யெழுந்த மண்டலாதிபனைபோலவும், இருதகர்கள் யுத்தஞ் செய்யுமிடத் திடையே யெழுந்த இடபவேறுபோலவும், அவ்விருவரிடத்துள

ள மமதைநீங்கி அறிவு மன்பு மங்குரிக்க அவாக்குநடுவே, நீ விர பரம்பொருளல்லீர் நாமே பரம்பொருளென றுணர்த்தும் பொருட்டுச் சிவலிங்கவுருவாகி யொரு பேரொளிவடிவா யெ ழுந்தனர். பொன்னையுடையவனை மறந்து காவலாளரிருவர் அ தனைக்கவரும்படி கலகம் விளைக்க, அவ்விருவரும் நாணி யொ துங்குமாறு அதனையுடையான் வெளிவந்து கவர்வதுபோலத் தோன்றிய சகசோதியைப் பிரமவிட்டுணுக்கள் கண்டு அதிச யிதது, தமக்கு முதல்வராகிய சிவபெருமானது வடிவென்று ணராதவராய் மயங்கி யின்னு மகங்காரம் விடாது சொல்லு வார்கள். "தேவர்களி லெமக்குமேலானவர்களில்லை இந்தப்பே ரொளியே யெங்களிருவருள்ளு மேலானவரிவரென்றளக்குங் கோலாகிய தராசாகும். அடிமுடிதெரியாமல் அநேககோடி சோதிகளொருங்குதிரண்டுதித்த இச்சோதியினது அடிமுடிய றிதலே நமதுபெருமையைவிளக்கும்." இரண்டு பயித்தியக்காரர் அப்பைத்தியம் வருதற்குமுன்னமே தம்மிடத்து முன்னுள்ள மறைக்கவேண்டிய குற்றங்களை வெளிப்படுத்துதல் போல, அநு வரையும் வெளிவிடாதடக்கிய முழுமுதல்வரென்னு முள்ளக்க ருத்தைத் தேவர்களறியும்படி சொல்லுவார்கள். அகங்காரமய க்கத்தால் உள்ளுணர்விழந்த அப்பிரமவிட்டுணுக்க ளிருவரு மொருவரையொருவர் நோக்கி "ஆதியந்தமில்லாது தோன்றி ய விம்மலையினதடிமுடியை எங்களில் யாவரளந்து கண்டுகா ட்டுவாரோ, அவரே முழுமுதல்வர்; தேவர்களே யிதற்குச்சா ன்று" என்று இரண்டுகுருடர்கள் ஒருசிவப்புப் புடைவை யைத் தனித்தனி இது கருமை இது வெண்மை யென்று கழ றுவதுபோலத் தமக்கிடையே தோன்றிய இந்த வுருவம் எம மால் அளவுபடுமோ அளவுபடாதோ என்னு மெண்ணமில்லா தவராய், அடிமுடியளக்கத்துணிந்தனர்.

பின்பு பிரமன் விட்டுணுவைநோக்கி "முகுந்தனே! எம் மிருவரையு மன்றித் தானுமொருவ னிருக்கிறேனென்றுதோ ன்றிய இந்தப்பருப்பத மூர்த்தியினடியைநீயேயறிந்துவா; நானி தன் முடியையளந்து வருகிறேன்" என்றனன். பிரமனது வா க்கைக் கேட்டவிட்டுணுவும் அதற்குடன்பட்டுப் "பிரமனே நீ முடியை யளக்குதி" யென்று தானொரு பன்றியுருக்கொண்டு கொம்பினாற் பூமி பிளக்கும்படி குத்திச சத்தபாதலலோக ங்களையு மளந்து அப்பாலும் நெடுங்காலம் பிளந்து தேடிவரு ந்த, அங்கங்கே கண்டவர்கள் "ஆதியந்தமில்லாத இநத அக்கி

னிமலையை ஒருபன்றியானது கோடுகள் வருந்த உடல தளரத் தேடியேன் வருந்துகின்றது; தன்னால் முடியாத செயலைச் செய்யாது விடுதல் குற்றமல்லவே; இது எப்படித்தேடினுங்காணமாட்டாது; ஏனிது வீணாகவருந்துகின்றது." என்று தங்களிலேபேச, அதனைக்கேட்டவுடன மெயயுணர்வு சிறிதுதோன்ற அகங்காரமொழிந்து இனி மேலெழுதற்கு வலியில்லையேயென்று தோத்திரஞ்செய்து வலிபடைத்தெழுந்து தேவர்களை நோக்கி "நான்பட்டதுயர்போதும்! இதனடி யாவராலுங் காணமுடியாது" என்றனர். பிரமன், அன்னவடிவாகி முடியைத் தேடி நெடுநாணெடுந்தூரம் மேலேபறந்துங்காண முடியாமையால் இருவிலாவொடிந்து வலியிழந்து விழுமிடத்து, "விட்டுணுவுமிதனடியைக் காணமாட்டான்; ஆதலின் நாமிருவரு மொப்பு. ஆயினும், முடியைக்கண்டேனென்று ஒருபொய்சொல்லியாவது நான்வெற்றி பெற்றுயர்வடையவேண்டும். தேவர்கள் விட்டுணுவோடுகூடியிங்குவந்து கண்டவர்களல்லர்" என்று நினைந்து இந்தப்பொய்யினாலின்னது கிடைக்குமென்பதை ஒருசிறிது முணராமல் "நான்முடியைக் கண்டுவந்தேன்" என்று சொல்லினன். தேவர்கள், "பிரமனைப்பெற்ற தாதையாகிய விட்டுணு அடியைக்காணவில்லை, மகனாகிய பிரமன் முடியைக்காண்பது எப்படி? இதிற் சந்தேகமிருக்கின்றது" என்றனர்.*

"விட்டுணுவும் நான் பாதாளமுழுதினுந் தேடி அடியைக் கண்டிலேன் முடி இவனுக்களவுபட்டதென்னை! என்னினு மிப்பிரமன் வலியுடையனோ! இவன்சொல்வது பொய் என்றுமயங்கினர். பிரமனும் பெரும்பொய் சொன்னேனே யாதாய்முடியுமோவென்று அச்சத்தோடுநிற்க, பாலசந்திர னொளிரவும், தேவகங்கை யலைவீசவும், பாலசுப்பிரமணியர் மத்தியிலிருப்பவும், உமாதேவி யிடப்பாகத்தில் விளங்கவும், கொன்றைமாலையணிந்த மார்போடு சிவபெருமானிட்பாரூடராய் அந்த அக்கினிமலையினின்றும் பிரசன்னராயினர். அவரைக்கண்ட பிரமவிட்டுணுக்கள் நாணித்தலைகவிழ்ந்தனர். சிவபெருமானவர் தேவர்குழாம் வணங்கித்தோத்திரஞ் சொல்ல, பயித்தியம்பிடித்த பிரமனது முகத்தைப்பார்த்துப் புன்னகையரும்ப "பிரமனே! நீ எமது சந்நிதானத்தில் அஞ்சாது பொய்சொ

* பிரமன் தாழமடலைக்கொண்டு பொய்ச்சாட்சியஞ் சொல்வித்தனனென்றும், பொய்ச்சாட்சியஞ் சொல்லித் தாழமடல் பூசைக்குப்யோகமாகாது தள்ளப்பட்டதென்றும் பிறநூல்கள் சொல்லும்.

ன்னபடியால் உனக்குப் பூமியிலே ஒருகாலத்து மோரிடத்தும ஆலயவழிபாட்டில்லாதுபோகுக" † என்றுசபித்து, விட்டுணுவை நோக்கி "விட்டுணுவே! நீ மெய்சொன்னமையால் உனக்குப் பூமியிலெக்காலத்து மெவ்விடத்தும் ஆலயவழிபாடு விசேடமாக நடைபெறுக" என்று திருவாய்மலர்ந்தருளினார் அதுகேட்டபிரமன் மிகவும் நடுங்கித் திருவடிகளின் முன்பு வீழ்ந்து வணங்கி "எம்பெருமானே கொடியேன்செய்த பெரும்பிழையைப் பொறுத்தருளுக" என்று பலமுறையு மிரந்து வேண்டினன். சிவபெருமானும் சிறிது மனமிரங்கிக்கிருபைகூர்ந்து "பிரமனே! எமதுசாபந்தவருது, நீ கந்தமாதனமலையினேகி எம்மைச் சுட்டிப்பலவகை அக்கினியாகத்தைத் தொடங்கிமுடித்தால், நீ சொல்லிய பொய்ப்பாவம் நீங்கும்" என்று திருவாய்மலர்ந்தருளித் திருக்கயிலாயமலைக்கு உமாதேவியாரோடு மறைந்து சென்றருளினார். அதுகேட்டபிரமனும், சிறிது தெளிந்து களிப்படைந்து யாகஞ்செய்யும்படி கந்தமாதனமலையையடைந்து, அங்கே எண்ணாயிரம் வருடம் தேவர்கள் வியப்பு பவுண்டராதி பல்வித யாகங்களைச்செய்து வழிபட, சிவபிரானு மெதிரே பிரசன்னராகிப் பொய்சொன்ன பாவத்தைப்போக்கிப் பரிசுத்தமாகிய பலவரங்களையுங் கொடுத்துப் "பிரமனே! உனக்கு உலகத்திலே பிம்பபூசையுற்சவாதிகள் கிடையா, வேத மிருதிகளினாலே பாவனையாற் பிராமணர்கள் உன்னைவழிபடுக. நீயாகஞ் செய்த இந்த இடம் பிரமகுண்டமென்று பெயருடையதாய்த் திரிபுவனத்தார்களாலும் வழிபடப்பட்டுப பெரும்புண்ணியப்பயனைக்கொடுக்குக. இத்தீர்த்தத்திலே விதிப்படி. ஸ்நானஞ்செய்வோர்களுக்கு மோட்சவாயில் திறபடும்; இந்தநீற்றை நெற்றியிலே தரிப்பவர்கள் தீமைகளினின்றும் நீங்கிப் பேரின்பமடைவர்; இத்திருநீறு தரியாதவன் குலம்நன்லலன்; யாவர் ஸ்நானஞ்செய்யினும் பதினாயிரம் பஞ்சபாதகங்கள் போகும். இவ்விபூதிதரிப்பவரிடத்துப் பூதவேதாளபசாசுகள்டையா" என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர்.

பிரமதேவன் விதிப்படி யாகத்தைமுடித்துச் சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றுத் தனதூருக்குச் சென்றனன். அந்நாட்டொடங்கி இவ்விடத்திலே தேவர்களுந்து ஸ்நானஞ்செய்வர்கள். இவ்விடத்திலே யாகஞ்செய்தற்கு விரும்பிய,

† பிரமனுச்சித்தலையாலிகழ்ந்தனனென்றும், அதனால்வனுச்சிதத்தலை கிள்ளப்பட்டதென்றும் பிறநூல்கள்சொல்லும்.

வர்களுக்கு இது அவர்களை வருத்துகின்ற தீவினை முழுதையு ங்கெடுத்து எவர்களும் துதிக்கும்படியாகிய மோக்ஷத்தைக் கொடுக்கும். பிரமதேவன் அன்போடு யாகஞ்செய்தபடியால் இதற்குப்பிரமகுண்டமெனப் பெயராயிற்று.

"மரபிலங்கிருடித்தயனூரிலேவனிதைபங்கனருடகொடுபோயினன், பரவுமன்றுதொடுத்திமையோர்கடாம்படிவரங்கண்மகச்செயல்பேணினர், கரவுசஞ்சலமுற்றவுநூறியேகதிவழங்கும்வழுத்திடயாருமே, பிரமனன்பினிழைத்திடும்வேள்வியாற்பிரமகுண்டமெனப்பெயரானதே"

பிரமகுண்டச்சருக்கமுற்றிற்று.

## அனுமகுண்டச்சருக்கம்

ஸ்ரீ வேதவியாதருடைய திருக்குமாரராகிய சூதமுனிவரானவர் முனிவர்களை நோக்கி, முனிவர்காள்! பிரமகுண்டதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்தோர்பின்பு அனுமகுண்டதீர்த்தத்திலே முழுகுதல் முறையாகும்.

ஸ்ரீ இராமன் யுத்தத்திலே இராக்கதர்களைவதைந்து மீண்டு கந்தமாதனவரையில் வந்தபோது, அவனோடுவந்த அனுமான் தனதுபெயரால் ஒருதீர்த்தமுண்டாக்கினன். சிவபெருமான் அத்தீர்த்தத்தின் மகத்துவத்தையறிந்து அங்கே யெக்காலமும் பிரியாதிருப்பர். அத்தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்வோர் சிவலோகத்தை யடைவர். இத்தீர்த்தத்தை அனுமானுண்டாக்கியபின்பு அநேகர் இதனைத்தரிசித்தும் நினைத்தும் ஸ்நானஞ்செய்தும் புண்ணிய லோகங்களை யடைதலினால், ரௌரவாதிநரகலோகங்கள் பாழ்பட்டன. முனிவர்காள்! இதுபோலுஞ் சிறந்த தீர்த்தம் முன்சொல்லியவற்றுள்ளும் இனிமேற்சொல்வனவற்றுள்ளுமில்லை. இத்தீர்த்தத்தின் மகத்துவத்தைச் சர்வஞ்ஞராகிய சிவபெருமானன்றி வேறியாரறிவர்கள். இதனது சரித்திரமொன்று சொல்லுதுங்கேட்குதிர்.

முன்னொருகாலத்திலே கேகய குலமன்னவன் புத்திரனாகிய மசகன் என்பவன், உலகமுழுவதையு மரசாளுபவனுப்ப பகை நட்பு நொதுமலின்றிச்சத்தியந்தவறாது நீதிசெலுத்துபவனாயிருந்தான். அவன் அருந்ததிக்கு நிகரான கற்பிற்சிறந்த நூறுமனைவியரை விவாகஞ்செய்து விதித்தநாட்களிற் புணர்ந்

தும், களர்நிலத்து விதைத்த விதை முளையாதவாறுபோலக் கருப்பமுண்டாகாத தன்மையைக்குறித்து மனம்வருந்தி, எப்படியுமிவர்களிடத்துப் புத்திரோற்பத்தி யுண்டாக வழியாதென்று சிந்தித்து, அசுவமேதாதியாகங்களுந் துலாபாராதிதானங்களும், பிதிர்பூசை தருப்பணாதிகளும், தேவாதிபூசைகளும், புத்திரப்பேறுதவும் பலவித யந்திரமந்திராதிகளுஞ் செய்தும் அநுட்டித்தும் கிழத்தன்மையடைந்தபின்பு, அவன்செய்த புண்ணியப்பேற்றினால் மூத்தமனைவியினது வயிற்றிலே ஒருசற்புத்திரன் பிறந்தனன். அதுகண்ட மசகமன்னவன் சாதகன்முதலிய கிரியைகள் தானதருமாதிகள் பலவுஞ்செய்து சந்திரனென்னும் நாமகரணஞ்சூட்டி மகிழ்ந்தனன். அப்புத்திரனுனவன் மற்றைய தொண்ணூற்றொன்பது தாய்மார்களது வயிற்றிலும் பிறந்தவன்போன்று மகிழ்ச்சிகொடுத்து, அவர்களமனதையுருக்கி, அவர்கள்கொடுத்த முலைப்பாலையுண்டு களித்துப் பேரொளிபடைத்து அவர்களது கண்கள்போலவும், தந்தையுடைய புயங்கள்போலவும், மந்திரிகள் படைத்தலைவர்கள் சுற்றத்தவர்கள் குடிசனங்களாதியோருக்குப் பெருமகிழ்ச்சிகொடுத்து வளர்ந்தனன்.

மசகமகாராசனானவன் சிறுகுழந்தைகளுக்குச் செய்யுஞ் சீராட்டினூறுமடங்கு விசேடமாக நடாத்திவருங்காலத்தில் ஒருநாள் அச்சிறுவன் பஞ்சணையிற் பள்ளிகொள்ளும்பொழுது, காலிலே தேள்கொட்டி விடமேறுண்டதனால் கதறிப்புலம்புதலும், அதுகேட்ட தாய்மார் நூறுபேருமஞ்சிப் பெருங்குரலிட்டுப் புலம்பினர். அந்தப்பேரொலிகேட்டவுட னவ்வரசனும் மந்திரிபுரோகிதராதியரோடு கலங்கி ஒருதூதுவனை அனுப்ப, அவன் விரைந்து சென்று நடந்த சங்கதிகளை யறிந்தோடிவந்து அரசனைவணங்கி "மன்னனே, எங்கள் கண்மணியாகிய குமாரனுக்குத் தேள்கொட்டியது அவன் பதறியழுதல் கண்டு தாய்மார்கணூறுபேரும் புலம்புகின்றனர்" என்று சொல்லியபொழுதே, அரசன் மந்திரிபிரதானிபுரோகிதராதியோர்பின்றொடரத் தாங்கலாற்றாத பெருந்துயரோடெழுந்தோடிவந்து மாளிகையுட்புகுந்து மந்திரப்பிரயோகத்தாலும் ஒளடதாதிகளாலும் விஷமிறங்கும்படி செய்வித்து, குழந்தையையெடுக்கியணைத்துக் கொண்டாடி, வஸ்திரமும் பொன்னும் முத்துமாலையுமாதியபலபொருள்களை அம்மந்திரவாதிகளுக்குக்கொடுத்து மகிழ

ச்சியோடு செல்லும்மாறனுபபி, சிங்காசனத்திலிருந்து, மந்திரி முதலியோர்களது முகத்தைநோக்கி ஒருவார்த்தைசொல்லுகின்றான்: "மந்திரிகாள்! யாவருக்கும் ஏகபுத்திரனிருப்பதினும்பார்க்க இல்லாமலிருப்பது மிகவும நல்லது. தனிப்புத்திரனுக்கோரிடையூறு வருங்கால் தாங்கலாற்றுத்துயரமுண்டாகும். நானோ நூறுபெண்களைமுறைப்படி விவாகஞ்செய்தும் வயோதிபமடைந்தேன். எனக்கும் நூறுபெண்களுக்கு மொரேபுத்திரனுளன். அவனுக்குமொருகேடுவருமேயானல் நாமெல்லோருமுலகவாழ்வைத்துறக்க வேண்டிவரும். ஆதலால் நூறுபெண்களுக்கும் நூறுபுத்திரர்கள் பிறக்கும்படியாக வோருபாயத்தைப்பலநூலுணர்ச்சிகளையுடைய நீங்களே கட்டளையிடுங்கள். அதன்விதிகள் அரியவாயினு மெளியவாயினுஞ் செய்து முடிப்பேன். இதனைச்சற்றேயோசனைசெய்து சொல்லுங்கள்" என்றனன். அதுகேட்ட புரோகிதராதியோர் தீர்க்காலோசனைசெய்து சொல்லுவார்கள்.

"அரசனே கேட்பாயாக, சமுத்திரதீர்த்தத்திலே சேதுக்கரையில் கந்தமாதனமலைச்சார்பில் அனுமகுண்டமெனவோர் தீர்த்தமுள்ளது. அது முனிவர்களும் தேவர்களும் பிறருமவணங்கத்தக்கது. அதனைத்தரிசிக்கினும், தீண்டினும் பாவங்களனைத்தும் நீங்கும்; நரகவேதனையொழியும்; மோட்சமுண்டாகும்; களத்திர புத்திரப்பேறுகளையுந் தரும்; இட்டசித்திகளனைத்தையுங்கொடுக்கும். ஆதலால் நீ ஆண்டுசென்று ஸ்நானஞ்செய்து புத்திரகாமேட்டிசெய்குதியேல் நூறுமனைவியருக்கும் நூறுபுத்திரப்பேறுண்டாகும்" என்றனர். மசகமகாராசன் அதுகேட்டு நூறுபெண்களோடும் மந்திரி புரோகிதராதியரோடும் அனுமதீர்த்தக்கரையையடைந்து, விதிப்படிசங்கற்பித்து ஸ்நானஞ்செய்து, புத்திரகாமேட்டியைச் சித்திரைமாதமுழுதினுமங்கிருந்து சிறிதுந்தவறாது செய்து, புரோகிதர்கொடுத்த ஓம்சேடத்தை நூறுமனைவியர்க்கும் பகுந்துண்ணக்கொடுத்து, யாகத்தைமுடித்து அனுமகுண்டத்திலே மீட்டும் ஸ்நானஞ்செய்து, தசதானந்திகளும் பூரிகளும் பிராமணபோசனந்திகளுஞ் செய்து சிவானுக்கிரகம்பெறறு, தனதுபட்டணத்தையடைந்து, அரசாட்சி செய்யுங்காலத்தில், பத்துமாதஞ்சென்று நூறுபெண்களும் நூறுபுத்திராகளைப் பெற்றார்கள். அரசனும் உடனே மகிழ்ந்து சாத கருமாதிகளை செய்து பல தானங்களையுங்கொடுத்தனன். மூத்தவளுக்கிரண்டு புத்திரர்களும், மற்றவர்களுக்கொ

வ்வொரு புத்திரருமாக நூற்றொருபுத்திரர்களும், மிக்கதோற்ற முடையோர்களாய் வருமிடத்து, அரசனுந் தனது தேசத்தை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துச் சிவானுக்கிரகத்தைச் சிந்திசதுயிர்துறந்தனன். நூறுமனைவியர்களு முடன்கட்டையேறினா மூத்தமகனாகிய சந்திரன தந்தைதாயருக்குரிய நீக்கடனீர்க்கடன் செய்துமுடித்தனன்.

மதகமகாராசனுந் தான்செய்த புண்ணியப்பேற்றினால நூறுமனைவியரோடும் வைகுண்டமடைந்தின்புற்றனன் சந்திரனும் நூறு தம்பியர்களோடு வேற்றுமையின்றி அவரவாபங்குப்படியரசாளவைத்துத் தானெல்லோருக்கு முதல்வனாக விருந்து குடிகளைமகிழச்செய்து மனுநீதிதவறா துலகரசாட்சிசெய்திருந்தான் இந்தச்சரித்திரத்தை வாசித்தோரும் இத்தீர்த்தமகத்துவத்தை யறிந்து ஸ்நானஞ்செய்து வழிபட்டோரும் சுவர்க்காதிபதவிகளை யடைந்து வாழுவர்.

"எழில்வைகுண்டமடைந்தனன்மாதரோர்டிறையதன்பினர் சந்திரனாதியோர், பழுதின்மொய்ம்பொடுமுன்பகிர்பாரெலாம்ப கையொழிந்துபுரந்தனர்நாளுமே, யழிவறும்புகழ்மன்செயலோர்டுநீடனுமகுண்டமதன்றகைகூறினே, முழுகுமின்கணலம்பெற நாடுவார்மொழிதருங்கதையும்பரில்வாழ்வரே"

அனுமகுண்டச்சருக்கமுற்றிற்று.

# அகத்தியதீர்த்தச்சருக்கம்.

சூதமகாமுனிவரானவர் வேதவியாதமுனிவரை வணங்கிக்கொண்டு முனிவர்களைநோக்கி முனிவர்காள்! அனுமகுண்டத்திலே விதிப்படி முழுகினவர்கள் பின்பு அகத்தியதீர்த்தத்திலே முழுகுவது முறையாகும். ஆதலின் அகத்தியதீர்த்தத்தினது மகத்துவத்தைக் கூறுதுங் கேளுங்களென்று சொல்லுவார்.

முன்னொருகாலத்திலே விந்தகிரியானது நாரதமுனிவருடைய துாபபோதனையினால் அகங்காரமடைந்து மேருமலையோடு பகைத்து ஆகாயவெளி மறையும்படி யுயர்ந்து மூடியது அதனால் உலகமுழுது மிருளடைய, உயிர்கள் மூச்சுவிட இடமி

ன்றி . பிரமன் முதலிய தேவர்களதுகண்டு வருந்தித் திருக்கயிலாயபதிக்கு அதனைவிண்ணப்பஞ்செய்தனர். இமயம லையரசன் புதல்வியாகிய உமாதேவியாரைத் திருக்கலியாணஞ் செய்யும்பொருட்டுச் சத்தமுனிவர்களால் மணம்பேசுவித்து விவாகஞ்செய்ய வுத்தேசித்திருந்த சிவபெருமான், இதனைக்கே ட்டு அகத்தியமுனிவரைநோக்கி "அகத்தியனே! நீ சென்று வி ந்தகிரியை யடக்குதி" யென்றனர். அதுகேட்ட அகத்தியமகாமு னிவரானவர், அச்சமடைந்து "ஐயனே! தேவரீரது திருமண க்கோலத்தைத் தரிசிக்கும் பேரவாவுடையேன் அதுகாணாது போதற்கு யாதுகுற்றஞ்செய்தேன்" என்றுவருந்த; சிவ்பெரு மான் "அகத்தியனே வருகுதி" யென்று பக்கத்திலழைத்து, அ வரது அச்சத்தைமாற்றித் திருமறைக்காடென்னுந் திவ்விய க்ஷே த்திரத்திலே எமது திருமணக்கோலத்தைத் தரிசிப்பிப்போம், இப்பொழுது நீ சென்று தேவர்களது துயரத்தையொழிக்குதி" யென்று கட்டளையிட்டனர்.

அகத்தியமகாமுனிவரும் விடைபெற்றுத் தென்றிசையை நோக்கிச்சென்று, ஆகாயவெளியை யடைத்தோங்கிநின்ற விந் தமலையைக்கண்டு, தமது திருவடியை அதன்மேல் வைத்தூன் றி நிலத்துளமிழ்த்தி முன்போலாக்கி அனைவருக்கு மகிழ்ச்சியை க்கொடுத்து, கந்தமாதனமலைச்சாரலை யடைந்து அதன்பெரு மைகளையறிந்து அங்கே தமது பெயராலொரு தீர்த்தமுண்டா க்கித் தாமுமங்கே வீற்றிருந்தனர். அத்தீர்த்தம் இறப்பு நிகழ்வு எதிர்வாகிய முக்காலத்தினு மிக்கசிறப்புடையது. தன்னையடை ந்தவர்களுக்குச் செல்வங் கல்விமுதலிய இன்மைப்பயன்களையும் மோட்சத்தையுங்கொடுப்பது; தனக்குத்தானே யொப்பாகியது. அத்தீர்த்தத்தின்பெருமையைவிளக்குஞ் சரித்திரமொன்று சொ ல்லுகின்றோங்கேளுங்களென்று சூதமுனிவர் சொல்லுவார்.

பிராமணகுலத்திலே தீர்க்கதமனென்பவருடைய புத்திர ன் கக்கீவானென்பவன் உபநயனுந்தமாயகிரியைமுடிந்தபின்னே ர் பிரமசரியவிரதந்தவறுதனுட்டித்து, உதங்கமுனிவரையடைந் து வழிபட்டு வேதாத்தியயனஞ்செய்யும் பொருட்டு, சிட்சை சோதிடம் கற்பம் சந்தோபிசிதி நிருத்தம வியாகரணம ஆகிய வேதாங்கங்களையும் புராணங்கள் இதிகாசங்கள் உபநிடதங்கள் மிருதிகளாகிய நூல்களையும் அறுபது வருடம் வரையுமிருந்து மாணுக்கமுறை சிறிதுந்தவறுது கற்றுமுடித்து, தன்னூரிற்போ யக் குற்றமற்ற பல்பொருள்களைத் தேடிக்கொண்டு வந்து குருத

க்கிணையாக ஆசாரியர் சந்நிதானத்தில் வைத்து விண்ணப்பஞ் செயவான், "சுவாமிகாள்! தேவரீரது திருவருளினால் வேத முதலிய பூலகலைகளையும் பிரமசரியவிரதத்தோடிருந்து கற்றுவ ல்லனாயினேன். இனி இல்லாச்சிரமத்தை அனுட்டிக்கமனதிரு க்கிறது அதற்குத் தேவரீர் கட்டளையிடடருளுக" என்றுவே ண்ட, அதற்கு உதங்கமுனிவருமகிழ்ந்து "எனதன்பனே! நீவிரு ம்பியபடிசெய்குதி" ஆயின் அதற்கோருபாயஞ் சொல்லுகிறே ன், இராமேச்சரத்திலே சேதுக்கரையிலே கந்தமாதனமலைச் சாரலிலே அகத்தியதீர்த்தமெனச் சிறந்தவாவியொன்றுளது. அ து பூருவசன்மத்திலுள்ள பாவங்களைப்போக்கி இட்டசித்திகளை க்கொடுக்கு மியல்பையுடையது. ஆதலால், நீ அதிலே மூன்று வருடந் தவஞ்திருந்து ஸ்நானஞ்செய்குதி. நான்காவது வரு டத்திலே, நான்குகோடுகளும் கொழுத்தகால்களும் வெண்மை நிறமும் சேடனுநடுங்கும்படியாக வுரத்தகாலடிகளும் திருப்பாற் கடலைத் திவலைபடச்சிந்துஞ் செவ்வியவாலும் அண்டபித்திகைக ளைத்தேய்க்கும் பின்புறமும் ஆகாயமுகட்டைக்கிழித்தங்குள்ள பொருள்களைவாரும் நீண்ட துதிக்கையும் பூமியைப்பிளக்கும் வலி யகொம்பும் அப்பூமிமண்ணைக்குழைபடக் கரைக்கு மதசலப்பெ ருக்கும், திசைக்கரிகளைக்கலக்கும் பெருமுழக்கும் வடவாமுகாக் கினியையவெருட்டும் வாட்கடைக்கட்டீடயும் மலைகளைவேரோடுபிடு ங்குஞ் செவிக்காற்றும் உடையவொரு யானையானது, இந்திரன துஐராவதமானது நித்திரை மயக்கத்தால் வழுவி யிததடாகத்தி ல்விழுந்தெழுவதுபோல எழும். நீ அதன்பிடரிலேறி "கண்டோ ர்கள் இரண்டாமிந்திரனென்று சொல்லும்படியேறிச் சுவநய ன் என்னுமரசனது தேசத்துச்செல்லுதி, அவ்வரசன்றனது ம களது துன்பமாறியதென்று நின்னைக்கண்டுமகிழ்ந்து தனது ம கனா விவாகஞ்செயது வைப்பன். அவனது மகள் நான்குகோ டுகளையுடைய வெள்ளானைமீதேறிவருபவனையன்றிப் பிறரை வி வாகஞ் செய்யேனென்று வாக்குக்கொடுத்தனள். அதனையவ ள் தந்தையாகிய சுவநயனறிந்து இது இந்தச் சனனத்திலிசையு மோவென்று மனம்வருந்த, நாரதமுனிவ ரவ்விடத்துவந்தனர். அவரைமிகவுமுபசரித்து அவருக்குத் தனதுமகளது கருத்தை ச்சொல்லிப் புலம்புவான். "ஐயனே! வெள்ளானைதேவலோ கத்துள்ளது; அதன்மேலேறுபவன் இந்திரனொருவனே, அவன் பூலோகத்துவருவதுமில்லை எனதுமகள் விவாகஞ்செயவதுமி ல்லை. அழகிற்சிறந்தபெண்களை விவாகஞ்செய்து கொடாதிரு ப்பரேல் அது தந்தைதாயருக்குப பெருந்துயரமாகும். இதற

குவழி தேவரீரே கட்டளையிடவேண்டுகு" வென்றுபிரார்த்தித்தன ன். அதுகேட்ட நாரதமகாமுனிவ ரரசனைநோக்கி "மன்னவ னே, நீ யிதனைக்குறித்து அஞ்சுதலொழிகுதி. கக்கீவானென்னு மொருவேதியன் இன்னுஞ்சிலகாலத்திலுனது மகளைகருத்துக் கிசைந்து வருகுவன்" என்றருளிமறைந்தனர் அரசனு மு னதுவரவை யெதிர்நோக்கி யிருக்கின்றனன். ஆதலாலிப்பொ ழுதே அகத்தியதீர்த்தத்தையடைந்து ஸ்நானஞ்செய்குதி" யெ ன்றேவ உடனே கக்கீவானுங் குருவைவணங்கி விடைபெற்று அவரருளியபடி மூன்றுவருடம் அத்தீர்த்தத்தில் முழுகித்தலோ பவாசஞ்செய்து தவமியற்றிப் பாரணையுமுடித்து அன்றிரவு நியு திகளைமுடித்து அதன்பக்கத்திலே நித்திரைசெய்தனன்.

நான்காம்வருட முதனாளிரவு கடையாமத்திலே சத்தசாகர த்தின்முழக்கம்போன்று ஒருபேரொலியுண்டாக, அதுகேட்ட கக்கீவான்விரைந்து திடுக்கிட்டெழுந்து சிவத்தியானபரனாயிரு ந்தனன். அந்தச்சமயமே நீரும் பூட்டையும்போல மாறி மாறி நிகழும் பாவத்தொடர்புநீங்கிய கக்கீவானதிசுத்தனாயிருக்க, அக த்தியதீர்த்தத்தினின்றும் நான்கு தந்தங்களையுடைய வெள்ளா னையொன்று தோன்றித் தனதுபக்கத்தில்வரவும், அதனைக்கண்டு நமதாசிரியர் சொல்லிய மதயானையிதுதானென்று சிந்தித்தெ ழுந்து அத்தீர்த்தத்தின் முழுகி யதனைவலமாகவந்து நமஸ்கரி த்து அதன்மேலேறிச் சுவநயவேந்தனது தேசத்தையடைய ச்சிந்திக்குமிடத்து, இதற்கு முன்னாளில் மதுராபுரியை யரசா ளுஞ் சுவநயவேந்தனானவன், வேட்டையாட விரும்பிச் சதுர ங்கசேனைகளோடெழுந்து காடுகளிற்சென்று வேட்டையாடி கந்தமாதனச்சாரலையடைந்து களைப்புற்று நீர்வேட்கையுடையோ னாய் அகத்தியதீர்த்தக்கரையை யடைந்து, அங்கே வெள்ளா னைமீதேறி வருங் கக்கீவானைக்கண்டு வணங்கி, ஐயனே! வருகு தி, நின்பெயர் யாது? உனதுதந்தை யார்? இந்தயானையின்மீதே றியெங்குப் போகின்றனை சொல்லுதி என்னவும், கக்கீவானு ம் "மன்னனே! எனதுபெயர் கக்கீவான் தந்தைபெயர் தீர்க்கத மன், எனதாசிரியர் உதங்கமுனிவரது காருண்ணியத்தினாலிது நாள்வரையுஞ் சகலகலைகளையுங்கற்று அவரது ஆணைப்படி மூ ன்றுவருடமித்தீர்த்தத்தின் முழுகிச் சிவாநுக்கிரகத்தினாலிங்கே கிடைத்த இந்தவெள்ளானைமீதிலேறி மதுராபுரியிற் சுவநய வேந்தனுடைய மகளைக்கல்யாணஞ் செய்யப்போகின்றேன், என்று தனது வரலாறுமுழுதையுந் தவறுதுசொல்லினன்

அதுகேட்ட சுவநயமன்னவனும் அடங்காத பேரானந்தசாகரத்தமிழ்ந்தி "அந்தணர்திலகமே! எவ்வரசனுடைய மகளை நீயெடுக்க நினைந்தனையோ அவ்வரசன்யானே நீயணைந்தது மிகவுநன்று முன்னரனுட்டிக்கும் பிரமசரிய விரதமுடித்து என்து மகளைவிவாகஞ் செய்து இல்லறமாகிய நல்லறமியற்றுதி" என்றனன். அதுகேட்ட மறையவர்திலகனும் மனமிக மகிழ்ந்து "மன்னனே! எனது தந்தையாகிய தீர்க்கதமன் வேதாரணியத்தில் வேதமுதல்வனை வேண்டி விடாததவமியற்றுகின்றனன், அங்கேயுனது புரோகிதனை யனுப்பி அவனைவரச்செய்வையேல நமதெண்ணம் நன்றாகும்" என்றனன். அரசன அதுகேட்டங்ஙனமாகுகவென்று தனது புரோகிதனாகிய சுதரிசனனை விடுத்தனன். அந்தப்புரோகிதனும் பலவகைச்சேனைகளோடெழுந்து வேதவனத்திற்றீர்க்கதமனிருக்கும் பர்ணசாலையை யடைந்து, அவனுடைய பாதங்களில் வணங்கிசசிறுயின்பச் செடிதாண்டிப் பேரின்பப்பெருமரம் பற்றுமைம்புலப பெருங்கொழுந்துடையோய்! நீசெய்யுந்தவதருமங்கள் முக்குறறமொழிந்து முறைநடக்கின்றனவா வொழிுக" வெனவினவ அதுகேட்டதீர்க்கதமன் சொல்லுகின்றான். "ஐயனே! பரப்பிரமத்தின் றிருவருளால் யாதுங்குறையில்லை உனதுக்ஷேமாதி சயங்களெப்படி? நீ சுவநயவேந்தனுடைய புரோகிதனாயவனை யொருகாலமும பிரியாதிருப்பையே அதுவிடுத்திங்கு வந்த முறைமையை மொழிகுதி" என்றுவினவுதலும், அதுகேட்டு "சுதரிசனமுனிவே! உனது நண்பினால் யாதுங்குறையில்லை, க்ஷேமமாகவிருக்கின்றேன், எனதரசனானவன் வேட்டையாடச் சென்றபொழுது, கந்தமாதனத்தில அகத்தியதீர்த்தக்கரையில் அருந்தவமிழைக்கின்ற உனதுமகன் கக்கிவானுடைய குணமு மழகு மொழுங்குமன்பு மறிவுமாகியவற்றை யறிந்து, தனது மகளையவனுக்கு விவாகஞ் செய்து கொடுக்க நினைத்துத் தனதுகருத்தைத் தெரிவிக்க, அவனுமுனது சம்மதமறியவேண்டுமென்ன, உன்கருத்தறிந்து அழைத்துவரும்படி யென்னையனுப்பினன். ஆதலால், நம்மரசனது செல்வியை உனது திருக்குமாரன் விவாகஞ்செய்யுமாறு சித்தமிரங்கி இச்சேனைகளோடு மெழுந்தருளிவருக" வெனப்பிரார்த்தித்தனன். அதுகேட்ட தீர்க்கதமனும் மிக்ககளிப படைந்து, இது எமக்குமுடம்பாடே நாமுமிப்பொழுதே வருகின்றோமென்று வேதவனப் பெருமானைவணங்கி விடைபெற்று, அவர்களோடும ஆறுதினத்திற் கந்தமாதனமலைச் சாரலிலுள்ளதீர்த்தக்கரையை யடையவும், கக்கிவானாகிய மைந்தனும், சுவ

நயவேந்தனும் அம்முனிவரது வரவைக்கண்டெதிர்கொண்டு வணங்க, முனிவரும், நெடுங்காலம் தம்மைப்பிரிந்திருந்தவரு செய்து பெரும்பேறடைந்தமகனையும் அரசனையுமாசீர்வதித்து க்ஷேமங்களை ஆராய்ந்தனர். அதுசமயத்துத் தனக்கொப்புயர் வில்லாத உதங்கமுனிவரானவர் இலக்கமுனிவர்களோடு சேதுவின்கணுள்ள தனுக்கோடியில் ஸ்நானஞ்செயயும்படி யங்கேவந்தனர். அதுகண்ட கக்கீவானுகிய மாணக்கன்விரைந்தெழுந்து வணங்கி ஆசீர்வதிக்கப்பெற்று நிற்ப, தீர்க்கதமனும் உதங்கமுனிவரு மொருவரையொருவர் க்ஷேமாதிசயங்களை வினுவிமகிழ்ந்தனர். சுவநயவேந்தனும் வந்து உதங்கமுனிவரைவணங்கி யாசீர்வதிக்கப்பெற்றுமகிழ்ந்தனன். சுவநயவேந்தனைவன் தீர்க்கதம முனிவரை நோக்கி "சுவாமீ! தேவரீருடைய புத்திரனுக்கு அடியேனுடைய புத்திரியை விவாகஞ் செய்தருளுக" என்று பிரார்த்தித்தனன். அது கேட்ட தீர்க்கதமமுனிவர் சுவநயவேந்தனை நோக்கி "அரசனே விவாகஞ் செய்தற்கு ஏற்ற சுபதினமுமடுத்ததாளே, விவாகஞ்செய்யுமிடமும் இவ்விடமே. ஆதலால் நினது புத்திரியை ஈண்டு அழைக்குதி" என்றனர். அரசனும் அங்ஙனஞ் செய்குவேன் என்று விரைந்து சென்று தன்வாயிற்காவலாளருட் சிலரை நோக்கி "நீங்கள் விரைந்து நமது மதுரா புரிக்குப்போய், நமது புத்திரிக்கு விவாகஞ் செய்தற்கேற்ற சுபதினம் சமீபித்தலால் அவளை அழைத்துவாருங்கள்" என்று கட்டளை இட்டனன். அதுகேட்டதூதுவர் அரசனைவணங்கி, அதிவேகத்தையுடைய குதிரைமேலேறி மதுராபுரியை அடைந்து, விவாகசங்கதியைத் தெரிவித்து, அரசன் மனைவியரோடு மகளையும் அழைத்து வந்து அரசன் பக்கத்தில் விடுத்து வணங்கினர்.

தீர்க்கதம முனிவரானவர் உடனே தமது புத்திரனுகிய கக்கீவானைக் கொண்டு சமாவர்த்தனக்கிரியை முடித்தனர். கக்கீவானும் மணவாளக்கோலங் கொண்டு வெள்ளானைமேலேறித் தன்பிதாவும் உதங்கமுனிவர் முதலாகிய இருடிகளும் வியந்து ஆசீர்வதிக்கவும், தேவருலகத்திலிருந்தும் இறங்கிய இந்திரன்போல வரக்கண்டு மணவிாளியாகிய இராசகன்னிகையுந் தனதும்மனச்சங்கற்பம் நிறைவேறியதென்று மனங்களிக்கவும், அரசன் மகிழ்ந்து எதிர்கொள்ளவும், மணச்சாலையை அடைந்தான். அப்பொழுது மணவாட்டியாகிய இராசகன்னிகையை அலங்காரஞ்செய்த சேடியர்கள் ஆலாத்தியெடுத்தனர். சுவநயவேந்தனும் முனிசிரேட்டர்களையும் மணவாளனையும் அழைத்துக்

கொடும்போய் அவரவருக்கேற்றபடி அருக்கிய பாதமும் ஆசமனாதிகளால் உபசரித்துப் புடைவை வீட்டில் அமைக்கப்பட்ட ஆசனங்களில் இருத்தி, பின்பு இலக்குமிமுதலிய தேவப்பெண்களினும் பேரழகுவாய்ந்த தன்மகளாகிய மணவாளியைப் புரோகிதருடனே வரச்செய்து, புதிதாக அலங்கரிக்கப்பட்ட விவாகசாலையினுள் தக்க தக்க ஆசனத்தின்மீது பொலிவடையுமாறு இருத்தினன்.

மணவாளி யெழுந்து நின்று சண்பகப்பூமாலையைக் கையிலேந்தி, அச்சபையினுள்ளார் மிக்ககளிப்படைய, கக்கீவானாகிய மணவாளனது கழுத்தில் மங்கலவாச்சியங்க ளொலிப்ப அணிந்தனள். உதங்கமுனிவர் வேதவிதிசிறிதும் பிறழாது அக்கினிவளர்த்து விவாக கிருத்தியத்தை முடித்து பாணிக்கிரகணஞ் செய்வித்து ஆசிசொற்றனர். தீர்க்கதமனுனவன் உதங்கர்முதலிய முனிசிரேட்டர்களுக்கும், சுதரிசனர்முதலிய அரசன்பக்கத்து வந்த முனிவர்களுக்கும் திருமணக்கோலங் காண அங்குவந்த ஆயிரத்து முந்நூறு பூசுரராதியோர்களுக்கும், தேவாமிர்தத்தை முன்னாளிற் பகிர்ந்து கொடுத்த விட்டுணுவைப்போல, விருந்தளித்து, தக்க தக்க வுபசரணைகள் செய்து சுவநயவேந்தன் களிப்படையுமாறு நடத்தினன். அதன்பின்பு உதங்கமுனிவரும் ஏனைய முனிவர்களோடு விடைபெற்றுத் தமதாச்சிரமமடைந்தனர். வெள்ளானையும் அகத்தியதீர்த்தத்தின் முழுகிமறைந்தது. தீர்க்கதமனும் அரசனைநோக்கி இனி யாமனைவரும் வேதவனத்தையடைய வேண்டுமென்னுந் தனதுவிருப்பை வெளிப்படுத்த, அரசனுமிகமகிழ்ந்து, தனதுமகளபொருட்டுச் சீதனமாக இலக்கம் பொன்னையும், ஐஞ்ஞூறு ஊர்களையும், பதினாயிரம் விசித்திர வஸ்திரங்களையும், நூறு ஆபரணப்பெட்டிகளையும், நூறு சேதாக்களையும், ஆயிரஞ்சேடியர்களையும், ஆயிர முத்துமாலைகளையும், ஆயிரம் ரத்தனாபரணங்களையும் கொடுத்தனன். தீர்க்கதமனும் அவற்றை மகிழ்ந்து வாங்கி மகனொடும் மருகியோடும் அகஸ்திய தீர்த்தத்தில ஸ்நானஞ்செய்து, வேதவனத்தையடைந்து வேதவனப் பெருமானை வணங்கித் தனது பர்ணசாலையை யடைந்து இருந்தனன். கக்கீவானும் இராசபுத்திரியோடு புணர்ந்து பலநாளனுபவப்புறறிருந்தனன். சுவநயவேந்தனும் அகஸ்திய தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து மதுராபுரியை யடைந்து அரசியல் நடாத்தி யிருந்தனன.

கக்ஷீவானென்பவன் அகஸ்தியதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்த பெருமையினாலே உயர்வொப்பில்லாத மணஞ் சிறப்படைந்த இச்சரித்திரத்தை உபவேதங்களும் புகழ்ந்து கூறும். அது இம்மைக்குச் செல்வத்தையும் மறுமைக்கு மோக்ஷத்தையுந் தவறாது கொடுப்பது. ஆதலினாலே முனிவர்காள்! நீவிர் இச்சரித்திரத்தைப் படித்து ஆராயுங்கள் இதனைப் பிறருக்கு உபதேசித்தவரும் பெருஞ்சிறப்படைவர் என்று சூதமுனிவர் திருவாய்மலர்ந்தருளினர்.

ஒருதமிழ்முனிதடமிசைக்காலே யுபமனின்மணமது கக்ஷீவான்
புரிகதைமறைபகர்பொற்பாலே புகழ்திறமுடையதுதப்பாதே
தருவது திருவொடுமெய்ப்பேறே தவநறமுனிவிர்படிப்பீர்நீர்
மரபினில்வனவுதிரநற்சீரே மருவுவரிசைசெயலுற்றாரே.

அகத்தியதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

## இராமதீர்த்தச்சருக்கம்

வியாத மாணாக்கராகிய சூதபௌராணிக முனிவரானவர் மற்றைமுனிவர்களை நோக்கிப் பின்னுஞ் சொல்லுவார் "முனிவர்காள்! அகத்தியதீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ் செய்தோர் பின்பு இராமதீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்தல் முறையாகும். இந்த இராமதீர்த்தமானது பலவிதயாகங்கள் செய்த பலனைத்தரும்; தீமைகளனைத்தையுங்கெடுக்கும். அத்தடாகக்கரையிலே ஒருபிடி பிட்சையிடினும் அது அளவின்றிப் பெருகும். சௌனகாதி முனிவர்காள்! இந்த இராமதீர்த்தத்தினது விசேடத்தை யுணர்த்துஞ் சரித்திரமொன்றுளது அதனைச் சொல்லுதும் கேட்பீர்களாக.

பொதியமலையிலுள்ள அகஸ்திய மகா முனிவருடைய மாணாக்கராகிய சுதீக்ஷணரென்பவர், பிரமாவினுஞ் சிறந்த தவமுடையவராய், ஸ்ரீ. ராமனை இடையறாது சிந்தித்து அவனது மூல மந்திரத்தைத் தினந்தோறும் ஐயாயிரம் உருத்தவறாது செபிப்பவராய், பிட்சையெடுத்துண்டு பசியை ஒழிப்பவராய், வலியபஞ்சபுலவஞ்சருக் கஞ்சிடாதவராய், தமக்குரிய ஒழுக்கத்திற் சிறிதுந் தவறாதவராய், வறுமையோடு அளவில்லாத காலமிருந்து ஸ்ரீ. ராமனையும் சீதாபிராட்டியாரையும் தமது மனமாகிய துகிலிலே

எழுதி, "கௌசலாதேவி திருக்குமாரரே, சீதாபிராட்டிநாயகரே, அநுமானது நண்பரே, தேவர்கள் கொண்டாட வில்லை முறித்த வீராதிவீரரே, தாடகாசங்காரரே, விஸ்வாமித்திர யாகரட்சகா, கரனுயிர்நாசகா, கவந்தராட்சதனையும் கள்ளமாரீசனையுங் கொன்ற கண்ணபிரானே, கருங்கல்லைப் பெண்ணாக்கிய காலகளையுடையவரே, பரசுராமனுடைய வலிமையைக் கவர்ந்த வீரரே; சுக்கிரீபனைத் தொண்டுகொண்டவரே, தசரதமகாராசாவினது செல்வமே, வாலியை வதைத்த வலியரே, அல்லும் பகலும் அகலாதடிவருடிய அன்புமிக்க இலக்குமணனோடு பரதனைச் சமமாகப்பாவித்தவரே, இராவணனுடைய தம்பியாகிய விபீஷணனுக்கு அபயங்கொடுத்தவரே, வலிய கடலையடைத்து இராவணனைக்கொன்ற விற்குருவே, பலவுயிர்களுக்கும் பழவினையைமாற்றி அருளளிக்குங் கிருபாசமுத்திரமே, யாவருக்குங் கண்கண்டதெய்வமே, யானுமதடியவன் என்னை நீர் ஆளுதல்வேண்டு" மென்று துதித்து ஸ்ரீ ராமனது பாதங்களிலன்பு தழைக்கக்காமாதிகளை வென்று அருந்தவமியற்றினர்.

ஸ்ரீ ராமன் சுத்தமாகிய மனதையுடைய சுதீக்கிணரது பெருந்தவத்துக் கிரங்கிக் கிருபாநோக்கஞ் செய்தலால் பிரணவப்பொருளும் வேதப்பொருளும் கலைஞானங்களுந் தானேவரப்பெற்று, உடம்போடு எல்லாவுலகினுஞ் செல்லவும் பரகாயப்பிரவேசஞ் செய்யவும் தேவபாஷைமுதல் எறும்புப் பாஷையிறுதியாகிய எப்பாஷைகளையும் பேசவும் திரிமூர்த்திகள் பதவிகளிற்செல்லவுஞ்சத்தியைப்பெற்று, இன்னும் எவர்களாலும் வாயினாற சொல்லற்கரிய நானாவிதப்பொருட்காட்சிகளையும் உணர்ந்தனர்

முனிவிர்காள்! நெடுநாளருந்தவம் பயின்றுபெறும் யோகசாதனானுபூதிப்பேறனைத்தையுஞ் சுதீக்கிணர் இராமதீர்த்த ஸ்நான பலத்தாற் பெற்றனர். ஸ்ரீ ராமன் தனது தீர்த்தக்கரையிலே காளகண்டராகிய சிவபெருமானது பஞ்சசாதாக்கியங்களுள்ளே கருமசாதாக்கிய மூர்த்தியை மூலலிங்கமாகத் தாபித்தருச்சித்த மகிமையால், அது மேலே சொல்லிய பெருமைகளனைத்தும் பொருந்தப் பெற்றதாய், தன்னிடத்தே ஸ்நானஞ்செய்வோரைக் கொடிய பஞ்சபாதகங்களும் துன்மரணமும் நணுகாமற்றடுப்பதாய், தருமத்தினுயர்ந்ததாய், ஸ்ரீ ராமனிடத்தே பத்திவிளைப்பதாய் உள்ளது. ஸ்ரீ ராமன் உயிர்கள் தழைப்பத் தன்னன்பினால் முப்புரதகனராகிய சிவபெருமானைப் பூசித்தனன் அவ்விராமநாதனை வணங்குபவர்கள், இம்மையிலே போகத்தையும் மறு

மையிலே மோட்சத்தையும் அடைவர்கள். தருமபுத்திரரானவர் இராம தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து இராமநாதனைத் தரிசித்துப், பொய்சொலலிய பாவத்தைப் போக்கினரென்று சூதமுனிவர் சொல்லியவளவில், முனிவர்கள் எழுந்து வணங்கி, "ஐயனே தருமபுத்திரர் முன் யாதுகாரணத்தாற் பொய் கூறினர்? அதனைச்சிவபெருமான் எவ்வாறு நீக்கியருளினர்? அதனை முறையே திருவாய்மலர்ந்தருளுக" என்று வேண்டச் சூதபௌராணிகர்சொல்லத்தொடங்கினர்.

முன்னாளிலே பஞ்சபாண்டவர்களும் திருதராட்டிரன் புத்திரர்களும் பகைத்துக் குருபூமியையடைந்து போர்செய்யுமிடத்து ஸ்ரீ வீட்டுமர் துரியோதனனுக்குச் சேனாதிபதியாய்ப் பத்துநாள்வரை யுத்தஞ்செய்து தளர்ந்து விழுந்தபின்னர், துரோணாசாரியர் சேனாதிபதிப்பட்டம்பெற்று ஐந்துநாள் வரையுந் தருமர் பக்கத்துச் சேனாதிபதியாகிய திட்டத்துய்மனோடெதிர்த்து அம்பு மழைகளைச் சொரிய, பாண்டவச் சேனைகள் மாயந்தன. அதுகண்டு அருச்சுனன் துரோணாசாரியரோடு எதிர்த்துப் போர் செய்தனன். வில்லாசிரியனும் வில்விசயனு மியற்றிடும் போரானது அதி விசித்திர விநோதமாயிருக்குமென்று தேவர்களும் வியந்து நோக்கினர். புலவர்கள் தாம் புகழ்ந்துபாடுவதற்கு இதுபோலப் பிறபோரின்மையின் "இதர இதரமென்று" புகழ்ந்தார்கள். இங்ஙனமே இருவீரரும் சூரியன் மறையுமாறு அம்புகளை விடுத்துப் போர்செய்துழி, துரோணாசாரியரானவர் அருச்சுனனது வில்லாண்மையை மிகவும் புகழ்ந்து, அவனோடு போர் செய்ய ஆற்றாது, திட்டத்துய்மனோடு நின்றுபோர்செய்து, அநேக ஆயிரக்கணக்கான அரசர்களையழித்துத் தனதணிவகுப்பைக்கலக்க, திட்டத்துய்மனும் பெருங்கோபமடைந்து துரோணாசாரியரை மிகவருத்தத் துரோணாசாரியரும் அவனை வாளினாலடித்துப் பின்னிடச்செய்தனர். அதுகண்டு வீமசேனன் விரைந்தோடிவந்து துரோணாசாரியரை நோக்கி, அந்தணராயுள்ளவர் பிறருக்கிடர்செய்வரோ? அவர்கள் மெய்யுணர்வுடையராகலின்சத்துருக்களென்றுந் தமரென்றும் வேறுபாடெண்ணுவார்களோ? பெரியோர்கள் செல்வராயினும் வீராதிவீரர்களாயினும் எத்துணைப்பேரிடர்வரினும் தத்தமக்குரிய நீதிகளில் தவறுவார்களா? அருளுடையோர்கள் பெருங்கேடுவரினுஞ் சாதியொழுக்கந்தவறிக் கெறுக்கொண்டு கொலைசெய்வாரகளா? வேதியர்களுக்கு ஒழுக்கங் கொல்லாமையேயாக, நீர் வெறறியென்று உம தொழுக்கந்தவறி எளிய வேடுவர் செய்யுமிழிதொழிலைச் செய்

யலாமோ? வேதவொழுக்கமிகநன்று! நன்று! துரோணரே, நீர் போர்க்கோலங்கொண்டு பல அரசர்களைக் கொல்லக் கருதினீர், உமது பின்புறங்கட்டியது அம்பறாத்தூணியோ வேதபுத்தகங்களமைத்த கவளிகையோ! உமது கையிற் பிடித்தது வில்லோ பலாசந்தண்டோ! உமது வில்லிற்கட்டியது நாணியோ புத்தகங்கள் கட்டுங்கயிறோ! உமது வலக்கையிற்றரித்தது பாணமோ புஸ்தகங்களெழுது மெழுத்தாணியோ! நீர் தரித்தவாட்படை யாகப்பசு வந்தைப்பதோ அரசரைக் கொல்வதோ! நீரேறிவருவது போருக்குப் பூட்டியதேரோ பலவிதயாகங்களைச்செய்து முடிவிலேறிவரும் பிரமரதமோ! உபவீதமாதிய பிராமண வடிவத்தோடு கொலைக்கருவிகளையேந்திய உமது வேடம், பிராமணவேடமோ இராசவேடமோ! புறக்குருடன்றி யகக்குருடையும் படைத்த அந்தகன் புதல்வருக்காக மிக்க உற்சாகத்தோடு அமராடுகின்றீர், உமது புத்திரனாகிய அசுவத்தாமன் இறக்கவுஞ் சிறிதுங் கலக்கமின்றி நின்றீர். உமது மேன்மை மிகவும் வியக்கத்தக்கது'' என்றின்னோரன்ன பலபேசினன். துரோணாசாரியரும் இவனது சொல்லை நம்பாது நிற்றலின், கிருட்டிணனுடைய ஏவுதலினால், தருமபுத்திரர், அசுவத்தாமாவென்னும் யானையானது இறந்தமைகருதிக் கவர்பொருள் படத்தக்கமொழியாக "அசுவத்தாமாவென்னுமதயானைபட்டதே'' என்றனர். அதுகேட்டமாத்திரத்தே துரோணாசாரியர் தமது மகனாகிய அசுவத்தாமன் இறந்தானென்று கருதி, படைக்கலங்களை யெறிந்து தேரிலே விழுந்து, தமதுயிரை யோகசாதனையாற் சுழுமுனாநாடிவழியாக மேலே செலுத்தநினைக்கவும், அதற்குள்ளே திட்டத்துய்மனும் வாளைக்கையிலேந்தி, தருமராதியோர் "நிராயுதரைக்கொல்லலாகா''தென்று விலக்கவும் அதனைச் சிறிதுமெண்ணாது, தலையையரிந்தனன். அதன்முன் துரோணாசாரியர், தமதுயிரைத் துவாதசாந்தவழியே விடுத்து, கிருபாசாரியர் அருச்சுனன் மற்றை யதுகுலமன்னவர் காணுமாறு சுவர்க்கலோகமடைந்தனர். சேனாதிபதி விழுந்தவுடனே சேனைகளெல்லாங் கெட்டொழிந்தன. அச்சமயத்தில் அசுவத்தாமன் துரியோதனனைநோக்கி "அரசனே! நமது சேனைகளனைத்துங் கெட்டொழிந்தன, ஏதாவது விசேடமுண்டோ''வென வினவ, துரியோதனனு முள்ளபடியாராய்ந்தறிந்து தனதாசிரியர் தன்பொருட்டிறந்தமையை அவர் மகனுக்குச் சொல்வதற்கு அஞ்சிக் கிருபாசாரியனை நோக்கி நீயே சொல்லுதியென்ன, கிருபாசாரியும் அசுவத்தாமனைநோக்கி "அசுவத்தாமனே! உனது தந்தையானவர் பிரமாஸ்திரத்தினாலே தருமனு

டைய சேனைகளை மிகவும் வருத்தினர். அதுகண்ட கிருட்டிணர் பாண்டவரைநோக்கி, "நண்பர்காள்! வில்லாசிரியனை யாவராலுந் தோற்றுப் புறங்கொடான், தருமனொரு பொய்சொல்லின் விரைந்திறப்பன் அல்லது என்னவுபாயஞ் செய்யினுமிறவான், அவன் இறவாதிருப்பின் ஒருகாலமுஞ் செயமடைவதேயில்லை ஆதலால், தருமனே நீ துரோணனுக்கு முன்னின்று அருமைப்புதல்வன் அசுவத்தாமன் இறந்தானே என்றொருமுறை சொல்லின் ஆயுதங்களையெறிந்து வீழ்ந்திறப்பன். சத்துருக்களைச் செயிக்கக்கூடாத பட்சத்தில் நீதிதவறியுஞ் செயிக்கலாமென்பது ராசநீதியாகும், இஃதுண்மை" என்று சொல்லிய அளவில், வீமசேனன் முன்னோடி முன்னின்று "நின்மகன் அசுவத்தாமன் இறந்தா"னென்று சொல்லியும், அதனை நம்பாதவனாகிய துரோணன் தருமனைநோக்கித் "தருமனே இது சத்தியந்தானா" என்றனன். தருமனுஞ் சிறிதுநேரம்யோசித்துப்பொய் சொல்லுதலால் வரும்பாவ மிதுவென்றும் பொய் சொல்லிப் பகைவரை வென்று உலகமாளுதலினா லொருபயனுமில்லையென்றுங் கருதிப் பேசாதிருந்து, சலஞ்சாதித்தலாகிய பிறிதோருபாயத்தினால் வீமன் கொன்ற அசுவத்தாமனென்னும் யானையை மனதிலே நினைத்துக்கொண்டு, "வில்லாசிரியனே யுத்தத்திலே அசுவத்தாமனாகிய மதயானை பட்டதுமெய்" என்றவுடனே நின்னையன் புத்திரசோகத்தால் ஆயுதங்களையெறிந்து விழுந்தனன். அதுகண்டமாத்திரத்தில் தருமன் அறிவழிந்து "ஐயனே அசுவத்தாமனென்னுமதயானை பட்டதன்றி நின் மகனிறக்கவில்லை"யென்று பின் உண்மையை வெளிப்படுத்தியும், எறிந்த ஆயுதங்களை எடாமல், திட்டத்துய்மனே தன்னைக்கொல்வதென்று சிந்தித்து, யோகசமாதியுற்றுத் துவாதசாந்தவழியாக உயிர்விட்டுச் சுவர்க்கலோகமடைந்தனர். திட்டத்துய்மனாகிய இயமன் எவர் தடுக்கவுங் கேளாதுவந்து தலையரிந்தனன்" என்று நடந்த சங்கதிகளைக் கூறினன்.

அசுவத்தாமன் அதுகேட்ட மாத்திரையே மிகவுஞ் சோகித்து வீழ்ந்து துன்புற்றிரங்கிக் கண்ணீர் பொழிந்து, மண்ணிற்புரண்டு பின்னொருவாறு தேறிச் சொல்லுகின்றனன். "பொய்பேசி யென்னையனை நிராயுதனாக்கிய, பாதகனையும் முடியரிந்த பார்த்தனோடு மற்றையோரையும் வஞ்சகனாகிய கிருட்டிணன் காணுமாறு இன்றே கொல்லுவன்" என்று சபதங்கூறினன். துரோணனுமிறக்கச் சூரியனு மத்தமித்தனன். அரசர்களனைவருந் தங்

களைப்பாடிவீடடைந்தனர். இவ்வாறே பதினெட்டு நாள்வரையிற
பாரதயுத்தமுடிந்தது. தருமனுமதன்பின் இறந்த அனைவருக்கு
ஞ் செய்யவேண்டிய உத்தரவினைகளை முடித்துத் திருதராட்டிர
னிடத்தி லுத்தரவுபெற்று மீண்டு எஞ்சிய சேனைகளோடும் அத
னிபுரியை யடைந்தனன். தவுமிய முனிவர் தருமனுக்கு முடி
சூட்டுமாறு நினைத்தபொழுது அசரீரியானது அதனைத் தடுத்து
த் "தருமனே நீ சத்துருக்களுக்கு மிகவும் நன்மை செயகுனை
முடிசூட்ட நினைக்கின்றாய். உன்னிடத்திலே கொடிய தீவினையொ
ன்றுளது. ஆசிரியனைச் சலஞ்சாதித்தலாகிய கவர்மொழிபட்ட
பொய் சொல்லி நிராயுதனுக்கி யிறக்கச்செய்தனை, அதனை நீக்கி
பின்னுலகையாளுதி" என்று கூறியவளவிலே தருமனுமதனைக
கேட்டு, "ஐயகோ சிறிதும் ஞானமில்லாமல் அநித்தியமாகிய பூ
மிவாழ்க்கையை விரும்பிப் பெரும் பாதகஞ்செய்தேனே, இத்தீ
மை நீங்குமாறு எங்கே போவேன், என்னசெய்வேன், யாரிதனை
த்தீர்க்குந்தேவர், இது தீருமாறு என்னதானஞ்செய்தல் வே
ண்டும், இது நீங்குமுபாயத்தை உபதேசிக்குங்குரு யாவரென்
று மனம் வருந்தியிருக்கும் பொழுது, ஸ்ரீ வேதவியாதர் அங்கு
வந்தார். அதுகண்ட தருமனும் எழுந்து எதிர்கொண்டு வணங்கி
அருக்கியபாத்தியாசமனீயங் கொடுத்து ஆசனத்திருத்தி, அசரீ
ரிவாக்குக் கூறியதைச்சொல்லி, "ஐயனே! இந்தப்பாதகம நீங்
கும் வழியை யாராய்ந்து சட்டளையிடடருளுக" என்று விண்
ணப்பஞ்செய்தனர்.

வேதவியாத முனீந்திரரும் அதுகேட்டுச் சிவபெருமான
து திருவடிகளைச் சிந்தித்துச் சமாதிகூடி நெடுநேரம் யோசித்
து அதனை யுள்ளவாறறிந்து, தருமனைநோக்கிச் சொலலுவார்;
"அரசனே! உனக்கு வந்தபழி நீங்கும் வழியைக் கூறுதும கே
ட்பாயாக. கந்தமாதன வரைச்சார்பிலே சேதுக்கரையிலே
ஸ்ரீ ராமனது பேர்படைத்த சிறந்த தீர்த்தமொன்றுளது. அது
ஸ்ரீ ராமனுற் செய்யப்பட்டது. அதனைத் தரிசிப்பவர்களிடத்திற
பேய்பூதவேதாளங்களணுகா. பல நன்மைகளுமுண்டாகும். ஆத
லால் நீ அங்கேபோய விதிப்படி ஸ்நானஞ்செய்து சற்பாத்திரா
களுக்குப் பசு வெள்ளி எள் பூமி தானங்கள் செய்து ஸ்ரீ ராம
னையும் இராமலிங்கப்பெருமானையும் வணங்குதியேல், உனது பா
வங்களனைத்தும் நீங்கிச் சுத்தனுகுவை. அவை செய்யுமாறு வி
ரைந்து செலலுதி" என்றருளினர். அதுகேட்ட தருமனும ச
காதேவனை அங்குவைத்து மற்றத் தம்பியர்களோடுந் தவுமிய

முனிவர்களோடுஞ் சேதுவையடைந்து, அவரால, தான்செய்த பாவம் போகுமாறு தம்பியர்களோடு சங்கற்பித்து, இராமதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, கோதானாதிகள் கொடுத்து, இராமனையும் இராமலிங்கப்பெருமானையும் வணங்கி, மாச உபவாசியாய மனமகிழ்ச்சியோடு பலவித தானங்களையுஞ் செய்தங்கிருப்ப, ஒருதினந்திலாகாசவாணி தோன்றித் "தருமனே! ஆசிரியனைச்சலஞ்சாதித்தலால் கொன்றபழி இச்சலத்தினால் நீங்கியது. நீ துன்பமொழி. உன்னிடத்துள்ள சகல பாவங்களும் நீங்கின. நீ இனிப்போயுலகரசாட்சி செய்குதி" என்றருளியது. தருமன் அதுகேட்டமாத்திரத்துச் சிவபெருமானை வணங்கி மனமகிழ்ந்து தனது தேசத்திற்போய், தவுமிய முனிவராற் கிரியைகணடத்தி அபிடேகஞ்செய்து முடிசூட்டப்பெற்று, பல அரசர்களும் வணங்க உலக அரசாட்சிசெய்தனன். முனிவர்காள்! இதுவே இராமதீர்த்தத்தின் மகத்துவம். இச்சரித்திரத்தைப் படிப்போரும் கேட்போரும் பேரானந்தமுடையராய்த் திருக்கயிலாய மலையையடைந்தின்புறுவர்.

ஈதிராமனினியநடத்தினீறிலாதபெருமையுறத்தினீர்
காதலோடுகெழறினன்முத்திசேர்காண்தகாதின்வழிநுகர்கற்பினே
ரோதுமாதருடையநலத்தினேரோவிலாதவுவகையுளத்தராய்
மாதுபாகர்கயிலையிடத்திலேவாசமாகிமருவியிருப்பரே.

இராமதீர்த்தச்சருக்க முற்றிற்று.

---

## இலக்குமதீர்த்தச்சருக்கம்.

சூதமகாமுனிவரானவர் மற்றை முனிவர்களைநோக்கி "முனிவர்காள்! இராமதீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்தவர்கள் பின்பு இலக்கும தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வது முறையாகும். இலக்கும தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தவர், எக்காலத்தினும் வறுமையடையார். கல்விப்பேறு புத்திரபபேறு மோட்சப்பேறுகளையுமடைவர். இலக்குமன் என்கிறபெயர் சொல்பவரும் பலநூல்களைக்கற்று வல்லராவர். இலக்கும தீர்த்தத்தில ஸ்நானஞ்செய்து இலக்குமனால் தாபிக்கப்பட்ட சிவலிங்கப்பெருமானை வணங்கினவர் இருமைப்போகத்தையுமடைவர் முன்னாளிலே பலராமன் இங்ஙனஞ்செய்து பிரமகத்தி நீங்கினன். முனிவர்காள்! பலராமனைப பிரமகத்தி யடைந்ததையும அது நீங்கியவழியையுஞ் சொல்லுதுங் கேட்பீர்களாக என்று சொலலுவார்

அநந்த னவதாரமாகிய பலராமனானவன், குருகுலத்தவர்களாகிய பாண்டவருந் துரியோதனாதியரும் பெரும் பகைகொண்டு போருக்கழைத்தபொழுது "நாமொருவர் பக்கம்புகின் அது மற்றவருக்கு இடராகுமாதலால் இருவருக்குஞ் சமமாகத் தீர்த்தயாத்திரை செய்வதே தகுதி" யென்று பிரயாணமாகிச்சென்று பிரபாச தீர்த்தத்தின் மூழ்கித் தேவதர்ப்பணம் பிதிர் தர்ப்பணம் இருடிதர்ப்பணமாதிகள் செய்துமுடித்து, பின்பு பிருது தீர்த்தம், சரசுவதி தீர்த்தம், விந்துதீர்த்தம், பிரமதீர்த்தம், பாகீரதி தீர்த்தம், சதத்துருதீர்த்தம், சுதர்சனதீர்த்தம் ஆகியவற்றிலே மூழ்கி நைமிசாரணியத்தை யடைந்தனன். அங்கே தீர்க்கசத்திர யாகஞ் செய்துகொண்டிருந்த முனிவர்கள் பலதேவனைக் கண்டெழுந்து எதிர்கொண்டு வணங்கி அருக்கிய பாத்திய ஆசமனீயாதி கொடுத்து ஆசனத்திருத்தினர். பலதேவன் தன்னைக் கண்டெழுந்து வணங்காது ஆசனத்திருந்த சூதமுனிவனை நோக்கி, இவன் என்னிலும் அதிகனென்று கோபித்து, "உயர்குடிப் பிறப்பினராகிய அந்தணர் மத்தியிலே இழிந்த அநுலோம மரபினனாகிய இவன் உன்னதாசனத் திருத்தல் நீதியன்று. அதுவன்றியும் வியாத முனிவனிடத்திலே புராண இதிகாசமுதலிய பலநூல்களை நெடுங்காலங்கற்று நிரம்பியும், வீரத்திற் குறைவுபடாத நம்மைக்கண்டு அகங்காரமிகுதியால் சிறிதும் மதித்திலன்; சத்தியவதியினது திருக்குமாரராகிய வியாதமுனிவருடைய வினையமாணாக்கர்கள் இவனைப்போலப் பழிச்செய்கை பூணார்கள்; யாம் பூமியிற்பிறந்தது அகங்கார மடைந்தோரை யடக்கி அறிவுடையோரைப் பெருமைப்படுத்துதற்கேயாதலால், எனதுகையாலிவனுயிரிழந்து பரிசுத்தனாவானே இவனைப் பரிசுத்தனாக்குவதனா லெனக்கு யாதுங்குற்றம் வாராது" என்று நினைத்து மிக்க கோபங்கொண்டு தனதுகையிலிருக்குங் குசையாயுதத்தாற் சூதமுனிவரது தலையை அரிந்தான். அதுகண்ட முனிவர் குழாம் பதைபதைத்து "ஐயையோ! பலராமரே இது முறையன்றே. முற்காலத்து இந்தச்சூதமுனிவருக்கு நீட்டித்த வயதும், உன்னதப் பிரமாதனமும் இவரது சாமர்த்திய மறிந்துகொடுத்தனம். இஃதறியாது மிக்க பழுதுசெய்தீர். உமக்கு யாஞ்சொல்லுவது தகுதியன்று, உம்மை நிகராயபேர்க ளுலகத்திலில்லை. இக்குற்றத்தை நீரே மாற்றிக்கொள்ளுதல் வேண்டும்" என்றனர் அதுகேட்ட பலராமனும் சிறிது மனங்கலங்கிச் சொல்லுவான் "யோகப்பெருமையில்லா மயக்கத்தால் நானிவனைக்கொன்றது உலகரட்சையின் பொருட்டன்றிப் பிறிதன்று. ஆயினும், இவ

னுக்குக் குறையா வயதும் மறையா வுணர்வுஞ் சிறுவலியுங் கொடுத்தெழுப்புவேன். எனக்கிந்தப்பழி நீங்கும் வழியை நீவிரேயருளவேண்டு" மெனவேண்டினன்.

அதுகேட்ட முனிவர்கள் சொல்லுவார்கள், "பலதேவரே! உமது வலிய படைக்கலப்பெருமையும், எங்களது வாக்கும், உமது வாக்குந்தவறாது, இது நீங்கும்வழியாதேனுஞ் செய்குதி" என்றனர் பலராமனும் அதுகேட்டு முனிவர்காள்! வேதங்களுந் தங்கள் புத்திரர்கள் தாங்களேயன்றி அன்னியர்களல்ல ரென்று சொல்லும். ஆகவே குறைவில்லாத எனது யோகசாதனையினால் இவ்வுடலிற்றோன்றி ஓர் புதல்வன் நிறைந்த வயதுஞ் சிறந்தகலவியும் பெற்று முறையாக உங்களுக்குப்புராதனபுண்ணியசரித்திரங்களைப் புகலுக" என்றருளி, "நீவிர் இன்னும் வேண்டிய வரங்களைக்கேண்மின்கள் அவைசெய்குவேன்" என்றனர். முனிவர்கள் அதுகேட்டு மனமகிழ்ந்து "ஐயனே, வற்கலக்கலனென்னு மோரிராக்கதன், வேத விதிப்படி செய்யும் யாகங்க ளனைத்தையுங் கெடுத்துப் பெருநிந்தைசெய்குவன். அவனைக்கொன்று தேவரீர் குறித்தபடி தீர்த்தயாத்திரை செய்க" என்றனர். பலராமனு மதற்குடன்பட்டிருக்க முனிவர்கள், பூருவபட்சத்திலே விதிப்படி யாகந்தொடங்கிச்செய்தனர். அப்பொழுது வற்கலக்கலரக்கனு மாகாயத்திற்றோன்றி மலமூத்திரம் இரத்தம் எலும்பு தசை கள்ளு ஆகிய அசுத்தப் பொருள்களைச் சுத்தமாகிய யாகஞ்செய்யுமிடங்களெவ்விடத்தினுஞ் சிந்தி ஓமகுண்டத்தையுந் தூர்த்து மலைபோன்ற கரியமேனியும், யானைக்கோடுபோன்ற வெள்ளிய வக்கிரதந்தங்களும், சிவந்தகுடுமியும், இயமனையடிக்கும் வலியகைகளுமுடையனாய்த் தனது பருத்ததேகத்தினால் ஆகாயவெளியை யடைத்து நிற்றலைக்கண்ட பலராமனும் பகைவர்களாய அரக்கர்க ளஞ்சுமாறு அலப்படை முதலிய ஆயுதங்களையேந்தி அங்குச்சென்று அரக்கனையெதிர்த்துத் திசையானையைத்தோட்டியாற் கொழுவியிழுப்பதுபோலக் கலப்பைப் படையினாற் கொழுவியிழுத்து அவன் பூமியில் விழுமுன் இருப்புலக்கையாலவனது நெற்றியிலடித்தனர். வற்கலக்கலனும் அவ்வடியோடு சிறகரிபட்டு வீழ்ந்த மலைபோல விழுந்திறந்தான். அது கண்ட முனிவர்கள் பலராமனைப்புகழ்ந்து துதித்து நீராலபிடேகஞ்செய்து நீலாம்பரவுடையை மாற்றிப் பீதாம்பரவுடையுடுத்திப் பல்விதமாகிய நூதனாலங்காரஞ்செய்து புயங்களிலே

வைசயந்தி யென்னும் பொற்றாமரைமாலை யணிந்து வணங்கினர். பலராமனும் வீரபராக்கிரமத்தோடு திருக்கயிலாய மலைபோல விளங்கி அங்குள்ள முனிவர்களிடத்து விடைபெற்றுச் சென்று பூமியிலுள்ள பல தீர்த்தங்களினும் ஸ்நானஞ்செய்து தன்னூருக்குச் செல்லும்படி சிந்தித்து வருமிடத்துக் கரியதேகமும் வெண்பற்களுமுள்ள ஒரு பிரமகத்திப்பேயானது தனது நிழல் போல முன்னும் பின்னுமாக ஆர்ப்பரித்துத் தொடர்ந்து வருதலைக் கண்டு அஞ்சிச் சந்தேகமுற்று இஃது யாது! இததீர்த்தங்களிலாடிப் பரிசுத்தனாக வருகிற என்னைத் தொடருதற்குக் காரணம் யாதென்று யோசிக்குமளவில், அசரீரிவாக்கானது "பலராமனே! நீ செய்த பிரமக்கொலை தீராது இன்னுஞ் சிறிதிருக்கிறது; அதுவே உன்னைத் தொடருகின்றது" என்றருளியது. அதுகேட்ட பலராமனும் "யான் ஒருவருடம் முழுதும் உலகத்திலேயுள்ள பலதீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்தும் இப்பிரமகத்தி தீராதாயின் இனி இது தீருமாறு எங்ஙனே"! என்று மனம் வருந்தி நைமிசாரணியத்தை அடைந்து, அங்குள்ள முனிவர்களுக்கு இதனை விண்ணப்பஞ்செய்தனன். முனிவர்கள் அதனைக்கேட்டு எங்கள் யாகரட்சகா! கந்தமாதன மலையிடத்து ஸ்ரீராமனாற்கட்டிய சேதுவின் பக்கத்தில் இலக்குமதீர்த்தமென்ப பெயரிய சிறந்த புண்ணிய வாவியொன்றுளது. அது ஊழ்வினை பபாவங்களாகிய விருக்ஷங்களை எரிக்கும் அக்கினியாகும். ஆதலால் அங்குச்சென்று விதிப்படி ஸ்நானஞ்செய்து இலக்குமேசலிங்கத்தை வழிபடின் உனது பிரமகத்திநீங்கும் என்று அருளினர். அதனைக்கேட்ட பலராமன் விரைந்து இலக்குமதீர்த்தத்தை யடைந்து விதிப்படி ஸ்நானஞ்செய்து, பூமிதானம், இரணியதானம், கோதானம், தானியதானமாதியவற்றை விருப்போடு சற்பாத்திரமாயுள்ளவர்களுக்குக் கொடுத்து உச்சிக்காலத்திலே இலக்குமேசலிங்கத்தைத் தரிசித்து அழலிடைப்பட்ட மெழுகுபோல உருகித் தோத்திரஞ்செய்தான். அப்பொழுது ஆகாயவாணி பலராமனைக்கூவி "உன்னைப் பிடித்த பிரமகத்திநீங்கியது, இனி நீ ஊருக்குச்சென்று சிறப்புற்றிருக்குதி" என்று அருளியது. அதுகேட்ட பலராமன் மனமகிழ்ந்து இலக்குமேசனையும் இலக்குமதீர்த்தத்தையும் வணங்கி, இன்னும் அக்கந்தமாதனத்திலுள்ள வேறு தீர்த்தங்களிலும சேதுதீர்த்தத்திலும் மூழ்கி இராமநாதனைத் தரிசித்து விடைபெற்றுச்சென்று தனது துவாரகாபுரியை யடைந்து இன்புற்றிருந்தான்.

முனிவர்காள்! பலராமனைப் பிடித்தபிரமகத்தி நீங்கியவ ழியைச் சொன்னோம். இப்பெருமையை உடைய இலக்குமதீர் த்தத்தினது சிறப்பு இதுவாகும். இச்சரித்திரத்தைக் கேட்பவர் களும் கற்பவர்களும் துன்பமின்றி இன்புற்றுச் சுகமடைவர்.

வென்றிசேர்பலபத்திரன்மேலதாம்விஞ்சுபாதகம்விட்டதுகூறினோ
நன்றுறுதவினைப்பகைசிறியோநந்திடாதகதிப்புகுமாதவீர்
துன்றுசீரிதனிற்றகையீதரோதுங்கமார்கதைகற்பவர்காதலா
னென்றுமாசில்செவிக்கொளுவார்கள்பாலின்பமீயுமிலக்குமன்வாவியே.

இலக்குமதீர்த்தச்சருக்க முற்றிற்று.

## சடாதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவரானவர் தமதாசிரியரைவணங்கிப் பின்பு மு னிவர்களைநோக்கி "முனிவர்காள்! இலக்குமதீர்த்தத்தி லே விதிப்படி ஸ்நானஞ்செய்த மகான்கள் பெருமைபொரு ந்திய சடாதீர்த்தத்திலே பின்பு ஸ்நானஞ் செய்வார்கள். ஆதலால சடாதீர்த்த மகத்துவத்தைச் சொல்லுதுங் கேட்பீர்க ளாக" என்று, ஆஞ்ஞாபித்து அதன் பெருமைகளைச் சொல்லு வாராயினர்.

தத்துவ வுணர்ச்சியில் அபேட்சையுற்ற முனிவர்காள்! சடாதீர்த்தமானது சனன மரண வேதனைகளையும், நரை திரை மூப்பின்னல்களையும், அறிவின்மை முதலாய தீவினைகளனைத் தையும் போக்குவது. அது தனக்குத் தானே ஒப்பாகியது. மோட்சத்தை விரும்பி யெழுந்தமனத்தை மூடிக்கிடக்கும் அழு க்கைக் கழிக்க நினைந்தவருட்பலர் ஆணவமலத்தால் விளைந்த அஞ்ஞானத்தை நீக்கி நுகரப்படுவதாகிய சிவானந்தானுபவப் பேற்றை யடையச்சிறிதுஞ்சிந்தியாது வேதாந்தவிசாரமே சிறந் தவழியென்று விபரீத வுணர்ச்சிகொண்டு தலை வெடிக்குமாறு வீணிலே வேதாந்தம் பேசிப் பிதற்றித்திரிவார்கள். அவ்வேதா ந்தமோ உண்மைப்பொருட் கதிதூரமாய்ப் பூருவபட்சமாகி ஆ ன்மவிசாரமொன்றே முத்திசாதனமென்னும் விடாப் பிடியு டையமுதலைகளும், திரி பதார்த்த விளக்கமுற்று விதிவிலக்குக ளை ஆராய்ந்து நித்த நைமித்த காமியாதிகளை யனுடடித்து யோ கஞானநெறிபூண்டு திருநோக்கால் தன்போலாக்குஞ்சித்தாந் தமாகியமீன்களும் விரவிக்கிடக்கின்ற பெருஞ் சமுத்திரமாகும் அவவிரண்டையுஞ் சமரசப்படுத்து மெய்யுணர்வில்லாத மந்தம

திகளாயினோர் அஞ்ஞானமாகிய சேறு உடம்பிலேபடியுமாறு அதனுள்ளே முழுகி அதனுண்மைப் பொருளாகிய சித்தாந்தத்தையுணருமாற்றலின்றி வருந்தி அவிச்சையினமிழ்ந்துவர் அன்றியும் அவர்கள் பரிசுத்தமாகிய வேதாந்தத்தி னுண்மைப் பொருளாய் நிற்குஞ் சித்தாந்தத்தை விளக்கும்பொருட்டு உபதேசிப்பவர்கண் முன்னிலையில் அதனை யொவ்வாது ஆடசேபசமாதானம் பேசித் தம் எண்ணத்தையே மெச்சித்தருக்கடைவர். ஆதலினால் அசுத்த மாயாவாத வேதாந்தமானது மயக்க விகாரங்களை விளைவிக்கும்வித்தாகும். அதனா லொருபோதுஞ் சித்தசுத்தி பிறவாது. ஆதலின் அதனை நாமொழித்து எங்கள் மனமயக்ககற்றும் வழியொன்றுளது அது சடாதீர்த்தமாகும். சிவபெருமான் எங்கள் மேற்கொண்ட கருணையினாலே தமது திருவடிநீழலில் வாழும் பேரானந்த வாழ்வைத்தரும் பொருட்டு இதனையுண்டாக்கினர். ஆதலின் நீவிரும் அதிலே ஸ்நானஞ் செய்குதிர். ஸ்ரீராமன் முற்காலத்திலே இராவண சங்காரம் செய்த பழிநீங்க இந்தத் தீர்த்தத்திலே தனது சடையைக் கழுவிய படியால் இதற்குச் சடாதீர்த்த மெனப் பெயராயிற்று. அறுபதினாயிரம் வருடம் ஆகாய கங்கையில் முழுகிய பலனைக் கோதாவரிநதியில் ஒரு ஸ்நானங் கொடுக்கும். அக் கோதாவரியில் ஆயிரம் ஸ்நானபலனைப் பொன்னி தீர்த்தத்தில் ஒருஸ்நானங் கொடுக்கும். அவை யனைத்தையும் சடாதீர்த்த தரிசனங்கொடுக்கும். இச்சடாதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தவாகளுக்கு அந்தக்கரணசுத்தி யுண்டாகும். அஞ்ஞானமொழியும். மெஞ்ஞானமுதிக்கும். அதனால் மோட்சமுண்டாகும். அதனால் அவர்கள் பூரணத்துவமாகிச் சிவானந்தப் பெரும்பே றடைவர்கள் அதன் சரித்திர மொன்று கூறுதுங் கேட்பீர்களாக.

வேதவியாத முனிவருக்கும் அவர் புத்திரராகிய சுகப்பிரம முனிவருக்கும் ஒருதினம் விவாத முண்டாய விடத்து, சுகப்பிரமரெழுந்து தமதுதந்தையை வணங்கி, எம்பெருமானே, தேவரீரிடத்து வேத வேதாங்க இதிகாச புராணாதி நூல்களனைத்தையுங் கற்றும் எனது மனஞ் சுத்தமாகவில்லை, அகச்சுத்தியுண்டாகு முபாயம் யாதென்று விண்ணப்பஞ் செய்தனர் அது கேட்டவியாதமுனிவர் மனமகிழ்ந்து "மைந்தனே! உன்னுடையகேள்வி மிகவும் நல்லது, உனதுமனமயக்கம் அகலுமாறு ஒருபாயஞ் சொல்லுதுங் கேள். தருமமே வடிவாய்ப் பிறவியை வேரறுக்கும் சடாதீர்த்தமென ஒன்று கந்தமாதனச்

சார்பிலுளது. அது ஸ்ரீராமன் இராவணனைக் கொன்ற பழியக ற்றுமாறு பதினொன்கு வருடம் பூண்ட தவ வேடத்தின் சடை யைக் கழுவிப் போக்கியதனால் அத்தீர்த்தத்திற்குப் பெருமை பொருந்திய அப்பெயருண்டாயிற்று. அத்தடாகத்தில் யாவர் விதிப்படிமுழுகினும் அவர்களுக்கு இம்மையிலே அகசசுத்தி யையுண்டாக்கும். அது தானம், தருமம், உபவாசம், தவம், விர தமாதியவைகளால் அடையும் பலனைக் கொடுக்கும்; தீமைக ளனைத்தையும் போக்கும்; மங்கலப்பேறுகளனைத்தையுந் தரும்; செல்வத்தையும், சுத்தத்தையுங் கொடுக்கும்; மறுமையிலே சாயுச்சியத்தையுங் கொடுக்கும்.

வருணராசன் தனது புத்திரனாகிய பிருகுவென்பவனு க்கு அகச்சுத்தி யுண்டாகும் வழி கல்வி முதலிய பிற வழிகளைச் சொல்லாது சடாதீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணும்படி சொல் லினன். அவனும் அங்ஙனமே செய்து அகச் சுத்தியையடைந் து பேரானந்த வாழ்வைப் பெற்றான். சிவகலையாகிய துரு வாசமுனிவரும் இத்தடாகத்தில் முழுகிப் பேரானந்தமடைந் தார். விட்டுணுவினம்சமாகிய தத்தாத்திரயரும் இதிலே ஸ்நா னஞ்செய்து பேரானந்தமடைந்தார்.

இத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து அகச்சுத்தி யடை ந்தோரனேகர். ஆதலால், புத்திரனே நீயும் இதிலே ஸ்நானஞ் செய்து சித்த சுத்தி அடைவாயாக வென்று தந்தையாகிய வி யாதர் சொல்லக் கேட்ட சுகப்பிரமரும், ஸ்நானஞ்செய்து அக ச்சுத்தியடைந்து பேரானந்தப் பெருவாழ்வுற்றனர். ஆதலால், முனிவர்களே! நீவிருஞ் சித்தசுத்தி பெற விரும்புவீரேல் இந்த சசடாதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வீர்களாக. காமதேனுவா னது சடாதீர்த்த வடிவாகிக்கேடபவைகளனைத்தையுங் கொடு க்கும்படி இங்கிருப்ப, இவவுலகத்தில் உள்ளவர்கள் இதனோடு கோபங்கொண்டுபோலும் வீணுகச் சுவர்க்கலோகத்திலே காம தேனுவிருக்கிறதென்று தவஞ்செய்துவருந்துவர். இத்தீர்த்தத்தி லேவிதிப்படி ஸ்நானஞ்செய்தவர்கள் இம்மையிற்போகத்தையும் மறுமையிற் பேரின்பத்தையும் தவறாது சத்தியமாயடைவர் கள். இத்தீர்த்த மகத்துவத்தை மும்மூர்த்திகளன்றி யாமா அறியவல்லோம். முனிவர்காள்! இதற்கொப்பாகிய தீர்த்தம் எங்கும் எக்காலத்தினும் இலலை; சந்தேகங் கொள்ளாதொழி மின்; ஒருவன் இத்தீர்த்தக்கரையிற் பண்ணிய சிரார்த்தபல னை கயாசிரார்த்த பயனைக் கொடுக்கும். இவ்வுண்மையை

உங்களிடத்திற் சொண்ட அன்பினாற் சொன்னேன். சுகப்பிரமர் சடாதீர்த்தத்தின் முழுகிச் சித்த சுத்தியடைந்த சரித்திரத்தைச் சொன்னோம். இச்சரித்திரத்தை வாசித்தவரும் கேட்டவரும் தீவினையொழிந்து ஸ்ரீவைகுண்டமடைவர்கள்.

வேதம்வகுத்தவனீடுசெய்வேணிமணிப்புனலாடியே
யாகியருட்பெறுமேன்மையாலாசறுசத்துவஞானமே
யீதருமிக்கதையோதுவார்யாவர்செவிப்படுத்தலார்
வாதைத்வினைப்பகைசூழ்வுறார்மாயனிருக்கையில்வாழ்வரே.

சடாதீர்த்தச்சருக்க முற்றிற்று

## இலக்குமிதீர்த்தச்சருக்கம்.

சூதமகாமுனிவர் மற்றை முனிவர்களை நோக்கி, சடாதீர்த்தமாடினவர்கள் பின்பு இலக்குமி தீர்த்தத்திலே முழுகுவது முறையாகும். முனிவர்காள்! இலக்குமி தீர்த்தத்திலே முழுகினவர் மனதில் நினைத்த பேறுகளனைத்தையும் அடைவர். மிக்க செல்வத்தையும் மிக்க சுகத்தையுமடைவர் முற்காலத்திலே தருமன் ஸ்ரீகிருட்டிணனதேவலால் இலக்குமி தீர்த்தத்தின் முழுகிப் பெருஞ்செல்வமடைந்தனன், அதனை விரித்துச் சொல்லுகின்றேன் கேளுங்கள்.

முனிவர்காள்! முற்காலத்திலே துரியோதனனது துர்ப்போதனையினாலே அவன் தந்தையாகிய திருதராட்டிரன் ஆணைக்கஞ்சித்தருமன் முதலிய பஞ்சபாண்டவர்கள் தங்களுரிமைப்பங்கிழந்து வறிஞராகி இந்திரப்பிரத்தத்திலே இருக்குங்காலத்தில் ஸ்ரீகிருட்டிணன் அங்கே வர, அவர்கள் அவனை எதிர்கொண்டு வணங்கி, அழைத்துக்கொண்டு போய் ஆசனத்திருத்திப் பலவித உபசரணைகள் செய்து நண்புகொண்டாடி இருந்தபின்னர்த்தருமனெழுந்து வணங்கி "ஐயனே! நாமிப்பொழுது வறியராயினோம் செல்வராவதற்குயாதுவழி அதனைக்கட்டளையிடுக வென்று பிரார்த்தித்தனன். அதுகேட்ட பாண்டவசகாயனும் மனமிரங்கித் "தருமனே! கந்தமாதனமலைச் சாரிலே இலக்குமி தீர்த்தமென்னுஞ் சிறந்த வாவியொன்றுளது. அது தன்னிடத்து ஸ்நானஞ் செய்வோரைக் குபேரனிலுஞ் சிறக்கச்செய்யும். தேவர்கள் இதிலே ஸ்நானஞ்செய்து கற்பகநிழலையடைந்தனர், குபேரன் ஸ்நானஞ்செய்து இருநிதிக்கிழவ

னுபினுன், அவன் மகனுகிய நளகூபரன இதில் ஸ்நானஞ்செய்து தேவரம்பையோடு சேர்ந்தான்; ஆதலால் நீயுமுன் தம்பியர்களோடும் அங்கேசென்று ஸ்நானஞ் செய்வையேல் நின்னிடத்து நென்மலை பொன்மலை வளரும்; சத்துருக்கள்முதுகிட்டோடுவர்; வேளாண்மை மிகுந்து நினதூர் மிக்கசிறப்படையும்'' என்றருளினர். அது கேட்ட தருமனும் தம்பியர்களோடு வணங்கி யுத்தரவு பெற்றுக்கந்தமாதனஞ் சென்று மிக்கவிரதியாய் ஒரு மாதம் அங்கிருந்து இலக்குமிதீர்த்தத்திலே முழுகி, பசு பொன் பூமி திலமாதிய தானஞ்செய்து இராமனுதனை வணங்கி இந்திரப்பிரஸ்த நகரையடைந்து பெருஞ்செல்வம் பெற்று மகிழ்ந்து சிலநாட்சென்ற பின்பு இராசசூயயாகஞ்செய்ய நினைத்துக்கிருட்டினதேவனுக்கு அதனை வெளிப்படுத்தினன். ஸ்ரீகிருட்டினன் அதனைக்கேட்டு "தருமனே, அரசனென்ற அளவிலே இந்த யாகம் செய்யத்தக்கதன்று; கச ரத துரக பதாதியாகிய சதுரங்க சேனைகளின்றித் தனித்தனி திக்குவிசயஞ்செய்து சத்துருக்களைச் செயித்துக் கவர்ந்த திறைப்பொருள் பெற்ற அரசனே செய்யத்தக்கது. ஆதலால், நீ இராசசூயஞ் செய்வதற்கு முன்னே திக்குவிசயஞ் செய்குதி'' யென்றனன்.

தருமனும் அதைக் கேட்டு இதுவே செய்யத்தக்கதென்று மகிழ்ந்து தன் தம்பியர்களையழைத்து அவர்களுக்குற்சாகம் பிறக்குமாறுவப்பித்து "கனிட்டர்காள்! நமது சேனைகளோடுசென்று புய வலிமையினுலே திக்குவிசயம் செயவீராயின் சிறந்த இராசசூய யாகஞ்செய்யலாமென்றனன். அது கேட்ட வீமனுதிகனிட்டர்கள் நால்வரும் இதுவே தக்கதென்று நாற்றிசைக்கண்ணும் சதுரங்கசேனைகளோடு சென்று ஆங்காங்குள்ள அரசர்களைச் செயித்து அவ்வவர்களிடத்து அளவில்லாத திறைப்பொருள்களைப் பெற்று மிக்க உல்லாசத்தோடு மீண்டு நகரியையடைந்தனர். அவருள்ளே வீமன் நூறுபாரம் பொன்னையும், அருச்சுனன் ஆயிரம் பாரம் பொன்னையும், நகுலன் நூறுபாரம் பொன்னையும், சகாதேவன் விபீடணன் கொடுத்த பதினன்கு பொற் பனைகளோடு பலபாரம் பொன்னையுங் கொணர்ந்து தருமன் பாதங்களின் முன் வைத்தனர். இது பதுமநிதியாகவும் கிருட்டினன கொடுதத பெருந்தொகைப் பாரமாகிய பொன் சங்கநிதியாகவும் தோன்றின. இவற்றைக்கண்ட தருமனும் எனது குறை முற்றியதெ

ன்று தம்பியர்களோடு ஸ்ரீகிருட்டினன் துணைசெய்ய யாகசாலையையடைந்து அத்திரவியங்களை மூலதனமாகக்கொண்டு முனிவர்கள்தாணைப்படி இராசசூயமியற்றி அங்குவரும் வேதியர்க ளவாவொழியும்படி தானஞ்செய்து, யாசகர்களுக்குமிரட்டிபபங்குகொடுத்து அந்தணர் மகிழுமாறு முக்கனி நெய் பயறு பாலாதியவற்றோடு அன்னதானஞ் செய்தனன். அன்று தருமன் செய்த தானப்பொருள்களினளவே கோடி பிரமர் கூடிச் சொல்லினும் அடங்காதாயின், வேறு யார் சொல்லவல்லவர். யாசித்தவர் கொண்டுசெல்லும் திரவியத்தைக் கண்டவர் "தருமன் தன் பொருளை முற்றுக இவருக்கே கொடுத்தானென்பர். அவனது பொக்கிஷ சாலையிலிருக்கும் பொருட்குப்பையைக் கண்டவர்கள் அங்கே குறைவு காணாதவர்களாய்த் தானங்கொடுத்தபொருளற்பமாகும் இருப்பு அதிகமாகுமென்பர். ஆன்மாக்களுக் களவின்றிக் கொடுப்பினும் சிவானுக்கிரகம் குறைவுபடாமை போலவும் கோடி முகில்கள் குடிப்பினும் சமுத்திர நீர் குறையாமைபோலவும், தருமஞ் செய்வாரிடத்து இலக்குமி நீங்காமைபோலவும் தருமன் அதிகமாகக் கொடுத்தும அச்செல்வம் குறையாதாயிற்று. தருமன் தம்பியர்களோடும் இலக்குமிதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்த விசேடத்தால இங்ஙனமே பெருஞ் செல்வமெய்தி மகிழ்ந்தனன். ஆதலால முனிவிர்காள்! இலக்குமி தீர்த்தமானது வருத்துகின்ற வறுமைமிகுதியால் வெறுங்கையரென்னும் பெயரை வெறுக்கையரென்றாக்கும்; தீமைக் கடலைத் தூர்க்கும்; சுவர்க்க போக பாக்கியத்தைக்கொடுக்கும்; காமாதிகளைக் கெடுக்கும்; மோட்சத்தையும் கொடுக்கும். இச்சரித்திரத்தை வாசிப்போர் கேட்போர்கள் விரும்பிய பலன்களனைத்தையும் அடைவர்.

தீமைவாரிதிடர்ப்படவீட்டிடுந்தேவரூரில்வளத்தொடுகூட்டிடுங்
காமமோடுமயக்கலவோட்டிடுங்காணுறுதகதிப்பொருள்காட்டிடுந்
தாமநீடுதவக்குவையீட்டிடுந்தாவில்சாறுபடித்தவர்கேட்பவ
ரேமமேவுமனத்திடைவேட்டவையாவுமீயுமிலக்குமிதீர்த்தமே

இலக்குமிதீர்த்தச்சருக்க முற்றிற்று.

## அக்கினிதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவரானவர் பின்னும முனிவர்களை நோக்கி, இலக்குமி தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்த மகான்கள் பின்பு சமுத்திரக்கரையிலுள்ள அக்கினிதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தல் முறையாகும். தருமமே இத்தீர்த்தவடிவாகித் தவத்திகளது பொக்கிஷசாலையாயத் தன்னிடத்து ஸ்நானஞ்செய்த யாவருக்குஞ் சிறந்த மங்கலப் பொருள்களைக் கொடுக்கும், அஞ்ஞானாந்தகாரத்தை யோட்டும் ஆதித்தனுய் விளங்குதலால் அதிலே ஸ்நானஞ்செய்தவர் சீவன் முத்தராவர் என்றருளிய சூதமுனிவரை, மற்றைமுனிவர்கள் நோக்கி "ஐயனே! இதற்கு அக்கினிதீர்த்தமென்ற பெயர் வந்த காரணத்தையும் அதனது பெருமைகளையும் உள்ளவாறு திருவாய்மலர்ந்தருளுக என்றுவேண்டச் சூதமுனிவர் அங்ஙனஞ் சொல்லுவாராயினர்.

முனிவர்காள்! முற்காலத்திலே ஸ்ரீராமனானவன் இராவணசங்காரஞ்செய்து விபீடணனுக்குப் பட்டங்கட்டி இலங்கையை அரசாளவைத்துத் திரும்பிச் சத்துருக்களைச் செயித்த புகழோடு உலகத்திலே எவரும் பெருத வில்வலிமையோடும், நெருங்கிய பல்லாயிரகோடி பதினெண் வகைக் கணங்களோடும் இலக்குமணன் சீதாபிராட்டி இருவரோடும் வந்து கந்தமாதனமலையையடைந்து சீதாபிராட்டி இராவணனாற் கவரப்பட்டுத் தனியே சிலகால மிருந்தமையால் கற்புக்கெடாதிருந்தனளோ வென்ற தனது சந்தேகமொழியவும், அவளது கற்பின் திறத்தைப் பிறருக்கு வெளிப்படுத்தவும் நினைத்து, எண்கோடி பிதிரரும், பல்லாயிரகோடி தவவாணரும், முப்பத்துமுக்கோடிதேவருஞ் சேர்ந்து நிற்குஞ் சமூகத்திலே அக்கினிதேவனை முன்வரும்படி நோக்கினன். அப்பொழுது அக்கினிதேவன் சிவந்த கண்ணுஞ் சிவந்த மேனியுமுடையனுய் வில்லேந்திப் பிளந்தவாயின்வழி ஏழுநாக்குகளை வளைத்து நாற்றிசைக்கண்ணுமுள்ள சமுத்திரங்களை வற்றச்செய்து கடற்கரையிலே ஸ்ரீராமனது சன்னிதானத்திலே, தோன்றி ஸ்ரீராமனைப்பார்த்து "ஸ்ரீராமனே! நீ இராவணனைக் கொன்றது உனது படைவலிமையாலும் உன்வலிமையாலுமன்று, இவளது கற்பின வலிமையேயாகும் இதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. இவள் தாமரையாசனியாகிய இலக்குமியே. விட்டுணுவாகிய நீ மனுடாவதாரமுற்று விளையாடுகின்றபொழுது இவளும் மனுடவடிவோடுவந்தாள்

நீ எந்த வடிவு எடுக்குதியோ இவளுமதற்கிசைந்த சத்தியாகிய உருவள். நீ பலராமாவதாரங் கொண்டபொழுது இரேபதியாயினள் நீ ராமாவதார முற்ற இப்பொழுது சீதையாயினள். இனிக் கிருட்டிணாவதாரத்தில் உருக்குமணியாவள். நீவிட்டுணுவாகிய போது இவளிலக்குமியே. இதிலொரு சிறிதுஞ் சந்தேகமேயில்லை என்னது வாக்கை நம்பி நீ இவளைக் கைக்கொள்ளுதி'' என்றனன். அதுகேட்ட முனிவர்களாதி அங்கு நின்றவர்கள் இருவர்களது பெருமைகளைப்புகழ்ந்து பாராட்டினர். ஸ்ரீராமனும் அக்கினிதேவனது சொல்லைநம்பிச் சீதையைக் கைப்பிடித்தனன்.

முனிவர்காள்! ஸ்ரீராமன் சீதாபிராட்டியாரது கற்புநிலைமையைப் பரீட்சிக்கவிரும்பி அக்கினியையழைக்க அவ்வக்கினி சமுத்திரக்கரையில் தோன்றிப் பரீட்சைகொடுத்தபடியால் அதற்கு அக்கினிதீர்த்தமென்றுபெயராயிற்று.

முனிவர்காள்! யாவராயினும் இவ்வக்கினிதீர்த்தத்தில சிரத்தையோடு ஸ்நானஞ்செய்து உபவாசமுற்று அந்தணர்களுக்கு அன்னதானஞ்செய்து பூமி வஸ்திரம் பொன்னாபரணம் கன்னிகை ஆதியதானஞ்செய்பவர் தீவினையினின்று நீங்கி வைகுண்டலோகமடைவர். அவ்வக்கினிதீர்த்தக்கரையிலே செய்யும் அன்னதானம் மிக்கபயனைத்தரும். முற்காலத்திலே துடபண்ணியன் என்பவன் இதிலே ஸ்நானஞ்செய்து பசாசுவடிவொழிந்து சுவர்க்கலோகமடைந்தான். அதனைச் சொல்லுதுங் கேட்பீர்களாக.

பாடலிபுத்திரமென்னும் நகரத்திலே பரதவர்நிதியம்போன்று ஒழுக்கமுடையவனாய் அந்தணரைபபேணி ஆவினங்கட்கும் விருப்புடையனாய் உழவு தொழிலோடு வியாபாரமுடையனாய் பசுமானென்னும் பெயருடைய செட்டி யொருவனிருந்தான். அனுக்குக் கற்பிலே சிறந்த மூன்று மனைவியருளர். அவருள்ளே மூத்தமனைவி சுபண்ணியன், புண்ணியவான், சாருபண்ணியவானென்னும் மூன்று புத்திரர்களையும், நடுமனைவி சுகோசன செவ்குகோசனென்னுமிருபுத்திரர்களையும், இளையவள் மரபண்ணியன், மாகோசன், துட்பண்ணியன் என்னும் மூன்றுபுத்திரர்களையும்பெற்றுவளர்த்தனர். இந்த எட்டுப்புத்திரர்களும் தந்தைதாய் களிப்பவைய விளையாடித் திரிவாராயினர். பசுமானாகிய தந்தையானவன் ஒவ்வொருபுத்திரர்களுக்கும் ஐந்துவயது சென்றபின்பு தனது தொழில்களைப் பயிற்றிவைகக, மூதத ஏழுபிள்ளைகளுந் தந்தைசொற்கடவாது பயிரிடுதல் வாணிகம் பசுககாத்தலாதி

யதொழிலிலே மிக்கமுயற்சி யுடையர்களாய்த் தந்தைதாய் நால்வருங் களிப்படையநடந்தனர். எட்டாவதுபுத்திரனாகிய துட்டபண்ணியனென்பான் சிறுவயது தொடங்கித் துர்ப்புத்தியுந்துர்ச்செய்கையுமுடையனாய் விடமிஞ்சிய குட்டிப்பாம்புபோன்றும், அட்டபாலர்களுள்ளே அந்தகன்போன்றும், உலகத்துக்குப் பெருநன்மைசெய்யு முகில்களிடத்துத்தோன்றி வருத்து மிடிபோன்றும், புறவுயிர்களுக்குப் பெருநன்மைசெய்யும் பசுமனிடத்துத்தோன்றிப் பிறருக்குப் பெருங்கேடு புரிந்துதிரிந்தனன். தீப்பொறிபோலச்சிறுவயதிலே தன்னோடொத்த சிறுவர்களுக்கு இவன்செயுமக்கிரமங்களைத் தந்தையாகிய பசுமான்கண்டு சிறுகுழந்தையென்று பேசாது விடுத்தனன்.

சாட்டத்தை மிகுதியுமிட்டவழிக் கனல் மிகச்சுவாலிப்பதுபோலத் துட்டபண்ணியனும் வரவர நாடோறும் தீக்குணங்களின்மிகுந்து சருப்பமானது சந்திரனைப்பிடித்துச் சமுத்திரத்துட்டாழ்த்ததுபோலத் தன்னோடொத்தசிறுவர்களைக் கிணறு குளம் யாறு கேணிகளிலே ஆம்வென்று பதறிக்கதறவமிழ்த்திக்கொல்லுவான். கற்பகக்காவைபழிக்குங் கடகளிறுபோல அந்நகரத்துச்சிறுவர்களை "விளையாடுவோம்வாவென்" றழைத்துக்கொண்டுபோய் வீழ்த்திக்கொல்லுவான். அக்காலத்திலே அந்நகரத்தில் "எங்கள்புத்திரர்களைக் கண்டீர்களோ" என்று கேட்பவர்களுக்கெதிரே எங்கள்புத்திரர்களை நீவிர்கண்டீர்களோ" என்றுகேட்டழுமோசையே மிக்கது. "சிறுகிண்ணத்திற்றயிருஞ் சாதமுமூட்டுவித்து அரைநாழிகைசெல்லுமுன் எங்கள்புத்திரனுடம்போடுயிரைக் கூற்றுண்ணுமா" என்பாரும், "சற்றுமுன் குடுமிகோதிமுடித்துவிடுத்தகுழந்தை இதுபொழுது காணொழியின் யாமென்செய்வோம் இப்பட்டினமழிவதற் கிதுவேசான்"றென அழுவாரும், "நாமிப்பொழுதே குளிப்பாட்டி ஈரந்துவட்டி நறும்புகையூட்டிக் கட்டுப்பாடி சுட்டியாபரணமெடுத்துவருமுன் அவன் முன்னோட நாம் பின்னோடிவந்துங் காணொழியின் என்செய்வோ"மென்று விழுந்தழுவாரும், "பணிகாரங்கொடுத்துப் பசியாற்றிச் சற்றுவிளையாடிவாவென்று விடுத்தகண்மணியை இன்னுங்காணேமே" யென்றுபதைத்தழுவாரும், "நமதருமைப்புதல்வனிவ்வாட்டுக்குட்டியைவிட்டு ஒருகாலமும் பிரிந்திரானே! இன்று ஆடுஇங்கிருக்க அவன்யாண்டுப்போனா" னென்று பதைத்தழுவாரும்" நமமகனைக் காணேமேயென்று சத்தமிட்டழைத்தவழி காலிற்சிலம்போசை கேட்க ஓடிவந்தானே இப்பொழுது காணேமே" யென்று கதறுவாரும், "என்னன்னாய் பசிக்கிறதெ

ணறழுதபாலனுக்குப் பால்கொடாது பின்புவாவென்று வெருட்டிவிடுத்த பாவியேன் அவனையின்னுங்காணவில்லையே யாதுசெய்வே" னென்றழுவாரும், "இங்கே நெருப்புப்பறவில்லை காற்றடிக்கவில்லை இராசன் குடிபோகவில்லை ஊர்கொள்ளைபோகவில்லை என்னமாயமோ நம்மகனைக்காணவில்லையே" யென்று இரைந்து கரைவாரும், "கூடியவயதுடையயாவரும் வருத்தமுறத்தக்கதாகச் சிறுவர்களுக்கு மாத்திரங் கொள்ளை வருதற்குக்காரணமென்ன" என்றழுவாரும், இங்ஙனமே அந்நகரத்திலுள்ளார் அனைவரும் புத்திரர்களையிழந்து வருந்துபவர்களாதலின் எஞ்சியழாதிருப்பார் ஒருவருமிலராயினர். மக்களையிழந்து தேடித்திரிபவருட்சிலர் தம்புத்திரர்களுடைய பிரேதம் நீரில் மிதந்துகரையடைந்துகிடப்பக் கண்டெடுத்துக் கலங்கிக்கடன்முடிப்பார்கள உணவுதவருமைபோலக் காத்திருந்து கொலை தவருதுசெய்யுந் துட்பண்ணியன் அந்நகரத்துச் சிறுவர்களைக் கொல்லுதலால் அங்கேசிறுவர்கள் விருத்தியில்லாதாகிப் பாழடைந்தது. அதுகண்ட அந்நகரவாசிகளனைவரும் திரண்டரசசமுகமடைந்து "அரசனே! இந்நகரத்திலே பெருநூதனம் நடக்கிறது, கூடிக்காத்திருக்கவுஞ் சிலகுழந்தைகள், காணுதுபோய்விடுகின்ருர்கள். சிலகுழந்தைகள் பிரேதமாய்க்குழக்கரையிலேகாணப்படுகிருர்கள். அனேகமாகக்குழந்தைகளை இன்ன இன்னவிடமென்று காணப்படவில்லை. இதுஎன்னமாயமோ! பேயின்ருெழிலோ!! அறியவேண்டுமென்ருர்கள். அரசனுமதுகேட்டு மிகுந்தமனமயக்கங்கொண்டு பலவிடங்களிலுங் காவலாளர்களையேவினன், காவலாளர்களும் பலவிடங்களிலும் பலவிதமாக இயன்றமட்டுமாராய்ந்து மறியமுடியாம லரசனுக்குத் தெரிவித்தனர். பின்னுங் குடிகளுடைய முறையீடடைக்கேட்ட அரசனிதற்கு யாதுசெயவலாமென்று மனம்புழுங்கினன்.

இங்ஙனமாகப் பின்னொருநாள் துட்பண்ணியனுனவன் அங்குள்ளஐந்துசிறுகுழந்தைகளை விளையாடுவோம் வாருங்களென்று சிறிதுநேரம் அங்குமிங்கும் நின்று விளையாடுபவர்கள்போலப் பாசாங்குகாட்டித் தாமரைமலர் கொய்துவருவோம் வாருங்களென்று குளக்கரைக்குக் கொண்டுபோய்க் கழுத்தளவுநீரிலமிழ்த்தி அவர்கள் தண்ணீர்குடித்து விழிபிதுங்கக்கண்டு இவர்களிறந்தார்களென்று மீண்டோடி முன்புபோலவந்திருந்தான். நீரிலமிழ்ந்திய ஐவருமிறக்கும் விதியில்லாமையால் மிதந்து ஒருவாறு கரையையடைந்து தங்கள்வீட்டுக்குங்குளத்துக்கு மதிதூரமாகையா

லும முன்னொருமுறையேனுமங்குபோயிராமையாலும் திரும்பி வருமவழிதெரியாமலங்கேயழுதுகொண்டிருந்தனர்.

அப்புதல்வர்களையுடைய சுற்றத்தார் பலவிடங்களிலுந்தேடிக் கூவியழைத்துக் கூக்குரல்செய்து அழுதோடித்திரியுஞ்சத்தங்கேட்டு "யாமீண்டுநிற்கிறோம்" என்றனர். அச்சத்தங்கேட்டு விரைந்தோடியங்குவந்துகண்டு இறந்துளோர்கள் மீண்டுவரக்கண்டு மகிழ்வதுபோல மகிழ்ந்து "மக்காள், நீவிரேனிங்குவந்தீர்! உங்களையிங்கே கொண்டுவந்தவர் யாவர்? சொல்லுங்க" ளென்றனர். அதுகேட்டசிறுவர்களழுது, "துட்பண்ணியனெனுவன் விளையாடுவோமென்றழைத்துத் தாமரைமலர் கொய்யும்படியங்கு கொண்டுவந்து எங்களையுந்தன்னோடு குளத்திலிறங்கும்படிசொல்லி இறக்கிக் கழுத்தளவுநீரிலே சேற்றிலமிழ்த்திவிட்டோடினன். நாங்களொருவாறு மிதந்து யொருவரை யொருவர் பிடித்துக்கரையேறி வீட்டுக்குவர வழிதெரியாது துணையொருவருமின்றி யிங்கே மிக்க அச்சத்தோடிருந்தோ" மென்றனர். அவர்களும துகேட்டு இவனே முன்னிறந்த சிறுவர்களையெல்லாமிவ்வாறு கொன்றனன். இனியிந்தப்பாவியை விடலாகாதென்று நினைந்து அச்சிறுவர்களோடு சென்று அரசனுக்கு விண்ணப்பஞ்செய்தனர் அதுகேட்ட அரசனுஞ் சிவசிவ என்று இரண்டுகன்னங்களையும் பொத்தி "இக்கொடுமொழியை என்செவிபொறுத்ததே இப்படியார் செய்யநினைப்பன்! ஆயின் அவன்தந்தை பசுமானெனுஞ்செட்டியை இதோ பிடித்துவாருங்க" ளென்று சொல்லுமுன் தூதுவரோடிப் பிடித்துவந்துவிடுத்தனர். அரசனுந் தீக்குணங்கள் சிறிதுமின்றி மனச்சுத்த முடையவனாகிய பசுமானென்னுஞ் செட்டியை நோக்கிச் "செட்டியே! உனது துட்டப்பயல் துட்பண்ணியன் தினந்தினமிந்நகரத்துச் சிறுவர்களைக் கொன்றொழித்தான்" இன்று இந்த ஐந்துசிறுவர்களும் அவனாற் கொல்லப்படச்சென்று தப்பிப்பிழைத்து முன்னடந்தகொலையை விளக்கினர். இத்தீமை முன்னொருகாலுஞ் செய்தவர்களைக் காதாற்கேட்டுங் கண்ணாற் கண்டுமறியோம், இனியிவனை என்னசெய்யத்தக்கது நீயே நீதிப்படிசொல்லுதி" யென்றனன்.

அரசனதுவார்த்தைகேட்ட பசுமான் மனஞ்சகிக்கலாற்றாத் துயரங்கொண்டு "ஐயையோ! தீமைசிறிது மறியாவெனக்குத் தீராப்பழிவந்ததே" என்று சிறிதுநேரமனம் வருந்தி "அரசனே! இந்நகரத்திலுள்ள செல்வச்சிறுவர்களைச் செகுத்ததீயவனைத்தேதிப்பதன்றி வேறுநீதியுமுண்டோ! அரசனே! சிறுவனை

னறிவனை விலக்கிவிடினுங் "கொலைக்குக்கொலை" யென்னும்பழமொழி தானேவந்துசூழ்ந்திவனைக் கொல்லாமலவிடாது; தருமத்தைப்பொருளென்று கொள்பவர்கள் சிறுவரென்றும் பெண்களென்றுங் கண்டிக்கப்படாதவர்க ளென்றும் பொருட்படுத்து வார்களோ! செல்வஞ் சிறப்பு இன்பம் புகழ் ஆகியவிவை ஒருவராலாக்கவுமழிக்கவுந்தக்கவோ! எங்கே தருமமில்லையோ அங்கே அதர்மமே குடிபுகுந்தழிக்கும். அரசனே! பலசொல்லியென்ன என்னை நோக்கிப் பாவி துட்பண்ணியனைப் பதைக்கக் கொல்லாவிடில் அதுவேயென் குலமுழுவதையு மெரிக்கும் நெருப்பாகும். ஆதலாலரசே! சிறந்தபுத்திரர்களையெல்லாம் நீரிலமிழ்த்தி வதைத்தபாவியைத் தலையரிந்து விடுவதேதகுதி. மதுத்துளியினுமினிய மழலைவாக்குடைய மக்களை மறைவிடத்து மயக்கிக் கொடுபோய்மாட்டிவதைத்த மாபாவியை மன்னவ, நீயிருக்க மனமகிழ்ந்து யானே வதைப்பேன்; உனதாணைக்கஞ்சித் தடைப்படுகின்றேன், அவனைப்புத்திரனென்று சொல்வதுமில்லை புத்திரனைப் பெறும்பயன் அவனைக்கொன்ற உன்னாலே பெறுவேன்" என்றுசொல்லி வணங்கினன்.

இங்ஙனமே நீதிமானாகிய பசுமான் சொல்லியவார்த்தையைக்கேட்டு மன்னவனுமனமிகமகிழ்ந்து புகழ்ந்தனன். இராசசபையிலுள்ள மந்திரிகளாதியோர் துட்பண்ணியன் சிறுவனாதலி னவனைக் கொல்வதுகடனன்று. நமதரசாட்சியினெல்லைக்குள் விடாது காட்டிலோட்டி விடுங்களென்றனர். மன்னவனுமதுகேட்டு மகிழ்ந்து தூதுவரை நோக்கித் துட்பண்ணியனை "இந்நகரவெல்லைக்குள்விடாது காட்டிலேயோட்டி விடுங்களென்று கட்டளையிட்டனன். அதுகேட்டதூதுவர்கள் விரைந்தோடித் துட்பண்ணியனைப் பிடர்பிடித்துத்தள்ளி உன்னையிந்நகரத்திலே கண்டால் வெட்டிப்போடுவோங் காட்டேபோகுதியென்று. பிடித்திழுத்துவரும்பொழுது கொம்புதவறிக்குதிக்குங் குரங்குபோலப் போகுந்தீய துட்பண்ணியனைத் தெருவிலேகண்டவர்கள் இது "நமதுசிறுக்குஞ்சியையுடைய புத்திரருயிரைக் குடித்த யமராயனையிமானுடவுருவல்ல" என்பாரும் "இக்கள்வனை நாமுன்னறிந்திலே" மென்பாரும் "இதுபண்டுதொட்டபாபரூபமே" யென்பாரும் "பரிசுத்தனாகிய செட்டிப்பிள்ளைக் கித்தீமையார்ப்பிறவினு" ரென்பாரும் "அன்போடுபெற்ற நஞ்சிறுவரை நீரிலமிழ்த்திய நெருப்பிதுதானே" என்பாரும் "துட்பண்ணியனே! வஞ்சகக் குடுக்கையே! நாம்பதைபதைத்தழும்படி நஞ்சிறுவரை நீரினுள்

மிழத்தி நீயெடுத்த லாபமென்ன சொல்லுதி" யென்பாரும், "நமது தேசத்திலே இவன்கண்ணுக்ககப்படாத பிள்ளைகளா தப்பியிருக்கும்படி யிவனைக்காட்டிலோட்டிய நம்மரசன் நீடூழிவாழ்க" என்பாரும், "நமது சிறுவருயிர்குடித்த பாபிமுகத்தைப்பார்க்கலாகா" தென்பாரும், "அறிவிலிகாள்! குழந்தைகளுயிர்வதைத்தகூற்று வருகிறது குறுக்கேவிடாது குமாரர்களைக் கொண்டொளிமின்" னென்பாரும் ஆயினர். இங்ஙனமே பலரும் பலவாறு கூறத் தூதுவர்களாற் காட்டிலோட்டிய துட்பண்ணியனென்வன் மனம்வருந்திக் காடுகளிற்றிரிந்து பழவினைபற்றிமூப்பப் பண்ணவரருந்தவம்பயிலும் பன்னசாலைகளிற் சிலநாளிருந்தனன். தீயானதுசென்றுழியெல்லாஞ்செகுப்பதுபோலச் சென்றடைந்தபன்னசாலையிற்சேர்ந்த பார்ப்பனச்சிறுவனைச் சிக்கியெடுத்துச் செங்கமலவோடையிற் சேர்த்திவைத்தனன். கைப்பறுதவேப்பங்காயைக் கசக்கித்துவைப்பினும் அதுகசப்பிற் கடுகளவும் குறைவுபடாமைபோலத் துட்பண்ணியனும் அரசனடித்துரப்பி அகற்றியவழியும் அடியிட்டகுண மாறாதிருந்தனன்.

அதுகண்ட அருந்தவர்சிலர் அதிவிரைவிலோடி யவன்செய்தையாரும் உக்கிரச்சிரவாவுக் குரைத்தார்கள். அதுகேட்ட உக்கிரச்சிரவாவென்னுமுனிவன் யாரிதனைச் செய்தானென்று விரைந்தோடிப்பதைபதைத்துப் பாதகனாகிய துட்பண்ணியனை நோக்கி "அடாபாதகா! என்னருமைப் புதல்வனை நீரிலமிழத்திக்கொன்றநீயும் நீரிலமிழ்ந்திறந்து நெடுங்காலம் பசாசு ஆகிப்பதைத்துத்திரிகுதி" என்றுசபித்தனர். அதுகேட்டதுட்பண்ணியனென்பவன் மிகவும் வாடிச்சோர்ந்து மிகஅச்சத்தைத் தரும் பெருங்காட்டிற்புகுந்து யானை கரடி சிங்கமாதி விலங்குகளோடு தானுமொருவனாய்த்திரியுங்காலத்தில் பெருங்காற்று மழையுமுண்டாயது. துட்பண்ணியனென்பவன் குளிர்காற்றுத்தாங்கலாற்றாது பெருவருத்தமுற்று ஒதுக்கிடமின்றிச் செத்துக்கிடக்கின்ற ஒருயானைப்பிணத்தைக்கண்டு மழைக்கு மலைமுழைபி லொதுங்குபவர்போல வாயின்வழியே நுழைந்ததன் வயிற்றினுளிருந்தனன். இருட்டுமுழைக்குள் நுழைந்த புலியும் இடிக்கஞ்சிப் புற்றுக்குள்ளொதுங்கும்பாம்பும், அடிக்கப்படாது ஒருபுறமபீறிய பேரிகைக்குட்புகுந்த குள்ளநரியும்போன்று மழையதிகப்பட்டு வெள்ளமிகுதியாகப்பெருக்கெடுப்பவும் யானையினது வயிற்றைவிட்டு வெளியேவராதுள்ளேயிருப்ப அந்தயானைப் பிணத்தை அவனோடு வெள்ளமானது இழுத்துக் கடலினுளவிடத் துட்பண்ணியனுந் தன்சா

திவழுகின்படி துதிக்கையாகிய பாய்மரம்பூண்ட கயப்பிணமாகிய கப்பலோடு கடலு ளழுங்கி யிறந்தனன். "தன்வினை தன்னைக் கொல்லு"மென்றபடி துடபண்ணியனும பலசிறுவரை நீரிலமிழ்த்திக்கொன்ற தீமையாற்றானும் நீரிலமிழ்ந்திறந்தான். "கொடியவருடம்புவிட டிறப்பினுங் கொடுமைவிடாது" என்றபடி துடபண்ணியன் பெருவருத்தமுற்றிறந்தும் பேய்வடிவடைந்து பெருங்காடுழன்று பசிக்கனலவியாது வருந்திப் பருந்துபோலப் பறந்துழன்று இலக்ககோடிகற்பகாலம் வேனிற்காலத்தலைந்து வருந்தி ஒருகாலத்துமோரிடத்தும் நிலைக்காமற் காடு செடி நாடு நகர் முதலாகிய இடங்களெங்குமழுது ஏங்கிப்பெருமூச்சுவிட்டுப் புலம்பித்திரிந்து ஏதோ ஒருநல்வினையினால் அகத்தியருந்தவம்பயிலும் பொதியமலைச்சாரலை யடைந்து அங்குள்ளதபோதனர்களைக்கண்டு பணிந்து "முனிவர்காள்! யான்பாடலிபுத்திரத்துப் பத்திமானாகிய பசுமானென்னும் வணிககுலாதிபன் வயிற்றுதித்த பாவி, துடபண்ணியனென்னும் பெயருடையேனாய் அந்நகரத்திலுள்ள சிறுவர்களைப்பிடித்தலற நீரிலமிழ்த்திக்கொன்றேன்; அதுகண்டு அரசன்வெகுண்டு அரியவனத்திலகற்ற அங்குமடியிட்டப் பழக்கத்தால அந்தணச் சிறுவனதாருயிரையு மங்ஙனமமிழ்த்திக் கொன்றேன்; அதுகண்டவன்றந்தையடங்காக்கோபமுற்றுநீயாழமுள்ளநீரிலமிழ்ந்தி யிறந்தலகையாகத்திரிகுதியென் றரியசாபமிட்டான். அதுபெற்று அப்படியேயிறந்து அலகையாகி அடவியெங்குமளவற்றகாலமலைந்தலுத்தேன் ஆற்றே னாற்றேன்! ஐயன்மீர், அருள்வழங்குதிர்" என்றடியில்வீழ்ந்துபுலம்பினன். அதுகேட்ட அந்தணர்கள் சிறிதுமனமிரங்கி அகத்தியமுனிவருக்கு வெளிப்படுத்த அவருமாலோசித்துத் தமதடியவருளொருவரைநோக்கி அந்தத்துட்பண்ணியனைப்பிடித்த அலகையானது அக்கினிதீர்த்தத்திலன்றியகலாது, ஆதலினவனைச்சுட்டி நீயேமுழுகின் அவனைப்பிடித்த அலகையகலும் அப்படிச்செய்குதியெனவேவச் சுதீக்கணனாகிய அடியவன் மூன்றுநாளுபவாசியாகி விதிப்படிசங்கற்பித்தக்கினிதீர்த்தத்திலேமுழுகி அவனைப்பற்றிய பசாசாதியபாவங்களகலுமாறு அன்போடு இராமனையும் இராமநாதனையுந்தரிசித்து விடைபெற்று அத்தீர்த்தத்திற் சிறிதுகொண்டுவந் தவன்தலைமீதுதெளித்தனன். உடனே பசாசுவடிவும் பாபமும்நீங்கித் தேவுருவடைந்து தேரின்மேலேறித் தேவரம்பையர்சூழநின்று அகத்தியமுனிவரையும் மற்றுள்ள முனிவர்களையும்வணங்கி ஆசீர்வாதம்பெற்றுத் தேவருலகடைந் தின்புற்றனன். இச்சரித்திரத்தைக்கேட்டபோர் படிப்போர் சீவன்முத்தராகுவர்.

பின்புதீர்த்தலைப்புக்கவன்வானமார்பெண்டிர்கூட்டம்விருப்பொடுசூழ்வே
பொன்கொணாட்டிலகத்தியனாதியோர்பொங்குநாட்பணிவுற்றினிதேகினா
னின்பமீப்படுமித்திறமோதினேமிந்தமாக்கதைசெப்பிடுமீறிலா
வன்பர்கேட்பவர்முத்தர்களாகுவாரங்கிவேட்குமறத்தவவானமே.

அக்கினிதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

## சக்கரதீர்த்தச்சருக்கம்

சூதமாமுனிவரானவர் மற்றைமுனிவர்களை நோக்கி முனிவர்காள்! அக்கினிதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்த பெரியோர்கள் பின்பு சக்கரதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தல் முறையாகும். சக்கரதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்வோர் இட்டசித்திகளை யடைவர். தவத்தினாலுந் துறவினாலு மதிவிசிட்டமுடைய அஹிர்ப்புத்நிய முனிவரர் கந்தமாதனமலைச்சாரிலே சக்கரத்தைவிரும்பித் தவஞ்செய்து வேண்டினர். சக்கரமானது அவர் தவங்கண்டிரங்கி அங்கு கேடுபுரியு மரக்கர்களை வதைத்து அத்தடாகத்திலே யிருந்தது. இதனாலதற்குச் சக்கரதீர்த்தமெனப் பெயருண்டாயிற்று. அதனைக்கண்ட மாத்திரத்தே பைசாச பூத வேதாளங்கள் பாறும், சூரியனுமிதில் ஸ்நானஞ்செய்துசிவானுக்கிரகத்தா லிழந்த தனது கரம் பெற்றனன் என்றருளிப் பின்னுங் கையிழந்த வரலாற்றை யவர்கள் வேண்டுகோளின்படி சொல்லுவார்.

முனிவர்காள்! முற்காலத்திலே இந்திரன் முதலிய இமையவர்கள் அவுணர்களா லலக்கணுற்றுத் தங்குருவாகிய வியாழ பகவானோடு சிறிது யோசித்துப் பிரமதேவனிடஞ்சென்று போற்றி "ஐயனே! அவுணர்களெம்மைப் பெரிதும் வருத்துகின்றனர். அதனையொழிக்கு முபாயத்தைத் தேவரீரே கட்டளையிட்டருளுக" என்று வேண்டினர். பிரமனுமதுகேட்டுத் "தேவர்காள்! அஞ்சாதிருங்கள் அதற்குபாயஞ் சொல்லுகின்றேன். இந்திரனே! நீ தேவர்களனைவரோடும் சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து கந்தமாதனமலைச்சாரலை யடைந்து அவுணர்களழியுமாறு யாகஞ்செய அங்கே யவுணர்க ளிடர் செய்யமாட்டார்கள், அந்தயாக பலத்தினால் அவுணர்களனைவரு மிறப்பார்கள்" என்றனன். அதுகேட்ட இந்திராதி தேவர்களங்ஙனஞ் செய

வோமென்று பிரமனைவணங்கிவிடைபெற்றுக குருவையுமழைத்துக்கொண்டனைவருங் கந்தமாதனமலையினிடத்தே அகிரப்புத்தினியென்னு முனிவரராச்சிரமத்தையடைந்து, இந்திரனைப்பாகககருத்தாவாகவும், வியாழன் சயந்தன் விசுவாமித்திரன் எட்டாம்வசு குபேரன் வசிட்டன் சூரியன் அட்டாவக்கிரன் அக்கினியமன் வருணன் வாயு வீரபத்திரன் விட்டுணு. சுனச்சேபன் மதுச்சந்தன் ஆகியவிருநூறுபேருங் கூட்டமாகி யாகத்தை இருத்துவிக்குகளாயிருந்து சுகப்பிரமமகாமுனிவரைச் சாதகாசிரியராகவேதநெறிபிறழாது சாட்சியாகவிருந்து நடாத்தும்படி நியமித்து, விட்டுணுவினது பன்னிரண்டு சூரியப்பிரவைபோன்ற சக்கரத்தினது காவலினாலே அவுணர்களினிடர் சிறிதுமின்றி ஐந்து திருவதனங்களையுடைய சிவானுக்கிரகம்பெறுநிமித்தம் யாகத்தைநடாத்தினர். யாககுண்டத்திலுள்ள அக்கினியானது தன்னிடத்திலோமஞ்செய்யும்அவிகள் முழுதையுமருந்திச் சிவபெருமானது நெற்றிக்கண்போல விளங்கியது. அட்டாவக்கிரனவா, அவ்வியாகத்திற்புரோடாச சேடத்தை அதற்குரித்தாயிருக்கிற இருத்துவேச்ன் முதலானபேர்களுக்குப் பூங்குசெய்து, அவரவருக்குரிய பங்குகளைக் கொடுத்து அத்துவரியாயிருந்து நடத்தும்போது மகாஉக்கிரமாயப் பேரொளியோடு விளங்கிய பிராசித்திரபாகத்தைச் சவிதாவென்விளங்குகிற சூரியபகவானது கையிற் கொடுத்தார். அவனும் அஞ்சலிசெய்து இரண்டுகைகளையும் நீட்டிவாங்கினன். அப்படிவாங்கும்பொழுது பிராசித்திரனுடைய உக்கிரதேசசுபெருத்தோங்கி, தக்கனதுயாகத்திலே அக்கினிதேவனது கைகள் வீரபத்திரனால் வெட்டப்பட்டு வீழ்ந்தது போலச் சூரியனது இரண்டு கைகளையும் மணிக்கட்டுகளோடு அறுந்துவிழும்படிசெய்தது. சூரியன் மிக்ககோபமுற்றுத் தேவர்களைநோக்கித் “தேவர்காள்! உங்கள் சமூகத்திலெனது கைகளிழந்தேன நீங்களே எனக்குக்கைகளைத் தந்திடுதல் வேண்டும், அங்ஙனஞ் செய்யாதொழியி னுங்கள்யாகத்தை யழிப்பேனென்றனன்” அதுகேட்ட தேவர்களென்செய்வோமென்று திகைத்தனர். அப்பொழுது அட்டாவக்கிரன் அவர்களது முகத்தை நோக்கித் தேவர்காள், யான் சிவகடாட்சத்தினாலே சிவத்தியானத்தோடிருக்குமென்காலத்தில் அனேககோடிபிரமாகள் தோன்றிப்பிறந்தனர். அவருள் உலகேசனென்னும் பிரமாவின்காலத்தில் சாம்பலையென்னும் நகரத்திலே பிராமணகுலத்திலே அரியரனென்னுமோர்விப்பிரனானவன் முனிவர்களை வணங்குமாறு காட்டுவழியே வரும்பொழுது அங்கேவேடர்கள் அம்புகளைச்செலுத்தி இலக்குப்பழகிவிளையா



ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
R. M. DIST - TAMIL NADU - INDIA

டுமிடத்தில் அதனையறியாது நடுவே யகப்பட்டபொழுது எதிர்சென்ற அம்பானது அவனது இரண்டுகால்களையும் வெட்டியது. ஊழ்வினையினாலே இரண்டுகால்களையுமிழந்த விப்பிரனுங்கலங்கியொருவாறு தவத்திகளையடைந்து தனது குறைகளைச்சொல்லினன். அவர்களதுகேட்டு "விப்பிரனே, நீகந்தமாதனமலைச்சாரிலே விதிப்படி ஸ்நானஞ்செய்து கால்களைப் பெறுவை" யென்றேவினர். அவனுமங்ஙனமேசென்று ஸ்நானஞ்செய்து இழந்தகால்களையும்பெற்றுச் சிவபதமடைந்தனன். அதனாலிதற்கு முனிதீர்த்தமென்றும்பெயர். இங்ஙனேயனேக மகாவிசேடமுடைய இத்தீர்த்தத்திலே இச்சூரியனை முழுகுமாறு செய்யுங்கள். இழந்தகைகள்விரைந்தெழும்" என்றனர். சூரியனுமப்படியே அனுமதிசெய்ததேவர்களினேவலினாலே ஸ்நானஞ்செய்து இழந்தகைகளைப் பொற்கரங்களாகப் பெற்றெழுந்து மகிழ்ந்தனன்.

முனிவிர்காள், அதுமட்டோ இச்சக்கரதீர்த்தஸ்நானத்தினாலே குருடர் முடவர் கூனர் செவிடர் குணிகளாயுள்ளோருந் தமது உடற்குற்றங்களையும் மனக்குறைகளையும் போக்கிக்கொள்வதோடு இட்டசித்திகளனைத்தையும் பெறுவர். இத்தகைய அத்தீர்த்தமகிமையினால், தேவர்கள் அந்தயாகத்தைச செய்துமுடித்துத் தேவருலகடைந்து அசுரர்களைநாசப்படுத்தி வாழ்ந்தனர். இதுவே சக்கரதீர்த்தமகத்துவமாகும். இதனை வாசிப்பவர் கேட்பவர் பிறவிநீங்கிப்பேரின்பமடைவர்.

*அந்தநோன்கிருதற்புடனாற்றியேயண்டர்சேர்ந்தனர்சொற்கநன்னாட்டிலே*
*தந்தியிஞ்சைவிடற்கருள்கூர்த்தமால்சங்கமேந்தரிசக்கரதீர்த்தநீ*
*ருந்துமாண்கதைமற்றிதுதீர்த்தர்காளுநங்கள்வாஞ்சையுடற்கடனூர்த்ததா*
*லிந்தவான்புகழ்சொற்றவர்கேட்டவரின்பநீங்கலரிப்பவநீப்பரே.*

*சக்கரதீர்த்தச்சருக்க முற்றிற்று.*

## சிவதீர்த்தச்சருக்கம்.

——(*)——

சூதமகாமுனிவரானவர், கோடிசூரியப்பிரகாசமாகிய சிதாகாசமத்தியிலே அநவரதமுந் திருத்தாண்டவஞ்செய்யுந் திருவடித்தாமரையைச்சிந்தித்து மற்றைமுனிவர்களை நோக்கி முனிவர்காள், சக்கரதீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்த தவத்தர்கள் பின்பு சிவதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தல் முறையாகும். சிவதீர்த்தமானது அளவற்ற மகாபாதகங்களையும் பலவிததீவினை

களையும் நீத்தூளிபடலமாக்கும் பெருமையுடையது. வைரவக்க டவுள் இதிலே ஸ்நானஞ்செய்தபோது அவரைப்பிடித்த பிரம கத்தியைப் போக்கியது என்றருளிய அளவிலே, முனிவர்களா ச்சரியமுற்றெழுந்து வணங்கி, "ஐயனே, உருத்திரகணத் தலை வராகிய வைரவக்கடவுளைப் பிரமகத்தி எங்ஙனம்பற்றியது அத னைத்திருவாய் மலர்ந்தருளுக" எனவேண்டினர். சூதமுனிவரான வர் அம்முனிவர்களை நோக்கி முனிவர்களே, நீவிர்வினவியது மி கநன்று. இச்சரித்திரத்தை ஆராய்பவர்கள் தீவினைகளனைத்தும் நீ ங்கி மேலே பிறவியடையார்கள். முற்காலத்திலே பிரமவிட்டுணுக் கள் தங்களிலேமாறுபட்டுத் தேவர்கள் காணும்படி பெருங்கலக ம்விளைத்து அகங்காரத்தினாலே தம்மைமறந்தனர். அவருள்ளே பிரமன் விட்டுணுவைநோக்கி, "சங்கபாணியே, யான் உலகமு மூவதையும் படைத்தல் காத்தல் அழித்தல் செய்யுமுழுமுதற்க டவுள். எனக்கொப்புயர்வானவர்களுலகத்திலில்லை. எவர்களுக் கும் யானேதலைவன். நீயுமற்றையதேவர்களும் எனதேவலின்வழி நிற்பவர்கள்" என்றனன். அதுகேட்டவுடனே, உரல்டியிறகண்டு ண்டுழன்ற விட்டுணுவும், யானேகாவற்கடவுளென்ற அகங்காரத் தினான்மயங்கிப் பிரமனுடைய அகங்காரங் கண்டு கோபமுற்று, ஒருவன் இப்பூமிக்கு நடுவிதுதானென்றுகுறிக்க, மற்றவன் அது வன்று இஃதேயென்று பிறிதோரிடத்தைக்குறிக்குமாறுபோலப் பிரமனைநோக்கிச் சொல்லுவார், "பிரமனே, நானே பூமிக்குநா யகன். நீ ஒருசிறிதுமென்னை மதியாது எதிரேநின்று நானே முத ல்வனென்று சொல்லுவது மிகவுநன்று! அக்கருத்தைவிட் டித னைக்கேட்குதி. ஏகவஸ்துவாய் சர்வவியாபியாய் உற்பத்தி திதி நாச வுபசார தூரமாய் நானொருவனேயிருக்கிறேன். நீ இதனைச் சிருட்டிப்பது எனதாணையே. நீயெனதுபுத்திரனாகையால் இங்ங னஞ் சொல்லக்கேட்டுப் பொறுத்தேன். உனக்கிந்தப் புத்தி வந்த தெங்ஙனம்" என்றனர்.

முனிவர்காள், இங்ஙனமே அவ்விருவரும் தம்மை யுயர்த் தியும் மற்றவரைத் தாழ்த்தியும் பேசுமிடத்துத் திருக்கைலாயப தியனுப்பிய ஓலையாள்போல, நான்குவேதங்களு முருவெடுத்தவ் விருவருக்குமெதிரே தோன்றித் தசாவதார விட்டுணுவையும் பி ரமனையும் நோக்கி, எத்துணைப் பெரியோர்களதுணர்வுக்குமெ ட்டாததிதூரமாகிய முதலவனை வெளிப்படையாகக் காட்டி வி ளம்புகின்றது. "பிரமவிட்டுணுக்களே, சந்திரசேகரரும், தரும ரூபமாகிய இடபக்கொடியுடையருமாகிய சிவபெருமான எங்க ள்மேலும் தேவர்கள்மேலுந் தமது தலைமையுணர்த்துமாறு

இருத்திய திருவடித்தழும்பிருக்க, உங்களுக்குத்தலைமைவந்ததெவ்வாறு? இங்கே நாம் பரமபதியென்று சொல்லுமீசன், தானு எண்குணன் அகண்டிதன் பரமன் சம்பு உபமானுதீதன் பாசரகிதன் சுவயஞ்சோதி புனிதன் இன்பபரிபூரணன் விழைவு வெறுப்பற்றவன் திருக்கைலாயபதி சத்திசத்தனுயுள்ளவன் ஆன்மநாயகன் தேவர்கள் வணங்கும் ஸ்ரீபாதபத்மன் தம்மைவேண்டினோருக்கு இகபரபோகமோக்ஷாதியாகிக் களங்கமற்ற புகழுடையான் எவராலுமெத்திறத்தாலு மளவுபடாதவனுகிய சிவபெருமானே. இங்ஙனமாகப் பூவானது தன்னிடத் துள்ளதேனைத்தானுண்ணமாட்டாது வண்டுகளுக் குணவாக்குவதுபோல, உமதுநாவிலிருக்கு மெமமாற் சிறிதுபயனடையச் சிந்தியாது, பிரமனே, நீ சொல்லியதென்னை. சீதரா, நீயுமிங்ஙனம் மயங்குதியேல் வேறியார் மயங்காதொழிவர். சிவசிவா! நீவிரிப்படியுஞ் சொல்லலாமா? விட்டுணுவே, நீ சிவபெருமான் மேருமலையை வில்லாகவளைத்தபொழுது அம்பாக விருக்கவில்லையோ! பிரமனே, நீ அத்தேரைச்செலுத்தச் சாரதியாகவில்லையோ! விட்டுணுவே, பிரமனொருபோது சொல்லினுஞ் சொல்லுக, நீ இங்ஙனஞ்சொல்லிமாலென்னும் பெயரைப் புதுக்கினை. பிரமனே, சிவபெருமானெம்மை உன்னிடத்திலே இருக்கச்செய்தமையால உன்னை யாமே கண்டிபபேம். விட்டுணுவே, முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தாரகாவனமுனிவர்களைச் சோதனைசெய்யத் தொடங்கிய பொழுது, மோகினி வடிவாகப் பின்சென்றதுயார் நீ சொலலுதி. பெண்களுந் தலைமை பெறுவார்களோ! பின்பு ஏன்பிதற்றுகின்றனை. விட்டுணுவே, திருபபாற்கடலில் ஆலாகல மெழுந்தஞான்றுசிறிதுநேரமெதிர்த்து நின்றபொழுது செம்மையாகிய நினது மேனி கருகியவாறென்னையோ? உன்னுடம்புமுழுதினும்பற்றிய கருமை யுன்னுள்ளத்தினும் பற்றியதோ? பிரமனே, நீ அவ்வாலாகலத்தைக் கண்டவுடனோடி யுய்தலாலுனக்குத் தலைமையுண்டாயதுபோலும். சந்திரசேகரனது திருக்கண்டங் கருமையுடைந்ததுயாரைக்குடியிருத்தவோ? அச்சுதனே, நீ சக்கரப்படையேந்திக்களிப்புற்றனை. முன்பு அந்தச்சக்கரத்தைத் திருவீழிமிழலையிலெழுந்தருளிய ஸ்ரீகண்டபரமசிவனது திருவடிக்குச் சாத்தும்படிகுறித்த ஆயிரந் தாமரைமலரி லொன்று குறைய அதற்குபபதிலாக நின்கண்ணை யிடந்து சாத்திப் பெற்றதனை இப்பொழுது ஏன்மறந்தனை. பிரமனே, நீ சீகாழியிற் சிவபெருமானை அருச்சித்தபடியாலன்றோ அத்தலத்தை இன்றும்பிரமபுரமென்று சொலலுவர் ஆயினும், பிரமவிட்டுணுக்களே, உங்களகங்காரங்களைப்

போக்குவதற்கோருபாயஞ் சொல்லுதுங் கேளுங்கள். உலகத்தைப் படைப்பதற்குங் காப்பதற்கும் விரோதமேயில்லை. அவ்விருதொழிலுக்கும் நீவிரிருவருந் தலைவர். உங்களாலே பிரயாசப்பட்டுப் படைத்துக் காத்தவுலகத்தை அன்னியனொருவனழிப்பது உங்களுக் கேவிரோதமாகும். அதற்கு நீவிர் மனம்பொருந்தீர். அத்தொழில் செய்பவன்யார்? அவன் ஸ்ரீகண்டபரமசிவனல்லவோ. எல்லாமழிந்தபின் மீளவுண்டாக்குதல் யார்கடமையென்று சிந்தித்துப் பாருங்கள். பிரமனே, விட்டுணுவே, சங்காரகருத்தனாகிய அவனிடப்ப, நீவிரிருவரும் விரோதமுறக் காரணமென்னையோ? உலகமானது அரசனை நரபதியென்றழைப்பது போலப் பசுபதியென்றுயாரை அழைப்பது சொல்லுங்கள். விட்டுணுவே, சிவபெருமான் சனகாதியருக்கு யோகசாதனை யுணர்த்துதற்காகச் சிறிதுபொழுது அசைவற்றிருப்ப அக்காலத்து நின்னாற் காக்கப்படுமுயிர்களனைத்து மறிவழிந்துகிடந்தன. நீ ஒருணர்வுமின்றிச் சேஷசயனத்தில் வீணேகிடந்து தூங்கினை. இப்போதுயாதுபெற இங்ஙனந்தொடங்கினை? இல்லாத இறைமையைக் கட்டிக்கொள்ள இளையானைப் பகையாக்கியது புத்தியோ? கந்தகிரியிலே கந்தக்கடவுள் வைத்த கடுஞ்சிறையைக் கைலாயபதிகண்டு விடுவித்த காரணத்தைமறந்த கமலயோனிக்கு யார்கட்டுரைக்கவல்லவர். கமலக்கண்ணனே காண்குதி. ஆயினும், பிரத்தியக்ஷப் பிரமாணத்தினு மனுமானஞ்சிறந்தது. அனுமானத்தினு மாகமஞ்சிறந்தது. கலைஞானிகள் யாஞ்சொல்வதை மறுக்கார்கள். எங்களிடத்து விருப்புவெறுப்பில்லை. யாங்களேஎதற்கும் பிரமாணமாகும். இதுசத்தியம். நாம் அனவரததாண்டவராகிய சிவபெருமானது திருவடியைத் தாங்குங் குதிரைகளே. ஆதலின் பிரமவிட்டுணுக்களே, எமது சொல்லைநம்பிச் சிவபெருமானை முழுமுதற்கடவுளென்றும உங்களுக்குமுதன்மையில்லை’’ யென்றுஞ்சொல்லின.

முனிவர்காள், தம்மையோதினவர்களது செவிகளைநிறைக்குமமுதசீகரமும் அஞ்ஞானாந்தகார பானுவும் அறிவுருபமும அத்தியயனபட்டர்களது பெருவாழ்வும் பற்றற்றார் செல்வமுமாகிய வேதங்களின் கோடாகோடியி னொருபங்கே பல உபநிஷத்துவடிவாகும். அவ்வுபநிஷத்துக்களி லொருசிறு பாகத்தைநல்லாசிரியர்கள்வாய்க்கேட்ட சீடனும், அதனைச்சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடிச் சுவானுபவமடைந்து சுயம்பிரகாசமாவன். அங்ஙனமன்றி அவ்வேதங்கள் தாமே பூரணவடிவாய்ப் பிரத்தியக்ஷத்தினின்று சொல்லுமாயின் யாவர் அதிற் சந்தேக விபரீதமடைந்தறிவுயாதவர்.

ஒருசக்கரவர்த்தியினது கட்டளையை வெளிப்படுத்துமப றையொலியைக் கேட்டு அவ்வழிநடப்போர் அவனால் நன்குமதிக்கப்பட்டு மேன்மையடைவதும், அதனை மறுத்து அலக்ஷியம்பண்ணுவோர் அவனால் தண்டிக்கப்பட்டுக் கீண்மையடைவதும் போலப் பிரமவிட்டுணுக்களுந் தங்களைமூடி மேவிட்ட மயக்கத்தினால் தெய்வத்தன்மையையுடைய வேதவாக்கை மறுத்து "வேதபுருடனே, நீயன்றி நினது நாயகன் நேரேவந்துரைப்பினும் நினைத்ததுவிடோம்" என்றுகூறினர்.

சிவபெருமானனவர் பிரமவிட்டுணுக்கள் செய்த பிழைகளைக்கண்டு உத்தியோகத்தினின்று நீக்கியும், உறுப்புக்களைக்குறைத்தும், உண்மைஞானத்தைக் கொடுத்தும்,வேதாகம உபநிஷத்துக்களைவிளக்கியும், படைத்தல்காத்தலாகிய உத்தியோகங்களைக்கொடுத்துந் தெளிவடையாதவராய்ச் சிறிதுந் தமது கருத்திற்றிரிவுபடாத வேதங்களை நோக்கிச் சொல்லுவார்கள், "சிறிதுங்குற்றமில்லாத இனியசத்தியவாக்குடைய வேதங்காள், நீவிர்தோற்றியதுஞ்சொல்லியதுமிகவுநன்று. நீங்கள் தலைவனென்று சொல்லியசிவன் சுடலையிலே கூத்தாடக்குறித்துப் பூதப்பிரேத பைசாசங்கள்சூழ எலும்புதலையோடு பன்றிக்கோடு ஆமையோடு ஆதியிழிந்தபொருள்களைச்சுமந்து நடிப்பன். பெரியவிருதுபோலச் சூலாயுதத்திலே முழுவெலும்பைத் தூக்கிக்கொண்டுதிரிவன். வெட்கமின்றிப் பெண்ணை யிடதுபாகத்தே யென்றும்பிரியாமலேந்தித்திரிவன். அங்ஙனமாயபெருங் காமுகனையோஎங்களினும்பார்க்க மிக்கதலைவனென்றீர். உங்களுக்குப் பாரபக்ஷமுண்டோ! அச்சிவனுங்களையேவினனோ? ஏன்பொய் சொல்லுகிறீர்கள் அப்பாலேபோங்கள்" என்றனர்.

சேனபதியானவன் தனது சேனைகளுடைந்தவழித் தானெதிர்த் தெழுதல்போலப் பிரமவிட்டுணுக்கள் வேதவாக்கை மறுத்துத் தாமே பரம்பொருளென் றெழுதலைப் பிரணவமானதுணர்ந்து, வேதமாகிய பருப்பதத்தின் மேலேறிநின்று சொல்லுகின்றது "பிரமவிட்டுணுக்களே, கேளுங்கள், நீவிர் உலகத்தைப்படைத்தல் காத்தலாகிய இருதொழில் செய்யும் பெருமைபற்றி வேதவாக்கைத் தடுத்துரைத்தீர்கள். நும்மைப்போல உண்மையறிந்தவர்யாவர்! நீவிர்சொல்லார்ந்த வேதப்பொருளில் துணிவுபிறவாது தடுத்துச் சொல்லியதென்னோ! தோல்வியடையும் வழக்கைப்பேசவுந்துணிவார்களோ! இதுமுறையன்று வீணேஎன்கெடுகின்றீர் இவ்வளவிலே நில்லுங்கள், பிரமவிட்டுணுக்களே, கல

லால்விருக்ஷநீழலி லிருக்கும் கடவுள்போல நீங்களும் வேதஞ்
சொல்லுகிறீர்களல்லவா! உங்கள்கர்லோ? இயமனையுதைத்தது பி
ரமனே நீ மன்மதனை எரிக்காது விடமாட்டாய். விட்டுணுவே நீ
முப்புரங்களைச்சிரித்தெரிக்காது விடமாட்டாய். நீசிவனைப்போல
த்திருக்கைலாய மலையையெடுத்த இராவணனை அதன்கிழேகாலிற்
பெருவிரலா லூன்றி நசுக்காது விடமாட்டாய். பிரமவிட்டுணுக்
களே, பிரணவவேதங்களை யுடையவன் இடபாரூடனாகிய பரமசி
வனையேயன்றி உலகத்திலே யுங்களையாரேனுஞ்சொல்லுகின்று
ர்களா? பெரிய விட்டுணுவே, காவற்றொழிலுடையநீ இவ்வுலகத்
தை யுண்பது இடபாரூடராகிய சிவபெருமான்மேற்கொண்ட ந
ண்போ அன்றி, அவர்குணத்தைக்கொண்டோ? நீங்களோ இறக்கா
தவர்கள். உங்கள் படைத்தல காத்தல்களோ அளியாதன பின்னை
ரந்தச்சிவபெருமான் இடபக்கொடிபிடித்தெந்தச்சுடுகாட்டில நடி
ப்பது? உக்கிரரோ மிக்கவலியுடையவர். அவர்சிவாஞ்ஞையின்வழி
செய்பவர். சிவபெருமான் அங்ஙனமாஞ்ஞை செலுத்தாவிடின் அ
வர்சைனியங்களாகிய பசாசுகள், அனைத்தையும்அழிக்குமல்லவா
மேலும் பிரமவிட்டுணுக்களே, உங்களுடம்பிற்பொருந்திய அசுத்த
ங்களகன்று சுத்தமாவதில்லையென்றுநீவிரேசொல்லில் சிவன்தலை
யோடுகளுடனென்பு மாலையைத்தரித்ததும்இழிவாகும். இன்னும்
விட்டுணுவே, நீகொண்ட பன்றிரூபத்தினது இருகோடுகளாற்று
ங்கிய பூமிமுழுதுக்கும் நீயேமுதல்வனன்றி நினதொருகோடுகொ
ண்டசிவன் முதல்வனாதலெப்படி? மேலும், விட்டுணுவே, சிவபெ
ருமான் ஆமையோடணிந்ததுபற்றி நீசிறிதுங் குற்றஞ்சொல்லாய்.
நீயுடைந்துத்தள்ளிய! ஓட்டை விளையாட்டாகவணிந்தார் என்பா
ய்போலும். விட்டுணுவே, எமதுசிவன் சூலாயுதத்திலே உனது
முழுவென்பை யேந்தியகுணமுனக்குத்தெரியாது அவர் வெற்றி
கொண்டா ரென்பைபோலும்.

பிரமனே, நீசரசுவதியை நாவில்வைத் தணைவதுபோலவும், சி
வன்உமாதேவியைச் சரீரபாகமாகவைத்துத் தழுவாரென்றறிகு
தி. அஃதெங்ஙனமாயின், சிவனுஞ்சத்தியும் சூரியனுமொளியுஞ்
சந்திரனுங் குளிரும்போலப் பிரித்தறியப்படாது அபின்னமாயி
ருப்பரென்றறிகுதி. விட்டுணுவே, நீ இலக்குமியைப் புணரும
பொழுதும், பிரமனே, நீசரசுவதியைப் புணரும பொழுதும்போ
கசத்தியாகத்துவிதமாயெண்ணுவீர்கள். சிவ னுமையோடுகூடி
யவழி அருள்வடிவா யத்துவிதமாயிருப்பர். ஒருவடிவிலேபிரி
க்கப்படாத விருவேறுவடி வுடையவர் யாவர்? ஒருவரையொ
ருவர் பிரிந்து தழுவமுடியுமோ சொல்லுங்கள் பின்னவடிவமா

யின் இருவர்மதிப்பும் பின்னமாகும்; இருவர்பணிகளும் பின்னமா
னபணிகளாகுமன்றே. ஆண்பெண்ணென்னு மிரண்டும் ஒருமித்
தவடிவுடையவர் சிவபெருமானொருவரன்றித் தேவர்களுள்ளே
ஒருவரைக்காட்டுங்கள். பெண்ணெனனில் வலதுபாகத்தை நோ
க்குமிடத்தானாகவும், ஆணெனனில் இடதுபாகத்தை நோக்குமி
டத்துப்பெண்ணாகவுந் தோன்றுதலால், ஒன்றென்று துணியப்ப
டாத அவனது எண்ணத்தையாரறிவார். அவ்விறைவன் எல்லா
வடிவுந்தானவர்; தானொருவடிவுமாகார்; ஒருருவமுமெடுக்கார்;
அவரதுவடிவம்ஞானமே. அவரதுதிருவருளே உமாதேவி. ஆதலா
ல், பிரமவிட்டுணுக்களே, நீவிரிருவரும் சமாதானமாகிக்கலகத்தை
யொழிக்குமாறு உங்களையிரந்து தாழ்மையோடுகேட்கிறேன். பிர
மவிட்டுணுக்களே, வேதங்களனைவை, ஆதியென்றும், அற்புதரெ
ன்றும், சுயஞ்சோதியென்றும், உவாதானரகிதரென்றும், பசுபதி
யென்றும், உலகநாதரென்றும், தனக்கொப்பில்லாதவரென்றும், த
னக்குமேலில்லாதவரென்றும், சிருட்டிகர்த்தாவென்றும், வேறே
வுதலில்லாதவரென்றும், இராசதகுணத்தினால்பிரமனை உன்னைச்சி
ருட்டிசெய்யென்றேவியும், சாத்துவிதகுணத்தினால் விட்டுணுவே;
உன்னைக்காக்குதியெனறேவியும், தாமதகுணத்தினால் காலருத்திர
ரையழிக்குதியெனறேவியும், உலகத்தை முத்தொழிற்படுத்துவார்.
பஞ்சகிருத்தியகாரணனாகிய சிவனுக்கேயன்றி நுங்களுக்கெக்கால
த்துமுதன்மையில்லையென்றும், உமாதேவியாரவரது இன்பருபம
ன்றிவேறல்லவென்றும் நானும் நீவிரும நான்குவேதங்களும் தேவ
ர்களும் இந்திரனும் ஏனைய சராசரங்களும் வணங்கவீற்றிருப்பவர்
அச்சிவபெருமானேயென்றும், தனது சன்னிதானத்திலேவிகசிக்கு
ந்தாமரையிடத்து விருப்புவெறுப்பில்லாத சூரியனைப்போலத் த
னது சன்னிதானத்திலே உலகுசேட்டிப்பதன்றித் தானொன்றும்
செய்யாதிருப்பரென்றும், விருப்புவெறுப்பில்லாதவரென்றும்சொ
ல்லுமாதலால், சிறுவர் பெண்கள் இடையராதியோரிடத்து மணுகா
தமயக்கம் நும்மிடத்திருப்பதுயாதுபற்றி நீவிரிவ்வாறு கலகஞ்செ
ய்வதையொழிமின். இன்னும பிரமவிட்டுணுக்களே, மற்று நூல்கள
னைத்துஞ் சிவபெருமானை முழுமுதல்வனென்றுஞ் சொல்லும்.
மூயலுக்குக்கோடுள்தாயின் உங்களுக்கு மிறைமையுளதாகும். நா
மேயுங்களுக்கு இந்தமுதன்மையைத்தந்தோம; அதுபற்றிச் சிவபெ
ருமானது தலைமையைக் குறைக்கநினைத்தீர்கள். இந்தநன்றியைமற
ப்பவர்யார். இவ்வேமேலென்னிடத்திற் சிறிதுங்குற்றமில்லை. எனதுகு
க்குமார்த்தனுஞ்சிவபெருமானன்றி வேறில்லை'' யென்று சொல்லி முடி
த்தது. முனிவர்கள் இங்ஙனமே பிரணவ முருவெடுத்துவந்துசொ

லவியும் பிரமவிட்டுணுக்கள் தெளிவடைந்திலர் அவனருளின்றி யார் குணப்படுவார்.

பிரமவிட்டுணுக்களது மனதிலே பேரிருள் குடிகொண்டது கண்டு, சிவபெருமானவர் பல்லாயிரகோடிசூரியர்கள் திரண் டொருங்குதித்தாற்போல, சுத்தசோதிரூபமாய்த் தோன் றினர். அதுகண்டபின்பு பிரமன், இந்தச்சோதிரூபம் யாதோ வென்று அச்சத்தோடு தனது உச்சிமுகத்தாலுற்றுநோக்கிப பல முறையு மிக்க விருப்பத்தினாலூன்றிப் பார்க்கும்பொழுது, அந்த முகம் அச்சோதியிலுண்மூழ்கி, வடவாமுகாக்கினிபோலாயது. அப்படியழல்பற்றியு மசையாது பார்க்குமிடத்து, ஒளிபொருந் திய ரத்தினத்தின்கண் ணோருருவந்தோன்றுவதுபோல ஓர் திவ் வியபுருடன் தோன்ற, பிரம னதனைக்கண்டு களிப்புறுதமயக்கத் தினால் அச்சோதிப்புருடனை விழித்துச்சொல்லுவான் "பாலநே த்திரா, நீ உருத்திரனென்ற பெயர்கொண்ட முன்னாளிலே உன் னை எனது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய வென் சிறுவனெ ன்றறிந்தேன்" என்று தனதகங்காரத்தினால் மனோவாக்கதீதமா ய்த் தன்னால் முடிதேடிக்காணப்படாத பரமசிவனென்ற அறிவி ழந்து சொல்லினன்.

இங்ஙனமே பிரமன் அகங்காரத்தால மேன்மைபேசி நிற்ப, சிவபெருமான் காலவைரவரை வருகவென்றழைத்து ஏவினார். அபபொழுது காலவைரவருஞ் சூலாயுதத்தை யேந்திச்சென்று பிரமனோடு நெடுநாட்பின்னிடாது கடும்போர் செய்தனன். பிர மனவன் வைரவர் தன்னோடுசெய்த யுத்தசாமர்த்தியத்தைக் கண்டு தோற்று நாணி முன்பு தான்சொல்லிய கடுஞ்சொறகளை நினைத்து நினைத்து வருந்தி ஓட நினைக்குமளவில் எங்கும் வைர வதோற்றமே நிற்கக்கண்டு இனி யாதுசெய்வோமென்று திகை த்து நிற்க, வைரவக்கடவுளும் அப்பிரமனது உச்சித்தலையானது சுத்தவெண்மையாயிருக்கக்கண்டு வாயுவேகத்தோடு விரைந்து சென்று தனது நகத்தினாலிரத்தஞ்சொரியுமாறு கிள்ளினர். உட னே பிரமன் விழுந்திறந்தனன். அனைத்தையும் விரைந்தழிக்கும் பெருவலியுடைய உருத்திரர்கள் கோபித்தால் பிரமவிட்டுணுக்க ளா பிழைபடாமலெதிர்நிற்பவர்!! உடனே, வைரவக்கடவுள் பிர மனுக் குயிர்கொடுத்தெழுப்பினர். பிரமனு முயிர்பெற்றெழுந்து சிவபெருமானைநோக்கி, அவரது திருவருளைப்பெற்று, அகங்கார மொழிந்து, அப்பெருமானது திருவடிகளை வீழ்ந்துவணங்கி, தான

முன்சொல்லிய வம்புவார்த்தைகளை நினைத்து வெம்பிக் கண்ணீர் சொரியநின்று துதிப்பானாயினன்.

"உமாதேவிபாகரே, தேவரீரே சகற்பிதாவாகி என்னையுண்டாக்குதலால் என்னைவருத்தி யெனது மயக்கத்தையொழித்து யான்செய்த பிழைகளைப்பொறுத்தீர். சந்திரசேகரரே, முப்புரதகனரே, உற்பத்திநாசத்தையொழிக்குந் தேவரீரது திருவடிகளையன்றிமற்றொன்றை மதிப்பேனோ! ஆணுமாய்ப்பெண்ணுமாய் அல்லவுமாய் இன்பமாய் அவ்வின்பப்பொருளுமாயிருக்குந்தேவரீரையல்லது பிறரொருவரையுங்காணேன். என்னையுண்டாக்கிய படைக்கச்செய்தும், விட்டுணுவை யுண்டாக்கிக் காக்கச்செய்துமிருக்கும் நித்தியவஸ்துவே, தேவரீர், உயர்ந்த பதவியையுமுத்தியோகத்தையுந்தந்து உயர்த்திவைத்ததினாலன்றோ தேவரீரை மதியாதிருக்கவந்தது. மோக்ஷத்தைத்தருகின்ற தேவரீரது திருவடிகளைத் துதித்தின்புறுவதே யினியமையும். தன்னை மறக்கச்செய்யும் படைப்புத்தொழிலினி யெனக்கு வேண்டியதில்லை. மேருவை வில்லாகவுடையவரே, உமாதேவிபாகரே, வரவுபோக்கில்லாதவரே, உமது திருவடிகளுக்கு வணக்கம். தியானிக்குமடியார்களது அன்பு நீரிலமிழ்ந்தும் ஞானமூர்த்தியே, அன்பர்கள் சாத்து மடிக்கமலங்களுக்கு வணக்கம். எம்பெருமானே, இன்னுந்தேவரீரை மதியாது மயக்கமெழுந்தகாலத்துமின்றுபோலவந்தருளி யடிமைக்கொள்ளுந்திருவடிகளுக்கு வணக்கம். எனது மனம் வாக்குக் காயங்களையும் என்னையும் இவ்வுலகத்தையுந் தேவரீரே யுடைமைப்பொருளாகப்பெற்றமையால் யான்செய்யும் பிழைகளைப்பொறுத்து என்னைக்காப்பது தேவரீரது கடனே" என்று சொல்லி வணங்கினன். சிவபெருமானுஞ் சிறிதுமனமிரங்கிப் "பிரமனே, நீ அஞ்சாதிரு" என்றருளி, வைரவக்கடவுளைநோக்கி "வைரவனே, நீ நடத்திய யுத்த சாமர்த்தியத்தைக்கண்டு மகிழ்ந்தோம், இப்பிரமன் முன்னுள்ளவன், அதிசுத்தன், ஆதலாலிவன்றலையோட்டிலே பிச்சையெடுத்துத் துட்டநிக்கிரகஞ்சிட்டபரிபாலனஞ் செய்துலகத்தை நடாத்துதி" என்றருளித் திருக்கயிலாயமலைக்குச் செல்லுவாராயினர். அப்பொழுது, வைரவக்கடவுள் வீழ்ந்துவணங்கி "எம்பெருமானே, பிரமகத்தியென்னுமொருபெண்கொடி மிக்க வலியுடையவளாய் அக்கினிச்சுவாலைபோலப் பின்னுமுன்னுந் திரிகின்றாள் அதற்கு யாதுசெய்யலாம்" என்று இரக்க, கயிலாயபதி "வைரவனே, பிரமக்கொலைசெய்தவர்கள் பிரமகத்திப்பேயாற் பீடிக்கப்பட்டு வறியராயிர

ந்துழலுவர் பிரமனை வதைத்தபழி யுன்னைப்பற்றியது. அது அநுபவித்தே தொலைக்கவேண்டும். ஆதலால், நீ ஒருவருடைய இப்பிரமகபாலத்திலே பிச்சையெடுத்துப் பின்பு பூமியிலுள்ள புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து, கங்கையிலே முழுகினால் இப்பிரமகத்தியின் முக்காற்பங்குநீங்கும்; எஞ்சிய காற்பங்கையுந் தென்றிசைக்கணுள்ள கந்தமாதனமலைச்சாரலிலேயிருக்குஞ் சிவதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து போக்கிப் பரிசுத்தனாய் வைகுதி" என்றருளித் திருக்கயிலாயமலையிடத்தேகினர்.

வைரவக்கடவுளும் சிவபெருமானது கட்டளையைச் சிரமேற்கொண்டு, பிரமகபாலத்தை யொருகையிலேந்திப் பலிகவர்ந்து பிரமகத்தி நீக்கவேண்டுமென்னும் பேரவாவோடு பலதீர்த்தங்களிலும்ஆடிப் பின் கங்கையாற்றையடைந்து ஸ்நானஞ்செய்து முக்காற்பங்கையும்போக்கிச் சிவபெருமானருளிய கட்டளைப்படி சிவதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து பிரமகத்தி முழுதையும் போக்கியபின்பு, சிவபெருமான் அவரெதிரேவந்துதோன்றி "வைரவனே, உனக்குப் பிரமனைக்கொன்ற பிரமகத்தி முற்றுக நீங்கியது, இதிற்சிறிதுஞ் சந்தேகப்படாதே. நீ பலியெடுத்த கபாலத்தைக் கங்கையிலேகொண்டுபோய்ப்புதை" என்றருளிமறைந்தனர். அதுகேட்ட வைரவக்கடவுளும் கங்காதீரத்தையடைந்து, பிரமகபாலத்தை யங்கோரிடத்துப்புதைத்து அதில் ஸ்நானஞ்செய்தனர். உலகத்தவர் இன்றும் அவ்விடத்தைக் கபாலதீர்த்தமென்றழைப்பர். முனிவர்காள், வைரவக்கடவுளுக்குப் பிரமகத்திநீக்கிய சரித்திர மிதுவாகும். இத்தீர்த்தமானது தன்னிடத்து விதிப்படி ஸ்நானஞ்செய்வோருக்கு விரும்பிய இட்டசித்திகளைக்கொடுக்கும். இச்சரித்திரத்தைச் சொல்லுவோருங்கேட்போரும் துன்பமுறார்கள்" என்றுசொல்லினர்.

எவர்கவிற்றுவாரிதுசெவிக்கொள்வா
ரவரிடற்படாரளவிடற்கொணு
வுவமனற்றசீருதவுமுட்கொள்வீர்
சிவதடத்துநீர்செறிதவத்தினீர்.

சிவதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

# சங்கதீர்த்தச் சருக்கம்.

—o—

சூதமுனிவரானவர் தமதாசிரியரைவணங்கிப் பின்னுமம்முனிவர்களைநோக்கிச் சொல்லுவார், "துறவிர்காள், சிவதீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்த பெரியோர்கள் பின்பு சங்கதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வது முறையாகும்.

அந்தச்சங்கதீர்த்தமானது, குருநிந்தை, பிதிர் மாதுரு நிந்தை ஆதியவற்றையும் செய்ந்நன்றிமறந்த தோஷத்தையும் நீக்கும். சங்கன் என்பவன் சங்கேந்தியவிட்டுணுவைநோக்கித் தவஞ்செய்தவிடமிதுவாகையாற் சங்கதீர்த்தமென்றுபேராயிற்று.

முற்காலத்திலே இத்தீர்த்தத்தினிகழ்ந்த சரித்திரமொன்றுளது அதனைச் சொல்லுதுங் கேட்பீர்களாக. பிராமணகுலத்திலே, விருப்புவெறுப்பில்லாதவராய், யாவரிடத்து மன்புள்ளவராய், பரப்பிரமத்தியானமுடையவராய், வேதாத்தியயனபட்டராய், வற்சனுபனென்னும்பெயருடைய அந்தணரொருவர், தனது பர்னசாலையிலே ஏகாக்கிரசிந்தையுடையவராய் நெடுங்காலமோரிடத்திலே அசைவற்றிருந்து தவஞ்செய்தார். அதுகாலத்தில் கறையான் புற்றெடுத்து அவரை மூடியது. அவர் அதனையொருசிறிது முணராதவராய்த் தனதுள்ளத்தமைந்த பரமபதியைப்போலச் சிறிதுங்களங்கமற்று அருந்தவஞ்செய்தனர். தேவஇந்திரனென்பவன், இவரது அருந்தவத்தைப் பரீக்ஷிக்கநினைத்துவந்து, முகில்களைநோக்கி விடாமழை சொரியுமாறு கட்டளையிட்டனன். அப்பொழுது முகில்களானவை திரண்டெழுந்து கடல்சுவறக்குடித்து மிகக்கருகி இடைவெளிதோன்றாது மறைத்து மேலுலகம் வெடித்தங்குள்ள நீர்சொரிவது போலவும், உகமுடிவுபோலவும் இடித்து மின்னித் துளிகள் இபத்துணையாக நீரைச்சொரிந்தன. வற்சநாபரானவர் தன்மீதுவிழுந்த பாணங்களைத்தாங்குஞ் சுத்தவீரர்போலவிளங்கினர். இந்திரனுகிய அருச்சகன், கரியமுகில்களானவை இரத்தன கடங்களாகவும், மழையானது காமதேனுசொரியும் பாலாகவும், ஆலாங்கட்டிகள் புஷ்பங்களாகவும், இடிமுழக்கம் புகழ்த்தோத்திரமாகவும், மின்னல் விளக்காகவுங்கொண்டு வற்சநாபராகியசிவனை அருச்சித்தல்போல இங்ஙனமே விடாமழைசொரியவும், மலைக்கலலுப்போலச் சிறிதுமசைவின்றி இருக்குந்தோற்றத்தை இந்திரன் கண்டு, தனது கொடிமுழக்கை நிர்த்தஇடிபினுற் செவிடுபடும்ப

டியும், அடிக்குங்காற்றினால் சரீரம் குளிரேறி நடுக்குற்று விறைப்படையும்படியும் வருத்தினன். அதற்கு முனிவர், சிறிதும் மனஞ்சாதிருக்கக்கண்டு, அவரிருந்த இடத்தெழுந்த புற்றின்றலையில் இடிவிழும்படி செய்ய, உடனே புற்று முழுவதும் வெடித்துப் பிளவுபட்டது. தருமதேவதையினது திருவருளினாலே முழுகிய முனிவர், சிறிதுந்தெரியாதவராய், வருத்தமின்றி அருந்தவம் புரிந்தனர். தருமதேவதையும் ஒரு எருமையினதுருவமாகி, மழை வெய்யில் இடி காற்று முதலியவற்றால் முனிவர் வருந்தாவண்ணம் பசுநிரையின் மீது சொரியுங் கன்மழையைத் தடுத்த கோவர்த்தனகிரிபோல மூடிக்கொண்டு நின்றது. இங்ஙனமே புறமூகிய வச்சிரச்சட்டைபூண்டு, மகிடபர்வதமாகிய குடைகவித்து அருந்தவஞ்செய்த முனிவர் சிறிது மஞ்சாமைகண்டு, இந்திரனுஞ்சோர்வடைந்து நீங்கினன். முகில்களும் ஏழுநாளவரையு மழைபொழிந்து ஆற்றாது நீங்கின. தருமதேவதையும் மழைமுதலிய இடையூறுகள் நீங்கினதன்மையைக்கண்டு, அவ்விடத்தை விட்டுப்பக்கத்திலுள்ள புற்களை மேய்ந்துலாவிற்று. வற்சநாபமுனிவரும் யோகநிட்டைவிடுத்து விழித்து நான்குதிசைகளையும பார்க்குமிடத்துப் பக்கங்கள் முழுவதும் வெள்ளக்காடாகிப் பெருக்கெடுத்தோடுவதுந் தானிருந்தஇட சிறிதும் மழைத்திவலைதானும் படாதிருக்கக்கண்டு பேரானந்தமடைந்து பெரிய முகிலொன்று நான்குகால்பெற்றுலாவுவதுபோலப் பக்கத்துநின்றுமேயும் எருமைக்கடாவைப்பார்த்து "இதுவே மழை காற்று இடி முதலியவற்றால் சிறிதும் வருந்தாதபடி நம்மைக்காத்தது. இதற்கு இவ்விதமாகிய அறிவு பிறந்தகாரணம் யாதோ!! இத்துணைப்பேருதவிபுரிந்த இந்த மகிடமானது நீடுழிவாழுக" என்று ஆசீர்வதித்துப் பிறிதோரிடத்துப் போயிருந்து தவத்தைச் செய்தனர். தருமதேவதையாகிய மகிடமும், முனிவரது க்ஷேமங்கண்டு ரோமக்குச்செறும்ப மகிழ்ச்சியுற்றது.

பிறிதிடஞ்சென்று அருந்தவஞ்செய்யத்தொடங்கிய வற்சநாபமுனிவர், தமது மனமொருப்படெழுந்து துரியநிலையடைந்து சிவத்தியானத்தழுந்தாமை கண்டிரங்கிப் பதறி யான் யாது பாவம் புரிந்தேனோவென்று நெடுந்தூரம் யோசித்து, ஒருவாறு தெளிந்து "எனதுயிரைக்காத்துதவிசெய்த மகிடத்தைச்சிறிதுங் கருதாது செய்ந்நன்றிகொன்ற தீயேன் பிழைப்பதெங்ஙனே!! 'எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லைச் செய்ந்நன்றி கொன்றமகற்கு' என்றுநீதிநூல்கள்கூற, ஐயையோ! இத்தீராப்

பழிசெய்தநீயேன் பிழைப்பதெப்படி! செய்ந்நன்றிகொன்றதீய பாவத்துக்குப் பரிகாரம் வேதத்தினுமில்லை; அவர்களைச்சேர்க்குங்கதியுமில்லை; இவ்வுலகிலவர்களுக்கு உற்றதுணை உதவி யொன்றுமில்லை. எருமையானது எனக்குச்செய்த நன்றியைமறந்து அவமதிசெய்த பாவம் பற்றிமூடியதால் எனது மனம் நிலைத்திலது. யாவரேனுமொருவர்செய்த உபகாரத்தை மறந்தவரும், நம்பி அடைக்கலம்புகுந்தவரைக் கெடுத்தவரும், இம்மை மறுமை இரண்டினுமின்பமடையார்; இருட்டுலகமே அவர்களடைவது. செய்ந்நன்றிமறந்தவர்களும், தந்தை தாயரது சொல்லைத்தட்டி அவர்களைக்காப்பாற்றாது விடுத்தவர்களும், குருதக்கிணைகொடாதவர்களும், நரகடைவது நிச்சயம்; அவர்கள் உயிர்விடுவதே நரகமடையாவழி. ஆதலால், இச்செய்ந்நன்றிமறந்த யானுமிதைக்குறித்திறக்காதிருப்பதில்லை. இதுவே மோக்ஷத்துக்குவழி" யென்று நிச்சயித்து ஒருபெரிய உன்னதமாகிய மலையின்மீதிலேறிப் பூமியில்விழுந்திறக்க நினைத்தனர். அதுகண்ட மகிடவுருவடைந்த தருமதேவதையானது, அதனைவிடுத்துச் சொரூபத்தோடெழுந்து சுத்தவீரர்போலுயிர்துறக்கச் சிறிதுமஞ்சாத முனிவர் பெருமானைநோக்கி, "முனிசிரேட்டரே, யான் என்னைத்தேடிய அனைவரையுமுயர்த்தி யவரைத்தாங்கிநிற்குந் தருமதேவதை. நீர்செய்தபுண்ணியமாகிய நானே மகிடரூபமாகி யுதவிசெய்தேன். நீர் இதற்காகவுயிர்துறப்பது தகுதியல்ல. நீர் நெடுங்காலமுயிரோடிருக்குதிர் உமக்கொப்பாகிய புண்ணியசாலிகளுலகத்திலேயில்லை. செய்ந்நன்றிகொன்றார்க்குத்தீர்வு உயிர்துறப்பதாயினும் நீர் அது செய்யாது, கந்தமாதனமலையிலே சங்கதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து இப்பாவத்தைப்போக்கித் தவத்தைச் செய்குதிர்" என்று கூறியது. முனிவருமதனைக்கேட்டு வணங்கி விடைபெற்றுச் சங்கதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து பரிசுத்தராகி நெடுங்காலமிருந்து சிவானந்தவாழ்வடைந்தனர்.

இதுவே சங்கதீர்த்தத்தின் மகிமை. செய்ந்நன்றிமறந்தவரும் தந்தை தாய் குருவாதியோர் வாக்குத்தட்டி நிந்தைசெய்தவர்களும் இதிலே விதிப்படி ஸ்நானஞ்செய்யின் அத்தீமையினீங்குவர்.

முற்காலத்து, மனுநீதிசாஸ்திர விதிப்படி பிராயச்சித்தஞ் செய்து பாவத்தைப்போக்குவதே முறையாகும். தற்காலத்து சருவபரிபூரணப்பொருளோடு கலப்புற்ற சங்கதீர்த்தத்துக்கு மேற்சொல்லிய பாவங்களனைத்தையும்போக்குதல அரிதோ! இ

தச்சரித்திரத்தை விரும்பிச்சொல்வாரும் கேட்பாரும் இதில் ஸ்நானஞ்செய்தவர்கள்போல மேலேசொல்லிய பாவங்களினீங்கிப் பிரமலோகமடைந்து முத்தராவர்.

நீடுசீர்பயில்சங்கதடத்தினீர்நீர்மைகூறு நிறைந்தபுகழ்ச்சிசால்
கேடில்காதைவிரும்பிநவிற்றுவார்கேள்வியூடுபுகுஞ்செயல்பெற்றுளா
ராடினோரெனநன்றியயர்த்தலாலாயதீவினையங்கணகற்றியே
வீடிலாதவிரிஞ்சபதத்திலேமேவியாவர்விளங்கருண்முத்தரே.

சங்கதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

## முத்தீர்த்தச் சருக்கம்.

—o—

சூதமகர்முனிவரானவர் பின்னு முனிவர்களை நோக்கி "முனிவர்காள், சங்கதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்த பெரியோர்கள் பின்பு முத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தல் முறையாகும். அது கந்தமாதனமலைச்சாரலிலுள்ளது. பிறவி முடவராகிய இரயுக்குவமுனிவரது வேண்டுகோளின்படி கங்கை, யமுனை, கயை என்னுமூன்றுமெழுந்தபடியால் அதற்கு முத்தீர்த்தமென்றுபேராயிற்று. திரிலோகங்களிலும் பெரும்புகழ் படைத்தது. பாவம், துன்பம், மயக்கமாதிய தீமைகளைப்போக்கிப் புண்ணியங்களனைத்தையுங்கொடுக்கும். இரயுக்குவமுனிவரும சானசுருதியென்னும் அரசனுமதிலே ஸ்நானஞ்செய்து பேரறிவையடைந்தின்புற்றனர் என்றருளினர். அதனைக்கேட்ட முனிவர்கள் அதனது விரிவைக்கேட்குமாறு விண்ணப்பஞ்செய்தமை கேட்டு முறைப்படி சொல்லுவார்.

முனிவர்காள், இரயுக்குவமுனிவரென்பவர் பிறப்பிலே முடமாயுள்ளவர். நடக்கமுடியாமையால் பண்டியிலேறித்திரிபவர். பிறவிடங்களிற் செல்லமுடியாமையால் கந்தமாதனமலைச்சாரிலே அருந்தவமிழைப்பவர். பலதீர்த்தங்களிற் சென்றாடவும் க்ஷேத்திரங்களைத் தரிசிக்கவுஞ் சத்தியில்லாத இவ்வுடம்பு பாபசுவரூபம்; இதனைப் பூஷித்துக்காப்பதினு லொருப்பயனுமில்லை. சிவபெருமானது திருவருட்பேறே இன்றியமையாத செல்வம். எப்படியுமவரது திருவருளைப்பெறுதல்வேண்டுமென்று கருதி, வேனிற்காலத்துப் பஞ்சாக்கினிமத்தியிலும், குளிர்காலத்தும் மழைக்காலத்தும நீரிலேயும நின்று அருந்தவஞ்செய்து உணவி

ன்றி யுடம்பைவட்டுபவர். ஆதலாலுடம்புவற்றிச் சொறிமிகுந்து குட்டநோய்பிடித்து வருந்துபவர். குட்டநோயின்றினவு தாங்கமாட்டாதவராகியும் பஞ்சப்புலவஞ்சரை யடக்கியாளுபவர். கால்கள் முடமாயினுந் தவமுடமறறவர். தனதுடம்பாகிய பெரிய சுமையிற் சிறிது பாரத்தைக் குறைப்பவர்போல நகமாகியவாளினாற் கிழித்து இரத்தம் பாயும்படிசெய்து குறைப்பவர், சுரோத்திர துவக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணமாகிய ஞானேந்திரியங்களும், வாக்கு பாத பாணி பாயுரு உபத்தமாகிய கன்மேந்திரியமென்னும் பத்தினுள் பாதமொன்றினிடரில்லாத எனக்கு ஏனைய ஒன்பது இந்திரிய இடர்களுமில்லையாயிற பேரின்பஞ்சனிக்குமேயெனக் களிப்படைபவர். ஏனைத்தீவினைத் தொழில்களொன்றுந் தனதிடத்திலில்லாமையைக் காட்டுபவர்போல இருந்தரைப்பவர். உலகத்தவர் தன்னை முடவனென்றுசொல்லும் பழிமொழியைச் சிறிதுஞ்சிந்தியாது, கங்கை யமுனை கயையென்னு மூத்தீர்த்தங்களினும் ஸ்நானஞ்செய்யும் பேரவாவுடைய அந்த இரயுக்குவமுனிவரானவர், சிவபெருமானைச் சிந்தித்து "எம்பெருமானே, கங்கை யமுனை கயை யென்னுமுத்தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்யும் பேராசையுடையேன், அவைகளோ நெடுந்தூரத்துள்ளன. கால்களோ முடம். சகடங்களிலேறிச் செல்லவுஞ் சத்தியில்லை. தேவரீரவைகளை யீண்டழைத்துத் தரல்வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கிழக்குநோக்கியிருந்து கங்கையினது மந்திரங்களைச் செபித்துத் தோத்திரஞ்செய்தனர். சிவானுக்கிரகத்தினால் அத்தீர்த்தங்கண் மூன்றும் பாதாளத்தினின்றும் பூமியைக்கிழித்து வெளியே வந்து தேவவுருவடைந்து குளிர்ந்ததிவலைகளைவீசி முனிவரைநோக்கி, "மகாதபத்தியே; நீ செபித்தமந்திரவலியா லீண்டுவந்தோம், நீ விரும்பிய வரங்களைக்கேட்குதி யென்றன.

இரயுக்குவமுனிவருமதுகண்டு விரைந்தெழுந்து நமஸ்கரித்து அருக்கியபாத்தியாசமனீயங்கொடுத் துபசரித்துத் "தீர்த்ததேவதைகாள், நானுங்களிடத்து ஸ்நானம்பண்ண விரும்பினேன். நீவிர் தங்குமிடமதிதூரம், முடவனாதலால் நடந்துவரமாட்டேன் அதுபற்றியே நீங்களை யிவ்விடத்தழைத்தேன், தாங்கள் கருணைகூர்ந்து தமியேனும் பிறரும் ஸ்நானஞ்செய்து பலனடையும்படி இந்தமலைச்சாரலிலே எக்காலமுமிருப்பீர்களாக" என்றுவேண்டினர். எத்திறத்துங் குறைவற்ற பெரியோர்கள் அற்பர்கள் செய்யுஞ் சிறியவழிபாட்டை அன்பினாலுபசரிப்பதுபோல, முத்

தீர்த்தங்களும் முனிவர்செய்த வழிபாட்டையேற்று, அவரது வேண்டுகோளுக்கிசைந்து தீர்த்தவடிவமாக அங்கேதங்கின.

அந்த ரயுக்குவமுனிவரும் வேறு தவஞ்செய்வதை விட்டு, அத்தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து சுகவாழ்வடைந்தனர். அறிவுடையோர்களங்கே ஸ்நானஞ்செய்து சுகமடைந்தின்புறுவர்.

முனிவர்காள், பவுத்திரனென்றும், சிரத்தாதேயனென்றும், தனவந்தனென்றுங்காரணப்பெயர்களையுடைய சானசுருதியென்னுமன்னவன் தருமசிந்தையுடையவனாய், நகரங்களினும் நாடுகளினும் வழிகளினும் சதுக்கங்களினும் பருப்பு, நெய், பால், தயிர், பழங்கள், கறிவகைகளோடு அன்னபானாதிகளை வழிச்செல்வோருக்கும் பெரியோர்களுக்கும் அருத்துபவனாயினன் "இவனது அன்னவுணவில்லையானால் அணுவுமசையாது" என்று தேவரும், முனிவரும், மனுடரும் இவனைப் புகழ்ந்தனர். முனிவர்களுந்தேவர்களும் அவ்வரசனைக்காக்கும் நிமித்தமாக அன்னப்பக்ஷிரூபங்கொண்டு அரசனது புண்ணியங்கள் திரண்டு பறப்பதுபோல ஆகாயத்திற் பறந்துசெல்லுமளவில், மேகமண்டலமளவுகுயர்ந்த மேனிலைப் பளிங்குமண்டபத்திலே, சானசுருதியென்னுமரசன் தனிமையாகவிருக்க அவனுக்கு நேரே மேலாகவந்த பொழுது, அவனுணருமாறு அப்பக்ஷிகள் ஒன்றைமற்றொன்று விளித்து "பலாக்கனே, மாரள்கனே, சற்றேபொறுத்துநில். சானசுருதியென்னுமன்னன் இந்த மேனிலைமண்டபத்திலிருக்கின்றான்; இதனை நீவிர் சிறிதுஞ் சிந்தியாது குருடர்போல மேலாகப் பறந்துபோகில் கோடிசூரியரினுமதிக காந்தியுடையதாய்ப் பிரமலோகத்தினு மேலேசென்ற அவ்வரசனது பெரும்புகழாகிய காந்தியினால் நுஞ்சிறகுகளெல்லாங் கரிந்து சாம்பராகுமே, அப்படிவருமுன் இறங்கி, அவ்வரசனை வலமாகவந்து நமஸ்கரித்துச்செல்லுவதே தகுதி" என்று தடுத்தது. அதுகேட்ட மற்றோரன்னம் அவ்வன்னத்தை நோக்கி, "அன்னமே, நீ சொல்லியது மிகவும் நல்லது. உன்னைப்போன்ற பேரறிவாளர் உலகத்தில்லை. இப்படிச்சொல்ல உனக்குவந்த மயக்கம்யாது? நீ வியந்துசொல்லிய சானசுருதியென்பவன் அற்பன்; கன்னெஞ்சன்; புல்லுணுதமான்போன்ற கபடி; அறிவில்லாதவன்; மயக்கமுடையவன்; மூகன்; அவலன்; வஞ்சன்; சுத்தவெறியன் இவனையொருபொருட்படுத்தி மேன்மையாக வியந்துபேசினை. தருமத்தின்

யகுப்புச் சிறிதுமறியாதவன்; இவன் மண்பாவையையொத்து இரயுக்குவமுனிவரது மேன்மை பிரகாசிக்கு மிவ்வுலகத்திலே, தன்னைப்பெரிதென்று மதித்திருப்பவன்; பரிசுத்தஞானமோட்சப்பேறற்றவன்; அந்த ரயுக்குவமுனிவரது புண்ணியப்பேரொளியைத் தேவருமறியார்கள்; நட்சத்திரங்களையும் பூமியின் சிறுதுகள்களையுமெண்ணினாலும் இரயுக்குவமுனிவருடைய தானதருமதவங்களையெண்ணமுடியா. இவ்வரசன்செய்த தானதருமங்களழிவுடையன. சிவபத்தியிற்சிறந்த அம்முனிவரது சத்தியஞானம் மேருமலையினுமதிகமோங்கி யழிவுபடாது. அவரே நாமெல்லாரும் வணங்கத்தக்கவர். அவரது புகழையே நீயெடுத்துப்பேசுதி. சூரியனிருக்க விளக்கை மெச்சுவார் யாவர்! நீ அற்பனாகிய அவ்வரசனைத்துதிப்பின் அறிவுடையோர் உன்னைப் பழிப்பர். ஆதலினாலவனை நீ மெச்சாதிருக்குதி. மகாயோகியர்களுமொப்பில்லாத பிறவிமுடவராய அந்த ரயுக்குவமுனிவரோ கங்கை யமுனை கயை ஆகிய முத்தீர்த்தங்களையுங் கந்தமாதனமலைச்சாரலில் வரும்படியழைத்த மந்திரசித்தியுடையவர். சிவபெருமானது அகண்ட பரிபூரணத்தி லுலகடங்குவது போலத் திரிலோகங்களிலுமுள்ள சிவயோகிகள் செய்ததவமெல்லாந் திரண்டவடிவுடையவர். ஆதலினால், கடினவாக்குடைமன்னனைப் புகழ்வதொழித்துப் பேரறிவாளராகிய அம்முனிவரது புகழையேபேசுதி” என்றுசொல்லியது. இங்ஙனமே அறிவிலே சிறந்த தேவவடிவாகிய அன்னங்கள், அரசனுக்குக் கேட்குமாறு ஆட்சேபசமாதானமாக ஒன்றோடொன்றுபேசிப் பிரமலோகமடைந்தன.

தன்னைத் தருமசீலனென மதித்திருந்த சானசுருதிமகாராசனும் அன்னங்கள் பேசியவார்த்தையைக்கேட்டுத் தன்னைமறந்து, மனம் நொந்து, வாடிப்பெருமூச்சுவிட்டு, அன்றிரவுமுழுதும் நித்திரையின்றி அந்த ரயுக்குவமுனிவரைத் தியானித்து உலகமுழுதுமரசாளுகின்ற ஏகசக்கிராதிபதியாகிய என்னையிகழ்ந்து, பிறவிமுடமாகிய துறவிவேதியரைப் பறவைகள் புகழ்ந்துபேசுமாயின், இந்தவுலகவாழ்வில் யாதுபயன். இல்லாச்சிரமத்திலொருபயனுமில்லை. ஆதலினிவைகளை வெறுத்து அந்த முனிவரையடைந்து மெய்ஞ்ஞானத்தைப் பெறக்கடவேனென்று நினைத்து விடியற்காலத்தெழுந்து சாரதியை நோக்கி “சாரதியே, நீவிரைவாக பிறவிமுடவர், வண்டியிலேறித் திரிபவர், சத்தியப்பிரமஞானி, தருமசுவரூபி ஆகிய இரயுக்குவமுனிவர் எங்கேயிருக்கிறாரென்பதனைச் சிவத்தியானபரர்களாகிய முனிவர்களிருக்கும்

பர்ணசாலைகளினும், ஆலயங்களினும், மலைமுழைஞ்சுகளினும், பிராமணாலயங்களினும், வெண்மணற்குன்றுகளினும், மிருகசஞ்சாரவனங்களினும், பெரியோர்களிருக்குமிடங்களினும், ஆற்றிடைக்குறைகளினும், பூஞ்சோலைகளினும், இவை ஆதிய பலவிடங்களினுந்தேடிப்பார்த்து அறிந்து வருகுதி" யென்று கட்டளையிட்டனன். சாரதியானவன், அரசனது வார்த்தையைக்கேட்டுத் தேரிலேறிப் பலவிடங்களினுமாராய்ந்து காணாது வருந்தித் தேடி வரும்பொழுது, சமுத்திரதீரத்திலே கந்தமாதனமலைச் சார்பிலுள்ள முத்தீர்த்தக்கரையிலே தனதரசன்சொன்ன குணங்குறியுள்ள புண்ணியவடிவிருக்கக்கண்டு, கண்களித்துத் தேரினின்றுமிறங்கிவந்து நமஸ்கரித்தெழுந்து நின்று, "ஐயனே, தங்கள் திருநாமம் யாது" என்றனன். முனிவர்பெருமானுமவனை நோக்கி "உலகத்தவர் என்னை இரயுக்குவனென்று கூறுவர்" என்றனர். அதுகேட்டபாகனும், நமதரசன் குறித்த புண்ணியமூர்த்தி இவர்தான். இதிற்சிறிதுஞ் சந்தேகமில்லையென்று தேறி, இவருக்கு இல்வாழ்க்கை நடாத்தும்பொருட்டுப் பொருளிலே விருப்புள்ளதென்றெண்ணி விரைந்துசென்று அரசனைக்கண்டு வணங்கி, முனிவரிருக்குமிடத்தையு மவரதுகருத்தையும் வெளிப்படுத்தினன்.

சானசுருதிமகாராசனுமதுகேட்டு மகிழ்ந்து அறுநூறுபசுவும், குதிரைபூட்டியதேரொன்றும், ஒருபாரம் பொன்னுமாகிய மூவிதப்பொருள்களையுங் காணிக்கையாக அன்போடு எடுத்துக்கொண்டு, முனிவரையடைந்து வணங்கித், தான்கொண்டுவந்த காணிக்கைப்பொருள்களை அவரது திருவடிகளுக்கு முன்னாக வைத்துவணங்கி "ஐயனே, தேவரீர் எனது அஞ்ஞானாந்தகாரத்தையொழித்துத் தமியேனை யடிமைக்கொண்டருளுக" என்று வேண்டினன். முனிவர்பெருமானும் அரசன் சொல்லியதைக் கேட்டு மனம்வருந்தி, "அரசனே, காலங்கடந்து நெடுங்காலம் அருந்தவம் புரிந்திருக்குமெனதுவீடு நீ கொடுத்த இந்தமூன்று பொருள்களாலும் நிறைவுறாது. இதனிலும் நூறுமடங்கு அதிகமானாலுமற்பமாகும். அரசனே, திருப்பாற்கடலிற் றிவலைபட்டு ஞானசாகரமானது திரையொழிந்து சகதிநீங்காததுபோல, முனிவர்களது மனம் சலநிதிசூழ்ந்த சகப்பொருள்களானிறைவுபடாது. அவர்களுக்குக் கருப்பஞ்சாறு வேப்பிலைச்சாறே. பலாக்கனி காஞ்சிரங்கனியே. தேவலோகத்தரம்பையர்கள் மரப்பாவைகளே என்றால், மேருமலையுமற்பமாகும்" என்றருளினர். அதுகேட்ட அரசனும் "ஐயனே, தேவரீர் இவற்றைக்கொள்ளினு

ங்கொள்ளுக. கொள்ளாதொழியினு மொழியுக. தேவரீர் தந்தருளும் பேரின்பபூரணத்துக்கு இதுவிலையல்ல. தேவரீர் திருவடியைச் சூட்டித்தொண்டுகொண்டருளுக" என்று பின்னுங்குறையிரந்தனன். அதனை இராயுக்குவமுனிவர் கேட்டுச் சிறிதுளமிரங்கி "அரசனே, இல்வாழ்க்கையில் வெறுப்பும், புண்ணிய பாவம் சமபுத்தியும் யாவரிடத்துண்டோ அவர்களே ஞானவீடுடையவர்கள். உன்னிடத்திலே பெண்டு பிள்ளை பண்டபதார்த்தப் பற்றுக்களில்லையாயினும் முன்னிரண்டுபிறப்புக்களினுள்ள இருவினைகளின் வாசனையுள்ளது. அவை யோகசாதனையுடையாருக்கும் அனுபவித்தன்றி நீங்கா. நீயோ எம்மை நம்பிவந்தனை. இக் கந்தமாதனமலைச்சாரலிலுள்ள கங்கை யமுனை கயை யாகிய முத்தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து அநேகர் ஊழ்வினைப்பாவத்தொடர்ச்சிகணீங்கி இட்டசித்திகள் பலவுமடைந்து மோக்ஷம்பெற்றனர். ஆதலால், நீயுமிதில் விதிப்படி ஸ்நானஞ்செய்து ஊழ்வினைப்பாவங்கணீங்கி அகத்தூய்மையடைந்து நாமுபதேசிக்குமந்திரத்தை விதிப்படி செபிக்குதி என்றனர். அதுகேட்டு அரசனுமிகமகிழ்ந்து அப்படி முத்தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து, அகத்தூய்மையடைந்து, மந்திரோபதேசம்பெற்று, அம்முனிவரது திருவருளினால் உமாதேவிபாகராகிய சிவானுக்கிரகம் பெற்று உண்மைஞானியாயினன்.

இராயுக்குவன்கண்டமூன்றுவிநீரிறைபவுத்திரன்சென்றுதோய்ந்தாசையா
லதுவெனப்படுபங்கநீங்கிநிலாவருளையுற்றிடுந்துஞ்சமாண்காதைதான் [வா
மூதுமறைப்பலநீதுன்றுநோன்போவிலா முனிவிரிப்பழஞ்செஞ்சொலிங்கோது
றுதுசெவிக்கொளும் பண்பினுங்கேண்மையோருவர்பிறப்பகன் றென்றுகாண்
[பார்களே.

முத்தீர்த்தச்சருக்கமுற்றிற்று.

## கோடிதீர்த்தச் சருக்கம்.

முனிவர்காள், முத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தவர்கள், பின்பு கோடிதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தன் முறையாகும். கோடிதீர்த்தமானது, தருமசுவரூபமாய் உலகமுழுதும் பரம்பிய புகழையுடையது. சகலசௌபாக்கியங்களுக்குங் காரணமாயுள்ளது. சகலதீவினைகளையுந் தம்மிடத்து ஸ்நானஞ்செய்பவர்க

ருக்கு நீக்குவது. நினைவினால்வரும் பாவங்களையும, தீக்சனாவினால் வரும்பாவங்களையும, இது தன்னை நினைத்தமாத்திரத்தே கெடுக்கும். இத்தீர்த்தத்தை ஸ்ரீ இராமனானவன் இராவணனைக்கொன்ற பிரமகத்திநீங்கும்படி பிரதிட்டைசெய்த இராமநாதனுக்கு அபிடேகஞ்செய்யும்பொருட்டு அவ்விலிங்கத்தினருகே விறகபூர்தினாற் பூமியைத்துளைத்து, கங்கையைவரும்படி நினைத்து வில்லையிழுத்தனன். கங்கையானது பாதாளத்தினின்று மவ்வழியே வந்தது. அதனைக்கண்ட ஸ்ரீராமன் மனமகிழ்ந்து அக்கங்காசலத்தினால் இராமநாதனுக்கு அபிடேகஞ்செய்தனன். ஸ்ரீராமன் தனது விற்கோடியினாற்றுளைக்க எழுந்த அத்தீர்த்தத்தை உலகத்தார் கோடிதீர்த்தமென்றழைப்பர்.

சந்தமாதனமலைச்சார்பிலுள்ள ஏனைய தீர்த்தங்கண்முழுவதினும் ஸ்நானஞ்செய்தபின்னரே இந்தக்கோடிதீர்த்தம் ஸ்நானஞ்செய்யத்தக்கது. அப்பொழுதே தீவினைகணீங்கும். ஏனையதீர்த்தங்களனைத்தினாலும் நீங்காதபாவங்களிந்தக்கோடிதீர்த்தத்தினானீங்கும் என்று சொல்லிய அளவில், முனிவர்களனைவருஞ் சந்தேகமுற்றுச் சூதமகாமுனிவரை நோக்கி, "தத்துவபேதங்களையறிந்தவரே, வேதவியாதமுனீந்திரரது ஞானக்களஞ்சியமே, பதினெண்புராணங்களுக்கும் வேதாகமங்களுக்குமுள்ள சமரசமுணர்ந்த மெஞ்ஞான வைபவமே, தேவரீரது வாக்கு மாறுகொளக்கூறுவதாக விளங்குகிறது. அது, கோடிதீர்த்தமாடினவர்களுக்குவேறுதீர்த்தங்களாடுவதினாற் பயனில்லையென்று சொல்லியதே. யாரும் இந்தக்கோடிதீர்த்தமொன்றிருக்க ஏனைய தீாத்தங்களிலாடுதல் மயக்கமோ? தேவரீரிந்தச் சந்தேகத்தை நீக்கியருளுக" என்று வேண்டினர். அதுகேட்ட சூதமுனிவர் சொல்லுவார். உங்களுடையகேள்வி மிகநன்று. இதனை முற்காலத்துச் சிவபெருமானிடத்திலே நாரதமுனிவர் கேட்டனர்; நீவிரின்று கேட்டீர்கள். ஆதலின், அந்த இரகசியத்தைச் சொல்லுகின்றேன்.

முனிவர்காள், உலகத்திலே தீர்த்தயாத்திரைக்கென்றுசெல்லுவோர்கள், வழியிலே சந்தித்த தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதே முறைமை. அங்ஙனஞ்செய்யாது மறந்தாயினுஞ் சமையமின்றியாயினுமவற்றை விடுத்து அப்பாலொன்றைக்குறித்துச் செல்லுவோர்கள், தீமையினின்றும் நீங்கார்கள் பூமிதேவியுமவர்களை யேன்சுமக்கிறேனென்றிகழுவள். இதனால், சந்தமாதனமலைச்சாரலிற் றீர்த்தயாத்திரை

செய்யவிரும்புவோர், அங்குள்ள சக்கரதீர்த்தாதி தீர்த்தங்களை ஐந்திலும் ஸ்நானஞ்செய்து முடிந்தபின் கோடிதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வார்கள். அது யாதுகாரணத்தாலெனில், மற்றையதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தபொழுது போகாதெஞ்சிய பாவசேடங்களனைத்தும் இந்தக்கோடிதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தவுடன் முற்றாக நீங்கும். உடனேயவர்கள் அந்தத்தலத்தினெல்லைகடந்து அப்பாலே தங்குதல்வேண்டும். பரசுராமனுமிந்தத் தீர்த்தத்திலேமுழுகி இராமலிங்கத்துக்கு அபிடேகஞ்செய்து தரிசனமுடித்துத் தன்னோடு கூடிவந்தவர்களோடு மங்கேயிமிடமூந்தங்காமலேகினன். ஆதலினால் யாவருங்கோடிதீர்த்தமாடினவுடனங்கு சிறிதுந்தங்காமலேகுதல்வேண்டும். கங்கையானது பாதாளலோகத்துநின்றும் பூமியிலே வெளிப்பட்டதாலும், ஸ்ரீராமன் முன்பு இராமலிங்கேசனது சடாமுடியிலபிடேகஞ்செய்து இராவணக்கொலைப்பழியை நீக்கியதாலும், ஸ்ரீராமனுடைனதினாலும், சிறந்தகோடிதீர்த்தத்தினது பெருமையை யாவர் கூறவல்லர். ஸ்ரீ கிருட்டினனும் மாமனாகிய கஞ்சனைக்கொன்றபாவத்தை இக்கோடி தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து நீக்கினன் என்று சூதமுனிவர் சொல்லியவளவிலே, மற்றை முனிவர்கள் தடுத்து "என்னையனே, கிருட்டினன் மாமனாகிய கஞ்சனைக் கொல்லவந்த காரணம் யாது? அந்தப்பாவங் கோடிதீர்த்தத்தில முழ்கி நீக்கியதெப்படி? அவற்றைத் திருவாய்மலர்ந்தருளுக" என்றுவேண்டினர். சூதமுனிவருமதுகேட்டுச் சொல்லுவாராயினர்.

முனிவர்காள், யதுகுலத்திலே சூரனென்பவனொருவனிருந்தான். அவனுக்கு வசுதேவனென்னு மொருபுத்திரன்பிறந்து தேவகனுடைய மகள் தேவகியென்பவளை விவாகஞ்செய்தனன். தேவகன் என்பவனுடைய மகனும் தேவகியின் சகோதரனுமாகிய கஞ்சனென்பவன் சாரதியாகிச் சகோதரியாகிய தேவகியோடு வசுதேவனாகிய மைத்துனனையுந் தேரிலேற்றி வீதிவலம் வருங்காலத்து, அசரீரிவாக்கானது கஞ்சனை விளித்து "கஞ்சனே, நின்சகோதரியை மைத்துனனோடு தேரிலேற்றி வெற்றியொடு செல்கின்றாய், இவள் பெறும்பிள்ளைகளில் எட்டாம்பிள்ளையினாலுனக்குமரணமுண்டு. இது சத்தியமாகும்" என்றது. அதுகேட்ட கஞ்சனானவன் சிறிதுகலங்கி, இவளைக்கொன்றாலென்றுயிர் நிலைபெறுமென்று நினைத்து, அவளைக் கொல்லும்படி யெழுந்தான். அப்பொழுது வசுதேவன் எழுந்து மைத்துனனை மன்றாடி

அவனுக்கு அன்புபிறக்குமாறு சொல்லுவான். "மைத்துனனே, உன்னைக்கொல்லுவது இவளல்ல இவளது புத்திரனே சொல்லுபவன். இவள்பெற்றபிள்ளைகளை நினது கையிலே தருகிறேன் அவர்களையே கொல்லுதி. இவளைக்கொன்றதினா லொருபயனுமில்லையே, இவளை விட்டுவிடு" என்று பலமுறையிரந்துவேண்டினன். அதுகேட்ட கஞ்சனும் மனமிரங்கி, அப்படியே செய்குவேனென்று தேரை நடாத்தித் தனதூரையடைந்து எட்டுப்பிள்ளைகளைப்பெறும்வரையு மவ்விருவர்காலிலும் விலங்கிட்டுச் சிறையில்வைத்துக் காவலாயிருந்தனன். வசுதேவனுந் தேவகியோடு சிறையிலேயிருந்து அவன்பெற்றபிள்ளைகளைக் கஞ்சன் கையிலொப்படைத்தனன். இருகால்மிருகங்களுக்கொப்பாகிய கஞ்சனுஞ் சிறிதுமிரக்கமின்றி ஆறுபிள்ளைகளையுங் கொன்றான்.

இதனைக்கண்டு மகாவிட்டுணுவானவர் மாயாதேவியையேவி, ஏழாவது புத்திரன் பிறந்தவுடனே அக்குழந்தையை யெடுப்பித்து இடையசேரியிலே நந்தகோபனது வீட்டிலே உரோகணி வயிற்றிற் பிறந்ததாக அங்கேவிடுத்து, மற்றொருகுழந்தையைத் தேவகிபக்கத்துக்கிடக்கச் செய்து, பின்பு தானுந் தேவகிவயிற்றிலே கருப்பமாகிப் பத்துமாதம் நிரம்பியவுடன் சக்கரம், வாள், சங்கு, தண்டு, ஆகிய ஆயுதங்கள்தரித்த நான்குகைகளோடும், முடி கோடிசூரியப்பிரபைவீசத் துளபமாலை புயங்களிலலைய விசித்திரமாகிய குழந்தைவடிவாகத் தோன்றினர். தந்தை தாயரது சிறைத்துன்பத்தையுந் தன்னை வணங்குமடியவர்கள் துன்பத்தையுங் கெடுத்தருளு மக் கண்ணபிரான் அறிதுயில் செய்தனன். வசுதேவனுந் தேவகியோடு குழந்தையினது பேரழகைக்கண்டு கஞ்சனுக்கு அஞ்சி ஸ்ரீமன்னாராயணனே குழந்தைவடிவாயினானென்றறிந்து தோத்திரஞ்செய்வானாயினன். "ஸ்ரீமன்னாராயணனே, இவ்வுலகமும் உலகமுதல்வனும நீயே. இவ்வுலகத்துக்கு முதல் துணை நிமித்த காரணனும் நீயே. மகத்தும் அப்பிரதானனும் விராட்டும் சுராட்டுஞ் சமிருட்டும் நீயே. பஞ்சபூதங்களைமுறைப்படியே கோப்பவனும் அம்முறை பிறழாது காப்பவனும் நீயே. எல்லாவஸ்துவும் நின்கண்ணதே. அவற்றைக்காண்பது நீயன்றி வேறியார். பஞ்சாயுதபாணியே, பகைவரைவெல்லும் வீராதிவீரனே, உலகளந்த உனதுவடிவை யாகாண்பவர். நீ இவளதுவயிற்றிற் பிறந்தமை மிகவும் அதிசயம். நாமோ அன்பிலாமனுடர்கள். எல்லாவற்றையும படைத்துக்காக்கின்ற நீ எமக்குப் புத்திரனாக வந்தாயென்றால், நாமென்னசொல்லு

வோம். தேவரீரே யெங்களை ரட்சிக்கவேண்டுமென்று வேண்டினர். அதுகேட்ட ஸ்ரீ கிருட்டினனும் நகையாடி, தந்தைதாயி ருவரும்மகிழ, அவர்களைநோக்கிச் சொல்லுவான். தந்தைதாயர்களே, மயக்கமொழிமின். நும்மை நெடுங்காலம்வருத்திய கஞ்சனை யானேகொல்லுவேன். எனது மாயாசத்தியை அசோதை பெறறிருக்கிருள். அந்தமாயை கிடக்குமிடத்தி லென்னைக்கிடத்தி நான்கிடந்த இவ்விடத்து அந்தமாயாசத்தியைக்கொண்டுவந்துகிடத்துகிர்'' என்றனன். அதுகேட்ட வசுதேவனுமப்படியே மாறிக்கிடத்தினன். கஞ்சனது குலபத்தினிகள் பதறியழும் அழுகைச்சத்தம்போல மாயையானவள் தேவகியினது பக்கத்துக்கிடந்தழுதனள். கஞ்சனானவன், இந்த அழுகைச்சத்தத்தைக் கேட்டமாத்திரத்தே கடுங்கோபமடைந்துவந்து, குழந்தையைத்தூக்கியெடுத்துக் கற்பாறையிலோங்கியடித்தனன். உடனே மாயையானவள் கோபமடைந்து, தனது எட்டுக்கைகளிலும் பலவித ஆயுதங்களையேந்தி அவன் தன்னைப்பிடித்த கையையுதறிப் பக்கத்திநின்று சொல்லுவாள். "துர்ப்புத்தியையுடைய மூடசிரோன்மணியாகிய கஞ்சனே, பயந்தோடாதே நில்லு. உன்னைக்கொல்லும் இயமன் வேறிடத்திருக்கின்றன்; அவனைத்தேடிப்பிடியாது என்னையேனிழுக்கின்றனை'' என்று சொல்லி அம்மாயை வேறோரிடத்துப்போயிருந்து அங்கேயுள்ள தன்னடியார்கள் செய்யும் பூசைகொண்டருளி வீற்றிருந்தனள். கஞ்சனு மந்தவார்த்தையைக் கேட்டு மனமயக்கங்கொண்டு பதைபதைப்போடு பின்னும் பாலாரிட்டம் விளைவிக்கும் பூதனையாதி பசாசுகளை நோக்கி "எனது பகைவன் சிறுகுழந்தைவடிவாக மறைந்திருக்கிறன், அவனைக் கொல்லும் பொருட்டு அவன் வயதுக்குழந்தைகளனைத்தையுங் கொல்லுங்கள்'' என்றேவினன்.

பூதனையாதி பசாசுகளும் கஞ்சனிட்ட கட்டளையைக் கேட்டு "அரசனே, அங்ஙனஞ்செய்வோ'' மென்று இடையசேரியிற் சென்று அங்குள்ள சிறுகுழந்தைகளை அதனதன் தாய்மார்களின் வடிவுகொண்டு நச்சுப்பாலூட்டிக் கொல்லுமிடத்து, அச்சிறுவர்களு ளொருவனுகிய கிருட்டினன் பால்குடிப்பான்போன்று பூதனையி னுயிரைக்குடித்த தனது கணங்களையெல்லாம் வதைத்தோட்டினன். பின்பு, கண்டவர்களனைவருங் களிக்குமாறு கிருட்டினன் பலராமனோடுகூடிப் பல இடைய சிறுவர்கள் சூழப் புள்ளாங்குழல் வாசித்துப் பண்டைப்பழக்கங்கொண்டு பசுக்கன்றுகளை மேய்த்து, இடைச்சேரியிலேயிருந்து வளர்ந்தனன். அஃதறிந்த கஞ்சனானவன் சகடாசுரனாதியரை யனுப்ப, அவர்களை

யும் வதைத்தனன் கஞ்சன், கூரனென்னுமரக்கனை நோக்கி, நீ சென்று அவ்விருவரையும் பிடித்துவருகுதி'' யென்று அனுப்பினன். அதுகேட்ட கூரனென்பவனுஞ் சென்று, கிருட்டினனையும் பலராமனையுங்கண்டு, ஓருபாயமாகத் தேவர்கள் வியக்கும்படி யழைத்து வடமதுரையின்கண் வைத்துக் கஞ்சனுக்குத்தெரிவித்துத் தனதூரை யடைந்தான். பலராமனும ஸ்ரீ கிருட்டினனும் வடமதுரையிலிருந்து அங்குள்ள வீதியலங்காரங்களைத்தையு முலாவிப்பார்த்து வருங்காலத்து, அங்குள்ள பெண்கள் இவர்கள் பேரழகைக் கண்டு மயங்கி, எரிந்து சாம்பராகி யுருவிழந்த மன்மதன் இப்போது இரண்டுருக் கொண்டுவந்தானோ வென்று அவர்களைப் பின்றொடர்ந்து பசுக்கன்றுகளை மேய்த்து விளையாடுங் கைகளைக் கண்டு தங்கள் கைகளிலிருக்கும் வளையல்களை வீழ்த்தியும், பூதனைப்பேயின் தனத்தை அவளுயிரோடு முண்டமைகேட்டுப் பேயத்தன மயக்க மிகுந்தும், இடைச்சியர்களிடத்துப் பாலாடைகவர்ந் துண்டமைகேட்டுத் தங்கள் பாலாடைகளை யிழந்தும், திருப்பாலாழிக்குடையவனென்றுணர்ந்து தங்கள் விரலாழிகளை யிழந்தும் வருந்தினர். ஸ்ரீ கிருட்டினனுந் தன்னைக்கண்டு மயங்கிய பெண்களுக்குத் தன்றன்மையனது வெண்ணிறத்தைக் கொடுத்துச் செல்லும் வழியில் பெரிய வில்லொன்று கிடப்பக்கண்டு, காவலாளர்களை வெருட்டி அதனைக் கையிலெடுத்து வளைத்தபொழுது, அஃதிரண்டாய் முரிய, அச்சத்தங்கேட்டு வந்து அடல்விளைத்த அரக்கர்களை அந்த விற்றுணிகளால் வதைத்தும், வாயிலில் நிற்குங் குவலயாபீடமென்னும் யானையின் மருப்பை யொடித்தும், முரித்த அக்கொம்போடு கஞ்சனது சபையை யடைந்து கஞ்சனுலேவப்பட்ட சாணூரன, முட்டிகன் முதலிய பலமல்லர்களையும் வதைத்து அச்சபையிலுள்ள மஞ்சத்திலே பலராமனோடிருந்து தன்னை யொருசிறிது மதியா தவமதித்த கஞ்சனது கால்களிற் பிடித்துத்தூக்கிச் சுற்றி யாவருமஞ்ச நிலத்திலடித்துக் கொன்றனன். அதன் பின் அவனது தம்பியர்களெண்மர் வெகுண்டுவருதலைக் கண்டு பலராமன் கொன்றனன்.

ஸ்ரீ கிருட்டினனும் பின்பு தந்தை தாயர்களைச் சிறைமீட்டும், கஞ்சனுக்கஞ்சிய பலரைப் பாதுகாத்தும், அந்த நாட்டை அவன்மகனாகிய உக்கிரசேனனுக்கு முடிசூட்டியும் வைத்துத் தன்னைத் தரிசிக்கவந்த பலமுனிவர்கள் "மாமனைக்கொன்றது மகாபாதக"மென்றிகழ, அதுகேட்டு அம்முனிவர்களுள்ளோனாரதரை நோக்கி, "ஐயனே, கஞ்சவஞ்சகனைக் கொன்றது பாவமா

யினைத்து நீங்கும் வழியைத் தேவரீரே கட்டளையிடுக" என்று வேண்டினன். அதுகேட்ட நாரதரும் "கிருட்டினனே, மேலானமுதல்வனாய், ஆநந்தரூபனாய்க் குணங் குறி ஊர் பேர் உற்றார் பற்றார் மரண சனனம் இன்பதுன்பமாதிய இல்லாத மாதவனே, உனக்கும் நல்வினை தீவினையுண்டா! இல்லையாயினும், மற்றையவுயிர்களுய்யும்படி முன் மாதிரிகாட்டவேண்டுகையின் ஸ்ரீ ராமன் இராவணப்பிரமகத்தி போக்குமாறு இராமலிங்கப்பிரதிட்டைசெய்து அதனுக்கபிடேகஞ்செய்தற்பொருட்டு அவ்விலிங்கத்தினருகிலே வில்லின் கழுந்தாற் றுளைத்து பாதாளகங்கையை வரவழைத்தனன்; அதற்குக் கோடிதீர்த்தமென்று பெயர். அதிலே நீ ஸ்நானஞ்செய்யின் உனது பிரமகத்தி நீங்கும்" என்று சொல்லிப்போயினர். அதுகேட்டு ஸ்ரீ கிருட்டினனுங் கோடிதீர்த்தத்திற் சென்று சங்கற்பித்து விதிப்படி ஸ்நானஞ் செய்து பலவித தானங்களு முடித்து இராமனாதனைத் தரிசித்து மாமனைக்கொன்றபழி யகற்றிப் பலவித சிறப்புக்களையும் பெற்று வடமதுரையடைந் தின்புற்றிருந்தனன்.

மெய்த்தவத்தினிர்காளிதுநத்திரனுன்வெற்றியிற்கிளர்மாமனையட்டவா
றித்தகைத்துயர்கோடியெனச்சொனிரிச்சிசைவைத்திதேவர்நவிற்றுவா
ர்த்தவர்க்கிலைவேதியரைக்கொறீதற்பினுற்றிநிலாடியமுத்தர்பான்
மூத்தொழிற்குரியோருமுவப்பர்தாமுச்சகத்தினும்வேறிலையொப்பதே.

கோடிதீர்த்தச்சருக்க முற்றிற்று.

## சாத்தியாமிர்த தீர்த்தச் சருக்கம்.

முனிவர்காள், ஸ்ரீராமனியற்றிய கோடிதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்த பெரியோர்கள் பின்பு சாத்தியாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வார்கள். இத்தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்த பெரியோர்கள் துன்பங்கள் வறுமைகளினீங்கிப் புண்ணியங்களனைத்தையும் பெற்று, அகச்சுத்தியடைந்து இட்டசித்திகளனைத்தையும் பெற்றுப் பலவித யாகங்கள் செய்த பலனையடைந்து யாவரும் மதிக்கு மேன்மையுடையார்களாய்த் தீவினைகளினின்றும் நீங்குவர். அகமருடண மந்திரத்தோடு ஸ்நானஞ் செய்பவர் வைகுண்டலோகமடைந் தின்புறுவர் இளமையிலே பெருந்துயரடைந்தவர்கள் இந்தத் தீர்த்தத்திலே ஸ்நானஞ்செயயின் முதுமையிலே அரோக திடகாத்திரமடைந்து பெருஞ்சி

தப்படைவர். இதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. பிறவிநீக்க விரும்புபவர்கள் இதில் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். ஒருவருடைய எலும்பு இத்தீர்த்தத்திலெவ்வளவுகாலங் கிடக்குமோ அவ்வளவுகாலஞ் சிவானந்தமனுபவித்து ஞானசூரியனைப்போல விளங்குவர். புரூரவாவென்னுமரசன் இத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து தும்புருவினாலிட்ட சாபம் நீங்கி யுருப்பசியை மணந்தின்புற்றான். ஆதலினாலிதனிற் சிறந்த தீர்த்த மூலகத்திலேயில்லை யென்று முடித்தனர். அதுகேட்ட முனிவர்கள் வணங்கி "ஐயனே, உருப்பசி மணவாளனாகிய புரூரவாவரசனுக்குத் தும்புருவினது சாபமடைந்த வரலாறு சொல்லியருளவேண்டும்" என வேண்டினர். சூதமகாமுனிவருமதன் வரலாறு சொல்லுவாராயினர்.

முனிவர்காள், முற்காலத்திலே புரூரவாவென்னுமரசன் அநேகம் யாகங்களைச் செய்து பலவித தானங்கள் கொடுத்த புண்ணிய விசேடத்தினாற் பெரும்புகழ் பெற்று இந்திரனுக்கு மந்திரியாகி நீதியோடு உலகரசாண்டிருந்தனன். அக்காலத்திலே உருப்பசியானவள் மித்திராவருணனுடைய சாபாக்கினியினால் வெதும்பித் தேவருலகம் விட்டுப் பூமியை யடைந்து புரூரவாவினது நகரத்தினருகேயுள்ள பூஞ்சோலையில் மனமதனுடைய எக்காளமாகிய குயில் கூவுவதுபோல வீணையை மீட்டிப்பாடினள். அதுகேட்டு உடம்பெடுத்த வுயிர்களனைத்தும மனங்குழைந்தன. மிருகங்களும் பறவைகளும் பக்கத்திலே வந்து மயங்கிச்சோர்ந்தன. விருக்ஷங்களுங் கேட்டுத் தளிர்த்து மலர்ந்தன. சூரியனுந்தனதுளங் குளிர்ந்தனன். இங்ஙனம் பாடிய சங்கீதவிசையானது பாலொடு கலந்த தேனின்சுவைபோல அரசனுஞ் செவிவழியாகக் கேட்டுக் குதிரைமேலேறி அநேகம் பெண்கள் தன்னைச் சூழ்ந்துவரச் சென்று பூஞ்சோலையிலே மயில்போல நடித்துப் பாடுங் குயிலிசையைக் கேட்டு மனமுருகி யவளருகுசென்று பெண்கணாயகமே, நீ யெனது மனைவியாயினுயிர்பிழைப்பேனென் றிரந்தனன். உருப்பசியானவள் அதனைக் கேட்டு மிக்க வருத்தமுற்றவள் போன்று "அரசனே, உனதெண்ண மிகவு நன்று. எனது மனந் தைரியப்படும்பொருட்டு நீயொரு சத்தியஞ்சொல்லுவையேல் உனது மனைவியாவல் அல்லது உடன்படேனிதுசத்தியமென்றனள். அதுகேட்ட அரசனும் "பெண்மணியே, நீ விரும்பிய சத்தியத்தைக்கேட்குதி, செய்துதருவ" லென்றனன். உருப்பசியு மகிழ்ந்து "அரசனே, எனது இரண்டு மக்களாகிய தகர்களையுங் காக்குதி; மனைவியே

ன்ற உரிமையோடு எச்சில் கொடுக்காதொழிவை; அரையிலே ஆடையின்றி யானிற்கு மிடத்து வருதலை யொழிகுதி. இம்மூன்று வரமுந் தந்து என்னை மனைவியாக்குதி யென்றனள். அரசனு மப்படியே யாகுகவென்று சத்தியஞ்செய்துகொடுத்து அவளைத் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று, மனைவியை வெறுத்து உருப்பசியோடு வாணியாற்றங்கரையிலே சயித்திரரதமென்னுந் தனிவனத்தை யடைந்து நூற்றறுபஃது வருடம் அவளோடு கலந்து இன்புற்றிருந்தான். உருப்பசியானவள், தேவலோகத்தையுஞ் சுற்றத்தையு மறந்து, தேவர்கள் மானுடர்களினும் அற்பரென்று அவமதித்து அரசனோடுதழுவிக் கலந்தனள். இங்ஙனமாகப் புரூரவாவு முருப்பசியுங் கலந்திருக்குங் காலத்திலே, தேவர்க ளுருப்பசியை யில்லாது தங்கள் சபை பொலிவிழந்தமை கருதி, அவளைத் தேட விரும்பினர். அதுகண்ட விசுவாவசு வென்னுங் கந்தருவன் இவர்கள் நித்திரைசெய்கின்ற இடத்தை யடைந்து, இவ்விருவர்கள் பக்கத்திலே கிடந்த இரண்டு மக்களாகிய தகர்களுள் ஒன்றை யெடுத்துக்கொண்டு மேலே போயினன். விசுவாவசுவினது கையிலகப்பட்ட புத்திரன் பதறியழ அதனை யுருப்பசியானவள் கேட்டுத் துன்பமுற்று "எனது புத்திரனை யாரோ திருடர்பிடித்துச் செல்கின்றார்கள், என் புத்திரனை விடுவிக்கும்பொருட்டு யாரிடஞ் சொல்லுவேன்" என்று கதறினள். புரூரவாவரசனு மதனைக் கேட்டு "இவ்விருட்காலத்திலே யிதனை விடுவிக்கும்பொருட்டு நான் செல்வேனேயானால் நிருவாணியாகக் கண்டு உருப்பசி யென்னைப் பிரிவாள் யான் பேசாதுகிடத்தலே தகுதி" யென்று பேசாது கிடந்தனன். அதனைக் கண்ட கந்தருவர் மற்றை யாட்டுக்குட்டியாகிய புத்திரனையுந் தூக்கிக்கொண்டு சென்றனர். அது மிகவுங் கதறக் கேட்ட உருப்பசியானவள் "ஐயையோ!! வஞ்சகமிகுந்த திருடர்கள் எனது இரண்டு புத்திரர்களையுந் திருடிச்செல்கின்றனரே! இந்த ஆபத்துநேரத்தில் தஞ்சமாவா ரொருவருமில்லையே! மன்னவனை நம்பி மதியிழந்து மருவி மானமிழந்து மாழ்கிறேனே" என்று மிகவும் புலம்பினள். அதுகேட்ட புரூரவாவரசனும் ஆற்றாது நக்கினரூபமா யிருளென்ற கரும்படாமுடுத்து வெளியே வந்து "திருடர்காள் நமது மக்களைக் கொண்டு போகா தொழியுங்கள் விட்டுப்போங்களென்று பின்றொடர்ந்தனன். கந்தருவரினது ஏவலினால் திசை முழுதுமூடிய இருளகலும்படி மின்னலொன்று தோன்றியது. உருப்பசியும் அரசனது தொடைமூலத்தைக் கண்டனள். விஞ்சையர்களுந் தங்

களெண்ணம் நிறைவேறியதென்று ஆட்டுக்குட்டிகளை விட்டுப போயினர். அரசன் சொல்லிய் சத்தியமுந் தவறியது. உடனே உருப்பசியும் விடுதலைபெற்றுச் சென்றனள். அரசனுந் திரும்பிவந்து படுக்கையில் உருப்பசியைக் காணமல் மிகுந்த துன்பமடைந்து சித்தப்பிரமையுடையவனாய்ப் புடைவையின்றிப் பூமியிலே பலவிடங்களினுந் திரிந்துழன்று வருங்காலத்துக் குருபூமியிலே பூந்தடாகத்தருகில் வரும்பொழுது, நான்கு தேவப்பெண்களோடு உருப்பசியும் நின்று ஸ்நானஞ்செய்வதைக் கண்டு கண்களால் அவளழகு முழுதாரவுண்டு "பொற்பாவாய், பைந்தொடியே, நீ யென்னை விட்டுப்பிரிதற்கு உனக்கு யான் செய்த குற்றம் யாது" என்று இன்னோரன்ன பலவாகிய இரப்புரைகளைக்கூற உருப்பசியானவள் கேட்டு, "மன்னனே, ஏன்வீணேபிதற்றுகின்றனே; உன்னோடு கலந்தமையால் கருப்பமுற்றேன். பத்துமாதஞ் சென்றபின்பு மகனைப்பெற்று உன்னோடு ஒருநாள சேருவேன். வேறொன்றும் பிதற்ருதொழிகுதி" யென்றனள். அதுகேட்டு அரசனுந் தனதூரையடைந்தனன். உருப்பசி தோழிமார்களை நோக்கி "தாதிமார்களே, இவ்வரசன் நினைத்தவேடங்கொள்ளுவன். என்னோடு பலநாளின்ப மனுபவித்திருந்தனன் நானு மிக்க நண்புகொண்டு கலந்திருந்தேன்" என்றனள். அதுகேட்ட தோழியர்கள் பெண்ணரசியே நாமுமிவ்வரசனோடு கலந்திருக்க வேண்டுமென்றனர். உருப்பசி பிரசவிக்குங்காலத்தையாராய்ந்து அரசனு மவ்விடத்து வந்தனன். அவளும் ஆயுவென்றொரு மைந்தனைப்பெற்று அவன்கையிற் கொடுத்து அவனோடு மன்றிரவு கலந்திருந்து ஐந்து புத்திரர்களைப்பெறக்கூடிய கருப்பமொன்றடைந்து அரசனை நோக்கி "அரசனே, என்மேற்கொண்ட விருப்பத்தினால் அதோ நிற்குங் கந்தருவர்கள் நீ கேட்ட வரங்களைத் தருவர்கள் அவர்களை யடைகுதி" யென்றனள். அதுகேட்ட அரசனு மகிழ்ந்து விரைவாகக் கந்தருவர்களை யடைந்து வணங்கிக் "கந்தருவர்காள், நும்மிடத்து வரமொன்று பெறுமாறு வந்தேன். நான் பெருஞ் செல்வமடைந்திருக்கிறேன். இன்னுஞ் சிலகால முருப்பசியோடு கலந்திருக்கும் பேராசையுற்றேன். அது கொடுத்தருள வேண்டுமென்றனன். அதனைக் கந்தருவர்கள் கேட்டு "அரசனே கேட்குதி, இந்த மட்பாத்திரத்தைத் தருகிறோம் இதனை மூன்று கூறாக்கி யாகமொன்று செய்வையேல் உருப்பசி எக்காலத்து முன்னைப் பிரியா" ளென்றனர் அரசனுந் தான்பெற்ற மட்பாத்திரத்தைக் கொண்டுவரும் வழியில் ஒருகாட்டினிடத்து வேறொரு நினைவுவர "ஐயை

யோ! நான் புத்திகெட்டேன். இந்த மடபாத்திரத்தால் உருப் பசி வரமாட்டாள் இது வீணாய் முடியும். சுடுகின்ற அக்கினிப்பாண்டத்தைச் சுமந்துபோவதனாலொருபயனுமில்லை" என்று அந்த மண்டாலியே அவள் கழுத்திற்றாலியாகி அவனுலகத்தைக்கொடுக்குமென்பதுணராமல் அதனை அக்காட்டினிடத்துவைத்துத் தனது நகரியை அடைந்து நித்திரையில்லாமல் விருபமதிகரித்து அன்றிரவுமுழுதும் பெருந்துயரடைந்து பின்பு யோசிப்பான். "ஐயையோ! சிறந்த கந்தருவர்கள் தந்த தழற்றாலியைக் கொண்டுவராமல் யாவருமஞ்சு மெரிவனத்தி விட்டுவந்தேனே பாவி" யென்று பதைத்து விடிந்தபினெழுந்துபோய்க் காட்டிலே தான் முன்வைத்தவிடத்திலதனைக்காணாமல் நெருப்பை யுள்ளேபொதிந்த ஒரு அரசமரத்தைக் கண்டு "நான் முன்னிவ்விடத்துவைத்த தழற்றாலியே இம்மரமாயிற்று" என்றுசிந்தித்து "இதனையே கொண்டுபோய்ப் பலகையாக்கி அக்கினியைப்பிறப்பித்து யாகத்தை யொப்பேற்றுவேன்" என்று யோசித்து அம்மரத்தைவெட்டி இருபத்துநான்கு அங்குலங்கொண்ட கடைகோலாக்கி அதனிடத்துத் தீயைப் பிறப்பித்து அத்தீயை மூன்றுகூறிட்டு அவற்றைக்கொண்டு வேதவிதிபிறழாது யாகத்தைப் பூர்த்திசெய்து அப்பேற்றினாலுருப்பசியோடு கலந்து கந்தருவர் இருக்குமிடங்களெங்குஞ் சென்றினிது பார்த்து முன்னிருந்தமயக்கமெல்லா மொழிந்து பலவிதபோகங்களையு மடைந்தின்புற்றனன்.

தேவருலகத்திலே இந்திரனானவன் தன் சபையிலே தும்புருபாடப் பலவித வாத்தியகோஷத்தோடு தேவப் பெண்கள் நாட்டியஞ்செய்வதைக் கண்டனன். உருப்பசியினது மயக்கவலையிற் சிக்கிக்கொண்ட புரூரவாவென்னு மரசனும் அத்தேவநடனத்தைக் காணுமபேக்ஷையோடுஞ் சென்றிருந்தனன். தேவரம்பையர்கள் முறை முறை நடனஞ்செய்துபோக, உருப்பசியினது முறைவந்து நடிக்கும்போது அவள்மனச்செருக்கினால் புரூரவாவை நோக்கி நகைத்தனள் புரூரவாவு மவளை நோக்கி நகைத்தனன். அதுகண்ட நடன ஆசிரியனாகிய தும்புருவென்பான் "இவர்கள் இத்தேவசபையிலே காரணமின்றி ஒருவரை யொருவர் நோக்கி நகைத்தல் சாலாது, ஆதலால் இவ்விடத்தை நீங்குக" என்று சபித்தான். சாபமடைந்த புரூரவாவும் இந்திரனை அடைக்கலமாகப் புகுந்து வணங்கி "என்னையனே, உருப்பசியினது பிரிவாற்றாது பலயாகங்களைச் செய்து வருந்தினேன். தேவரீர் இந்தவேளை அடியேனைக்கா

க்கவேண்டும்" என்று பலவாறு இரந்தான். அதுகேட்ட இந்திரனுஞ் சிறிதிரங்கி "அரசனே, அஞ்சுதலொழிகுதி, சாபம் நீங்குமாறு சொல்லுகிறேன். ஸ்ரீ ராமனுலுண்டாக்கிய சேதுவிலே சாத்தியாமிர்தமென்னுந் திவ்விய தீர்த்தமிருக்கிறது. அது யாணர், இயக்கர், சித்தர், கந்தருவர், தேவர்கள் முனிவர்கள் சொல்லிய சாபங்களனைத்தையும் நீக்கும். சித்திமுத்திகளைத் தரும், அரசனே, இது ஞானத்தினு லடையப்படுவதாகிய மோக்ஷத்தைத் தன்னை யடைந்தோருக்குக் கொடுத்தலினுலே சாத்தியாமிர்தமென்னும் பேருண்டாயிற்று. ஆதலால் நீ இதில் விதிப்படி ஸ்நானஞ்செய்து தும்புரு கொடுத்த சாபத்தை நீக்கி இவ்விடம் வந்து உருப்பசிபோகத்தை யடைவாய்" என்றான்.

புரூரவாவரசனு மதுகேட்டு அப்படியே செய்கிறேனென்று இந்திரனை வணங்கி, பூமியிலே வந்து, இராமேச்சரத்தையடைந்து, சாத்தியாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து சாபம் நீங்கி உருப்பசியோடு தேவவிமானத்திலேறித் தேவருலகடைந்து இன்புற்றான்.

முனிவர்கள், இந்தச் சாத்தியாமிர்த தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்தவர்கள் தீமைகணீங்கி விரும்பிய போகங்களை அனுபவிப்பர். நிஷ்காமியமாயாடுபவர் மீண்டுலகத்திலே பிறவார்கள். முற்காலத்திலே பிரமன் சொல்லச் சனகாதி இருடிகள் கேட்டனர். சவுனகாதி முனிவர்களே, நீவிர் இன்று என்னது வாக்கினுற் கேட்டீர்கள். இச்சரித்திரத்தை வாசிப்போர் கேட்போர்களுந் தீமை நீங்கி நன்மையே யடைவர்கள்.

அப்பகல்கேட்டனர்சனகராதியோரற்புதசாத்தியவமிர்தமேன்மைதா
னுப்புவியாக்கியநளினன்வாயினுலொப்பறநோற்றுயர்சவுனகாதியீ
ரிப்பகல்கேட்டனிரெனதுவாயினுலெச்சமில்வேட்கையிலினிதுநீவிர்தாங்
கைப்படும்வீட்டியர்கதியின்மேவுவார்கற்பவர்கேட்பவர்கசடுதீருமே.

சாத்தியாமிர்ததீர்த்தச்சருக்க முற்றிற்று.

---

## சருவதீர்த்தச் சருக்கம்.

முனிவர்கள், சாத்தியாமிர்த தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்த பெரியோர்கள் பின்பு உலகெலாந்துதிக்கும் பெ

ருமைபூண்ட சருவதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வார்கள் தரு மருபமாகிய சருவதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வோர்களுக்குப் பிறவி நோய் கணிங்கும்; தீமைகளனைத்தும் அஞ்சும்; பிறப்புவே தனையொழியும்; இன்னும் அச்சருவதீர்த்தமானது யாகஞ்செ யத பலனையும், மந்திர செபங்கள் செய்யும பலனையும், வேதாத் தியயன பலனையும், சிவார்ச்சனுபலனையும், விட்டுணு பூசாபல னையும், விரதநியமங்களால் வருபலனையும் கொடுக்கும் என்று சொல்லிய அளவில், இதற்குச் "சருவதீர்த்தமென்று பெயர்வந் தகாரணத்தைக் கடாட்சித்தருளுக" என்று வேண்டிய முனிவர் களைநோக்கிப் பின்னுஞ் சொல்லுவார். முனிவர்காள், பிரமகுல த்திலே சிவபத்தராகிய பிருகுவின் புத்திரர் விரதநியதிபூண்ட வர். பிறவிக்குருடர், நோயுழந்து நரைதிரை மிகுந்த வலியற்ற சரீரமுடையவராகிய சுசரிதனர் என்னும் பெயருடைய விப்பிர ரானவர், தீர்த்தங்களிற் சென்றாடுஞ் சத்தியற்றவராயினும் உல கத்திலுள்ள தீர்த்தங்களனைத்தினும் ஸ்நானஞ்செய்யும் விருப்பு டையவராய்க் கந்தமாதனமலையிலே சிவலிங்கப்பெருமானை வை த்து வேதமுறை சிறிதும் பிறழாது முப்பொழுதுஞ் சிவார்ச்ச னை செய்து வணங்கி அன்போடு தோத்திரங்கள் செய்து சிவ சின்னதாரணராகித் தன்னிடத்து வருகின்ற யாவருக்கும் அன் னதானஞ்செய்து வேனிற்காலத்துப் பஞ்சாக்கினி மத்தியிலும், குளிர்காலத்துத் தண்ணீரிலும், மழைக்காலத்து வெளியிடத்தி லுமிருந்து தவஞ்செய்வார். இவ்வாறு பத்து வருடகாலங்கொ ண்ட நியதியிற் சிறிதுந் தவறாது குருடராயிருந்து வாடித்தவஞ் செய்வதைச் சிவபெருமான் திருவுளங்கொண்டு, கொன்றைமா லையோடு கங்கையணிந்த சடையும், நெற்றிக்கண்ணும், இடப வாகனமும், உமாதேவியின் முலை வளைத்தழும்பு பெற்ற மார் பும், சருப்பமாலையும், விபூதியோடு முபவீதமணிந்த மார்பும், எலும்பு மாலையும், காளகண்டமும், கல்லாலவிருக்ஷமூலத்திற் சன காதி முனிவரர்க்கு ஞானமுணர்த்திய பவளவாயும், கண்ணபிரா னுங் கண்ணப்பநாயனாரு மருச்சித்த கண்மலர்களும் உடையவ ராகித் தேககாந்தியினால் இருள்களகன்று சோதிமயமாய் விள ங்கவும், சூலப்படையோடு மழுவாயுதம் பிரகாசிக்கவும், பால சந்திரனொளி வீசவும், மான்கன்று துள்ளவும், புலியதளாடை பொலியவும், பூதவேதாளங்கள் சூழவும், அரியயனுமிந்திராதி தேவர்களும் வணங்கித் துதிக்கும்படி யெழுந்தருளிச் சுசரிதன மகாமுனிவருக்கு முன்பாகத் தோற்றித் தம்மைத் தரிசிக்குமாறு கண்களைக் கொடுத்தருளினர்.

பிரமவிட்டுணுக்களுக்கு மரிய சிவபிரானது திருவடியே யன்றி மற்றொன்றையும் பார்க்கிலேனென்று பிறவிதொடங்கி மறைந்திருந்த கண்களை விழித்துச் சுதரிசன மகாமுனிவருஞ் செகசோதியாகவிளங்கிய சிவரூபத்தைக் கண்டு விரைந்தோடி அவரது திருவடிகளிலே அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கித் தனது கண்களாகிய மலரைச் சாத்தித் தோத்திரஞ்செய்வாராயினர். "உமாதேவிபாகரே, அம்புலி அரவு கங்கையணிந்த சடாமுடியரே, அக்கினி யேந்திய சருப்பகங்கண மணிந்த திருக்கரத்தையுடையவரே, சருப்பாபரணரே, பிரமகபால மாலாபரணரே, அகளங்கரே, அரகரவென்னு மபிதானமுடையவரே, இகலோக வெறுப்பானவர்கள் வணங்கு மேலவரே, திருடராகளாகிய கரிய வஞ்சக அசுரர் வசிக்கு முப்புரதகனரே, புராதனரே, விட்டுணுவாகிய அம்பை யேந்தியவரே, மேருவாகிய வில்லையுடையவரே, வேதார்த்தஞானங்களைச் சனகாதிகளுக்குபதேசித்த குருவே, வெள்ளிய இடபாரூடரே, இயமனை யுதைத்த திருவடியுடையவரே, தேவர்களது உயிரை மீட்கும்படி நஞ்சையுண்டவரே, மதனசங்கார தழல்விழியரே, தேவர்கள் வணங்குந் திருவடியுடையவரே, பத்தரக்ஷகரே, திகம்பரரே, வேண்டாதார் பாபமேலீடுபெற்றி வெறுப்பானவரே, கனகசபாநாதரே, நம்பி வழிபடுவாரது உள்ளத்திலே சிலம்போசைகேடகத் திருநடனஞ் செய்பவரே, பாசமோசனப் பிரகாசரே, வேதாச்சுவரூடரே, அன்பருக் கன்பரே, விபூதிசாதனரே, ஸத்துக்களாற் பூசிக்கப்படுபவரே, சருப்பக்கச்சுடையவரே, செந்தாமரைபோலுந் திருவதனமுடையவரே, வியாக்கிரசருமாம்பரரே, ஆதார ஆதேயரகிதரே, மேருவில்லுடையவரே, ஞானரூபியே, தற்சமானரே, அகோராத்திர தோத்திர சித்தாசனரே, சத்தியஞானதரிசனரே, அக்கினியத்தரே, செவ்வொளியுடையவரே, சந்தேகவிபரீதமற்ற தவத்தர் வணங்குந் தலைவரே, சுருதிமார்க்காதுரியரே, ஞானவினோதரே, கிராதரூபபாதரே, சங்குகுண்டலரே" என்றிவ்வாறு பலதிருநாமங்களைச் சொல்லி "எனது தந்தை தாயர் தேவரீரேயன்றி வேறில்லை. இன்று கண்களைத்தந்த தேவரீரே, பிரசன்னமாகுதிர். பிரசன்னமாகாதொழியில், எனது கண்களை முன்போல மறைக்குதிர்" என்று வணங்குவார்; எழுந்து தோத்திரிப்பார்; முன் வணங்கியதை மறந்து பினனும் வணங்குவார்.

சிவபெருமானும் சுதரிசன முனிவரது ஆராமையைக் க
ண்டு "சுதரிசனனே, இனித் தோத்திரங்கள் போதும், நீ விரு
ம்பிய வரங்களைக் கேட்குதி; அவற்றை யுனக்கருள் செய்யுமாறு
வந்தனம்" என்றருளினர். அதுகேட்ட சுதரிசன மகாமுனிவ
ரும் பூமியில் விழுந்து வணங்கி "எம்பெருமானே, உலகத்திலே
யுள்ள புண்ணியதீர்த்தங்க ளனைத்தினும் ஸ்நானஞ்செய்யும் வி
ருப்புடையேன், சரீரமோ வெழுப்படைந்து நரை திரை மிகு
ந்தமையாலுங் கண்கள் குருடானமையாலும் அவற்றிற் சென்
றாடுஞ் சத்தியில்லேன். தேவரீர், பிறந்த நாட்டொட்டு மறைந்த
கண்களைத் தந்ததுபோலத் தீர்த்தங்க ளனைத்தினுமாடுஞ் சத்தி
யைத் தந்தருளவேண்டும்" என வேண்டினர்.

சிவபெருமானு மதனைக்கேட்டு "முனிவனே, பெருஞ்சிற
ப்புடைய விந்தக் கந்தமாதனமலையிலே, சருவதீர்த்தங்களையும்
வரவழைக்கிறேன்" என்று சொல்லிப் புண்ணிய தீர்த்தங்கள்
முழுதையும் வரும்படி நினைக்க, அவை முழுவது மவ்விடத்து
வந்தன. உடனே சிவபெருமான் முனிவரை நோக்கி "முனி
வனே, இத்தீர்த்த மூழ்வினைக ளனைத்தையும் போக்கும். இது
சகலதீர்த்தங்களு மொன்றாகி வருதலினாலே, 'சருவதீர்த்தம்'
என்றும், மனதினானினைத் தழைத்தமையால் 'மானததீர்த்தம்'
என்றும் பேர் பெறும். இம்மையிலே பல இன்பங்களையும்,
மறுமையிலே பேரானந்த மோக்ஷத்தையுங் கொடுக்கும்; பாவ
க்காடுகளை யெரிக்கு மக்கினியாகும்; காமமுதலாகிய வாறையு
முடைக்குங் காற்றாகும்; பிறப்பு இறப்பு என்னும் பெருமுதலை
கள் வசிக்கும் குடும்ப சாகரத்தைக் கடந்துக்கரையேற்றும் புணை
யாகும்; சுத்தவேதாந்த ஞானமன்றி மோக்ஷத்தையுந் தரும்;
நரகமார்க்கத்தை யடைக்கும். ஆதலால் முனிவனே, நீ இதிலே
விதிப்படி ஸ்நானஞ்செய்குதி" என்றருளினர்.

அதுகேட்ட சுதரிசன மகாமுனிவரு மதிலே விதிப்படி சங்
கற்பித்து ஸ்நானஞ்செய்து, சமுத்திரத்துதித்த சூரியனைப்போ
ல நல்ல பேரொளியுடைய வடிவத்தோடெழுந்தனர். அதனை
க்கண்ட தேவர்கள் "இதில் ஸ்நானஞ்செய்தவனோ கிழவன்!
இங்கே வேறொருவ னெழுந்திருக்கிறான். அக்கிழவன் இந்தத்
தீர்த்தமகிமையினாலே நரை திரைகளொழிந்து இந்தவடிவாகி
யெழுந்தனனோ!" என்று பலவாறதிசயித்துச் சிவபெருமானது
திருவருளை வியந்து துதித்தார்கள். சுதரிசனமுனிவருந் தனது

தேககாந்தியையு மிளமைப்பருவத்தையுங் கண்டு, தன்னோடுசேர்ந்த முனிவர்களோடு நின்று தீர்த்தத்தையுஞ் சிவபெருமானையுந் தோத்திரித்தனர். சிவபெருமானு மம்முனிவரபெருமானை நோக்கி "முனிவனே, நீ இதிலே எப்பொழுதும் என்னை நினைத்து ஸ்நானஞ்செய்து தென் கரையிலே யிருக்குதி. வேறு தீர்த்தங்களுக்கு நீ போகவேண்டாம், பிராரத்த முடிவில் மோக்ஷமுனக்குக் கிடைக்கும். உன்னையன்றி யாவர் இதில் ஸ்நானஞ்செய்யினுமவருமிருமையின்பங்களையடைவர்" என்றுகட்டளையிட்டு மறைந்தருளினர். அதன்பின் சுதரிசனமுனிவர் சிவத்தியானத்தோடு நெடுங்காலமங்கிருந்து ஸ்நானஞ்செய்து சிவானந்த வாழ்வடைந்தனர். முனிவர்காள், உங்களுக்குச் சருவதீர்த்த மகத்துவத்தைச் சொல்லினோம். இச்சரித்திரத்தைச் சொல்லினவர்களுங் கேட்டவர்களும் பாவசாகரத்தினின்றும நீங்கிப் பேரானந்தமடைந் தின்புறுவர்கள்.

ஆனதற்பினர்வேதியனப்புனலாடியுற்றுயிராகமகற்றிவிண்
போனவக்கணமேவினன்முத்தியிற்போதநற்றவிர்யாமுமுமக்கிவண்
மானதப்புனல்வாய்மைநவிற்றினமாசிலிக்கதையோதியவுத்தமர்
பானநற்செவியாலடைவுற்றவர்பாதகக்கடற்றளெழுவற்றுமே.

சருவதீர்த்தச்சருக்க முற்றிற்று.

## தனுக்கோடிதீர்த்தச் சருக்கம்.

பௌராணிகசாரமாகிய சூதமகாமுனிவரானவர், நைமிசாரணிய முனிவர்களை நோக்கி முனிவர்காள், ஸ்ரீ ராமனானவன், இராவணசங்காரஞ்செய்து மீண்டுவரும்பொழுது, தான்வகுத்த அணைவழியாக இராக்கதரும் பிறரும் இலங்கையினின்றும் வந்து சத்துக்களைப் பின்னும் வருத்தாவண்ணந் தடுத்தற்பொருட்டுத் தனது வில்லினது கோடியால் அவ்வணையை முரித்த இடமே தனுக்கோடி யாகும். அது, சமுத்திர ரூபமாயிருந்து தன்னிடத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்வோருக்கு இஷ்ட சித்திகளனைத்தையுங் கொடுக்கும். அதனை நினைத்தவர்களும், தரிசித்தவர்களும், புகழ்ந்தவர்களும, அதிற்படிந்து வருங் காற்றுப் பட்டவர்களும், திவலை தொட்டுக்கொண்டவர்களும், ஸ்நான

ஞ்செய்தவர்களும், நெடுங்காலம் பெருவருத்தங்களைக் கொடுக்கும் இருபத்தெண்கோடி நரகங்களினும் நின்று நீங்குவர். அவர்கள் மோக்ஷமடைதல் மிகவுமெளிதாகும், அந்த இருபத்தெண் கோடி நரகங்களுக்குங் கோடிக்கொன்று தலைமையுடையதாக இருபத்தெட்டு நரகங்கள் விசேடமுடையனவாய் விளங்கும். இவைகளாகிய இருபத்தெண்கோடி நரகங்களின் பெயர்களையும் அவை செய்யும் வருத்தங்களையுஞ் சொல்லுதல் முடியாதாகையால், அவற்றின் தலையாய் இருபத்தெட்டு நரகங்களையு மவற்றினது வடிவு தொழில்களையுஞ் சொல்லுதுங் கேட்பீர்களாக என்று சொல்லுவாராயினர்.

முனிவர்காள், தமம், அந்ததமம், ரௌரவம், மகாரௌரவம், கும்பிபாகம், காலசூத்திரம், அசிபத்திரவனம், சூகரமுகம், கிருமிபக்ஷணம், அந்தகூபம், சந்தஞசம், சன்மலி, சூர்மி, வைதரணி, பிராணரோதம், வைசசம், லாலாபக்கணம், வீசி, சாரபக்ஷணம், வச்சிரகண்டம், காரம், பிசிதபக்ஷணம், சூலப்பிரர்ந்தம், விதோதகம், தந்தசூகம், பரியாவருத்தம், அகோரம், மகாகோரம் என்பன. இவற்றிற்கு வேறு பரியாயப்பெயர்களுமுள்ளன. இவற்றின் வடிவுவேதனைகளிற் சிலசொல்லுவாம்.

க. தமம். அது இருண்மயமாயுள்ளது. அதிலே காலதூதுவர், மனைவியினது சீதனப்பொருள்களையும், மக்களது முதுசொப்பொருள்களையும் திருடிச்சீவிப்பவர்களை விட்டுவருந்துவர்.

உ. அந்ததமம். அது, பேரிருள் வடிவாயதிகங்கு ளிருள்ளது. அதிலே, அரசனை நேர்யுத்த முகத்திலன்றி வதைத்தேனும் வஞ்சித்தேனுஞ் சீவிப்பவர்களை விட்டு வருத்துவர்.

ந. ரௌரவம். அது, சருப்பங்களும் பலவித விடசெந்துக்களும் நிறைந்து பேராள நீள அகலமுடையது. அதிலே, பிறவுயிர்களுக்குத் தீமைசெய்து தன்வீடு நிறைப்பவர்களை வருத்துவர்.

ச. மகாரௌரவம். அது, பலவித விஷசெந்துக்களும், முள்ளுகளும், ஆயுதங்களும் நிறைந்துள்ளது. அதிலே, தந்தை தாய மனைவி மக்கள் பசியிருக்கவைத்துத் தானறனியிருந்துண்பவனையு முண்பவளையும், பசியால் வருந்தித தனது தசையைத் தின்னுமபடி விட்டு வருத்துவர்

௫. கும்பிபாகம். அது, அதிக ஆழ நீளமுள்ள கொதியெண்ணெய்க் கிணறுமயமாயுள்ளது. அதிலே, காட்டிலே வசிக்கும் பறவை விலங்குகளைக் கண்ணி குத்தியாவது, வலைவீசியாவது, அம்பு முதலிய ஆயுதங்களைச் செலுத்தியாவது, சுட்டாவது, கல்லுப்பொல்லுகளா லெறிந்தடித்தாவது, வதைத்துச் சீவனஞ்செய்பவர்களைப் புயமுறியக் கட்டியமுக்கி வருத்துவர்.

௬. காலசூத்திரம். அது, பதினாயிரம் யோசனை ஆழ நீள அகலமுடையதாய் மேலே அதிக வெய்யிலினாலும், கீழே தணியாதெரிகிற பெருநெருப்பினாலு முருக்கித் தெளிந்த செம்பு நீர் மயமாயுள்ளது. அதிலே, கடவுளையும், அந்தணராதி பெரியோர்களையும், தந்தை தாய் தமயனாதியரையும் நிந்தித்து அவமானஞ்செய்தவர்களை நெடுங்காலங் கிடந்தமிழ்ந்தும்படி விட்டு வருத்துவர்.

௭. அசிபத்திரவனம். அது, இலை காய் பூவனைத்தும் அரிவாள் போன்ற கூர்மையாகிய செடிக ளிடைவெளி சிறிதுமின்றி நெருங்கிய வனமாயுள்ளது. அதிலே, வேதாகம விதிகளை மாற்றி அதற்கு மாறாக நடப்பவர்களை விட்டு வருத்துவர்.

௮. சூகரமுகம், அது, பெருமுள்ளுகளும், காட்டுப் பன்றிகளும் நெருங்கிய பெருவனம். அதிலே, தங்கீழ் வசிப்பவர்களை அநீதியாக நடாத்தும் அரசர், அமைச்சர், தண்டத்தலைவர், கிராமாதிபதி, குடித்தலைவராதியோர்களை விட்டு வருத்துவர்.

௯. கிருமிபக்ஷணம். அது, பலவித நாற்றங்களோடு கிருமிகள் நிறைந்த ஆழ்மான கிணறுவடிவாயுள்ளது. அதிலே, தானுண்ணும்பொழுது, தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கலாதியோரை உபசரணை செய்யாதவர்களையும், தேவயாகம் முதலிய ஐவகை யாகங்களைச் செய்யாதவர்களையும், தன்னோடு சமபந்தியா யுண்ணக் கூடியவர்கள் புறத்தே பசியோடு பார்த்திருப்பக் கொடாதுண்பவர்களையும் பசியால் வருந்தி அக்கிருமிகளை யுண்ணும்படி விட்டு வருத்துவர்.

௧௦. அந்தகூபம். அது, ஆணிமுட்களாலே நிறைக்கப்பட்ட ஆழமான இருட்கிணறு வடிவாயுள்ளது. அதிலே, எல்லாஞ் சிவசெயலேயன்றி எனது செயல் யாதொன்று மில்லையென்று,

உடல் பொருள் ஆவி மூன்றுமொப்படைத்துப் பிராரத்த முடிபுவரையும் உலகர் போலத் திரியும மெஞ்ஞானிகளுக்கு, மனம் வாக்குக் காயங்களா லிடர்செய்யும பாவிகளை இட்டு வருத்துவர்.

௧௧. சந்தஞசம். அது, காய்ந்த இருப்புக்கடாரத்தினுள்ளே ஈக்கள் நிறைந்துள்ளது. அதிலே, தேவப்பொருள்களையும், பிராமணர்களது பொருள்களையும், அந்நியர்களது பொருள் களையும் வலாற்காரமாயேனுந் திருடியேனும் எடுத்துத் தன் வீடு நிறைப்பவர்களை விட்டு வருத்துவர்.

௧௨. சன்மலி. அது, முள்ளிலவமரங்கள் நிறைந்த காடாயு ள்ளது. அதிலே, பிறவுயிர்களைப் பலவிதத்தாலேனும் வரு த்துபவர்களை முட்கள் தொழுவியிழுக்கும்படி விட்டு வருத் துவர்.

௧௩. சூர்மி. அது, இருப்புப் பலகையிலே ஆண் பெண் வடி வாகச்செய்த பாவைகளை நெருப்பெழக் காய்ச்சி நிறைத்து ள்ளது. அதிலே, புணர்தற்பாலரல்லாதாரைப் புணர்ந்த ஆட வர் பெண்களை, முறையே அப்பாவைகளை மாறிப் புணரும் படி விடுத்து வருத்துவர்.

௧௪ வைதரணி. அது, நெருப்பாறு வடிவாயுள்ளது அதிலே, பிறர் செய்த தருமங்களைக் கெடுத்தவர்களையும், தருமஞ்செ ய்பவர்களைத் தடுத்தவர்களையும் விட்டு வருத்துவர்.

௧௫. பிராணரோதம். (பெருநரகு) அது, ஊன், உதிரம், கோழை, மலமூத்திரம், சீ, பித்தநீர் ஆதியவற்றுனிறைக்கப் பட் டதிபயங்கரமாயுள்ளது. அதிலே, வேதாகமவொழுக்கந் தவறி, மானமில்லாமல் தனது குலாசாரமுறை பிறழ்ந்து பெ ருங்காமுகராய்க் கட்குடித்துக் காட்டு விலங்கு போலத் திரி பவர்களை விட்டு வருத்துவர்.

௧௬. வைசசம். (விபறசம்) அது, கூரிய வாள்களுமு முள்ளு களும் நிறைந்த பெருங்குழிவடிவா யுள்ளது. அதிலே, கா ட்டு விலங்குகளை நாய் முதலியகொண்டு வேட்டையாடியும, கடலிடத்து மேனியநீர்நிலைகளிடத்துந் தூண்டில வலைமுத லிய இட்டுச் சீவவதை செய்து சீவிப்பவர்களை விட்டு வரு த்துவர்.

௧௭. லாலாபக்ஷணம். அது, சூரிய அரிவாட்கோரைகணிறைந்துள்ளது. அதிலே, மது மாமிச விருப்பங்கொண்டு சத்தி பூசையாதியவைகள் செய்தும், துட்டதேவதைகளுக்குப் பலிகொடுத்தும், அகங்காரத்தினாற் பிறவுயிர்களை வதைத்தும் உண்பவர்களை விட்டு வருத்துவர்.

௧௮. வீசி, (ரேதகுண்டம்) அது சுக்கிலநீர்நிறைந்த பெருங்கிணறுவடிவாயுள்ளது. அதிலே, தன் மனைவி முதலிய பிறரைத் தன்து சுக்கிலநீரை யுண்ணச்செய்தவர்களையும், புமைதுனம், விலங்குப் புணர்ச்சி முதலிய செய்தவரையும் விட்டு வருத்துவர்

௧௯. சாரபக்ஷணம். (காரநீர்குடித்தல்) அட்டைகணிறைந்த காரநீர்க் குளமாயுள்ளது. அதிலே, வியாபாரிகளிடத்தும் பிறரிடத்தும் பின் தருவாமென்று கடன்வாங்கியுண்டு அது கொடாதவர்களது இரத்தத்தை வாங்கும்படி விட்டு வருத்துவர்.

௨௦. வச்சிரகண்டம். அது, வைரவூசிகள் செடில் முள்ளுகள் நிறைந்துள்ளது. அதிலே பிறவீடுகளுக்கு நெருப்புவைப்பவர்களையும், நஞ்சூட்டி வதைப்பவர்களையும் விட்டு வருத்துவர்.

மேற்சொல்லிய பாவிகளனைவருந் தனுக்கோடி தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ் செய்வாராயின், கொடிய நரகவேதனையை அடையார். இவைகளேயன்றி, வேறு பலவிதமாகிய வேதனைகளைச்செய்யு நரகங்களு முள்ளன. இதிலே ஒருமுறை ஸ்நானஞ்செய்தவர்கள் அவ்வேதனைகளை யடையாது அசுவமேதயாகபலனை யடைவர்.

இந்தத் தனுக்கோடிதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்யின் அவர்களுக்கு உண்மைஞானம் உண்டாகும்; சாலோக சாமீப சாரூப சாயுச்சிய பதவிகளுங் கிடைக்கும்; பாவக்கொடிகள் படரா; துன்பங்களனைத்தும் நீங்கி இன்பமுண்டாகும்; ஆயிரந்துலாபாரதானபலமும், ஆயிரங் கோதானபலமுங் கொடுக்கும்; நல்ல கீர்த்தியும், நல்ல செல்வமும், கல்வியும உண்டாகும்; அஞ்ஞானமகலும்; பஞ்சமகாபாதகங்க ளொவ்வொன்றிலும ஐம்பதினாயிரம் போக்கும்; அன்றி, உபபாதகங்களனைத்தையும் போக்கும், ஆசையாகிய சமுத்திரத்தைத் தூர்க்கும; மனவுறுதியைத் தரும். முனிவர்காள், தனுக்கோடி தீர்த்தத்தைக் குறித்திங்கே

சொலவியவைகளி லொருசிறிதுஞ் சந்தேகமில்லை. இது சத்தியம் எனது காய்ந்த மழுவை நாவினுலெடுப்பேன்.

நாஞ்சொல்லிய பெரிய இந்தத் தனுக்கோடியினது மகத்துவத்தை, உபசாரமென்று சொல்லுபவன், சங்கரசாதியிலே பிறந்து தருமவிரோதியாவன். மயக்கத்தை யொழித்து இம்மைக்குப் பலவித சுகபோகங்களையும் ஞானத்தையுங் கொடுத்து மறுமைக்கு மோக்ஷத்தையுங் கொடுக்குமிந்தத் தனுக்கோடிதீர்த்தமிருக்க, வேறு பலதீர்த்தங்களை விசேடமென்றுடச் செலலுதல அறிவில்லாதவர்களது தொழிலே. நன்றியற்றவர்கள், அவர்களது மயக்கமிகுதியைச் சொல்லமுடியாது. இந்தத் தனுக்கோடியினது பெருமையைப் பாராட்டுபவரும், விரும்பித் தரிசிப்பவரும், நினைப்பவரும், தீண்டுபவரும், சிறிது உட்கொள்ளுபவரும் மேலே பிறவியெடார்கள் என்றருளிய சூதமகாமுனிவரை, மற்றைய முனிவர்களுேக்கி "ஐயனே, இதற்குத் தனுக்கோடியென்றபெயர் வந்த காரணம் யாது? கட்டளையிட்டருளுக" என்று வேண்ட, அதனைச் சொல்லுவாராயினர்.

ஸ்ரீராமனுனவன், தசமுகராவணனைக் கொன்றபொழுது, சுக்கிரீவனுற் பறித்துவந்த கிரீடத்தை விபீடணனுக்குச் சூட்டிச் சிறையினின்றுமீட்ட சீதாபிராட்டியாரோடும், இலக்குமணன் அனுமான் வானரச்சேனைகள் நூற்றெட்டுத் தலைவமாராதியர்கள் சூழ, சித்தர், சாரணர், கந்தருவர், தேவர்கள், அரம்பையர், தவத்திகளாதியோர் திரண்டுவாழ்த்தத் தரித்த வில்லோடு மீண்டு இலங்கையை விடுத்து உல்லாசத்தோடுவந்து கந்தமாதனமலையிலிருந்தனன். அத்தருணத்தில் விபீடணனுனவன், ஸ்ரீராமனது கல்லைப்பெண்ணுக்கிய கழல்முன் விழுந்துவணங்கி "என்னையனே, இந்த அணையை யுடைக்காதுவிடின், இதுவே வழியாக வலிய ராக்கதர்கள் என்னை விரும்பிவந்து இங்குள்ளார்களை மிகவும் வருத்துவர்; ஆதலாலவர்கள் வராவண்ண மிவ்வழியை யுடைக்கவேண்டும்" என்று வேண்டினன்.

அதுகேட்ட ஸ்ரீராமனு மங்ஙனஞ் செய்வேனென்று தனது வில்லினுநியினு லவ்வணையை யுடைத்தனன். அதனுலே தனுக்கோடியென்று பெயராயிற்று ஆதலாலிதனைத் தரிசித்தவர்கள் உண்மைஞானிகளாய்ப் பிறவியடையார்களாயின, ஸ்நானஞ்செய்தவர்களுடையும் மேன்மையை யானறிவேனே! நருமதையாற்றிலே ஸ்நானஞ்செய்து தவஞ்செய்பவன மனத்தெழுந்த

பாதகங்களைப் போக்குவன். கங்கையிலே யிறந்தவன் பாசபந்தந் கணீங்கிப் பரிசுத்தனுவன். குருக்ஷேத்திரத்திலே தானஞ்செய் தவன் பிரமக்கொலைப் பாவத்தினின்றும் நீங்குவன். ஆகவே, தவந் தானம் மரணமாகிய மூன்றினையுஞ் சேதுக்கரையிலே செய்ய ஒருவனுக்குக் கிடைக்குமாயின், இட்டசித்திகளனைத்தை யும் பெற்று மோக்ஷமடைவன். இதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. ஒருவனது பெருமை முழுதையுங் கெடுக்கிற தீவினைகளனைத் தையும் நாசமாக்கும். இத்தனுக்கோடி தரிசனமே இந்திர பிர மவிட்டுணு ருத்திர பதவிகளுக்குச் செல்லுவதற் கேணியாகும். அருந்தவம், தானம், யாகம், செபம், தருமமாதிய செயல்களால் வரும் பேறுகளனைத்தையுந் தரும். இதிலே அன்போடு ஸ்நா னஞ்செய்பவர்கள் வேறு புண்ணியஞ்செய்யவேண்டாம். காசி யிலே மரிக்கச்செல்லுபவர் தனுக்கோடியைக்கண்டால் அங்கு ச்செல்லார்கள். உணவின்றிமூன்றுதின மித்தனுக்கோடியிலாடா தவனும் பொருள்களைத் தானஞ்செய்யாதவனும் வறியனுவான். அத்தனுக்கோடியிலாடுதற்கு விருப்பம் வைத்தவர்களும் அதற்கென்று பொருள் தேடிவைத்தவர்களும் அனேக யாகப் லனை யடைவர்கள். உலகத்திலுள்ள அனேககோடி தீர்த்தங்க ளெல்லாந் தனுக்கோடியைத் தரிசிக்க அங்கு வந்திருக்கும். முப்பத்துமுக்கோடி தேவர்களும் மும்மூர்த்திகளு மவரவர் சத்தி மார்களோடு மத்தனுக்கோடியில் வந்து வீற்றிருப்பர். மோக்ஷம டைந்த முனிவர்களும் திருப்பாற்கடலமுதருந்திய தேவர்களு ம் போகமோக்ஷ சித்திகளை யடைந்தது அத்தனுக்கோடியிலே ஸ்நானஞ்செய்த விசேடத்தினுலாகும். இத்தனுக்கோடியிலே ஸ்நானஞ்செய்து தேவகடன் பிதிர்கடனைச் செய்பவர்கள் தீவி னைகளினீங்கி மேலான மோக்ஷம்பெற்று விளங்குவர். இந்தச் சேதுவிலே ஸ்நானஞ்செய்து ஒரு பிராமணனுக்கேனு மன்ன மருத்தினேர்கள் பலவ்ருட நீங்காது பேரின்பநாட்டில் வீற்றி ருப்பர். அஸ்வமேகாதி பல யாகங்களைச்செய்து வருந்தாது சா கமூலபலாதிகளை உண்டு தம்முயிரைக்காத்துத் தனுக்கோடியி லே ஸ்நானஞ்செய்பவர்க ளெவ்வகைப் புண்ணியங்களையும டைந்தின்புறுவர். நான்கு குலத்தவருள்ளு மிதிலே ஸ்நானஞ் செய்பவர் பின் பிறவியடையார்கள் மாசிமாதத்திலே இதிலே ஸ்நானஞ்செய்பவர்களடையும் பேறையான் சொல்லுந் தரத்த தன்று. அவன் பகீரதியாதி தீர்த்தமாடிய பயனையடைந்து விரு ம்பிய நாடுகளில் விரும்பிய போகங்களைப் பெற்றுப் பின்பு மோக்ஷமடைவன். பெண்களாயினு மாண்களாயினும் பிறந்த

நாள்முதற் செய்த தீவினைகளனைத்தையுந் தனுக்கோடியிற் செய்த ஸ்நானமொன்றே நீக்கும். தேவர்களுள்ளே சிறந்த ஸ்ரீராமனது காருண்ணியம்போல வற்றாத தீர்த்தங்களனைத்தினுந் தனுக்கோடி தீர்த்தமே அதிக விசேடமுடையது. எவரெதனை விரும்பியாடினு மதனைத் தனுக்கோடி தீர்த்தமொன்றே கொடுக்கும். மாசிமாதம் முப்பதுநாளும் பஞ்சப்புலன்களை வென்று ஸ்நானஞ் செய்தவர் சிவபதமடைவர். மாசிமாத முப்பதுநாளினு மொருகாலப் போசனத்தோடிருந்து கோபாதி குற்றங்களின்றி ஸ்நானஞ் செய்பவர் பிரமகத்தி தோஷத்தினின்றும் நீங்குவர். மாசிமாதஞ் சிவராத்திரி புண்ணிய தினத்திலே நான்குயாமத்தினு மிராமனாதனைப் பூசித்து, மறுநாளுதயத்திலே தனுக்கோடியிலே ஸ்நானஞ்செய்து நித்தியகருமங்களை முடித்து இராமனாதனைப் பூசித்து வணங்கியபின்பு, இயன்றமாத்திரம் பொன் பூமி பசு நெல்லு எள்ளுமுதலிய பலவித தானங்களைச் செய்து பிராமணபோசனஞ்செய்து அவர்களாசிர்வாதம் பெற்று, பின்பு பாரணஞ் செய்தவர்களுக்குச் சிவபெருமான் இருமையின்பங்களையுங் கொடுத்தருளுவர். மோக்ஷமடையும் விருப்புடையவன், எவ்வகை வருத்தங்கள் வரினுமவற்றைச் சிந்தியாது தனுக்கோடியிலே ஸ்நானஞ்செய்வன். இதுவன்றியும், அர்த்தோதய மகோதய புண்ணியகாலங்களிலே தனுக்கோடியிலே ஸ்நானஞ் செய்தவன் இருமையின்பங்களையுமடைந் தின்புறுவன். அன்றி மும்மூர்த்திகளு மவன்வசமாகுவர். சந்திர சூரியோதயங்களிலே இதில் ஸ்நானஞ்செய்பவர்களுக்கு மேலே பிறவியில்லை. எவ்வகைப்பட்ட பாவிகளுந் தாங்கள் செய்த பாவத்துக்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்யாமல் இத்தனுக்கோடியிலே ஸ்நானஞ் செய்வாராயின் குறித்துச் சங்கற்பித்தபாவம் நீங்குதலோடு பலவித யாகபலனுமுண்டாகும். சந்திர சூரிய கிரகண காலங்களிலே தனுக்கோடியில் விதிப்படி ஸ்நானஞ்செய்பவர்கள், பிரமகத்தி தோஷத்தினும் நீங்கி மேலான பேரின்பமடைவர். மற்றை யெவ்வகைப் பாவங்களினும் நீங்குவர். அவர்கள் மற்றெல்லாத் தீர்த்தமாடின பலனையுமடைவர்.

முனிவர்காள், உங்களுக்கு இருவகையின்பத்தினும் விருப்புளதாயின், தனுக்கோடியிலே ஸ்நானஞ்செய்யும்படி இதோ செல்லுங்கள். தனுக்கோடியின் கரையிலே பிண்டதருப்பணாதிகள் செய்யில் அபபிதிர்களுந் தாமுங் கற்பகாலம் பேரின்பமடைந்து களிப்புறுவர். கந்தமாதனத்திலேனுஞ் சேதுவிலேனுந்

தனுக்கோடியிலேனும் பிண்டதருப்பணஞ் செய்தவர்களுக்கு மேலே பிதிர்கடன்கள் செய்யவேண்டுவதில்லை. இந்த மூன்று மே தென்புலத்தார் கடன்றீர்கும வழியாகும். அசுவத்தாமன் நித்திரையிலே பலரையுங்கொன்ற பாவத்தை இந்தத் தனுக்கோடியிலே ஸ்நானஞ்செய்து போக்கினன்.

ஆதலிற்றனுக்கோடியிலாமொருருயிர்க்கிளைப்பாயினுமேகுவீர்
மோதடநீகிலைத்தேசிசனிடுசேய்மூரிவிற்பரித்தாமன்முன்னடிஞன்
போதுநித்திரைக்காதலிருவிவான் போகவிட்டவத்தீவினைபோக்கவே
யாதனைப்பவத்தீதறுமாதவீர் தமக்கிசைத்தேமிவண்யாமரோ.

தனுக்கோடிதீர்த்தச்சருக்க முற்றிற்று.

---

## அசுவத்தாமாச்சருக்கம்.

பிரமனைநிகர்த்த முனிவர்கள் சூதபௌராணிகரை நோக்கி ஐயனே, சருப்பங்கண் மூசுவதுபோல நெடுமூச்செறிந்து நித்திரை செய்வாரை அசுவத்தாமன் கொன்றதனு லவனுக்கு வந்த பாதகம் கழிந்தவாறென்னையென்று அறிய விரும்பினேம் அதனைத் தேவரீர் கட்டளையிட்டருளுக. தேவரீர் கட்டுரைசெய்யுந் தேவாமிர்தத்தைச சிந்தையாரத் தேக்கியுந் தெவிட்டவில்லை. எம்மேற்கொண்ட காருண்ணியத்தா லதனைக் கடாட்சித்தருளவேண்டுமென வேண்டினர்.

அது கேட்ட சூதமகாமுனிவர், தனது குருவை வணங்கி அம்முனிவர்களைநோக்கிச் சொல்லுவாராயினர்.

முனிவர்காள், முற்காலத்துப் பஞ்சபாண்டவருந் துரியோதனுதியரும் பூமிகாரணமாகப் பெரும்போர் விளைத்தகாலத்திலே, பத்தாநாள் ஸ்ரீ வீட்டுமனிறந்தனன்; அதன்மேலைந்துநாளிலே துரோணுசாரியன் இறந்தனன்; அதன்மேல் மூன்றுநாளிலே கன்னனும், சல்லியனுமிறந்தனர்; அந்தப் பதினெட்டாநாளிலே, வீமனுடைய காலுதைபினுலே துரியோதனன் தொடைபிளந் திறந்தனன்போலச் குற்றுயிராகக்கிடந்தனன் அப்பொழுது, பஞ்சபாண்டவர்களுந் திட்டத்துய்மன் சிகண்டி சிஞ்சயன கிருட்டினன் சாத்தகி ஆதிய அரசரோடு வெற்றிச்சங்கு முதலிய பல வாச்சியங்கண முழக்க விரைந்து தங்கள் பாசறை

யை அடைந்து மடங்குமாளிகையிலிருந்தனர். அப்பொழுது படைவீரரும் அமாத்தியர்களுந்திரண்டு துரியோதன மகாரா சனது நகரத்தையடைந்து பலதிரவியங்களையுங் கொள்ளையடி த்துக்கொண்டு வந்து வைத்துப் பாண்டவரை வணங்கினர்.

பின்பு ஸ்ரீகிருட்டினன் ஏதோ உறுதிமொழிபேசுவான்போ ன்று, பாண்டவர்களைப் படங்குவீட்டினின்றும் அழைத்துக் கூடாரத்தின் புறத்தே சிறிது தூரத்திலுள்ள ஆற்றங்கரையின் மணற்குன்றின்மீது பல விநோதக்காட்சியோடு மாகவேண்டி யவைகளை யோசித்திருந்தனன்.

இப்பால் கிருபாசாரியனுங் கிருதவன்மனும் அசுவத்தாம னுஞ் சூரியனத்தமிக்குமுன் துரியோதனன் யுத்தகளத்திலே, வீமசேனனுடைய தண்டாயுதப்போரினால் தொடை பிளந்து தரையிலே நிணச்சேறுமிக்க இரத்தக்குழியிற் கிடந்து வருந் துவதைக்கண்டு மிகவுங் கலங்கினர். குற்றுயிராகக்கிடந்த துரி யோதனனும் அம்மூவரையுங்கண்டு கண்ணீர்சொரியப் புலம்பி அழுதனன்.

அதுகண்ட அசுவத்தாமன் கண் பொறிபறக்க உதடுதுடி க்கக் கடுஞ்சினமடைந்து, துரியோதனனை நோக்கிப் பிறிதுபேச நாணமுற்றுச் சொல்லுவான், "அரசனே, பாணடவர்கள் வஞ் சகத்தினாற் பொய்சொல்லி எனது தந்தையைக்கொன்றனர். தா ண்டப்படாத அத்துயர்க்கடலைத் தாண்டினும் நீ கிடக்குந்துய ரத்தைக் கண்டு தாங்கமாட்டேன் ஆதலின், இப்பொழுதே உத் தரவு தருவையாயின் இன்று இரவு விடியுமுன் நான் செய்த புண்ணியத்தினாலேப்படி பாண்டவர்களைச் சிஞ்சயனாதியரோ டு கொன்று மீளுவேன்" என்றனன்.

அதுகேட்ட துரியோதனன், நீர் சொரியுந் தனது கண்க ளால் அசுவத்தாமனை மகிழ்ந்துநோக்கி "ஐயனே, நீ அங்ஙனஞ் செய்தாலன்றி என்துயிர் நீங்காது. இந்த ஆபத்துநேரமுனது தஞ்சமன்றி வேறில்லை" என்று கிருபாசாரியனைச் சேனாதிபதி யாக்கிப் போசராசனோடு மூவரையுமனுப்பினன். அம்மூவருந் துரியோதனனது உத்தரவோடு பொழுதுபோகுமுன் விரைந் து, பஞ்சபாண்டவரிருக்கும் பாசறையை அடைந்து, அங்கு ள்ள ஆரவாரங்களையு மவர்களுற்சாகத்தையுங் கண்டு, இடிக ண்ட சருப்பம்போல நாணி நடுங்கிக் கால்கள் தடுமாறிப் பின்

னிட்டோடிச் சிறிதிடம்போயிருந்திளைப்பாறி, "நாம் மீண்டுசென்று துரியோதனனைக்கண்டென்ன சொல்லுவோம், எமது சத்தியம் பொய்க்குமே" என்று மனம்வாடி, பக்கத்திலுள்ளவோர் சோலையைக் கண்டு அங்கே தாமரைத்தடாகங்கள் பலவகைமிருகங்கள் பறவைகள் கொடிசெடிகள் முதலிய நெருங்குதலாற சிறிதுமிடைவெளியின்றி மறைவிடமாகிய அச்சோலையை அரணமாகக்கொண்டு நுழைந்து, குதிரைக்குத் தண்ணீர்கொடுத்துத் தாமுமுண்டு, அங்குள்ள ஒரு ஆலமரநீழலிற்றங்கி, வேர்வையையாற்றி, உடம்பைச்சுத்தப்படுத்தி, நித்தியகருமவிதியை முடித்துச் சூரியாத்தமயமானபின் பகலிலே சஞ்சரிக்கு முயிர்களொடுங்கவும், இரவிலே சஞ்சரிக்குமுயிர்கள் விழிக்கவும், வருமிராக்காலத்திலே, பகலிலே வருத்தமுற்ற மூவருள்ளே கிருபாசாரியனும் போசனுந் தரையே பாயலாகக் கிடந்துறங்கினர்.

அசுவத்தாமன் தான் சொல்லிவந்த சபதத்தினாலுங் கோபாக்கினியினாலும் வெதும்பி மனம் நொந்து, நித்திரையின்றி யானைமுதலிய விலங்குகளின் முழக்கத்தைப் பகைவரது முரசவோசையெனவுன்னி "மற்றைபவேந்தரது கொடிகள் வீணையொலிப்பதுமுளது, தருமனுடைய கொடி வீணையொலிக்கா" தென்றிரங்கியும், மரங்களை முரித்துக் கைபிலேநதும் யானையைக்கண்டு "தண்டாயுதத்தோடு வீமன் வருகிறான்" னென்றஞ்சி "எனது தந்தைபோல நானுமிறப்பதன்றித் தப்புவதில்லை ஏனிப்படி வந்தேன்" என்றிரங்கியும், இரவெரிமரங்களினருகிலேபெரிய பசியமுகில்களுறங்குவதைக் கண்டவுடனே "நாமவந்தசேதியை யாரோ அருச்சுனனுக்குச்சொல்ல அவன் அழகிய தேரின்மீதேறி வருகிறானோ" வென்று அசைந்து இரங்கிச் சோர்ந்தும், ஒரு மரையின் முதுகிலேபாய்ந்து அதன்றலையைப் பிடுங்கமாட்டாது சோர்ந்து வாடி யோடிவருகிற சிங்கத்தைப்பார்த்து "இது நகுலனனவன் அதிகவேகத்தோடு செலுத்துகின்ற குதிரை வருகிறதே" யென்று சரீரம் நடுங்கிச்சோர்ந்தும், யாற்றினின்றுங் கிளர்ந்து மேலோங்கி வளைந்துவீழும் வாளைமடசங்களினது ஒளியைக்கண்டு "இது சத்துருக்களது மார்பைப்பிளக்குஞ் சகாதேவனது கைவாளொளி" யென்று அஞ்சியும், இங்ஙனமன்றிரவிலே யுறங்காதிருந்து, பல காகங்கள் கண்ணுறங்கு மாலமரத்திலே பகலிலே அவற்றிற்கு அஞ்சியொதுங்குங் கூகையொன்று வந்து பெருஞ்சத்தமிட்டு அவற்றினைக் கலைத்து அவ்வகைளக்கொன்று எவ்விடங்களிலும் தலை

களும் மூக்குகளும் வால்களுஞ் சிறைகளுமாகக் கிடப்பச்செய்து வெற்றிகொண்டிருப்பதைக்கண்டு பகல்முழுதுமதனை யலைத்த தீமை இரவிலே தமக்குக் கிடைத்ததென்று வருந்துங் காக்கைகளினது அபஜெயத்தையும் "முற்பகல் தோற்றோர் பிற்பகல்வெல்வர்" என்றபடி வென்ற கூகையினது செயகையைக் குருவாக்காகக்கொண்டு தானுமப்படியே செய்து இரவிலே சத்துருக்களனைவரையுங் கொல்லுவேனென்று அசுவத்தாமன் எழுந்து நினைப்பான்.

"நானோ புத்திமோசமாகத் துரியோதனனோடு வீரம்பேசிவந்தேன் போர்செய்து பஞ்சபாண்டவரைக் கொல்லுதல் அரிது. எண்ணிய செய்கைகளை இயன்றளவு உபாயத்தைக் கடைப்பிடித்து லேசாக முடித்தல் ஆண்மசுபாவமாகும். நெருங்கியபோரிலே மாயவஞ்சனைகள் செய்து பகைவரை வெல்லுதல் நிருபருக்குரிய விதியாகும். அந்நிருபரேவலின்படி நிற்குமெனக்குமதுதகும். சத்துருக்களு முபாயத்தினாலேயன்றோ நம்மரசனையுங்கொன்றார்கள். யுத்தசாத்திரபண்டிதர்கள் உணவுகொள்ளுபவரையும், வழிநடப்போரையும், ஓரிடத்திலே தங்குபவரையும், இரவில் நித்திரைசெய்பவரையும், களைத்துக்கிடப்பவரையும், அடியினாற் புண்பட்டு வருந்துபவரையும், பூமியில் விழுந்துகிடப்பவர்களையும், நிராயுதர்களையும், தொன்றுதொட்ட பகைவராயிற் கொல்லலாமென்று விதித்தலின்; நானுமங்ஙனஞ்செய்தல் குற்றமாகாது" என்று ஒரு முகூர்த்தநேரம்யோசித்து, கிருபாசாரியனையும் போசனையுமெழுப்பிச் சொல்லுவான்.

"நமது அன்பர்களே, கேளுங்கள், இராசாதிராசனும் வலியோருக்கு வலியனும் சிறுதும் புன்மையற்ற நம்மரசனைச் சத்துருக்களுபாயத்தாலே கொன்றார்கள். நம்மரசனது வணங்காமுடியினிடத்தே வீமனன்றோ காலாலே யுதைத்தான். ஆ! ஆ! இதையுங்கேட்டு இன்னு முயிரோடிருக்கலாமா! ஆதலினாற் பஞ்சபாண்டவர்களை இவ்விரவிலே பிணைவைக்கூடாரத்திலே வளைந்து வெளிப்படவிடாமல் அம்புகளைச்செலுத்திக் கொல்லுதல்வேண்டு" மென்றனன். அதுகேட்ட கிருபாசாரி சொல்லுவான்.

"எனது அருமைமைத்துனர் துரோணாசாரியரது புண்ணியபுத்திரனே கேளு, நித்திரைசெயவோரைக் கொலலுவது தருமமல்ல; இன்னும் தேர் குதிரை முதலிய வாகனமின்றியும வாள்முதலிய ஆயுதமின்றியும் ஆயத்தமில்லாமலிருப்பவர்களைக்

கபடமாகக் கொல்லுவது நீதியுமல்லப் பெருமையுமலல; இவ் வெண்ணத்தை விடுக்குதி மருமகனே, யாரும் நின்னையிகழுவா ாகள். ஆயினும் அவன்றந்தையாகிய திருதராட்டிரனும, விது ரனும், தாயாகிய காந்தாரியுஞ் சொல்லுவார்களாயிற கொல் லலாம்'' என்றனன். அதுகேட்ட அசுவத்தாமன் சிங்கம்போ லெழுந்து கடுங்கோபமுடைந்து சொல்லுவான், ''மாமாவே, சென்றநாளு யுத்தத்திலே, எனது தந்தையைப் பாண்டவர்கள் கொன்றது வஞ்சனையல்லவா! அதுமட்டோ! வில்லாசிரியராகி ய என்றந்தையை அற்பனாகிய திட்டத்துய்மன் கொன்றானெ னறு கதையெழுப்பிவிடலாமா! அன்றியும், பாட்டனாகிய ஸ்ரீவீ டுமரை அருச்சுனனே சிகண்டியாகிய தண்டினாலடித்துக்கொ ன்று அறவேலியை யழித்தான். ஆதலினால் என்னருமைமா மாவே, இனிஇதனை மறுத்தொன்றும் நீர் பேசவேண்டியதில்லை இவ்விரவிலே பஞ்சவர்களைக் கொல்லுகிறேன் நீரிருந்தறிமின'' என்று குதிரைகளைத் தேரிலேப்பூட்டி விரைந்தேறிச்சென்றான் கிருபாசாரி போசனென்னு மிருவருமவன்பின்னரே போயினர்

அசுவத்தாமன் பிணைவர்கூடாரத்தின் புறத்தே போய்நி ன்று அங்குள்ள காவல்மிகுதியையு மவர்களினுற்சாகத்தையு ங்கண்டு சிவானுக்கிரகத்தாலன்றி யொன்றுஞ் சித்திக்காதென த்தெளிந்து, சிறிதுநேரஞ் சிவபெருமானை நினைந்து தோத்திரஞ் செய்தனன். சிவபெருமானு மவனுக்கிணங்கி ஒருவாள்கொ டுத்தனர். அசுவத்தாமனு மவ்வாளையேந்தி மகிழ்ந்து, அதனொ ளியையே விளக்காகக்கொண்டு கூடாரத்தின் வாயிலிலே கிரு பனையுங் கிருதவன்மனையும் வைத்து மிக்கவலிமையோடு முள் ளேநுழைந்து பலவிடங்களிலுஞ் சுற்றிப்பார்த்துத் திட்டத்து ய்மனுடைய கிருகத்தினுழைந்து அங்கே திட்டத்துய்மனாதியோ ர் சென்றபோரின் ஆயாசத்தினாலும சத்துருக்களை வதைத் துத் தாங்கள் வெற்றிபெற்ற மகிழ்ச்சியினாலும கவலையின்றி நி த்திரை செய்தலையும், இளம் பஞ்சபாண்டவர்கள் பிணைவயா லயசயனத்திலே நித்திரை செய்தலையுங் கண்டு, திட்டத்துய் மனைக் காலாலுதைத்துப் புரட்டி விழுத்தி அவன் குடுமியைப்பற் றியிழுத்து நித்திரைச்சோகந்தெளியாத அவனது கழுத்தை ஆ ட்டின்கழுத்து அரிவதுபோலரிந்து விண்ணுணினுறகட்டி அங்கு ள்ள சேனைகள முழுதையுங்கொன்று இளம் பஞ்சபாண்டவர் களையும் சிகண்டியையுஞ் சோமகர் முதலாயினோரையுங் கொ ன்றனன். அங்கு நடந்தகலகத்தைக் கண்டு வெளியே புறப்பட்

வோரை வாயிலில் நின்ற இருவருங் கொன்றனர். அம்மூவருமி வ்வாறு பெருங்கலகம் விளைத்துப் பஞ்சபாண்டவருக்கஞ்சி மன ங்குலைந்து ஒருவரையொருவர் சேராது தீவினை தூரப்பவோ டினர்.

அசுவத்தாமனிவ்வாறு கலங்கியோடிவருமிடத்து இரேவை யென்ற இடத்திற் பலபெரியோர்கள் கூடியிருந்து வேதசிவாக ம ஆராய்ச்சிசெய்திருப்பதைக் கண்டு, வேர்வைகொண்டசரீர த்தோடு மவர்களையடைந்தனன். அவ்வந்தணர்கள் அசுவத்தா மனது மனப்படபடப்பைக்கண்டு, யோகசாதனையினால் நடந்த சம்பவங்களையறிந்து, அவனைநோக்கி "அடேபாபி, நித்திரையி லே பல மன்னவர்களைக்கொன்ற நீ இழிந்த மறையவன் இங்குவ ராதே நில்லு, உன்னைப் பார்க்கும் நாங்களு மிழிந்தவராவோம், உன்னோடுபேசினு லெங்களையும் பிரமகத்திதொடரும், உன்பா ரத்தை நாங்களும் வாங்கிச்சுமப்பது நன்மையல்ல, இங்கே நெ டுநேரம் நின்று பழியடைவியாதே அப்பாலோடு" என்றனர். அ துகேட்ட அசுவத்தாமனும் அபிமானுக்கினியினால் வெதும்பி நாணி அங்கேபுகாது, காசிக்குச்சென்று அங்குள்ளவர்களுமிக ழ்ந்துபேச நாணி நெடுநாளுலைந்துதிரிந்து வேதவியாதமுனிவ ரையடைந்து வணங்கியழுது நின்று "எம்பெருமானே, நித்தி ரையிலே பலரைக்கொன்றபழி மிகவுமென்னை வாட்டுகின்றது, இதற்கென்னசெய்வே" னென்று பதறியழுதனன். வியாதமுனி வரதுகேட்டு, அசுவத்தாமனைச் சிறிதுநோக்கி, "அடே சுத்தவீ ரர்களை இரவில் நித்திரையிலே கொன்ற பதகனே, இங்கே வரா துநில்லு, உன்னைக் காண்கினு முன்னோடு பேசினும் பெரும்பா வமுண்டு ஆதலாலென தாச்சிரமத்தினில்லாமலேகுதி" யென் றனர். அதுகேட்ட அசுவத்தாமன் மனங் குலைகுலைந்து சொல் லுவான் "ஐயனே, தேவரீர் என்னைக் காக்காதொழியின், பசு க ன்றையணையாது; தாய் குழந்தைகளை யணையாள்; உலகத்திலே இரக்கமில்லையாகும்; கருங்கடலிலமிழ்ந்தினோரைக் காப்பவர் யா வர்! உயர்ந்த மரங்கள் பறவைகளைவீசினு லவைகளைக் காப்பதெ து? பெரியோர்களெல்லா மென்னை யிழித்துத் தள்ளப் புகலிட மின்றிவந்தடைந்தேனைத் தேவரீரும் விலக்குவீராயின் யானெ ங்குபோகுவேன், யாரோடு சொல்லுவேன், ஏழைகளிடத்தன் றோ அறிவுடையார்களது இன்னருள். ஆதலால், தேவரீரே யென்னைக் காத்தருள்வேண்டுமென்று பலவாறிரந்து கேட் டனன்.

அதுகேட்ட வேதவியாதமுனிவர் சிறிதுநேரம் யோசித்து மனமிரங்கி "அசுவத்தாமனே, இதற்கு யாது பரிகாரமுளது! ஆயினுஞ் சேதுவிலே தனுக்கோடியென்றொரு தீர்த்தமுள்ளது; அது, பூமியனைத்துந் துதிக்கவிளங்கும். தன்னிடத்தடைந்தவர்களுக்குச் சகலதீமைகளையும் நீக்கி யெல்லாநன்மைகளையுங் கொடுக்கும். சுருமரூபமாகச் சிறந்தோங்கும். வறுமை நீக்கும். மனச்சுத்தமுண்டாக்கும். சொற்கத்தைத் தரும். துன்பங்களை நீக்கும். மயக்கத்தை மாற்றும். பேரானந்தத்தைத் தரும். குற்றமாகிய கருக்களை நீக்கும். தேவர்களையும் வணங்கச் செய்யும் சாந்தியாதிதவவழிகளைத் தரும். துன்மரணத்தை நீக்கும். வெற்றியும் ஆயுசுவிருத்தியுந் தரும். பலவித சுகபோகங்களைக் கொடுக்கும். அசுவத்தாமனே, அதனது மேன்மையை என்னாற் சொல்லமுடியாது. அத்தனுக்கோடியிலே ஒருமாதந் தவறாது விரதநியமத்தோடு சங்கற்பவிதி பிறழாது தீர்த்தமாடுதியேல், உன்னையடைந்த பிரமகத்தி நீங்கும்" என்று அவ்வேதவியாதர் கூறினர். அதுகேட்ட அசுவத்தாம னவரை வணங்கி விடைபெற்றுச் சென்று சேதுவில் தனுக்கோடிதீர்த்தத்தை யடைந்து சங்கற்பஞ் சொல்லி விரதநியமானுட்டானத்தோடு ஒருமாதவரை யிடைவிடாமல் முக்காலங்களிலுந் தீர்த்தமாடி இராமனாதனை வணங்கினன். இப்படி ஸ்நானஞ்செய்த கடைசிநாளில் உபவசியாகப் பஞ்சாக்ஷரசெபஞ் செய்து நித்திரையின்றியிருந்து மறுநாளுதயத்திலெழுந்து தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்து இராமனாதனது சன்னிதானத்தை யடைந்து தரிசித்துக் கண்ணீர் சொரிய முன்னின்று ஆனந்தக்கூத்தாடிப் பரவசனாகி நின்று தோத்திரித்தனன். அது கண்டு சிவபெருமான் மனமிரங்கிப் பிரசன்னராயினர். அசுவத்தாமன் அவரைக் கண்டமாத்திரத்திலே விரைந்தெழுந்து வணங்கித் தோத்திரஞ் செய்வானாயினன். "குஞ்சிதபாதரே, காலாதீதரே, அன்று பிரமன்றேடியறியாத சேகரரே, கருணாகரரே, சாமகீதரே, பாதிபசுமைத் திருமேனியுடையவரே, மத்தமாலாபரணரே, கபாலகரத்தரே, கங்காதரரே, சுத்தசொயஞ்சோதியே, பத்தசோதகரே, தாயினுஞ்சிறந்த தயாநிதியே, சார்பிலாதவரே, எல்லாமானவரே, காளகண்டரே, அன்பருக்கினிமையானவரே, சந்திரசேகரரே, எலும்புமாலாபரணரே, நறுமணமாலையுடையவரே, பொனபோன்ற சடாமுடியரே, புட்பங்களை யணிந்தவரே, இன்பவீடுடையவரே, எனதுபவநாசரே, மாதுபாகரே, பருப்பதவில்லரே, தேவசேனாபதியே, வேதமுதல்வரே, ஒற்றையிடபாரூடரே, புலித்தோலுடையரே,

நாகநேத்திரரே, பாலநேத்திரரே, சங்ககுண்டலரே, மதனசங்காரரே, பொற்கமலபாதரே, நான்குபாதானுக்கிரகரே, தேவதேவரே, தடாதகைப்பிராட்டி தலைவரே, விட்டுணுபாணரே, ஆலாகல அசனரே, அரியுந்தேடியறியாதவரே, என்னையாளும் பொருட்டு என்மாதாவோடெழுந்தருளிய பிதாவே, தேவரீரை யான் தரிசிக்கும்படி செய்த தவம் யாதோ! புயங்க புராதன பூரண தேவரீருக்கு வணக்கம். அடியேனைக் காத்தருளுகவென்று வணங்கினன்.

ஆடுகாலவகாலவன்றம்புய
னாடுசேகரநற்கருணாகர
பாடுசாமமெய்ப்பாதிகொள்சாமமா
னீடுமெத்தநெடுந்தொடைமத்தனே.

தீயகங்கையாய்சென்னியிற்கங்கையாய்
தூயசோதியாய்தொண்டரைச்சோதியாய்
தாயினல்லனேசார்புளனல்லனே
யாயகண்டனேயல்லுறழ்கண்டனே.

அன்பர்க்கண்ணியாயம்புலிக்கண்ணியா
யென்பின்றாரினாயெண்கடித்தாரினாய்
பொன்கொள்வேணியாய்போதகவேணியா
யின்பவீட்டினாயென்பவம்வீட்டினாய்.

பாகவில்லனேபற்பதவில்லனே
மாகநாதனேமாமறைநாதனே
வேகவானனேவேங்கைக்கவானனே
நாகநேத்திராநன்னுதனேத்திரா.

கம்புட்காதினாய்காமனைக்காதினாய்
செம்பொற்பாதனேசெப்புநாற்பாதனே
யும்பர்க்கும்பனேயோர்முலைக்கும்பனே
யம்புமாலனேயார்தருமாலனே.

என்னையாளவென்றேழுலகீன்றிடு
மன்னையோடுமடைந்தனையையனே
முன்னைமாலயன்காணருமூர்த்தியா
முன்னையான்றொழச்செய்தவமுள்ளதே.

போற்றிபோற்றிபுயங்கபுராதன
போற்றிபோற்றிபொருவிரிபூரண

போற்றிபோற்றிபுரவெனப்போற்றினு
னேற்றினுன்மகிழ்ந்துள்ளமியம்புவான்.

சிவபெருமான் அவர் வணக்கத்தைக் கேட்டு மகிழ்ந்து, "அசுவத்தாமனே, வருகுதி. நீ நித்திரையிற் பல் அரசர்களைக் கொன்ற பாவத்தினின்று நீங்கினை. இன்னும் நீ வேண்டியவர்களைக் கேட்குதி" என்றருளினர். "ஓ! ஞானசுவரூபியே தேவரீரை வணங்கிப் பாவத்தினின்றும் நீங்கினேன். பூருவசன்மங்களிலே தருமஞ்செய்யாதவர்கள் கோடிசன்மமெடுத்து வருந்துவர். தேவரீரது திருவடிக்கன்பேயன்றி மற்றென்றும் வேண்டுவதில்லை" யென்று வேண்டினன். சிவபெருமானும் அங்ஙனமருள்செய்து மறைந்தருளினர். அசுவத்தாமனும் பாவங்களினீங்கிச் சிறந்தனன், அன்றுதொட்டு அவனைக் கண்ட பெரியோர்களனைவரும்மெச்சிப்பாராட்டினர். முனிவர்காள் உமக்கிந்தச் சரித்திரத்தை விரித்துச் சொல்லினேம். இச்சரித்திரத்தைக் கேட்டோர்களும் வாசித்தவர்களுஞ் சிவானுக்கிரகம் பெற்றுத் திருவடிநீழலிலே வீற்றிருப்பர்கள்.

வருதிர்மாதவிர்வாம்பரித்தாமனேர்வளரிராகவன்வான்றனுக்கோடிநீர்
பிரிவிலாதெழும்வாஞ்சையுற்றுடுநீள்பெருமைபாலிடர்தீர்ந்தருட்கூடினன்
விரிவினுலினிதீங்குமக்கோதினேம்விளைவெலாமிதுதான்றனைக்காதினுற்
பருகுவாரெவர்தாம்படிப்பார்கடாம்பரமகாரணபூங்கழற்சேர்வரே.

அசுவத்தாமாச்சருக்க முற்றிற்று.

## தருமகுத்தச் சருக்கம்.

சூதமகாமுனிவரானவர் சவுனகாதி முனிவர்களை நோக்கி, முனிவர்காள், இன்னுமந்தத் தனுக்கோடிதீர்த்த மகத்துவமொன்றுசொல்லுதுங் கேட்பீர்களாக. முற்காலத்திலே சந்திரகுலத்திலே நந்தனென்னு மரசனுடைய புத்திரன் தருமகுத்தனென்றொருவனுளன். மன்னுதி மன்னர்கள் வணங்கும் வெற்றியையுடைய நந்தமன்னவனானவன், தானரசுசெய்த நிலத்தைத் தனதுமகனாகிய தருமகுத்தனை அரசாளவைத்து பஞ்சப்புலன்களாகிய பகையை வென்று வனத்தையடைந்து உணவின்றித் தவஞ்செய்தனன். அவன் குமாரனாகிய தருமகுத்தனும் நீதி தவறாது செங்கோல் செலுத்தி அரசாண்டு வருங்காலத்து,

அளவிலாத யாகங்களை இந்திராதிதேவர்கள் மகிழுமாறு செய்து பிராமணர்களுக்குப் பலவித தானங்களையுஞ் செய்தனன். அந்நாட்டில் நான்கு வருணத்தாருந் தத்தங் குலாசாரமுறைபிறழாதொழுகினர். திருடாதி தீத்தொழில்கள் செய்பவரு நற்றொழிலையே செய்வாராயினர்.

இங்ஙனமே அரசியல் நடாத்திய தருமகுத்தராசன், பின்னொருநாள் வேட்டையாடும்படி காட்டிற்சென்று மூலைபலா சண்பகம் புன்னை மாதுளம் வேங்கை கோங்கு மா கடம்பு அசோகு பச்சிலை பன்னி குமிழ் பாதிரி ஆத்தி அகில் அரசு முதலிய விருக்ஷங்களினடர்த்தியையும், தாமரைமலரிற்றங்கிய வண்டுகள் பாடுகின்ற யாழிசைபோலு மினிய கீதங்கணிறைந்த தடாகங்களையும், யானை கரடி கலைமான் முதலிய மிருககூட்டங்களையும், கிளிகள்பாடவும் மயில்களாடவும் வண்டுகளிசைகூட்டவும் குயில்கள்வாசிக்கவும் தூக்கணக்குரீகள் தூங்குமஞ்சங்களிலிருந்து ஊஞ்சலாடவும் ஆகியசிறப்பையும், புறத்தே செய்யும் பலவித புண்ணியத்துறைகளடங்கிய யாகங்களையும், பலவிதகலைக்கியான வாராச்சிகளையும், வேதவாராச்சிகளையும், மாறுபட்ட புறமதவாராச்சிகளையுமே தினந்தோறும் விநோதமாகக் கொண்டொழுகும் அகத்தியர் முதலிய இருடிகள் வசிக்குஞ் சிறப்பும் நிறைந்துள்ள அவ்வனத்தினது சிறப்பையுங்கண்டு மகிழ்ந்து கொண்டாடிவருமளவில், சூரியாத்தமயனமானது. அப்பொழுது சந்தியாவந்தனமுதலிய நித்திய கருமங்களை முடித்துக் கவசமந்திர பாராயணத்தோடு சிங்கம் புலி முதலிய மிருகங்களுக்கஞ்சி யொருபெரியமரத்திலே யேறியிருந்தனன்.

தருமகுத்தராசன் இங்ஙனமேயிருப்ப, ஒரு கரடியானது தன்னைத் துரத்திவருகிற சிங்கத்துக்கஞ்சியோடிவந்து அரசனிருந்த அந்தமரத்திலேயேறி யங்கிருக்கு மரசனைக் கண்டு சொல்லுகின்றது. "அரசனே, நீ யஞ்சாதே. இந்தக்காட்டில் இம்மரத்திலே விடியுமளவு நாமிருவரு மிருப்போம். இதனடியிலே என்னைக் கலைத்துவந்த சிங்கமிருக்கிறது. ஆதலால், முற்சாமம் நான் விழித்திருக்கிறேன் நீ நித்திரைசெய். பிற்சாமம் நீ விழித்திரு நானித்திரைசெய்கிறே" னென்றது. அரசனும் நல்லதென்று உடன்பட்டு அப்படியே கரடிகாத்திருப்ப நித்திரைசெய்தனன். அங்ஙனமே அரசன் நித்திரைசெய்வதைக் கண்ட சிங்கமானது கரடியைநோக்கி "ஓ கரடியே, மனுடருள்ளே அரசர்

மிகவுங் கொடியவர். எங்களுக்கு வழிவழியான சத்துருக்கள் ஆதலாலிவனை நீ தள்ளிவிடு நானுண்டு செல்கிறே"னென்றது. அதுகேட்ட கரடியானது "ஓ மிருகராசனே, காட்டிலே சஞ்சரிக்கின்ற நீ தருமத்தின் பகுப்பறியாய். நம்பியடைந்தவரைக்கொன்றவர்கள் அஞ்சத்தக்க கோடிநரகத்தில் விழுந்து நெடுங்காலங்கிடந்து வருந்துவர். அவர்கள் பதினாயிரம் யாகங்களைச்செய்தாலும் அப்பாவம் நீங்காது. பிரமக்கொலைமுதலிய பாதகங்களுக்குப் பிராயச்சித்தமுண்டு. நம்பிக்கைத்துரோகஞ்செய்தவர்களுக்குப் பரிகாரமெங்குமில்லை. அவரடையும்பாவத்தோற்றம் மேருமலையிலும் பெரிதாகும். ஆதலின் அது நான செய்யே"னென்றது. அதுகேட்ட மிருகராசன் நாணிப் பேசாதிருந்தது.

அதன்பின் தருமகுத்தன் விழித்து கரடியை நித்திரை செய்ய விடுத்தனன். கீழேகாத்துநின்ற சிங்கமானது அது நித்திரையாகுஞ் சமையமறிந்து அரசனை நோக்கி "அரசனே, எனக்குணவாகு மிக்கரடியைக் கீழேதள்ளி விழுத்துதி, மேலுனக்கிடையூறொன்றும் வாராது. விடிந்தால் யான் போய்விடுவேன் எனக்கஞ்சியிருந்த கரடியோ கூரிய நகங்களுடையது. உன்னைப் பிழைக்கவிடமாட்டாது" என்றது. அதுகேட்ட அரசன் சிறிதுமாராயாமல் அதன்சொல்லை நம்பித் தனது மடியினித்திரை செய்யுங் கரடியைக் கீழேதள்ளி விழுத்தினன். கரடி விதிவலியினாலே, கீழே விழாது கூரியநகங்களினால் கொம்பை யிறுகப்பிடித்து மேலேறியிருந்து "ஓ ராசபுத்திரனே, உனக்கு நானொரு குற்றமுஞ் செய்திலேன். நீ தருமவழிக்கு மாறுசெய்தாய். நான் பிருகுமுனிவர் வம்மிசத்தவன். நினைத்தபொழுது வேண்டிய வடிவங்களை யெடுப்பேன் செய்த தபோபலத்தால் விளையாட்டாக விந்தக் கரடிவடிவெடுத்தேன். என்பெயர் சானகர்ட்டன. அரசனே, நீ சிறிதுமுணராது நித்திரைசெய்யுமென்னைச் சிதைக்கநினைத்த பாவத்தா லுன்மத்தனாகக் காடெங்கும் அலைந்து திரிகுதி" என்றரசனைச் சபித்து, பின்பு சிங்கத்தை நோக்கி "மிருகராசனே, நீ குபேரனுடைய மந்திரி பத்திரனென்னும் பேருடையை. ஒருநாளிமயாசலத்தை யடைந்து நின்மனைவியைத் தழுவும் பேராசையினால் வேறொன்றுங் கருதாது பல்வித லீலாவிநோதங்கள் செய்திருந்தபொழுது, கௌதம மகாமுனிவர் சமித்தொடிக்கும்படி காளகண்டருக்கோர் கன்னிகையைக் கொடுத்தருளிய அவ்விமயமலைச்சாரலிலே வரும்பொழுது, நீ நிருவாணியாக நிற்கும் நிலையைக் கண்டு, மிருகராசனாகி வனத்

திற்மிரிருதியென்று சபித்துச்சானகாட்டமுனிவரைக்கண்டு பேசிலிது நீங்குமென்று கட்டளையிட்டருளினர். உடனே பத்திரனுகிய நீ சிங்கவடிவடைந்தனே. என்னைக்கண்டவுடனே அது நீங்கியது'' என்று சொல்லியது. சிங்கவடிவுநீங்கிய பத்திரனும் கரடிவடிவாய்நின்ற சானகாட்டமுனிவரை வணங்கி, விமானத்திலேறி அளகாபுரியை யடைந்தனன். பின்பு சானகாட்டமுனிவராகிய கரடியுந் தனதிட்டப்படி தேசசஞ்சாரஞ்செய்தது. தருமகுத்தராசனும் பைத்தியகாரனுகித் தனது நகரியை அடைந்தனன். அதனை மந்திரிமார்கள் கண்டு, ரேவைக்கரையிலே தவஞ்செய்திருந்த அவன் தந்தையாகிய நந்தனிடத்துக்கொண்டு சென்று வணங்கி, பயித்தியங்கொண்ட சங்கதியை முறையிட்டார்கள்.

நந்தனு மிக்க துயரமடைந்து சைமினி முனிவரிடத்துத் தன்மகனை யழைத்துக்கொண்டுபோய் வணங்கி "ஐயனே எனது புத்திரனுகிய இவனது பயித்தியம் நீங்கும் வழியைக் கட்டளையிட்டருளுக" என வேண்டினன். அதுகேட்ட சைமினிமுனிவருஞ் சிறிது நேரஞ் சிவத்தியானஞ் செய்து ஞானத்தினுலே பார்த்துச் சொல்லுவார். "அரசனே, உனது மகன் வனத்தில் வேட்டையாடச் சென்றபொழுது, நம்பிக்கைத்துரோகத்தினுல் விளைந்த கொடும்பாவத்தால் அலகை தீண்டியது. அது தனுக்கோடியிலன்றித் தீராது. எல்லாத்தீவினைக்கும் நன்மையாகும். இம்மைக்குச் சிறந்த செல்வத்தையும், மறுமைக்கு மோக்ஷத்தையுந் தரும். வேதாந்தவுண்மைகளை விளக்கும். ஆதலின், நினது மகனேடு அத்தனுக்கோடிதீர்த்தத்தை யடைந்து ஸ்நானஞ்செய்குதி" என்றருளினர். இராசமுனிவனு மதுகேட்டுச் சைமினி முனிவரை வணங்கி உத்தரவுபெற்றுத் தன்மகனேடு தனுக்கோடிதீர்த்தத்தை யடைந்து சங்கற்பித்து ஸ்நானஞ்செய்து எழும்புமுன் தருமகுத்தனைத் தொட்ட பசாசுநீங்கி யுன்மத்தமாறிற்று. பின்பு இராமசுவாமியை வணங்கி அங்கிருக்கு மொருநாளில் தன்மகனிடத்திலுத்தரவுபெற்றுத் தபோவனமடைந்தான். தருமகுத்தனும் இராமலிங்கப் பெருமானுக்கு வயல்களும் திரவியங்களு மாடையணிகளும் பிறவுங்கொடுத்து வேதியர்களுக்கும் வேண்டுவன தானங்கள் செய்து சேனைகளோடு தனது நகரத்தை யடைந்து துன்பம்நீங்கி யுலகத்தை பரசாண்டனன். ஆதலினுல் முனிவர்காள், ஒருமுறை தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்பவர்களிடத்தில் பசாசு தேவதைகளும் குமரகண்டன் முதலிய கொடியநோய்களும் நீங்கும். இது சத்தியம். இத்தகைய தனு

க்கோடியைவிட்டு வேறுதீர்த்தங்களைத் தேடுபவன், பசுப்பாலிருக்கக் கள்ளிப்பாலை விரும்புதல்போலும். இதிலே ஸ்நானஞ்செய்தவர்களுக்கு பிரமலோகப் பிராப்தி யுண்டாகும். இலக்குமி கடாக்ஷமுண்டாகும். சிவானுக்கிரக முண்டாகும். வேண்டிய இட்டசித்திகளனைத்து முண்டாகும். இச்சரித்திரத்தைக் கேட்டவர்களுக்குப்பொற்களவு முதலிய தீமைகளோடு மற்றைய பழிகளனைத்தும் நீங்கும். தருமத்துக்கு வீடாக்கும்.

முரணகற்றுந்தூயசீர்முனிவிர்மற்றிங்கோதினே
மிருசெவிக்கொண்டோர்கள்பாலிரணியத்தின்சோரமே
பரமகத்தின்கேண்மையோர்பழியனைத்தும்பாறவே
தருமறத்தின்றுதையாந்தருமகுத்தன்காதையே.

தருமகுத்தச்சருக்க முற்றிற்று.

## பராவசுச் சருக்கம்.

சூதபௌராணிகர் பின்னும் சௌனகாதிமுனிவர்களை நோக்கி முனிவர்காள், பேரற்புதத்தை விளைக்குஞ் செல்வநிறைந்த தனுக்கோடியினது மகத்துவ மின்னுமொன்றுளது அதனையுஞ் சொல்லுதுங் கேட்பீர்களாக.

பராவசு என்னும் வேதியன் நான்குவேதங்களையு மத்தியேனஞ்செய்தவன். அவனொருநாள் தன்பிதாவை இன்னனென்று தெரியாது கொன்றனன். அந்தப்பாவ மிந்தத் தனுக்கோடியிலே நீங்கியது என்றனர். அது கேட்ட முனிவர்கள் "ஐயனே, அப்பராவசு தன்றந்தையை அறியாது கொன்றதும் அப்பாவம் நீங்கிய வழியையும் விரிவாகத் திருவாய்மலர்ந்தருளுக" எனவேண்டினர். அதுகேட்ட சூதமுனிவர் மகிழ்ந்து அச்சரிதத்திரத்தை விரிவாகச் சொல்லுகின்றனர்.

முனிவர்காள், பிருகத்துய்மனென்றொரு மன்னவன் உலகமுழுதுந்தனது செங்கோல் செலுத்தி அரசாளுபவன். சத்திரவேள்வியை இந்திராதிதேவர்களை வென்று செய்யும் அதிவிசிட்டராகிய இரயிப்பிய முனிவரையே குருவாகக்கொண்டு வேறுவேறு பலவிதயாகங்கள் செய்து பூர்த்திகண்ட பேறுடையவன் அங்ஙனமே பேர்பெற்ற பிருகத்துய்மனென்னுமரசன் சத்திரவேள்விசெய்யும் பேராசையுடையனாய்த் தனதெண்ணத்தைத்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
R. M. DIST - TAMIL NADU - INDIA

தன்குருவுக்கு அறிவித்தனன். அவர் தனது புத்திரர்கள் பராவசு அருவாவசு என்னுமிருவரும் ஆறுசாத்திரம் நான்குவேதம் முதலாய அனைத்தினும் வல்லவர்களாயிருந்தலால் அவர்களை அவ்வரசனது கருத்தின்படி யாகத்தைச செய்துவாருங்களென்று அனுப்பினர். தேவமருத்துவரை நிகர்த்த அவ்விருபுத்திரர்களும் தந்தையினது கட்டளைப்படி அரசனை யடைந்து சத்திரவேள்வியை நடாத்தினர். பிருகத்துய்மராசனது அழைப்புப்பத்திரத்தினாலே கௌதமர் அத்திரி காசிபர் நாரதர் பராசரர் மார்க்கண்டர் புலத்தியர் குர்ச்சர் வசிட்டர் சதாநந்தர் வேதவியாதர் கிருதுத்தக்கன் புலகன் கவி வான்மீகி தௌமியன் சாப்பாலி கௌசிகர் ஆதியமுனிவர்கள் தங்கள் புத்திரபவுத்திராதியரோடு வந்தார்கள். அரசனும் அங்குவந்த முனிவர்களை அவரவருக்குத் தக்கதக்கபடி அருக்கிய பாத்திய ஆசமனீயாதி அருச்சனைகளினாலுவப்பித்தனன். வேறுபல அரசர்களும் அந்தயாகத்துக்குரிய பலவித உபகரணங்களோடு சேனைகள்சூழ வந்தனர். மேலும் கொடையாளர்களும் எட்டிகளும் வன்னிகளும் இல்லாச்சிரமிகளும் வானப்பிரத்தர்களும் சன்னியாசிகளும் வந்தனர்.

அரசனுந் தான்செய்யும் யாகத்தைத் தரிசிக்கவந்த அனைவரையும் தக்கபடி யுபசரித்து, பருப்பு நெய் தேன் பால் ஆதியவற்றோடு மைவகைப்பட்ட வுணவுகளையும் இரத்தினாபரணங்களையும் பீதாம்பரம் பட்டுவஸ்திரமாதியவற்றையுங் கொடுத்து மகிழ்வித்தனன். அந்தச் சபாமத்தியிலே இரயிப்பிய முனிவருடைய குமாரர்களிருவரும் யாகத்தைச் சிறிதும் விதிபிறழாதுநடத்தியசித்திரத்தை வசிட்டராதியோர் கண்டு "இந்த யாகம்நடத்துஞ் சாமர்த்தியத்தில் இவர்களைப்போலொருவரையுங் கண்டிலே" மெனப் புகழ்ந்து தலையசைத்தார்கள். அதுகண்ட மற்றனைவருங் களித்தனர். அவ்விடத்திலே சிலயாகக்கிரியைகளைச் செய்த பராவசுவென்பவர் மூன்றும் யாமத்துச் செய்த கிரியைமுடிவில் தான் நியதமாகச் செய்யுங் கிரியையை முடித்துவரும்படி தனியே ஆச்சிரமத்துக்குப்போகும் வழியில், காட்டினிடத்தே பேரிருளில் மான்றோல்போர்த்துத் தவஞ்செய்திருந்த தந்தையை உள்ளபடியறியாமல் ஏதோ தன்னைக்கொல்லவந்த மிருகமென்று நித்திரைமயக்கத்தினால் நினைத்துத் தான்தப்பும்நிமித்த மவரை வெட்டித் தனதாச்சிரமத்தையடைந்து தாயைக்கண்டு தந்தையைக் காணாமையினாலே ஒருவாறு தான்வழியிலே கொன்றது தந்தையைத் தானென்ன நிச்சயித்து "ஐயையோ! இக்கொடுமை

க்கினி யாதுசெய்வே" னென்று அழுதுபுலம்பித்தான்குறித்துவந்ததொழிலை முடித்துத் தம்பியாகிய அருவாவசுவிடத்து வந்து கண்டு நினையாப்பிரகாரமாகத் தந்தையைக் கொன்ற சங்கதியை யறிவித்தான். அதுகேட்ட அருவாவசுவாகிய தம்பியு மிகவருந்தித் துன்புற்றனன். பராவசு என்பவன் ஒருவாறு அவனைத் தேற்றி "தம்பியே, நாமோ அரசனது சத்திரவேள்வியை நிறைவேற்றுவோமென் றொப்புக்கொண்டு தொடங்கினோம்; இதனை இடையிலே சிதையவிடுத்தல் தகுதியன்றே. குருவும் பிதாவுமாகிய தந்தையை அறியாதுகொன்ற பாபத்திற்குப் பரிகாரமுஞ் செய்தல்வேண்டும், நீ இதனை முடிக்குந்திறமையுடையையல்லை. ஆதலின் நான்செய்த கொலைப்பாவத்தை நீ யொப்புக்கொண்டு விரதநியமத்தோடு பிராயச்சித்தஞ் செய்தல்வேண்டும். நான் தனியே இந்த யாகத்தை முடிக்கவல்லேன்" என்றனன் அது கேட்டு அருவாவசு சொல்லுகின்றான். "ஐயனே, துயரத்தை விட்டுத் தொடங்கிய யாகத்தை முடிக்குக. நான் உமக்குவந்த பழியை, ஒப்புக்கொண்டு பிராயச்சித்தஞ் சிறிதுந் தவறாது செய்து பழிநீக்கிவருகிறேன்" என்று யாகசாலையை நீங்கிச் சென்றனன். தமையனாகிய பராவசு யாகத்தை நடத்தினன். தம்பியாகிய அருவாவசு பன்னிரண்டுவருடம் அரிய விரதமிருந்து தந்தையைக்கொன்ற பிரமக்கொலை நீங்குமாறு பிராயச்சித்தஞ்செய்துமுடித்து யாகஞ்செய்யுமிடத்து வந்தனன்.

அவனைக்கண்ட தமையனாகிய பராவசுவென்பவன் அரசனை நோக்கி "அரசனே, இவன் பிரமக்கொலைசெய்தவன்; இவனிவ்விடமிருப்பி னுஞ்செய்யும் யாகம் சித்திக்காது. இவனை யப்பாற்போக்குதி" யென்றனன். அரசனு மதுகேட்டு பராவசு அறியாமல் தந்தையைக்கொன்ற பழியைத் தானொப்புக்கொண்டு பிராயச்சித்த முடித்து வந்த தனது தம்பிக்கு விரோதஞ்சொல்லுகிறானென்பதை யறியாமல் "அருவாவசுவே, நீ எனது யாகத்திலிருக்கப்படாது செல்லுதி" யென்றனன். அதுகேட்ட அருவாவசுவானவன் அரசனைநோக்கி "அரசனே, நான் பிரமக்கொலை செய்திலேன், எனது தமையனாகிய இவனே செய்தனன். இவன் தனது பழியை நீக்கும்பொருட்டு என்னையொப்புக்கொண்டு அதற்குப் பிராயச்சித்தஞ் செய்துவரும்படி யேவினன் நானு மப்படியே யொப்புக்கொண்டு பன்னிருவருடங் காறு மருந்தவஞ் செய்து தொலைத்துவந்தேன் ஆதலாலிவன் சொலவது பொய்யென்று தடுத்துச் சொல்லினன் அதுகேட்ட

அரசனும், அந்தப் பராவசுவிடத்தில் விருப்பமுடைமையால், அவனது குற்றத்தை விசாரியாமல் "அஃதாயினுமாகுக, நீ அப்பாற் செல்லுதி" யென்று விலக்கினன். கோடாமல் அரசுசெய்வது கடனாயினுந் தம்மைச் சேர்ந்தவர்களைக் காப்பது மரசர் கடனே. அரசன் விலக்கியபின், அங்குள்ள முனிவரனைவருமவனை விலக்கினார்கள். அருவாவசுவானவன் அதனால் மிகவுமச்சமடைந்து வேறொருவனத்திற் சென்று சிலகாலம் பிறரொருவராலு மனுட்டித்தற்கரிய விரதத்தைபனுட்டித்துச் சூரியனை நோக்கித் தவமியற்றினன். சூரியதேவனு மத்தவத்துக்கிரங்கி மனமகிழ்ந்து இந்திராதி தேவர்கள்சூழ விரைந்துவந்தனன். அருவாவசுவுஞ் சூரியனது வரவைக் கண்டு விரைந்தெழுந்து வணங்கினன். சூரியனு மவனைநோக்கி "மைந்தனே, நீ பிரமசரிய நிலையோடுசெய்யும் அரிய தவத்தினாலும் வேதாத்தியேனவிசிட்டத்தினாலும் பரிசுத்தனாயினை. உன்னை உன்தமையன் பொய்சொல்லி விலைக்கவுந் தனித்தனை. அதனையும் பொறுத்து அவன்செய்த கொலைபபழி நீங்குமாறு பலவித பிராயச்சித்த விரதமியற்றி மிகவருந்தினை. உன்னை யாவர் குற்றஞ் சொல்லுவர். நாமவனைத்தள்ளி யுன்னையே கொள்ளுவோம். இன்னும் நீ விரும்பிய வரங்களைக் கேட்குதி" யென்றனன். அருவாவசுவானவன் அதுகேட்டு மனமகிழ்ந்து இந்திராதிதேவர்களோடு சூரியனை நோக்கிச்சொல்லுவான் "ஐயனே, எனதுதந்தை யுயிர்பெற்றெழும்புமாறும், என்றமையன் அறியாது தந்தையைக் கொன்றபழி நீங்குமாறு மருள்செய்ய வேண்டு" மென்று மிரந்தனன். சூரியதேவனும் மகிழ்ந்து "உன்றந்தை யெழும்புமாறு அருள் செய்தோம். உன்றமையனுக்குத்தந்தையைக் கொன்றபழி எப்படிநீங்கும். தந்தையைக்கொன்றபழி மற்றவர் செய்த தவத்தினால் மாறாது. வேறென்ன தவத்தைச் செய்யினு மதுநீங்காது. அதற்கு வேறு பரிகாரமுமில்லை" யென்றனர். அருவாவசுவு மதுகேட்டு மீட்டு மவர்களைப் பலமுறை வணங்கி "என்னையர்களே, எவ்விதமாயினு மெனக்காக என்றமையனுய்யுமாறு உபாயஞ் சொல்லுதிர்" என்று பின்னு மிரந்தனன். அதுகேட்ட சூரியாதிதேவர்கள் நெடுநேரம் யோசித்துத் தெற்கே சமுத்திரதீரத்திலே ஸ்ரீ இராமன் விற்கோடியினாற்றுளைத்துண்டாக்கிய கோடிதீர்த்த மெனப் பெயரிய தீர்த்தமுளது. யாரதன் பெருமையைக்கூறவல்லார். அது அனேகவரங்களையும், அனேகதருமங்களையும், பிரமகத்தியையும், கள்ளுண்டுகளித்த பாவத்தையும், பொற்களவாண்ட பாவத்தையும், குருமனைவியைக்கொண்ட பாவத்தையும் போக்கும் அன்றியு மொன்றையுங்

குழியாது ஸ்நானஞ்செய்யின் மோக்ஷத்தையுங் கொடுக்கும். தீக னைவையும் நரகத்தையு மடையவிடாது. இன்னும் வேண்டிய இட்டசித்திகளைக் கொடுக்கும். திருக்கைலாயமலையை யடைவிக் கும். மூன்று முறை தனுக்கோடியென்று சொல்லினும் தருமா ர்த்த காமமோக்ஷங்களைக் கொடுக்கும். கடனை யொழிக்கும். இவ் விதப்பெருமைகளையுடைய தனுக்கோடியிலே நின்றமையன் சென்று விதிப்படி ஸ்நானஞ்செய்யி னபபாவமொழியும் இந்த இர கசியத்தை யுனக்குச் சொல்லினோம்" என்றருள் செய்து அவர் கள் மறைந்துபோனார்கள். அது கேட்ட அருவாவசுவென்பவன் முன்னே தன்னை விலக்கிய தமையனை யடைந்து, அவனைத் தனு க்கோடிக் கழைத்துக்கொண்டுபோய்ச் சங்கற்பஞ்சொல்லி முழு குவிததனன். அவன் முழுகி எழுந்தவுடனே ஓர் அசரீரிவாக்கா னது "பராவசுவே, தந்தையைக் கொன்றதனால் நீ நரகத்திலே விழாமல் விலகினாய்" என்றெழுந்தது. பராவசுவு மதுகேட்ட மாத்திரத்தே மனத்துயரொழிந்து தம்பியோடு களிப்படைந்து தனுக்கோடியை மீட்டும் வணங்கி இராமனாதேச்சுரரையும் பணி ந்து தோத்திரித்துத் தனது தம்பியோடு ஆச்சிரமத்தை யடை ந்து பிழைத்திருந்த தந்தையையும் வணங்கி இன்புற்றிருந்தனர் பின்பு பராவசுவு மனைவராலு மதிக்கப்படடுச் சிறப்படைந்த னன். முனிவர்காள், இச்சரித்திரத்தை அன்பினாலுமக்குச் சொ ன்னோம். இச்சரித்திரத்தைக் கேட்டவர்களும் படிப்பவர்களும சுராபான முதலிய தீமைகளினின்று நீங்குவர்.

எற்பராவருட்போதவறத்தினீரிப்பராவசுப்பாவமொழித்தவர்
றற்பினாலுமக்காகவிற்றினோமற்பமார்சுரைப்பானமுதற்கணூர்
பொற்பிலாவினைத்தீமைசணத்திலேபுக்கடானுமுற்சேரிருளொப்பவே
கற்பரேலிசைகாதில்டைப்பரேற்சைப்புருதவிக்காதையகற்றுமே.

பராவசுச்சருக்க முற்றிற்று.

---

## கவிசம்புச் சருக்கம்.

முனிவர்காள், இன்னுந் தனுக்கோடியின் மகத்துவமொன் றுளது. அதனையுஞ் சொல்லுதுங் கேட்பீர்களாக என்று சொ ல்லுவார். ஒருவனத்திலே ஒரு குரங்கானது மற்றொரு நரியோடு சினேகமுற்றது. மனுடவடிவாகிய முற்பிறபபுத்தொடங்கி இந்த

இரண்டு மொன்றை யொன்று பிரியாநண்பு கொண்டிருந்தமை யின், இப்பிறப்பிலும் பிரியாநண்பு கொண்டிருந்தன. அவற்றுட் குரங்கானது சுடலையிலே பிணந்தின்று களித்திருக்குந் தனது சினேகிதனாகிய நரியை நோக்கி வினவுகின்றது "வாராய் நண்பனே; நீ இச்சுடலையிலிறந்தபேர்களது புழுத்தபிணத்தை யுண்டுகளித்தலைந்துலையுமாறு முற்பிறப்பில் யாது பாவஞ் செய்தனை சொல்லுதி" யென்றலும், அதுகேட்ட நரியும் உள்ளபடி சொல்லுகின்றது. "அன்பனே, நான் முற்பிறப்பிலே வேதசாத்திரங்களைக் கரைகண்டுணர்ந்த விப்பிரன். யாகாதி கருமங்களனைத்தையு மறிந்தேன். அக்காலத்துத் தேவசன்மா வென்னு மோர்வேதியனுக்குச் சிராத்தத்தின்பொருட்டு நானாழிநெல்லுத் தருவேனென்று சொல்லிப் பின்னது கொடுத்திலேன். அந்தக் கொடும்பாவத்தால் இப்பிறப்பிலே நரியாகி இந்த எரிவனத்து இறந்த பிணங்களி னெலும்பு நிணங்களை யெடுத்துண்டுழலுகின்றேன். யாவரேனு மொருவருக்கு ஒன்றை யில்லையென்று சொல்லலாம் அது குற்றமில்லை; ஒன்றைத் தருவேனென்று வாக்குப்பண்ணி அதனைக் கொடாதொழியில் அப்பொருள் சிறிதாயினும் பெரிதாயினுந் தீராது. அந்தப்பாவத்தால் மறுபிறப்பில் நரியாகப் பிறந்து வருந்துவர். ஒருவருக்கு ஒன்றைத் தருவோமென வாக்குப்பண்ணிப் பின்பு அது கொடாதவர் விரும்பிய எல்லாவற்றையுமிழந்து வருந்துவர். பேடியினிடத்துப் பிள்ளைப்பேறிலாமைபோல, அவர் பத்துப்பிறவிகளிலுஞ் செய்த புண்ணியங்களெல்லாமிழந்து வருந்துவர். அதுமட்டோ! நூறு அசுவமேதயாகங்கள் செய்யினு மவர்கள் பாவம் நீங்காதாயின் எனது பாவ நீங்குவதெங்ஙனே! பெரியோர்கள் ஒருவருக்கொன்றைத் தருவோமென வாக்குப்பண்ணார்கள். பண்ணினலது கொடாமல் விடார்கள்" என்று நரியானது நண்பினாலே தனது வரலாறு முழுதையுஞ்சொல்லி "நண்பனே, நீ குரங்குருவாகவிருந்து பறவைகளைப்பிடித்து வருத்துவதென்னை சொல்லுதி" யென்றது.

குரங்கு மதுகேட்டுத் தனது வரலாற்றைச் சொல்லுகின்றது. "என்னன்புடைத்தோழனே, நான் பிராமணகுலத்திலே விச்சுவநாதனென்னும் வேதியனுக்குக் கமலாலயமெனனு மனைவியிற்றிலே வேதநாதனென்னும் பெயரோடு பிறந்தேன் அக்காலத்தும் நீயும் யானும் பிரியாநண்புடையேம். யான் சிவார்ச்சனைசெய்த புண்ணியப்பேற்றினல் முற்பிறப்பிற் செய்கைகளனைத்துமெனக்குத் தெரிகின்றது. நீ அப்புண்ணியப்பேறில

லாமையாலறியாய். கலைக்கியானவாழ்வாகிய ஒருவேதியன்சமை த்துவைத்தகறியைக் களவாண்ட பாவத்தினாலே யிக்குரங்குருவ மாயினேன். பிராமணர்களுடைய சிறிய பொருள்களையும அபக ரிக்கலாகாது. அபகரிப்பவர்கள் பெறுவது கொடிய நரகமே. நஞ்சையுண்டவன் ஒருவனே சாவான். பிராமணபொருளாகிய நஞ்சை எவனதிருடியுண்பானோ அது அவனை மாத்திரமன்றி அவன் குலமுழுதையு மழிக்கும். பிராமணருடைய பலகாரவ கைகளைத் திருடினவன் கும்பிபாக நரகத்தில் நெடுங்காலங்கிடந்து வருந்தி அந்தப்பாவசேடத்தாற் குரங்குருவமடைதலுண்மை. பெரியோர்கள் பிராமணர்களது பொருளைச் சிறிதேனுந் தொடார்கள். அவர்கள் பக்கலினுக் நெருங்கிச் சேரார்கள். அப பிராமணர்களறியாமலொருதவறுசெய்யினு மதனைப் பொறுப்பதன்றிக் குறைநினையார்கள். சிறுவர்களாயினும் வறியவர்களாயினும் லோபர்களாயினும் வேதங்களிலே சிறிதும் பயிற்சியில்லாதவராயினும் அந்தப்பிராமணர்களைச் சிறிது மவமானஞ்செய்யலாகாது. பிராமணர்கள் கோபித்தாலக்கோபம் நெருப்புப போலெரிக்கும். மிக்க நண்புடைய இகலனே கேளு, இபபிறப பிலே இருகாலச்செய்கைகளுள் சிலவற்றை யறிவதன்றி மேலை திர்காலச்செயல்க ளொன்று மறியேன், இஃதென்ன கொடுமையோ!! இந்த வஞ்சகப்பிறவி என்ஞான்றொழியும் இபபிறவி நோயைக்கெடுக்க வழிசொல்லும் நல்லாசிரியர் யாவர்" என்றிவ்வாறு சொல்லிப் புலம்பிய குரங்கோடு நரியுங்கூடக் கலந்து துயரமுற்றிருந்துழி, சிவநாமதோத்திர பாராயணரும், விபூதிவிளங்கிய தேசோமயசரீரியும், உருத்திராக்கமணிந்த மார்புடையரும், உருவெடுத்த வுருத்திரமூர்த்தி போன்ற தோற்றமுடையரும், அருட்செல்வம்நிறைந்த மேன்மையுடையருமாகிய சிந்து தீபரென்னுந் தேவமுனிவர் அவ்விடத்து வந்தனர்.

அவரது வரவைக்கண்ட குரங்கும் நரியும் பூருவசனம தபோபலத்தினாலெழுந்து அவரது உபைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி யெழுந்து நின்று அவரை நோக்கி "எம்பிரானே, எங்களை இரக்ஷிக்க வேண்டும். மனுதிகளுக்கெட்டாத, வேதவுணர்ச்சியுடையவரே, தேவரீர் நீர் எந்தத்தருமங்களினும் வல்லவர். சகிக்கலாற்றாத துயரமடைந்த வெம்மீது திருக்கணசாத்தியருளும். இழிந்தபிறப்பாகக் கிடைத்த இந்த உடம்பை யினிச் சுமக்கலாற்றேம். பெரியோர்கள், ஏழைகளிடத்தும, வருந்துபவர்களிடத்தும், சிறுமையுடையோரிடத்தும், குழந்தைகளிடத தும, பெருநோயாளரிடத்தும் பிரதியுபகாரங் கருதாது இயன்ற

உதவிசெய்து காப்பாற்றுவர். ஆதலினால் சிவதொண்டரே, தேவரீர் கடைக்கண்சாத்தி இந்த இழிபிறவி நீங்குமுபாயத்தை யறிந்து கருணைசெய்க" என்று மீட்டும் வணங்கினின்றன.

சிந்துதீபமுனிவரு மதுகேட்டுச் சிறிதுநேரம் ஞானதிருட்டியால் அவர்களது பூருவசன்ம பாபத்தொடர்புகளை யறிந்து சொல்லுவார். "சம்புவே, நீ முற்சனனத்திலே தேவசன்மனென்னும் வேதியன். இவன் வேதநாதனென்னும் வேதியன். நீவிரிருவரும் அக்காலத்திலும் பிரியாநண்புடையீர்கள். அக்காலத்திலே நீ ஒருவேதியனுக்குச் சிராத்தத்தின்பொருட்டு நான்கு நாழிநெல்லுத்தருவேனென்று வாக்குப்பண்ணி அதுகொடாமையால்நரியாக இப்பிறப்பெடுத்துழலுகின்றாய். இவன் மற்றொருவேதியன் சமையல் செய்துவைத்து நித்தியநியதிமுடிக்கச்செல்ல, அவனது கறியைத் திருடிய பாவத்தால் நெடுங்காலம்நரகத்திற் கிடந்தழுந்திக் குரங்காகப் பிறந்துழன்றனன். நீவிர் அக்காலத்திலேகொண்ட நண்பினால் இச்சனனத்திலும் பிரியாநண்பராயினீர்கள். இந்த இழிபிறவிகணீங்கி நல்வழியடையு முபாயமொன்றுளது; அதனைச் சொல்லுதுங் கேளுங்கள். தென்றிசையிலே இராமேச்சரத்திலே ஸ்ரீ இராமனாற்செய்த தனுக்கோடியிலேபோய் விழுந்து முழுகுவீரேல், நும்பாவங்கணீங்கும். இந்த இழிபிறவிகளகலும். அதற்கு இன்னுமொரு திருட்டாந்தஞ் சொல்லுதுங் கேளுங்கள். முற்காலத்திலே சுமதியென்னு மொருவேதியன் கட்குடித்துக் களிப்புமேலிட்டினால் ஒருவேட்டுவபெண்ணோடு கலந்தனன். அந்தப்பாவம் இத்தனுக்கோடியிலே முழுகி நீங்கி நன்மையடைந்தனன்" என்றனர். அதுகேட்ட கவிசம்புக்கள் அம்முனிவரை வணங்கி "ஐயனே, தேவரீர் சொல்லிய வேதியன் இவ்வுலகத்திலே யாவரது புத்திரன்? அவன் தன் குலவொழுங்கு தவறியெப்படிக் கட்குடித்தனன்? அவனெப்படிவேட்டுவப்பெண்ணைத்தழுவினன்? இவைகளை யுள்ளபடி சொல்லுக" வென வேண்டின. அதுகேட்ட முனிவர் சொல்லுவார்.

மராட்டதேயத்திலே எச்சதேவனென ஒருவேதியனுளன. அவன் சிவபெருமானையும் விட்டுணுவையும் பூசிப்பவன். தினந்தோறு மதிதிபூசை தவறாதியற்றுபவன். வேதவிதிதவறாத ஒழுக்கமுடையவன். அவனுடைய புத்திரன் மதனசாஸ்திரத்திலதி நுட்பமுடையவன். அவன் *குமதியாயினுஞ் சுமதியெனறழைக்கப்படுபவன். தனது சொந்தமனைவியோடு கலப்பில்லாதவன்.

*குமதி - கெட்டபுத்தியுடையவன்.

இந்தச்சுமதியானவன் தந்தை தாய் மனைவியாதியரைவிட்டுப்புற
கலநாடடையடைந்து தனது குலமுறைதவறிக் காமுகர்களோடு
கலந்து களித்துவருங்காலத்துத் தாழ்ந்த வேடுவகுலப்பெண்
ணொருத்தி கொலையினால் இயமனை நிகர்த்தவள். தனது குலவே
டுவர்கள்போல வழிச்செல்பவர்களை வெட்டிக் கொலைசெய்து
பொருள் பறிக்காது, அன்புவார்த்தைகள் பேசி அதரவமுதரு
த்தி, அவர்களுயிரோடு பொருளுங் கவருபவள். அவ்வாறாய வே
டுவப்பெண் பொதுமகளாயிருக்கும் வழியிலே, இச்சுமதியென்
னும் மறையவன் செல்லக்கண்டு, இவனது மனமுருகுமாறு பல
வித இன்பவார்த்தைகளைப் பேசக்கேட்டுத் தன்மனமுருகித் தன
றவம் வாய்த்ததென்றவளோடு கூடிக்களித்து, இவள் மிகவும வறி
யவளென்று பலவிதப்பொருள்களையுந் திருடிக்கொணர்ந்துகொ
டுத்து, இடைவிடாது அவள்போக மனுபவித்து, ஒருகலத்திலே
யுண்டு, கட்குடித்துக்களித்து, மயக்கத்தோடு மந்நாட்டிலே திரு
டவிரும்பி மற்றை வேடுவரோடு மறுவேடம்பூண்டு நடிப்பவர்
போலப் பிராமணசன்னியாசி இலாடவேடம் பூண்டு, பிராமண
வீடுகளினுழைந்து அங்குள்ள பிராமணர்களுயிரையும் பொருள்
களையுங்கவர்ந்து வேடுவிச்சிகையிற் கொடுத்துத்திரியுங்காலத்து,
இவன் இருளிற் களவாடாமல் செங்குஞ்சியாகிய விளக்கேந்திக்
கொலை களவு செய்யவிடுவதுபோல கரியபுடைவையுடுத்தி, இடி
போலுங் கடுமொழியாற்றிக்குகளினுள்ளாரைக் கலக்கப பிரமக
த்திப்பேயானது பின்றொடர்ந்தது.

கவிசம்புக்களே, சுமதியானவன் இங்ஙனமே தன்பின்றொ
டர்ந்த பிரமகத்திப்பேய்க்கஞ்சி நாடு காடு மலைமுதலிய பலவிட
ங்களினுஞ் சுழன்று தடுமாறி உலைந்து நல்வினைத்தொடர்பினால்
வழிமாறித் தனது நகரையடைந்து தன்பிதாவைக்கண்டு வண
ங்கி "என்னையனே, தீவினைவசத்தால் இங்ஙனந் தடுமாறி வருந்
தினேன். இனியாற்றேன். என்னைக்காத்தருளுக" வென்று வணங்
கினன். பிதாவும் புத்திரசோகத்தால் வருந்திக்கண்ணருள் செ
ய்து "என்மைந்தனே, அஞ்சாதே வாவென்றழைத்தனன் அப்
பொழுது அவனைத்தொடர்ந்த பிரமகத்தியானது வெளியாகத்
தோன்றி, அவன்றந்தையினது முகத்தைப்பார்த்து "ஓ வேதிய
னே, இவனுக்குநீ யருள்செய்யாதே. இவன் எத்தனையோ பிரா
மணரைக்கொன்றவன், கட்குடித்தவன், காமதுரந்தரன் பொற
களவன். இவன் செயல்களனைத்தும் மகாபாதகச் செயல்களே.
தந்தைதாயரை யுபசரியாது வருத்தியபாவி. கொண்டமனைவி

யைக் கைவிட்டருமதி. இவனை நீ கைக்கொள்ளுவையேல், உன்னையு முன்குலமுழுதையுங் கெடுப்பேன். ஒழுக்கத்தையுடைய உனக்கிடர்செய்யேன். இவனொருவனுக்காக உன்னையுமுன்குலத்தையுங் கெடுத்தல் மரபன்று. தருமநூல்களையறிந்த பரிசுத்தனாகிய நீ இவனைப்புறத்தேகழித்தொழுகுவதே முறையாகு" மென்றது. அது கேட்டு வேதியர்பெருமானும் "ஓ பிரமகத்திக்கடியே, இழித்துத்துரத்துங் குணமுடையனாயினும் யான்பெற்றபிள்ளையல்லவா!! உலகத்தவர் பெற்றபிள்ளையிறந்தால் மனங்கரைந்து கரைந்து அழுது அதனோடு தாமுஞ் சாகத்துணிவார்களன்றோ. உயிரோடிருக்கிற இவனிறக்க நானுடன்படுவதெப்படி? தீராத புத்திரக்காதல் விடுத்திலனே யானென்செய்கே" னென்றான். அது கேட்ட பிரமகத்திப்பேயானது "தனக்குரிய விதியொழுக்கமுங் குலவொழுக்கமும் ஆச்சிரமவொழுக்கமுமாகிய வுண்மைவழிகளை விடுத்து நழுவிய பதிதனை விடுக்குதி. இவனைக் காணுதலுமிவனோடு கலத்தலு மதிபாதகத்துக் கிடமாக்கும்" என்று சொல்லி அவன்றந்தை பார்த்திருக்கும்படியாகத் தனது கையினாலே அவனது எலும்புகளெல்லாம் நெறுநெறெனமுரியும்படி அடித்தது. அவ்வடிபட்டவுடனே "என்னையகோ என்னம்மகோ" என்றுதுடித்துப் பதைத்து நிலத்திலே விழுந்தான். அதுகண்ட அவன்மனைவியும் தந்தை தாயருந் தங்கடங்கள் முகத்திலேயடித்து "இவனிறந்தா" னென்று நிலத்தில்வீழ்ந்து புரண்டு கதறிப் புலம்பினர். இங்ஙனமே பலரும்புலம்புஞ் சத்தத்தை சிவவடிவாகிய துருவாசமகாமுனிவரானவர் கேட்டு, அவ்வெச்சதேவனுடைய வீட்டிலே வந்தனர். அவரது வரவைக்கண்ட எச்சதேவனும் விரைந்து முனிவரது பாதங்களில் விழுந்து வணங்கியவரது பாதத்தைப் பிடித்துக்கொண்டு சிவரூபமாகிய நற்றவத்தரே, தேவரீரது தரிசனம் தீயாருக்குங் கிடைக்குமா! எனது ஏகபுத்திரன், கட்குடித்துப் பிராமணரைக் கொன்று பொன்களவாண்டு பலதீமைகளைச் செய்தனன். ஆதலாலவனைக் கொல்லும்படி பிரமகத்திப்பேய் தொடர்ந்து மிகவும்வருத்துகின்றது. அது மாறும் வழியைத் தேவரீர் கட்டளையிட்டருளாதொழியில் இவனிறப்பன். இந்த ஏகபுத்திரனிறக்கி லெனக்குச் சந்ததியில்லை அஃதில்லையாகப் பிதிரர்கடன்றீராது. ஆதலினால் தேவரீரிதுநீங்குமுபாயத்தைக் கடாட்சித்தருளுகவென்று பலமுறை வேண்டினன்.

அது கேட்ட துருவாசமகாமுனிவரும் பரிசுத்தமுடைய எச்சதேவனுக்காக மனமிரங்கி, நெடும்போது ஆன்மாக்களது

பிறவிவேதனையகற்றும் பெருமானுடைய திருவடிக்கமலங்களைத் தியானித்து, அவரது திருவருளினாலறிந்து சொல்லுவார் "ஓ வேதியனே, உனதுமகன் செய்த பாவங்களோ மிகக்கொடியன. வேதங்களில் விதித்தபடி பிராயச்சித்தங்களைப் பதினாயிரவகையாய்ச்செய்யினு மவை தீரா ஆயினு மோருபாயஞ் சொல்லுதுங் கேட்குதி. தென்றிசையிலே, ஸ்ரீராமனுண்டாக்கிய தனுக்கோடியிலே, விதிப்படி சங்கற்பித்து ஸ்நானஞ்செய்விப்பின் இவனைத்தொடர்ந்த பிரமகத்தி நீங்கும். முற்காலத்திலே, துருவிநீதன் என்னுமொருவேதியன் குருபன்னியைக் கலந்த பாதகத்தை அத்தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்து நீக்கினன்" என்றருளினர். அதுகேட்ட எச்சதேவனு மனமகிழ்ந்து, முனிவர்பெருமானே, தேவரீர் சொல்லிய துருவிநீதன் யாரது புத்திரன்? அவன் குருபத்தினியை யெங்ஙனஞ்சேர்ந்தான்? அவன் தன்பாவத்தை எப்படித் தனுக்கோடியில்,வந்து ஸ்நானஞ்செய்து நீக்கினன்? இவற்றை யுள்ளபடி திருவாய்மலர்ந்தருளுக" என வேண்டினன். அதுகேட்ட துருவாசமகாமுனிவரு மதனைச்சொல்லுவார்.

பொருனையாறு சூழ்ந்த பாண்டிநாட்டிலே, பிராமணகுலத்திலே, எண்ணெழுத்திலேற்றம்பெற்ற இத்துமவாகன் என்னும்பெயருடைய வொருவனிருந்தான். அவனுக்குத்தேவாமுதினும்மிக்கசுவையையுடைய உருவுருசி யென்னும்பெண்மணி மனைவியாயினள். அவள்வயிற்றிலே துருவிநீதனென்னும் புத்திரன் பிறந்து சிறுபிராயத்திலேதந்தை யிறந்தனன். துருவிநீதனுனவன், இத்துமவாகனுனதந்தைக்குச் செய்யவேண்டிய கிரியைகளை விதிப்படி செய்து முடித்துத் தானுந்தாயுமாக அங்கிருந்து வாழுங்காலத்துப் பன்னிரண்டுவருட மழையில்லாமலுலகத்திலே பஞ்சமுண்டாகக் கொடை மடமுந்தலியவற்றிலே யிருப்பவர்களுங் கொடைக்குணமில்லாதுவிடு மதிக பஞ்சகாலத்திலே தானியவிலையேற்றமாகச் சீவிக்க வழியின்றித் திருக்கோகன்ன மென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தை யடைந்து அங்கே தாயோடு மனங்களித்து வாழ்ந்தனன். துருவிநீதனுனவன் இங்ஙனமிருக்குங்காலத்திலொருநாள், பூருவசன்ம பாபத்தொடர்பினால் மன்மதபாணத்தினால் வருந்தி, பலமுறையுந் தாயானவளிது முறையன்றென்று தடுக்கவுமடங்காதவனாய், வலாற்காரமாகத் தன்றாயோடு கலந்தனன். தன்னை வருத்திய ஆசையகன்றபின்பு, அறிவுதெளிந்து, "கைமையாகிய தனறாயைக் கலந்து சுகிதனேனே" என்று புலம்பிச்



ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU

கதறி "இது தக்கதன்றே! இத்தீமையினின்று நீங்குந் தருமவழி யாதோ! ஊர்வனவற்றுட் பாம்புபோலவும், உலாவுவனவற்றுட புலிபோலவுங் கொடியதுட்டனுயினேன், எனக்கொப்பானபாவி யுலகத்திலே யாவர்! யானின்னு மிவ்வுடம்போடு மிருக்கவேண் டுமோ! தாயாகிய விவளன்றி யுலகத்தில் வேறுபெண்களில்லை யோ! பொதுப்பெண்கள் வேரோடு சழிந்தனரோ! பிறர் மனைவி யரைக்கலந்தாலும் பிராயச்சித்தமுண்டே! இனியாவரென்னைக் காப்பவர்! இதுதீர்க்கு முபாயம் யாது! யானிங்ஙனமிருந்து பல ம்பியாவதென்னை. மகாதபத்திகளையடைந்து இதுதீர்க்கும் வழி யை யாராய்ந்து கேட்டங்ஙனமே செய்வே" னென்று அத்துரு விநீதனவன் முனிவர்குழாமிருக்குந்தபோவனமடைந்து, அவ ர்கள் பாதங்களிலே வீழ்ந்து வணங்கி முறையிடுவான். "தபோ தனர்களே, வலாற்காரமாகத் தாயோடு கலந்த பாபத்தைத்தகை க்கும்வழி யாதோ? உங்களையன்றி யடியேனுக்குத் தஞ்சமில்லை. இறக்கிறப்பதே பிராயச்சித்தமாயினு மதுசெய்வேன். வேறு நீங்களெதனைச் சொல்லினு மதுசெய்வே னிதுசத்தியம். வேத விதிகளை யாராய்ந்துள்ளபடி சொல்லுங்கள்" என்று மீட்டும் பணிந்திரந்து நின்றனன். இவ்வார்த்தையைக் கேட்டு முனிவரு ள்ளே சிலர் இந்த மகாபாவியைப் பார்க்கினும் பரிகாரமில்லை யென்று கண்களை மூடினர். சிலரிவனோடு கலந்துபேசினும் பெ ரும்பழியடிக்குமென்று பேசாதிருந்தனர். சிலர் இக்கொடுமொ ழியை எமது செவி கேட்குமாவென்று சிவநாமஞ்சொல்லிச் செவிகளைப்பொத்தினர். சிலமுனிவர் சாந்தகுணம் விடுத்துக் கடுங்கோபமடைந்தனர். சிலமுனிவர்கள் மகாபாதகனே, நீ யெ ங்கள் முன்னிலையி னில்லாது விரைந்து செல்லுதியென்றனர். இவைகளனைத்தையுங்கேட்டு துருவிநீதன் பேசவழியொன்று மில்லாமல் நாணமடைந்து தலைகுனிந்து நின்றனன். அதுகண்ட வியாதமுனிவர் சிறிது மனமிரங்கி அன்பினலே, துருவிநீதனது முகத்தை நோக்கி, அவனது பாதகங்கழியு முபாயத்தைக் கட்ட ளையிடுவாராயினர்.

"துருவிநீதனே வருகுதி, நீயஞ்சாதே. உன்தாயோடு தெ ன்றிசையிலே ஸ்ரீராமனுவியற்றிய தனுக்கோடியிலே விதிப்படி இருவோருஞ் செய்தபாவத்தைச் சுட்டிச் சங்கற்பித்து ஸ்நான ஞ்செய்யின். உங்களது பாவமகலும். வேதபுராணங்கள் ஸ்மிரு தியாதி பலவித சாத்திரங்களும் "எந்தவித பஞ்சமகா பாதகங்க ளும் இந்தத் தனுக்கோடியிலே ஸ்நானஞ்செய்தால் நீக்கு' மெ ன்று முழங்கும். அத்தனுக்கோடியைத் தரிசித்த மாத்திரத்திலே

நீங்காதபாதகங்களொன்று மில்லை. எனது வார்த்தை பிசகாதென்று நினைக்குதி. எல்லாத்தீவினைகளுந் தனுக்கோடியென்று பேர்சொல்லவே நீங்கும். மனுஸ்மிருதிகளிலே யிதற்குப பரிகாரம் வேறுவிதமாக விதித்திருப்பினும், அது உனக்கு அரிதாகும். இதுவே நீ யிப்பொழுது செய்யத்தக்கது" என்று சொல்லினர். அதுகேட்ட துருவிநீதவிப்பிரனும் "ஐயனே, இன்றுமுதலென்னை யடிமையாகக் கொள்ளுக" என்றெருப்படைத்து வணங்கி விடைபெற்றுத் தனது தாயோடுந் தீர்த்தயாத்திரைக்குச் சங்கற்பித்து வெளிப்பட்டுத் தனுக்கோடியை யடைந்து குறித்தபாவத்தைச் சுட்டிச் சங்கற்பித்து தைமாதம் முப்பது நாளும் வியாதமுனிவரிட்டகட்டளை தவறாது உபவசியாக ஒவ்வொருதினமுந் தவறாது ஸ்நானஞ்செய்து, பலவிததானங்களுஞ் செய்து, தீவினையினின்றும்நீங்கிப் பரிசுத்தனாய் இராமனாதனை வணங்கி மீண்டு வேதவியாதமுனீந்திரரை யடைந்து நமஸ்கரித்துத் "தேவரீரது கட்டளைப்படி தவறாது தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்து இராமனாதனை வணங்கி விடைபெற்று வந்தேன், இனித் தேவரீரைச்சரணாகவடைந்தேன், மேல் நான் நடக்கும் வழியைக் கட்டளையிடுக" என்று வணங்கினன்.

வேதவியாதமுனிவரும் அவனை நோக்கி "வேதியனே, தாயைப்புணர்ந்ததோஷம் நீங்கியது. உனது தாயும் பரிசுத்தமுடையளாயினள். இது சத்தியம். நீ நம்மை யடைந்தபடியினாலும், தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்து சுத்தனாகிவந்தமையினாலும், பிராமணர்களுந் தவத்தர்களும் உன்னை விரும்பி மேற்கொள்ளுவார்கள். இனி நீ சென்று நின் குலத்திலே யொருகன்னிகையை விவாகஞ்செய்து இல்லறநடாத்திப் பலவுயிர்களுக்கு மின்பத்தை விளைவித்துத் தருமவழியிலே நிற்குதி. தீயோர்கூட்டத்தை வெறுத்து நல்லோர்கூட்டத்தை யடைகுதி. திரிகாலசந்திகள் தவறாது செய்குதி. பஞ்சேந்திரியவழி மனதை விடாது தடுத்து நல்வழியிலே செலுத்திச் சிவபெருமானையும விட்டுணுவையும் பூசித்து வழிபாடு செய்குதி. பிறருக்கு அபவாதஞ்செய்யாதொழுகுதி. பிறர் கல்வி செல்வங்களைக் கண்டு பொறாமைகொள்ளாதே. பிறர் பொருளை விரும்பாதே. குலாசாரந்தவறாதே. வேதாதிகலைகளை மறவாமலோதுதி. பசித்தவர்களுக்கு அன்னங்கொடுக்குதி. விதித்த சிராத்தாதிகளைத் தவறாது செய்குதி. பொய் குறளை வஞ்சம் கடுஞ்சொல் பயனில்சொற்களைச் சொல்லாதொழிகுதி. தீயோருக்கஞ்சுதி. வேதம வேதாங்கம ஆகமம

இதிகாசம் புராணம் ஸ்மிருதி கலைக்கியானம் ஆதிய நூல்களை ஐய ந்திரிபின்றி யறிகுதி. சிவநாம மரிநாம பாராயணஞ் செய்குதி. வெட்கமின்றி விபூதி யுருத்திராட்சந் தரித்துக்கொள்ளுதி. வே தாகமவிதி தவறாமல் துளசியினால் விட்டுணுவையும் வில்வத்தி னாற் சிவபெருமானையும் ஒவ்வொரு தினத்திலும் ஒருகாலமிரு கால முக்காலங்களினு மியன்றபடி யருச்சித்து வழிபாடுசெய் குதி. துளசியையும் சலத்தையுங்கொண்டு அவ்விருதேவர்களு க்கு மற்பித்த வன்னத்தில்விட்டாபோசனஞ் செய்குதி. வைச் சுவதேவபலியிடுகுதி. உபவாசமுஞ் செய்யவேண்டிய தினங்க ளிற் செய்குதி. வீட்டிலே வருந்துறவிகளை யுபசரிக்குதி. தந்தை தாய் பிரமசாரி நோயாளர் அநாதர்களானோரை யியன்றவரையு முபசரிக்குதி. சிவத்தியானத்தோடு பிரணவாதி ஸ்ரீ பஞ்சாட்சர செபஞ் செய்குதி. ஸ்ரீமன்னாராயணனது அட்டாக்ஷரங்களையும் மற்றைத்தேவர்களது மந்திரங்களையுஞ் செபிக்குதி. வேதங்களில் விதித்த மற்றைய தருமங்களினு மியன்றவற்றைச் செய்குதி. இங் ஙனமே சிரத்தையோடுஞ் செய்துவருவையேல், தேகாந்தத்தி லே மோக்ஷவீடடைந்து பேரானந்தம் பெறுவை'' என்றுபதே சித்தனர்.

துருவிநீதனும் வேதவியாதமுனிவரது உபதேசமொழியை க்கேட்டு, அவரை வணங்கி விடைபெற்றுச் சென்று, அவவா றொழுகி மோக்ஷமடைந்தனன். தனுக்கோடி ஸ்நானவிசேடத் தினால்வனது தாயுஞ் சிவகதியடைந்தனள்.

"எச்சதேவனே, துருவிநீதனது சரித்திரத்தைச் சொல்லி த்தனுக்கோடிமகத்துவத்தை யுனக்கு விளக்கினேம். இப்போது நீயுமுனது மகனொடு தனுக்கோடியை யடைந்து சங்கற்பித்து ஸ்நானஞ்செய்குதி, இத்துயரம் நீங்கு'' மென்று துருவாசமுனி வருபதேசித்தனர். அது கேட்ட எச்சதேவனுமப்படியே தன்ம கனொடு தனுக்கோடியை யடைந்து, அவரது கட்டளைப்படி ஆறு மாசவரை தவறாது விரதநியமம் பூண்டு சங்கற்பித்து ஸ்நானஞ் செய்தனன். அவ்வெல்லையில் அசரீரிவாக்குத் தோற்றி "எச்ச தேவனே, உன்மகன் வேட்டுவப்பெண்ணைப் புணர்ந்த பழியும், கட்குடித்தபாவமும், பிரமகத்திதோஷமும், பொற்களவெடுத்த தோஷமும் நீங்கப்பெற்றாய்ந்தனன். இதிலே சந்தேகப்படாதே'' என்றருளியது. எச்சதேவன் அதுகேட்டவுடனே மனங்களித் துத் தனுக்கோடியின் பெருமையைப் பாராட்டி வணங்கி இராம னுதனையும் வணங்கி விடைபெற்றுத் தன்னூரையடைந்து மகிழ

ந்திருந்தனன். "ஆதலின் கவிசம்புக்களே, உங்களிழிந்தபிறவி நோய்நீங்கி நன்மையடையவேண்டுமாயின தனுக்கோடியைய டையுங்கள். அதற்காகச் சுமதிகதையை யுங்களுக்குச் சொல்லினேன். இப்பாவம் வேறு பிராயச்சித்தங்களினாலும் நீங்காது" என்று சிந்துதீபமுனிவர் உபதேசித்தனர். அதனைக்கவிசம்புக்கள் கேட்டு அவரை வணங்கி விடைபெற்றுத் தங்கள் மனத்துயரமொழிந்து காடு மலை நாடு முதலிய பலவற்றையுங் கடந்து சென்று தனுக்கோடியை யடைந்து வீழ்ந்து முழுகி விலங்குடலமொழித்து மற்றைய பாவங்களும் நீங்கித் தேவவுருவமாய்ப் பொன்முடியும் வாகுவலயங்களும் மற்றையபூட்டணங்களும விளங்கத் தேவவிமானத்திலேறித் தேவப்பெண்கள் சாமரமிரட்டத் தேவர்கள் பூமழைபொழியப் போய் வேற்றுமையின்றித் தேவவிந்திரனோடு மோராசனத்திருந்தார்கள். முனிவர்காள், கவிசம்புக்கள் தனுக்கோடியிலே ஸ்நானஞ்செய்து தேவவுருவடைந்த சரித்திரத்தை யுங்களுக்குபதேசித்தோம். இவ்வுலகத்திலே இச் சரித்திரத்தைப் படிப்பவர்களுங் கேட்பவர்களும் தனுக்கோடியிலேமுழுகிய புண்ணியப்பேறடைவர்கள்.

சம்புவோடுகவிதனுக்கோடிவாய்த்தங்கள்பாவவினைகெடப்போனதோர்
நம்புகாதையிவணுமக்கோதினேனன்றுகூறுமறநெறிக்கேண்மையீ
ரிம்பர்யாருமிதுதனைப்பேசுவாரின்பமோடுசெவிபுகப்பேணுவா
ரம்புலாவுகொடுமரக்கோடிநீரங்கண்மூழ்குபயனவர்க்காகுமே.

கவிசம்புச்சருக்க முற்றிற்று.

---

## துராசாரச் சருக்கம்.

---

சூதமகாமுனிவரானவர், சவுனகாதிமுனிவர்கள் கேட்குமாறு பின்னுந் தனுக்கோடிதீர்த்த மகத்துவமொன்றுளதென்று சொல்லுவாராயினர். முனிவர்காள், துராசாரனென்னுமொரு வேதியனிந்தத் தனுக்கோடியில ஸ்நானஞ்செய்து மோக்ஷமடைந்தனன். அதனை விரித்துச்சொல்லுதுங் கேட்பீர்களாக பெருவளம்படைத்த கௌதமியாற்றங்கரையிலே, துராசாரனென்னொருவேதியனுள்ளன் அவன் தன் குலாசாரமுழுதும வழுவிய காரணத்தாலிந்தபெயரை யடைந்தனன். துனபமுறாரல யாவரி

டத்து மிழிதொழிலே செய்பவன். நஞ்சோடுகலந்த நெருப்புமபோலத் தீயவரோடு கலந்து தீத்தொழிலே செய்யுந் தீயனனது பிராமணகுலாசார மொருசிறிதுமில்லாதவன். எவனொருவன் தன்குலாசாரம் நழுவி இழிந்தவர்களோடு ஒருதினங்கலந்துவசிப்பனேல் காற்பங்கும், இரண்டுதினங்கலந்து வசிப்பனேல் அரைப்பங்கும், மூன்றுதினங்கலந்து வசிப்பனேல் முக்காற்பங்கும், நாலுதினங்கலந்து வசிப்பனேல் முழுமையுநீங்கி, அவருக்குந்தனக்கும் வேறுபாடிலனவன். தருமப்பால்கவிழ்க்கும் பூனைக்கொப்பாகிய துராசாரன் தன்குலாசாரம் வழுவியதினால், அவனஞ்சுமாறு வேதாளம்பிடித்து வருத்தப் பலபலதேயங்களிலும் வனங்களினுந் திரிந்துழன்று நெடுநாள் மிகவருந்தி, முன்னொருநாட்செய்த புண்ணியவசத்தினால் தனுக்கோடி தீர்த்தக்கரையையடைந்தனன். வேதாளமானது முற்படவஞ்சிப் பின்னிட்டுநின்று தானவனை யதிலமிழ்த்துவதினால் தனக்குப்பிரிவுவருமென்றறியாது அவனோடெழுந்த கோபத்தினால் அவனைப்பிடரிலே பிடித்தமிழ்த்தியது. துராசாரனு மதிலேமுழுகியெழுந்தவுடன், அவனைத்தீண்டமுடியாது தன்வேதாளவடிவை யொழிந்துதேவவுருவாயது. துராசாரனுங் கரையேறித் தான்கொண்ட மயக்கமனைத்துமொழிந்து தெளிவடைந்து நினைக்கின்றான். "கௌதமியாற்றங்கரையிலிருந்தயான் இச்சமுத்திரக்கரையையெப்படியடைந்தேன் இஃதென்னமாய" மென்று யோசிக்குமளவிலே, உத்தமகுணமுடையோராய் யோகாப்பியாசமுடையோராய் கலைக்கியானபண்டிதராய்ச் சிறந்த தத்தாத்திரயமுனிவர் தனுக்கோடிக்கரையிலே ஸ்நானஞ்செய்யும்பொருட்டு வந்திருந்தனர். அவரைக்கண்டமாத்திரத்தே பேரன்போடு வணங்கியெழுந்து குவித்தகையோடு நின்று சொல்லுவான்.

"ஐயனே, இஃதெந்தநாடு! கௌதமியாற்றங்கரையிலிருந்தயான் றனியே யிங்கு எப்படிவந்தேன்! இஃதெனக்கு மயக்கமாகவிருக்கிறது, தேவரீர் கட்டளையிட்டருளுக" வெனவேண்டினன். பதிலுபகாரங் கருதாத முகில்போன்ற தத்தாத்திரயமுனிவரும் அதுகேட்டுச் சிறிதுநேரஞ் சிவத்யானஞ்செய்து ஞானதிருட்டியானோக்கி யுள்ள சங்கதிகளை யறிந்து, துராசாரனை நோக்கிச் சொல்லுகின்றார். "துராசாரனே கேட்குதி, நீ குற்றமற்ற வேதியகுலத்தவன், கூடாவொழுக்கம்பூண்டமையால் பிராமணவொழுக்கம் நீங்கியது. அப்போது வேதாளமானது உனைப்பிடித்து நிலைகுலைத்து நெடுநாளாகக்காடுமலைமுதலிய விடங்களை

ல்லாங் கொண்டலைத்து வருத்தி இங்கே நினையாப்பிரகாரமாய்வந்து தனக்குப் பிரிவுவருமென்பதை யறியாது, உன்னைக்கொல்ல விக்கடலுள் விழுத்திற்று. நீ சுத்தமுடைய தனுகோடியில் விழுந்துமூழ்கியெழுந்தமையால், பாவங்கணீங்கிப் பரிசுத்தவானுயினை. அதுகண்டு வேதாளமுன்னைத்தீண்டவஞ்சியோடிற்று. அந்த வேதாளமிப்படி வருந்துதற்குக்காரணம், வருந்துவெனனுமொரு வேதியன், புரட்டாதிமாதத்திலே அபரபக்கத்திலே மகாளயசிராத்தத்தை முறைப்படி யக்கினிவளர்த்துச் செய்திலன். தென்புலத்தார் அதனால் வருந்திக் கோபமுற்று வேதாளமாகுகவென்று சபித்தனர். அதுவே யுன்னை வருத்தியது. அந்தவேதாளமுந் தனுக்கோடியைத் தரிசித்தவளவிலே முந்திய பாவத்தோடு வேதாளவடிவுமொழிந்து தேவவுருவாகி விட்டுணுவுலகடைந்தது. ஆதலினாற் துராசாரனே, எவராயினும் புரட்டாதிமாதமகாளயபக்ஷத்திலே மகாளயசிராத்தஞ்செய்யாது விடுவராயின், அவர்கள் வேதாளவுருவமடைந்து வருந்துவது சத்தியம். அந்த மகாளயபட்சத்திலே, தங்கள் தங்கள் பிதிரர்களைச் சுட்டிச சற்பாத்திரமாகிய பிராமணர்களை வரித்து, அன்னசிராத்தஞ்செய்தவர்கள் வறுமையடையாது பெருஞ்செல்வராவர். மேலேசொல்லிய வருந்துவென்னும் வேதியனும் ஒழுக்கந்தவறாதவனாயிருந்தும், மகாளயசிராத்தஞ்செய்யாத குற்றத்தினால் வேதாளவடிவமாகி யுழன்றுதிரிந்து ஒழுக்கந்தவறிய உன்னையுந்தீண்டி வருத்தினன். இந்த மகாளயசிராத்தம் புரட்டாதிமுதல் கார்த்திகைமாதவரையிலுஞ் செய்யலாம். ஆயினும் புரட்டாதிமாத அபரபக்கமே மகாளயசிராத்தத்திற்குச் சிறந்தது. புரட்டாதிமாதஅபரபக்கப்பிரதமைமுதலாக ஒவ்வொருதிதியிலுஞ் சிராத்தஞ்செய்தவர்கள் பெறும்பேற்றையுஞ் செய்யாதவர்களடையும நரகனோயையுந் திரட்டிச்சொல்லுதுங் கேட்பாயாக.

க—யாவராயினும் பிரதமையிலேசிராத்தஞ்செய்யின், அக்கினிதேவன் மனமகிழ்ந்து தனதுலகடைவிப்பன். அவர் வழிப்பிதிரர்கள் பதினாயிரங்கற்பகாலம் மனங்களிப்பர். அங்ஙனஞ்செய்யாரேல், பிதிரர்கள் சாபம்நுழைந்து அவனது செல்வத்தைககெடுக்கும். அவனது வயல்களும் விளையாது கெடும்.

உ—துதியையில்மகாளயஞ்செய்வரேல், சிவபெருமான் மகிழ்ந்து தனதுலகத்திருத்துவர். வெள்ளிமலைபோலச் செல்வமிகும். பிதிரர்களிருபதினாயிரவருடங் களிப்படைந்து சந்ததிபெருகச்செய்வர். அங்ஙனஞ் செய்யாரேல், இடபக்கொடியுடைய

சிவபெருமான் கோபித்துச் சந்ததிகளைக் குன்றும்படிசெய்து இரௌரவநரகத்திலுங் காலசூத்திரநரகத்திலும் புகுந்து வருந்தும்படிசெய்வர்.

௩—திருதியைகயில் மகாளயசிராத்தஞ் செய்வரேல், மும்மூர்த்திகளுமவன்வசமாவார். குபேரனுமனுக்கிரகஞ் செய்வன். நவநிதிகளுமவன் முற்றத்துக்கிடக்கும். பிதிரர்களு முப்பதினாயிரவருடங் களிப்படைந்து சந்ததியை வளர்ப்பர். அங்ஙனஞ்செய்யாரேல் தேவர்களும் பிதிரர்களும் வெறுப்படைந்து செல்வத்தைக்கெடுத்து வறுமையையுருவித்துப் பின்னரகடைவிப்பர்.

௪—சதுர்த்தியில் மகாளயசிராத்தஞ் செய்வரேல், விநாயகமூர்த்தி மகிழ்ந்து புத்திராதி செல்வங்களைத் தந்தருளுவர். பிதிரர்கள் நாற்பதினாயிரம்வருடங் களிப்படைந்து சிறப்பர். அங்ஙனஞ்செய்யாரேல், சண்டகோலாகலநரகத்திலே வீழ்ந்து வருந்துவர்.

௫—பஞ்சமித்திதியிலே மகாளயஞ்செய்வரேல், இலக்குமி மிகவுங் களிப்படைந்து அவனது வீட்டினடம்புரிந்து அவன்செய்த எவ்வகைப் பயிர்களையும் வளரச்செய்வள். அவனது புகழ் சந்திரனுள்ளவரையும் நிலைத்தோங்கும். பிதிரர்கள் ஐம்பதினாயிரவருடங் களிப்படைந்து சந்தானசௌபாக்கியாதி கொடுத்தருளுவர். அங்ஙனஞ்செய்யாரேல், இலக்குமி வெறுப்படைந்து நீங்குவள். மூதேவிவந்துபுகுந்து பெருங்கலகஞ்செய்வள். பெருநரகத்துன்பமுண்டாகும்.

௬—சட்டித்திதியிலே மகாளயசிராத்தஞ்செய்வரேல், அறுமுகக்கடவுளருள்செய்வர். செல்வமதிகரிக்கும். அவனது புத்திரர்கள் பாலக்கிரகப்பசாசால் வருந்தார்கள். பிதிரர்கள் அறுபதினாயிரவரும் பெருமகிழ்வடைவர். அங்ஙனஞ்செய்யாரேல், அறுமுகக்கடவுள் வெறுத்துச் சிறுவர்களைப் பாலக்கிரகப் பசாசால் வதைப்பர். பூதனாதிபைசாசங்களும் வருத்தும். அறுமுகக்கடவுளாணையால் அவன் அக்கினிச்சுவாலையென்னுங் கொடியநரகினால் வருந்துவன்.

௭—சத்தமியில் மகாளயசிராத்தஞ் செய்வரேல், சூரியதேவன் மகிழ்ந்து சந்தானசௌபாக்கியாதி பெருவளங்களைக் கொடுத்து நோய்களொன்று மணுகாமற்காத்துப் பேரருள்புரிவன். பிதிரர்கள் எழுபதினாயிரம்வருடங் களிப்படைந்து ஆசீர்வதிப்பர் அவர்கள்சந்ததி என்னானறும் வளர்ந்தோங்கும். அங்ஙனஞ்செ

ய்யாதவர், சயரோகாதிநோய்களினால் வருந்துவர். பிதிராருஞ்சா பமிடுவர். அதனால் வருந்திப் பின்பு ஆத்திரசய்யாநரகடைந்து வருந்துவர்.

அ—அட்டமியிலே மகாளய சிராத்தஞ் செய்வரேல் அட்டமூர்த்தியருள் சுரப்பர். மிருத்தியுவை வெல்லுவர். மோட்சவுலகமவர்வயத்ததாகும். அவர்களுக்கரியபொருள் பதினன்குலகத்திலுமில்லை. பிதிரர்கள் எண்பதினாயிரம்வருடங் களிப்பபண்டைந்து சந்தான சௌபாக்கியாதி செல்வமதிகரிக்கும்படி ஆசீர்வதிப்பர். அங்ஙனஞ்செய்யாதவர், பஞ்சேந்திரியப் பிராந்திபிடித்துவருந்துவர். உடுபதியுள்ளளவும் வைதரணியாற்றில் விழுந்து வருந்துவர்.

கூ—நவமியிலே மகாளய சிராத்தஞ் செய்வரேல், பாலைக்கிழத்தி மகிழ்ந்து பயனளித்து மிக்கவலிமையுடைய குமரகண்டன், குத்திரம், பேய், கயரோகம், பிரேதபீடை, குட்டம் முதலிய நோய்கள் வராமற் காத்து அவரை மகிழ்விப்பள். பிதிரர்கள் முப்பத்துமூவாயிரங் கற்பகாலங் களிப்பண்டைந்து சந்தானசௌபாக்கியங்களையுங் கொடுப்பர். அங்ஙனஞ்செய்யாதவர், மேலே சொல்லிய வியாதிகளினாற் றுன்பமுற்றுப் பெருநரகடைந்து நெடுங்காலம் வருந்துவர்.

க0—தசமியிலே மகாளய சிராத்தஞ் செய்வரேல், சந்திரன் மகிழ்ந்து பேரருள் புரிந்து பலவிதப்பயிர்களையும் பலிக்கச்செய்து நல்விளைவை யுண்டாக்குவன். பிதிரர்களும் நூறாயிரங் கற்பங் களிப்படைந்து வாழுவர். சற்புத்திரப்பேறுண்டாகும். இயன்றவரையிலேனு மத்திதியிற் செய்யாரேல், அவர் செய்வனவெல்லாம் வீண்செயல்களாகும். அவர்கள் செய்யும் பயிர்கள் நாசமாகும்.

கக—ஏகாதசியில் மகாளய சிராத்தஞ் செய்வரேல், உருத்திரமூர்த்தி மிகக்களிப்படைவர். சத்துருசெயமுண்டாகும். பதினாயிரம் பிரமகத்திநீங்கும். பலவித யாகங்கள் செய்தபயனுண்டாகும். பிதிரர்கள் இருநூறாயிரங் கற்பகாலம் பெருமகிழ்வடைவர். சந்தான சௌபாக்கியங்கள் வர்த்திக்கும். அங்ஙனஞ்செய்யாரேல், சத்துருக்களால் வருந்துவர். அவர்கள்செய்த மற்றைய யாகாதி கருமங்கள் பயனடையா.

கஉ—துவாதசியில் மகாளய சிராத்தஞ் செய்வரேல், மகாவிட்டுணு களிப்பண்டைவர். மற்றைய வுயிர்களெல்லாங் களிப்ப

டையும். பூமிதேவியுங் களிப்புடைந்து பயிர்களை வளர்ப்பள். ஸ்ரீதேவி குதூகலமடைவள். விட்டுணுவினது கௌமோதகியென்னுந் தண்டாயுதமுங் கும்பகண்டன்முதலிய பேய்களையோட்டும். சக்கரம் பகைவரையழிக்கும். பிதிரர்கள் அறுநூறுயிரகற்பகாலங் களிப்படைவர். சந்தான சற்குணவிருத்தியுண்டாகும். அங்ஙனஞ் செய்யாதொழிவனேல், கும்பகண்டன் முதலியபசாசுகள் வருத்தும். பூமிவளம் பொன்வளங்கள் குறையும். அத்திபேதமென்னும் நரகையுமடைந்து வருந்துவர்.

கங—திரயோதசியில் மகாளய சிராத்தஞ் செய்வரேல், மன்மதனன்புகூர்ந்து பூமாலை மிருகமதஞ் சந்தனம் போகமாதர் முதலிய போக்கியப் பொருள்களைக் கொடுத்து மகிழ்விப்பன். சனனாதி மரணாந்தவரையுஞ் சுகத்தையேயடைவர். பிதிரர்கள் இலக்ககற்பகாலங் களிப்படைவர். சந்தானசௌபாக்கியங்களைத்தோங்கும். அங்ஙனஞ் செய்யாதொழிவனேல், மன்மதனும்வெறுப்படைந்து போகங்களைக்கெடுப்பன். வாழ்கணிறைந்த அங்காரசையாப் பிரமணமென்னும் நரகடைந் துன்புறுவர்.

கச—சதுர்த்தசியிலே மகாளய சிராத்தஞ் செயவரேல், சிவபெருமான் விரும்பிய இட்டசித்திகளனைத்தையுங் கொடுத்து மெஞ்ஞானவிளக்கத்தோடு மோட்சங்கொடுத்தருளுவர். பொன்களவு கள்ளுண்டலாதிய பதினாயிரம் பாவங்கள் குறையும். சண்டாளி விடலிகளைத்தழுவிய தோஷம் நீங்கும். அவர்வழியினரகத்தினுள்ள பிதிரர்களுஞ் சுவர்க்கமடைவர். சந்ததி விருத்திக்கும். பதினோராயிரம் அசுவமேதம் பவுண்டரிகாதி யாகபலனைக்கொடுக்கும். பிதிரர்கள் நூற்றுப்பத்திலட்சகோடிவருடகாலங் களிப்படைவர். அங்ஙனஞ்செய்யாரேல், இருட்டுவடிவாகிய மயக்கக்கிணற்றிலே நூறுகோடிகற்பகாலம் விழுந்துவருந்துவர். அதனைமாற்றும் பிராயச்சித்தமுமரிது. பொன்களவாண்டபாவமுங் கட்குடித்தபாவமுமுண்டாகும். வேறெந்தத்தருமங்களைச்செய்யினும் பயன்படாவாம்.

கரு—அமாவாசியில் மகாளய சிராத்தஞ் செய்வரேல், உமாமகேச்சுரர் களிப்புடைந்தருள்செய்வர். பூசுரரைவரித்தன்ன சிராத்தஞ்செய்யின், பிதிரர்கள் அமுதபானஞ்செய்த தேவர்களினுமதிகமகிழ்ச்சியடைவர். பிரமக்கொலைமுதலிய பஞ்சபாதகங்கணீங்கும். விதிவழுவாது செய்த யாகாதிகருமபலனுண்டாகும். மேலான பிரமஞானமுண்டாகும். மும்மலங்களுமகன்று அத்துவிதமோக்ஷத்தையடைவர். அங்ஙனஞ்செய்யாரேல், அந்த

மூடரது சந்ததியிலுள்ள பிதிரர்கள் பிரமலோகத்திருப்பினு மீ ளாநரகடைவர். சந்ததி விருத்தியாகாது. பிதிரர்கள் இது புரட் டாதியென்றவளவில் "நமது சந்ததியார் நம்மைக்குறித்து மகா ளயஞ்செய்வர், நாங் களிப்படைவோம்" என்று கூத்தாடுவர்.

இங்ஙனமன்றிப் புரட்டாதிமாதமுழுதினும் ஒரு சற்பாத் திரபபிராமணனுக்கு அன்னதானஞ்செய்யின் அவர்களது இரு வழிப்பிதிரர்களு மன்புசெய்வர். புரட்டாதிமாதம் மகாளயபட்ச த்திலே எண்ணெய் கறி நெய் பருப்பு முதலியவற்றோடு சற்பா த்திரப்பிராமணர்களை வரித்தமுது செய்விப்பின் அவர்வழிப்பிதி ரர்கள் ஒருகற்பகாலங் களிப்படைவர். புரட்டாதி யபரபட்சத் தசமிமுதலாயேனும் துவாதசிமுதலாயேனும் அமாவாசியந்தம் மூன்றுபிராமணர்களை வரித்தமுது செய்விப்பின் இருவழிப்பி திரர்களு மிக்ககளிப்படைவர். இவற்றுளியன்றபடி எதனையேனு மொன்றைச் செய்யாதவர்கள் செல்வங்களெல்லாமிழந்து வறி யராவர். யாவரும் பெற்றபொருளிலே லோபமில்லாமல மகா ளய சிராத்தஞ் செய்தல்வேண்டும். பாயசம் பால் தயிர் நெய் பலவிதபணிகாரங்கள் பருப்பு தேன் நால்வகையுண்டி ஊவகை க்காயம் அறுசுவைகளோடு பச்சரிசியன்னத்தை அருந்துவிப்ப ரேல் மும்மூர்த்திகளும் இந்திராதிதேவர்களுந் தென்புலத்தார் களுங் களிப்படைவர். யாவரும் விதிப்படி மகாளய சிராத்தஞ் செய்வரேல், திரிபுவனங்களுங் களிப்படையும். இருவழிப் பிதி ரர்பொருட்டுஞ் சற்பாத்திரப்பிராமணரை வரித்து இயன்ற தக் கிணையோடு மன்புகொண்டு மகாளயஞ் செய்தலவேண்டும். யா கஞ்செய்வார்க்கும் அன்போடு தக்கிணைகொடாதொழியின் யாக பலன் கிடையாதவாறுபோல, மகாளயஞ் செய்வார்க்கும் அன் போடு தக்கிணைகொடாதொழியின் அந்த மகாளயபலனையடை யார்கள். சிராத்தஞ் செய்பவர்கள் இயன்றளவு சிறிதாயினுந் த க்கிணைகொடுத்தலவேண்டும். புத்திரரில்லாதவிதவையுந் தன்னு யகனைச்சுட்டி பூரிபோசனமாகத் தக்கிணையின்றி மகாளயஞ் செ ய்புக. வேறுவிதமாகச் செய்யினவள் நரகடைவள்.

துராசாரனே, மகாளயமென்னுஞ்சொல் மா லயம் என இரண்டாகப் பிரிக்கப்படும் மா என்பது இலக்குமி லயம என பது ஒடுக்கம். ஆகவே விதிப்படி மகாளயஞ் செயவரேல், அவர் அவ்விருமொழி மங்கலப்பொருளாகிய இலக்குமி விலாசத்தோ டு நன்மங்கலப்பேறடைவர் அங்ஙனஞ் செய்யாதவர் பின்மொ ழியாகிய லயமென்னுஞ் சொற்பொருளாயுள்ள ஒடுககமென்

னும் பொருளுக்கிடமாகி வழிசபரம்பரைகெட்டுத் தனிமையாகி பிரமகத்தியாற் பீடிக்கப்பட்டுக் கொடிய பாவத்துக் கிருப்பிடமாவர்.

துராசாரனே, இன்னுந் தந்தைதாயரிறந்த திதியிலே சிராத்தஞ்செய்ய இயலாதவர்கள் என்னபிரயாசப்பட்டும் மகாளய சிராத்தஞ் செய்தல்வேண்டும். (எவராயினும் பகற்போசனமில்லாது கிடப்பினும் இராப்போசனமில்லாது கிடந்தலரிது. அதுபோலப் பகற்போசனம் அவரவரிறந்த திதியிற் செய்யும் வருடசிராத்தம்; இராப்போசனமே மகாளயம். ஆதலின் இது நியதியாகச்செய்தல்வேண்டும். பதினைந்து திதிகளுக்குமேலே பலன்சொல்லியிருப்பினும் எந்தமாதத்திலே எந்தப்பக்கத்திலே எந்தத்திதியிலே யிறந்தவர்களுக்கும் புரட்டாதிமாதத்திலே மகாளயபக்ஷத்திலே அவ்வுத்திதியிலே செய்தலுத்தமம்) தம்மிடத்திலே மகாளயஞ் செய்தற்குப் பொருளில்லையாயின் முதல்வருணத்தவராகிய பிராமணரிடத்திலேனும், அவரிடமில்லையெனில் இரண்டாம் வருணத்தவராகிய சத்திரியரிடத்திலும், அவரில்லையெனில் மூன்றாம்வருணத்தவராகிய வைசியரிடத்திலும், அவரிடமில்லையெனில் நான்காம் வருணத்தவராகிய சூத்திரரிடத்திலும் யாசித்து மகாளய சிராத்தஞ் செய்யுக. பூமியிலே பிரயாசபபட்டு விளைகளைத்திரட்டி ஆறிலொருபங்கு அரசனுக்கிறுத்து எஞ்சிய ஐந்து கூறுகொண்டு தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தாமென்கின்ற ஐம்புலங்களையுங் காக்குமவரிடமு மில்லையெனில் பதிதர் கைப்பொருள் வாங்கிச் செய்தலாகாது. இவ்வாறியாசித்தேனு மகாளயஞ் செய்யவழியில்லையாயின், தேவரூபமாகிய பசுக்களுக்கு யாதேனும் வாயுறையைக்கொடுக்க. அதுவும் வழியில்லையாயின் விலங்குகள் திரிகின்ற காட்டிலே சென்று தமதிரண்டுகைகளாலும் வயிற்றிலேயடித்துக் கண்ணீர்சொரிய "நமது சந்தானவழியாகிய பிதிரர்களே, பாவிகளாகிய வெம்மிடத்துயாதுமில்லை. யாசிக்கவெளிப்பட்டுந் தருவாரில்லை. நும்மைச்சுட்டிமகாளயஞ் செய்தற்குத் தவஞ்செய்திலேன் கிருபையுடைய நீவிரிதனைப் பொறுத்தருளுதி" யென்று வாய்விட்டுப் புலம்பினால் பிதிரர்கள் அளவில்லாத சற்பாத்திரப் பிராமணர்களுக் கருத்திய பேறுகொண்டு மகிழ்வர். இந்த மகாளய சிராத்தஞ் செய்தற்குச் சூதகாதியிடையூறு வருமேயாயின், கார்த்திகைமாதம் வரையினுஞ்செய்யுக.

இங்ஙனமே மகாளய சிராத்தஞ் செய்புமிடத்துச் சற்பாத்திரபிராமணர்களையே வரித்துச்செய்யுக. அசற்பாத்திரப்பிராமணர்களை வரித்துச்செய்யின், மகாளயபலங்குறைதலோடு பாப

முண்டாகும். மகாளயஞ் செய்யுமிடத்து பிதா பிதாமகர் பிரபிதாமகர் எனப் பிதாவழியின் மூன்றும், மாதுப்பிதாமகர் மாதுப்பிரபிதாமகர் மாதாமகர் என மாதாவழி மூவருக்குமாக இருவழிக்கு மாறுபேரையும் விசுவதேவர்பொருட்டு இருவரையும் சாட்பூதமாக மகாவிட்டுணுவின்பொருட்டு ஒருவரையுமாக ஒன்பது பேரை வரித்துச்செய்யுக. (சில் ஆகமவிதி:—மாதாவழி பிதாவழியிரண்டுக்கும் ஆறுபேரும், நந்திமாகாளர்பொருட்டிருவரும், அதிதிஅப்பியாகதர்பொருட்டு இருவரும், குருவின்பொருட்டு ஒருவருமாகப் பதினொருபேரை வரிக்குக என்பது) இங்ஙனஞ் செய்தல் கூடாதாயின், மாதாப் பிதா இரண்டுக்கு மிருவரையும், விசுவதேவருக்கும் விட்டுணுவுக்கு மிருவரையுமாக நான்குபேரை வரிக்குக. (நந்திமாகாளருக்கொருவரையும், அதிதி அப்பியாகதருக்கொருவரையும், குருவுக்கொருவரையுமாக ஐவரையும்வரிக்கலாம்) இங்ஙனமே செய்யின் பலவிதயாகங்கள் துலாபாரதானஞ் சாந்திராயணமுதலிய விரதங்கள் நான்குவேதாத்தியேனம் காயத்திரிசெபம் இதிகாச புராணபடன சிரவணமாதிய செய்தபயனையடைவர். மும்மூர்த்திகள் பதவிகள் பெறுவர். இது நித்தகாமியமாதலில் தவறாது செய்தல்வேண்டும். செய்யாரேல், கேடுண்டாகும். இதற்கொப்பாகிய வேறுதருமங்களுமில்லை விரதங்களுமில்லை.

துராசாரனே, ஆதலினால் விதிப்படி மகாளயசிராத்தஞ் செய்தவர்களிடத்திலே இராக்கத பூத வேதாள மண்ணை சாகினி இடாகினி முதலிய பிசாசகூட்டங்களணுகா. செல்வமதிகப்படும். தசரதமகராசன் வசிட்டமுனிவரது உத்தரவினால் மகாளயஞ்செய்து ஸ்ரீராமன் முதலிய நான்குபுத்திரருடனிறவாப்புகழையும் பெற்றான். யயாதியென்பவன், இந்தமகாளயத்தைச் செய்து யதுமுதலிய பல புத்திரர்களைப்பெற்றுத் துறக்கமடைந்தான். துட்டியந்தன் மகாளயப்பேற்றால் பரதனைப்பெற்றுப புகழடைந்தான். நளமகாராசன் மகாளயப்பேற்றால் தமயந்தியை விவாகஞ்செய்து புட்கரனாகிய பகைவனைவென்று கலியையோட்டி இந்திரசேனனைப் பெற்றுவாழ்ந்தனன் அரிச்சந்திரன மகாளயப்பேற்றினால் விசுவாமித்திரமுனிவரது வஞ்சனையைவென்று சத்தியகீர்த்தியென்னும் பெயரைநாட்டி விலைபாகவிற்றமனைவியையு மிறந்தமகனையும் பெற்று இறவாப்புகழடைந்தான் கார்த்தவீரியன் மகாளயபலத்தாற் பதினெண்ணிலத்தையு மரசாண்டான். ஸ்ரீராமன் வனவாசமானகாலத்திலே மகாளயஞ்செய்த பலத்தினால் சென்னி நெற்றி மூக்கு வாய் கண்டமென்னுமைந்

துறுப்பு மொவ்வொன்று பப்பத்தாய வையமபதென்னுந் தொகையையும் புருவம் கண் செவி தோள் கை என்னுமைந்துறுப்பு மொவ்வொன்று இருபானிருபானாய் நூறென்னுந்தொகையையும் பெற்ற பெருவலியடைத்த இராவணனைவென்று சீதையைச்சிறையினின்று மீட்டான். தருமன் வனவாசத்திலே இயன்ற மகாளயஞ்செய்தபேற்றினால் நூறு சத்துருக்களையும் வென்று உலகரசாண்டு பெரும்புகழடைந்தான்.

கௌதமர் அத்திரி வசிட்டன் பரத்துவாசன் அகத்தியன் பிருகு குற்சன் விசுவாமித்திரன் வியாதன் பராசரன் அங்கிரா மிருகண்டு காசிபன் முதலிய இருடிகள் மகாளயப்பேற்றினாலி யாவராலுந் துதிக்கப்பட்டு அட்டமாதி சித்திகளடைந்து சீவன் முத்தராயினர்.

துராசாரனே, இங்ஙனமாக வநேகர் மகாளய சிராத்தஞ் செய்தபேற்றினால் இம்மைப்பயனாகிய பல இன்பங்களையும் அழியாப்பெரும் புகழையும் மறுமைப்பயனாகிய பேரின்பத்தையும் பெற்று வாழ்ந்தனர். மகாளய சிராத்தஞ்செய்யாதவர்களுக்கு இச்சனனத்திலு மச்சமுண்டு. வறியவர்களும் பெருநோயாளரும் கடனாளிகளும் துக்கமுடையவர்களும் சந்ததியில்லாதவர்களும் உறுப்புக் குறைந்தவர்களும் பூதவேதாளப்பேய்களினாற் பிடிக்கப்படுபவர்களும் ஆகிய இவர்களையே முற்பிறப்பில் மகாளயஞ் செய்யாதவர்களெனக் காணலாம். உன்னை அறிவுகெடுத்து அஞ்சும்படி பிடித்தின்னாள்வரையு மலைவுசெய்த வேதாளமானது யாரெனில், குசற்பலியென்னும் நகரத்திலேவசித்தவன் பிராமணகுலத்தவன் பிரத்துவாசனென்பவனுடைய புத்திரன் வேதநிதியென்னும் பெயருடையவன் மகாளயஞ் செய்யாத பாபத்தினால் பிதிரர் சாபம்பெற்று வேதாளவடிவாகித் திரிந்து மூன்று குலாசாரம் நழுவினவர்களை அலைப்பதே தொழிலாயுள்ளவன். நீயுங் குலாசாரந் தவறியபடியால் இதுநாள்வரையும் வேதாளத்தாற் பிடிக்கப்பட்டனை. இத்தனுக்கோடிஸ்நான தரிசனபலத்தினா லிருவருஞ் சுத்தமானீர்கள். இனி நீ புரட்டாதிமாதத்தில் மகாளய பக்ஷத்திலே மகாளயஞ் செய்தால் வறுமை நிலைக்காது. பெருஞ்செல்வமுண்டாகும். இனித் தீயார்கூட்டத்தைவிடுத்து உனதூநகரத்திற்போய்ச் சுகமே யிருக்குதி” என்றனர்.

துராசாரனும் இங்ஙனமே சொல்லிய தத்தாத்திரய முனிவரைவணங்கி விடைபெற்று அச்சமில்லாமல தன்னூரையடைந்து, பாபத்தொழில்களைவிட்டுப் பலவிதபுண்ணியங்களோடு மகாளய

ளய சிராத்தஞ்செய்து தன்னையடைந்தவர்களுக்குத் தனுக்கோடிமகத்துவங்களையும் மகாளய விசேடங்களையு முபதேசித்து நெடுங்காலஞ் சுகபோகங்களையனுபவித்து மோக்ஷமடைந்தனன்.

இருசொல்லாகிய "தாடலை" என்பது ஒருசொன்னீர்மைத்தாமாறுபோலத் திரிபதார்த்த நிர்ணயம்பெறுணர்ந்த அத்துவிதஞானமுடைய சவுனகாதிமுனிவர்காள், உமக்குத் துராசாரனது சரித்திரத்தை யுபதேசித்தேம். இத்தனுக்கோடி பிராயச்சித்தங்களானீங்காத் தீமைகளனைத்தையும் நீக்கும். சூத்திரனைப்பிரதிட்டைசெய தருச்சிக்குஞ் சிவலிங்கத்தையாவது விட்டுணுவாதிதேவர்களையாவது தரிசிக்கும் பிராமணனுக்கும், பிராமணர்களையுந் துறவிகளையும் குருவையும் தந்தைதாயரையுந் தமையனையும் வேதாகமங்களையும் கடவுளையும் சிவசரித்திரங்களையும் நிந்திப்பவனுக்கும், தாழ்ந்தசாதியாரது அன்னத்தைப்புசிக்கும் பாப்பானுக்கும், தமையன் தம்பிமார்களது மனைவியரைப் புணர்பவனுக்கும், செய்ந்நன்றிமறப்பவனுக்கும், நம்பினவரைக் கொலைசெய்பவனுக்கும், குதிரையையும் பெண்பிள்ளைகளையும் வேதபுத்தகங்களையும் தேவவிக்கிரகங்களையும் தாகநீரையும் செய்தருமத்தையும் அனுட்டித்த விரதத்தையும் விலைக்கு விற்பவர்களுக்கும் பிராயச்சித்தம் நூல்களிற்பேசப்படவில்லை. முனிவர்காள், ஸ்ரீராமனாற்செய்த தனுக்கோடிதீர்த்தமே மேற்சொல்லிய பாதகங்களனைத்தையுங் கெடுத்தருளும், ஆனால் தனுக்கோடி மகத்துவத்தை யிதுகாறுஞ் சொல்லினேம் இச்சரித்திரத்தை வாசித்தவர்கள் செய்தபாவங்களெல்லா நீங்குவர். என்றருளிச்செய்தனர்.

வீறுவார்தனுக்கோடிநீர்மேன்மையாமுமக்கோதினேங்
கூறுவார்களிக்காதைதான் கூடுபாதகக்காடெரி
நூறுவார்விடைப்பாகனார்சோன்மைசாலருட்கோலமார்
நீறுவார்நுதற்பாலனார்மேயமாதவத்தீர்களே.

துராசாரச்சருக்கமுற்றிற்று.

## பாலோடைச்சருக்கம்.

சூதமகாமுனிவரானவர் சவுனகாதிமுனிவர்களது முகத்தைநோக்கி முனிவர்காள், இதுகாறுஞ் சக்கரதீர்த்தந்தொடங்கித் தனுக்கோடியந்தமாகிய இருபத்துநான்கு தீர்த்தங்களது மகத்துவங்களைச் சொல்லினேம், இன்னுமங்கே பல தீர்த்தங்களுஞ் சரித்திரங்களுமுள்ளன. அவைகளையுங் கேட்குமாதரவு நுமக்குளதாயிற் சொல்லுதுங் கேளுங்களென்றருளினர். சவுனகாதிமுனிவர்களதுகேட்டு "ஐயனே, பாலோடையென்றொருதீர்த

தஞ் சக்கரதீர்த்தத்தின் பாங்கையுள்ளதென்று சொல்லியதே, அதனது விசேடமும், அப்பெயரதற்குவந்த வரலாறுங் கடாட்சித்தருளவேண்டுமென்றனர். அவர்களது பேராசையைச் சூத மகாமுனிவரறிந்து பெருமகிழ்ச்சியுடையவராய்ச் சொல்லுகின்றனர்.

முனிவர்காள், அது மகிடாசுரனைக்கொன்ற துர்க்கை வீற்றிருக்குந் தேவிபுரத்திற்கு மேற்றிசைக்கணுள்ளது, புல்லக்கிராமத்திலே தசரதச் சக்கிரவர்த்தியின் புதல்வனாகிய ஸ்ரீராமனியற்றிய அணைமூலத்தின் பக்கத்திலே பாலோடையென்னுந்தீர்த்தமுளது. அது தீராததீவினைகளைத்துந்தீர்க்கும். அதனைத்தரிசிக்கினும், தீண்டினும், அதன்புகழைக்கேட்பினும் மேற்பதவியுண்டாகும். முற்காலத்திலே வேதவிதி தவறாத முற்கலரென்னும் பெயரையுடைய மகாமுனிவரானவர் விட்டுணுவைக்குறித்து யாகஞ்செய்தனர். விட்டுணுமூர்த்தியதுகண்டு மனமகிழ்ந்து கருடவாகனராயெழுந்தருளிவந்து நின்றனர். அவரது கருமேகம்போன்ற திருமேனியழகையும், உலகமுண்ட செவ்வாம்பல்போலுமதரத்தையும், புன்மூரலினொளியையும், சங்கு சக்கரந்தண்டேந்திய திருக்கரங்களையும், சீதேவியுங் கௌஸ்துபமணியும் பிரகாசிக்கின்ற திருமார்பத்தையுங் கண்டு களித்து விரைவாக அவர் சந்நிதானத்திற்சென்று வீழ்ந்து வணங்கிச் சரீரபுளகமடைந்து திருவாய்மொழிகளைப்பாடிக் கண்ணீர்சொரிய நின்று "மைவண்ணரே, ஆகாயாதிபூதங்களையழித்து மத்தியில்லைகி முதலையீனுகின்ற திரிவிதரூபரே, தசாவதாரரே, தாரகப்பிரமமானவரே, பரமானந்தரே, சேஷசயனரே, பூமிதேவி சீதேவிநாயகரே, தாமோதரரே, தேவரீரது காருண்ணியத்தை விலையாகப்பெற்று இன்றென்னை விற்கிறேன், யானொரு பொய்யன்றி மெய் சொன்னநாளில்லை. பெரியோர்களைப் பழிகூறலாதிய இழிதொழிலேயன்றி நற்றொழில்களொன்றுமறியேன். விரைந்தழிகிற புத்தியன்றி முடிபறிகிற புத்தி சிறிதுமில்லை. சாத்திரவுணர்ச்சிகளுமறியேன். பேய்போலமயக்கமுற்றேன். வேணவா வஞ்சகம் அறியாமை கோபம் இரக்கமின்மை அழுக்காறு வலாற்காரம் லோபம் முதலிய தீயெண்ணங்களையுடையேன். பிறர் மனைவியர்களது தொடைகளானெரிபட்டுத் துன்பத்துக்காளாய தீயேனையாட்கொண்டருளும்; ஆதிமூலமேயென்றழைத்த யானைக்கெதிரே வந்திடர்தீர்த்த காருண்ணியத்தைச் சிறியேன்மீது வைத்தருளவேணு" மென்று துதித்தனன்.

ஸ்ரீமந்நாராயணனும் முற்கலமுனிவரது இனிய தோத்திரவாசகங்களைக்கேட்டு மகிழ்ந்து சொல்லுவார் "முற்கலனே கேட்குதி, நீ செய்த யாகத்தினாலும் தோத்திரத்தினாலும்மகிழ்ந்

தேம் நீ செய்த யாகத்தி லவிர்ப்பாகஞ் செய்தருளவேண்டுமென்றனர். அதுகேட்ட முற்கல முனிவனும் மகிழ்ந்து யானுமென்மனைவியு முய்ந்தேம் எனதுவிரதமும் என்குலமும் என்பிள்ளைகளும் யானுடைத்த ஆச்சிரமமும் தேவரீர் வருதலினாலே நல்வாயின. யோகிகளது மனமும் யாகசாலையு மொன்றாகக்காட்டித் தேவரீரது காட்சியையுந் தந்தருளினீர். இது அனேககோடி பலனைத்தரும் யாகமென்று சுகாசனம் சுகந்தம் சுமனசமாதிபூசோபகரணங்களாற் பூசித்துக் குற்றமற்ற யாகபுரோடாசமாதியவிப்பாகத்தை நைவேதித்தனர். உலகுண்டவனு முண்டருளினன். முற்கலமுனிவரும்யாகத்தில் வந்திருந்த வேதியர்களாதியோர்களுங் களித்திறும்பூதடைந்தனர். உலகத்திலே சராசரபேதங்கள் திருப்தியடைந்தன. ஸ்ரீமந்நாராயணரு "முற்கலனே, உனதன்புகண்டுமகிழ்ந்தேன், நீ வேண்டிய வரங்களைச் சொல்லுதி" யென்றனர். முற்கலமுனிவரும் "தேவரீர் அடியேன் செய்தயாகத்திலே வந்தவிப்பாகமுண்டருளினீர். இதனினும் பார்க்க வேறு வரங்கள் பெரிதோ! ஆயினும், சிலையைப் பெண்ணாக்கிய திருவடிக்கன்பொன்றுமே வேண்டும். இன்னுந்தேவரீருக்குக் காலை மாலையிரண்டினும் பால் வேள்விசெய்ய விரும்பினேன். வேதங்களுமிதனைமிகவியந்து சொல்லும். ஆதலினால், பசுபால மிகவும்பூருவமாக விருக்கின்றது. அதனைத் தேவரீர் கடாட்சித்தருள வேண்டுமென்று வேண்டினர்.

ஸ்ரீ நாராயணரு மதற்கிசைந்து தேவதச்சனை யழைத்துத் "தபதியே, பொன்னிறக்கரைகோலி பூமிக்கழகென்று சொல்லும்படி படிகத்தினால் படிகட்டிக் கீணிலமுழுதும் வெள்ளியால் ஓடையொன்று கட்டுதி" என்றனர். தேவதச்சனுமப்படியே செய்தனன். அதுகண்ட விட்டுணுமூர்த்தி மனமகிழ்ந்து காமதேனுவை வரும்படியழைத்துச் "சுரபியே, இந்தமுனிவன் யாகஞ்செய்தற்பொருட்டிருகாலமும் நீ வந்து இந்த வோடையைப் பாலினால் நிரப்புதி" என்றனர். சுரபியுமங்ஙனஞ் செய்வேனென்றெழுந்து தன்பாலினாலவ்வோடையை நிரப்பியது. விட்டுணுவுமதனைக்கண்டு மகிழ்ந்து முற்கலமுனிவரைநோக்கி "முனிவனே, இந்தத்தடாகத்தி னிறைந்திருக்கும் பாலினாலிருகாலமுந்தவறாமல் யாகத்தைச்செய்குதி, உனக்கதனாலிட்டசித்திக ளனைத்துமுண்டாகும். இது பாலோடை யென்று பெயருண்டாகும். இதிலே ஸ்நானஞ்செய்பவர்கள் பஞ்சபாதகங்களினின்று நீங்குவர். ஆதலினால் முற்கலனே, நீ இங்ஙன மிருந்து நெடுங்காலம

யாகஞ்செய்து தேகாந்தத்திலே யெமமையடைகுதி" யென்று தழுவி நிற்கச்செய்து மறைந்தருளினார். முற்கலமுனிவரும் விட்டுணுவைவணங்கிப் பாலினாற் பலவேள்விகளைமுடித்துப் புல்லக்கிராமத்திருந்து பேரறிவு படைத்துப் பிற்காலத்து விட்டுணுவின் சாரூபம் பெற்றனர். முனிவர்காளிதுவே பாலோடையினது விசேடம். இந்தப்பாலோடையிலே கத்துருவென்னும் பெண்கொடிதனதுநாயகனது கட்டளைப்படி ஸ்நானஞ் செய்து தன்னைச்சிறையிலிருத்திய மாற்றுட்டியாகிய சகோதரியை வென்று ஏனைய பாபங்களையு மழித்துப் பெருமையடைந்தனள்.

இந்தத்தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்தவர்கள் விதிப்படிசெய்தயாகத்தோடு பிறபுண்ணியப்பேறுகளையுமடைவர். அதன்காற்றுப்பட்டவர்கள், பிரமலோகத்திருந்து மோக்ஷமடைவர் இதிலே சூரியோதயத்தின்முன் முழுகினவர் வைதரணியாற்றையும் ஏனையநரகங்களையும் நீந்துவர். இந்தப்பாலோடை யிருக்கவேறு நீரை விரும்பினவர்கள், பசுப்பாலிருக்க எருக்கலம்பாலை விரும்புபவராவர். இதிலே முழுகினவர்கள் பெருத பேறொன்றுமில்லை. அதுமோக்ஷத்தையுந்தரும். இதுசத்தியம் கையுயர்த்திச் சொல்லுவேன். இருகாலுஞ் சத்தியம்.

நூலோடுபோனநுனிகூர்நோலாருஞானமுனிவீர்
நீலாழிசூழுநிலமேனிழ்காதையீதுநவல்வார்
சாலார்வமோடுதுளைசேர்தாழ்காதினாளுநுகர்வார்
பாலாகுமாசில்புகழார்பாலோடைமூழ்குபயனே.

பாலோடைச்சருக்கமுற்றிற்று.

## கத்துருச் சருக்கம்.

இங்ஙனமே சூதமகாமுனிவர் சொல்லியதைக்கேட்ட சவுனகாதிமுனிவர்கள் எழுந்து வணங்கி "ஐயனே, பாலோடையிலே கத்துருவென்பவள் யார்? வஞ்சகத்தினாலவளுக்குஞ் சகோதரிக்குமெப்படிப்பகைவந்தது? அவள் யாரதுமனைவி? பின்னெப்படி அதுநீங்கினள்? அவற்றையறியும் பேராசையுற்றேம், தேவரீர் கட்டளையிட்டருளுகவென வேண்டினர். அஃதறிந்த சூதமுனிவரானவர் மகிழ்ந்து முறையே சொல்லுவார்.

"முனிவர்காள், முற்காலத்துக் கிருதயுகத்திலே பிரசாபதியிடத்தி லிரண்டுபெண்கள் பிறந்தார்கள். அவர்களுள் மூத்தவள்

விட்டுணுவினது தசாவதாரங்களுள் மற்சாவதாரத்தைக் கண்
ணாலும், கூர்மாவதாரத்தைப் புறவடியாலும், நரசிங்காவதாரத்
தை யிடையாலும் வென்ற பேரழகுவாய்ந்த கத்துருவென்னும்
பேருடையவள். அவளது தங்கை, காந்தள்மலரை வென்றகைக
ளையும், மேனகையை நகைத்திகழும் பேரழகு வாயந்த வினதை
யென்னும்பெயருடையவள். இவ்விருவருங் காசிபமகாமுனிவரு
க்கு மனைவியராகவிருந்து கத்துரு அனந்தன் முதலிய சர்ப்பக்கூ
ட்டங்களையும், வினதை கருடன் அருணன் என்னுமிரண்டு புத்தி
ரரையும் பெற்றார்கள். அவ்விருவருங் களிப்படைந்திருக்குங் கா
லத்திலொருநாள் இந்திரனுடைய உச்சைசிரவா வென்னுங்குதி
ரையானது வந்தது. அதனை யவ்விருவருந்தூரத்தே கண்டனர்.
கத்துருவானவள் வினதையைநோக்கிப் "பெண்ணே! இக்குதி
ரையினதுவால் வெண்மையோ கருமையோ சொல்லுதி" என்
றனள். அதற்குவினதையானவள் "அது வெண்மை" எனறன
ள். கத்துருவானவள் தனது தங்கையுடைய சொல்லைமறுத்து
"அது கருமை" என்றனள். இருவருமிங்ஙனமேமாறுபட்டு "இ
து யாவர் சொல்லு மெய்யாமோ அவருக்குத் தோறபவரடிமை
யாதல் சத்திய" மென்று சபதம் பேசிக்கொண்டனர். பினபு கத்
துருவென்பாள் தனது புத்திரர்களாகிய சருப்பங்களை நோக்கி ம
க்காள், நானெனது தங்கையோடு புத்தியீனமாகப் பொய்ச்சபதம்
பேசிக்கொண்டேன் அது மெய்யாகும்வண்ணம் இந்திரனதுகுதி
ரையின்வெண்ணிறவாலை யுங்கள்வல்லபத்தால் கருமையாக்கிவா
ருங்கள்" என்றனள். தாயினதுவாக்கைக் கேட்டபுத்திரர்கள, அ
து நீதியீனமாதலின் "அது எங்களால் கூடா" தெனமறுத்தனர்.
அது கண்டு தாய் கோபங்கொண்டு "மக்காள், எனது சொல்லைம
றுத்து நீவிரன்னியரானீர்களாதலால், பரீக்கிது வென்னு மன்ன
வனது யாகத்துக்கவியாகி யெல்லீருமிறப்பீர்களென்று சபித்த
னள். அப்புத்திரருள்ளே கார்க்கோடனென்பவன் தாயினது கோ
பசாபத்துக்கஞ்சி யெழுந்து வணங்கிச் சொல்லுவான் "தாயே,
வருந்துதலொழிக, நானேசென்று அக்குதிரையினது வாலை யிரு
ட்குழம்பென்று சொல்லும் வண்ணஞ் செய்து வருகிறேன் கோ
பஞ் செய்யாதிருக்க" வெனவேண்டினன். கத்துருவுமதுகேட்டு
மகிழ்ந்து "மகனே, நீ விரைவிலப்படிச் செய்குதி" யென்றனள்.
கார்க்கோடனும் விரைந்து சென்று, அக்குதிரையின்வாலைத்தன
து கரியவுருவத்தால் வளைத்துச் சுற்றிக் குவளைமலாமாலை தொ
ங்குவதுபோல மறைத்திருந்தனன். அதன்பின் அவ்விருபெண்களு
ம் நவரத்தினங்களுக்கும் சங்கநிதி பதுமநிதிக்கும் பாஞ்சசன்னி

யத்துக்கும் சீதேவிக்கும் திங்களுக்கும் தேவயானைக்கும் பிறப்பிடமாகிய திருப்பாற்கடலின் புறத்தேபோய், விரைந்துசெல்லுங் குதிரையினது வால் கருநிறமாக விருக்கக்கண்டனர். வினதையானவள் தன்வாக்குக்கு மாறாக விருந்ததேயென்று நடந்த சங்கதிதெரியாமல் வருந்திச் சத்துருவாகிய கத்துருவுக்கு வீட்டுவேலைக்காரியாயினள். கருடனானவன், தனது மாற்றாளுக்கு வஞ்சகமாக அடிமையானதைக்கேட்டுக் கோபமுற்று, மேருமலையெழுந்ததுபோலெழுந்தனன். உலகமுழுது மதனால்வருந்திக் கருடனைத்துதித்தன. அதுகண்டகலுழனு மனமிரங்கித் தனதுடலை யொடுக்கிச் சினந் தெளிந்து, அருணனது முதுகிலேறித் தாயிடத்து வந்தனன். அவனதுவரவைக் கண்ட கத்துருவானவள் தன்னடிமையாகிய வினதையை நோக்கித் தாதியே, நாம் பாதலவுலகத்துக்குப் போதல்வேண்டும், எனது மகனை நினது மகனைச் சுமந்துவரும்படி சொல்லுதி" யென்றனள். அதுகேட்ட வினதையு மனவருத்தமுடையவளாய்த்தன்மகன் கருடனைநோக்கி "என்மகனே, இந்தக் கத்துருவை யான் சுமந்துசெல்லுவேன்; இவளது புத்திரர்களாகிய சருப்பங்களை நீ சுமந்து வருகுதி" யென்றனள். கலுழனு மதுகேட்டு ஏனிப்படியென்று வினவாது அவர்களைமுதுகின்மேலேற்றித் தாயின்பின்னாகச் செல்லுமிடத்துச் சூரியகிரணஞ் சுடுதலினால் பாம்புகள் வருந்துதலைத் தாயாகிய கத்துருக்கண்டு இந்திரனைவணங்கினள். இந்திரனுமுகில்களையேவி மழையை வருவித்தான். மழையினாலே குளிர்ச்சியடைந்து சருப்பங்கள் வருத்தமொழிந்து பாதலஞ்சென்றபின்பு, கருடனைநோக்கிக் கலுழனே, நீ தாதிமகனாகையால், இப்பூமியினுள்ள பிறதீபங்களின் சிறப்பைப் பார்க்கும் விருப்புற்றேம், அது பார்க்கும் நிமித்தமெங்களைச் சுமந்து செல்லுதி" யென்றனர். அதுகேட்ட கலுழன் தன்றாயைநோக்கி "அன்னையே, நீ இந்தக் கத்துருவைச் சுமந்து இவள்பணித்த ஏவல்செய்வதற்கு வந்தவழக்கியாது? இவளது மக்கள் என்னைத்தாதிமகனென்றுபழிமொழிபகருதற்குக்காரணமென்னை? இவற்றையானறியும்படி சொல்லுதி" யென்றனன். அதுகேட்டதாயுந் துன்பமுற்றுத் தன்மகனை நோக்கிச் சொல்லுவாள். "என்னரும்பேறே, ஒருநாள் கத்துருவும் யானுமிருந்துழி இந்திரனது குதிரைவரக்கண்டு இதனது வால்வெண்மையென்றேன். அவளதனைமறுத்துக் கருமை யென்றாள். இதிலே தோற்றவர்கள் வென்றவர்களுக்கு அடிமையாகுக வென்று சபதம்பேசி நாமிருவருமொப்புக்கொண்டு திருப்பாற்கடலருகேசென்றுபார்க்குமிடத்து வஞ்சகத்தினாலதனைக் கருமையாகும்

வண்ணஞ்செய்து வென்றாள். அன்றுமுதல் யானிவட்குத் தாதியாயினேன்; என்மகனாகிய நீயுமிவர்களுக்கு அடிமையாயினை" என்றனள்.

அதுகேட்ட கலுழனும் மனம்மிகவருந்தி "அன்னாய், இவ்வடிமை நீங்குதற்கு உபாயம் யாது விரைந்து சொல்லுதி" யென்றனன். தாயுமதனைக்கேட்டு "மகனே, முன்னே நாஞ் சாபநிவிர்த்தி குறித்துப் பேசிக்கொண்டதென்று, நீயுபாயமாக அவள் புத்திரர்களாகிய சருப்பங்களைக்கேடகுதி" யென்றனள். கலுழனுமதுகேட்டவுடனே சருப்பங்களையடைந்து, தலைவர்களே, எனது தாய் சிறையினின்றும் நீங்கும் பொருட்டு நீங்கள்விரும்பியதெவையோ அவற்றைச் சொல்லுதிர் அதனைவிரைந்து செய்து சிறையை மீட்டுக்கொள்ளுவேன்" என்றனன். சருப்பக்குழாங்களதனைக் கேட்டுக் "கலுழனே, நீ தேவருலகிற் சென்று தேவாமுதங்கொண்டு வந்துதருவையேல், உனதன்னை சிறையினின்றும் நீங்குவள" என்றனர். கலுழனுமதுகேட்டு மகிழ்ந்து தன்றாயை நோக்கி "அன்னாய், உன்சிறை நீக்கும்பொருட்டுத் தேவாமுதங் கொண்டுவருவதற்குத், தேவருலகஞ் செல்கின்றேன், வழியிலே பசியாறும் வண்ண மேதேனுமுணவு தருகுதி" என்றனன். வினதையும் "என்னருமைமகனே, இது மிகவுநன்று, தேவாமுதமெடுத்து வரவிரும்பினையாயின், வழியில் வசிக்கும் வேட்டுவர்களை யுத்தஞ்செய் தள்ளியுண்டு வருகுதி. அவருள் ஒருவிப்பிரன் வேடுவப்பெண்ணொருத்தியை விரும்பியங்கிருக்கின்றான அவனைக் கொலைசெய்யாதே. அக்கினி முதலிய தேவர்களெல்லாரும் நின்பக்கமாகி யுனதுறுப்புகளனைத்தையுங் காவல செய்குவர்" என்றாசீர்வதித்து வழிக்குணவுங் கொடுத்து விடுத்தனள்.

கலுழனுந் தாயினதாசிர்வாதம் பெற்று, மனமகிழ்ந்து தேவலோகத்தை நோக்கி விரைந்து சென்று வழியில் வசிக்கும்வேடர்களனைவரையும் வாரி வாயிலிட்டதுக்குமிடத்து விழுங்கப்பட்டுக் கழுத்தழலிற்சென்ற பிராமணன் கனல, அதுவே தாய்விலக்கும்படி சொல்லிய விப்பிரனென்றறிந்து அவனையுமிழ்ந்து "விப்பிரனே, நீ போகுதி" யென்றனன், விப்பிரனும் "ஐயனே, எனதுபாரியாகிய வேடுவிச்சியையும் விடுக்குதி" என்றுவேண்டினன். கலுழனும் அவளையுமுமிழ்ந்து "விப்பிரனே, இனி நீ இங்கேயிராதேகுதி" யென்றனுப்பிச் செல்லுமிடத்துக் காசிபமு

னிவரைக் கண்டுவணங்கினன். காசிபமுனிவரும் "மகனே, நீஎங்
குச் செல்கின்றாய்" என்றனர். "ஐயனே, எனதுதாய் மாற்றாரு
க்கடிமையாகி வருந்துகின்றாள், அதுநீக்குமாறு தேவாமுதங்
கொணரச் செல்கின்றேன், ஐயனே, பசிப்பிணி வருத்துதலால்
சிறகுகளுஞ்சோர்ந்தோய்கின்றன. வழியிலெதனையோ வேடரைப்
புசித்தும் பசிதீரவில்லை அதுநீங்குமாறு தேவரீர் சிறிதருளவே
ண்டு" மென்றனன். காசிபமுனிவரு மதுகேட்டுச் சொல்லுவார்
"கலுழனே, முன்னாளிலே, விபாவசுவென்னும் பெயரையுடை
யபிராமணனுக்கும் அவன் தம்பியாகிய சுப்பிரதீகனுக்கும் பகை
யுண்டாகிஇருவரும் பொருட்பங்கு காரணமாகச் சண்டையிட்
டுக் குரோதமுடையவராய் யொருவருக்கொருவர் மாறிச்சாபமி
ட்டனர். தம்பி சுப்பிரதீகனுடைய சாபத்தினால், தமையன் ஆறு
யோசனையுயர்ச்சியும் பன்னிரண்டுயோசனை பருமையுமுடைய
கல்லானையாயினான். தமையன் விபாவசுவென்பவனுடையசாபத்
தினால், தம்பி மூன்றுயோசனை யுயரமும் பத்துயோசனைபருப்ப
முமுடைய ஆமையாயினான். அவ்விரண்டுமித் தடாகத்திலே யி
ருந்து முன்னைக் கோபாவேசத்தாற் போர்விளைக்கின்றன. மைந்த
னே, நீ அவ்விரண்டையு முனதலகினாற் கவ்வி யுண்டு பசியை
யொழித்துத் தேவுலகடைந்து அமுதகலசத்தை யெடுத்துக்கொ
ண்டு வருகுதி" என்றனர். கலுழனுந் தந்தையைவணங்கி விடை
கொண்டுவிரைந்துசென்று பேருருக்கொண்டு ஆமையையும் யா
னையையுந் தனது காலினாற்றூக்கிமேலெழுந்து விளம்படம் என்னு
ம்பொய்கைக் கரையை யடைந்துழி, அதன்கரையினிற்கும் உ
ரோகிணி என்னும் பெரியகிளைகளையுடைய விருக்ஷமானது கலு
ழனைநோக்கிச் சொல்லுகின்றது, "ஓ! கலுழனே, நூறுயோசனை
யுயர்ந்த வலியகிளைகளையுடைய வெனது கொம்பரிலே நீயேறி
யிருந்து யானையையு மாமையையு முண்டிளைப்பாறிச் செல்லுதி
யெனவேண்டிற்று. அதுகேட்ட கலுழனு மகிழ்ந்து அக்கொம்ப
ரில் வந்திருந்தனன். அம்மரக்கொம்ப ரவற்றைத் தாங்கலாற்றா
தொடிந்து விழவும் கலுழனவன், அக்கொம்பரிலே வௌவா
ல்போலத் தூங்குகின்ற வாலகில்லிய முனிவரைக் கண்டு "இக்
கொம்பர் கீழே விழுமாயினிவரும் விழுந்து வருந்துவாரென்றஞ்
சி அக்கொம்பரையுந் தூக்கிக்கொண்டாகாயத்திற் செல்லுவதை
க்கண்ட காசிபமுனிவர் தனது புத்திரனைநோக்கி "மைந்தனே,
இந்தமரக்கோட்டை பரந்தமலை மீதிலெறிந்து போடாது மிரு
துவாக வைக்குதி" என்றனர். கலுழனுந் தந்தையினது சொற்

றவன்று அம்மரக்கொம்பை மலைமீது மிருதுவாகவைத்து யா ளையையும் ஆமையையுமுண்டு பசியொழிந்து தேவலோகத்திற் சென்றனன்.

இந்திரனானவன் தனது தேவலோகத்திலே பலவித உற்பாதங்கணிகழக்கண்டு தனது குருவைநோக்கி "ஐயனே, இங்கே பலவித வுற்பாதங்கணிகழுகின்றனவே யிஃதென்னை! ஆராய்ந்து சொல்லுக" வென்றனன். அதுகேட்ட குருவும் பலமுறை யோசித்து இந்திரனைநோக்கி "இந்திரனே, முற்காலத்திலே தசப்பிரமாக்களுளொருவராகிய காசிபமகாமுனிவரானவர், ஒருயாகத்தைச் செய்து அதற்குவேண்டிய உபகரணங்களைக்கொண்டு வரும்படி மற்றைய முனிவர்களையுஞ் சித்தர்களையும், இயக்கர்களையும், கந்தருவர்களையுங், கின்னரர்களையுமேவி வாலகில்லியரைப் பண்ணிகாரங் கொண்டுவரும்படி யேவினர். அவர்களவ்வாறே கொண்டுவருமிடத்துப் பெருவிரலளவு சிறியவடிவுடைய வாலகில்லியர்கள் பெருத்த பண்ணிகாரச்சுமைகளைத் தலையிலே வைத்து வரும்பொழுது பசுவினது குழப்பமிழ்ந்திய நீரிலே வடிவமுழுதுந் தாழும்படி யமிழ்ந்தி வருவதைக்கண்டு நீ சிரித்தனை. அதுகண்ட வாலகில்லியர்கள் கண்கள் பொறியெழும்பக் கனன்று உனக்குவிரோதியாக வொரு புத்திரனுதிக்க வென்று நினைந்து அப்பண்ணிகாரங்களை அக்கினியிலோமஞ் செய்தனர். அதனாலே காசிபமகாமுனிவரிடத்தில் ஒருபக்கச்சிறகினாலுலகத்தை மூடுகின்ற பெருவலிபடைத்த கலுழன் பிறந்தனன். அவனே நீவைத்திருக்குமமுதத்தைக் கவருமாறு வருகின்றனன். அதனாலுற்பாதம் நிகழுகின்றது" என்றருளினார்.

அதுகேட்ட இந்திரனும் அக்கினியாதி முப்பத்துமுக்கோடிதேவர்களைநோக்கி "தேவர்காள், பறவைவேந்தனாகிய கலுழன் அமுதமபகரிக்கும் பொருட்டு யுத்தசன்னத்தனாய் வருகின்றான். ஆதலால் நீவிர் அமுதத்தையெடுக்க வொட்டாது காக்குதிர்" என்றனன். அதற்கு உடன்பட்ட அக்கினிமுதல் முப்பத்துமுக்கோடி தேவர்களும் மதத்தயானையினது வரவைத்தடுக்க முயன்ற குறுமுயற்குழாம்போல அமுதத்தை வளைந்துகாவலாய் நின்றனர்.

கலுழனானவன் மலைகள் வேர்பறிந்து சாயவும், உடுக்கள் ஆலங்கட்டிபோலச் சிதறவும், ஆயிரகோடி காததூரத்துக் கப்பாலுள்ள அண்டங்கள் கிடுகிடெனவுங் கொடிய பெரிய சிறகுகளை வீசிவந்தனன். தேவர்கள் அவனது வரவைத் தூரத்தே கண்டு மிகவுமஞ்சி "ஐயையோ! மனுடர்கள் போல அச்சமுற்றவழி மூடும்படியான கண்களைப்பெற்றேமாயினிவனைக்கண்டிப்பெரிது நாமஞ்சவேண்டுவதில்லையே" யென்றனர். தேவர்களிங்ஙனமச்சமுற்று அமுதத்தைச் சூழ்ந்து நிற்குமளவில், கருடன் விரைந்து வந்து பலகிளைகளையுடைய மரங்களை ஒரு குடாரந்தறிப்பதுபோலத் தனதலகினா லந்தேவர்களனைவரையுங் கொத்தியிழுத்துத் தறித்தெறிந்தனன். எறிபட்ட தேவர்கள் வெம்பித் தங்கள் கைப்படைகளைச் சிதறினர். கருடன் றன்மேல் வந்துவிழும் படைக்கலங்களனைத்தையுஞ் சிறகுகளினாலுங் கால்களினாலு மூக்கினாலு முதறிப்பிடித்து முரித்தெறிந்தனன். அங்ஙனமெறிதலுந் தேவர்கள் சிதறித் திகாந்தரங்களில் வீழ்ந்தனர். இவனது சிறைக்காற்றிலெழுந்த சுவர்க்கலோகமின்னும் வீழாமலந்தரத்திலிருக்கிறது. தேவர்கள் அதுசமையத்திற் பெருங்கோபமடைந்து பிண்டிபாலம், சக்கரம், வாள், இருப்புலக்கை, பட்டணம், மராமரம், தாறு, சிறுசவளம், தண்டு, வேல, மழு, கணயமுதலாகிய பலவித ஆயுதங்களைக் கருடன்மீதெறிந்து ஆரவாரித்தார்கள். அது கண்ட கலுழன் அவைகளனைத்தையுஞ் சிறகாலடித்துப் பூமிகடுங்கும்படி யெறிந்து பூதூளிகளை யெழுப்பி இமையாத கண்களைப் புதைக்கத் தேவர்களதனைத் தாங்கலாற்றாதுகண்ணீர் சொரிந்து மயங்கித் திசைதெரியாமல் வருந்தி வாயுதேவனாற் பூதூளியை மாற்றினர். கருடன் மிக்க கோபமடைந்து சூரியர்களையும், தேவமருத்துவரையும், உருத்திரர்களையும் வசுக்களையும் மூக்கினாற் குத்திக்கிழித்துத் துரத்தினன். அதுகண்டதேவர்களனைவரும் பின்னிட்டோடினர். அவருள்ளே அக்கினிதேவன் பெருங்கனல்சொரிந்து அஞ்சாது நின்றனன். அவனைவெல்லும்படி கலுழன் ஆயிரமுகங்கொண்டு அனேக நதி நதங்களைப் பானஞ்செய்து வந்து அக்கினிதேவன்மீதுசொரிந்தனன். அக்கினிதேவன் தக்கனது யாகத்திலே கரியாயவாறுபோல வொளியிழந்து கரியாயினன். வேதர்களனைவரும் அக்கருடனுக்குத் தோற்றசங்கதிக்குச் சாட்சியாமாறு போலக் கரி

யாகி யக்கினிதேவனுந் தோற்றபின்னர்க் கருடனு மமுதமெடுக்கப் போகுமிடத்து, அங்கே அக்கினிப்பொறிகள் சிதறும்படியோர் சக்கரஞ் சுழன்றுகொண்டு கிடப்பக் கண்டு, தனது பேருருவையொடுக்கி, யணுவுருபமாகி யுள்ளேநுழைந்தனன். அங்கே, இரத்தினம்பிரகாசிக்குஞ் சுடிகையுடனே பிளந்தவாயையும், நஞ்சுகக்கும் பற்களையும் பட்டபொழுதே யாவரையுங்கொல்லும் பெருமூச்சையுமுடைய இரண்டு சர்ப்பங்களிருப்பக் கண்டு, தனதலகினாலவற்றைக் கொத்திக் கார்த்திகை விழக்குக்கொப்பாகச் சுற்றி நிலத்திலடித்து அவற்றுயிரையுண்டு, உடம்பையும் விழுங்கிக் கடத்தை யுடைத்து அமுதத்தை யள்ளிக்கொண்டு ஆகாயத்திலெழுந்தனன். விட்டுணுமூர்த்தி யவ்வயினதேயனைக் கண்டு, "ககபதியே, உனது பராக்கிரமத்தைக் கண்டு மெச்சினேன். நீ நினைத்தவரங்களைக் கேட்குதி" யென்றனர். கருடனு மிகநன்றென்று "பெருமானே, நீ ரெப்பொழுது மென்மீதிவருதல் வேண்டும்; அன்றியும், எக்காலத்தும் நரைதிரை மரணமிலாதிருக்கவும் வரந்தருதல் வேண்டு" மென்றனன் விட்டுணுவு மனமகிழ்ந்து அவ்வரங்களைக் கொடுத்தனர். கருடன் அவ்வரங்களைப் பெற்றபின்னர், விட்டுணுவைநோக்கி, "பகவானே, நீருமென்னிட மொருவரம் பெறுக" என்றனன். விட்டுணுவு மகிழ்ந்து "ககபதியே, நீ வாகனமாதலன்றி யெனது தேரின்மீது துவசமுமாகுதி" யென்றனர். கருடனு மப்படியே கொடுத்தனன். இருவருமிங்ஙனமே வரங்களை யொருவருக்கொருவர் மாறிக்கொடுத்து, ஆகாயமார்க்கமாக வெழுந்து சென்றனர்.

இந்திரனானவன் கருடன்மீது பெருங்கோபமடைந்து "அருந்தவ வாணரைப் பொருந்தாப்பூலோகப் பறவை வெல்லுதலுமாயிற்றே" யென்று புழுங்கி விரைந்துசென்று கருடன்மீது குலிசப்படையை விடடெறிந்தாரவாரித்தனன். அதுகண்ட பறவைவேந்தன் இந்திரனை நோக்கி "இந்திரனே, யுனது குலிசப்படை யென்மீது படுகினும் படாதொழியினும் விசேடமில்லை; இதனாலெனக் கபாயம் வருவதில்லை; ஆயினுமுனது குலிசம் வெற்றியடையுக" வென்று தனதிறகிலொன்றை யிலையுதிர்ப்பது போலுதிர்த்தனன். அந்த இறகினது பேரொளியினாலே தேவலோகமுழுதும் பேரொளி குறைந்துபோயிற்று. அதுகண்ட தேவர்கள் பேரதிசயமடைந்தனர். ஆதலினாலவனைச் சுபன்னனென்று கூறுவர் பின்பு கருடன் பெருங்கெறுவமடைந்து இந்திரனை நோக்கி "இந்திரனே, இங்குள்ள எல்லாவற்றோடு

னுமன்னையு மேந்தும் பராக்கிரமுமுடையேன். அன்றியு மென்னை நிகராகிய ஆயிரமிந்திரர்களொருங்கு திரண்டுவரினு மென்னை வெல்லமாட்டார்கள். நீயோ வெனக்கெதிராகவல்லை. ஆதலின் னீயென்னோடெதிர்த்து இறவாமலோடுதி" யென்றனன் இந்திரனு மதுகேட்டுப் "பறவை வேந்தே, நீ சொல்லியது நியாயமாயினும், பெறுதற்கரிய தேவாமுதத்தை நீ யினிதாகக் கொணர்ந்து பிறருக்குக் கொடுத்தால் அவர்களதனை யுண்டு சாவாது நிலைத்து எங்களோடு யுத்தஞ்செய்து மிகவும் வருத்துவர். ஆதலினால் கக பதியே, யாங்களுய்யும் வண்ண மமுதை யிங்கேவைத்துச்செல்லுதி" எனப் பலமுறைவேண்டினன். இந்திரனது வேண்டுகோளுக்கிரங்கிய கருடன் மனமிகமகிழ்ந்து, "இந்திரனே, யானொரு சபதத்தினால் சகோதரர்களுக்குத் தருவேனென்று வாக்களித்துவந்தேன், அதன்பொருட்டுக் கொண்டுசென்று அவர்கள்காணவைப்பேன், நீ அவ்விடத்துக் கவர்ந்துகொண்டு செல்லுதி" யென்றனன். இந்திரனதுகேட்டு மனமகிழ்ந்து, கருடனைநோக்கி "கருடனே, அது மிகவும் நன்று! நீ வேண்டிய வரங்களைக் கேட்குதி" என்றனன். கருடனு மதுகேட்டு அண்ணலே, எனது தாய் வஞ்சகத்தினாலே நாகர்க் கடிமையாயினள். அவளது மக்களெனக்குச் சத்துருக்கள். அவர்களைக் கொல்லும்படியான வரந்தருதல்வேண்டு" மென்று வரத்தைப் பெற்று, அமுதத்தையுங் கொண்டு விரைந்து தாயிடங்கொண்டுவந்து சருப்பங்களைநோக்கி "சருப்பங்காள், நீங்கள் விரும்பிய அமுதங்கொண்டுவந்தேன். நீவிர் சாவதானமாகவைத்துச் சரீரசுத்திசெய்து நித்தியகருமங்களை முடித்து அமுதபானஞ் செய்மினென்று கொடுத்தனன். சருப்பங்களதுகேட்டு மனமகிழ்ந்து கருடனே, நாமமுதமொப்புக்கொண்டோம், உனது தாயு மின்றே யடிமைத்தொழிலினின்றும் நீங்கினள். நாம் ஸ்நானஞ் செய்து நித்திய கருமமுடித்து வருகின்றன" மென்று அமுதத்தைத் தருப்பாசனத்தில் சேமித்துவைத்து நீங்கினர். இந்திரனுங் கருடன் அமுதங்கொண்டு வரும்பொழுது அவன் பின்னாகவந்து மறைந்து காத்து நின்று சருப்பங்கள் ஸ்நானஞ்செய்யச்சென்ற சமையம் பார்த்து அமுதத்தை யெடுத்துக்கொண்டு மறைந்துபோயினன். மதுரமான பழங்களையுண்ணும் பழக்கமுடையார் எட்டிப்பழத்தை நுகருவாரோ! பிறருக்கு நஞ்சைக் கொடுப்பவர்களுக்கு அமுதங்கிடைக்குமா! அமுதபானஞ்செய்யும் விதியில்லாத சருப்பங்க ணியதிகளை முடித்துவந்து அமுதத்தைக் காணாமல் திகைத்தேங்கி மனமயங்கி, அமுதாசனமாகிய தருப்பையை நக்கி நாக்குக்கிழிய

ப்பெற்று வருந்தினர். அமுதம்வைத்த ஆசனமாகிய தருப்பைச் செடி மிகவிளக்கமடைந்தது. தாயை மிகவு மகிழச்செய்த கருடனானவன், மிகக்கோபமடைந்து தந்தையுரையை மறுத்து வஞ்சனையினாலே தாயைத் தாதியாக்கிய நீவிர் தந்தைதாய்க் குரியரல்லீரென்று சாபமிட்டு விரும்பியவிடத்தே போயினன். கத்துருவும் புத்திரர்களுந் தந்தையாகிய காசிபரை யடைந்து வணங்க, அவர் இவர்களது முகம்பாராது கோபித்து "நீ வினதை மனம் வருந்தும் வண்ணம் வஞ்சகத்தினாலே தாதியாக்கிய வுன்னைப்போலவொரு தீவினையைக் கண்டிலேம். நீ யென்னிடம் வருதற்குத் தகுதியுடையையல்லை. உனது வஞ்சகமோ நின்மக்களது கண்டத்திற் கறையாய் விளங்குகிறது. புலவர்கள் பெண்களை வஞ்சியர்களென்பது அவர்களது இடையை நோக்கியன்று இந்த வஞ்சகங் குறித்தல்லவா! உனது சகோதரி யுனக்கடிமையானால் உனக்கது இழிபன்றோ! தேவர்கள் கருடனாலபசயமடைந்ததற்குக் காரணம் நீயல்லவா? உனதகத்தேயுள்ள சூதன்றோ உள்ளத்துளடங்காம லுரத்தே வெளிப்பட்டிருகொங்கைகளாயின. யாவராவது வஞ்சகருடைய பேர் சொல்லினும் பெரும்பாதகமாகுமே. இங்ஙனமாய வஞ்சகரோடு பேசினும், அவரைக் காணினும், அவரோடொருபந்தியிற் கலந்துண்ணினும், அவர்கள் வீட்டில் வசிப்பினு மீளாநரகடைவர். இந்தமகாவஞ்சகரை நினையாப்பிரகாரம் யாவர் காண்பரோ அவர்கள் நீரையேனும் அக்கினியையேனுந் தரிசித்துச் சுத்தராதல் வேண்டும். கோணுதலைக் குளத்தேயன்றி யுளத்தேயுமுள்ள நின்னைக் காண மிக வருத்தமுறுகின்றேன். நாணமாதி நாற்குணமுமிழந்த நீ யெனது முன்னிலையி னிற்குந் தகுதியுடையையோ! கத்துருவஞ்சகியே, யென்முன்னில்லா தேகுதி வினதையே, நீ நன்றாகவாழுதி" யென்றருளினர்.

கத்துருவு மிதனைக் கேட்டு மனமேங்கி நாணித் தனது நாயகனது உபய திருவடிகளிலே சரணகதியடைந்து கண்ணீரினால் நிலத்தைச் சேறாக்கிக் கூந்தலிலே புரளுமாறு விழுந்து புலம்பினள். அதற்குங் காசிபமுனிவர் சிறிது மிரங்காதவராக்ப புறக்கணிக்க, வினதையானவள் தன்னாயகனை வணங்கி "எனது பிராணநாயகரே, தேவரீர் குற்றம்பார்க்கில் பூமியிலே யெது சுத்தமாகும். பெண்பேதைகள் நன்மை தீமை யறிவாரகளோ! அறியாமையினா லிவள்செய்த பிழையைப் பொறுக்குதிர் உயிர்த்துணையாகிய நாயகர் வெறுத்தொழிப்பரேல், பெண

கவிறப்பதன்றிப் பிழைப்பது முளதோ! பின்னுந் தேவரீரைச் சரணடைவதேயன்றி இவள் வேறெங்ஙனஞ் செல்வளோ!" என்றவருக்கு அன்பு பிறக்குமாறுரைத்தனள். அதனைக் காசிப மகாமுனிவர் கேட்டுச் சிறிது மனமிரங்கி "வினதாய், இவளது மனமோ மிகக்கொடிது. அதற்கொருசாந்திசெய்தாலன்றி மும்முறையும் நின்னுணைப்படி யிவளை விரும்பேன்" என்று மறுத்தனர். வினதையு மதுகேட்டு எனது பிராணநாதரே, இவளது குற்றத்துக்குத் தக்க பரிகாரத்தைத் திருவாய்மலர்ந்தருளுக. இவள் தேவரீரது கட்டளை தவறாது செய்குவள். என்னுளுந்தேவரீரது உரிமையையே இவளுக்கு வேண்டும்" 'தீமைசெய்தவருக்கும் நன்மையே செய்' என்றபடி தன்மனதிலே சிறிதுங் களங்கமில்லாத வினதையானவள், தன்னை வருத்திய கத்துருவுக்குதவியாக மிகவுமிரந்து வேண்டினள். இங்ஙனமே காசிப மகாமுனிவர் வினதையினது வேண்டுகோளுக்கிசைந்து, சிற்சபாநடேசமூர்த்தியைத் தியானித்து ஞானதிருஷ்டியாலுணர்ந்து, "பெண்ணே, பூமியிலே தென்றிசையிலே சமுத்திரதீரத்திலே மேலாகிய மோட்சத்தைக் கொடுக்கிற புல்லக்கிராமத்திலே பாலோடையென்றொரு தீர்த்தமுள்ளது, அது குற்றமனைத்தையும் நீக்கத்தக்கது. அதிலே இவள் சென்று விதிப்படி சங்கற்பித்து ஸ்நானஞ்செய்யி லிக்குற்றத்தினின்றும் நீங்குவள். வேறு பதினாயிரம் பிராயச்சித்தங்கள் செய்யினும் நீங்காது" என்றருளினர். கத்துருவு மதுகேட்டு அவரை வணங்கி விடைபெற்றுத்தனது புத்திரர்களாகிய சருப்பங்களோடும் பாலோடையை நாடிச்சென்று விதிப்படி மூன்றுநாள் ஸ்நானஞ்செய்து நாலாநாளும் ஸ்நானஞ்செய்தெழுந்தவுடன் அசரீரிவாக்கானது "பெண்ணே, நீ சலஞ்சாதித்தகுற்றத்தோடு கருடசாபமும் நீங்கியது. இனி நீ அன்புடையளாய் மரீசி புத்திரராகிய காசிப மகாமுனிவரது கட்டளை தவறாது நடக்குதி. அவரு முன்னை விரும்பித் தழுவுவர்" என்றருளியது. அது கேட்டவுடனே கத்துருவு மகிழ்ந்து ஆகாயவாணியைத் துதித்து பாலோடையையும் வணங்கி அங்குநின்றுந்தனது புத்திரர்களோடு நீங்கிக் காசிபமகாமுனிவரை வந்து வணங்கினள். அவரு மிகமகிழ்ந்து கத்துருவைத் தனது பணிவிடைக்குரியளாக்கினர்.

முனிவர்காள், இச்சரித்திரத்தை யுங்களுக்குச் சொல்லினோம் இதனை வாசிப்பவர்களுங் கேட்பவர்களும் பாலோடையிலே

ஸ்நானஞ்செய்த பயனையடைந்து தேவசங்கையிலே முழுகிய பயனையும் பெற்று அசுவமேதயாகபலனையு மடைவர்.

மீனுலாவுமதிக்குடைமாரவேள்வேகமோடுபிறக்கிடவீறுசீர்
ஞானமாதவிரிக்கதைகாதினூடுவோர்கள்படிப்பவர்நாளுமே
யூனுலாவமுதத்தடமாடினோராவர்தாமடைகிற்பர்சளாசிலா
வாலியாறுகுளித்திடுசீரொர்டேவாசிமேதமியற்றியபேறுமே.

சுத்துருச்சருக்க முற்றிற்று.

---

## கவிதீர்த்தச்சருக்கம்.

சூதமகாமுனிவரானவர் பின்னும் முனிவர்களை நோக்கி, "முனிவர்காள், கந்தமாதனமலைச்சார்பிலே குரங்குகளானவை கூடி மிக்கவிருப்பத்தோடு கவிதீர்த்தமெனப் பெயர்கொடுத்துத் தங்கள்பேரினாலொரு தீர்த்தமுண்டாக்கின. உலகத்துயிர்களுக்கு அது மிக்க வுபகாரமாகவிருக்கும். இராவணன் முதலிய இராக்கதர்களிறந்தபின்னர், குரங்குகள் கூடிவந்து கிண்டி அதிலே தீர்த்தமாடிக் கரையேறின. அதிலே ஸ்நானஞ்செய்தவர்கள் பஞ்சமகாபாதகங்களும் நீங்கி மோக்ஷமடைவர். அவர்கள் வறுமை, துன்பமென்பவைகளை யடையார். அதிலே ஸநானஞ்செய்யவேண்டுமென் றெழுந்தவர்கள் நரகடையாது சுவர்க்கமடைவார். அதற்கிணையானதீர்த்தம் பிறிதில்லை. குரங்குகள் இராமனை வணங்கி "ஐயனே, எங்களுக்கொருவரந் தரும்பொருட்டுத் தேவரீரை யாசிக்கின்றேம்" என்றதை, ஸ்ரீராமன் அன்பு கொண்டு "வானரங்காள், நீங்கள் விரும்பிய வரத்தைத் தருகின்றேன். கங்கை பிரயாகை யாதிய பூமியிலுள்ள தீர்த்தமாடியபலனும், நான்குவேதங்களை அத்தியயனஞ்செய்தபலனும், உமாமகேசுரரையும் விட்டுணுவையுந் தரிசித்தபலனும், விதிப்படி பலவித யாகங்களைச் செய்தபலனும், பலவித மந்திரசெபபலனும், இதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தவரைச் சேரும்" என்றருளினர். குரங்குகளியாவு மகிழ்ந்தன. பிரமன், சூரியன், சந்தி

ரன், அக்கினி, நிருதி, வருணன், வாயு, இயக்கர், விச்சுவதேவர், வி௬க்கள், சாத்தியராதிதேவர்கள், குற்சர், அத்திரி, பிருகு, கௌதமர், அகத்தியர், கண்ணுவர், கௌசிகர், சுதீக்கிணர், பராசரர், சனகர், நாரதர் முதலிய முனிவர்களும், ஸ்ரீராமன் கொடுத்த வரத்தினது பெருமையை வழுத்தித் தாங்களும் அன்று அதிலே விதிப்படி முழுகி "இத்தீர்த்தம் நெடுங்காலம் நிலைத்திருக்குக" என்றுசீர்வதித்தனர். மோக்ஷமடைய விரும்புவோர், கவிதீர்த்தத்திலே முழுகுவர்.

முனிவர்காள், அரம்பையென்பவள் கௌசிகமுனிவரது சாபத்தினாற் கிடைத்த கல்லுருவமொழிந்து தேவருலகடைந்தனள். அவள் கல்லுருவமடைந்ததும் கவிதீர்த்தத்தின் முழுகி அஃதொழிந்த சங்கதியும் நீவிர் கேட்கும் விருப்பமுடையீராதலிற் சொல்லுதுங் கேளுங்களென்று சொல்லுவார்.

முனிவர்காள், பூமியிலே குசிகர்குலத்திலே விசுவாமித்திரனென்னும் பெயருடைய மகாராசனென்பவனொருவனிருந்தனன். தனக்குநிகரில்லாத வலியுடைய அவ்வரசன், அளவில்லாதசேனைகள் சூழப் பூலோகத்திலுள்ள பலவளப்பங்களையு மாராயும்பொருட்டுப் பலவிடங்களிலுந் திரிந்துலாவி வசிட்டமகாமுனிவரது ஆச்சிரமத்தை யடைந்தனன். வசிட்டமகாமுனிவரும் அரசனது வரவை யெதிர்கொண்டுபசரித்துக் காமதேனுவினால் அரசனுக்கும் படை சேனைகளுக்கும் விருந்தளித்து மகிழ்வித்தனர். அரசன்றனது சேனைகளோடு விருந்துண்ட சுவைமிகுதியினாலே யதனை வருவித்த காமதேனுவைக் கவரநினைத்து, வசிட்டமுனிவரது சன்னிதானத்தை யடைந்து அக்காமதேனுவைத் தரும்படி கேட்டனன் அவர் அது தகாதென மறுக்க அரசனுங் காமதேனுவினது வலியை நோக்காது அதனையிழுத்துக்கொண்டு போகுமாறு சுற்றிவளைக்கக் காமதேனுவு மளவிலாத மல்லர்களையுண்டாக்கி யரசனது படைகளனைத்தையு மழித்தது. அரசனும் பெரிது மாச்சரியமுற்றுச் சிவபெருமானை வழிபட்டுத் தோத்திரஞ்செய்யச் சிவபெருமான் பிரசன்னராய்ப் பிரமாஸ்திரமுதலிய பல்வித படைக்கலங்களையும் வரங்களை

யுங் கொடுக்கப்பெற்றுச் சென்று வசிட்டமகாமுனிவர்மீது படைக்கலங்களனைத்தையுஞ் சொரிந்தனன். வசிட்ட முனிவரும் தான்வைத்திருந்த பிரமதண்டத்தை முன்னாகநட்டு அவைகளனைத்தையுந் தடுத்தனர். அரசனுந் தனதுபடைகளழிந்த தன்மையை நினைத்து நாணமுற்று ஒருவேதியருக்கு அனேகமரசர் கூடினாலுமொப்பாவரோ!! எனது ஆயுதங்களனைத்தையு மிவரது பிரமதண்டு தடுக்குமானால் இவரெதிர் செல்லில் யாவர் முன்னிற்பர். வெட்கமற்று நாமுலகரசாளுவது பெருமையன்று" என மனமிகவருந்தி இனிப் பிராமணரது சிறப்பைப் பெறும் பொருட்டு அருந்தவஞ்செய்வேனென்று காட்டிலேபோய்க் கீட்டிசையிற் றவஞ்செய்தனன். அங்கே பலபல இடையூறுகணிகழ்தலு மவ்விடத்தை விடுத் தெற்குமேற்காகிய திசைகளிற்சென்று தவஞ்செய்துங் கைகூடாமல் வடதிசையை யடைந்து இமயமலைச்சாரலில் கௌசிகையாற்றங்கரையிலே பஞ்சேந்திரியங்களையு மடக்கி யுணவையொழித்து அனைவரும் வியக்கும்படி ஆயிரந்தேவவருடம் பஞ்சப்புலன்களாகிய புலிகணுழையு முழைஞ்சுகளையடைத்து மனமாகிய கயிற்றினால் துரியத்திலே பிராணவாயுவாகிய பாம்பைப்பிடித்துக்கட்டிக் கோபமாகிய யானையைத் தளைபூட்டிப் பகைநட்பு நொதுமலில்லாமல ஆவுரோஞ்சு தறியாகி ஆனி ஆடிகளி லக்கினிமத்தியிலும், மாசிபங்குனியில் தண்ணீரிலும் ஆவணிபுரட்டாதியில் தான் கற்குங் கலைபபோர்வையோடு வெளியிடத்திலேயுமிருந்து தவக்கொடிபோலத் தனது கையை யுயர்த்தி மிக்கவிருப்பத்தோடு மருந்தவமிழைத்தனன்.

இந்திரனானவன் விசுவாமித்திர முனிவர் செய்யுந்தவத்தை யறிந்து, தேவரம்பையை நோக்கிச் சொல்லுவான் "அரம்பையே, விசுவாமித்திரன் கௌசிகியாற்றங்கரையிலே யருந்தவஞ் செய்கின்றான், உனது கருங்கண்ணினால் பலவிதலீலாவினோதங்கள் செய்து அவன்செய்யுந் தவத்தைக் குலைக்குதி, பெண்கள்சிகாமணியே, உன்னை யொபபான வழகுடையவ ரெங்கேனு முண்டோ! நீ நினைத்தாலுன்னிடத்திற் சிக்காது மோக்ஷமடைபவர் யாவர்?" என்றனன். அரம்பையு மதுகேட்டுச் சொல்லுவாள். "மன்னாதிமன்னனே, கௌசிகமுனிவருமெனது கண்வலையிற் சிக்குவாரோ! அவரிடத்தில் நான் போகில சிவபெருமானோடு போர்செய்யப்புகுந்த மன்மதனடைந்தகதியே யெனக்கு

மாகும். விசுவாமித்திரமுனிவருடைய சரீரகாந்தியைக் காணவே நானஞ்சுகிறேன். இதுவொன்றைவிட்டுத் தேவரீர் வேறெதைச்சொல்லினுஞ் செய்வேன்'' என்று மறுத்தனள். இந்திரனதுகேட்டுச் சிறிது மனம்வருந்திப் பின்னரவள் மனதிலே படும்படியாகச் சிலசொல்லுவான். "கட்டிக்கரும்பே நீ யஞ்சாதே, உனக்குப்பின்னே மன்மதன் கருப்புவில்லோடும் இளவேனிற்காலத்தோடும் குயிலிசையாகிய வெக்காளத்தோடும் வருகுவன். நானு முனக்குத் துணையாகவருகிறேன். நீ சிறிதுங் கவலைப்படாது செல்லுதி'' என்றனன்.

தேவரம்பையு மவனது சொல்லை மறுக்கமாட்டாமல் சென்று, விசுவாமித்திரருக்கு முன்பாக மின்னற்கொடிவழுவியது போலத் தனதழகுமுழுதும் பிரகாசிக்கத் தோற்றிநின்றனள். வசந்தகாலம்வந்தது. குயில் கூவிற்று. மன்மதனும் கருப்புவில்லை வளைத்துப் பஞ்சபாணங்களைச் செலுத்தினன். விசுவாமித்திர மகாமுனிவர் தவஞ்செய்யுந் தனதுமனமொருப்படாமற் குலைவதைக் கண்டு கண்களை விழித்து எதிரேநிற்கு மரம்பையைக்கண்டு இது தேவேந்திரனுடைய சூதென்றறிந்து கடுங்கோபமடைந்து அரம்பையை நோக்கி "அரம்பையே, வீணாகவெனது கோபத்துக்கிடமானாய்; ஆதலால் பதினாயிரம்வருடங் கல்லாகக் கிடக்குதி. அந்தப்பதினாயிரம் வருடங் கடந்தபின்பு, ஆகமவேதங்களையறிந்த சுவேதமகாமுனிவரால் கல்லினது மேனியை விடுத்துத் தேவருலகஞ்செல்லுதி'' யென்று சபித்தனர். இங்ஙனம் விசுவாமித்திரராலே அரம்பை கல்லுருவமடைந்தனள். தவசிரேட்டர்களுக்கு வஞ்சகமியற்றி யாருலகத்திலே தப்பினவர்? அவளையேவித் துணையாய்வந்த இந்திரனும் மன்மதனும் அஞ்சியோடினர்.

விசுவாமித்திரரது சாபத்தினால் அரம்பையென்பவள் கல்லுருவமாகி அவரது பர்ணசாலையிலிருந்தாள். விசுவாமித்திரர் முன்போலத் தவஞ்செய்து பெரும்புகழை நிறுத்தி வசிட்டமுனிவராலே பிரமரிஷியென்றழைக்கப் பெற்றனர். அவராச்சிரமத்தினருகே அகத்தியமகாமுனிவரது மாணாக்கராகிய சுவேதமுனிவர் சிவகதியை விரும்பித் தவஞ்செய்தனர். அங்ஙனமவர் தவஞ்செய்யுமிடத்தொருநாள், அங்காரகையென்னுமரக்கியானவள்வந்து, சமுத்திரம்போ லாரவாரித்தெழுந்து, மலசலத்தால் முனிவரது சரீரத்தை யசுசிப்படுத்தினள். அதுகண்டு சுவேத

முனிவர் கண் சிவந்து கடுங்கோபமுற்று, அரம்பையாகிய கல்லைத் தூக்கி யவளுக்கெறிந்தனர். அவ்வரக்கி தென்றிசையிலுள்ள சமுத்திரக்கரையை நோக்கி யோடினள். அரம்பையாகிய கல்லும் பின்றொடர்ந்தது. தன்னைத் துரத்திவருதலைக் கண்ட அரக்கியானவள் ஓடியாற்றாது கவிதீர்த்தத்துள் விழுந்தனள். அரம்பையாகிய கல்லும் விரைந்து அத்தடத்துள்ளே விழுந்து அவள் தலையை யுடைத்தது. உதிர வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. அரக்கியு மிறந்தனள். அரம்பையானவள் முனிவரிட்ட சாபத்தின் காலவெல்லையிலே கவிதீர்த்ததில் முழுகிய புண்ணியப்பேற்றினால் சாபத்தாற் கிடைத்த கல்லுருவத்தை நீங்கித் தேவர்கள் பூமழைபொழியப் பேரழகுவாய்ந்து உருப்பசிமுதலாகிய தேவப்பெண்கள் மெச்சத் தூண்டாவிளக்குப போல வொளி சிறக்க விமானத்திலேறித் தனது சாபத்தை நீக்கிய கவிதீர்த்தத்தை வணங்கி, இராமநாதனையுந் தோத்திரஞ்செய்து தேவருலகமடைந் தின்புற்றனள். அரக்கியும் முற்சன்மத்திலே கிருதாசி யென்னும் பெயர்பூண்ட தேவதாசிகளுளொருத்தி; அவள் அகஸ்தியருடைய சாபத்தால் அரக்கியாகி நெடுநாளுழன்றுதிரிந்து புண்ணியவடிவாகிய கவிதீர்த்தத்திலே முழுகிய பேற்றினால் சாபநீங்கிச் சொர்க்கலோகமடைந் தின்புற்றனள்.

முனிவர்கள், கிருதாசி அரம்பையாகிய இருவரும் சுவேதமுனிவருடைய காருண்ணியத்தினால் கவிதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து சாபநீங்கி யின்புற்றனராயின்; நீவிருஞ்சரீரம் வருந்தியாவது கவிதீர்த்தத்திற் சென்று விதிப்படி ஸ்நானஞ்செய்து பேரின்பமடைவீர்களாக.

ஒருகிருதாசியரம்பையாகியவுவரிருவோர்களுமும்பருரினி
லிருடிசுவேதனதன்பினான் முனமிடர்படுசாபமகன்றுமேவினர்
வருமுறையர்வினிரந்தவாவியின்மனனெறுமேனிவருந்தியாயினு
மருமுனிவீர்களவிரும்பியாடுமினறநெறிநீடுநலங்களசேரவே

கவிதீர்த்தச்சருக்க முற்றிற்று.

## ௧௭ காயத்திரிசரசுவதி தீர்த்தச் சருக்கம்.

சூதமகாமுனிவரானவர் சவுனகாதிமுனிவர்களை நோக்கிச் சொல்லுவார்; முனிவர்காள், இன்னும் அங்கே காயத்திரி சரசுவதியென்னு மிரண்டுதீர்த்தங்கள் உள்ளன. அவை உலகத்திலுள்ளவர்களை யதிசுத்தஞ் செய்விக்கும். சொல்லுதற்கரிய மோக்ஷத்தைத் தரும். தமது பெருமையைப் படிப்பவர்கள் கேட்பவர்களது பாவங்களைக் கெடுக்கும். தம்மை நினைப்பார்க்குத் தருமங்களனைத்தையுந் தரும். அவர்களை நரகத்திலே விழுத்தாது சனனத்தையொழிக்கும். ஆதலினு லவ்விரண்டுதீர்த்தப் பெருமைகளனைத்தையும் நும்மனோருக்குச் சொல்லுவேன் கேளுங்கள். முனிவர்காள், பிரமாவின் மனைவியர்களாகிய சாயத்திரி சரசுவதி யென்னு மிருவரு மெக்காலத்து மங்கு பிரியாதிருப்பவராதலின், தமது பெயராற் றடாகங்களை வருவித்தனர். அவர்களெதற்காக வந்திருந்தனரென்பீரேல், விட்டுணுவின் புத்திரனாகிய பிரமன் தான்படைத்த சரசுவதியினது கலவியை விரும்பிப் பெருமயக்கமுற்றுப் பின்றுரந்தனன். சரசுவதியுந் தன்னைத் தொட்ருஞ்சங்கதியை யறிந்து நாணமடைந்து பெண்மானினுருவெடுத்தோடினள். பிரமனுங் கலைமான் வடிவுகொண்டு துரந்தனன். படைக்குந் தொழிலுடைய பிரமன் தான்படைத்த மகள்மீது பேராசைகொண்டு பின்றொடருவானானால் தருமத்தை யாவர் அநுட்டிப்பர்! தேவர்காள், "இத்துணைப்பெருமையுடைய பிரமன் இவ்விழிதொழிலைச் செய்யலாமா" வென்று இகழ்ந்தனர். சிவபெருமான் வேட்டுவ வடிவுகொண்டு பினாகமென்னும் வில்லை வணக்கி அதனிடத்தோரம்பூட்டிச் சரசுவதியாகிய பிணைமானை வலிதிற் புணரும் பிரமனாகிய கலைமானுக் கெய்தனர். பிரமனாகிய மானின்றலை வெட்டுப்பட்டுச் சோதிரூபமாகி நக்ஷத்திரமண்டலத்திலே மிருகசிரமாக வின்னும் விளங்குகின்றது. சிவபிரானுந் திருவாதிரை நாளாகி யின்னு மந்தமான்றலையை வருத்துகின்றார். சரசுவதி காயத்திரியாகிய இரண்டு பெண்களும், நாயகனாகிய பிரமனிறந்த பின்னர், அமங்கலிகளாகிப் பலவீடங்களிலுந் திரிந்துழலுவாராயித் திருமகளுந் திருமாலும், இந்திரனு மிந்திராணியுங் கலந்து

லாவுங் கோலாகலத்தைக் கண்டு நாணி யுடல் வெதும்பி, நாளுக்குநாள் வெழுப்படைந்து தங்கள் தனிமையை நினைந்து சோர்ந்து தங்கணாயகன் பின்பு தோற்றுமா றுபாயஞ்செய்துகொள்ளும் பேராசையுடையோராய்ப் பலசிவஸ்தலங்கடோறுஞ் சென்று பார்த்து விரும்பிய பேறுகளனைத்தையுங் கொடுக்கும் பெருமையுடையதாகிய கந்தமாதனமலைச்சாரலை யடைந்து தங்கள் பேரினா லிரண்டுதடாகமுண்டாக்கி அதிலே மும்முறை ஸ்நானஞ்செய்து சிவபெருமானைத் தியானித்துக் காமாதிகளைக் கடிந்து நித்தியோபவாசிகளாய் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்து அருந்தவஞ்செய்தனர்.

சிவபெருமானவ்விருவரது அருந்தவங்கண் டருள்செய்யுமாறு உமாதேவியாரும் விநாயகப்பெருமானும் சுப்பிரமணியப்பெருமானும் பக்கத்திலே வரத் தேவர்கள் போற்றப் பிரசன்னராயினர். காயத்திரி சரசுவதியாகிய விருபெண்களும் சிவபெருமானது வரவைக் கண்டு களிப்படைந்து, அன்புக்குறியீடுகளோடு புட்பாஞ்சலி செய்து பதறி அவரது திருவடியில் வீழ்ந்து நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்வாராயினர். "சூலாயுதகரரே, இடபக்கொடியுடையரே, கொடியிடைபாகரே, சருவசராசரங்கடோறுங் கலந்துங் கலவாதவரே, காலாதீதரே, புலித்தோலாடையுடையரே, சந்திரசேகரரே, தமது சொரூபத்தியானஞ்செய்வார்களுக்குப் பேரருளுடையரே, விநாயகர் சுப்பிரமணியருடைய தந்தையே, திருக்கயிலாயமலையையுடையரே, மேருவில்லையுடையரே, சந்திரனையுஞ் சருப்பத்தையும் பலகீக்கித்தரித்த கங்காதரரே, அடியார்கள் வேதகோஷத்தோடுசூழ்ந்து தோத்திரஞ்செய்யும் புடையுடையோரே, முலைவளைத்தழும்புடையரே, அடியார்களிதையாரவிந்தபீடரே, விட்டுணுவாதிதேவர்கட்கரியவரே, முப்புரதகனரே, பாபவிமோசனரே, திகம்பரரே, மதனசங்காரரே, பத்தசகாயரே, சருப்பகுண்டலரே, இயமனையுதைத்து மார்க்கண்டரை ரக்ஷித்தவரே, நஞ்சமுதாசனரே, நினைத்தற்கரியவரே, கோடிசூரியப்பிரகாசரே, அடியார்களெண்ணப்படி யருளுபவரே, வெண்ணீற்றரே, கொன்றைச்சடையரே, சனனமற்றவரே, யானெனதற்றவர்களது சித்தாசனரே, உன்மனாதீதஞானசூரியரே, மழுமானேந்திய கரத்தரே, தேவரீரையன்றி யன்னியரை முழுமுதலென்றுகருதி வழி

படுவார் கதியாதோ! அக்கினியேந்திய கரத்தரே, நடனகுஞ்சித பாதரே, தேவரீரது தேககாந்தியைத் தேர்ந்தறிபவர் யார்" என்று பலவாகிய தோத்திரங்களைச் சொல்லிக்கண்ணீர்சொரியத்திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். சிவபெருமானவ்விருவரையும் பார்த்து, "பெண்களே, நீங்கள் செய்த அருந்தவங்கண்டு மகிழ்ந்தேம். நீவிர் விரும்பிய வரங்கள் யாவை சொல்லுங்களென்றனர். அதுகேட்டவுடனே அவ்விருபெண்களுஞ் சொல்லுவார்கள்.

"ஐயனே, முற்காலத்திலே எங்கள் நாயகரும் விட்டுணுவும் அன்னமாயும் பன்றியாயும் முடியடிதேடியறியாத தேவரீர் அடியேங்காணவெளிவந்தீர். இதுவொன்றும் போதாது, வேறு வரங்களும் வேண்டுமோ! ஆயினும் நாங்கள் சரீரத்திலே மங்கலமாகிய பெருமையையிழந்தோம், நஞ்சுண்டு தேவரைக்காத்த நம்பனே, தேவரீர் தாதையாதலின் புத்திரிகளாகிய எங்களை தேவரீருடைய அம்பினால் வதைத்த நாயகருடைய பிராணனைத்தந்து ரக்ஷிக்கவேண்டும்" என்றிரந்தார்கள். அதனைக் கேட்டு மனமகிழ்ந்து சிவபெருமானவர் நந்தி பிருங்கியாகிய பூதகணத்தலைவரை நோக்கிக் "கணத்தவர்களே, நீவிர்சென்று பிரமனது பிணத்தை யெடுத்துவாருங்க'ளென் றெடுப்பித்து அறுப்புண்டதலையையுமுடம்பையும் ஒன்றாகப்பொருத்தியொட்டி உறங்கிக்கிடப்பவரை யெழுப்புவதுபோல எழுப்பினர். காயத்திரி சாவித்திரிகளிருக்கும்படியாக வெழுந்தபிரமன் தனது மனைவியரோடு சிவபெருமானை வேதவாக்கியங்களாற் றுதித்துக் கண்ணீர்பொழிந்தழுது "கிருபாசமுத்திரமே, அடியேன் தருமநீதிக்குமாறாய் நடந்தவைசண் முழுவதையும் பொறுப்பவரே, மேலினியங்ஙனம் நடவாமலனுக்கிரகிக்கவேண்டுமென" வணங்கினன். சிவபெருமான் பிரமனைநோக்கி யருள்செய்து "பிரமனே, திரிகரணங்களினாலு மேலினி யித்தீவினைகளைச் செய்யாதே. இத்தீயசெயலை யார் செய்யினு மவர்தலை யறுபபோ மிதனை யறிகுதி" என்றருளிப் பின் காயத்திரி சரசுவதியை நோக்கிப் "பெண்காள், பிரமனுக்குயிர்கொடுத்தோம் நீவிர் அவனோடு பிரமலோகஞ்சென்று களிப்படைந்திருங்கள். நீங்கள் வருவித்த தீர்த்தங்களிரண்டும் நும்மிருவோரது பெயரையும பெறுக. இவற்றிலே ஸ்நானம்பண்ணுவோர் பிறவியடையார்கள். பேரானந்தப்

பேற்றை யடைவர். தீர்த்தங்க ளனைத்தினு மிவ்வ யதிசுத்தமு டையன. இன்னும் இவை தம்மைத் தரிசிப்போருக்குப பாவங்களனைத்தையுங் கெடுக்கும். பெரிய சாந்திகளையுந் தரும். பெருஞ்செல்வத்தையுந் தரும், இவைகளில் ஸ்நானஞ்செய்தவர்களை விட்டுணுவுக்கும் நமக்கும் அதிப்பிரீதியுடையர்களாக்கும், இவற்றிற்கு ஒப்பான தீர்த்தங்க ளுலகத்திலில்லை, நித்தநைமித்தகாமியீ மூன்றையுஞ் செய்யாதவரும், தருமந் தவமுதலிய வற்றிற் சிறிது மியலாதவரு மிவற்றைத் தரிசிக்கி னவர்களப் பேறுகளனைத்தையு மடைவர்" என்றருளிச்செய்து இடபாரூடராய் மறைந்தருளினர். பிரமனுந் தனது தேவிமார்களோடு தன்னகரமடைந்தின்புற்றனன்.

முனிவர்காள், தருமவழிக்கு மாறுபட்டவர்களுக்கு இத் தீர்த்தங்களே தக்க சாந்தியளிப்பன். பிரமனுனைவன் வெட்டுப் பட்ட தலையைத் தனது மனைவியர்களது வேண்டுகோளினபடி பெற்றுப்பிழைத்த சரித்திரத்தைச் சொல்லினோம். இதனைப்படிப்போருங் கேட்போரும் பாராட்டி மெச்சுவோரு மிவற்றிலே ஸ்நானஞ்செய்த பேறடைவர்.

நனையுலாவனசத்தலர்வேதனூர்நவிரம்வேறுபடுத்ததுமீளவே
மனைவிமார்கள்வழுத்தலுமீசனூர்மறையனுவியளித்ததுமோதினோம்
வினையிலாததவத்துறைவாணர்காள்விரைகொணீரிவையிற்படிபேறெலா
மினையகாதைபடிப்பவர்கேள்வியாரெதிர்வினவும்விருப்பினர்சேர்வரே.

காயத்திரிசரசுவதிதீர்த்தச்சருக்க முற்றிற்று.

——:*:——

## காசிபச் சருக்கம்.

முனிவர்காள், காயத்திரி சரசுவதிதீர்த்த மகத்துவம் இன்னுமொன்றுளது அதனையுஞ் சொல்லுகின்றேன் கேளுங்கள் என்று சூதமுனிவர் சொல்லுவார்.

முனிவர்காள், அத்தினபுரியிலே பஞ்சபாண்டவர் குலத்திலே பரீக்கிது என்னு மரசன் மனுமுறையறஞ் சிறிதும் பிறழாமலரசாண்டிருந்தனன். அருச்சுனனுடைய புத்திரன் வாளபிமன் அவனது புத்திரன் பரீக்கிது. அவனே அறுபது வருட

ம். பூமியை யாராண்டு களிப்படையுங்காலத்திலொருநாள், மிருகவேட்டையாடவிரும்பிக் கொடியகாட்டைச் சேனைகளோடுமடைந்து வேட்டையாடிவரும்வழி யொருமான் அரசன் செலுத்திய அம்பினால் வருந்தியோடி மறையவும், அரசனானவன் அதனை அந்தக் காடுமுழுதிலுந் திரிந்துபார்த்துக் காணாமல் பசிதாகமதிகரிக்க மிக்க வருத்தத்தோடு தேடி வரும் வழியிலே சமீகமுனிவரானவர் வேதங்களை யாராய்ந்து மனோவேகமடங்கி மரவுரி புனைந்து பஞ்சப்புலன்களை வென்று அருந்தவஞ்செய்தலைக்கண்டு அவரை நோக்கி "ஐயனே, நீரிங்கே விழித்துப்பார்த்தபடியிருக்கிறீர், நானெய்த அம்பினால் வருந்தி யொருமானோடி வந்தது. அது எங்கே போயிற்று? அல்லது நும்மால் மறைக்கப்பட்டதோ சொல்லுதிர்" என்றனன். அம்முனிவரது மனமானது கற்பனைகளைக் கடந்து விருப்பு வெறுப்பில்லாமல் சிவத்தோடு கலந்திருத்தலினால் அரசன் சொல்லியது கேளாமலு மதற்குப் பதில்சொல்லாமலு மிருந்தனர். புலன்கள் மனதோடு பொருந்தாதவிடத்து அறிவுண்டாகுமோ! அரசன் கோபமடைந்து பக்கத்திலே பிணமாகக்கிடந்த பாம்பை வில்லின் கழுந்தினாற் றூக்கி அவரது கழுத்திலே யிட்டு வேட்டையாடுதலை விடுத்துத் தனது நகரமடைந்தனன்.

சமீகமுனிவரது புத்திரர் சிரிங்கியென்பவர் அயலாச்சிரமத்திலிருக்கும்பொழுது கிருசனென்னு மவரது சிநேகிதன் வேறொரு சம்பவத்தினால் சிரிங்கியை நோக்கி "சிரிங்கியே, நீ யதிகமேன்மை பேசுகிறாய் உனது தந்தை செத்தபாம்பைச் சுமந்திருப்பதை யறியாய் உனக்கென்ன மேன்மையிருக்கிறது போபோ" என்றனன். அதுகேட்டவுடனே சிருங்கி அதிககோபமடைந்து இவ்வயகீர்த்தியை வருவித்தது பரீக்கித்து மன்னனென்றறிந்து அவ்வரசன் ஏழுவாரத்துக்குள் தக்ககனென்னும் பாம்பாற் கடிபட்டிறக்கக் கடவனென்று சபித்தனர். சிரிங்கியானவர் விழித்துத் தன்மீது கிடந்த பாம்பை யகற்றித் தனது மகனரசனுக்கிட்ட சாபத்தை யறிந்து மகனை நோக்கி "மகனே, நீ யாதுசெய்தனை. பூமிதேவி அவ்வரசனை யிழந்து மங்கலம்பெறுவாளா! தவத்திகளுக்கு யாரிடையூறுசெய்வார் யாரவரை நிறுத்துவர் மனதைத் தருமவழிக்குத் துணையாகிய பொறுமையில்லாமல் கோபத்தைப் பொருளாகக்கொண்டவர் நன்மையடைவாரா.

சினத்தினால்வருந்தீமையத்தீனந்தீபபிறப்பு
மனத்தினீடியமருட கையும்வறுமையுநரகு
மனைத்துநல்கிடுமாதலாலொருபொழுதயர்த்துந்
தனக்குநல்லவன்வளர்ப்பனோசீற்றமாந்தழலே.

கோபமே தீய பிறப்பையும், மனமயக்கத்தையும், வறுமையை யும், நரகத்தையும், வேறுபல தீமைகளையுந் தரும். ஆதலால் த னக்கு நல்லபெரியோர்கள் மறந்தாயினுங் கோபாக்கினியை வ ளர்க்கார்கள். மகனே, பொறுமையினா லின்பமுண்டாகுமென்று சிந்திக்கவேண்டிய நீ யுண்மையை யுணராதிங்ஙனஞ் செய்யலா மா" என்று மனமுருகி வருத்தமுற்றுத் தனது மாணாக்கர் பல் ருள்ளே கௌரமாமுகனென்பவனை நோக்கி "மகனே, நீ பரீக் கிதுவேந்தனையடைந்து நமது மகன் தக்ககனென்னும் பாம்பி னால் நீ ஏழுவாரத்துளிறப்பாயென்று சபித்ததைத் தெரிவித் து அதனைத் தடுக்குதி யென்றறைந்து வருகுதி" யென்றேவினர். கௌரமாமுகனும் அங்ஙனமே பரீக்கிது வேந்தனுக் கறிவுறுத்து வந்தனன். பரீக்கிது மகாராசனும் "வினைவிளைந்ததே" யென் று துன்புற்று இதற் கினியாது தீரவெனயோசித்துக் கங்கை யாற்றிலே தனது செங்கோல்போல ஒருதம்பத்தைக் கட்டுவித் து அதன்மேலொரு மண்டபத்தை யுண்டாக்கித் தானங்கே கு டியேறி விட்டுணுவினிடத்தே மிக்க பத்தியுடையவனாய் நஞ் சைபோட்டுகின்ற பலவித ஔஷதங்களையும், பூல விடவைத்தி யர்கூட்டத்தையும், தேவர்களையும், அந்தணர்களையும், முனி வர்களையும் வருவித்துத் தன்னைக் காக்கும்படி வைத்துத்தக்ககனு க்கஞ்சித் தனது மனத்துயரைத் தன்குலமுதல்வனாகிய சந்திர னுக் குணர்த்துவான்போன் றுயர்ந்தமண்டபத்திலே தன்னை யி வ்வாறு பாதுகாத்திருந்தனன்.

பரீக்கிதுமகாராசன் மாந்திரிகரை வரும்படி வெளிப்படுத் திய பிரசித்த விளம்பரத்தைக் கேட்டு காசிபன் என்னும் வே தியனொருவன், சர்வவிஷங்களையும் போக்கும் மாந்திரிக வல்ல பன், தனது வறுமையினாலே அரசனது விடத்தைப்போக்கிப் பொருள் பெறுமாறு வழிக்கொண்டு வருமிடத்து, தக்ககனெ ன்ன் தனது நஞ்சணிந்த தலையே பின் குடுமியாக வசையவும், வெண்மைவரிகளே யுபவீதமாக விளங்கவும் பிராமண வடிவு கொண்டு காசிபனைச் சந்தித்துக் காசிபனை நோக்கி "ஓ உயர்

வொப்பில்லாத வேதியர்பெருமானே" யாதுகாரியத்தைச் சுட்டியெங்குப்போகின்றனை சொல்லுதி" யென்றனன். அது கேட்ட காசிபனும் "ஐயனே, தக்ககன் என்னுஞ் சருப்பமானது ஏதோ சாபகாரணமாகப் பரீக்கிதுமகாராசனைத் தனது நஞ்சாற்றகிக்குமாறு போவதாம், அதனை மந்திரவலியாற் கெடுக்கும்படிபோகின்றேன்" என்றனன். அது கேட்ட தக்ககனென்னுங் கட்செவியானது காசிபனை நோக்கி "வேதியர்பெருமானே, "பரீக்கிது மன்னனைக் கொல்லும்படிவந்த தக்ககன் யானே, நீ மயக்கமுற்றனையோ! யாவராயினும் நானூட்டிய நஞ்சை நூறுவருடஞ்செல்லினும் விலக்குமாற்றலுடையரோ! நானிவ்வாலமரத்தை நஞ்சூட்டிப் படச்செய்கின்றேன், நீ இவ்வாலைத் தளிர்க்கச்செய்வையேலரசையுந் தழைக்கச் செய்குவை. ஆயின் உனது மந்திரவலியைக் காண்பேனென்று பக்கத்திலே நின்ற ஆலமரத்தைக் கடித்து நஞ்சூட்டியது. பெரியோர்கள் பூதசுத்தியிலே தியானவிசேடத்தாலுடம்பு சாம்பராயவாறு போல அவ்வாலமரமும் இவ்விருவருமறியாமலதனுள்ளிருந்த ஒரு மனுடனும் வெந்து சாம்பராகி ஆகாயவாசிகள் கண்களைச் சிமிழ்ப்பப் பறந்தது. விட்டுணுவுக் கோரிலையைச் சயனஞ் செய்யும்படி கொடுத்து உலகமுழுதுந் தனது நிழலைப்பரப்பிய வடவிருக்ஷத்தைக் கணப்பொழுதிற் சாம்பராக்கிய விடத்தினது பெருமையைக் கண்டு வியந்து தக்ககனை நோக்கிச் சபதமிட்டு "எனது தவவலியின் பெருமையைச் சற்றே நின்று பார்க்குதி" யென்று தனது மந்திரமாகிய அமுதத்தை யூட்டி உருத்திரமூர்த்தி யழித்த வுலகத்தைப் பிரமன் பின் படைக்குமாறுபோல அம்மரம்பட்டது பொய்யென்று சொல்லும் வண்ணம் முன்போலத் தழைத்துநிற்கும்படி செய்தனன். அது கண்ட தக்ககனுமக்காசிபனை வணங்கி "ஐயனே, ஈதெனக்குப் பேரதிசயத்தை விளைத்தது. ஆயினும் சமீகமகாமுனிவர் புத்திரன் சபித்த சாபத்துக்குத் தவறிழைத்தலாகாது. உனக்கு அரசன்றரும்பொருளினிருமடங்கு தருகின்றேன்" என்று அளவிறந்த இரத்தினங்களை வருவித்துக் கொடுத்தனன். காசிபனும் அரசனது வயது அற்பமென்றெண்ணி யப்பொருளை வாங்கிக்கொண்டு தன்றிருப்பிடத்தை யடைந்தனன்.

ஏவரையு மனந்திரிப்பதுமின்றவர்தமக்குத்
தவறிழைத்திடப்புரிவதுந்தையலார்தங்கள்

கவரில்கற்பினையழிப்பதுங்கற்குநூற்கலைக்
ளவையெலாங்கெடக்கெடுப்பதும்பொருள்விருப்பன்றே.

எவாமனதை மாறுபடச்செய்வதும், தந்தைதாயருக்குத் தவ்றுசெய்ய வேவுவதும், சிறிதுமனந் திரியாத பெண்களைத் திரிவுபடுத்தி யவர்கற்பைக் கெடுப்பதும், கற்றகல்விகளினொழுங்குகளைக் கெடச்செய்வதும், பொருள்விருப்பல்லவா! இங்ஙனமே பொருளாசையால் காசிபன் மீண்டுசென்றதைக் கண்டதக்ககன் மனங்களித்துத் தன்னினமாகிய சருப்பங்களை வரவழைத்து "நீவிர் தவவேடம்பூண்டு பலவித கனிகளைக் கொண்டுபோயரசனுக்குக் கொடுத்து நல்வரவுசொல்லுங்க" ளென்றேவித் தானுமவர்கள் கொண்டுபோகுங் கனிகளுள்ளே, ஓரிலந்தைக்கனிக்குட் சிறுபுழுவினது வடிவா யவ்வொருவரு மறிவுறாவண்ணஞ் சுருங்கிய வடிவோடு மறைந்திருந்தனன் அரவினங்களாகிய தவத்தர்கள் பலவிதகனிகளையு மரசனுக்குக் கொண்டுபோய்க கொடுத் தாசீர்வதித்தனர். அரசனு மவைகளனைத்தையும் பெற்று மகிழ்ந்து, வந்தவர்களைத் தக்கதக்கபடி யுபசரித்து, அப்பழங்களையுந் தன்னைச்சூழ்ந்த முனிவர் பலருக்கும் கொடுத்துமகிழ்ந்து; தக்ககன் மறைந்திருந்த இலந்தைக் கனியைக் கையிலே யெடுத்து "முன்கண்ட கனிகளுள்ளே இஃததிக பருமமுள்ளது" என்று மகிழ்ந்து பார்த்திருக்குஞ் சமையத்தில் சூரியனு மத்தமித்தனன். தவத்தரும் அரசர்களும் "சிருங்கிமுனிவருடைய சாப தின மின்றே, ஆதோ தவறுது! என்னவாகுமோ!" என்று மனங்கலங்கி யிருக்குமிடத்து; அரசனும், இம்மாயன் தன்னைக் கொல்லவந்திருப்பதை யறியாதவனாய்த், தான்வைத்திருந்த இலந்தைக் கனிக்குள்ளே யிருந்து சிறுபுழுவொன்று வெளிப்படக் கண்டு "இதுவும் நம்மைக் கடிக்குமோ" என்று பரிகாசமாய்த் தனது கழுத்திலே வைத்தழுத்தினன். உடனே தக்ககன் விரைந்தெழுந்து அரசனது சரீரத்தை யிறுகபிடித்து எலும்புகள் முறியும்படி சுற்றினன். அவனுக்குத் தநஞ்சினது வெப்பத்தைத் தாங்கலாற்றாது, பக்கத்திருந்த முனிவாகளரசராதியோா வெருவிநீங்கினர். நஞ்சினா லரசன் வெந்து சாம்பராயினன் கங்கையினிடத்தே ஒருகால்மண்டபத்திலே நஞ்சினால மரணம் வருமென்று தன்னைப பாதுகாத்திருந்த பரீக்கிதுமன்னனைப் பாதலத்திலே வசித்த பாமபுவந்து கொல்லுமாயின், பெரியோர்கள் விதிக்கு மேலாக வேறொன்றுளதென்றெண்ணுவார்களோ!

நதிக்கணுடுமோர்கான்மிசைமண்டபனுப்பண்
மதிக்குலத்துயர்பற்குனன்றிருமகன்மகனைக்
கதிக்கொள்பரதல்த்துறையராவணைந்துயிர்கவர்ந்தால்
விதிக்குமேலொருதெய்வமுங்கொள்வரோமேலோர்.

சிரிங்கிமுனிவர், அரசனைச் "சருப்பத்தாலிறக்குதி" யென்று சபித்தாரே, சருப்பத்தைப் புழுவாகுதியென்று சபிக்கவில்லையே. இங்ஙனமாறிவருவது ஊழ்வினைப்பயனென்னும் வழக்கினால் உலகமனைத்தும் ஊழினாற்கிடைத்த கன்மவடிவேயன்றி வேறல்லவென்றெண்ணுக.

பரீக்கிதுமகாராசனிறந்து தேவருலகடைந்தபின்பு, வேதியர்களும், அரசர்களும், இட்டர்களும், உறவினர்களும், மந்திரிமார்களு மாதிய பலருங் கூடித் துக்கமடைந்து, பிரேதக்கிரியைகளை முடித்துத் தகனஞ் செய்தபின்பு, அவன்புத்திரனாகிய சன்மேசய மகாராசனை முடிசூட்டி யரசாளவைத்தனர்.

இஃதிங்ஙனமாக, உலகத்திலேயுள்ள காடு நாடு நகரங்களிலுள்ளவர்களனைவரும் அரசனுக்குவரும் விடத்தைமாற்றி யுயிர்க்குறுதிசெய்து காக்க நினைத்துவந்து, பொருள் விருப்பத்தினால் மீண்டுசென்ற காசிபனை நிந்தித்துப் புறக்கணிப்பாராயினர். காசிபனு மதுகேட்டு "இனி என்னைப் பழிப்பாரிடத்துப்போகே" னென்று சில நட்பாளரிடத்துப் போக, அவர்களு மிழித்துரைப்பக் கேட்டுக் கண்ணீர்சொரிய வேங்கியழுது, தன்னைப்பலரு மிவ்வாறிழித்துரைப்பதற்குக் காரணம் யாதென்றும், இதற்கு யாதுசெய்வதென்றும், யாரிடத்துச் செல்வதென்றும் மன்னியாகுலத்தோடு வருமிடத்துச் சாகல்லிய முனிவரைக்கண்டு வணங்கி "ஐயனே, தேவரீரைச் சரணாகதியடைந்தேன். உலகத்திலே என்னையனைவரும் பழிக்கின்றனர். நான் பிரமக்கொலை செய்திலேன், கட்குடித்திலேன், களவெடுத்திலேன், காமித்திலேன், இந்தப் பாவிகளோடு கூடியுமறியேன் என்னை வீணாக அனைவரும் பழிக்கின்றனர். யான்செய்த பாதக மின்னதென்றறியேன், தேவரீர் என்னிடத் தறியாது புகுந்த பாதகத்தை யின்னதென்று கடாட்சித்தருளுக" என்று வேண்டினன். அதுகேட்ட சாகல்லியமுனிவர் ஒரு முகூர்த்தகாலஞ் சிவத்தியானஞ்செய்து, உள்ளபடியறிந்து, காசிபனைநோக்கிச்சொல்லுவாராயினர். "காசிபனே, உன்னிடத்திலே குற்றமில்லாமல் பெரியோர்களுன்னையிகழார்கள். நீ பரீக்கிது வேந்தனுடைய விடத்

ணை மாற்றக் குறித்துச்சென்று, அதுமாற்று மந்திரவலியிருந்துஞ் செய்யாம லிடைவழியிலே பொருள்விருப்பினால் தருமத்தை நோக்காது திரும்பினை. பெண்களையும் குதிரைகளையும் விற்பவர்களுக்கும், நன்றி மறப்பவர்களுக்கும் பரிகாரமுண்டு. ஒரு நோயை நீக்கும் வல்லமையுடையவன் அந்நோயுடையானொருவன் வருந்தக் கண்டு, அஃது நீக்காதொழிவானேல் அவனே பஞ்சமாபாதகன். விடத்தைமாற்று மந்திரசித்தியிருந்தும், அது மாற்றாதொழிவானே லவனுக்குப் பிராயச்சித்தமில்லை. அவனைக் காணுதல் பேசுதல் கலத்தல் செய்வாருங் குற்றமுடையர்.

நீக்கலாமுறைநீண்மறைவல்லனாய்த்
தாக்கினஞ்சந்தலைக்கொளுவார்தமைக்
காக்கிலானெனிற்காமமூன்றுமிறா
லாக்கினானவனேபவமஞ்சையும்.

வல்லனாகியும்வல்விடமாற்றாத
வில்லனேற்பரிகாரமுமில்லனா
மல்லனோடொருபந்தியயின்றிடல்
சொல்லல்காண்டலிம்மூன்றினுந்தோமுறும்.

அந்த அரசனோ இரக்கமுடையவன். விட்டுணுவிடத்தி லன்புள்ளவன். யோகசாதனையுள்ளவன். நான்குவருணத்தவராதி யுயிர்களை நன்று காப்பவன். சுகப்பிரம முனிவரிடத்திலே விட்டுணுவாதி தேவசரித்திரங்களைக் கேட்டவன். அவ்விதப் பெருமைகளையுடைய அரசனைக் காக்காது மனம்வேறுபட்டு இடைவழியிலே திரும்பினை. பெரியோர்களுயிர்களுக்கு ஆபத்துவரின தனை இயன்றவரையி லுதவிசெய்து காக்காமல் திரும்பிவாரார்கள். இதுவே நீ செய்த குற்றம், இதனால் நீ நிந்திக்கப்படுகின்றாய்" என்றருளினர்.

காசிபனுமது சரிதானென் றொப்புக்கொண்டு "ஐயனே, தேவரீர் கருணைவைத் திந்தக் குற்றமகலும்படியான் வுபாயத்தைக் கட்டளையிடுக" வென்று வணங்கினன். சாகல்லியமுனிவருஞ் சிறிதுநேரஞ் சிவத்தியானத்திருந்து வழியறிந்து, காசிபனை நோக்கி, "காசிபனே, தென்றிசையிலே கந்தமாதன மலைச்சார்பிலே காயத்திரி சரஸ்பதி என்னும், இரண்டு விசேட தீர்த்தங்கள் உள்ளன. அவற்றிலே ஸ்நானஞ் செய்தால் தீமைகளனைத்தும் நீங்கும். சுவர்க்கலோகபதவி உண்டாகும். அவற்றி

லே படியுங் காற்றுபபடினும், இட்டசித்திகளெல்லாம் அடை (யும்) ஆதலின், நீ இப்பொழுதே விரைந்துசென்று விதிப்படி தீர்த்தமாடிப் பரிசுத்தனாகுதி'' என்றருளினர் காசிபனும் அது கேட்டு, அவரது பாதங்களை வணங்கி விடைபெற்று, கந்தமா தனமலையை அடைந்து, தீர்த்தங்களிரண்டையுங் கண்டு வணங் கி, அவற்றின் சமீபத்திலுள்ள தெண்டபாணியையும் வைரவக் கடவுளையும் வணங்கி எழுந்து, தான்செய்த பாவத்தைச் சுட் டிச் சங்கற்பஞ்செய்து, அவற்றிலே ஸ்நானஞ்செய்து, தன பாதகத்தை நீக்கி, நித்தியகருமத்தை முடித்து, அக்கரையிலே சிறிதுநேரம் இருந்தனன் அப்பொழுது, அவ்வேதியன காணு மாறு காயத்திரி சரஸ்வதியாகிய இரண்டுகன்னியரும் வந்தன ர். காசிபன் அவ்விருவரையுங்கண்டு எழுந்து வணங்கி "பெண்க ளே, நீவிர் யாவர்'' என்று வினவினன் அவ்விருவரும் அது கேட்டு "நாங்கள் பிரமாவினுடைய மனைவியர்கள். காயத்திரி சரஸ்வதி என்னும் பெயரை யுடையேம், எப்பொழுதும் இங் கே வசிப்பேம், நீ எமது பெயர்பூண்ட இத்தடாகங்களிலே ஸ் நானஞ் செய்தபடியால் உனது பாவம் நீங்கியது. நீ விரும்பி ய வரங்களைத் தரும்படியாக வந்தோம் கேட்குதி'' என்றனர். காசிபன் அச்சொல்லாகிய அமிர்தத்தைக் காதின்வழியாகக் கொண்டு களித்து, அவரை நோக்கித் துதிப்பானாயினன்.

பிரமதேவரது பத்தினிமார்களே, நாம் கற்கும் கலைகள் வ டிவாகினீர், அவற்றின் பொருளுமாகினீர், அட்சரங்களுமாகி னீர், வாக்கியங்களுமாகினீர், அவற்றின் தாற்பரியமுமாகினீர். சிவபெருமானது இடப்பாகத்திலிருக்கும் உமாதேவியும் விட டுணுவினது மார்பிலே யிருக்கும் இலக்குமியும் உண்மையாக ஆராயுமிடத்து நீவிரே. உலகங்களனைத்தையும் படைப்பவரும் காப்பவரும் நீர். உங்களையின்றி உலகத்தில் நிலைப்பவர் யாவர். பிதிரர்களுக்கும் தேவர்களுக்கும் செய்யுங்கடன்கள் உங்களை யன்றி இல்லையே. உலகத்தை உண்டாக்குவதன்றி அதன் மு டிவைக் காண்பவரும் நீவிரே. சந்திரசூரியர்கள் புறவிருளை ஓ ட்டுவார்கள், நீவிரோ அகவிருளை ஓட்டும் பேரொளி யுடையீர். அவ்விருவரும் உங்கள் கண்களே. ஆதலின், நீங்கள் கண்களை விழித்தலினாலே உலகந் தோற்றுதலும், மூடுதலினாலே உலக ம் அழிதலும் உண்மை. வேதாகமம் என்னும இருபெயர் பூண் டு, சிவபெருமானுடைய திருவாயினின்றுந் தோன்றிய பெண் களே, உங்களது பெருமையை யான் என்னசொல்லித் துதிப்

பேன் உங்கள் பிரசன்னத்தால் எனது கவலைகளெல்லாம் ஒழிந்தேன். இனி என்னுடையமனம் தருமவழியிற் செல்லவும் பாவவழியை நீங்கவும் அருள் செய்வீர் அன்றியும் என்னையா வரும் பழிக்காது சிறப்புச் செய்யவுந் திருவருள புரிவீர் என்று அவர்களுடைய தாமரைமலர்போன்ற பாதங்களிலே வணங்கினன். காயத்திரி சரஸ்வதியென்னும் இருபெண்களும் காசிபன் கேட்ட மூன்றுவரங்களையுங் கொடுத்து, அவ்வாவிகளில மறைந்தருளினர். காசிபனும் அவ்விருவரையும் அவ்விரு தீர்த்தங்களையும் வணங்கி விடைபெற்று வரும்பொழுது, அவனைக் கண்ட முனிவராதி யனைவோரும் பெருநண்புகொண்டு பாராட்டிப் புகழக்கேட்டுத் தனது நகரத்தை யடைந்து இன்புற்றனன்.

முனிவர்காள், காசிபனது சரித்திரத்தை உமக்குச் சொன்னோம். இச்சரித்திரத்தை விரும்பி வாசிப்பவர்களும் கேட்பவர்களும் அவ்விரண்டு தீர்த்தங்களிலும் ஆடியபேற்றை அடைவர்கள்.

உலகிலன்றுயர்காசிபனுமமாமொருவனந்தணன்மாசறுகாதையா
நிலவுமிங்கிதுபேசிடுமாசையோர்நிறையுமன்பொடுகேள்விகொணீர்மையார்
பலருமைம்புலவேடர்களோடவேபழுதில்வென்றிகொண்மாதவமேலையீ
ரிலகுபங்கயநீண்மனைமாதராரிருதடங்களுமாடினராவரே.

காசிபச்சருக்க முற்றிற்று.

---

## பல தீர்த்தச்சருக்கம்.

---

சூதமகாமுனிவரானவர் சனகாதிமுனிவர்களை நோக்கி முனிவர்காள், சமுத்திர தீரத்தினுள்ளே இன்னும் பல தீர்த்தங்களுள்ளன. பாதகங்களைத் தீர்க்கின்ற அவற்றின் தன்மைகளைச் சொல்லுதும். அவற்றுள் இருணமோசன மென்றொரு தீர்த்தமுள்ளது. மனுடர்களினுள்ளே யாராவது வந்து அதிலே ஸ்நானஞ் செய்வரேல், இருடிகள் கடன் தேவர்கள் கடன் பிதிரர்கள்கடன் என்னும் மூன்றுகடன்களும் நீங்குவர். அக்கினிகாரியஞ் செய்யாதவனே தேவர்கள் கடனுள்ளன் யாகஞ் செய்யாதவன் இருடிகள் கடனுள்ளன். புத்திரரில்லாதவன் பிதிராகடனுளன். இத்தீர்த்தமானது தன்னிடத்திலே ஸ்நானஞ் செய்வார்களுக்குள்ள இம்மூன்றுகடனையு நீக்குதலா விதற்கு இருணமோ

சனமென்னுங் காரணப்பெயருள்ளதாயிற்று. [இருணம் - கடன். மோசனம் - நீக்குவது.]

சவுனகாதிமுனிவர்காள், பிரமசரிய விரதத்தோடிருந்து தேவர்கள்கடன் இருடிகள்கடனொழிப்பவர்களாயினும், இருணமோசன தீர்த்தத்தின் மூழ்காராயின் சிறந்த மகிழ்ச்சியடையார். உலகத்திலே கடன்பட்டு வறுமையடைந்தவர்கள் இதிலே விதிப்படி ஸ்நானஞ் செய்வார்களாயின், கடனொழிக்குந் தனவந்தராவர்கள். பிறரிடம்வாங்கிய கடன்கேட்கப்பட்டு வருந்துவோர் தாம் பிறர்க்குக் கொடுத்த கடனைக் கேட்டு மகிழுவர். இதனதுதொழில் இருணமோசனமாதலின், அனைவீருமிதிலேபடிந்து இருணமோசனராவீர்கள்.

தருமபுத்திரர் முதலிய பஞ்சபாண்டவர்கள் யாகஞ்செய்தற்பொருட்டு நறுமணநிறைந்த தடாகத்தை யுண்டாக்கினர். அதிலே பதினாயிரகோடி தீர்த்தங்க ளெக்காலத்தினு மிருக்கும். அட்டவசுக்களும், பதினொருருத்திரர்களும், மற்றைய தேவர்களு மென்றுமங்கிருப்பர். தேவர்களுக்கும் பிதிரர்களுக்கு மிதனாலபிடேகஞ் செய்யி னின்பமுண்டாகும். இதிலே, தேவர் பிதிரர்களைச் சுட்டித் தருப்பணஞ் செய்யின், தீவினைகளனைத்தும் நீங்கும். செய்தவரும் பிரமலோகமடைவர். இத்தடாகக் கரையிலே பிராமணபோசனஞ் செய்யின், இருமைச் செல்வமுமதிகமாகும். நான்குவருணத்தவர்களுள்ளே யாவராயினு மிதிலே ஸ்நானஞ்செய்யின், மேலே பிறவியடையார்கள். புண்ணியகாலங்களிலே ஸ்நானஞ்செய்தவர்கள் பேரின்பமடைவர். இதனைத் தியானிப்பவருங் கங்கைமுதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தபேறடைவர். இதிற் சிறிதுமையமில்லை.

இது இவ்வளவினிற்க, இந்திராதிதேவர்கள் தங்கள் சத்துருக்களாகிய அவுணர்கள் கெடும்வண்ணம் யாகஞ்செய்த தடாகமொன்றுளது. அது தேவதீர்த்தமெனப்படும். அதிலே சங்கற்பபூருவமாக ஸ்நானஞ்செய்தவர்களது பாவங்கணீங்கும். அவர்களழியாத பேரின்பமடைவர். இன்னுமது பிறந்தநாள்தொட்டுச் செய்த ஆகாமிய கன்மங்கணீங்கும். தேவர்களுள்ளே விட்டுணு விசேடித்தவாறுபோல, தீர்த்தங்களனைத்தினு மது விசேடமாகும். அதிலொருநாள் ஸ்நானஞ் செய்தவன் நூறுவருடம் யாகஞ்செய்த பலனையடைவன். முனிவர்காள், வேறுபடக்கருதன்மின். இதிலே ஸ்நானஞ்செய்ய, இதன்கரையிலேவசிக்க, தானஞ்செய்ய, அசுவமேத பலனுண்டாகும். தேவர் பிதிரர்

இருடிகள் மகிழ்ச்சியடைவர். இதிலே ஸ்நானஞ் செய்பவர் வி
டடுணு லோகமடைவர். இதிலே முப்பதுநாள் நான்குநாள்
மூன்றுநாள் இரண்டுநாளேனும் வசிப்பவன் மேலே பிறவிபெ
டான். மூன்றுநாளிதிலே வசிப்பவன் வாசபேயபயனடைவன்.
இதனை மனதிலே நினைக்கச் சகலபாவங்களு மோடும். பிதிரர்க
ளை யிதன்கரையிற் பூசித்துத் தருப்பணஞ்செய்யின் இட்டசித்
திகளுண்டாகும். யாகங்கண்முழுதுஞ் செய்த பலனுண்டாகும்.
இதற்கிணையாக வேறு தடாகமில்லை. இம்மை மறுமை யிரண்
டினும் பேரானந்தமுண்டாகும். இதனது பெருமையைச் சுரு
க்கிச் சொல்லினேம். இதனது பெருமை சொல்ல வென்னா
மையாது.

மேலும் சுக்கிரீவன் தன் பெயரினு லொரு தடாகமுண்
டாக்கினன். அதிலே முழுகினவர் சூரியலோகமடைவர் அசு
வமேத யாகபலனையு மடைவர். ஆயிரங்கோதானஞ் செய்தப
லனையடைவர். இதனை மனதினினைத்தால் நான்குவேதாத்தியே
ன பலனையடைவர். இதிலே மூன்றுநாளுபவசியாயிருந்து ஸ்
நானஞ் செய்பவர் பிரமகத்திமுதலிய பாவங்களினின்று நீங்கு
வர். அந்தத் தீர்த்தத்தினால் தேவர்கள் பிதிரர்களை யபிடேகஞ்
செய்தவர், எண்மடங்கு நரமேதயாகம் அதகோரியாம யாகபல
மடைவர், குலாசார மேன்மைகளையு மறிவர்.

இதனருகில் நளன் தனது பெயராலியற்றிய தீர்த்தமொன்
றுளது. அதிலே ஸ்நானஞ் செய்யின், வினைகளனைத்தையுமொ
ழிக்கும். மேலுலகமடைவிக்கும். யாகபலனைத் தரும். மூன்று
தின முபவசியாயிருந்து ஸ்நானஞ்செய்து தேவர்களையும் பிதி
ரர்களையு மருச்சிக்கின், சூரியனைப் போலப் பிரகாசிப்பர். அசுவ
மேதயாகபலனை யடைவர்.

அதனருகில் அக்கினிதேவன் புத்திரனாகிய நீலன் என்பவ
ன் தனது பெயராலொரு தடாகமுண்டாக்கினன். அதிலே விதி
ப்படி ஸ்நானஞ் செய்தவர். யாகபலமுழுதையு மடைவர் பின்பு
அக்கினிலோகமடைந் தின்புறுவர்.

பசுக்கண்ணனென்பவன் தனது பேராலொரு தீர்த்தமுண்
டாக்கினன். அதிலே ஸ்நானஞ்செய்தவர் நரகத்திலே யழுந்தா
ர்கள். தேவகற்பகாலங் கற்பகநீழலில் வசிப்பர்.

அங்கதன், கயன், சரபன், பனசன், குமுதன், அம்ன் மு
தலாய குரக்குப் படைத்தலைவர்கள் அங்கே தங்கடங்கள் பெ

யாரா லொவ்வொரு தீர்த்தங்களை வருவித்தனர். அவைகளில் ஸ்நானஞ் செய்தவர்களுக்கு மிக்க பேறுகளைக் கொடுக்கும்.

விபீடணன் தனது பெயராலொரு தீர்த்தமுண்டாக்கின ன் அதிலே ஸ்நானஞ்செய்தவர்கள் மிக்க மனத்துயர் நோய் ப ழிபாவங்களைச் செய்தவர்கள் வீழுந்து வருந்துகிற கும்பிபாகா தி நரகங்களில் விழுந்து வருந்தார்கள். கொடிய கஷ வறுமை முதலிய நீங்கிப் பெருஞ் செல்வமடைந்து வைகுண்டலோகம டைவர்.

விபீடணனது மந்திரிமார்கள் நால்வருந் தங்கள் பெயர்களி னாலே நான்கு தீர்த்தங்களை வருவித்தனர். அவற்றிலே ஸ்நான ஞ்செய்தவர்கள் பாவங்களினீங்குவர். அவற்றைப் பிரமன் உப வீதத்தினடுவாகிய பிரமரந்திரமென விதந்தனன்

ஸ்ரீராமன் தாபித்தருச்சித்த இராமனுதனைச் சேவித்தற பொருட்டுக் கந்தமாதனத்திலே சரயுநதியானது வந்திருக்கும். அதிலே புலகத்திலுள்ளவர்க ளனைவருந் தீமைகளினீங்கும்படி வந்து ஸ்நானஞ் செய்வர். ஒருகோடியே பதினாயிரதீர்த்தங்களு மங்கே வந்திருக்கும். கங்கையும் சத்தசமுத்திரங்களும் விட்டு ணுவாலயங்களும் சிவாலயங்களும் அங்கே சிறந்தோங்கும். தே வர்கள் சித்தர்கள் கின்னரர்கள் இயக்கர்கள் தவத்தர்கள் முனி வர்கள் பிதிரர்கள் ஸ்ரீராமனுடைய வேண்டுகோளினால் அங் கேயெக்காலத்தும் வீற்றிருப்பர்.

முனிவர்காள், சூரிய குலோற்பன்னனாகிய ஸ்ரீராமனாற் செ ய்த சேதுக்கரையினிடத்தே யிருக்குஞ் சகலதீர்த்த மகத்துவங் களையு முமக்குச் சொல்லினோம். இச்சரித்திரத்தைப் படிப்பவ ர்களுங் கேட்பவர்களும் உகை மயக்கமுதலிய தீமைகளினீங்கி மேலான நன்னிலையை யடைவர்.

இகலிலாப்பொருள்படநவிற்றினேமிரவிகோத்திரவிறைக்கரைகணூர்
சகலதீர்த்தமகிமையும்க்கரோர்தவறிலாத்திருமுனிகணத்தரே
புகலுமாக்கதையிதுபடித்தபேர்புகலிலாச்செவிவழிவிடுத்தபே
ரகிலமாற்பெருவினையொடுக்கியேயளவிலாக்கதிநிலைகொடுக்குமே.

பல்தீர்த்தச்சருக்க முற்றிற்று.

# இராமநாதச்சருக்கம்.

முனிவர்காள், கேட்டவளவிலே அஞ்ஞானமகற்றி மெஞ்ஞான மோட்சசாம்பிராச்சியமீயும் ஸ்ரீராமலிங்கப பெருமானது சரித்திரத்தைக் கேளுங்களென்று சொல்லுவார். ஸ்ரீராமன் கந்தமாதனத்திலே பத்தியோடு தாபித்தருச்சித்த இராமலிங்கப்பெருமானை இம்மையிலே யாவர் கண்களினாற் றரிசித்து வணங்குவாரோ, அவர் அனந்தஞானமோட்சத்தையடைவர். கிருதயுகத்திலே பத்துவருடஞ் செய்யுந் தவவிரத தரிசனைப்பேறு, திரேதாயுகத்தி லொருவருடத்திலும், அது துவாபரயுகத்தி லொருமாதத்திலும், அது கலியுகத்தி லொருவாரத்திலுமுண்டாகும். இங்ஙனம் பெருமையான கலியுகத்திலே, ஒருநாளையிலடையும் பேறினுங் கோடிகூறுமேன்மையான தரும்ப்பேறுகளனைத்தையும் ஒரு நிமிஷத்தில் இராமலிங்கப்பெருமானது தரிசனைப்பேறு தரும். யாவரேனும் அங்கேயுள்ளவர்களையேனும், பிதிரர்களையேனும், தேவர்களையேனும், கோடிதீர்த்தங்களையேனும், பிறவற்றையேனுஞ் சிந்தித்து அவ்வண்ணமாயிருக்கும் இராமநாதனை யொருவாரத்துக்கேனும், இரண்டுமூன்று வாரத்துக்கேனும், நித்தியமேனும் நினைத்துத் தரிசிப்பவர்களை இயமன் அணுகமாட்டான். இராமநாதனுடைய புகழைக்கேட்ட செவிகள், அவன் வாகனமாகிய எருமையினது சத்தத்தைக்கேட்டு வருந்தா. உடம்புவிடுங்காலத்து மேலான ஞானமுடையராகுவர். இராமநாதனை யருச்சிக்கின்ற அருச்சகரை யாவரருச்சிப்பார்களோ, அவர்கள் தேவர்களே; அவர்களே சிவசாரூபிகள்; அங்ஙன மருச்சியாதவர்களே நரகர்கள்; அந்த இராமலிங்கத்தை மனதினினையாதவனும், வந்து தரிசியாதவனும், கொடைதவந் தானமற்ற பாவியாகி மனைவி மக்கள் செல்வமுதலிய வில்லாதவனுய்க் குருடு முடஞ் செவிடாகிய பெறறப் பசாசாகுவன். இராமநாதனைச் சேவித்து வரும் பத்திசாலிகளை அருச்சித்து வணங்குபவனும் யமலோக மடையான். இராமநாதனுடைய தரிசனை, ஆயிரம் பிரமகத்தியையும், பதினாயிரங் கட்குடித்ததீமையையும், இவைமுதலிய பலதீமைகளையும், கோடிகோடி பிறவித்தீமைகளையும் நீங்கிப் பூலோக விந்திரனாகச் செய்யும். இராமலிங்கத்தைத் தரிசித்தவர்களுக்கு, விட்டுணுவாதி தேவர்களினாலும் கங்கையாதி தீர்த்தங்களாலு மடையும் பேறுகளொன்றுமில்லை; அவர்களே மானுடவடிவெடுத்த பேறடைந்தவர்கள்

தொடர்ச்சியினாலேனும், மகிழ்ச்சியினாலேனும், அச்சத்தினாலேனும், லோபத்தினாலேனும் இராமநாதனை நினைத்துப் பேர்சொன்னவர்கள், தீமைகளை நீங்கி யிருமையினு மின்பமடைவர். அட்டமூர்த்தியாகிய இராமநாதனுடைய தொண்டுகள் எட்டுவிதப்படும். அவையாவன:—இராமநாதனுடைய பத்தர்களிடத்துப் பத்தியுடையனாதல், அவரது அருச்சனையிலே மகிழ்ச்சியடைதல், அவரது அருச்சனைக்குக் கைத்தொண்டுசெய்தல், அவரது சரித்திரத்தி லன்புகூருதல, அவரிடத்து மெய்யன்போடு குறுவேர்வை கொள்ளுதல், அவரது பேரைக் கேட்டவிடத்து நாத்தழுதழுத்தல், கண்ணீர் சொரிதல், மெய்ம்மயிர் சிலிர்த்தலாதிய அன்புக்குறிகளை அடைதல், அவர் வடிவத்தை யெப்பொழுதுந் தியானித்தல், அவரது சிவலிங்க சேவையாலே தான் சீவித்தல் ஆகியவை. இந்த எட்டுவிதபத்திகளும் மூடனிடத்துமுளதாயின், முனிவர்காள், அவனே மோட்சலோகத்துக்குரியவன் முன் மூன்றுகங்களிலும் பத்தியினாலும், பிரமஞானத்தினாலும், தரிசனத்தினாலு மோட்சமுண்டாகும். வேதாந்த ஞானத்தினாலும் வேதாந்த நூல்விசாரத்தினாலு மோட்சமுண்டாகும். இந்தக் கலியுகத்திலே, வேதாந்த ஞானமில்லாமலும், நான்குவருணத்தாருக்கும் ஆச்சிரமானுட்டானத்துறவு முதலிய வொழுக்கங்களின்றி, இராமநாதனது தரிசனத்தினாலே மீளாத மோட்சமுண்டாகும். இம்மையிலே பெருஞ் செல்வமுண்டாகும். அத்தலத்திலே சனித்த கிருமியாதி செந்துக்களுக்கும், தேவருக்கும், மனுட்டருக்குந் தாரதம்மியமில்லை. கற்றவர்களுக்குங் கல்லாதவர்களுக்கும், வறியவருக்கும், செல்வருக்கும், இருளைபகற்றலாற் சூரியனைப்போல் இராமநாதனது காருண்ணியத்தினாலொருசிறிதும் பேதமில்லை. இராமநாதனைத் தரிசனஞ் செய்வோனுக்கு நான்குவேதங்களை அத்தியயனஞ்செய்த பிராமணனுமொப்பாகான். அவனும் யோகீச்சுரர்களுமடையும் பேறுகளொன்றே. இராமநாத தரிசனஞ்செய்தவனைத் தரிசிப்போருக்கும் செய்த பாவங்களழியும். அத்தரிசனமில்லாதவன் நான்கு வேதங்களைக் கற்றாலும் தான் பாத்திரனாகான். அத்தரிசனமுடையவன் நாணயக்கட்டித்திரிந்தாலும அவனே தான் பாத்திரமாவன். அந்தத்தலத்திலே வசிப்பவர்கள், ஐந்துமுகமும், மான்மழுவேந்திய கரமும், கங்கையையுஞ் சந்திரனையுந் தரித்த சடாமுடியும், புலித்தோலரையும, யானைத்தோற போர்வையும், விபூதியை உத்தூளிகரித்த தேககாந்தியும, காளகண்டமும, திண்ணிய தோள்களும், நெற்றிக்கண்ணும, கொன்றைமாலையை

யுந்தரித்த சாரூபமுடையராவர். சேதுவிலே ஸ்நானஞ்செய்து இராமநாதனது சன்னிதானத்தில் அன்னதானஞ் செய்தவர், ஓவ்வொரு பிடியன்னத்துக்கு உலகமுழுவதையுங் கொடுத்தவராவர். இராமநாதனது புகழைச் சொல்லவும், அருச்சிக்கவும், துதிக்கவும், அங்கே மரிக்கவும் யாவருக்குங் கிடையாது. தேவரீரே முழுமுதலென்ற தியானமுடையவர், இருமையினும் வெற்றியுடைவர். அவரை மனத்தினானினைப்பவரே யுலகிற் சிறந்தவர் அவரே புருடார்த்தப் பேறுடையர். அவரை நினையாதவர் புருடார்த்தப் பேறடையார். அவரே பதினாயிரம் பிரமகத்தியுடையோர். அவரோடு பேசினவரும் நரகடைவர். வேதாகம சாத்திரங்களும், யாகாதி புண்ணியக்கிரியைகளும் இராமநாதனேயன்றி வேறல்லவென்று கருதி யன்போடுமவரைப் பணிந்தவரது திருவடிகளைச் சரணமடைந்தோர் துன்பங்களனைத்தினும் நீங்கித் தவந் தான தரும யாகாதி புண்ணியப் பேறுகளனைத்தையும் பெற்றுச் சைவநாட்டிலே வசிப்பவராவர். இராமநாதனை யிரண்டுநாழிகை வேறுசிந்தையின்றித் தியானிப்பவன் தனது மூவேழு சுற்றத்தையுங் கரையேற்றித் தானுஞ் சிவபுரத்திலே நிலையாக வசிப்பன், ஒருதினமுழுதும் இராமநாதனை யிருதயத்தி லழுத்தித் தியானித்தவன், இம்மையிலே இட்டபோகங்களை யனுபவித்து முடிவிலே சிவரூபமடைவன். திரிகாலங்களினும் நினைத்தவனுஞ் சிவரூபமாவன். பிராதக்கால தரிசனம் பாவங்களைப்போக்கும். உச்சிக்கால தரிசனம் ஆயிரங்குடங்கள்ளருந்திய தோஷத்தை நீக்கும். சாயங்காலதரிசனம் காமவிகாரத்தால் வருந்தோஷங்களனைத்தையும் போக்கும். அர்த்தயாமதரிசனம் பொற்களவாதி திருடிய தோஷத்தை நீக்கும். இராமநாத தரிசனத்தானீங்காத பாவம் மற்றெவ்வகையானும் நீங்காவாம். தனுக்கோடியிலே ஸநானஞ்செய்து பின் இராமநாததரிசனஞ் செய்தபேறு கங்கையிலே ஸ்நானஞ் செய்யினுங் கிடையாது. அது செய்யாதவர் குடிப்பிறந்தவரல்லர். காலையிலெழுந்தவுடன், இராமலிங்கமென்று மூன்றுதரஞ் சொல்லின் முற்பாவங்களனைத்தும் போகும். அவ்விலிங்கத்திருமேனி தன்னை வணங்குவாரது பாவப்பனியைப் போக்குமாதித்தனாகும். எவராயினு மிறக்கும்பொழுது இராமநாதாவென்று சொல்லுவாராயின், மேலே யவர்கள் பிறவியெடாது சிவரூபமாவர். இராமநாதாவென்றும் மாதேவாவென்றும் கருணைக்கடலேயென்றுந் துதிப்பவர் வறுமையடையார். முனிவர்காள், யாவராயினு முலகமாயையி லழுந்தாது பிறவியொழிக்கவேண்டுமாயின், நீல

லோகிதா, உலகநாதா, இராமநாதா, செஞ்சடாமுடியா, சதா
சிவா, காளகண்டா, காலகாலா, ஆலாகலஅசனா, புராந்தகா எ
ன்று தோத்திரஞ்செய்தவர்கள் ஆசாபாசக்கடலு ளழுந்தார்கள்,
இராமநாதனது கோவிலை மரத்தினாற் செயதவர்கள் மூன்றுகோ
டி சுற்றஞ் சூழவிருப்பர். அதனைச் செங்கல்லினாற் செய்தோர்
கள் வைகுண்ட லோகமடைவர். கற்களினாற் செய்தவர்கள் பு
ரமலோகமடைவர். பளிங்கினாற் செய்தவர்கள் சிவபுரமடைவ
ர். செம்பினாற் செய்தவர்கள் ஞானமயமாவர். வெள்ளியினாற்செ
ய்தவர்கள் சிவரூபமடைவர். பொன்னினாற் செய்தவர்கள் சிவ
மேயாவர். பெருஞ் செல்வன் செய்த பொற்கோயிலுக்கும் வறி
யவன்செய்த மட்கோயிலுக்கும் விலைப்பயனொன்றேயாம். பக்
கத்திலே நின்று பாடலாடல் செய்தவர்களுக்கும், அபிடேககா
லத்தில் வாத்திய முழக்கஞ் செய்வோனுக்கும், உருத்திர சமக
நமக பவமான பஞ்சசாந்தியாதிய மந்திரங்கள் சொல்வோனுக்
கும் பாவங்கணீங்கிச் சிவபுரங் கைவசமாகும். இராமநாதனுக்கு
பாலினாலபிடேகஞ் செய்பவன் சிவலோகத்திலே ஏழுதலைமு
றையு மூவகைச் சுற்றத்தோடும் வசிப்பன். தயிரினா லபிடேகஞ்
செய்பவன் வைகுண்டலோக மடைவன். நெய்யினா லபிடேகஞ்
செய்பவன் கற்பகாலங்களிலுஞ் செய்த தீமைக ணீங்குவன்.
தேனினாலபிடேகஞ் சேய்பவன் கண்டசித்தியுடையனாய்ப் பிர
மலோகமடைவன். எண்ணெயாலபிடேகஞ் செய்பவன் அளகா
புரியடைவன். கருப்பஞ்சாற்றினா லபிடேகஞ் செய்பவன் சந்
திரலோகமடைவன். எலுமிச்சம்பழத்தினா லபிடேகஞ் செய்ப
வன் பிதிரர்லோகமடைவன். இளநீராலபிடேகஞ் செய்பவன்
பிரமக்கொலை முதலிய பாவங்களி னீங்குவன். வாழைப்பழமுத
லிய பழங்களினா லபிடேகஞ் செய்பவன் சென்றநாட்டிலேபெ
ருவரிசைகளை யடைவன். வடித்த சுத்தசலத்தினா லபிடேகஞ்
செய்பவன் வருணலோகமடைவன். சந்தனக்குழம்பினா லபிடே
கஞ் செய்பவன் கந்தருவலோகமடைவன். பன்னீர்முதலிய வா
சனைத்திரவியங்களா லபிடேகஞ் செய்பவன் இந்திரபோகமடை
வன். பாதிரி, அலரி, புன்னை, செங்கழுநீராதியவூறிய நீரினா ல
பிடேகிப்பவன் குற்றங்களினீங்குவன். ஏனைய சுகந்தாதிகளூறி
ய சலத்தினா லபிடேகஞ் செயபவன் சிவலோகமடைவன் ஏல
ங் கோல மிலவங்கம் பச்சைக் கருப்பூரமாதிய கலந்தநீரினா லபி
டேகஞ் செய்பவன் பெருஞ் செல்வத்தோடு மக்கினிலோகம
டைவன். மண்குடங்களினாலே புண்ணியதீர்த்தங்களையளளிய
பிடேகிப்பவன் நாறுவருடம் பெருஞ் செல்வனாவன். தாமிரகு

ங்களா லபிடேகிப்பவன் இந்திரனாவன். வெள்ளிக் குடங்களாலபிடேகிப்பவன் பிரமலோகமடைவன். பொன்குடங்களாலபிடேகஞ் செய்பவன் சிவசான்னித்திய மடைவன். இரத்தினகலசத்தின லபிடேகிப்பவன் அவரது பக்கத்தில் வீற்றிருப்பன். இராமநாதனுக் கபிடேகத்துக்கேனும் நிவேதனத்துக்கேனும் பாற்பசு கொடுத்தவர் அசுவமேத யாகாதிபலன்களைப் பெற்றுச் சோதிசொரூபமாய்ச் சிவலோகத்திலே வீற்றிருப்பர். அன்னபிடேகஞ் செய்தவர்களடையும் பேறென்னறச் சொல்லமுடியாது. தனுக்கோடியிலே தீர்த்தமாடி இராமநாதாவென்று தரிசிப்பவர் வேறெந்தத் தீர்த்தமாடினுஞ் சேதுவிலாடிய பேறடைவர். இராமநாதனது கோயிலிற் பழுதடைந்தவைகளைத் திருத்துபவர் புதிதாகக் கட்டினவர்களடையும் பேறின நூறுமடங்கதிகபேறடைவர், அவ்வாலயத்தி லுடைந் தடையாளப்பட்டவிடங்களைப் பூசித்திருத்தினவர் பதினாயிரம் பிரமகத்திதோஷத்தினீங்குவர். இராமநாதனது சன்னிதானத்திலே திருவிளக்கிட்டவர் அஞ்ஞானாந்தகாரம் நீங்கி ஞானப்பிரகாசமடைவர். சருக்கரையமுது, பாலமுது, நெய்யமுது, எள்ளமுது, பயற்றமுதாதிய சித்திரான்ன நைவேத்தியஞ் செய்பவர் தேவர்களுக் கதிபராவர். இராமலிங்க பூசைசெய்ய அதனைத் தரிசிக்க அக்கோலத்தை நினைக்க அவ்வடிவத்தைத் தீண்டத் தீவினைகளனைத்தும் நீங்கும், இராமநாதனை நினைத்துச் சன்னிதானத்திலே கண்டாமணி கண்ணாடியிடுபவர் நூறுதேருக் கதிபராயிருந்து சிவலோகமடைவர். அவரது சன்னிதியிலே குடமுழா திமிலை ஒருகடபறை நந்தி தட்டை படகம் சிறுபறையாதிய வாச்சியமொலிப்பவர் சிவலோகத்திலே பலவாச்சிய முழக்க இறுமாந்திருப்பர். இராமநாதனது சன்னிதானத்திலே கொடுப்பவைகள் அணுவளவதாயினு மநந்தமடங்கு பேறடைந்து சிவசன்னிதானத்திலே பேரின்பமடைந்து வாழ்வர். அறிவுடையோர் தங்களாயுள் இளமை புத்திரர் செல்வம் பெண்டிராதியவெல்லா மநித்தியமென்று வெறுத்துச் சிவத்தியான மொன்றே செய்குவர்.

முனிவர்காள், இராமநாதனது திருவடிகளே சரணமென்றடைந்தவர், தீமைகளினீங்கி யெல்லாமேன்மையையு மடைவர். இராமநாதனுக்கு நித்தநைமித்திகங்களுக்குக் கிராமாதி மூலதனமிட்டவர் சிவரூபமாவர். பூலோக சற்பாத்திரங்களுள்ளே சிறந்த சற்பாத்திர மிராமநாதனாதலால், அவருக்குத் தானஞ்செய்பவர் பெரும்பயனடைந்து வாழ்வர். குடை கொடி விசிறி சாமரை குங்கிலியமாதிய கொடுப்போர் அசுவமேதபலனை யடை

வர். இராமநாததரிசனம் எவருக்குங் கிடைப்பதரிது. கிடைக்குமாயின் அவர்களுக்கு யாகாதிதவங்கள் வேண்டியதில்லை. மான்மதம் கத்தூரி கொடுப்பவர் வேதங்களின் கரைகண்டுணர்ந்தவராவர். முத்துமாலையாதிய ஆபரணங்களைக் கொடுப்பவர் வீறுமையுடையார். கங்காதீர்த்தத்தினாலே ஸ்ரீராமனபிடேகஞ் செய்தமையால் கங்காசலங் கொணர்ந் தபிடேகஞ் செய்பவர்களுக்கு இராமலிங்கப்பெருமானும் பெருமை செய்வர். முனிவர்காள், பஞ்சேந்திரியங்களு மாறுபடுமுன்னரே, உடம்பு திரையுமுன்னரே, மனஞ் சோருமுன்னரே, தலை நரைக்குமுன்னரே, மரணம் வருமுன்னரே, இராமநாதனுக் கருச்சனைசெய்து வணங்கி, அவனருளையடையவேண்டும். புராணசாத்திர இதிகாசங்களெல்லாமிராமநாதனது சொரூபமென்று கருதி யருச்சித்து வணங்குபவர் புத்திர பௌத்திரராதிகளோடும் இம்மையிலே சிறப்புற்றிருந்து பின்பு சிவானந்தமடைவர். இச்சரித்திரத்தைப் படிப்போருங் கேட்போருந் தனுக்கோடியில் மூழ்கி இராமநாததரிசனப்பேறடைந்து களிப்படைவர்.

நற்கதையீதுபேசினாரினார்கட்போடுகேள்வியூடுநாடுவார
விற்கோடிமூழ்குபேறுமேவுவார் மெய்த்தாணுவாமிராமநாதனார்
பொற்கால்கள்காணுநீரராகுவார் பொய்ச்சார்பிலாதஞானமாதவீர்
சொற்கேழிராமநாதன்மேன்மைதானிப்போதுகூறினேமியாமரோ

இராமநாதச்சருக்க முற்றிற்று.

## இராமனருச்சனைச் சருக்கம்

இங்ஙனஞ் சொல்லிய சூதமகாமுனிவரைச் சவுனகாதிமுனிவர்களனைவரும் வணங்கி, "ஐயா, தேவரீரே வேதமெய்ப்பொருளுணர்ந்தவர். தேவரீரே பல சரித்திர சாகரக் கரைகண்டதீரர். தேவரீரே சிவகாருண்ணியர். தேவரீருக்கொப்பானவருலகத்தில்லை. வேதவியாதருடைய நன்மாணாக்கரே, தேவரீர்சேதுமகத்துவத்தை யுபதேசித்ததாலே அதுகேட்ட யாமெல்லாம் ஞானமடைந்தோம். இன்னுந் தேவரீர் ஸ்ரீராமன் இராமநாதனை எப்படிப் பிரதிட்டைசெய்தான். அது கேட்டறிய மாதரவுற்றனம். அதனைத் தேவரீர் கடாட்சித்தருளுக" எனவேண்டினர்.

அதுகேட்ட சூதமகாமுனிவர் முனிவர்களை நோக்கி "முனிவர்காள், கந்தமாதன மலையிலே இராமலிங்கப் பிரதிட்டை செய்த சரித்திரத்தைச் சொல்லுதும் கேளுங்களென்று சொல்லு

வார். இராவணன் முன்னாளிலே, ஸ்ரீராமனது மனைவி சீதையைக் களவாண்டு செல்ல, ஸ்ரீராமன் தம்பி இலக்குமணனோடு குரக்குச் சேனைகளோடுங் காட்டினிடத்தே வில்லையேந்தி மகேந்திரமலையில் வந்தபின்பு, சீதாபிராட்டியாரது மயக்கம் வந்தெட்டுவதுபோல, கடற்றிரை வீசுவதைப் பார்த்து, அதன்கரையிலே பர்ணசாலையொன்று கட்டி, அன்று அங்கேயிருந்து, மறுநாள் சுவேலையென்னுஞ் சிலம்பிலேறி யிருந்தனன் அப்பொழுது சந்திரனுதயமாகிச் சிறையிலிருந்த சீதாபிராட்டியைக் கண்ணுற்று அவளடைந்த வாட்டமுழுவதையுங் கண்டு முறையிடுபவன்போல வந்தனன். ஸ்ரீராமனுஞ் சீதையை நினைந்து முகம்வாடி மேனி கருகிச் சோருதலைக்கண்ட சந்திரனும் வாடிக் கருகித் தேயதலைப் பெற்றனன். ஸ்ரீராமன் சுவேலைமலையிலேயிருப்பைக் காணவிரும்பி இராவணன்றனது மேல்மண்டபத்தேறி நின்று பார்த்தனன். அதனைக்கண்டு குரக்குச்சேனாதிபர் பலருளொருவனாகிய சுக்கிரீபன் விரைந்து பாய்ந்து அவனது முடியைப் பிடுங்கி அரக்கரது அபசயத்தைக் காட்டுவோன்போலக் கொண்டுவந்து ஸ்ரீராமனது பாதங்களில் வைத்தனன் இராவணனு முடியிழந் தபசயப்பட்டு இறங்கிப் போயினன் ஸ்ரீராமன நிலத்திலிழிந்து குரக்குச் சேனைகளைக் கருங்கடன்மருங்கிலே சூழநிறுத்தினன். அது அவனது படுக்கையாகிய திருப்பாற் கடல்வந்து சூழ்ந்ததுபோலிருந்தது.

அதுகண்ட இராவணனனவன் கடுங்கோபமடைந்து பருப்பணன், பூதனன், அரிசன், குரோதன், அசனுகரன, சிரும்பன், பிராரிசன், அரி முதலிய சேனாபதிகளை உரத்த தேசமுடையவர்களும் பலவித முகங்களுடையவர்களுமாகிய அளவிறந்த சேனைகளோடும் அனுப்பினன். விபீஷணனனவன் யுத்தசன்னத்தராய் வருமவர்களைக் கண்டு, அம்புமழைகளைச் சொரிந்து பலரைக் கொன்றனன்., எஞ்சிய சிலரைக் குரக்குவீரர்கள தங்கள் வெண்பற்களாற் கடிக்க அவர்கள் இறந்தாகள். அதுகண்ட இராவணன் மதிலின்புறத்தே வந்து, தன் வில்லைவளைத்துக் குரக்குவீரர்கள மேல் அம்புமழைகளை அட்டதிக்குகளும அசையும்படி சொரிந்து வருந்தினன். அதுகண்ட ஸ்ரீராமன் கண்சிவந்து கடுங்கோபமடைந்து இராவணனுக் கெதிரே வந்தனன். இராவணனும தனது சேனைகளைப் பலமுகமாக அணிவகுத்து யுத்தந் தொடங்கினன். இரண்டுயானைகள் எதிர்மலைவதுபோல இருவரும் யுத்தஞ் செய்யும்போது இருபது கைகளையுடைய இராவண்ன் செயயும் யுத்தத்தினும இரண்டு கைகளையுடைய ஸ்ரீராமன செயயும் யுத்தம எண்மடங்கு விசேடமாயிருத்தலைத் தேவாகள் கண்டு களிப்படைநதனா இராவணனுடைய முதற்கு

மாரனாகிய இந்திரசித்தனும், ஸ்ரீராமன் தம்பியாகிய இலக்குமணனும் எதிர்த்து யுத்தஞ்செய்தனர். சுக்கிரீவன் விரூபாக்கனோடும், அங்கதன் சுருவடனோடும், நளன் பவுண்டரனோடும், பனசன் படசனோடுமாக இருதிறவீரர்களும் ஒருவரோடொருவர் எதிர்ந்து தொந்த யுத்தஞ் செய்தனர். அங்ஙனம் போர்செய்யுமிடத்து, குரக்குச் சேனைகளால் அரக்கசேனைகள் தோற்றோடின. அதுகண்ட இராவணன் இந்திரசித்தைக் குரக்குச் சேனைகண் மீதேவினன். இந்திரசித்தனாலே குரக்குச் சேனைகளனைத்தும் பின்கொடுத் தோடின. நாகபாசத்தினாலே ஸ்ரீராமனு மிலக்குமணனுங் கட்டுண்டு வருந்திக் கருடனது பேருதவியினா லது நீங்கினர். பிரகத்தனது தண்டாயுதத்தினா லடிக்க விபீடணன் கலங்கி ஒரு வேலினாலவனைக் கொன்றனன். அதுகண்ட தூமிராக்கனானவன் மனது புழுங்கிச் சேனைகளை வருத்திவரும்பொழுது, அனுமானொரு மராமரத்தைப் பறித்து அடித்து அவனைக் கொன்றனன். அரக்கசேனைகளனைத்து மிவ்வாறு நிலைகலங்கி இராவணனிடத்தேபோய்த் தங்களபசயத்தைச் சொல்லினர். இராவணன் அதுகேட்டு வருந்தித் தனது தம்பியாகிய கும்பகர்னனை நித்திரையினின்று மெழுப்பிப் போரினது சங்கதியைச் சொல்லியனுப்பினன். கும்பகர்னனும் யுத்தகளத்திற் சென்று இலக்குமணனோடு எதிர்த்துக் கடும்போர் செய்து பிரமாஸ்திரத்தினா லிறந்தனன். தூடணனும் அவன் றம்பியர்களும் நீலனாலும் அனுமானாலு மிறந்தார்கள். நளன் வயிரதந்தனைக் கொன்றான். அகம்பனைக் குமுதன் கொன்றான். மறுநாளிராவணன் தோற்றோடினன். அதிகாயன் திரிசிரன் ஆகியோரை இலக்குமணன் கொன்றான். நராந்தகன் தேவாந்தகனாதியோரைச் சுக்கிரீவன் கொன்றான். கும்பகன்னனுடைய புத்திரரிருவர்களை அனுமார் கொன்றார். மகரநேத்திரனை விபீடணன் கொன்றான். இங்ஙனமே யனைவருமிறந்தபின்னர், இராவணனானவன் இந்திரசித்தனையேவ, அவன் வந்து கடும்போர் செய்து வானரச் சேனைகளனைத்தையு மழித் தோட்டியபின்பு, அங்கதனானவன் கோபமடைந்து, அவனது தேரை யழிக்கவும், இந்திரசித்தன் ஆகாயத்திலே மறைந்து நின்று சாம்பவன் நளன் சுக்கிரீவன் ஆம்பலான் முதலிய அனைவரையும் மோகாத்திரத்தினன் மயக்க, அவர்கள் சோர்ந்து அறிவுகெட்டு மூர்ச்சையாகிக் கிடப்பதைக் கண்டு, ஸ்ரீராமன் வருந்தினன். அதைக்கண்டு விபீடணன் எழுந்து நமஸ்கரித்துச் சொல்லுவான், "ஐயனே, இயக்கர்கோன் குய்யகனுடைய கையிலே ஒரு தேவதீர்த்தங் கொடுத்திருக்கின்றான். அதனைத் தேவரீர் கையினால் வாங்கிக் கொடுக்க, அதனாலிவர்கள் கண்களைக் கழுவினால் ஆகாயத்திலிருக்கு மனைத்துந் தெரியும். தேவரீர் வருத்தமடைய வேண்டியதில்லை" யென்றனன். அதுகேட்ட ஸ்ரீராம

னங்கனஞ்செய்து கண் கழுவியபின்னர், இலக்குமனாதிய வனைவரும் மயக்கந்தெளிந்து, இந்திரசித்தனை ஆகாயத்தினிற்கக் கண்டனர். அவருள் இலக்குமன் கடுங்கோபமடைந்து ஆகாயத்திலே பாய்ந்தடித்தனன். இந்திரசித்தனும் பெருங்கோபமடைந்து போர்செய்தனன். இப்படி இருவரும் ஆறுநாள்வரையும் விடாமற் கடும்போர் செய்தனர். இலக்குமனு மியன்றபடி கெதியாக யுத்தஞ்செய்து ஆறுநா ளவனைக் கொன்றனன். ஸ்ரீராமனும் விபீஷணனுதவியால் மூலபல விராக்கதரைக் கொன்றனன். அப்பொழுது இராவணன் கோபமடைந்து சீதாபிராட்டியைக் கொல்லும்படியாகப்போ யவளது பேரழகைக் கண்டு மயங்கி, இவளைக் கொன்றதினாற் பயனென்றுமில்லை, சத்துருக்களையே கொல்லுவோமென மதித்துத் தேரிலேறித் தனக்கொப்பில்லாத குதிரைபூண்ட தேரின்மீதுவருஞ் சூரியனைப்போல அணிகள் பிரகாசிக்கப் பிறவித்துயரைக் கெடுக்கும் ஸ்ரீராமனுக்கு முன்னாக வந்து படைக்கலங்களைச் செலுத்துதலும், ஸ்ரீராமனும் நெடும்போது பெரும்போர்செய்து பிரமாஸ்திரத்தினால் அவனது முடிகள் பத்தையும் வெட்டிக் கொன்றனன்.

அதுகண்ட அருந்தவத்தரு மமரரு மாடிப்பாடிக் கற்பக மலர்களைச் சொரிந்து ஸ்ரீராமனது வெற்றியைப் புகழ்ந்தார்கள். பின்பு ஸ்ரீராமன் புட்பவிமானத்திலேறிச் சீதையைச் சிறைமீட்டு மணம்புணர்ந்தஞான்றடையுங் களிப்படைந்து, விபீஷணனுக்கு முடிசூட்டி, இலங்காபுரிக் கரசனாக்கிச் சேனைகளோடுங் கந்தமாதனமலையையடைந்து தேவர்களெதிரே அக்கினியை வளர்த்துச் சீதையினது கற்பைத் தெளிவித்து வீற்றிருந்தனன்.

அகத்தியர் முதலிய முனிவர்க ளொருங்குதிரண்டுவந்து சீதாபிராட்டியாரோடு ஸ்ரீராமனை நமஸ்கரித்துத் துதிப்பாராயினர்.

எந்தையிவைகேண்மதியிலங்கொளியிராம
சந்திரவிராகவதயாபரதரங்கச்
சிந்துவுடையானையருள்செய்குதல்பொருட்டால்
வந்தனையுனைப்பதம்வணங்குதுமியாமே.

அராவணன்முடித்தலையதன்கணமர்ஞால
மராவணமதாவவதரித்திடுமருட்சீ
தாராவணமுலைத்தெரிவைதாடகைதன்னாவி
தாராவணர்சிலைத்தலைவதாழ்ந்திடுதும்யாமே.

காதிமகன்வேள்விநிலைகாத்தருள்சுரந்தோய்
மூ[illegible]கருறவந்திடுசுவாகுவைவதைத்தோய்
மேதகையதானதிறன்மாரிசனைவென்றோய்
கோதமன்மனைக்கருடாள்கும்பிடுதும்யாமே.

ஓர்சிலைகுனித்துடனொடித்திலகுசுட்டி
வார்சிலைநுதற்சனகிவாஞ்சைதணிவித்தோய்
சேர்சிலைவயப்பரசிராமனிகல்சிந்தக்
கூர்சிலைவளைத்தமுகில்கும்பிடுதும்யாமே.

மாதவள்கைகேசிகொள்வரத்திருமையாலே
தாதைசொல்வழாமலொருதம்பியொடுமம்பொற்
சீதையொடும்வாசம்துசெய்திடவனத்தே
போதுமுனசேவடிகள்போற்றுதுமியாமே.

பிற்பரதனன்னைசெய்பிழைக்குளமிரங்கு
மற்புநெறிக்கண்டருளடித்துணையினனே
யெற்புருவகன்றுசரபங்கனினிதேறப்
பொற்புவிகொடுத்தபுகழ்போற்றிடுதும்யாமே.

வெற்றிகொடிறற்படைவிராதனைவதைத்தோய்
குற்றமில்சடாயுவொடுகொண்டமிகுநண்போய்
மற்குலவுமானுருவமாரிசனையட்டோய்
பொற்கமலநின்னடிபுகழ்ந்திடுதும்யாமே.

இடுக்கணிலிராவணனெடுத்தசனகிக்காத்
தடுத்தமர்விளைத்திடுசடாயுவுயிரேக
முடித்திடுகனற்றொழிலைமுற்றிடுபுமுத்தி
கொடுத்தநின்னடித்துணைகள்கும்பிடுதும்யாமே.

கவந்தனைவதைத்தனைகடக்கரியவென்றித்
தவந்தருநலத்தினொடுதாவிலருணைய
மூவந்தரியவந்தனையுடன்சவரிபோற்றுஞ்
சிவந்தகழல்சென்னிமிசைசேர்த்திடுதும்யாமே.

மேலிரவிமைந்தனொடுமேவரியநண்பாய்
வாலியுயிருண்டனைவயக்கவியினத்தாற்
கோலியொர்குரம்பதுகுயிற்றினையளக்காப்
பாலினையநின்னடிபணிந்திடுதும்யாமே.

எண்ணரியரக்கருமிராவணனுமாளத்
திண்ணவரிவிற்குனிவுசெய்ததிறல்வீரா
வுண்ணினையுமன்பரிடரோடவருள்கூரு
மண்ணலுன்சேவடியடைந்திடுதும்யாமே.

நாசமறுபூரணமெய்ஞ்ஞானசுகரூபா
மாசறுமிராமமுதன்மந்திரமுரைப்பா
ராசறுபவக்கடலினம்பியெனவந்த
கோசலைதருங்குமரகும்பிடுதும்யாமே.

முத்தொழிலிழைத்திடுமுதற்கடவுளாகி
மெத்துகருணைச்சலதிமேனியொடும்வந்த
தொத்தருளியன்பர்கணுவப்புறுமுளங்கூ
ரத்தவுன்னடிக்கபயமாயினமியாமே.

வெங்கொலையரக்கர்கிளைவேரொடுமகழ்ந்தே
சங்கையறநோன்புபுரிதன்மையருள்செய்தா
யெங்களையளித்திடுதியென்றுமெனவேத்தி
யங்கைமலர்கூப்பினரருந்தவர்களெல்லாம்.

இங்ஙனமே தோத்திரஞ்செய்த இவைகளை, யார் திரிகாலங்களிலுஞ் சொல்லித் துதிப்பார்களோ அவர்கள் இட்டசித்திகளோடு மேனிலையடைவர். ஒன்றுக்கு மச்சமடையார்கள். இப்பதினான்கு பாடல்களைப் படிப்பவர்களிடத்தே பூதவேதாளபைசாசங்களும், நோய் வறுமை யாதியவைகளும் நீங்கும். புத்திரப்பேறுண்டாகும். கன்னியர்கள் படித்தால் நல்ல நாயகரை யுடைவர். நினைத்த தொழில்களை யிடையூறின்றி யினிதுமுடிப்பர். இங்ஙனமே முனிவராதியோர் தன்னைப் புகழ்ந்த தோத்திரங்களைக் ஸ்ரீராமன் கேட்டு மகிழ்ந்து அவர்களை யெழுந்து வணங்கி, "ஐயர்காள், என்து கண்ணெதிர்ப்பட்டவர்கள் சீவன்முத்தராயினும், என்னை 'முதல்வ' னென்றும், 'மேலானவ' னென்றும்பலவாறுபுகழுவர். ஆயினும், அவர்கள் மன்னுயிர்களினிடத்தே யன்புகொண்டு சாந்திபெற்று, யானெனதற்றுப பஞ்சப புலன்களையடக்கி மேம்பட்ட நும்மிடத்து நாங் குறையிரப்பதொன்றுளது. இலங்கைவேந்தனாகிய இராவணனைக்கொன்ற பழி நீங்கும் வழியெதுவென்றாராய்ந்து சொல்லுமி" னென்று வணங்கினன்

அகத்தியர் முதலிய முனிவர்கள தைக்கேட்டுச் சொல்லுவார்கள், "சத்தியவிரதனே, உலகவேந்தனே, ஸ்ரீராமனே, நீ சொல்லியது மிகநன்று. முத்தித்தானமாகிய இந்தக் கந்தமாதனத்திலே உலகத்தா ருய்யும்பொருட்டுச் சிவசந்நிதியமாகுஞ் சிவலிங்கப் பெருமானைப் பிரதிட்டை செய்குதி. உன்னையடுத்த பாவங்களனைத்தும் நீங்கும். பிரமனு மிங்கே செய்யு மிலிங்கத்தாபனமகத்துவஞ் சொல்லமாட்டானென்றால் மனுடர்கள் எப்படிச்சொல்வார்கள். காசியிலிருந்து லிங்கத்தை வரவழைத்துத் தாபிக்கின் கோடிமடங்கதிக பலனுண்டாகும். அதனைத் தரிசிப்பவர்க்கும்பெரும்பேறுளதாகும். இந்நகர முனதுபேரால் இராமேச்சரமென்றும், இவ்விலிங்கம் இராமநாதனென்றும் இராமலிங்கமென்றும் வழங்குக. அண்ணலே, நீ இதுவிரைந்து செய்குவையேல், அது இருவினைக்காட்டுக் கெரியாகும்" என்றனர்.

சீதாபதி அதனைக்கேட்டு முனிவர்களோடு கூடி மனமகிழ்ந்து இரண்டுநாள்வரையுஞ் சிவத்தியானஞ்செய்து, ஞானதிருட்டியினா லிங்கே யிவையிவை யின்னவின்ன விடத்திலே செய்யத்தக்கதென்றாய்ந்து சங்கற்பித்து, வடகயிலையினின்றுஞ் சிவலிங்கப்பெருமானை வரவழைக்கும் நோக்கமாகச் சகலசாமார்த்தியத்திலுஞ் சிறந்த அனுமானை நோக்கிச் சொல்லுவான், "அஞ்சனாதேவியினது கண்மணிபோன்ற செல்வக் குமாரனே, நீ உத்தரகயிலையிற்சென்று சிவப்பிரதிட்டை செய்தற்கு இன்றியமையாத சிவலிங்கப்பெருமானை வருவிக்க விரைந்து செல்லுதி" யென்றனன். வாயுபுத்திரனாகிய அனுமானு மதுகேட்டு மனமகிழ்ந்து அவனது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, அங்ஙனஞ்செய்வேனென்றெழுந்து விடைபெற்றுக் கந்தமாதனமலைநிலத்திலே சூழ்ந்தாழும்படி யூன்றி யெழுந்து ஆகாயமார்க்கமாகச்சென்று திருக்கயிலாயமலையை யடைந்து சிவத்தியானத்தோடு தருப்பாசனத்திலே கிழக்குநோக்கியிருந்து கைகுவித்துப் பஞ்சேந்திரியங்களையுந் தத்தம்விஷயத்திற் செல்லாதுதடுத்து மௌனமாகி உபவசியாயிருந்து அருந்தவமிழைத்துச் சிவானுக்கிரகத்தாற் சிவலிங்கப் பெருமானைப் பெற்றுத் திரும்பிவந்தனன்

முனிவர்கள் ஸ்ரீராமனை நோக்கி, "ஸ்ரீராமனே, ஆனிமாதத்திலே பூருவபக்கத் தசமியும் புதன்கிழமையும், அத்தநட்சத்திரமும் வியதீபாதநாமயோகமும் வணிசகரணமும் தசயோகமும் இடபலக்கினமுங்கூடியதாக நாங்குறித்த சுபலக்கினமோ வந்தது. சிவலிங்கப்பெருமானை வருவிக்கச்சென்ற அனு

மானையின்னுங் காணேம், இந்தச்சுபலக்கினந் தவறுமாயி னெதுவுஞ் சித்திக்காது. ஆதலின், சீதாபிராட்டி விநோதமாகச் செய்த சிவலிங்கப்பெருமானையே பிரதிட்டை செய்குதி" யென்றனர் வில்லாசிரியனாகிய ஸ்ரீராமன அதனைக்கேட்டு "அதுவே சிறந்தது; அங்ஙனமே செய்வே"னென்று முனிவர்கள் தேவர்கள் சீதாபிராட்டி இலக்குமணாதியோரோடும் பெருமகிழ்ச்சிகொண்டெழுந்து ஸ்நானஞ்செய்து, நித்தியகருமாதிகளை முடித்து விபூதி உருத்திராக்கந் தரித்து இரக்ஷாபந்தனமிட்டுச் சிவப்பிரதிட்டைக்கு விதித்த விதிகளைச் செய்து, சிவமந்திரங்களால நியசித்துத் தன்னைச் சிவமாகப் பாவித்துத் தனது இருதயத்தினின்று கங்கையணிந்த சடாமுடியும், ஞானசந்திரப் பிறையும், சருப்பச் சரட்டிற்கோர்த்த தாமரைமலர்வாசமும், பஞ்சவர்ணங்களின் பேரொளிவீசும் ஐந்துமுகங்களும், சோமசூரியாக்கினியாகிய திரிநேத்திரங்களும், சருப்பகுண்டலமணிந்த திருச்செவிகளும், காளகண்டமும், பத்துவித ஆயுதங்களோடு சருப்பகங்கணமணிந்த பத்துத் திருக்கரங்களும், தான் மீளாவடிமையெனபதை புணர்த்து மாமையோடு பன்றிக்கோடுகள் வரிசையாக மாலைபோலத் தொங்குந் திருமார்பும், நஞ்சையுமிழும் வெண்பற்களையுடைய சருப்பக்கச்சிறுக்கிய புலித்தோலாடை தொங்கு மிடையும், வீரக்கழலும், தேவர்களது முடித்தழும்பும், தாமரைச்சாத்திய கண்மலருங் கிடந்தொளிருந் திருவடியும், முத்துவடமணிந்த தனங்களையுடைய மலர்வளர்காதலி நீங்காத இடப்பாகமும் ஆகிய சிவரூபத்தைத் தனது அஞ்சலியத்தினெல்டுத்துச் சுழுமுனைவழியாகத் துவாதசாந்தமட்டுங் கொண்டுபோய்ச் சோதிமயமாக மந்திரரூபமாகித் தனது அஞ்சலியில் வந்ததாகப் பாவித்துச் சத்தியோசாத மந்திரத்தினாலே, பிராணபிரதிட்டைமுதலிய செய்து தாபித்தனன். அச்சிவலிங்கப்பெருமானுக்கபிடேகஞ் செய்யும்பொருட்டு, அவரது சந்நிதானத்துக் கைசானியதிக்கிலே தனது வில்லின் கோடியினாலே ஒரு கூபத்தை யுண்டாக்கிக் கோடிதீர்த்தமெனப் பேர்கொடுத்து, அவரது சந்நிதானத்திலே பசுரூபமாகிய இடபதேவரையும் பிரதிட்டைசெய்து, அச்சிவலிங்கப் பெருமானுக்குப் பூசைசெய்வானாயினன்.

ஸ்ரீராமனானவன், இராமலிங்கப்பெருமானுக்கு எண்ணெய்க்காப்பு பஞ்சகவ்வியம் தேன் பழவகைகள் இளநீர் முதலியவற்றினாலும் இடையிடையே கோடிதீர்த்தத்தினாலும வேண்டியவாறு அபிடேகஞ்செய்து, திருவொற்றாடை சாத்திப் பீதாம்பரமு

டுத்தித் தானன்றுதேடிக் காணாத திருவடியைக் கண்டு மலர்ந்த முழுமுடைப்பருகிப் பாத்தியமும், பஞ்சமுகங்களுக்கும் ஆசமனமும், சிரங்களுக்கு அருக்கியமுங் கொடுத்துக் குங்குமக்குழம்பும் திருமுடிஆரமாதிய திருவாபரணங்களுஞ் சாத்தி, அறுசுவைகூடிய திருவமுதை நைவேதித்துப் பானீயங்கொடுத்துத் தூபதீபங் காட்டிச் சோடசோபசாரங்கள் செய்து வேதாகமவிதிப்படி தழாது செய்யவேண்டியவைகளனைத்தையுஞ் செய்து, பஞ்சாட்சரத்தை நூற்றெட்டுருச் செபித்து நூறுதிகங்களைப் போக்கிப் பூசாபலனையுந் தத்தஞ்செய்து அக்கினிதிக்கிலே குருபீடமும் மேற்கே யோகபீடமும் வித்தியாபீடமும் பூசித்துத் தத்துவத்திரையுஞ் சாத்தி வேதமந்திரங்களினாலே தோத்திரஞ்செய்து மூன்றுதரம் பிரதக்ஷிணஞ்செய்து சன்னிதானத்திலே அன்பினாற் கைகொட்டிக் கூத்தாடி ஆநந்தக்கண்ணீர் சொரியுமாறு பரவசமாய் நின்றனன்.

சிவபெருமான் உமாதேவியாரோடு பிரசன்னராகி ஸ்ரீராமனுக்கு அநுக்கிரகஞ்செய்வாராயினர். "ஸ்ரீராமனே கேட்குதி, கந்தமாதனச் சாரலிலே சேதுவின்டிமூலத்திலே நீ பிரதிட்டைசெய்து கோடிதீர்த்தத்தினு லபிடேகித்துப் பூசித்த லிங்கத்தை யாவர் தரிசிப்பார்களோ அவர்கள் முன்னீட்டிய பாவங்களனைத்தும் நீங்கும். அன்றியும், தனுக்கோடியிலே சென்று விதிப்படி ஸ்நானஞ் செய்து வந்து இந்த இராமலிங்கத்தைத் தரிசித்தவர் செய்த பாவங்க ணீங்கி மோட்சமடைவர். இதுசத்தியமென்றருளினர்" அவ்விடத்திலே முனிவர் தேவர், அரம்பையர், சித்தர், யாணராதியோரும் ஸ்ரீராமனைச் சேர்ந்தவர்களனைவோருந் தனித்தனியே சிவலிங்கப் பிரதிட்டை செய்து விதிப்படி யருச்சித்தனர்.

இங்கே இங்ஙனமாக, அனுமான் இரண்டு சிவலிங்கப் பெருமானை யெடுத்துக்கொண்டு திருக்கைலாயத்தினின்றும் நீங்கி விரைவாகக் கந்தமாதன மலைச்சாரலிலே வந்து ஸ்ரீராமனையும், இலக்குமனையும், சீதாபிராட்டியையும், சுக்கிரீவனையும் வணங்கி, நடந்த சங்கதிகளொன்றுந் தெரியாமல் உற்று நோக்கிச் சீதாபிராட்டி கூட்டிய திருமணலையே சிவலிங்கப்பெருமானாக வுருவித்து ஸ்ரீராமன் பிரதிட்டை செய்து பூசித்திருப்பதைக்கண்டு அடங்காத கோபங்கொண்டு, நாணமுற்று, "நாம் வீணே சென்றுலைந்து வருந்தினோமே" யென்று வெம்மபி வெடித்துக் கண்

ணீர் சொரிய நின்று தாங்கமாட்டாது ஸ்ரீராமனை நோக்கிச் சொல்லுவான் "ஓ சீதாபதியே, யானெடுத்த இப்பிறப்பு துக்கத்தின்பொருட்டன்றி, இப்பிறப்பாற் சுகமொன்று மடைந்திலேன். கொம்பர்களின் வசிக்குங் குரங்கு எவ்வாறு பெருமையடையும்! அன்றியும் அமரர்களாலும் அரக்கர்களாலு மளவுபடாத துன்பத்தையடைந்த வென்னைத் தந்தைதாய் தனையரும் விரும்பார்கள். தாரமானவர்களுமயங்காராயின் இப்பிறவியே எல்லையில்லாத கவலைக்கிடமாயிற்று. முன்பு திருவடித்தொண்டிலும பின்பு போரமரிலும் பெருவருத்தமுற்றேனே. அன்பிலாத அன்னையினுக்கொப்பாகிய நீ, யாவருமென்னை யவமதிக்குமாறு செய்தனை. யானுனக்குச் செய்த குற்றம் யாது? சுக்கிரீவன் பெண்ணாசையினாலே தமையனைக் கொல்லுவித்து நின்பின்றிரிந்துழலுகின்றான். விபீடணனும் பூமியை அரசாளும் விருப்பத்தினாலுனதுபின் றிரிந்துழலுகின்றான். ஸ்ரீராமனே, நானெதனை விரும்பி நின்பின்றிரிந்துழன்றேன். என்னை இவ்வாறு துயரப்படுத்த நினைத்தோ இந்த வீரர்களனைவரும் உனது ஏவலின் வழிநிற்க, என்னைத் 'திருக்கைலாயஞ்சென்று சிவலிங்கங் கொணருதி' யென்றனுப்பியது. யான்விரைந்து ஆகாயமார்க்கமாகச் சென்று திருக்கைலாய மலையையடைந்து சருகுணவுகொண்டு தவங்கிடந்து, தோத்திரஞ்செய்து, சிவலிங்கப்பெருமானைப் பெற்றுவந்தேன். இதில் நானனுபவித்த கடடத்தை யொருசிறிதுஞ் சிந்தியாது, மாறுபடச்செய்த நின்றிருவுளமறியேன். மணலிலிங்கத்தை யாவர் தரிசிக்கப் பிரதிடடை செய்தனை? இதற்கியானென்ன சொல்வது. இனிஇந்தமூர்த்திகளை யானென்னசெய்வது! 'பூருவசன்ம தபோபல மில்லாதவன் ஒரு செயலைச் செய்வானாயின் அது சித்தியாகாத அளவேயன்றி யவமானமுமடைவன்' என்றமூதுரைக் கிலக்கானேன். சீதாரா, யானென்னசெய்வேன்! எங்குச்செல்வேன்! இந்த அவமானந்தாங்கமாட்டேன்! என்வருத்தமொருவாறிருக்க, இப்புண்ணியபூமியானது பாபியாகிய வென்னையும் சுமக்கின்றதே என்றவருத்தம் மேலோங்குகின்றது. ஸ்ரீராமா, உன்னாற்கிடைத்த அவமானத்தைப்பெற்ற இவ்வுடலைச்சுமக்கேன். ஆயின், உனது திருச்சபையோர் களிக்குமாறு யான் இறந்தொழிவதே உன்னிடத்து யாசித்துப்பெறுவது" என்று சொல்லி யழுது புலம்பித் திருவடிக்குமுன் வீழ்ந்து புரண்டனன்.

ஸ்ரீராமன், அனுமான் தன்னடியில் வீழ்ந்து தாங்காத் துயரமடைவதைக் கண்டு, அவன்து மனந்தேறும்படி சில வார்த்தை

லைச் சொல்லுவான். "அனுமானே கேட்குதி, யான் எனது நிலையையும் பிறவுயிர்களது நிலையையுமறிவேன். யானறியாதது ஒன்றுமில்லை. திரிகாலசம்பவங்களையு மறிவேன். மாருதியே, சீவான்மா ஒன்றே பூருவசன்மவினைப் போகங்களை யனுபவித்தற்காகப் பிறந்து அவை முடிந்துழியிறக்கும். அடங்காத கன்மங்களைச் சொர்க்கநரகங்களி லனுபவிக்கும். பரமான்மாவாகிய பரம்பொருள்நிர்க்குணமாய், சோதிச்சுவரூபமாய், ஒன்றாய், தொடர்பில்லாததாய், ஆண் பெண் அலியாதிய குறியீடுகளில்லாததாய், நிராதாரமாய், வேதனைவிகாரங்க ளற்றதாய் விளங்குந் தலைமையுடையதென்றறிகுதி. 'அகம்பிரமாஸ்மி' என்ற நிலையிற்றவறி மெய்ஞ்ஞானவழிக்கு அருகமாயிருக்கும்படியாய் வழியைத் தடுக்கும் அகங்காரத்தை யொழிகுதி. பிறவுயிர்கட் கின்னாசெய்தலை யொழிகுதி. விருப்பத்தோடு தருமஞ் செய்குதி. தீயார்கூட்டத்தை விடுக்குதி. புலன்களை யவற்றின்வழி செலுத்தாது தடுக்குதி. புறங்கூறுதலை யொழிகுதி. சிவாதிதேவர்களை வழிபடுகுதி. உண்மையே பேசுதி. அகமும் புறமு மடியுமுடியும் ஞானவடிவாகிய சைதன்னியத்திலே பிரிவின்றி நிலைக்குமறிவில்லாமையினால் உலகமயக்கப் பொருள்களின்மேல் ஆசையுண்டாகி யெழுந்தபிராந்தியினாலே நல்லசெயல்களனைத்துந் தீயனவாகத் தோன்றும். கற்பனாசங்கத்தினால் பொருள்விருப்புண்டாகும். அவ்விழைவினாலும் வெறுப்பினாலும் தர்மாதர்ம முண்டாகும். அவற்றாற் றேவர் மனுடர் நரகாதி பிறவி பேதங்களுண்டாகும். மாருதியே, நீ யிவற்றைச் சிறிதுஞ் சிந்தியாது துன்பமடைதல் யாதாகும். சந்தனம், பச்சைக்கருப்பூரம், அகில், புழுகு, கஸ்தூரியாதிய வாசனாதிரவியங்களா லழுக்கடைந்த விவ்வுடம்பு தனது துற்கந்தஞ் சிறிதுமாறினு நீ துற்கந்த திரட்சியாகிய வுடம்பு சத்துக்களாலே மதிக்கத்தக்கதே ! சருக்கரை பழவகை தேனாதிய சுத்தவஸ்துக்கள் இவ்வுடம்பிற் புகுந்தன்றோ தீயநாற்றத்தையுடைய மலமாகின்றன. நறுநாற்றத்தையுடைய பால் இளநீராதிய சுத்தப்பொருள்கள் இவ்வுடலிற் புகுந்தன்றோ உவர்நீராக வருகின்றன. சுத்தமாகிய வெள்ளைவஸ்திரம் இவ்வுடலி னுடுக்கப்பட்டன்றோ அழுக்கடைந்து நாறுவது ஆதலினால் பெரியோர்களிவ்வுடம்பு கழியும்வரையுஞ் சுமத்தற்கு நாணமலிதற் களிப்படைவரோ. மாருதியே, இன்னுமுண்மையாகச் சொல்லுகின்றேம், வினைவலியினாலே புலன்களு மொவ்வொன்றாக நித்திரையின்றி வந்து கூடியலைக்கும் திரிகரணங்களின் றடுமாற்றத்தினாற் பொய்வினைகளைச் செய்திளைக்காத சிறைச்சாலையாகிய இவ்வுடம்பினாற் பெறுமின்பம் யாது. ஊறிப்பாய்கின்ற சுக்கில சுரோணி

தக்கலப்பாற் றிரண்டு வேறுவேறு உறுப்புகளாய், பால தரு ணனுகி வளர்ந்த சரீர மொடுங்கித் திரங்கித் தளாடுநிலை வந்தா ல் மரணமாகாதோ. இந்தப் பிறபபினுற் றுன்பமன்றி யின்பமொ ருசிறிதுமிலலை. கடந்தபிறப்பிலும் வருபிறப்பிலும் வருவது து ன்பமாயின், சனனத்திற்கு யாவரஞ்சார். பிறவிக்குருடன் பின் னேரிடத்துச் செல்லும் வழியில் வருங்குழியில் விழுந்து எழு ந்துபோய் மீண்டுவரும்பொழுது மக்குழியில் விழுந்துவருந்துவ துபோல மரணசனனத்தினு லுயிர்வருந்துவதே. அவையொழிந் தாலன்றி யின்புறுவதெங்ஙனம். மாருதியே, பிறவிக்கேதுவாகிய பாசந்திருவருளாகிய கதிரா னழிவதன்றிப் பிறிதொன்று னழியா து. இதைச் சுத்தவேதாந்த ஞானமே வெளிப்படையாகச் சொ ல்லும். அது யாவரது மனதையுங் கவருகின்ற மூன்று மகா வா க்கியங்களினு லுண்டாகும். அரிய கலைகளை யறிந்த ஞானசாரி யனது சட்சுதீக்ஷையினுலே இப்பியில் வெள்ளிபோல விபரீத மாய்ப் பிரகாசித்த சகமுழுதும் சருவசங்க பரித்தியாகமாக நசி க்கப்படடு வெள்ளியென்னும் பிராந்தியற இப்பியாகத் தோன் றுவதுபோல, பொய்யென்பது திடமாகும். இந்த உண்மைஞா னம் பிறவாமல் விலாப்புடைக்கப பேருணவுகளை யுண்டு பிரம ஞானமாகிய கிரியைகளொன்றையுந் தொடங்காமல் உறங்கி வி ழிக்கும் அவிவேகிகளை இயமனே கைக்கொள்ளுவன் இடையே பற்றிச் சூழ்ந்தவைக ளனைத்தும் பிரியும். தோற்றியவனைத்து மொடுங்கும். உயாந்தவைகளனைத்துந தாழும். மாடமாளிகைக ளனைத்தும் பாழ்ங்குழியாகும். பழுத்தபழம் விழுமானல் எடுத் தசரீர மிருக்குமோ! இன்று என்பதழியுமானல் நாளையென்பத ழியாதோ! இந்தமாத மோடுமானல் பிறக்குமாத மிருக்குமோ! இவ்வாண்டு செல்லுமானல் எதிராண்டுசெல்லாதோ! இது புதி தன்றே. ஆதலால், மரணம் நிச்சயமே. நாங் சாடுகளிற் புகினும மலைமுழைஞ்சில் நுழையினும், எவ்வளவோ சேய்மை நிலத்திரு ப்பினும, பெருங்கடலுண் முழுகினும் மரணகாலம்வரின் சிறிது ந் தடைபடாது. மாருதியே, நமதுறவினரும், நாமிருந்த நாடுந கா வீடுகளும், நமதென்றுகொண்ட மனைவிமக்களும், திரையடி க்கும்போது சேர்ந்தும் பிரிந்துமோடுந் திருணம்போலவும், வழி ச்செல்வோ ரிடையிற் கலந்தும் பிரிந்தும் போவது போலவுஞ், சேருங்காற் சேர்ந்தும், பிரியுங்காற் பிரிந்தும் போகுமேயன்றி நிலைக்குமோ. இதற்கேது பரிகாரம். உயிரானது பெருங்கடற் பி ரவாகம்போலச் செய்துகொண்ட வினைக்குவைகளினுலே, நெடு ங்கால மோரிடத்தி னிலைப்பதில்லை. சுவாக்க மத்திய பாதலங்களி

லெங்கே யனுபவ மிருக்குமோ அங்கே தங்கும். "வினைப்போக மொழியிற் றினைப்போதுமிரா" என்றபடி பின்னனுபவமுள்ள விருந்துச் செல்லும். இதுவே யுண்மை. மாருதியே, தன்னைத்தா னுணரிற் றனியன்றி வேறு சகசமிலலையென்றறிந்த நீயு மிதனை க்குறித்து வருத்தமடைவையோ. ஆ! ஆ! இதுபெருமயக்கம். வேதாந்தமுடிவிலே நின்ற ஏகவஸ்துவைச் சதாத்தியானஞ்செய்குதி. யான் செய்தேன், பிறர் செய்தாரென்பது இல்வழக்கன்றி யுண்மையன்று. அது இரத்தசம்பந்தத்தா லாவிதாயினு முற்று நோக்கின் வேறும். ஆதலின், யான் பிரதிட்டை செய்த சிவவடிவம் நீ செய்ததே. இதற்கு வருந்துவது புத்தியல்ல. மாருதியே, உன்னோடு வேற்றுமைகொண்டு செய்தேனல்லேன். குறித்த சுபலக்கினம் வந்தமையால், அது நமது சௌகரியத்தைக் காத்திருக்காதாகையால், சீதாபிராட்டி கூட்டிய மணலையே சிவலிங்கமாகக் கொண்டு பிரதிட்டை செய்தேனிஃதுண்மை. அன்றி, உன்னையவமதித்து இது செய்தேனென்று சினக்காதே. நீ கொணர்ந்த சிவலிங்கத்தைப் பிறிதிடத்திலே நின்பெயராற் சுபதினத்திலே பிரதிட்டைசெய்குதி. நீயு மனேக மிராக்கதரைக் கொன்றனை. அப்பழி கழியுமாறு சிவார்ச்சனை செய்குதி. நீயருச்சித்த அனுமேசலிங்கத்துக்கே முதற்பூசையும் வணக்கமும் செய்து பின்பு நமது இராமலிங்கத்துக்கு அருச்சனைவழிபாடு நடத்துக. நீயருச்சித்த சிவலிங்கத்தைத் தரிசிப்பார்க்குப் பேய்பூத வேதாளங்களடையாது. நன்மோட்சமுண்டாகும். இவ்விரண்டு சிவபெருமானையும் யோசனைதூரத்துக் கப்பாலிருந்து நினைப்பாருக்கு, இட்டசித்திகளனைத்துங் கைகூடிப் பாசங்களொழிந்து மோட்சமுண்டாகும். அவர்கள் தவம் யாகஞ் செய்யவேண்டியதில்லை. இவ்விரண்டு இலிங்கத்தினுமன்றி இலக்குவன் சீதை சுக்கிரீவன் நளன் சாம்பன் அங்கதன் நீலன் அனந்தன் விபீடணன ஆகியோர் தங்கடங்கள் பேரினாற் பிரதிட்டைசெய்த சிவலிங்கமூர்த்திகளிடத்திலே சிவபெருமான் என்றுஞ் சாந்நித்தியரானவர். அன்றியும், என்னாற்றாபித்த இராமலிங்கந் தாபித்தமுகூர்த்தவலிமையினால் சத்தபாதாள லோகங்களையு மூடுருவிக் கீழ்ச்சென்று வேரூன்றியது. அருணாசலமலையி னடியைக் கண்டாலும், மேருமலையை யசைத்தாலு மிதனடியைக் காணவு மசைக்கவும் முடியாது. உனக்கு வலியிருக்குமாயின், பிடுங்கிவிட்டு நீகொணர்ந்த லிங்கத்தைப் பிரதிட்டை செய்குதி" என்றருளினன்.

அநுமானு மதுகேட்டு மனது சற்றேயாறி, இராமனுகனை யெடுத்துப் பிறிதிடத்திலே வைக்கவுந் தான்கொணர்ந்த சிவலிங்கப் பெருமானை அவ்விடத்திலே தாபிக்கவும், விரும்பிப் பெருமகிழ்ச்சியோடெழுந்து அனைவருங் காணும்படி தனதிருகைகளாலுஞ் சிவலிங்கப்பெருமானை யசைத்தனன். மனவலியோடு புலகாலசைக்கவு மஃது சிறிது மசையாதிருக்கக்கண்டு, பின்னும் பேரொலிசெய்து மார்பை நிமிர்த்தி வாலைக்கிழப்பி யசைக்கவு மசையாதாயிற்று. அதுகண்ட பலருஞ் "சீதாபிராட்டி கூட்டிய மணற்கும்பமே ஸ்ரீராமனது அன்பினாலும் முகூர்த்தபலத்தினாலுஞ் சிவானுக்கிரகத்தினாலும் பக்கங்களோடு மசைந்தொன்றாகியது. அநுமானசைத்தெடுப்பதற் கிஃதென்ன மருத்துமாமலையோ" வென்றனர். அநுமானதுகேட்டுப் பெருங் கோபமடைந்து, தனது வாலினாற் சிவலிங்கத்தைப் பன்முறை சுற்றித் தோள்களை நிலத்திலே யூன்றிப் பெருவிசையோடு மேலேதொங்கி யிழுத்தலும், உலகமுழுதும் நடுங்கியது. சிவலிங்கமொருசிறிதும் மசைந்திலது. பூட்டிய வாலறுந்து மேருமலையின் சிகரம் விழுந்ததுபோலக் கூப்பிடுதூரம்போ யிரத்தஞ் சொரிய விழுந்து இரத்தக்குழியி லமிழ்ந்தினன். அதுகண்டவர்க ளனைவரும் சித்தசித்துப் பிரபஞ்சங்க ளனைத்தும் கலந்திருக்குஞ் சிவபெருமானது மகிமையையும் அவரைத் தாபித்த ஸ்ரீராமனது அன்பையும் புகழ்ந்தனர்.

தேவர்களும் முனிவர்களும் அநுமானது நிலையைக்கண்டு வருந்தினர். ஸ்ரீராமனும் இலக்குமனும் சீதையு மற்றையோருங்கண்டு மனநடுங்கிப் பதைபதைத் தழுதனர். ஸ்ரீராமன் பின்பு அநுமானைக் குழியினின்றுந் தூக்கி மடியில்வைத்து அவனது சரீரத்திலுள்ள இரத்தத்தைத் துடைத்து "அஞ்சனைக்கினியவருமகனே, வாயுகுமாரனே, பம்பையாற்றங்கரையிலே எனது கவலையொழியுமாறு தெளிவித்துச் சுக்கிரீவனோடு நட்புறச் செய்தவன் நீயன்றோ! அந்தநாள்முத லெம்மைத் தந்தைதாயாக வுட்கொண்டு கடல்தாண்டினையன்றோ! சுரசை சாயை யெனப்பவர்களைக்கொன்றது யார்பொருட்டோ! கடலைக் கடந்ததுங் காரிருளில் இராக்கதர்கள் சஞ்சரிக்கு மிலங்கைமுழுதுந்தேடிச் சீதையைக் காணுதேங்கி யிளைத்ததும், பின்னசோகவனத்தை யடைந்து கண்டு அவள் தேறும்வண்ணம் மோதிரங்கொடுத்துச் சூடாமணியை வாங்கிவந்து என்னைத் தெளிவித்ததும் நின்பொருட்டோ! அதுமட்டோ, இராவணனை நிகர்த்த எண்பதினாயிரம் இராக்கதர்களையும் பிருகத்தனுடைய மகன் சம்புமாலியையும், பல பண்டை

த்தலைவர்களையும், அமாத்தியர்களது புத்திரரெழுவரையும், சதுரங்கசேனைகளோடு மட்சயகுமாரனையும், வதைத்து, இராவணனை வைத்துகாட்டும்பொருட்டே இந்திரசித்தனாற் கட்டுண்டு அவன்முன்னிலையிற் சென்று, வேண்டியபடியவனை வைததுச, பின்னவனது இலங்காபுரிமுழுதும் நெருப்புமூட்டியதும், இன்னுமென்னைக்குறித்து நீபட்ட கட்டங்களை நேரே கண்டயானுன்னை மறப்பேனோ. பிரதியுபகாரங் கருதாது பெருந்துன்பமடைந்த நீ மரிக்கின் யானுயிரோடிருப்பேனோ. நீயிறப்பின், சீதையையு மிலக்குமனையு மெனக்கு யாதுக்கு. கண்ணிழந்தவனுக்குப் பிறவுறுப்புகளாற் பயனற்றவாறுபோல நீயிறக்கின் மற்றையோராலென்னபயன். சுக்கிரீவனாதியோர் வாட்டமுற உன்னையிழந்து பின் நாணமின்றி முடியும் புனைவேனோ. கனிகாய் கிழங்கு முதலிய உணவுகளையுண்ணுமற் சரீரம் மண்படத்தக்கதாக ஏன் கிடக்கின்றனை. அன்றமுதசஞ்சீவினி கொணர்ந்து உயிர்காத்த தோன்றலே, யான் ஸ்நானஞ்செய்யப் புகும்போது தண்டு கமண்டல தருப்பையாதி கொண்டுவருவையே. அரக்கரகந்தையுஞ் சீதை துயருமகற்றிய வள்ளலே, யானுனது புயவலிகொண்டன்றோ அரக்கரை வென்றது. சீதையைச் சேர்த்தமைபோலத் தம்பி பரதனோடென்னைச் சேர்க்காதொழியின், நின்னை யுலகத்தவரென்சொல்லார்" என்றின்னோரன்ன பலவுஞ் சொல்லிப் புலம்பிக் கண்ணீரினாலனுமானது சரீரக் கறையைக் கழுவினன். ஸ்ரீராமனது கண்ணீர்பட்ட புண்ணிய விசேடத்தால் மாருதியானவன் இராமலிங்கப்பெருமானுக்குச் செய்த அபராதநீங்கி யறிவுகொண்டெழுந்து ஸ்ரீராமனைக்கண்டு, சீதாபிராட்டியு மிலக்குமனு மற்றைய குரக்குவேந்தருங் களிப்படையத் தோத்திரஞ் செய்வான்.

"ஆதிநாராயணனே, தண்டபாணியே, கடல்வண்ணனே, சருப்பசயனனே, பிதாம்பரன்றந்தையே, சகலலோகநாதனே, அரக்கரரியே, சீதாபிரானே, மாதவனே, பத்தசகாயனே, சங்குசக்கரபாணியே, மற்சாவதாரனே, கூர்மாவதாரனே, வாமனனே, நாரசிங்கனே, இரணியரட்சகனே, பலராமனே, ஸ்ரீராமனே, அகலிகாசாபமோசனனே, தாடகாசங்காரனே, வாலிமோசனனே, கோபாலனே, தசரதகுமாரனே, சுத்தநிராமயனே, காயாவண்ணனே, பரிபூரணனே, தேவாதிபனே, உனக்கு வணக்கம். அவத்தாத்திரயத்தினுமாள்பவனே, யுனக்குவணக்கம். தேவரீரது புகழை யாவர் சொல்லுவார். தேவரீரே என்னைக் காத்தருளுக"

உன்பாலுறுசீர்த்தியையிம்பரிலும்பர்தம்மாற்
சொன்பான்மதிகொண்டுவகுத்தனர்கூறலாமோ
வன்பாலடைவாரவர்பாலவர்தம்மிலன்பா
வென்பாலருள்கூருதிநின்பொருட்டென்வணக்கம்.

என்று வணங்கி, சீதாபிராட்டியை நோக்கித் "தாமரையாசனியே, பொன்விளக்கே, மாளாதசெல்வமே, அம்பையரசே, சுகதுக்காவுடதமே, சனகன்றவமே, நித்தியவாழ்வே என்னையாண்டருளுதி"

தருமத்தின்வடிவேவானிற்சந்திரனுடன்பிறந்த
சருமைத்தண்கயற்கணல்லாய்கவுத்துவமழுங்கக்கண்ணன்
மருமத்தின்மருவுமாதேமலவிருட்படலைமாலைக்
குருமத்திற்கதிரேநின்கணுவமனும்பொருளுமாவாய்.

என்று தோத்திரஞ் செய்தனன் இத்தோத்திரங்களை யாவர்சொல்லித் துதிப்பார்களோ அவர்களிட்டசித்திகளைப்பெற்று நரகடையாது வீட்டின்பமடைவர்கள்.

ஸ்ரீராமன் சீதாபிராட்டியோடு அனுமான் சொல்லிய தோத்திரத்தைக் கேட்டு மகிழ்ந்து, அனுமானைநோக்கிச் சொல்லுவான். "அன்பனே, அஞ்ஞானத்தாலே யடாதசெயலைச் செய்தனை, முப்பத்துமுக்கோடி தேவர்களாலும், இந்திரன் பிரமன் விட்டுணுவாலும், மற்றை யாவர்களாலும் நானிவ்விடத்திலே பிரதிட்டைசெய்த சிவலிங்கத்தை யசைக்கமுடியாது; நீயேனிதற்குத் துணிந்தனை. யாங்களனைவரும் வருந்தும்படியாக யுத்தஞ்செய்த பெருமையையுடைய இராவணன் திருக்கைலாயமலையை யெடுத்துப் பட்டவேதனையைக் கேட்டறிந்திலையோ. மாருதியே, முன்னொருகாலத்திலே தேவர்களது அகங்காரத்தை யொழிக்கும் பொருட்டுச் சிவபெருமான் ஓர்துரும்மை நிறீஇ 'இதனை யசையுங்க' ளென்று சொல்லியவளவிலே, யுன்து தந்தையாகிய வாயுதேவன் சிறிது மசைக்கமாட்டாது வருந்தியதை நீ கேட்டறிந்திலையோ, அண்டங்களாகியும் ஆன்மாக்களுக் கான்மாவாகியும் அவற்றின்வேறாயும் நிற்குஞ் சிவபிரானது குணத்தை 'அன்னியர்க்கன்னியன், அடியார்க்கெளியன்' என்ற சத்தத்தா லறிந்திடாயோ. மாருதியே, நீ செய்த சிவாபராதத்தாலிவ்வாறு தண்டனையடைந்தனை. இனிமேற் சிவபெருமானுக்காவது சிவனடியாருக்காவது தீங்கு நினைக்காதே. சிவசாநித்தியமாகிய மணலிலிங்கத்தை விலக்கி வேறு சிவலிங்கத்தையே தாபிக்க நினைத்தபடியா

ல் அக்குற்றத்தைப் பொறுத்தருளுவர். அவர் வெறுக்கி னுலகத்தி லெதுநிலைக்கும். மாருதியே, நீ விழுந்த இந்தக்குழி இன்றுமுதல் 'அனுமக்குழி' யென்று வழங்குக. இதிலே நீ விழுதலாற் றீமையனைத்தும் நீங்கின. இதனது மேன்மை கூறின், சிவபெருமானது சடையினின்றுங் கௌதமியாறு தோற்றியது. அதிலே விதிப்படி ஸ்நானஞ்செய்வோர் ஆயிரம் அச்சுவமேதயாகபலனடைவர். நூற்றுமடங்கு விசேடமுடைய சரசுவதி கங்கை யமுனையாகிய மூன்றுதீர்த்தங்களு மோரிடத் திங்கேயுள்ளன. தனித்தனியவற்றிலே சென்றாடும் பேற்றினு மாயிரமடங் கதிகபலனைச் சமீபமாகிய இம்மூன்று தீர்த்தங்களுங் கொடுக்கும். அந்தமூன்றினு மனந்தமுறை தீர்த்தமாடும் பயனை நீ விழுந்தவிக் குழியிலொருமுறையாடும் பலன் கொடுக்கும். பெறுதற்கரிய மக்களாய்ப் பிறந்து மிக்குழியினருகே சிராத்தஞ் செய்யாரேல் தென்புலத்தார் வெறுப்பர். இதிலே ஸ்நானஞ்செய்யாது ஆகுதியுஞ் செய்யாராயின், அவரைத் தேவரும் வெறுப்பர். அவர்களுடம்பெடுத்ததும் வீண். யாவராயினும் நினது குண்டத்திலே யெள்ளோடு தருப்பணஞ் செய்யின், அவர்களுக்கது நெய்யாறாகப் பெருகும்" என்றனர். ஸ்ரீராமன்வார்த்தையை அனுமான் கேட்டுப் பேரானந்தமடைந்து, இராமனாதனுக்கு வடதிசையிலே சமீபமாகத்தான் கொணர்ந்த சிவலிங்கப் பெருமானைத் தாபித்து அருச்சித்தனன். இராமனாதலிங்கத்திலே அனுமான் வாலினாற் சுற்றிய மூன்று வரைகளென்றுங் காணத்தக்கதாய் விளங்கும். ஆதலினா லவ்விலிங்கம் வேண்டிய இட்டசித்திகளைக் கொடுக்கும். உலகத்திலே நன்மைவிளங்கவும், இரகுகுலந் தழைக்கவு முற்பத்தியாகிய ஸ்ரீராமன் சிவலிங்கப் பிரதிட்டைசெய்த வரலாற்றை இதுகாறுஞ் சொல்லினோம். முனிவர்காள், இதனைக் கற்போருங் கேட்போரும் இராமலிங்க தரிசனைப்பேறடைந்து மேலே மோட்சம்பெற் றுய்வர்கள்.

இருடீரந்துலகத்தைவிளக்கியேரகுகுலந்தழைவிக்கவுதித்தகோ
னருளிலிங்கநிறுத்திவழுத்துமாறதுநுவன்றனனற்றவிர்கற்றுளோர்
பொருவினன்கதைமிக்கசெவிக்கொள்வார்புகலிலிங்கமுதற்றரிசித்தலால்
வருபயன்றனைமுற்பெறுகிற்பர்மேன்மறுவறுஞ்சிவமுத்துபடைப்பரே.

இராமனருச்சனைச்சருக்க முற்றிற்று.

# பிரமகத்திச் சருக்கம்.

முனிவர்களனைவருஞ் சூதபௌராணிகரை நோக்கி, "ஐயனே, கொடிய இராவணன் இராக்கதனன்றே! அவனைக் கொன்றது யாவருக்கும் பெருநன்மையாயிருப்ப, அது பிரமகத்தியாகி ஸ்ரீராமனை வருத்தியது எப்படி? பிராமணரல்லாதோரைக் கொல்வதும் பிரமகத்தியாகுமோ? அன்றியுந் தன்னையடைந்தவர்களது பழிபாவங்களனைத்தையு மொழிக்குஞ் ஸ்ரீராமனையும் பிரமகத்தி பற்றுமாயின், வேறியாரைவிடாது. இதிலேயுள்ள எங்களது சந்தேகத்தை யொழித்தருளவேண்டு" மென்று வணங்கினர். அதுகேட்ட சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களை நோக்கிச் சொல்லுவார்.

முனிவர்காள், காரணமின்றிக் காரியமுளதாமோ. பிரமாவினது புத்திரனாகிய புலத்தியனுக்கு விச்சிரவாவென்றொரு புத்திரனுதித்து நெடுங்கால மருந்தவஞ் செய்தனன். இவனிங்ஙன மருந்தவஞ் செய்யுங்காலத்திலே, சுமாலியென்னுமரக்கன் பாதலத்தினின்றும் புறப்பட்டுத் தீமைகளினது தூதுவன்போலத் தனது குலம்பெருகவுந் தேவகுலந் தாழவுந் தான்பெற்ற பேரழகுவாய்ந்த கைகசியென்னும் பெண்ணையுங் கையிற் பிடித்துக் கொண்டு பலவிடங்களினுந் திரிவானாயினன். அக்காலத்து அவனது பேரனாகிய புடபகவிமானத்தி லேறிவருங் குபேரனைக் கண்டு 'இவன்போற் சிறந்தவொருவன் நங்குலத்துதிப்பனானால் நம்மினத்தவர்களனைவரு மெவருக்கு மஞ்சாம லெங்குந் திரிவர்களே" யென்று சிந்தித்துத் தனது மகளை நோக்கி, "என்தருமைமகளே, உன்து பேரழகைக் கண்டா லுருப்பசியும் நாணுவள். இலக்குமியுமதிமயங்குவள். நீயும் பூரணசந்திரன்போலச் சிறந்தனை. உன்னைக் கண்டுயாவர் பிரிந்துபோவர். ஒருவன் பூமியிலே விலைமதிப்பிலாத இரத்தினத்தைப் பெற்றால் அதனைத் தக்கபடி பொன்னணியின் மத்தியிற் பதித்தாலன்றிச் சிறக்காது. அதுபோல உன்னையுந்தக்கவொரு புருடனிடத்திலே யொப்பபடைக்க நினைக்கிறேன். பேரழகுவாய்ந்த பெண்ணைப்பெற்றவர்கள் அவளைத் தக்க கணவனிட மொப்படையாராயின், அவர்களிடத்துத் திருமகளுங் கலைமகளும் வெறுத்து மூதேவியைக் காட்டி விலகுவர். பெறுதற்கரிய கனியும் பருவத்திலே யுண்பவருக்கேயினிதாகும். கன்னியர்களுந் தக்க காலத்திலே தக்க கணவனோடு தழுவுவாராயின், தந்தைதாயரோடு தாமும்பேரின்பமடைவர். தேவர்முகத்தைத் தேவர்களன்றி மனுடரும் விரும்புவர். அது

போலச் சிறந்தவுன்னை யாவரும் விரும்புவர். உன்கருத்தெப்படியோவெனவஞ்சி யிதுகாறும் நினைப்பமலிருக்கிறார்கள். உனதற்குக்கு வாய்ந்த கணவன் பின்வந்துன்னைத் தழுவட்டும். முன்பு நீ எங்கள் குலந் தழைத்தோங்கும்பொருட்டுப் புலத்தியன்மகனாகிய விச்சிரவாவென்பவ னதோ தவஞ்செய்கின்றான். அவனை நீயடுத்து 'நானுனக்கு மனைவியாக விரும்புகிறே' னென்று தழுவுதி. குபேரனைநிகர்த்த பலபுத்திர ருனக்குளராவர்" என்றருளினன். அதனைக் கைகசியுங் கேட்டு நகைமுகத்தா லுத்தரவுகொடுத்து விச்சிரவாவென்பவன் றவஞ்செய்யு மிடத்தடைந்து மாலைக்காலத்திலே மின்னற்கொடியொன்று வந்ததுபோல முன்வந்து அவரது ஓமாக்கினியால் வாடியதுபோலச் சோர்ந்து நாணத்தினு லொல்கி முகத்தைத் தாழ்த்துக் காலின் விரல்களால் நிலத்தைக் கீறிநின்றனள்.

விச்சிரவா என்பவனும் அவளைக்கண்டு "பெண்ணே, நீயார்? உனது தந்தை யார்? நீ இந்த நேரத்திலிங்குவந்த காரணமென்னே? சொல்லுதி" என்றனன். அதுகேட்டுக் கைகசியுஞ் சொல்லுவாள் "புலத்தியகுலப் புண்ணியமே, பஞ்சப்புலப் பகையைவென்ற புங்கவனே, தவவிசேட்த்தா லெப்பொருளையு மெதனையு முள்ளபடி யறியுமறிவினையுடைய வுமக்கு யான் சொல்வதென்னை! ஆயினுந்தேவரீரது பணியை மறுத்தல்சாலாது. யான்சுமாலியென்பவனுடைய மகள். அவனது உத்தரவினால் தேவரீரை யடைந்தேன். குணக்குன்றமே, இனித் தேவரீரது கருணையன்றிப் பிறிதில்லை" யென்றுசொல்லி வணங்கினள். அதுகேட்ட முனிவரும் பின் சிறிதுநேரம் யோசித்து, உள்ளபடி யனைத்தையு மறிந்து சொல்லுவார். "பெண்ணே, நீ புத்திரப்பேறுகருதிவந்தனை. காலவயத்தாலும், இடவயத்தாலும், கருவயத்தாலுமுதிக்கும் பொருள்கள் பலவேறு பேதப்படும். நீ வந்தது மாலைக்காலமாதலால் உன்வயிற்றிற்பிறக்கும் புதல்வர்கள் எளியவர்களாய்த் தாழ்ந்த சகவாசமுடையவர்களாய்ப் பொய்யர்களாய்க் கொடுந்தொழில் புரிபவராய் புலாலுண்பவராய் அரக்கர்களாய் வருவார்க" ளென்றருளினர். அதுகேட்டுக் கைகசியும வணங்கிச் சொல்லுவாள், "முனிவர்பெருமானே, எனக்கு எவராயினுமென்ன பொல்லாதவர்களாக வருகுதல் தேவரீரது புகழுக்காகுமோ" என்று சொல்லி வணங்கினள். முனிவரு மதுகேட்டுச் சிறிது கருணைகூர்ந்து "பெண்ணே, ஆயினும் நீ பெறும்மக்களுள்ளே இளையவன் இராட்சதகுணமில்லாதவனும் அறிவு கொ

டை தவம் நீதி இரக்கம் ஒழுக்கமுடையவனும் எங்கள் குலத்து க்கினியைந்து அரசனாகிப் பிறப்பான்" என்றனர் கைகசியுமது கேட்டு மனமகிழ்ந்து சிலநாளங்கிருந்து கலந்துவசிக்குங் காலத்தில் பத்துத் தலைகளும், இருபது கைகளும், செங்குஞ்சியும், மலைபோன்ற சரீரமும், பிளந்த வாய்களும், வெண்பற்களும், பெருத்த வயிறுமுடையவனாகி இராவணன் என்ற பேருடனே பூமிவருந்தவும் அன்பு கொடை யருளில்லாதவனாகிப் பெரியோர் களஞ்சத்தக்கதாகவும் ஒருபுத்திரன் பிறந்தான். கைகசி பின்னுங் கும்பகன்னனென்று ஒருவனையுஞ் சூர்ப்பநகை யென்றொரு பெண்ணையும் பெற்றுப் பின்பு, ஒழுக்கம் வலிமை கொடை இன்சொல் அன்பு அருள் கல்வியாதிய பிற நற்செய்கைகளையுமுடைய விபீடணனென்றொருவனையும் பெற்று முன்னாலாகலத்தையும் பின்னமுதத்தையும் பெற்ற திருப்பாற்கடல்போல விளங்கி அவர்களோடு சென்றனள். முனிவர்காள், இராவணன் கும்பகன்னனாகிய இருவரும் பிரமவிந்துவாகையர் லவர்களைக் கொன்ற ஸ்ரீராமனுக்குப் பிரமகத்தி தோஷம் பற்றியது. அது சிவலிங்கப்பிரதிட்டைசெய் தருச்சித்தலாலும், புண்ணியதீர்த்த ஸ்நானத்தினாலும் நீங்கியது. பின்பு ஸ்ரீராமன் சீதாபிராட்டி இலக்குமனோடு மவ்விடத்தே குற்றநீங்கியிருந்தனன். முனிவர்காள், ஸ்ரீராமனைப்பற்றிய பிரமகத்தியை நீக்கிய திவ்விய தீர்த்தமொன்றுளது; அதன்பெயர் 'பிரமகத்திமோசனி'யாம். அதுசகலபாவவிருளுக்குச் சூரியனாகும். அவ்விடத்திலே தன்னிழல்வடிவாகத் தோன்றிய பிரமகத்திப் பேயைக் கண்டு ஸ்ரீராமன் கோபித்து, அதனருகேயொரு பிலத்துவாரமுண்டாக்கி, யதிலே விழச்செய்து, அது மீண்டெழாவண்ணம் அவ்வழியையும் அடைத்து, அதன்மேலொரு மண்டபத்தையுங்கட்டி, அதிலே சுவானவாகனனாகிய வைரவனைப் பிரதிட்டைசெய்து காவலாக வைத்தனன். வைரவக்கடவுளினது கடுங்காவலினாலே பிரமகத்திப்பேயஞ்சி வலிகெட்டு நடுக்கத்தோடு கிடந்தது.

ஸ்ரீஇராமன பின்பு இராமநாதனுக்குத் தெனபாலில் பருவதவர்த்தனியையும் பிரதிட்டைசெயதனன். மேலும் இராமநாதனுக்கு இடப்புறத்திலே சந்திரனையும, வலப்புறத்திலே சூரியனையும் முன்னாக அககினிதேவனையும், கிழக்கு முதலிய எட்டுத்திககிலும் அட்டபாலகர்களையும, விநாயகரை வலப்பக்கததிலும், சுப்பிரமணியரை யிடபபக்கத்திலும், வீரபததிரன்தேவர் முனிவர் நாகர் யாணர் சித்தர் முதலிய கணங்களைத் தக்கதாகக இடங்களிலும்,

யமுனை கங்கை கயை சரயு வாணி முதலிய தீர்த்தங்களை மற்றுங் களிலுமிருக்கும்படி வேண்ட, அவர்களனைவரு மிராமநாதனை வணங்கிக் குறித்த இடங்களிலேயிருந்தனர்.

ஸ்ரீஇராமன், இராமநாதனது அருச்சனைக்குரிய சில சிவப்பிராமணர்களை வரச்செய்து, அவர்களுக்குக் கிராமம் ஊர் திரவிய முதலிய பலவற்றையுங் கொடுத்திருக்கச்செய்து, இராமநாதனுக்குப் பூசோபகரணங்களாகப் பொன்னனை முடி குண்டலம் கடகம் முத்துமாலை நாகரத்தினம் நவரத்தினங்கள்பதித்த பதக்கமாதி வேண்டும்பணிகளும் திரவியங்களும் வீதிகளும் பல வர்ணப் பட்டாடைகளும் தேயங்களும் வேண்டுவன கொடுத்து வேதாகமவிதிப்படி தவறுதருச்சித்திருக்குமாறு கட்டளையிட்டு இராமலிங்கப்பெருமானை வணங்கினன்.

இச்சரித்திரத்தைப் படிப்பவருங் கேட்பவருந் தீமைகளினின்றும் நீங்கி வைகுண்டமடைந் தின்புறுவர்.

காதையீதுபடிக்குனர்காதினூடுபடுக்குனர்
தீதெலாமும்விடுத்தணிசேயவாரிசமட்டவிழ்
போதில்வாழ்வுபடைத்தமர்பூவைமேவுபுயத்துணை
யாதிமேனியிலொற்றுமையாவராசிறவத்தரே.

பிரமகத்திச்சருக்கமுற்றிற்று.

## தோத்திரச் சருக்கம்.

சூதமுனிவரானவர், மற்றைய முனிவர்களது முகத்தைநோக்கி முனிவர்காள், ஸ்ரீஇராமன் இங்ஙனமே சௌராதி சண்டாந்தமாகிய தேவர்களைப் பிரதிட்டை செய்தபின்னரே தோத்திரஞ் செய்தனன். பின்பு இலக்குமனும், சீதையும், சுக்கிரீவன்முதலிய குரங்குவீரர்களும், பிரமன் முதலிய தேவர்களும், அகத்தியர்முதலிய இருடிகளும், தனித்தனியே தோத்திரஞ்செய்தனர். அதனைமுறையே உங்களுக்குச் சொல்லுதுங் கேட்பீர்களாக.

உலகிலுயர்ந்தாய்பெருமையையுடையாயிலைமூன்றுடைச்சூழு
ளிலகுபடையாயிணைமலர்த்தாளிறைஞ்சுமடியாரிளைப்பனைத்தும்
விலகும்பரினெப்பொருளும்வீட்டுமுதலேவிண்ணுறைய
மலகிறவர்தந்தேவேயருமாமறையின்சிரத்ததிவே.

யோகமுனிவர்க்குண்மைநெறியுரைப்பாயென்றுமொருங்கெவ்வையு
மாகநிறைந்தவானந்தாவகிலநாதாவுலகளிக்கு
மேகமுதலேசுகவடிவாயிறைவாவணங்குமெழிற்றொண்டர்
சோகமருவும்பயநீக்கற்றுணையாஞ்சரணமலர்த்துகளாய்.

பேராருயிரேயிறுர்பூதப்பிறங்கும்வீரப்பெற்றியினாய்
சோராமகபாதகந்தீர்க்குந்துணைவாவவிச்சைதடைப்பானே
ஊரார்காலசாலனைகாலமாறுபதுகடந்தாய்
சாதார்போக்குவரவின்றாற்றவிர்க்குந்தாபந்தணிப்பானே.

இலங்கைநிருதன்பிரமகத்தியென்கணிலேயாம்வகையருளால்
விலங்கமுனிந்தவேதியனேவிடமுண்டிருண்மிடற்றோனே
யலங்கன்முருகுசமழ்கூந்தலரிவைபாகாவமரநதிச்
சலங்கொண்முடியாயிருதிபடாத்தலைவாவிருபத்தமற்கண்ணே.

வணங்கும்பினாகபாணியினாய்மதனையெரித்தாய்மாதவத்தோர்
கணங்கொளிமையோர்கழறுமுற்காங்காலங்கருதிக்கடைத்தலையா
யுணங்குகயிலைத்திருக்கோயிலுடையாய்நமவென்றுளத்தன்பா
லிணங்குமிராமனெடுத்தேத்தியிராமனுதன்றாள்பணிந்தான்.

என்று ஸ்ரீராமனும்,

இளவலிக்குமணன்பின்னரிராமநாதாவெயின்மூன்று
மளவிலுகளாம்படிநகைத்தாயடுக்கன்மகளாமந்துவர்வாய்த்
தளவநகையாளுயிர்க்கணவாதனிவேற்கரனைச்சடிலமதிப்
பிளவுநிகருமொருகோட்டுப்பிரானைப்பயந்தபெரியோனே.

படர்செங்கதிர்வெண்மதியழலாற்பயிலுநயனமூன்றுடையாய்
சுடருமகுடகோடீராசோமரூபாமார்க்கண்டற்
கடருங்கூற்றின்பயங்கடிந்தாயண்டமனைத்துமாக்கியளித்
துடனங்கழிக்குமுக்கிரனேயொன்றாய்முழுதுமுணர்ந்தோனே.

வரனேவரதாவைவையாமறங்களொழிப்பாய்வாய்மைபயி
லூரானின்பவுருவினனேயுழலும்பவநோய்க்கொருமருந்தாம்
பரனேபயமில்பட்டிகர்க்கும்பண்புள்ளவர்க்கும்பதியாஞ்சங்
கரனேகணக்கில்கணத்தலைவர்காடுபுரக்குங்காவலனே.

காட்டுமகிலத்திருவுருவாகாணுமவற்றின்கரியானு
யீட்டும்வினையாலெங்கெங்கேபோய்ப்பிறப்பனங்கங்குன்
றுட்டண்பதுமத்துணையிலன்புதருவாயவலந்தருநெறியில்
வேட்டுநடத்தலருளாமல்வேதநெறியில்விருப்பருளாய்.

என்று இலக்குவனும்,

என்றுபரசியெதிர்பணிந்தானிதன்பின்பவளவிதழ்திறந்து
மன்றலளகமயிற்சீதைமலையாண்முலையிற்குங்குமச்சே

ROJA MUTHIAH
47, KOTTAL STREET
KOTTAIYUR-623 106
... DIST - TAMIL NADU - INDIA

றொன்றிவ்வளந்குருங்கவினுருவாவுலகமெலைக்குமொருமுதலே
தன்றுசடிலசேகரமேற்சுமக்குந்திரைவானதியானே.

தேவிதேவியொருபாலிற்செம்மையொருபாற்கருமையதாய்
மேவுமேனிச்சங்கரனேவேறோர்வடிவாம்விழிநுதலா
யோவில்கருணையாலயனேயுடல்கொண்டுலகிற்பிறந்துழன்று
சாவவருந்தீவினைக்கஞ்சுந்தவத்தோரச்சந்தவிர்ப்பானே.

என்கணினைநின்றெழும்பார்வையெற்கஞான்றமிராசவனை
மன்கண்படாமற்றவர்பான்மருவாதொழியவரந்தருவா
யுன்கண்ணிடந்தமார்க்கண்டனுயிருண்கூற்றையுதைத்தவன்றன்
புன்கண்டீர்த்தவனைச்சேரும்புனிதர்க்கரியபொருளுண்டோ.

இறையின்றுயர்ந்தபேரிறைவாவிராமநாதாவின்புருவா
மறைவந்தடைவார்தமைப்புரக்கும்வள்ளாலெனக்கென்மகிழ்நன்பா
னுறையுங்கருத்துமவனைவலுவக்குஞ்செயலுமுதவுதியென்
றறையுங்கழல்பூண்டேறுகைக்குமம்பொருக்கங்களாதரித்தாள்

என்று சீதையும்,

அளியினீதித்தியமேயகிலலோகநாதனே
யொளிகொடேவதேவனேயுன்பொருட்டிறைஞ்சுசேன்
விளிவிலாதவன்புநின்மெய்ப்பதத்தினல்கியே
யெளியனேனையாளுமாறிரங்கிராமநாதனே.

உனையலாமலுலகிதனுண்மைதோன்றிநின்றிட
லெனுமிரண்டுமின்மையாலிவ்விரண்டினுருவமா
முனைவஞானவின்பமாமுதல்வனென்றுமுண்டக
மனையதாள்கள்போற்றினனஞ்சனைக்கோர்மஞ்சனே.

என்று அனுமானுந் தோத்திரஞ்செய்தனர்.

மேலும், 'இவ்வுலகமனைத்தும் குறைதீர்தராகிய தேவரீரினது திருமேனியி னொளியினாலன்றி விளங்கா. அஃதன்றி அதனை நேரேநின்று ஆளுகின்ற இராமநாதனே, எல்லாமானவரே, சம்புவே' என்று வாலிகுமாரனாகிய அங்கதனும், 'இன்பமென்றயாவுந் தேவரீரிடத்தனவே, இவ்வுண்மையை மெய்ப்புலவர்களறிவார்களாயின், எனது பாவங்களைநீக்கி யென்னையாளவேண்டும்' என்று சாம்பவானும் 'ஆசையாதி குற்றங்களைநீக்கி அடியேனையாளவேண்டும்' என்று நீலனும் 'தேவர்கள் காணும்படி பிரமவிட்டுணுக்கள் முடியுமடியுந்தெரியாது மோகிக்கச்செய்த தேவரீரே, யாவருக்குமேலான மலரிதரென்பஃதறிந்து உம்மை வணங்குகிறேன்' என்று நளனும், 'ஞானரூபமாகிய தேவரீரைச் சற்பனையினாலே நாமரூபவடிவாக வறிவதல்லது தேவரீரை யுள்ளபடியா

வாறிவார்' என்று குமுதனும், 'சாக்கிரசுவப்பன சுழுத்திவாக்காகியும், அங்ஙனங் காணுமிடத்துந் துரியாதீதவடிவாயு மிருக்கிற வள்ளலே' என்று பனசனும், 'தார்க்கிகர்கள் தேவரீரது லீலைகளை இன்னதென்றுணராமையால் காரியங்களுக்கெல்லாம் அணுவேமுதலென்று வாதிப்பர். அதுவும் நீயேயென்றுணராது என்னையாண்டருளவேண்டும்' என்று கசனும், 'அவிச்சையாகிய கயிற்றினாற் கட்டுண்டு துன்பப்படுவாரிட மனுக்கிரகசாந்தரே, சுட்டுணர்விலாதவனே, இராமநாதா, என்னை யிரட்சிக்கவேண்டும்' என்று கவாக்ஷனும், 'சகலலோக தாரகவஸ்துவாகிய தேவரீரே, பிறவிப்பிணிக்கு அமுதசஞ்சீவியே, இராமநாதனே, சந்திரசேகரனே, மலைமகள்மணாளனே, என்னைக் காத்தருளுக' என்று கவயனும், 'தேவரீரை மெய்ப்பொருளென்றறியாதவர்கள் அந்தக்கரணங்களையே தெய்வமென்பர். இராமநாதனே, தேவரீரே உயிருக்குயிராயிருப்பவர்' என்று சரபனும், 'கணைபரே, திரிநேத்திரரே, பார்ப்பதிபாகரே, ஸ்ரீராமநாதனே, எனது பாவங்களை நீக்கி இரட்சிக்கவேண்டும்' என்று கந்தமாதனனும், 'மரணசனனமென்னு மகாபலத்தோடு பெண்டு பிள்ளை பண்டபதார்த்தம் பொன் பூமி யென்னுந் திரைகண்மறிப்பப் பிரபஞ்சவாழ்க்கையென்னும் பெருங்கடலுட் புகுந்து அழுந்தி ஏங்கி அலறிப் பஞ்சபுலன்களாகிய பாம்புகளாற்பதைப்புற்றுப் பெருநோய்களாகிய முதலைகளாலும், தாபத்திரய சலசரங்களாலும் வாடினேன். இராமநாதனே, வயபனேனை வந்தாளுக' என்று சுக்கிரீவனும், 'ஐம்புலவேடர்களும், பெருநோய்களாதி கரடிகளும், மரணாவஸ்தையாகிய அரவங்களும், பிறவிகளாகிய புலிகளும், பால தருண விருத்த பருவங்களாகிய பசையற்ற பாண்கிணறுகளும், விடயபோகங்களாகிய துறுகன்மலைகளும், அழுக்காறாகிய நெருப்புச்சுவாலைகளும், கோப வஞ்சகங்களாகிய கடுங் கூரிய முட்களும், சத்தியஞான வழிகளொரு சிறிதுமின்றி அச்சம் அலக்கணாகிய தீவினைச் செடிகளடர்ந்த காட்டின் மத்தியிலே பிறிதொரு தஞ்சமின்றிக் கிடந்தலையுங் கீண்மகனாய வென்னை இராமநாதனே, அடிமைக் கொண்டருளுக' என்று விபீடணனும், 'ஒன்றினொன்று மேலென்று மொன்றினொன்று கீழெனவுஞ் சொல்லப்படுவனவாகிய எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதங்கடோறும் பிறந்திறந்திளைத்துக் கும்பிபாகாதி நரகபேதங்களிலாழ்ந்தெழுந்திளைத்து மீளவும் பூமியிலே கன்மசேடத்தால் வரும்பிறவியாகிய தொந்தங்களில் விழுந்தினுள்ளவையும் வருந்தினம். இராமநாதக்கடவுளே, இனித் தேவரீரது திவ்வியபாதார

வித்த வாழ்வைத்தந்தருளுக' என்று மற்றையவீரர்க ளனைவரு ஞ்சொல்லித்துதித்தனர்.

'சம்புவே, உலகநாதனே தமியேனது மயக்கத்தை யொழித் தருளுக' என்று பிரமனும், 'மலைமகளாகி மாநிலமுழுவதுக்கு மாதாவாகிய உமாதேவிபாகனே' என்று இந்திரனும், 'இடபாரூடனே, விநாயகருக்குஞ் சுப்பிரமணியருக்கும்பிதாவே, காத்தருளுக' என்றுஇயமனும், 'எம்பிரானே, எனது குற்றத்தைத்தீர்த்தருளுக' என்று வருணனும், 'திருவடிப பூசாபலத்தினாற் சாரூபம் பெற்ற தேயன்றி வேறென்ன பெற்றோம்' என்று ஈசானனும், [இயமனவன் வருணன் காணும்படியாக நின்று மார்க்கண்டேயமுனிவர் எவரது பூசாபலத்தினால் என்னை வென்றாரோ. அவரை யான் வணங்குகிறேனென்று துதித்தனன் என்று சோடலுமொன்று] 'குழைக்காதுடையாரே, செம்பஞ்சிபோலுந் திருமேனியுடையவரே, உமக்கு வணக்கம்' என்று குபேரனும், 'என்னையுமொருபொருட்படுத்தி பிருகண்களோடொன்றாக வைத் தெண்ணச் செய்தவரே, தக்ஷயாக சங்காரனே' என்று சூரியதேவனும், 'சூலப்படையையேந்தி விபூதியைத் தூளித்துச் சருப்பாபரணமணிந்து நள்ளிருண்மயானத்தினட்டமாடும் நாதனே, உமக்கு வணக்கம்' என்று சந்திரனும், 'இந்திரனாதி யென்றொடுகூட்டியெண்ணப்படும் எண்மர்களும் வணங்குந் திருவடியை யானுமேத்துகிறேன்' என்று அக்கினிதேவனும், 'சருவசார்மார்த்தியரே, புலித்தோலாடையாபரணரே' என்று வாயுதேவனும், 'எல்லாவற்றுக்குமத்தியாயிருந்து எவற்றுக்குஞ் சாக்ஷிமாத்திரையாய் நிற்பவர் தேவரீரேயன்றி வேறில்லைத் தமியேனது மயக்கத்தைத் தடுத்தாளுக'' என்று தேவகுருவும், 'வஞ்சர்க்கு வஞ்சகரே மந்திரமூர்த்தியே உமக்கு அடைக்கலம்' என்று சுக்கிரனும், ஸ்ரீராமநாதா, நினையாதவர்க் ககலமாயும் நினைபபார்க்கருகமாயும் நிற்கும் யோகிகளுயிரே; யுமக்கு வணக்கம்' என்று பரிமருத்துவருந் தோத்திரஞ்செய்தனர்.

'அநாதியே, விசுவநாதா, அம்பிகாபதியே, அர்த்தசந்திரசேகரரே, இடபக்கொடியரே, சோதியே, நித்தியவஸ்துவே, தேவமுதலே, வேதவித்தகரே, செய்தகுற்றங்களைப் பொறுத்து மேலே குற்றஞ்செய்யாமற் காப்பவரே, யானல்லாத உடம்பை யானென்றும் எனதல்லாத மக்கண் மனைவியராதிவினைக்கீடாக வந்துவளர்ந்து நீங்கும் பிரபஞ்சப்பொருள்களையெல்லாம் எனதென்றும் நினைத்து நடக்குமெனது குற்றத்தை நீக்கியருளுவீராக

இராமநாதனே' என்றகத்தியமுனிவரும், 'ஆடை யணி யகிலம் மனைவி மக்கள் உறவு நண்பாதிய வனைத்தும் உலகத்திலேயே நீத்து வியாகவரமாட்டா, ஆதலி னிவையனைத்தையும் விட்டுத் துறத்தலே தருதல்வேண்டு மிராமநாதனே' என்று சுதீக்கிணமுனிவரும், 'சாத்திரவுணர்ச்சியும் வேதாத்தியயனமும் பிறவிதிகளையுஞ்செய்து தேவரீரிடத்திலே பத்தியில்லாத மனிதரை மதியாது தேவரீரது திருவடிக்கன்பொன்றுமே தரவேண்டும' என்று விசுவாமித்திர முனிவரும், 'தேவரீரது திருவடியை வணங்காதாருக்குத் தான தரும தவ விரத நெறி நியமயாகாதி கிரியைகளனைத்தும் பயனில்லையே' என்று காலவமுனிவரும், 'எவ்வளவு கோடி பாவங்களைச் செயினு மவையெல்லாந் தேவரீரது சன்னிதானத்திலே இரவிமுன்னிருள் போல வேகுமே' என்று சொல்லி வசிட்டமுனிவரும், 'இம்மையிலே இராமநாதா வுனது திருவடியை யாவர் வணங்குவார்களோ அவர்கள், மேலே பிறவியில்லாது அகண்ட பரிபூரணராவார்' என்று அத்திரிமுனிவரும், 'ஸ்ரீராமநாதனே, தேவரீரை வணங்கித் தேவரீரது தொண்டர்களுக்குத் தொண்டராக யார் வசிப்பார்களோ அவர்கள் தீவினையினீங்கி நன்னெறியடைகுவர்' என்று அங்கிராமுனிவரும், அப்படியே சொல்லிக் கவுதம முனிவரும், 'மோட்ச விருப்புடையாருக்கு இராமநாத தரிசனமொன்றுமே போதும்' என்று சதானந்த முனிவரும், 'தேவரீரை யார் நினைப்பார்களோ அவர்கள் தேவரீரது திவ்விய சோதிவடிவாவர்' என்று பிருகுமுனிவரும், 'ஸ்ரீஇராமநாதனே, தேவரீரை வணங்கவேண்டுமென்று மாசையுடையார் நரகடையாராயின், யார் தேவரீரை வணங்கப் பின்னிற்பார்' என்று குச்சகமுனிவரும், 'ஸ்ரீஇராமநாதனை வணங்குவாருக்கு யாகாதிமற்றைய தருமங்கள் வேண்டியதில்லையே' என்று காசிபமுனிவரும், 'ஏகவஸ்துவே, இராமநாதா, இவ்வுடம்பொழியுங் காலத்திலே சத்திசமேதரா யெழுந்தருளித் திருவடிதந்தாளுக' என்று அங்கிராவுந் துதித்துப் புகழ்ந்தனர்.

'சந்திரசேகரரே, 'இராமலிங்கமே' ஆசாபாசமாகிய ஆழநீருந் துன்பங்களாகிய அலைகளுநிறைந்த பிறவிசாகரத்திலெதுநாள்வரையுங் கிடந்தாழ்ந்தனம். இனித் தேவரீரதனை மாற்றியருளுக' என்று கந்தருவர்களும், 'பொன்போல விளங்கும் பொலிவுடைய இராமநாதா, கொடுநோய்களாகிய புலிகணிறைந்த அச்சந்தங்கிய வுடம்பாகிய காட்டை யொழித்து, மோக்ஷவழியடையக் கிருபைசெய்குதி' என்று கின்னரர்களும், 'பஞ்சப்புலவே

டோர் முன்னைப் பழுதிய பிறவியை மாற்றிச் சிவகதியடைவதற்குத் தேவரீரே துணை' என்று இயக்கர்களும், ஸ்ரீராமனது பிரமகத்தியைப் நீக்கிய தேவதேவே, தேவரீரைத் துதிப்பதற்குயா மொன்று நாகர்களும் பலவேளைகடோறும் பிறந்திறந்துழலாவண்ணம் பேரருள் புரிவீராக' என்று கிம்புருடர்களும், 'பார்ப்பதியாகரே' யென்பதாதி பலதிருநாமங்களைச் சொல்லி வித்தியாதரரும், அங்ஙனமே வசுக்களும் விசுவதேவர்களும் மருத்துக்களும் சாத்தியர்களுந் துதித்தனர்.

தயங்குபேரொளியாய்த்தானேசச்சிதானந்தமதாகி
வியங்குபூரணமாய்த்தோன்றன்மறைந்திடல்சுருங்கலின்றி
முயங்குமோர்பொருள்வேறின்றிமுதனடுமுடிவிலாமற்
றயங்கிடுவிகாரமின்றிச்சுத்தமாய்நித்தமாகி.

மற்றொருபிராந்திநீங்கிப்பல்லவாம்பிரமாணங்கட்
குற்றறிவளிப்பதாகியுதித்திடவுலகந்தன்பான்
மற்றதுதனக்குத்தானேமருவுமோர்சரியாய்நிற்கு
முற்றிலாவகண்டஞானமூர்த்தியேபோற்றிபோற்றி.

போக்குமும்வீடுமில்லாப்புனிதனேபோற்றிபோற்றி
யாருமாற்றவையிரண்டுமடியவர்க்களிப்பாய்போற்றி
மோகமார்மாயைதன்னுண்முகுந்தனுமயனுமாய்த்தோன்று
மேகனேபோற்றிபோற்றியிராமநாயகனேபோற்றி.

எந்தையேயிணைமேலில்லாவிறைவனேபோற்றியாங்கள்
புந்தியிலமருளான்முன்னம்புரிந்தவெம்பாதகங்கள்
சிந்துமாசிந்தித்துன்றன்சேவடிப்பணிதுமென்று
வந்தனைசெய்தாரேனைவானவரானோரெல்லாம்.

என்று சொல்லி மற்றைத்தேவர்களும் வேறுபலவிதநாமங்களைச் சொல்லி விபீடணனது மந்திரிமார்களுந் தோத்திரஞ்செய்தார்கள்.

இங்ஙனமே பலருந்திரண்டு ஸ்ரீராமநாதனது திருவடிகளைத் தோத்திரஞ்செய்த பேரொலிகள் திரண்டு சத்தசாகரவொலி போலத் திகாந்தரமெங்குஞ் செவிடாக்கி புன்மறுநீத நிட்களபரமசிவனாரது குண்டலமணிந்த இடச்செவிவழியாகப் புகுந்து மகிழ்வித்தமாத்திரத்தே அவர் சத்திசமேதபீடாரூடராயெழுந்தருளி நேரே வந்து காட்சிகொடுத்தனர். அங்கு நின்று தோத்திரஞ்செய்த அனைவருஞ் சிவபெருமானது சடையிலணிந்த கங்கையையுஞ், சந்திரனையும், நெற்றிக்கண்ணையுங் காளகண்ட

ததையும், வாகுவலயத்தையும், கொன்றைமாலையையும், யானைத் தோற்போர்வையையும், அரையிலுடுத்த புலித்தோலையும், தாமரைமலர்போலு மபயதிருவடிகளையும், உமாதேவிபாகத்தையுங் கண்டுதரிசித்துப் பேரொளிமய வியந்து அதனைக்காணுதற்கெளிமையையும், கண்டுதரிசித்த தங்களதுகளிப்புமேலீட்டையும், தங்கள்வினைகளஞ்சியோடு தலையும், பிறவிகள்பின்னிடுதலையும், ஞானசுகோதய விளக்கத்தையும், காணாத காட்சிகளனைத்தையுங் கண்டு களித்துக்கைகொட்டிப் பாடியாடிப் பரவசராய் அன்புருகிகளாய் நின்றனர். இராமலிங்கப்பெருமானும் ஸ்ரீராமனிடத்திலே திருக்கண்சாத்தி 'அயோத்தியரசனே, இரகுமகாராசாவின் குலமுதலே, சீதாபதியே, புண்ணியரூபியே' என்று ஸ்ரீராமனையும் சீதாதேவியையும் இலக்குமணனையுஞ் சுக்கிரீவனாதி குரக்குச்சேனைகளையும் பிரமாதி தேவர்களையும் அகத்தியர் முதலிய இருடிகளையும் 'வாருங்கள்' என்று விழித்து "இவ்விடத்து நீங்கள் சொல்லிய தோத்திரங்களை யாவர் தோத்திரஞ்செய்வார்களோ, கேட்பார்களோ, அவர்கள்நம்மை விதிப்படி பூசித்தபேறும், ஒருவருடஞ் சேதுவில் வசிக்கும் பேறும், தனுக்கோடி ஸ்நானபேறும், இம்மலைச்சாரலிலுள்ள தீர்த்தங்களனைத்திலு மாடியபேறும் பெறுவர். இறந்தபின்னெம்மோடு நீங்காதிருப்பர். இதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை' என்றருள்செய்து மறைந்தனர் முனிவர்காள், இது ஸ்ரீராமனாதியோர் சொல்லித் துதித்ததோத்திரங்களென்று சூதமகாமுனிவர் முடித்தனர்.

மகிழ்ந்திராமநாதர்சீர்வயங்கிராமனாதியோர்
நெகிழ்ந்தகாதலோடுதோனிவந்தவீடுகூடவே
புகழ்ந்துவாய்மைகூறியைம்புலன்கள்சாயவேரொடே
யகழ்ந்துபாசமாசெலாமகன்றஞானயோகரே.

தோத்திரச்சருக்கமுற்றிற்று.

## சங்கரபாண்டியச் சருக்கம்.

சூதமகாமுனிவரானவர் குருவை வணங்கி மற்றைய முனிவர்களைநோக்கி "இன்னும் இராமலிங்கப்பெருமானுடைய விசேடசரித்திரமொன்றுளது. அது செவியினுழைவதன்முன்னமே பாவங்களையோட்டுவது. அதனைச்சொல்லுதுங் கேளுங்க"ளென்று சொல்லுவார்.

பாண்டி நாட்டிலே சந்திரகுலத்திலே அவதரித்த பாண்டியருளொருவன், 'சங்கரபாண்டியன்' என்னும் பெயருடையவன் மனுநீதிசாஸ்திரஞ் சிறிதும் பிறழாவகை உலக அரசாட்சி செய்பவன். வேதங்களையும் வேதசிரசாகிய உபநிஷத்துக்களையும் சங்கீத பரத நாடகாதி பலகலைகளையு மையந்திரிபறவறிந்தவன். பிராமண விசுவாசமுடையவன். பலவித யாகங்களைச் செய்துமுடித்தவன். நற்குணத்தோடு நான்கு வருணத்தவரையும் நான்காச்சிரம வழிகளிற் றவறாது நடத்துவிப்பவன். மன்மதன் போன்ற பேரழகுடையவன். சிவபத்தி விட்டுணுபத்தியுடையவன். செல்வத்திலுஞ் சத்தியத்திலும் ஒழுக்கத்திலுங் கொடையிலும் வலியிலும் பொறையிலுந் தனக்கெதிரில்லாதவன் இரக்கமுடையவனாதலால் தன்னுயிர்போல மன்னுயிர்களைக் காப்பவனுமிருந்தான்.

அவனொருநாள் யானை இரலை சிங்கம் கரடி மான் மரை புலி கடமை யாளிகளாதிய மிருகங்கள் செய்யுங் கொடுமையால் வேட்டையாடும்படி காட்டிலே போனான். அவன் சென்ற காடானது, சிங்க முதலிய மிருகங்களினாலும், யாறுகளினாலும், மயில் குயில் புறா கிளிகளாதிய பறவை விசித்திரங்களினாலும், தாமரை நீலோற்பலம் ஆம்பலாதிய நிறைந்த தடாகச் செறிவினாலும் நெருங்கிச் சிறிதும் வெளியிடமின்றி விளங்கும். மலைமுழைஞ்சுகளிலே பாம்புகளும், கொடுமுடிகளிலே சிங்கக் குருளைகளும், சோலைகளினிடமெல்லாந் தவத்தர் கூட்டமும், கொடி செடிகளெங்கும் மான் கூட்டமும், நீர்க்கரைகடோறும் பலவித பட்சிக் கூட்டங்களும், அவைகள் செய்த கூடுகளினெல்லா முட்டைகளும் வேட்டுவர்களினிடமெல்லாந் துடியோசையுமாயிருந்தன. யானைகள் முறிக்காத மரங்களும், புலியினது வாலினிழுப்படியில்லாத வழிகளும், தபோதனர்களுலரும்படி விரித்த மரவுரிகளில்லாத கற்பாறைகளும், வேட்டுவர்களது இசைவிழி குறையாவிடங்களு மங்கேயில்லை. சரபங்களோடு சிங்கங்களும், சிங்கங்களோடு பன்றிகளும், வேட்டுவர்களோடு முயல்களும், வேட்டுவக்குடிகளோடு கான்யாறுகளும், கருடனோடு பாம்புகளும், புலிகளோடு மான்களும், யாளிகளோடு கலைகளும் பகையில்லாமலும், தினைப்புனங்களெங்கு மருவி நீரும், மலைச்சாரலெங்கும் வரையாடுகளும், மலைகளின் மேலிடமெல்லா மூங்கில்களும், பள்ளத்தாக்குகளெல்லாம முதலைகளும், கொம்பிடங்களெல்லாங் குரங்குகளும், வழிகளெல்லாம யானை மதமும், வேங்கைமர நிழல்கடோறும் புலிகளும, மயில்களொடுஞ்

சாரலிலே முகில்களும், இடங்களெங்குந் தவத்திகளும், களவிச்செடிகளெவ்விடமு மகிலமரங்களும், வெளியிடமெல்லாங் காற்றும், நீர்நிலைகளெவ்விடத்திலும யானைகளும், பூஞ்சோலைகளிலே விலங்காரவாரமு மாதிய பலவித விநோதச் சிறப்புகளையுடையது.

சங்கரபாண்டியராசனானவன், காட்டிலே இவ்விதப்பட்ட பலவகை விசித்திரங்களையுங் கண்டு, மிருகவேட்டையாட நினைத்து, இராசவேடத்தை நீக்கித் தோற் செருப்பிட்டு, உடும்புத்தோலினால் கைத் தோற் கட்டும் பசுமை நிறமுடைய சட்டையும் சிகப்பு வஸ்திரத்தினாற் றலைப்பாகையும் இடையிலே கச்சும் உடையனாய்க்காற்றுவேகத்தினு மனோவேகத்தினுமதிவேகத்தையுடைய குதிரையின்மேலேறி வந்தனன். அரசனோடு கூடிவந்த வேடுவர்களிற்சிலர், உடுக்கையும் பம்பைப்பறையையுமடித்தனர் சிலர்கொம்புவாத்தியத்தையூதினர். சிலர்செடிகளையுழக்கியும், வலைகளை விரித்தும், விலங்குகளோடும் வழிகளை நோக்கியொளியிருந்தும், வெளிகளிலே நின்றும், தீவகமிருகத்தைக் கைக்கொண்டும், நாய்களைக் கயிற்றினாற் கட்டிக்கொண்டும், இலைகளினாலே தமதுடலை மறைத்தும், மரக்கொம்புகளிலேறி மிருகங்களோடுவதைப் பார்த்தும் வருவாராயினர். இப்படியே கலக்குதலினால் மான்களும், கலைகளும், சிங்கங்களும், யானைகளும், பன்றிகளும், காட்டாக்களும், குறுமுயல்களும், மரைகளும், சிவல்களும், கவுதாரிகளும், புறக்களும், சாதகங்களும, சிச்சிலிகளும், பருந்துகளும், கலுடனாதி மிருகபட்சிகளும்பிறவும நிலைகுலைந் தேங்கித் திசைதெரியாம லோடின. இங்ஙனமே மிருகபட்சிக ளோடுவதைக் கண்ட பாண்டியராசன், வில்லைவளைத்து நாணேற்றிக்கொண்டு அம்புகளைப் பூட்டி விடாமழைபோலச் சொரியவும், அவைகள் யானைகளது முகத்திலும குதிரைகள் மான்கள் புலிகள் சிங்கங்களாதிய மிருகங்களினது உடம்புகளினும்பட்டு ஊடுருவுதலினாலே, சிலவற்றினுடைய தலைகளுஞ்சிலவற்றினுடைய கால்களாதி யேனைய வுறுப்புக்களும் வெட்டுண்டன. பறவைகளுஞ் சிறகு முதலிய வுறுப்புக்கள் வெட்டுண்டுவிழுந்தன. இங்ஙனம் வேட்டையாடுதலினாலே, பாண்டியனுமிளைத்தனன் குதிரையு மிளைத்தது. வில்லினாணு மிளகிற்று நரிகளும் பிணங்களைத் தின்று தின்றிளைத்தன இவ்வாறு பாண்டியன் வேட்டையாடிக் களைத்து வரும் வழியில், ஓரிடத்திலே சாகல்முனிவர் மனைவியோடு புலித்தோலின்மேற் போர்த்துத் தவஞ்செய்திருந்தனர்.

சங்கரபாண்டியனும் அவ்விருவரையுங்கண்டு இரண்டு புலிகள்
தப்பியோடி யிங்குவந்து மறைந்திருக்கின்றன என்று சிந்தித்து
ஒரு அம்பைச் செலுத்தினன். அதுபட்டிருவருடலையுங் கிழி
த்தோடுருவியவுடனே யவ்விருவரும் வீழ்ந் திறந்தனர். அவர்க
ளது புத்திரனாகிய சாங்கலன் என்பவன் இறந்த தந்தை தாய
ரிருவரையுங் கண்டு நிலத்திலே யடித்து விழுந்து புரண்டு "ஐய
கோ! நீவிரிறந்தீர்களே! யாரெனக்குத் துணையாவர்? என்னை மற
ந்தீர்களோ? என்னையுங் கூடவாவென்றழைத்துச் செல்லீரோ?
எனக்குணவு தருபவர் யார்? நான் கோபித் துணவை வெறுத்து
ச்சென்றால் ஆறுதலசொல்லி யூட்டிவைப்பவர் யார்? வேதாதி
கலைகளைக் கற்பிப்பவர் யார்? உங்களாயுசு பலமறிந்த நீவிர் சிறு
வனாக வென்னைவைத்தது யாதுக்கோ? என்னை யிவ்விடத்தில்
வைத்து நீவிர் தேவருலகடைந்தீராயின், என்னை 'இதுசெய்யத்
தக்கது இதுசெய்யத்தகாதது' என்றுசொல்லித் தடுப்பவர் யார்?
அங்ஙனந் தடுத்து ஏவாவழி, இவ்வுலகத்திலே மகப்பழி சுமந்தீ
ர்களன்றோ! இங்கேயுள்ள என்போன்ற சிறுவர்கள், தந்தைதாய
ரோடு கலந்து கொண்டாடியிருக்கக் கண்டு என்மனந் தனியி
ருக்கத் தரிக்குமோ! சிறுவனாதலிற் பிறிதோரிடத்திலுஞ் செல்
லவறியேன். நீங்களொருவராவதிருந்து சிறிது நாளைக்கு ஆறு
தல்சொல்லுவீரேல் தாங்குவேன்; அன்றி யிருவருமொரேச
மையத்திலிறப்பீரேல், யாது செய்வேன். உங்களிருவரையு மொ
ரேசமையத்திலிறக்கக்கொடுத்த தமியேன் செய்த தீவினை யென்
னே! தாயை யிறக்கக்கொடுத்த கன்று பதறுதலைக் கண்டிலீ
ரோ! கண்டீராயின், யானிப்படியே வருந்துவேனென்ப தறிவீர்.
நீவிர் இறந்தது உண்மையோ! அல்லது எனது மனத்தைரிய ம
றிதற்காக வஞ்சகஞ் செய்தீர்களோ! யானிவ்வாறு வருந்துதல்
பிரமனுக்கும் மகிழ்ச்சிதருமோ! இயமனை வெறுப்பதென்னை! அ
ம்புபட்டிறந்தீர்களே! அதற்கு "அத்திர"மென்று பேருண்மையா
ல் உயிருக்கழிவுசெய்வது என்று பொருளோ! சிறிதும்வஞ்சமறி
யீர்! செய்த குற்றமென்னோ!" என்று பலவாறு சொல்லிப் புல
ம்பினன்.

இங்ஙனமே புத்திரனழுதல் கேட்டுப பாண்டியனும் ஏங்கி
யோடிவந்து பார்த்தனன். பக்கத்திலுள்ளபர்ணசாலைகளி
லேயிருந்த முனிவர்கள் மனைவி மக்களோடு வந்து கண்டு
மனம் வருந்திப் புத்திரனை நோக்கி, "வா"வென்றெடுத்தணைத்
துக் கண்ணீர் துடைத்துக் "குழந்தாய், நீ யழாதே. இறவாமலு
யிரோடு பிழைத்திருந்தாரை எந்தவிடத்திலு மெந்த நூலிலு

மறியோம்; சொல்லவுங் கேட்டிலோம். பிரமா விட்டுணு முதலிய தேவருக்குங் காலங்குறித்திருக்கிறதே. இறப்பவரைப் பிறவாது காக்க யாரால் முடியும். ஆதலின், உனது தந்தையுந் தாயும் முன்னூழின்படி யிறந்தார்கள். இப்படியே வினைமுடிவில் நீயு மிறப்பாய். இறந்த பிணங்கள் மேல் விழுந்தழுவாரைப் பேயாகளென்று பெரியோர் சொல்லுவார். உலகத்திலே இறவாத வழியை யறிந்தால் ஒரு கிருமியு மழியுமோ! எல்லாவுயிரு மியமனாணைப்படியே யிறப்பன. குழந்தாய், கோழை மூளை மலம் சலம் சுவேதநீர் வேர்வை யாதிய யிழிந்தநாற்றப் புரையாகிய வுடம்பை அறிவுடையார் விரும்பிக் காக்கமாட்டார். ஐயனே, அருவமாய்ப் பூரணஞானானந்தமாயிருக்கிற பிரமமே, தன்தருளினால் உருவமாய்ப் படைத்தல் காத்த லழித்தல்களைச் செய்து, தனக்கொரு பிரயோசனமுமின்றி யெல்லா மான்மாக்கள் பொருட்டாகச்செய்யும் வஸ்துவொன்றே மரண சனன மற்றது. சின்மொழி கூறினும், கல்வியறிவாற் பன்மொழி கூறினும் இல்லாதவற்றைச் சொலலினு மதை மறுத்துச் சொல்லினுஞ் சொல்லின் பிரிவன்றி வேறில்லை. உலகத்திலே தோன்றிய வெல்லா மொடுங்கும்; இது சத்தியம். தந்தைதாயருக்கு முனக்குஞ் சம்பந்தமுண்டானால், அவர்கள் தோன்று நாளிலே நீயுந் தோன்றி அவர்களிறக்குநாளிலே நீயுமிறப்பாய். இறவாதவரை யுனக்குத் தராதது விதிவலியென்றறிந்து துயரத்தை விடுகுதி. குழந்தாய், இறந்தபிணத்தின்மேல் விழுந்து கண்ணீர்விட்டால், அந்நீரை அவ்விறந்தபிணத்தினுயிர்குடித்துவருந்தும். ஆதலால்பிணத்தின்மேலே கண்ணீர்சிந்தாது விதிப்படி செய்யவேண்டிய கடனை விரைந்துசெய். அன்போடுனைப் பெற்ற தந்தைதாயர்கள், அம்புபட்டிறத்தலினாலே துன்மரணமாகும். அக்குற்றம் நீங்கும்பொருட்டுத் தகித்து அஸ்தியெடுத்துக்கொண்டு போய்க் கந்தமாதனமலைச்சார்பிலே இராமேச்சரத்திலே தீர்த்தக்கரையிலே புதைக்குதி; அதனாலவர்கள் மோக்ஷமடைவார்கள். ஆதலினால் குழந்தாய், நீ சிறிதுந் தாமதமில்லாமல் அந்தப் புண்ணியதலத்திலே சபிண்டாந்தமாகிய கிரியைகளைச் செய்து புத்திரனாய்ப் பிறந்த பயனை யடைகுதி. துக்கியாதே யெழுந்திரு" என்றுதேற்றினார்கள்.

சாங்கலனென்னும் புத்திரனும் அம்முனிவர்கள் சொல்லிய வார்த்தையைக் கேட்டு இறந்த தந்தை தாயருக்குச் செய்யவேண்டியமயானக்கிரியைகளைமுடித்து, அஸ்திகளை யெடுத்துக்கொ

ண்டு முனிவர்கள் கட்டளையிட்டபடி தீர்த்தக்கரையிலே புதைத்துமாசிதசபிண்டாந்தமாயு அபரக்கிரியைகளை ஒருவருடம்வரையும் விரதநியமந் தவறாதிருந்து முடித்தனன். அங்ஙனமே செய்துமுடித்தபின்னர், சங்கலன் கனவிலே தனதுதந்தைதாயரைச் சங்குசக்கராதி பஞ்சாயுதங்களைத் தரித்தவராயும் பீதாம்பரவுடையுடையவருமாகிக் கருடவாகனத்தேறித் துளபமாலை தொங்க மகரகுண்டலங்கள் மின்னக்கவுத்துவமணி மார்பிலே பிரகாசிக்க இலக்குமி நாராயணராகக் கந்தமாதனமலையில் வீற்றிருப்பக் கண்டு, பெருமகிழ்ச்சிகொண்டு நித்திரைவிட்டெழுந்து தனதுரை யடைந்து தன்னையேவிய முனிவர்களுக்குத் தான்கண்ட சொப்பனத்தைச் சொல்லிப் பேரன்போடு மங்கிருந்தனன். முனிவர்களுமதுகேட்டுப் பேரதிசயமடைந்திருந்தனர்.

அது அவ்வளவினிற்பக் கையிலேந்திய வில்லோடுவந்து நின்ற சங்கரபாண்டியனை முனிவர்க ணோக்கிக் கடுங்கோபமடைந்து சொல்லுவார்கள், "கபடமற்றமன்னனே, இந்தத் தவசிரேட்டரை அம்பினால் வதைத்து என்னதீங்கு செய்தாய்! பிரமக்கொலையேயன்றி அவர் பத்தினியைக் கொன்றபழியும் வந்தது. உன்னைப்போல உலகத்திலே பெரும்பழியடைந்தவர் யாவர்? இத்தீவினைக்கியாதுசெய்குவை? கோபமுதலிய குற்றங்களில்லாமல் மனோவாக்குக் காயங்களாலொரு சிறுகுற்றமுமணுகாமலரசியற்றுவதே இராசநீதி; வேடரும் விலங்குகளையே கொல்லுவார்கள்; நீ பிரமக்கொலைசெய்தோ அரசியற்றுவது? நீ கற்கும்பொழுது "நிலங்காக்க" வென்பதைக் கரக்கவென்று படித்தாய் போலும். இப்பழி நீக்குதற்கு நீ யிப்பொழுதே நெருப்பில் விழுந்திறக்கவேண்டும். வேறுபரிகாரத்தா லிதுநீங்காது. உன்னோடு பேசிய வெமக்கும் பதினாயிரம் பிரமகத்தி தோஷமடையும். ஆதலாலடபாபீ!! கண்முன்னில்லாது செல்லுதி" யென்றனர்.

அதனைப் பாண்டியனுங் கேட்டு நடுங்கி "ஐயர்களே, நினையாப்பிரகாரம் நேரிட்டபழிக்குப் பிராயச்சித்த மிதுவாயின் அங்ஙனம் நுங்கண் முன்னிலையிலே செய்வேன்" என்று துணிந்து மந்திரிகளை நோக்கி "மந்திரிகாள், எனக்குக் காத்திராப்பிரகாரமிந்தக்கடும்பழிவந்தது; என்றாலவிதியிதுவானால் வேறென்னசெய்வது; இதற்குப் பிராயச்சித்தஞ் செய்யாதுவிடின் நரகவேதனையனுபவிக்க முடியாது; ஆனிப்பொழுதே நெருப்பில் விழுந்திறப்பேன்; நீவிர் துன்புறவேண்டாம்; என் மகனுக்கு முடிசூட்டி யரசாளுங்கள்; இவ்விடத்திலே யக்கினியை வளரு

ங்கள்" என்றனன். மந்திரிகளதுகேட்டவுடனே யேங்கி மனம் வருந்தி "அரசே, எம்மைப் புத்திரர்போல வளர்த்தனை! எங்களுக்கு மிவ்வாழ்வு போதும். உன்னையிழந் தரசாட்சி செய்யமாட்டோம். நாமுமொருங்கே யிறப்போம்" என்றனர். அரசனு மதுகேட்டு "மந்திரிகாள், இப்பழியைச் சுமந்து சிங்காசனமேறேன், ஆதலின், எனது மகனுக்கே யரசாட்சி யுரியது; நீவிர் என்னிடத்துள்ள நண்பிலுமெண்மடங்கு விசேடமாக எனது மகனிடத்தேவைத்தரசாளுங்கள்; விரைந்து நெருப்பை மூட்டுங்கள்" என்றேவி நீரிலே விழுந்து முழுகியெழுந்து சுத்தமனமுடையவனாய் அக்கினியை வலமாகவந்து சிவத்தியானத்தோடு சிறிதுந் தளராதெழுந்து நெருப்பிலே குதிக்குஞ்சமையத்திலே, ஓரசரீரிவாக்கானது 'சங்கரபாண்டியனே, நில்லு நீ யக்கினியில் விழாதே. இப்பழிகணீங்குதற் குபாயஞ்சொல்லுதுங் கேட்குதி. நீ சிவத்தியானத்தோடு ஸ்ரீராமனாற் பிரதிட்டை செய்த இராமேச்சரத்திலே இராமலிங்கமூர்த்தி சன்னிதானத்தை யடைந்து ஒருவருடமுழுதும் மூன்று காலங்களினும் பிரதக்கிணஞ் செய்து, துரோணளவு (பதக்கு) தேனாலும் அதனிரட்டி நெய்யாலும் அதனிரட்டி பாலாலும் மற்றைய அபிடேகத்திரவியங்களாலு மபிஷேகஞ்செய்து, சந்தனாதிசுகந்தவஸ்துக்களைச் சாத்திப் பாலன்னமுதலிய சித்திரான்னங்களை நிவேதித்துத்தூபதீபாதி சோடசோபசாரங்களோடு பூசித்துத் திரிகாலங்களிலும் விரத நியமமாகத் தரிசிப்பையேல், நின்னைச்சேர்ந்தபழிகளிரண்டும்நீங்கும். இராமலிங்கதரிசனத்தினாலே பஞ்சமாபாதகங்களும் நீங்கும். பிரமகத்தி, கட்குடித்தல், பொற்களவு, குருபத்தினிகமனமாதியவற்றிலே பதினாயிரம்பாவங்கணீங்கும். இப்பாதகங்களைச்செய்பவர்களோடுகூடிக் கலந்தபாவங்கள் கணப்பொழுதினீங்கும், மற்றெந்தப் பாவங்களும் இராமநாத தரிசனத்தா லழியும். ஒருவனுக்கு இராமநாததரிசனங்கிடைக்குமானால், கங்கை கயை பிரயாகையாகிய புண்ணியதீர்த்தங்களாலும் வேறுயாகாதிகருமங்களாலு மாவனவொன்றுமில்லை. ஆதலின் அரசனே, அங்கு விரைந்து செல்லுதி' என்றது. முனிவர்களு மதுகேட்டு மனமுவந்து பேரதிசயமடைந்து அரசனே, இது மிகநன்று! நன்று என்று, இதனையறியாமற் சொல்லினோம். சிவானுக்கிரகமிப்படியானால் விரைந்துசெல்லுதி' யென்றனர்.

அரசனு மதுகேட்டு மகிழ்ந்து சதுரங்க சேனைகளுஞ் சூழ வேண்டிய திரவியங்களை யெடுத்துக்கொண்டு இராமேச்சரத்தை யடைந்து இராமலிங்கப்பெருமானது திருவடியை வணங்கி, ஒரு

வருடங்காறு மொருவேளையுணவுகொண்டு தனுக்கோடியிலே ஸ்நானஞ்செய்து ஆகாசவாணி சொல்லியபடி தவறாது அபிடேகங்களையுந்தியாகங்களைச் செய்து வழிபட்டுப் பத்துப்பாரம் பொன்றானஞ்செய்து தினவிர்த்தி பிராமணபோசனஞ் செய்து பழிகணீங்கிப் பரிசுத்தனாய்க் குறித்தகாலமவரையு மிருந்து விரதமுடித்துத் துதிப்பானாயினன்;

"ஒருவனேநித்தா முத்தா வுத்தமா மத்தவேழம்
வெருவரவுரித்துப் போர்த்தவீரனே சூலஞ்சங்
சருவமாங்நெற்றிக்கண்ணனே கணிதமில்லாத்
திருவனேயிராமநாதா செங்கணே றுகைக்குஞ்செல்வா.

ஐயனேயிரவிகோடியவிரொளி விளங்குஞ்சோதி
மெய்யனேவிரிஞ்சனுச்சிவிளங்கொளியுகிராற்கிள்ளுங்
கையனேகாலனஞ்சுங்காலனேகடுக்கையந்தார்ச்
செய்யனேயிராமநாதா திங்களங்கண்ணியானே.

அரையனேயன்மாலுள்ளத்தளவையினளக்கற்கந்தக்
கரையனேமகுடவேணிக்கற்றைமேற்கங்கைவீசுந்
திரையனேபுரங்கள்வேவசிறுநகைபுரிந்தவெள்ளி
வரையனேயிராமநாதா வாசிநான்மறையினானே.

நீற்றனேகண்டிமாலைநிமலனேநினையுமெல்லைக்
கீற்றனேயிறுதியில்லாவிறைவனேயில்லையென்னுந்
தேற்றனேதெருண்டோருள்ளத்தேறலேகருணைத்தெண்ணீ
ரூற்றனேயிராமநாதா வொப்புயர்வின்மையானே.

அறவனேயறத்தின்பேறேயசும்பறவகன்றஞானத்
துறவனேதுறந்தோர்காணுஞ்சோதியேதொழும்பர்க்குற்ற
வுறவனேயன்பர்பாவமொழித்திடுஞ்செயலிலஞ்சா
மறவனேயிராமநாதாமலைமகள்பாகத்தானே.

அடியனேன்முனியினோடுமாயிழையொருத்தியாவி
முடியநேரெய்துசெற்றமூர்க்கனேன்முறைதவிர்ந்த
கொடியனேனுன்னைவந்துகுறுகினேன்குணத்திற்சால
மிடியனேன்புரிந்தபூர்வம்விட்டுவாயன்றிமேலும்"

தேவாதி தேவனே யிந்தத்தீப்பழியினின்று நீக்கியதேயன்றி இனிச் சிறிதும் வேதாகமவிதி தவறாது நடக்கச் செய்வது தேவரீரது கடனே" என்று சொல்லித் துதித்தனன் அப்பொழுது அவனது முகத்தினின்றும் பிரமகத்தி ஸ்ரீராமனிடத்திற

ரேன்றிய பிரமகத்திப்பேயினது தம்பியென்று சொல்லும்வண்
ணம செங்குஞ்சியுங் கரும்பட்டாமுமாகி யாருமஞ்சத்தக்க வீடி
யோடு வருதலும், அதனை வைரவக்கடவுள்கண்டு சூலாயுதத்தினு
ற் குத்திவதைத்தனர். அப்பொழுது சிவபெருமான பிரசன்ன
ராயவனை நோக்கி "அரசனே, உன்னைப்பற்றிய பிரமப்ழிகணீங்
கின. நீ சொல்லிய தோத்திரங்களைக் கேட்டு மகிழ்ந்தோம். நீ
யினிச் சென்றரசியற்றுதி. இங்கு வந்து நம்மைத் தரிசித்தவர்
கள் மீண்டும் பிறந்திடவார். ஆயிரம் பிரமகத்திதோஷ நீங்கிமேலா
ன சிறப்படைவர் இதுசத்தியம். அரசனே, நீ சொல்லித் துதி
த்த தோத்திரங்களை யாவர் சொல்லித் துதிப்பாரோ, அவர்கள்
பாவங்களினின்றும் நீங்கி நன்மையை யடைவர் இன்னும் நீ
விரும்பிய வரங்களைக் கேட்குதி" யென்றனர்.

அதுகேட்டு அரசனுமகிழ்ந்து "தேவரீரது தரிசனமே வேண்
டிய பேறுகளனைத்தையுந் தருமாயின், யான் வேறு வேண்டுவ
தொன்றுமில்லையே. ஆயினுந் தேவரீரது திருவடியை மறவாத
சிந்தையுஞ் சிறந்த மோக்ஷமு மித்தோத்திரங்களைச் சொல்லித்
துதிப்பாருக்குத் தேவரீரது தரிசனப்பேறுந்தந்தருளுக" என்று
வணங்கினன், சிவபெருமானுமப்படியே யனுக்கிரகித்துச் சிவ
லிங்கத்திலே மறைந்தருளினர். சங்கரபாண்டியனு மிராமநாத
னை வணங்கி வாழ்த்திச் சதுரங்கசேனைகள்சூழத் தனது நகரை
யடைந்து அதனை முனிவர்களுக்குஞ் சொல்லினன் முனிவர்
களு மதுகேட்டு மகிழ்ந்து "இனி நீ யரசாளுதி" யென்றபிஷே
கஞ்செய்தனர். சங்கரபாண்டியனும மந்திரி மனைவி மக்கள் சு
ற்றத்தோடு மிருந்து சிலகாலம் பூமியை யரசாண்டு ஸ்ரீஇராமலி
ங்கப்பெருமானது பாதாரவிந்தங்களை யடைந்தனன்

சங்கரமாறநாமன்மேயதோர்தண்டலில்சீர்கொள்பேறுகூறினோம்
பங்கமிலாதவாதிமாதவீர்பண்டையகாதையீதுபாடுவார்
பொங்கொலிநீடுகாதிருடுவார்புன்கணெலாமுமோட நூறியே
யெங்குநிலாவுதேவதேவனுமெந்தையிராமநாதனவரே.

சங்கரபாண்டியச்சருக்க முற்றிற்று.

## சேதுமாதவச் சருக்கம்.

சூதமகாமுனிவரானவர் மற்றையமுனிவர்களை நோக்கி மு
னிவர்காள், இனிச் சேதுமாதவருடைய சரித்திரமொன்றுளது;
அதுகேட்பது இன்றியமையாத சிலாக்கியமாகும் என்று சொல்
லுவாராயினர்.

முற்காலத்திலே பொருனை நாட்டிலே சந்திரகுலத்திலே புண்ணியநிதியென்னும் பேரையுடையவன், சோமசுந்தரக் கடவுளாண்ட மதுராபுரியை யரசாளுபவன், குணநிதியென்னுங் காரணப்பெயருடையவன்; அவன் திருநந்திதேவர் திருக்கயிலாய மலையைக் காப்பதுபோல மதுராபுரியைக் காத்துவருங் காலத்திலே, ஒரு சுபதினத்தில் தன் மகனுக்கு முடிசூட்டிக் கந்தமாதனமலைச்சாரலிலே சேதுதீர்த்தமாடிவருதற்கு நினைந்து சதுரங்க சேனைகளும் ஆவலைச் சுற்றமுஞ்சூழ வழிக்கொண்டு, ஸ்ரீராமன் சீதையோடு தான்வசித்த சேதுவினிலையைக் காணுதற்கு மீண்டுவருவதுபோல் மனைவியோடு பலவித அலங்காரங்களும் பொருந்தச் சேதுதீர்த்தக்கரையை அடைந்து விதிப்படி சங்கற்பித்துச் சேதுவிலு மற்றைய தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து, இராமலிங்கப் பெருமானையுந் தரிசித்து அங்கே சிலநாளிருந்து, விட்டுணுமூர்த்தியும விரும்பும்படி பலவித யாகங்களைச்செய்து முடித்து, யாகதீர்த்தத்தோடு மீண்டுந் தனுக்கோடியிலே முழுகி, இராமலிங்கப்பெருமானைத் தோத்திரஞ்செய்து பிரதக்கிணமாகவந்து நமஸ்கரித்து இவ்வண்ணமே நியதி பூண்டிருக்குங் காலத்திலே, இலக்குமியானவள் தனது நாயகனாகிய விட்டுணுவினோடு ஒருகலகத்தை விளைவித்து ஊடல்காரணமாக உத்தரவுபெற்றுக் கந்தமாதனமலைச்சாரலிலே சேதுதீர்த்தக்கரையை யடைந்து குணநிதிமகாராசனதும் விந்தாவலியென்னும் மனைவியினதும் மனதைப் பரீக்ஷிக்கும்படியாக எட்டுவயதுடைய சிறுபெண்குழந்தை வடிவாகித் தனிமையாயத் தனுக்கோடி தீர்த்தக்கரையிலே நின்றுலாவினள்.

குணநிதிமகாராசனுந் தன் மனைவியோடு தீர்த்தமாடி நித்தியகருமங்களை முடித்துக் கோடிதுலாபார தானங்களைச் செய்து சமுத்திரம்போலச் சேனைகள் சூழ மீண்டு வரும்பொழுது, பொன்போலும் பலதளிர்கள் நிறைந்த பூங்கொம்பு போலவும், மின்னற்கொடிபோலவும், விளக்குச்சுடர்போலவும், பேரொளிவாய்ந்த சாயலையுடைய மயில்போலவும் நிற்கும் பெண் குழந்தையைக் கண்டு பேரானந்தம் பெற்று, தாமரைப்பூவைப் பிரிந்து மதனது பேரொளிபோல விளங்குந் திருவடிச்சோதி பூமியை விளக்கும்படியாக நின்ற பெண்மணியின் முகத்தைநோக்கிச் சொல்லுவான். "பெண்மணியே, நீயார்? உன்னைப்பெற்ற தந்தை தாயராகிய தவவலியுடையவர் யார்? உன்னைப் பூமிப பெண்ணென்று சொல்லுதல் தகாதாயினும நின்னூர் யாது? உன்பெயர் யாது? நீ யெங்கு போகின்றாய்? சொல்லுதி" என்றனன அதனைக் கேட்ட பூமகளுஞ் சொல்லுவாள் "ஓ மகாராசனே, பூமியிலே என்னைப்பெற்ற தந்தை தாயர்களொருவருமில்லை. இங்கே என்னோடுடன்பிறந்த சகோதரரொருவருமில்லை, உலகத்

திலே எனக்குத் துணையாவாரொருவருமில்லாத தமியேன, உனக்கு மகளாகியிருக்கும்பொருட்டு உன்வீட்டுக்கு வருகிறேன். மாலன்றி மற்றொருவருந்தீண்டாவண்ணஞ் சிறுவயதுமுதற்பேணி யென்னை நீ காக்கவேண்டும்" என்றனள். அதுகேட்ட குணநிதிமகாராசனும் பெருங் களிப்படைந்து, பெண்குயிலினது முகத்தை நோக்கிப் பேசுவோன். "பெறுதற்கரிய பேருகிய இரத்தினமே, எனக்கோராண்மகவுமாத்திரமுண்டு. என் குலமுழுது முய்யும்படி யுன்னை எனது புத்திரியாகச் சீராட்டி வளர்ப்பேன நீ விரும்பினவரெவரோ அவரன்றி வலாற்காரமாக வுன்னை யார் தீண்டினு மவரைக் கொல்லுவேன். சீதேவியே, நீ யாதுக்கு மஞ்சாது என் மனைவியாகிய விந்தாவலிக்கும் மகளாகி யவளோடிருந்து எனது வீட்டினில் வாழுதி" என்று சொல்லித் தனது மனைவியை நோக்கி "எனது பத்தினியே, எமது முன்னோர் செய்த தவவடிவு போன்ற விந்தப் பொன்மணியை உனது மகளாக நீயே வளர்த்து வருகுதி" என்று கையிலே கொடுத்தனன விந்தாவலியுந் தனது நாயகனது உத்தரவின்படியே பெருமகிழ்வடைந்து தனதிரண்டுகையினாலு மேந்தி யணைத்துப் பலமுறை யுச்சிமோந்து ஆடையணிகளைத் திருத்தி யலங்கரித்து அமுதை யூட்டித் தான்பெற்ற பிள்ளையினும் பதின்மடங்கு பேரன்போடு வளர்த்தனள். சீதேவியும் குணநிதிமகாராசனது மாளிகையை நீங்காமல் விந்தாவலியினது கைத்தாமரையே தான் வசிக்குந் தாமரைமலராகவிருந்து வளர்ந்தனள்.

ஸ்ரீமன் நாராயணரானவர் இலக்குமி யிவ்வாறுபிரிந்துவள்ருதலு மவளது பிரிவைச் சகிக்காதவராகி யவள்மீது கொண்ட காதல் பிடர்பிடித்துந்தக் கருடவாகனத்திலேறி யவளைத் தேடிக் கலக்கும்பொருட்டு வைகுண்ட நகரத்தை நீங்கி, யவள் வசிக்குந் தாமரை மலர்களை யிதளிதளாகத் தடவிப்பார்த்தும், சந்திரமண்டலத்தினுஞ் சிறந்தமாளிகைகளினும் புஷ்பமாலைகளினும ஆபரணப் பேழைகளினுஞ் சிறந்த பெண்களது திருமுகங்களினும் இலக்குமி வசிக்கத் தக்க வேறைய விடங்களினும் பலதினங்களாகத்தேடிக் காணுமையினுற் றனது சிறை நீக்கிக்கொணர்ந்து ஆறும்படிசெய்த சேதுக்கரையினு மொருவேளை தங்குவாள் என்று கருதிக் கந்தமாதன மலையை யடைந்து பார்க்குமளவில, ஸ்ரீமகாலட்சுமியுஞ் சில தோழிமார்கள் சூழப் பூக்கொய்யுமாறு எதிராக வருதலும், வறியவன்கண்ட பொற்குவை போலக் கண்டு மகிழ்ந்து பெருமயக்கமுடையவராகி "இவ்வள்ளனேடு கலகஞ்செய்து பிரிந்து வந்தமையினுல, நானிவ்வடிவத்தோடு சென்றுகாணில் வெருண்டோடி அரசனிடத்துப் பினனும்போ யடைக்கலம புகுவாளாதலி னது தகுதியன்று" என்றுநினைத்துத் தன

துருத்தைவிட்டுப் பிராமணவேடங்கொண்டனர். அவருக்கி ருப்பிடமாகிய திருப்பாற்கடலானது "எம்பெருமானே, நீ என் னைப்பிரியினு முன்னே நான் விடமாட்டேனென்றவரது கருமே னியைவந்து சூழ்ந்ததுபோன்ற விபூதியழகு சரீரமுழுதினும் பிர காசிக்கவும், அத்திருப்பாற்கடல் நுரைகள் சிறைக்காற்றினலெ டுப்புண்டு மேலெழுந்து விழுவதுபோன்ற முக்குறி நெற்றியிலே விளங்கவும், ஸ்ரீதேவியினது இருகொங்கைகளு ளெழுங்கும்படி தழுவும்பொழுது அவளது கண்களினிழல் வரிசையாகி மார்பில் விபூதியணியின்மேற் படிந்ததுபோல உருத்திராக்கவடம் விளங்க வும், தன்னை மகாலக்குமி பிரிந்தமையால் தனது சயனமாகிய சேடனைத் தோளிலிட்டுவருவதுபோல விளங்குகின்ற உத்தரீய ப்பட்டிலங்கவும், மேலே மகாலக்குமியினது திருக்கரத்தைத் தா ன் வலிதாகப்பற்றி யிருக்கும்பொழுது தானேயிவள் நாயகனெ ன்பதனை யறிவித்தற்குத் தன்னிறத்தினடையாளத்தைக் காட்டு வதுபோல விரலிலே பசும்புற்றருப்பையினுன்முடிந்த பவித்தி ரம் பொருந்தவும், மகாவிட்டுணுவானவர் தான் றாபித்த இரா மலிங்கப்பெருமானுக்குக் காசியிற் கங்கையைக் காவடிகட்டி யபி டேகித்து முன்மாதிரி காட்டுவார் போன்று கங்கையெடுத்தமை த்த காவடி தோளிலிருப்பவும், இவ்வாறு கண்டவர்களினது க ண்கள் களிகூரக் கங்கையாடிவரு மருந்தவ வேதியராகிக் கரவு வேடங்கொண்டு சிவபெருமானது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யிடை யிடையே சொல்லிக்கொண்டு ஸ்ரீமகாலக்குமியினது பக்கமாக வந்தனர்.

ஸ்ரீமகாலக்குமியும் அவரது கபடமார்க்கத்தை யறியாது சிறிதுஞ் சந்தேகமின்றித் தோழியர்களோடு பூக்கொய்து நின்ற னள். அவளைக்கண்டு மோகியாகிய மகாவிட்டுணுவுஞ் சோலையி னது வளப்பத்தைப் பார்ப்பவர்போல வேறுபணியின்றிப் பூவை ச்சுற்றும் வண்டுபோல வொருகாலணைந்து மொருகாலகன்று மு ற்றுநோக்கிக் கொம்பை வளைத்து மலரைக்கொய்யும் ஸ்ரீமகா லக்குமியினது முன்கையை விருப்பில்லாதவர் போன்று பிடித் திழுத்தனர். குணநிதிமகாராசனது திருமகளும் தன்னைப்பிடி த்தகையில் மறைந்திருந்த சங்குருத்துதலினுலோ! அரியை அ ன்னியனென்றுகொண்ட அச்சத்தாலோ! தனது கையை விரை ந்து திருகி "ஐயனே, யாரோ என்னை யிழுக்கின்றனர்" என்ற ழுதனள்.

குணநிதிமகாராசனும் மதனைக் 'குயிலோசையோ' என்று சி ந்தையுற்று, எழுந்தவோசையாற் றனது மகளினழுகையென்று தெளிந்து சேனைகளோடும் விரைந்து சென்று பலமுன்றை யழுத லினலிருகூற்றப்பட்ட தனது மகளையடைந்து "என்னருந்தவப்பே

றே, நீ யழுவதென்னை? உனது கையை யிவ்விடத்துப் பற்றி யிழுத்தவர் யாவர்? சொல்லுதி எனவும், அந்தச் ஸ்ரீதேவியானவ ள் கண்ணீர் சொரியநின்று சொல்லுவாள் "ஐயனே, மேலாகிய தவவொழுக்கம் பெற்றவனுய் எனதுகையைப்பிடித்திழுத்த திருடன் நின்னைக் கண்டு சிறிது மஞ்சாது நிற்கின்ற இவனே இவன்கொண்ட மறையவர் வேடம் பொய்யன்றே. இதுவே யிவ விடத்து நடந்தது" என்றனள். அதுகேட்ட அரசனுங் கோபித்து யாரிவ்வென்று விசாரியாமல் அவனைப்பிடித்து இராமலிங்கபெருமானது ஆலயத்துடகொண்டுபோய்க் கைகளிரண்டையுங் கயிற்றினுற்கட்டிப் பலவித தண்டனைகளையுஞ் செய்வித்துக் கால்களசையாமல் விலங்குமாட்டி வாயுமூலையிலுள்ள மண்டபத்திலே சிறைவைப்பித்து வீடுசென்று மகளைத் தழுவி புச்சிமோந்து அவளை அந்தப்புரத்திலே யிருக்கும்படி செய்தனன். சூரியனததமித்தது. அரசனுந் தனது நியதிகளைமுடித்து மனவிசாரத்தோடு நித்திரை செய்யும்பொழுது, ஆயிரம் பணுமுடியையுடைய சேஷ சயனத்திலே மகரகுண்டலங்கள் விளங்கப் பொற்கிரீடப்பேரொளியுண்டாகி யிருளுலகுக்கு மொளியையுண்டாக்கப் புன்முறுவலோடு மார்பிலே முத்துமாலைகள் பொலிய நாரதர்முதலிய முனிவர்கள் துதிப்பக் கிருபைக்கணுண்டாகப் படைத்தலைவர்களுந் கிங்கிரருந் தங்கடங்கடொழிலை நடாத்தப் பஞ்சாயுதம் விளங்கத் தேவர்சுடுதிக்க இவ்வாறு பேரலங்காரத்தையுடைய ஸ்ரீமன் நாராயணமூர்த்தியே தான் சிறையில் வைத்த தவத்தியாகவும், பொற்றுமரைமாலை கரிய கூந்தலினிருளைத் துரக்கவும், கரியகூந்தல் அப்பொற்றுமரைமலரினெழிலை விழுங்கவும், தனங்கள் மேருமலையினது சிகரம்போல விளங்கவும், அச்சிகரத்தினின்றெழுகு மருவிபோல முத்துமாலை விளங்கவும், ஏழுகோவைமணியும் பீதாம்பரமும் உந்திச்சுழியை மறைத்தரையிலே பிரகாசிக்கவும், கைத்தாமரைக விரவிற்றுமரைமலர்போலக குவியவும், காற்றுமரையிடத்துப் பூண்ட பதுமராக விரத்தினத்தாலாய மோதிரத்திலே தோற்றுங் கண்ணுகிய தாமரையினிழலடிக்குத் தாமரைமலர்போல விளங்கவும், பெருமைபொருந்திய பதக்கத்தை மற்றைய வணிகளானலங்கரித்ததுபோலவும், பூங்கொம்பை மாலைகளினு லலங்கரிப்பதுபோலவும், பொன்மயமாகிய திருமேனியிலே பலவித பூடணங்கள் பிரகாசிக்கவும், முகத்திலடங்கிய மூக்கினு மணிந்த பதுமராகரத்தினங்களினழகு பூரணசந்திரனேடுசேர்ந்த செவ்வாயுதையத்திற பிறந்தானைச் சகிமங்களபோகமுடையானென்று ஸ்ரீதேவி பிரியாதிருப்பளென்னுஞ் சோதிடநூலின்து உண்மையை விளக்கவும், முன்னுளிலே தமது கோட்டை முரித்து வருத்திய இராவணனைக் கொன்றபேருதவியை நினைத்து அடடியானைகளும் ஸ்ரீமன் நாராய

ணனதுமனைவிக்குத் தேவாமுதம்நிறைத்த பொற்குடங்களையிரு புறத்திலுமேந்திநின்றபிடேகிக்கவும், சந்திரன் போன்ற திருமுகத்தினின்றும் புறப்படுகின்ற ஏவலவர்க் சேதுவோவென்று இந்திராணி கேட்டொழுகவும், தொடையாகிய அரம்பையையும முழந்தாளாகிய ஞெண்டையும கணைக்காலாகிய அம்புக்கூட்டையுந் தேவலோகத்தரம்பை நின்று வருடவும், யாவருந் துதிக்கத்தக்க வின்னேரன்ன பேரழகுவாய்ந்த ஸ்ரீமகாலக்ஷ்மியே தனது மகளாகவுங் கனவிலே கண்டு நினைவுவந்தவுடனே எழுந்து தன் மகளைப் பார்க்குமிடத்துத் தான் கண்ட கனவின்வண்ணமாயிருக்கக் கண்டு பெருமகிழ்ச்சிகொண்டு விடியுமளவும் விழித்திருந்து விடிந்தவுடனே தனது மகளையுமழைத்துக்கொண்டு சிறைவைத்த தவவடிவைக் கண்டவுடனே தான்கனவிற்கண்ட ஸ்ரீமன் நாராயணவடிவாகவிருக்கக்கண்டு வீழ்ந்துவணங்கிக் கைகுவித்துத் தோத்திரஞ் செய்குவான்.

கம்பொடுதண்டநேமிகார்முகங்கதிர்வாளேந்து
மம்புயக்கரத்திலனையரவிந்தநயனத்தானே
யும்பரோடுலகமுண்டவொருவயிற்றுந்திபூத்த
பைம்பதுமத்தின்ஞாலம்படைப்பவன்றனைப்படைத்தாய்.

விண்டுவென்பொருண்மையாலேவேறிலாதுலகமெங்குங்
கொண்டுநின்றகோவேகோவலர்குலத்தின்பேறே
மண்டிகல்புரியுந்திண்டோண்மதுவொடுகையிடவபேர்
மிண்டுடைவீரராவிவிழுங்கியவென்றியானே.

திசைமுகன்மரபிற்றோன்றித்தீவினைக்காவல்பூண்ட
தசமுகன்றலைதடிந்தசராசனத்தடக்கையானே
வசைமுக்கனகனீன்றமகனுயிர்த்தம்பமாகி
யிசைமுகக்கனகத்தம்பத்தெழுநரசிங்கரூபா.

அலர்கதிர்க்கவுத்துவப்பேரணிமணியெறிக்குஞ்சோதி
மலர்வனமாலைமார்பின்வாழ்திருமறுவினானே
கலர்மனங்கரந்துகற்றோர்கருத்திடைக்கரப்பின்றாகிப்
பலர்புகழ்பரசியேத்தும்பழமறைப்பொருண்மையானே.

இந்திரைக்கினியகேள்வாவிருநிலமடந்தைகொண்கா
மைந்தனுக்கவிகைத்திங்கண்மகரகேதனனைமுன்னந்
தந்தகேசவனேதாமோதராகராத்தடிந்துதந்தி
முந்துவந்தருளுமாலேமுராரியேமுகுந்தாமாயா.

உடற்சிறைநீக்கியைவர்க்குதவிசெய்திடநடந்த
மடற்சிறைவண்டார்தண்டாமரைப்பதமலழுங்குமுன்னே

யடற்சிறைதன்னில்வைத்தேனபராதமிதற்கென்செய்கேன
கடற்சிறைத்தெண்ணீர்காயாகருமுகிலன்னகண்ணா.

செய்ததானவர்தங்குற்றந்திருவுளந்தனிலெண்ணு
லுய்த்திறமருளினின்றனுருவமுமுகவுமாற்றால்
வெய்தெனப்பற்றிநின்னைவிலங்கிட்டவெய்யனேற்குங்
கைதரவல்லையென்றேகருத்தினுடகருதுகின்றேன்.

அரசனானவன் இவ்வாறு தோத்திரஞ்செய்து அன்போடு ஸ்ரீமன் நாராயணனை வணங்கிப் பின்பு அன்னநடையையுங் கிளிமொழியையுங் கோங்கரும்பைபொத்த குயத்தையும் மயிற்சாயலையுமுடைய தனது மகளாகவந்தமாதாவைத் தோத்திரஞ்செய்வான்.

அகலிடமுழுதுமீன்றுபரிபுரத்தமர்ந்தாயார்க்கும்
புகலிடமானாய்காவற்பொறியெனப்புரிவாயவ்வ
ரிகலிடரொழியப்பாசமிரித்தியானெனதென்கொள்கை
மிகலிடாதமலஞானவீடுதந்தருளுமின்னே.

பலமறைவித்தையாகிப்பல்லுயிர்ப்பகுதிக்கெல்லாம்
பொலிவுயர்செல்வங்கல்விபுண்ணியம்புனிதவாழ்க்கை
நலமலிவேட்கைசித்திநன்மதிநவின்றவன்றி
நிலவுசீரெவைக்குமாங்கோர்நிமித்தமாய்நின்றநங்காய்.

வேள்வியாய்வேள்விப்பேறுவிதிப்பவளாகிவேதக்
கேள்வியாய்க்கேள்விதன்னாற்கிடடுதற்கரியாளாகி
நாள்விரிநறுமென்றோட்டுநளினபீடிகைமேனாளு
மாள்விழைந்தடித்தொண்டாற்றுமரம்பையர்க்கருளுமாதே.

எண்ணிரிசத்திபேதமியாவுமாயெவைக்குமேலாய்க்
கண்ணனனந்தமாகிக்கவுரியோர்கருணைநாட்ட
வண்ணமாயளப்பில்சோதிவடிவமாய்வரம்பிலாத
தண்ணளியுருவமாகிச்சராசரம்புரக்குந்தாயே.

ஊக்கமேயுடையபேறேயுணர்வினாலுணர்வார்சிந்தை
நீக்கமேநிலையொன்றாகிநின்றிடுந்திருவேதூல
சூக்கமேபரையேதொள்ளைத்துவக்குடற்பறநீத்தா
ராக்கமேயாக்கியெல்லாமளித்தழித்தருளுவாளே.

உன்மகவாகுமெல்லாவுயிர்களுமவற்றிலொன்று
மென்மகவானேனென்றாயிதுபடிறனதன்றே
பொன்மகளாகுநாமப்பூவையேமுனபோலென்னை
நின்மகவாகப்போற்றியேருளென்றுதாழ்ந்தான்

லிலக்குமியையுந் தோத்திரஞ்செய்து நின்றனன். ஸ்ரீமன் னாராயணர் அரசனை நோக்கி "சந்திரகுலாதிப, எம்மை நீ யிறுகுமாறுகட்டி விலங்குபூட்டிவைத்தது குற்றமென்றெண்ணுறெதாழிக. அடியவர் வசமாகுவேமென்கிறதை நடித்துக்காட்டிய நாடகமென்றறிகுதி. என்னைபபிடித்தது உனதனபே. என்னைக்கட்டியகயிறு மாலேயே. என்மேலடித்த அடிகளெல்லாம் என்மீது சாத்திய புட்பமே. சிறைவைத்த இந்தவிடம் நினது மனக்கோயிலே. நீ என்னைக் குறித்து முன்னொரு யாகஞ்செய்தனை. அதனால் எனது மகாலட்சுமியோடு வீண்கலகம் விளைத்துப பிரிவித்து நினக்கு மகளாகவிடுத்தேம், நீயும் பெற்றபிள்ளைபோல வளர்த்து நமக்களித்தனை. அதனால் மிகமகிழ்ந்தேம். அரசனே, இவளிடத் தன்புடையார் யாரோ அவரே நமதன்பர். இவளைப் பகைத்துவெறுப்பவர் யாரோ அவரே நமக்குப் பகைவர். யாமுமிவளுமிரண்டன்று. இவளுன்னிடத்துவரும்பொழுது ஒருவரும் நின்னிடத்து வன்மைசெய்யாவண்ணங் காப்பேனென்றனை. அதனை யறியும்பொருட்டு வந்திவளை வலாற்காரமாயிழுத்தோம், அதனாலெம்மைச் சிறைவைத்து அடைக்கலமபுகுந்த சிதேவியைக்காத்து நின் சத்தியத்தை நிறுத்தினமையால் பெருமகிழ்வடைந்தேம். நீ யொன்றுக்கு மஞ்சவேண்டாம்" என்றருளினர். மகாலடசுமி அரசனை நோக்கி "அரசே, நீ செய்த யாகபலத்தினால் நும்மிருவரையுந் தந்தைதாயராகக்கொண்டு வளர்ந்தேன். எனது பிராணநாயகரும் நின்பக்கமுற்றனர். ஆதலின், அரசனே, எவ்வுலகவாழ்வும் நின்பாலதாகும். நீ நினைத்தவைக ளனைத்துஞ் சித்திக்கும். சிறந்த ஒழுக்கமனைத்தும் நின்கண்ணதே. எம்மிருவரிடத்தும் பேரன்புளதாக" என்றருளித் தனது நாயகனது மார்பில் வீற்றிருந்தனள். பின்பு ஸ்ரீமன்னாராயணரும் பெருமகிழ்வடைந்து அரசனை நோக்கி "அரசனே, நீ எமக்கிட்ட விலங்கோடு இவ்விடத்திலே எக்காலத்துஞ் சேதுவைக் காக்கும் விருப்பத்தினாற் சேதுமாதவர் என்னும் பேரடைந்திருப்போம் பிரமனும் இராக்கதர் பூதபைசாசங்களடையாது காத்திருக்கின்றான். இந்திராதிலோகபாலர்களுமிருக்கிறார்கள். சிவபெருமானும் இராமநாதனென்னும் பேரோடு சீவகோடிகள்வாழ்வடையும்பொருட்டு இங்கேயிருக்கிறார். நீ விலங்கிட்ட இவவடிவத்தை யாவர் தரிசிப்பார்களோ அவர்களை இலக்குமி பிரியாள். சித்தசுத்தியகலாது. அவர்களே நமதுருவம்.

இச்சரித்திரத்தை யாவர் விரும்பிப் படித்துக்கேட்டுச் சிந்திப்பாரோ அவர்கள் செல்வங் கல்வி கீர்த்தி மனைவி மக்களாதிய பெருஞ் சிறப்படைந்து உலகத்திலே வறுமையின்றி வாழுவர்.

அரசனே, நீ சொல்லிய தோத்திரங்களை நெட்டுருப்பண்ணி நினைப்பாரு மெழுதுவாருங் கேட்பாரும் வைகுண்டப் பிராப்தி பெற்றின்புறுவர்" என்றருளி ஸ்ரீ மகாலக்குமியோடு மங்கே வீற்றிருந்தனர். குணநிதிமகாராசனு மவர்களது ஆசீர்வாதத்தைப் பெற்று வணங்கி வாழ்த்தி யருச்சித்து, இராமலிங்கப்பெருமானையுந்தரிசித்து, மரணகாலம்வரையுங் கந்தமாதனத்தை நீங்காதிருந்து மோட்சமடைந்தான். விந்தாவலியு முடன்கட்டையேறி மோட்சமடைந்தனள். முனிவர்காள், கங்கையிலே தீர்த்தமாட விரும்பினவர் சேதுமாதவர் சன்னிதானத்திலே சங்கற்பித்துச்செலலுவாரேல் நினைத்தவண்ண மிடையூறின்றிச் சித்தியடைவர். அவர்களுக்கே சேதுதீர்த்தப் பலனு மிராமலிங்க தரிசனைப் பேறுமுளதாகும். அஃதிலாதவ ரப்பயனையடையார்.

வேதமாகமமாதியவாதிநூன்மேவநாடியமேதகுமாதவீ
ரீதுகாதலினாலெவர்கூறுவார்யாவரேநுகர்வாரிருசெவியா
லீதியால்வர்நீள்கடன்மேகநேர்நீலமால்மர்நீணகர்மேவுவார்
சேதுமாதவனூர்கதைநேரெலாந்தேருமாறினிதோதினம்யாமரோ.

சேதுமாதவச்சருக்க முற்றிற்று.

## சேதுயாத்திரைச் சருக்கம்.

முனிவர்காள், இனிச் சேதுயாத்திரைசெய்யு முறையினைச் சொல்லுதுங்கேட்பீர்களாக. சேதுயாத்திரைசெய்யவிரும்புவோர், ஸநானஞ்செய்து நித்தியகருமங்களைமுடித்து ஸ்ரீராமனும் இராமலிங்கப்பெருமானு மகிழுமாறு சற்பிராமணர்களுக்கு விருப்பத்தோடு அன்னதானஞ்செய்து, விபூதி ருத்திராக்கசந் தரித்து, பவித்திரதாரணஞ்செய்து, சேதுயாத்திரை செய்வோமென்று சங்கற்பித்து, விட்டினின்றும் புறப்பட்டு ஸ்ரீபஞ்சாட்சர அட்டாட்சர தியானத்தோடு மௌனமாகிக் கோபமுதலிய தீக்குணங்கள் சிறிதுமில்லாமற் பஞ்சேந்திரியங்களையு மடக்கித் தண்டு செருப்பு குடை தாம்பூல தாரணங்களையும் ஸ்திரிபோசமாதி தீமைகளனைத்தையும் வெறுத்து நன்மைகளனைத்தையுஞ்செய்து ஒருபொழுது உப்பில்லாதவுணவுகொண்டு வீண்வார்த்தைகள் பேசாமற் சேதுமகத்துவங்களையே பேசி விருப்பினோடும அரியர பூசைகள் செய்து பிறரிடத்திலொன்று மியாசிக்காமல் இயன்ற யாகங்களைச்செய்து கிடைத்த அதிதிகட்கு அன்னங்கொடுத்து, பசரித்துத் துறவிகளுக்கும உண்டி மருந்து உறையுளாதிய கொடுத்துப்பசரித்துச் சேதுமூலத்தை யடைந்து பிப்பலனைச் சுட்டிய

"பிப்பலனே, உலகத்துக்கு அச்சத்தை விளைப்பவனே," யென்றழைத்து இரண்டுகையினுலு மேமூகல்லேனு மொருகல்லேனு மெடுத்து "இதனை நீ புணவாகக்கொள்ளுதி" யென்று கொடுத்து வருணனை நோக்கி "aவிசுவாசியாகியும் bகிருதாசியாகியும் cவிசுவயோனியாகியும் dவிசாம்பதியேயாகியும் இக்கடலிடத்துக் கோயில்கொள்ளுதி" என்று சந்நிதானஞ்செய்து, பின்னும் "eவிட்டுணுவாகி fஅபாம்பதியாகி gஇரணியசிருங்கனுகி hவிசுவகுத்தனுகி நதிபதியாகியுள்ளவனே" யென்று வணங்கிப் பின்னும் "இரத்தன் காரணனுகி இரத்தனுகாரமாகி தேவரத்தனமயமாகிச் சுத்தசலசாகரமே" யென்றருக்கியங் கொடுத்துப் பின்பு "உலகங்களுக்கெல்லா மாதாரமாய்ச் சக்கரந் தண்டு சங்கு ஏந்தியிருக்கின்ற கடவுளே, இத்தீர்த்தமாடுதற்கு உத்தரஞ்செய்தருளுமென்று அனுஞ்ஞை பெற்று, மேற்கே மயிந்தனும், கிழக்கே சுக்கிரீவனும், வடக்கே துவிதனும், தெற்கே நளனும், நடுவே ஸ்ரீராமன் சீதை இலக்குமணன் அனுமான் அங்கதன் விபீடணன் ஆகிய இவர்களு மிருப்பதாக நினைத்து, "நாரதர் பிரகலாதன் அம்பரீடன் வியாதர் சூதர் என்பவர்களையு நினைத்து, உலகத்திலுள்ள தீர்த்தங்களுக்கெல்லா மிடமாயுள்ள சமுத்திரதேவே, என்னிடத்துள்ள பாபங்களனைத்தையும் நீக்கியருளுதி" யென்று வேண்டுதல்செய்து பிராமணர்களாதி மூன்றுவருணத்தாரும் இரணியசிருங்கமாதி மந்திரங்களையும் உருத்திராதி வேத இருக்குகளையுஞ் சொல்லி சூத்திரராயின் தமிழ்வேதங்களி லிசைந்தவற்றைச் சொல்லி விட்டுணுவையுஞ் சிவபிரானையுந் தியானித்துத் தீர்த்தமாடியெழுந்து, மும்முறையாடியபின்பு சூரியனைநோக்கி "தேவரீருடைய திருக்கரங்கள் தீண்டுதலினுலே சிறந்தன; மெய்யன்பினுலே பரிசுத்தமாயின" என்று நமஸ்கரித்துப் பின்னும் முழுகுக. மேற்குவழியாகவரின் தருப்பசயனத்தின் முழுகி விட்டுணுவையும் வணங்கவேண்டும். வடக்குவழியாகவரின் தேவிபட்டணவழியாகச் சென்று நவபாஷாணத்திலே யிவ்வாறு முழுகுதல்வேண்டும.

---

a விசுவாசி - உலகத்தையுண்பவன்

b கிருதாசி

c விசுவயோனி - உலகம் பிறத்தறகிட்ஞயுள்ளவன்.

d விசாம்பதி - புருபதியாயுள்ளவன்.

e விட்டுணு - உலகத்தைக் காப்பவன்.

f அபாம்பதி - நீருக்குத்தலைவன்.

g இரணியசிருங்கன் - பொன்முடியுடையோன்.

h விசுவகுத்தன் - உலகத்தைக் காபபவன்.

ஸ்ரீராமன் சீதை இலக்குமணன் பிப்பலன் கண்ணுவன் மயிந்தன் கிருதாந்தன் சரபன் வேகதெரிசி அநுமான் மனஸ்வி காளராத்திரி அகர்க்கனேசன் கவி இடபன் விதநிமை சுக்கிரீவன் துவிதன் ஆதியோரைச் சுட்டி அருக்கியங்கொடுத்துப் பின்னும் முனிவர் தேவர் பிதிராவோருக்குந் தருப்பணஞ்செய்து கரையிலேறி ஈரவஸ்திரத்தை நீக்கி உலர்ந்தவஸ்திரந் தரித்து நித்தியகருமமுடித்து ஆசமித்து வேதவிதிப்படி சிராத்தஞ் செய்து சற்பாத்திரப் பிராமணர்களுக்கு கோ பூ தில இரணியாதி தானங்கள் செய்து சேதுவிற் செய்த முறைப்படியே தனுக்கோடிதீர்த்தத்தினுஞ் செய்து முழுகிச் சக்கரதீர்த்தத்தையடைந்து ஸ்நானஞ்செய்து கரையேறித் தருப்பசயனத்தையடைந்து விட்டுணுவைத் துதித்துச் சக்கரதீர்த்தத்தையடைந்து முழுகிப் பின்பு கவிதீர்த்தத்தும் சீதாகுண்டத்தும் இருணமோசனத்தும் முழ்கிப் பின்பு இலக்குமணதீர்த்தத்தையடைந்து செளளஞ்செய்வித்து அதிலே முழுகியபின்பு இராமதீர்த்தத்தையடைந்து அதில் விதிப்படி தீர்த்தமாடிச் சற்பிராமணர்களுக்குப் பூமியாதி தானங்களைச் செய்து பின்பு பாவநாசத்திலுங் கங்கையை யமுனையிலும் ஸ்நானஞ்செய்து இயன்ற தானங்கள் செய்து பின்பு சாவித்திரி சரசுவதி காயத்திரி அநுமகுண்டம் பிரமகுண்டம் நாகதீர்த்தம் [இது அட்டமாநாகங்களு முண்டாக்கியது. இதிலே கங்கையாதி தீர்த்தங்களுந் தங்கள் பாவம் நீக்கும்பொருட்டு விரும்பி வசிக்கும். ஆதலினது விருப்பத்தோடு தன்னையடைந்தவர்களுக்கு மோட்சத்தைக் கொடுக்கும்.] என்னுந் தீர்த்தங்களிலே முழுகிப் பின்பு அகத்திய தீர்த்தத்திலும் அக்கினிதீர்த்தத்திலு முழுகிச் சிரார்த்தாதிகள் செய்து பலவித தானங்களையும் பண்ணி முடிக்கக்கடவர்.

சமுத்திரதீர்த்த முதலாக இங்கே சொல்லிய முறையாதல், அல்லது தமக்கியைந்த முறையாதல் விதிப்படி சங்கற்பித்து ஸ்நானஞ்செய்து லோபமின்றி இயன்றளவு தசதான சிராத்தாதிகள் செய்து, பின்பு ஸ்ரீராமனுதனைத் தரிசித்துச் சேதுமாதவனை நமஸ்கரித்து இராம இலக்குமண சீதாபிராட்டி அநுமானாதியரையும் வணங்கி, எஞ்சியதீர்த்தங்களிலும் மேலும்விரும்பியதீர்த்தங்களிலுந் தங்கள் விருப்பமுள்ளளவு மீட்டுமீட்டுஞ் சங்கற்பித்து ஸ்நானஞ் செய்து இராமனுதனைத் தரிசித்துத் தனுக்கோடிதீர்த்தத்தையடைந்து பேரன்போடு சங்கற்பித்து ஸ்நானஞ் செய்து இயன்றளவு லோபமின்றித் தானதரும சிராத்தாதிகள் செய்து பின்பு கோடிதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து கோதானம் இரணியதானம் எள்ளுத்தானம் வஸ்திரதானம் பூமிதானமாதியவைகள் செய்து இராமலிங்கப் பெருமானைத் தரிசித்

து மூன்றினமேலியன்றளவு பிரதக்ஷிணஞ்செய்து சந்நிதானத்திலே வந்து நின்று

முத்தனேபோற்றிமூவர் முதல்வனேபோற்றிபோற்றி
நித்தனேபோற்றிபோற்றி நிமலனேபோற்றிபோற்றி
பத்தனேபோற்றியன்பர்க்கன்பனேபோற்றிபோற்றி
சுத்தனேபோற்றிவானோர் துணைவனேபோற்றிபோற்றி.

ஆதியேபோற்றியாராவமுதமேபோற்றிமங்கை
பாதியேபோற்றியின்பப்பரவையேபோற்றிமேலாஞ்
சோதியேபோற்றிதெய்வச்சுருதியுந்தொடரொணாத
நீதியேபோற்றிகற்றோர்நிதியமேபோற்றிபோற்றி.

கவளமாகரியுரித்தகடவுளேபோற்றிமுக்கட்
பவளமாமலையேபோற்றிபங்கயன்முகுந்தனேடுந்
தவளமாநீறுபூத்ததழற்பெரும்பிழம்பேபோற்றி
துவளமேருவைவளைத்ததோளனேபோற்றிபோற்றி.

ஏனத்தினெயிறுமோட்டியாமையினெலும்புந்தூணின்
ரூனத்தினுதித்தசிங்கத்தலையுடன்றரித்தாய்போற்றி
மோனத்தினீங்காருள்ளமுண்டகமலர்நிறைந்த
ஞானத்தண்டேனேபோற்றிநான்மறைபபெருளேபோற்றி.

எண்ணலார்புரங்கண்மூன்றுமேழுநாக்கடவுளுண்ண
மூண்ணெலாமுண்டுமிழ்ந்துமறிதிரைப்பாலின்வேலைக்
கண்ணிலேகண்படுக்குநாருநெடுங்கணைவிடுத்த
வண்ணலேபோற்றிபோற்றியநாதியேபோற்றிபோற்றி.

பாழிவாய்மணிகொள்பாந்தட்பாயனீத்தயோத்திவந்த
வாழிமாலிராமன்றன்பாலாழிநீரகழிலங்கை
வாழிராவணவரக்கன்வலிகெழுபிரமகத்திக்
காழிராதகற்றியாண்டகருணைமாகடலேபோற்றி.

அண்டனேபோற்றியண்டரமுதமுண்டிடவிருண்ட
கண்டனேபோற்றிசெந்தீக்கையனேபோற்றிதிங்கட
டுண்டனேபோற்றிகொன்றைத்தொடையனேபோற்றிகோபச்
சண்டனேர்விழவுதைத்தசரணனேபோற்றிபோற்றி.

சூலனேபோற்றிபோற்றிசுராதிபர்மகுடந்தோயுங்
காலனேபோற்றிநேமிக்காளமாமேகமேவும்
பாலனேபோற்றிபோற்றிபண்டைநான்மறைநூலோது
மாலனேபோற்றிபோற்றியம்பலத்தமுதேபோற்றி.

நேசனேபோற்றிபோற்றிநிமலனேபோற்றிசேது
வாசனேபோற்றிபோற்றிவள்ளலேபோற்றிபோற்றி

தேசனேபோற்றிபோற்றிசீதைகோன்பூசித்தேத்து
மீசனேபோற்றிபோற்றியிராமநாயகனேபோற்றி.

கன்றுமழைபரசுதாங்குங்கரசரோருகனேபோற்றி
மின்றிகழ்சடையிற்கங்கைமிலைந்தநாயகனேபோற்றி
தென்றிலைசக்கணியாந்தேவைத்தேவாதிதேவேபோற்றி
யென்றுபல்புகழ்நாமங்களினிதெடுத்திசைத்துவாழ்த்தி.

இப்படியே சொல்லி இராமநாதனைத் துதித்து அவரது பூசைக்கான புடபஞ் சந்தனமுதலிய பூசோபகரணங்களைக் கொடுத்துப் பூசிப்பித்து வணங்கி விடைபெற்றுச் சேதுமாதவனை வணங்கிப் பூசோபகரணங்களைக் கொடுத்துப் பூசிப்பித்துத் தோத்திரித்து விடைபெற்று முந்திய நியதிவழுவாது தலைதுறையடைந்து தந்தைதாய் முதலிய பெரியோரைவணங்கிச் சற்பாத்திரப்பிராமணர்களை வரித்து அறுசுவையோ டன்னமருத்தி, இயன்றளவு தானங்களைக் கொடுத்தலே சேதுயாத்திரைசெய்யுமுறையாகும்.

முனிவர்காள், இங்கே சொல்லியபடி சேதுயாத்திரைசெய்து இராமநாதனைத் தரிசித்தவர்கள் அவரது திருவருளாலே பழைய பாவங்களனைத்தையும் போக்குவர் நரகத்திலழுந்தார் வறுமை வெயிலினால் வாடார் பெருநோய்களால் வருந்தார் கல்வி செல்வம் மனைவிமக்கள் சுகவாழ்வுமுதலிய இன்பத்தோடிருந்து இறந்தபின் மோட்சமடைவர்

இவ்வாறு சேதுதீர்த்தத்திற் சென்றாட இயல்பில்லாதவர்கள் இச்சரித்திரத்தை வாசித்துக் கேட்டு அன்போடு பாராட்டுவரேல் தீர்த்தமாடிய பலனும இராமநாததரிசனபபேறும் அடையும் பாவமொன்றுமவரையடையா.

கோதுசேர்புலவேட்டுவர்சாயவேகூர்ருவருள்வாட்கொடுசாடியே
தீதுதீர்தருமாதவமானதோர்சேயகோன்முறையோச்சுபுதேசுசால்
வேதநூனெறிமார்க்கம்வழாமலேவேள்விநாடதுபோற்றுபுநாளுமே
யேதிலாவரசாட்சிசெய்மாதவீரீதுசேதுவியாத்திரைநீதியே.

சேதுயாத்திரைச்சருக்கமுற்றிற்று.

---

## சேதுபலச் சருக்கம்.

---

சூதமகாமுனிவரானவர் சவுனகாதிமுனிவர்களை நோக்கி, மேலே சேதுதீர்த்த பலனைச் சொல்லுதும் கேட்பீர்களாகவென்று சொல்வார்,

முனிவர்காள், பூமியிலேயுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களுள்ளே சேதுவைநிகரான க்ஷேத்திரங்களொன்றுமில்லை அத்தலத்திலே செய்யுஞ் செபம் தவம் தானம் ஓமமாதிகள் ஒன்று அனந்தமாயழியாது வளரும். இந்தச் சேதுவிலிருந்து தனுக்கோடியிலொருநாள் ஸ்நானஞ்செய்யின், ஆயிரமுகமுடைய சங்கை செறிந்த காசியிலே பத்தாண்டு வசித்த பயனைக் கொடுக்கும். மூன்றுதினத்துக் கிருந்து இராமனாதனையுந் தரிசிக்கின், செய்த மகா பாதகங்கணீங்கும். அதுமட்டோ! சிதம்பரத்திலே பத்துவருடமிருந்த பயனையுந்தரும். சடாக்ஷரத்தை இந்தச் சேதுவிலிருந்து ஆயிரத்தெட்டுத்தரஞ் செபிப்பார் ஸ்ரீராமலிங்கப் பெருமானது திருவடி நீழலையடைவர். மாசிமாதத்திலே இச்சேதுதீர்த்தமாடின், மதுரை மயிலாடுதுறை திருவெண்காடு பழமலை திருவேங்கடகிரி சேடாத்திரி நைமிசாரணியம் அருணை திருவிடைமருதூர் சிதம்பரம் சீர்காழி தென்கயிலை திருவரங்கம் திருவானைக்கா வயித்தீசுரன்கோயில கும்பகோணம் காசி ஸ்ரீசைலம் திருவாரூர் காஞ்சி இன்னோரன்ன சிவத்தலம் விட்டுணுத்தலங்களில் ஒருவருடமிருந்த பயனைக் கொடுக்குமானால் தனுக்கோடியின் மகத்துவத்தை யாவர் சொல்லுவார். முனிவர்காள், இந்தச் சேதுமகத்துவத்தை மூலமாகிய வேதங்களும் நான்கிடத்திலே சொல்லும். புராணங்கள் இதிகாசங்கள் மிருதிகளாதிய யாவு மொருவாக்கியமாகச் சொல்லும். இத்தனுக்கோடியிலே கிரகண காலத்திலே ஸ்நானஞ்செய்யின் காசியிலே கங்கையில் பத்தாண்டு ஸ்நானஞ்செய்த பலனைக் கொடுக்கும். கோடிசனனங்களிலே செய்த பாவங்களனைத்தும் நீங்கும். ஆயிரம் அஸ்வமேத யாகம் செய்த பலனுமடையும். மாசசங்கிராந்தியினும், அயனகாலத்தும், திங்கட்கிழமையிலும், அமாவாசி பௌர்ணிமைகளிலும் சேதுதரிசனஞ்செய்யின், எழுபிறப்பினு மீட்டியபாவங்கணீங்கும். சுவர்க்கலோகப் பிராப்தியுண்டாகும். மாசிமாதத்திலே உதயகாலத்திலே தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்தால் பாவங்கணீங்கிக் கங்கைமுதலிய தீர்த்தங்களிலாடிய பலனையடைவர். மாசிமாதத்திலுதயகாலத்திலே ஐந்துதினம் ஸ்நானஞ்செய்யின் அஸ்வமேதாதியாகபலனும் சாந்திராயண கிருச்சிராதி விரதபலனுமடைவர். இன்னும் மாசிமாதத்து உதயகாலத்திலே பத்துநாள் ஸ்நானஞ்செய்தவர் பிரமலோகமடைவர். மாசிமாதத்து உதயகாலத்திலே பதினைந்துநாளாடினவர் வைகுண்டலோகமடைவர். மாசிமாதத்து உதயகாலத்திலே இருபதுநாளாடினவர் சிவலோகமடைவர். மாசிமாதத்து உதயகாலத்திலே இருபத்தைந்துநாளாடினவர் ஸ்ரீராமனது சாரூபமடைவர் மாசிமாதத்து உதயகாலத்திலே முப்பதுநாளுமாடினவர் ஸ்ரீராமனோடிரண்டறக்கலப்பர். முனிவிர்காள், அறிஞர்கள் எப்படியே

னு மிந்தச் சேதுவிலே மாசிமாதத்து உதயகாலத்திலே விதிப்படி ஸ்நானஞ் செய்வது முறையாகும். அருத்தோதயம மகோதயம் கிரகணுதி புண்ணியகாலங்களில் சேதுவிலே ஸ்நானஞ்செய்தவர்கள் பிறவியடையார். நாகடையார். பிரமஹத்தியாதி பாவங்களும் நீங்குவர். அதுமட்டோ! அட்டைஸவரியங்களேயு மடைந்து இன்புற்றிருந்து இந்திராதி லோகங்களெல்லாங் கண்டு சிவபதமடைந் தின்புறுவர். ஆதலால், இப்புண்ணியகாலங்கள் மூன்றும் மிகச்சிறந்தன.

தேவமுனிவர்களும், பிரமமுனிவர்களும், இராசமுனிவர்களும், பிதிரர்களும், கந்தருவ சித்த சாரணர்களும், கின்னரர் கிம்புருடர் நாகர்களும், பிரமாதி தேவர்களும், இந்தச் சேதுவைத் தியானித்து எப்பொழுது மிங்கே யிருப்பர். இந்தச் சேதுதீர்த்தத்துக்கு மற்றெந்தத் தேசத்துத் தீர்த்தங்களு மொவ்வா இதனது கரையிலே ஒருபிடி அன்னதானஞ்செய்யின் கருச்சிதைத்த பாவம் நீங்கும். இந்தத் தனுக்கோடிதீர்த்தத்தைக் கண்ணுற்றோர் பிறவியிற் புகாதவராய் வைகுண்டலோகத்தையடைவர். தீயராக்கதர்கள் வந்து வருத்தாவண்ணந் தான்வகுத்த அணையைத் தன் விற்கோடியாற் கிழித்தலால் தீய பாவங்களனைத்தையும் பிரிக்கின்ற தனுக்கோடியென்ற பெயரை யடைந்தது.

அந்தத் தனுக்கோடி தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ் செய்து பூமி பொன் வஸ்திரம் அன்னம் நெய் தேன் தயிர் பால சந்தனம் பழவகை வெற்றிலைபாக்கு சருக்கரை நெல் அரிசி தினை எள்ளு பயறு உழுந்து பணிகாரம் நீராகாரம் ஆபரணவகை நவதானியம் பசு ஆதியவற்றைச் சற்பிராமணர்களுக்கு உலோபமின்றித் தானஞ்செய்தல்வேண்டும். அங்கே செய்த தானசெப ஓம தவமாதிகள் ஒன்று அனந்தமாயோங்கும். அதனல் சிவபெருமானும், விட்டுணு பிரமா முதலிய தேவர்களும், இயக்கர் கிம்புருடர் இருடிகள் பிதிரர்களும் பெருமகிழ்வடைவர். சேதுவைத் தரிசித்தவன் தாதை மூதாதை முப்பாட்டன் ஆகிய மூன்று தலைமுறையோரையுஞ் சுத்தமாக்குவன். நரகத்திலே கிடந்து வருந்துந் தன் பிதிரர்களைப் பஞ்சபாதகங்களினின்றும நீக்குவன். மேலே பிறவியெடான்.

அக்கினிதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தவர் நூறுகருச்சிதைத்த பாவங்க ணீங்குவர். ஸ்ரீராமன் எத்தேவர்களினுஞ் சிறப்புற்றமைபோலத் தீர்த்தங்க ளனைத்தினுங் கங்கை சிறந்தது. எவராயினும் எங்கே எத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்யினும் அங்கே "கெங்கேகரோராமசேதோ" என்றன்போடு சொல்வாராகில் அது சேதுவுக்கொப்பாகும். அவர்களும் மோட்சத்தையடைவர். சேது தனுக்கோடிக்கரையிலே கடுகளவு பிண்டம் பி

திரைச கட்டியிடுவார்களாயின், சந்திரசூரிய ருள்ளவரையும் அப்பிதிர்கள் மனமகிழ்வர். அன்றியும், பிதிரர்களைச் சுட்டிச சற்பிராமணர்களைக்கொண்டு வன்னியிதழளவு பிண்டமிடுபவர் பாவங்கள் யாவினும் நீங்கி அப்பிதிரர்களைத் துறக்கமேற்றுவர் அதுவன்றி அவர்களும் மோட்சமடைவர். இச்சேது தீர்த்தமானது புருடோத்தமம், கோகர்ணம் பதுமநாபம் ஆதிய க்ஷேத்திரங்களினும் தீர்த்தங்களினுஞ் சிறப்படையும். புத்திரப்பேறை விரும்பினவர், வெள்ளி சனி செவ்வாய் முதலிய வாரங்களிலே இச்சேதுதீர்த்தத்தில் அல்லது வேறு சமுத்திர தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்தலாகாது. பிரேதகாரியஞ் செய்யாதவனும் *கருப்பதீக்கை யுடையானும் அவ்வாரங்களில் வேறுசமுத்திரதீர்த்தங்களிலே ஆடலாகாது. சேதுவிலே ஸ்நானஞ்செய்வதற்குத் திதி வார நியமங்கள் வேண்டாது எப்பொழுதுஞ்செய்யலாம். உயிரோடு இருப்பவரை நினைத்து ஆடலாம். இறந்தவர்களை நினைத்தாடுகில் தருப்பையினு லுருவமுண்டாக்கி அவர்களைச்சுட்டிச் சங்கற்பித்தாடுதல்வேண்டும். அங்ஙனமாடுங்கால், அத்தருப்பையுமாடுதலால் மேற்சுட்டிய அவர்கள் தாம் நேரேயாடியபலனைப் பெறுவர்கள். அமாவாசி பௌர்ணிமைகளிலன்றி மற்றைக் காலங்களிற் சமுத்திரதீர்த்த மாடலாகாது. இச்சேதுதீர்த்தத்தி லெப்பொழுது மாடலாம்."

சீதை இலக்குமணனோடிருந்து ஸ்ரீராமன், இந்தச் சேதுமகத்துவத்தையெடுத்துத் தேவர் முனிவர் பிதிராதி சகலரும கேட்டறியுமாறு சொல்வான். அன்பர்காள், இச்சேது நாமுண்டாக்கியதைக் கண்டவர்கள் அநாதியே கலந்த பாவங்களினீங்கி நன்மையடைவர். அதில் ஸ்நானஞ்செய்தவர்கள் மேற்பிறவார்கள். ஆதலின் "அதனது புகழையும் இராமலிங்கப்பெருமானது புகழையும் இலக்கமாண்டிருந் துரைப்பினு மமையுமோ அமையாது" என்று தைரியமாகச்சொல்லினன். அதனைக்கேட்டிருடிகள்மகிழ்ந்தனர். தேவர்கள் அதனைமிகவும் பாராட்டித்துதித்தனர். பிரமன் சேதுமாதவர் நாகர் இயக்கர் கந்தருவர் கிம்புருடர் கின்னரர் சித்தர் சாரணர் வித்தியாதரர் ஆதியோரும் அகோராத்திரம் சேதுவைத் துதித்திருப்பர். இந்தச் சேதுதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்யினுந் தீண்டினும் நினைக்கினுந் தரிசிக்கினும் கேட்பினும் துன்பங்களெல்லாம் நீங்கும். முனிவிர்காள், அச்சேதுதீர்த்தமே எவருக்கும் தந்தைதாய்க் கொப்பாகவிருக்கும். ஆதலால் அதற்கொப்பானது பிறிதொன்றில்லை. அது அருத்தோதயத்திலே வந்து ஸ்நானஞ் செய்தவர்களுக்கு வேண்டிய இட்டசித்திகளைக் கொடுக்கும். தைமாதமும், ஞாயிற்றுக்கிழமையும்,

---

* கருப்பதீக்கை - தன்மனை கருவுறத்தான்மயிர்வளர்த்தல

திருவோணநட்சத்திரமும், கிந்துக்கின கரணமும், அமாவாசியும், வெதீபாதயோகமும், மகரலக்கினமுங் கூடிய தினத்தில் ஆதித்தனது அரைப்பங்கு தோன்றுங்காலம் அருத்தோதயம் எனப்படும். இந்தப் புண்ணியதினத்திலே ஸ்நானஞ்செய்தவன் சிவபரிபூரணத்தோ டத்துவிதமாவன். ஆயிரம் வெதீபாதம் ஓரமாவாசிக் கொப்பாகும். அவ்வமாவாசி ஞாயிற்றுக்கிழமையில் வரில், பதினாயிரம் அமாவாசிக்கொப்பாகும். அவ்வமாவாசியோடு திருவோணம்வந்தால், அதன் பெருமையை யார்சொல்லுவர். இவைகளொவ்வொன்றுந் தனித்தனியேவருங்காலத்துச் செய்யுஞ் செபதப தானாதிகள் பெரும்பயனளிக்குமாயின், அவைகளனைத்துங் கூடிய தினம் மோட்சத்தைத் தருமென்பது சொல்லாதேயமையும். நட்சத்திரங்களிற் சிறந்தது திருவோணம். திதிகளிற் சிறந்தது அமாவாசி. யோகங்களிற் சிறந்தது வெதீபாதம். வாரங்களிற் சிறந்தது பானுவாரம். இந்த நான்கும் தைமாசத்திலே வரின் அது விசேடபுண்ணிய காலமாம். இதிலே தனுக்கோடியில் ஸ்நானஞ் செய்தவர் சாயுச்சியமடைவர் இதற்கொப்பான காலம் திரிகாலங்களிலுமில்லை. இதுபோலவே மகோதயபுண்ணியகாலமும் வரும். அதுவும் சேதுஸ்நானத்திற்கு விசேடமாம்.

சற்பாத்திரப் பிராமணராவார்:—ஒழுக்கம் தவம் வேதாத்தியயனம் உபநிடத புராண உணர்ச்சிகளை யறிந்து, உமாமகேசுவரரை யருச்சனைசெய்யும் பிராமண குலத்தவரே சேதுக்கரையிலே தானஞ்செய்பவர் இக்குணங்களையுடைய சற்பாத்திரப் பிராமணருக்கே தானஞ் செய்யுக. அங்ஙனம் சற்பாத்திரப் பிராமணர் கிட்டாராயின், அவரைச சுட்டித் தத்தஞ்செய்து வைத்து அவருடைய ஊரிலே கொண்டுபோய்க் கொடுக்குக. நல்ல பயனையடையவிரும்பினவன், அசற்பாத்திரனுக்குத் தானஞ்செய்த லாகாது. முனிவர்காள், இதற்கொரு சரித்திரஞ் சொல்லுதுங் கேட்பீர்களாக.

திலீபமகாராசன் வசிட்டமகாமுனிவரிடங்கேட்ப அவர் சொல்லிய சரித்திரத்தை ஈண்டுச் சொல்லுகின்றேன். திலீபமகாராசன் தன்புரோகிதராகிய வசிட்டமுனிவரை நோக்கி, சாமிகாள், தானம் வாங்குதற்குரிய சற்பாத்திரரைச் சொலவீராக என்று கேட்ப, அவர் சொலலுவார். "அரசனே, வேதாத்தியயனஞ்செய்தவனாய் அவவேதத்திற் சொல்லியபடி ஒழுக்கமுடையவனே சற்பாத்திரமாவன். அவனிலும் சூத்திரான்னம் புசியாதபிராம

ணனே உயர்ந்த சற்பாத்திரமாவன். வேதமந்திரங்களையும் புராணஇதிகாசங்களையும் கற்றறிந்து சிவார்ச்சனை விடடுணுவார்ச்சனைகளைச் செய்து தன் வருண ஆச்சிரம ஒழுக்கந் தவறுமல் இல்லறத்தில் வறுமையோடிருப்பவனே சற்பாத்திரமென்று நூல்கள் சொல்லும். அங்ஙனமாய சற்பாத்திரப் பிராமணனுக்குத் தானங்கொடுப்பரேல், அவரே தருமார்த்த காம மோட்சமாகிய புருடார்த்தங்களைப் பெறுவர். புண்ணிய க்ஷேத்திரங்களினுஞ் சற்பாத்திரருக்கே தானஞ் செய்தல்வேண்டும. அன்றி அசற்பாத்திரர் கையிற் றுனஞ்செய்வரேல், பத்துப்பிறப்பு ஒந்தியாயும், மூன்றுபிறப்புக் கழுதையாயும், இரண்டுபிறப்புத் தவளையாயும், ஒருபிறப்புச் சண்டாளனுயும் பிறந்து, துன்பங்களையனுபவித்துப் பின்பு சூத்திரனுயும், செட்டியாயும், அசரனுயும், அந்தணனுயும் பிறந்து வறுமை பிணி முதலியவற்றுல் வருந்துவன். ஆதலினுல், தானஞ்செய்ய விரும்புவோர், உத்தம சற்பாத்திரத்துக்கே தானஞ்செய்தல் வேண்டும். அவரிலலையேல், தான் நினைத்த சற்பாத்திரரைச் சுட்டித் தானஞ்செய்து வைத்து, அவருக்குக் கொடுத்தல்வேண்டும். அவரிறந்தால், அவர் புத்திரர்க்குக் கொடுத்தல்வேண்டும். அவருமிறந்தால், சிவாலயத்திற்குக் கொடுத்தல்வேண்டும்" என்றருளினர். அது கேட்டுத் திலீபமகாரசன் அப்படியே செய்து பேரின்ப மடைந்தனன். தானஞ் செய்பவற்றிலே குறைத்துக் கொடுக்கலாகாது. விருபாக்கம், கோகன்னம், கும்பகோணம், காஞ்சி, சாளக்கிராமம், துவாரகை, பிரயாகை, தென்மதுரை, நைமிசாரணியம், அயோத்தி, சேது, வேங்கடம், பதுமநாபம், தண்டகாரணியம், காசி, ஸ்ரீசைலம் இவைகள் புண்ணியக்ஷேத்திரமாகும். இவைகளை யடைபவர்கள் சௌரஞ்செய்து தலோபவாசமாயிருத்தல் வேண்டும். செல்வச் செருக்கினுலாதல் அபிமானத்தினுலாதல் மயக்கத்தினுலாதல் சௌரமுந் தலோபவாசமுஞ் செய்யாதவர்கள் பாவமடைந்து வருந்துவர்கள் இந்தச் சேதுவிலே சிறப்புற்ற இருபத்துநான்கு தீர்த்தங்களுள்ளன. அவற்றுள்ளும் இலக்குமணதீர்த்தக் கரையிலே கழுத்தின்மேற்படச் சௌரஞ்செய்து அதில் ஸ்நானஞ்செய்து இலக்குமணேசனை வணங்குபவர் சிவானந்தப்பேறடைவர். சேதுவுக்கொப்பாகிய தீர்த்தங்களும் அங்கேசெய்கின்ற புண்ணியத்துக் கொப்பாகிய புண்ணியங்களும், அத்தலத்துற்பெறும் பேற்றுக் கொப்பாகிய பிறபேறுகளுமில்லாமையால், பெரியோர்கள் அருத்தோதயம் முதலிய புண்ணியகாலங்களிலே அங்கு சென்றுடுவர். ஆயிரங் கிரகண புண்ணிய காலத்திற்கு

ஒரு அருத்தோதயம் ஒப்பாகும். அருத்தோதயம்போலப் பாவம முக்குங் கருவி பிறிதில்லை. அறுபதினாயிரம் ஆண்டு கங்கையிலே ஸ்நானஞ்செய்த பலனை அருத்தோதய மகோதய புண்ணியகாலங்களில் சேதுவில் ஒரு ஸ்நானமே கொடுக்கும். திரிலோகங்களிலுள்ள தீர்த்தங்களில் நெடுங்கால மாடிய பலனை அருத்தோதய முதலிய புண்ணியகாலங்களிற் சேதுவிலாடிய ஒருஸ்நானமே கொடுக்கும்.

பிரமஞானமின்றிச் செய்ந்நன்றி கொன்று திரியும் பாதகர்களும், மகாபாதகம் முதலிய செய்கின்றவர்களும், சேதுவிலே அருத்தோதயத்திலொருமுறை யாடினாலவையழிந்துபோம். செய்ந்நன்றி கொன்றவருக்குப் பிறதலங்களிலே தீர்விலலை. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செயந்நன்றி கொன்ற மகற்கு" என்று நீதிநூல்கள் சொல்லுமேனும், சேதுவிலருத்தோதய ஸ்நானமே செய்ந்நன்றிகொன்ற பாவத்தைக் கழுவுந் தீர்த்தமாம். அருத்தோதய புண்ணியகாலத்துச் சேதுவிலாடாத மனுடர்கள் குழியில் விழுந்தழுந்துங் குருடர்போலக் குடும்பக்குழியில் விழுந் தேறமாட்டாது வருந்துவர். அருத்தோதய காலத்திலே சேதுவிலாடினவர்கள் சூரியமண்டலத்தைக் கிழித்துப் பிரமபதமடைவர். சேதுதீர்த்த மாடியவுடனே இராமநாதனையும் சீதாராமனையும சுக்கிரீவனையும் ஏனைய சூரக்குவீரரையும் தேவர் முனிவர் பிதிரரையும் நினைந் தருக்கியங் கொடுக்குக. யாவரேனுந் தம்மையடைந்த வறுமை நீங்கும்பொருட்டு அருத்தோதயத்திலே இராமலிங்கப்பெருமானை யருச்சிக்கில் இலக்குமி நாராயணர் மகிழ்ப பெருஞ் செலவராவர்கள்.

"திவாகரகாந்திக் கிருப்பிடமாகிய சகநாதரே வாருமும்மை வணங்குகின்றேன்," சந்திரனே, இலக்குமி சகோதரனே, அமுதவைப்பே, அத்திரி கோத்திரனே வா" வென்றழைத்து அர்க்கியங்கொடுத்து, "வெதீபாதமாயோகியே, பாபரட்சகனே, ஆயிரங்கைகளையுடையவனே, வா" வென்று வெதீபாதத்துக்கர்க்கியங்கொடுத்துச் "சிவபெருமானுடைய கண்ணாகியிருப்பவனே, திதி வார நட்சத்திரத் ததிபதியே, மாதவடிவே, ஒழிந்த காலவடிவே வா" என்று சூரியனை நோக்கி யருக்கியங் கொடுத்து இங்ஙனமாக அருத்தோதய புண்ணியகாலத்திலே அவ்வத் தேவர்களது மந்திரத்தினாலே அவரவர்களுக்கு அருக்கியங்கொடுத்துத் தமது சத்திக்கேற்ப உபாதானங்கள் கொடுத்துச் சற்பிராமணர்

களிலே பதினாலவர் பன்னிருவர் எண்மர் எழுவர் அறுவர் ஐவராகிய தொகையுளியன்றவரை வரித்து அலங்கரித்து வெண்கலத்தினாலேனும் மரத்தினாலேனும் அமைத்த புதுப்பாத்திரங்களிலே பாற்சோறு சருக்கரை நெய் கனி யாதியவைகளை நிறைத்து இயன்ற தாம்பூல தட்சணை உபவீதத்தோடு கொடுத்து "அடியேனுடைய சக்தி யிவ்வளவுதான்" என்று இனியமொழி கூறி, எல்லாத் தேவர்களும் எல்லாவுயிர்களும் எப்பொருளும் வசிக்குமங்கத்தையுடைய பசுக்களையுந் தானஞ்செய்து, "சகநாதா, ஸ்ரீமன் நாராயணா, உனது சன்மநட்சத்திரமாகிய திருவோணத்திலே உனது வடிவாகிய வேதியர்களுக்கு நான் கொடுக்குமித்தானம் விருத்தியாகும்படி யருள்செய்" யென்று விஷ்ணுவைத் தோத்திரித்து, "உடுபதியே, தேவர்களுக்கமுதாகரனே, ரோகிணி நாயகனே, சோடசகலாதிபதியே, எல்லாமுடையவனே காத்தரு" ளென்றுசந்திரனையும், "பாவ இருளைக்கடியும்ஒளி வடிவே, அனுக்கிரக பகவானே, சகநாதா, காலநாதா, தினநாதா, எனக்கு நிறைந்த பேரன்பைத் தா" வென்று சூரியனையும், "சந்திரசூரியர் புத்திரனே, வெதீபாதமே, உன்னை வணங்குகின்றேன், நான் சேதுதீர்த்தக் கரையிலே செய்த தானங்களைப் பூரணமாக்குதி" என்று வியதீபாதத்தையும், "யாசகர்கற்பகமே, சனார்த்தனனே, மாதஇருது அயனகாலரூபா, அரிகிருஷ்ணா" என்று விட்டுணுவையும் துதித்துப் பின்பு, இரணியசிரார்த்தம் ஆமசிரார்த்தம் அன்னசிரார்த்தம் ஆதியவற்றை லோபமின்றிச் செய்து பார்வணஓமத்தை முடித்து ஆசாரியனை அலங்கரித்துப் பசு பாதுகை குடை முதலிய கொடுத்துப் புசித்தல்வேண்டும். இவ்வண்ணமே சேதுக்கரையிலே அருத்தோதய புண்ணியகாலத்திலே தானஞ்செய்யில் வேறு தருமம் வேண்டாம்; அனைத்தையும் அதுவே தரும். தானெங்கேயிருந்தாலும் அருத்தோதய புண்ணியகாலத்திலிப்படியே செய்யவேண்டும்.

முனிவர்காள், சேதுவை மனதிலே விரும்பித் தான் ஸ்நானஞ்செய்யும்பொழுது "சேது சேது" என்று சொல்லினால்கோடிபாதகம் போம். அழியாத பேரின்பமுண்டாகும். ஒருகணமேனும் அரைக்கணமேனும் சேதுவிலிருப்பவர்கள் யமதூதரைக் காணமாட்டார். அங்கிருந்து எத்தேவரை நினைத்தாலும் மோட்சமடைவர். ஏனைய க்ஷேத்திரங்களைத் தரிசித்துப் போகாதபாவமெல்லாம் இச்சேது ஸ்நானத்தினால் நீங்கும். பஞ்சாட்சரத்தைச் செபியாதவர்களும் அட்டாட்சரத்தைச் செபியாதவர்க

ளதும் சடாட்சரத்தைச் செபியாதவர்களதும் திருவோணநட்சத்திர விரதமனுட்டியாதவர்களதும் சாபாலமந்திரமோதாதவர்களதும் விபூதி பூசாதவர்களதும் சிவார்ச்சனை செய்யாதவர்களதும் விஷ்ணுவர்ச்சனை செய்யாதவர்களதும் அவ்விருவரது அருச்சனைக்குரிய உபகரணங்களைக் கொடாதவர்களதும் உருத்திரம் புருடசூக்தம் பஞ்சசாந்தி முதலியவைகளால் அபிடேகஞ் செய்வியாதவர்களதும் ஆலயப பிரதக்ஷிணஞ் செய்யாதவர்களதும் திருவெம்பாவைப்பூசை செய்யாதவர்களதும் இருவர் தோத்திரங்களைச் சொல்லாதவர்களதும் சிவநாபம் சாளக்கிராமம் துவாரகாசக்கிரம் ஆதியவற்றைப் பூசியாதவர்களதும் கங்காமிருத்திகை துளசிமிருத்திகை கோபி சந்தனம் உருத்திராட்சம் துளசி மணி முதலியவற்றைத் தரியாதவர்களது பாவமும் பிராமிய முகூர்த்தத்தி லெழுந்து சுத்தராய்ச் சிவனுமங்களைத் துதியாதவர்களது பாவமும் உதயத்துக்கு முன்னர் ஸ்நானஞ்செய்து சந்தியாதேவிகளைத் தியானியாதவர்களதும், சாயம் பிராதர் ஔபாசனம் மாத்தியான்னிகம் பிரமயாகம் வைசுவதேவமாதியவற்றைச் செய்யாதவர்களதும், அதிதிபூசை உச்சிக்காலத்துவரும் பெரியோர்களுக்குப் பிச்சையிடாதவர்களதும், வேதாத்தியேனஞ் செய்யாதவர்களதும், அது செய்துவந்து இடையிலே விட்டவர்களதும், சிராத்த மகாளயங்களைப் பிதிரர்களைச் சுட்டிச் செய்யாதவர்களதும், நித்திய சிராத்தம் அட்டகைசிராத்தம் நைமித்திக சிராத்தம் ஆதிய செய்யாது பொருளையீட்டிவைத்த லோபிகளதும், சித்திராபூரணையிலே சித்திரகுத்தர் மகிழுமாறு பாயசம் முப்பழம் பாணக்கம் தாம்பூலம் வஸ்திரம் குடை தெண்டு செருப்பு சந்தனம் புடபம் சருக்கரை கட்டிலாதியவற்றைச் சற்பிராமணர்களுக்குக் கொடாத லோபிகளதும் பாபக்கூட்டங்களனைத்தையுஞ் சேதுஸ்நான தரிசன பலன் கொடுக்கும்.

முனிவர்காள், ஒழுக்கங்களனைத்தையுமுடைய உயர்ந்தவரும் தீமைகளனைத்தினுஞ் சிறந்த தாழ்ந்தவரும் இம்மையிலே சேதுஸ்நானஞ் செய்வாராயின், மேலே பிறவார்கள். இவ்வுலகவாழ்வைத் துறக்க விரும்பினவர்கள் யாவரும், அது சித்திக்கும் பொருட்டுச் சேது தனுக்கோடியிலே ஸ்நானஞ் செய்தல்வேண்டும். சேதுயாத்திரை செய்தவர்கள் ஒருகாலமும் நீங்காத பேரின்பமடைவர். இது சத்தியம்! சத்தியம்! முக்காலுஞ் சத்தியம். முனிவர்காள், இந்தச் சேதுமகான்மியத்தை வாசிப்பவர்களும்

கேட்பவர்களும் நோய்கள் கொடுமைகள் துக்கங்கள் தீக்கனுக கர்ஆவமிருத்து ஆதிய குற்றங்களினீங்கி அக்கினிட்டோமமுதலி ய பலவித யாகபேறும் சகல தீர்த்தங்களாடியபேறும் சாந்தி யோமம் சதுர்வேதாத்தியேனப்பேறும் இம்மையிலே எவர்களுமடையாத சாம்பிருச்சியங்களனைத்தையும் பெற்று மறுமையிலே பேரின்ப வாழ்வை யடைவர்கள்.

முனிவர்காள், இந்தச் சேதுபுராணசருக்கங்களுள்ளே ஒரு சருக்கத்தையேனும் வாசித்தவர்களுங்கேட்டவர்களும் வேதவிதி சிறிதும் பிறழாதுசெய்த பரிமேதயாக பலனையும், இரண்டுசருக்கங்களை வாசித்தவர்களுங் கேட்டவர்களுங் கோமேதயாகபலனையும், பத்துச் சருக்கங்களை வாசித்தவர்களுங் கேட்டவர்களும் தேய்வேந்திரபோகப் பிராப்த்தியையும், இருபது சருக்கங்களை வாசித்தவர்களுங் கேட்டவர்களும் பிரமலோக வைப்வத்தையும், முப்பது சருக்கங்களை வாசித்தவர்களுங் கேட்டவர்களும் விட்டுணுலோக பாக்கியத்தையும், நாற்பது சருக்கங்களை வாசித்தவர்களுங் கேட்டவர்களும் உருத்திரலோக வின்பத்தையும், ஐம்பது சருக்கங்களை வாசித்தவர்களுங் கேட்டவர்களும் சதாசிவ மூர்த்திகாருண்ணியத்தையும், முழுதையும் வாசித்தவர்களுங் கேட்டவர்களும் சச்சிதானந்தப் பெருவாழ்வையும் பெற்று மகிழ்ந்து வீற்றிருப்பார்கள்.

இச்சேது மான்மியத்தை யிருமுறை கேட்டவர் சிவசாமீபத்தையும், மும்முறை கேட்டவர் சிவசாரூபத்தையும், நான்குமுறை கேட்டவர் சிவசாயுச்சியத்தையும் பெற்று மகிழுவர்

முனிவர்காள், இச்சேதுமான்மியத்தில் ஒருகவியேனும் பாதிக்கவியேனும், கால் கவியேனும், ஒரு பதமேனும், ஒருமொழியேனும், ஒரெழுத்தேனும் தினந்தோறுஞ் சொல்லவுங் கேட்கவும் பெறுவாராயின், அன்றன்று செய்த பாவங்கணீங்கும். அன்றியு மிப்புராணத்தை வாசித்தவர்கள் இதனெழுத் தெவ்வளவோ அவ்வளவு செனனங்களிற் செய்த பாதகங்க ணீங்கி நன்மையடைவர். அன்றியும் வாசித்த எழுத்தளவு இருபத்துநான்கு தீர்த்தங்களினும் மற்றைய தீர்த்தங்களினு மாடிய பேற்றையுமடைவர். இதனையெழுதி னவர்களுஞ் சிவசாயுச்சியம் பெறுவர். இந்தப்புராணமெழுதியபிரதிகளிருக்கு மிடங்களிலேவசிப்பவர் சனிமுதலிய துட்டக்கிரகபீடைகளும், பூதவேதாள பைசாசங்களும், சோரரோகாதி யச்சங்களும் நீங்கிச் சிவானுக்கிரகத்தோ

டுகலந்துவாழுவர். மேலு மிதிலோர் சுருக்கத்தைச் சிராத்த காலத்திலே வாசித்தா லங்குள்ள குற்றங்க ணீங்கிப் பிதிரர்கள் பெருமகிழ்வடைவர். பாலர் முதலிய செல்வக் குறைவடையார்கள்

மடங்களிலேனும், ஆலயங்களிலேனும், பூஞ்சோலைகளிலேனும், பெரியோர்களது வீடுகளிலேனும், புண்ணியதீர்த்தக்கரைகளிலேனும், பரிசுத்தமாகிய பிறவிடங்களிலேனு மிந்தச் சரித்திரத்தை யிருந்து வாசிக்கலாம். அசுத்தமாகிய பிறவிடங்களிலிருந்து வாசித்தலாகாது.

அட்டமியிலும், ஏகாதசியிலும், சதுர்த்தசியிலும், அயன காலங்களினும், சித்திரை ஆவணி புரட்டாசி ஐப்பசி மார்கழி யென்னுமாதச் சங்கிராந்திகளினும் பிறபுண்ணிய காலங்களினு மிச்சரித்திரத்தை வாசிக்கலாம்.

இந்தச் சேதுமான்மியத்திலே புண்ணியதீர்த்த விசேடங்களும், சிவமகிமை விட்டுணு முதலிய தேவர்களது மகிமை, பிரம க்ஷத்திரியர்களாதி முனிவர்களது மகிமைகளையும், நல்வினைப் பயனால் வரும் புண்ணியவிசேடம் தீவினைப்பயனால் வரும் பாவவிசேடங்களையும் பற்றிப் பேசுதலினாலும், வேதங்களை வகுத்த வேதவியாத முனிவரும் வியந்து பாராட்டிப் பேசுதலினாலும், புண்ணியவாளரது சரித்திரங்களைப் பேசுதலினாலும் மற்றெல்லாப் புராணங்களினு மிதுமிகச் சிறப்புடையது. ஆதலினால் மேன்மையடைய விரும்புபவர்கள் இதனைவாசித்தல்வேண்டும்.

இச்சரித்திரத்தை வாசிப்பவர்களையும், பொருள்சொலபவர்களையும் அறுகாற்பீடத் திருத்தி யருச்சித்து வணங்கி வஸ்திராபரணங்கள் பொன் பூமி பசுமுதலிய வுபசரித்து வழிபாடுசெய்பவர்கள், சிவபெருமானையும் விட்டுணுவையும் மற்றைய தேவர்களையும் வழிபட்டவராவர்.

ஸ்ரீராமனுஞ் சீதையும் இலக்குமணனும் அனுமானும் இச்சரித்திரத்தை வாசிப்பவர்கண்மீது கருணைகூர்ந்து பெருஞ்சிறப்பருளுவர்

தவுமியமகாமுனிவர் இச்சரித்திரத்தைச் சொலலத் தருமபுத்திரருந் தம்பிமார்களுஞ் சேனைகளும் விரதநியமத்தோடு கேட்டுப் பெருமையடைந்தனர். ஆதலினால் முனிவர்காள், நானுங்களுக் கிந்தச் சரித்திரத்தைச் சொல்லினேன். நீவிருமிதனை நும்மாணாக்கர்களுக்குஞ் சொல்லுமின் என்று சூதமுனிவர் சொல்லிமுடித்துப் புளகமுற்று, கைகுவித்து, ஆனந்த பாட்பஞ்சொரிய உரைதடுமாறிப் பரவசராயத் தனதுகுருவாகியவே

தனியாதரை வணங்கி ஆடிப் பாடிக்கொண்டு நிற்குமளவிலே, ஸ்ரீ வியாதமகாமுனிவருந் தமது சீடவருக்கங்களோடு சூதமுனிவரது பத்திவலையிலே யிழுக்கப்பட்டு வந்தனர்.

சூதமகாமுனிவரு மவரது வரவைக் கண்ட மாத்திரத்தே கும்பிடப்போனதெய்வங் குறுக்கேவரக் கண்டதுபோலக் கண்டு விரைந்து மற்றைய முனிவர்களோடெழுந்து எதிர்சென்று அவரது பாதங்களிலே விழுந்து வணங்கிக் கண்ணீரினு லபிடேகித்தனர்.

வியாதமகாமுனிவருஞ் சிறுபிள்ளைகளையணைக்குந் தாயைப்போலப் பலமுறை விருப்பத்தோடு தழுவி யணைத்து அவர்களாலிடப்பட்ட ஆசனத்திருந்து சூதர்முதலிய மற்றைய முனிவர்களையு மிருக்கச்செய்து முனிவர்களனைவோரையும் நோக்கி, "அன்பர்காள், சேதுமகான்மியத்தை நாமறிந்தபடி சொல்லினேம். அதுவே இப்பொழுது சூதனுஞ் சொல்லியது. வேதாகமங்களினது பொருளு மிதுவேயாகும். அன்றியும் ஸ்மிருதிகள் புராணங்கள் இதிகாசாதி சாத்திரங்களாதிய எந்த நூல்களினுலுஞ் சொல்லக்கூடாத பொருள்முடிபுகளு மிதுவேயாம். அறிவிற்சிறந்த நீவிரனைவரு மிதனை ஐயவிபரீதங்களின்றி யனுவதியுங்கள். இதனை எப்பொழுதும் படித்துக் கேட்டுச் சிந்தித்துத் தெளியுங்கள்" என்றருளினர். அதுகேட்ட முனிவர்களனைவரும் பெருங் களிப்படைந்து "அப்படியே செய்கிறோ" மென்றனர்.

வியாதமகாமுனிவரானவர் இப்படிச் சொல்லிய முனிவர்களுக்கு ஆசீர்வாதஞ் செய்து, சூதமகாமுனிவரோடு மாகாயவழியாகச் சென்று திருக்கைலாயமலையை யடைந்தனர். மற்றைய சவுனகாதிமுனிவர்கள் ஸ்ரீராமனுற் செய்த சேதுவிலே தீர்த்தமாடி இராமலிங்கப் பெருமானைத் தரிசித்துச் சேதுமகான்மியத்தைச் சொல்லித் துதித்து வாழ்ந்தனர். அதனு லுலகமெல்லாஞ் செழித்தோங்கியது.

மாதுமலைவளர்காதல்வல்லிவாழ்கமாற்கருள்கூர்சிவராமநாதன்வாழ்க [க
சேதவுடன்றனுக்கோடிதீர்த்தம்வாழ்கத் திகழ்தீர்த்தமறுநான்குஞ்சிறந்துவாழ்
நாதனிராமேச்சுரனையருச்சிப்போருநற்றுனந்தலமனைத்துநயந்துவாழ்க
மாதவர்கண்மிகவாழ்கவிராமநாதமாமுனிவனீழேழ்வாழ்கமாதோ.

சேதுபலச் சருக்கமுற்றிற்று.

சேதுபுராணவசனம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.